இணைப்பு I

(2 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

(அ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்

பட்டியல்கள் (9 முதல் 13 வரை)@

பட்டியல் 9

1—

கட்டட வசதி

வினா எண் 3—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவையாறு தீயணைப்பு நிலையத்துக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

2—

கட்டட வசதி

வினா எண் 133—திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

11-494—16

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அணைக்கட்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் காவல் நிலையத்திற்கு நடப்பு நிதியாண்டில் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு காவல் நிலையம் 6-4-2005 முதல் அமைக்கப்பட்டு, தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தற்போது நிலம் கைவசம் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்டபின் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

3—

கட்டட வசதி

வினா எண் 198—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, அ. பள்ளிப்பட்டியில் காவல் நிலையக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, அ. பள்ளிப்பட்டியில் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிலம் கைவசம் உள்ளது. எனவே, காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4—

கட்டட வசதி

வினா எண் 205—திரு. ஆர். சாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூரில் இயங்கி வரும் தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

இல்லை.

5—

கட்டட வசதி

வினா எண் 207—திரு. ஆர். சாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூரில் இயங்கி வரும் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மேலூரில் இயங்கி வரும் காவல் நிலையம், வருவாய்த் துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் தற்சமயம் இயங்கி வருகிறது. புதிய கட்டடம் கட்டுவதற்கு நிலம் கைவசம் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின், மேற்படி காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம், நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

6—

நவீனப்படுத்துதல்

வினா எண் 376—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் மக்கள் தொகைக்கேற்ப காவல், போக்குவரத்து உட்பட அனைத்து பிரிவுகளுக்கும் கூடுதலான எண்ணிக்கையில் காவலர்கள் மற்றும் நவீனப்படுத்தும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வளர்ந்துவரும் தொழில் நகரமாகிய திருப்பூரில், பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப திருப்பூர் (வடக்கு), திருப்பூர் (தெற்கு), திருப்பூர் (புறநகர்) ஆகிய காவல் நிலையங்களில் காவலர் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், திருப்பூர் நகரின் காவல் கட்டுப்பாட்டறைக்கு கூடுதல் காவலர் நியமனம், திருப்பூர் நகரின் ஏனைய காவல் நிலையங்களின் தரம் உயர்த்துதல், மற்றும் திருப்பூரில் இனவாரி பிரிவு (Communal Wing) தோற்றுவித்தல் குறித்தான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

7—

கட்டுப்படுத்துதல்

வினா எண் 590—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் அதிகரித்து வரும் சமூக விரோத செயல்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஆம். திருப்பூரில் அதிகரித்து வரும் சமூக விரோத செயல்களைக் கட்டுப்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

8—

புறக்காவல் நிலையம்

வினா எண் 596—திரு. கோ. அரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியத்தில் உள்ள மணவூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் புறக்காவல் நிலையம் அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழகத்தில் தற்போது இயங்கி வரும் 116 புறக் காவல் நிலையங்களையும் முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவது நடைமுறையில் உள்ளது. எனவே, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், மணவூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் புறக் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

9—

கட்டட வசதி

வினா எண் 732—திருமதி எம். சந்திரா: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராஜபாளையம் நகரில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

இல்லை.

10—

பட்டயப் படிப்பு

வினா எண் 773—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாமல்லபுரத்தில் இயங்கி வரும் சிற்பக் கலைக் கல்லூரியில் பட்டயப் படிப்பு (டிப்ளமோ கோர்ஸ்) துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த கல்வி ஆண்டில் துவக்கப்படுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாமல்லபுரம் அரசினர் கட்டக் கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் பட்டயப் படிப்பை நீக்கி விட்டு 2000-2001 ஆம் ஆண்டு முதல் நான்காண்டு கால பட்டப் படிப்பு நடத்தப்பட்டு வருவதால், மீண்டும் பட்டயப் படிப்பை தொடங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

11—

கட்டட வசதி

வினா எண் 824—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி நகரில் உள்ள மதிகோன்பாளையம் காவல் நிலையத்திற்குச் சொந்தமாகப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்படி காவல் நிலையம் கட்டுவதற்கு நிலம் கைவசம் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின், காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் சேர்த்து புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 825—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஒன்றியத் தலைநகர்களில் அனைத்திற்கும் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

13—

கட்டட வசதி

வினா எண் 832—திரு. என்.ஆர். ரங்கராஜன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில், பட்டுக்கோட்டை நகரில் உள்ள மகளிர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்படி காவல் நிலையம், தற்போது குற்றம் காவல் நிலையத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது. சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் கைவசம் உள்ளது. எனவே, மேற்படி காவல் நிலையத்திற்கு, காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் சேர்த்து 2006-2007 ஆம் நிதியாண்டில் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

14—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 854—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதி தலைஞாயிறு பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

15—

அத்துமீறல்

வினா எண் 864—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது அதிரடிப்படையினரின் அத்துமீறல் குறித்து மனித உரிமை ஆணையம் விசாரித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஆம். தேசிய மனித உரிமை ஆணையர், நீதியரசர் A.J. சதாசிவம் அவர்கள் தலைமையில் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அக்குழு தொடர்ச்சியான பல கூட்டங்களைக் கூட்டி பாதிக்கப்பட்டவர்களை விசாரணை செய்து அறிக்கை அளித்துள்ளது. அவ்வறிக்கையின் மீதான அரசின் கருத்தையும், எடுத்த நடவடிக்கைகள் பற்றியும் அரசு 5-5-05 கடிதத்தில் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட 12 நபர்களுக்கு ரூ. 20 இலட்சம் நிவாரணம் வழங்கி உத்தரவிடப்பட்டது.

16—

கட்டட வசதி

வினா எண் 1021—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருத்துறைப்பூண்டி காவல் நிலையம் தற்போது தாலுகா அலுவலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது. சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்ட பின், கட்டடம் கட்டுவதற்கு, க்ாவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் சேர்த்து நடவடிக்கை எடுக்கப்படும்.

17—

கட்டட வசதி

வினா எண் 1022—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

முத்துப்பேட்டை, கோட்டூர் மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய ஊர்களில் உள்ள தியணைப்பு நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஆம். நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

18—

சொந்தக் கட்டடம்

வினா எண் 1028—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பள்ளிப்பட்டு தொகுதி, பொதட்டூர்பேட்டை காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

அரசாணை எண் 113, உள் (நவீனம்) துறை, நாள் 14-2-2006-ல் 13 ஊரகக் காவல் நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2005-2006-ம் ஆண்டு நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கட்டுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொதட்டூர்பேட்டை என்ற காவல் நிலையமும் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டு, கட்டுமானப் பணி மிக விரைவில் துவங்கப்படவுள்ளது.

19—

நிலை உயர்த்துதல்

வினா எண் 1029—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, அம்மையார் குப்பம் புறக்காவல் நிலையத்தை முழு தகுதி பெற்ற காவல் நிலையமாக நிலை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

பள்ளிப்பட்டு தொகுதி, அம்மையார்குப்பம் என்ற இடத்தில் அரசாணை பெற்ற புறக்காவல் நிலையம் அமையப் பெறவில்லை. இருப்பினும் அவசியம் கருதி குறைந்த எண்ணிக்கையிலான காவலர்களைக் கொண்டு ஒரு காவலர் மையம் இயங்கி வருகிறது. மேற்படி இடத்தில் புறக்காவல் நிலையம் ஏதும் இயங்காத நிலையில் அதனைத்தரம் உயர்த்தும் கேள்வி எழவில்லை.

20—

கூடுதல் பெட்ரோல், டீசல்

வினா எண் 1060—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை மலைப் பகுதி என்பதால் காவல் துறை வாகனங்களுக்குக் கூடுதலாக பெட்ரோல், டீசல் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள காவல் துறை வாகனங்களுக்கு அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அளவுகளின்படி எரிபொருள் கோயமுத்தூர் மாவட்டத்தில் அடங்கிய வால்பாறை பகுதிக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. கூடுதலாக எரிபொருள் தேவைப்படும்பொழுது அதன் அவசியத்தை கருத்தில் கொண்டு வழங்கப்படும்.

21—

மகளிர் காவல் நிலையம்

வினா எண் 1061—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் மகளிர் காவல் நிலையம் ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கோவை மாவட்டம் பொள்ளாட்சி உட்கோட்டம் வால்பாறையில் மகளிர் காவல் நிலையம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

22—

அதிகப்படுத்துதல்

வினா எண் 1067—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பல மாவட்ட குற்றவாளிகளை அடிக்கடி பல்வேறு நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்ல வேலூர் மாவட்ட காவலர்கள் ஈடுபடுத்தப்படுவதால் ஏற்படும் பற்றாக்குறையைப் போக்க ஆயுதப்படை காவலர்களின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

அரசு நிலை ஆணை எண் 915, உள் (காவல்-8) துறை, நாள் 19-9-2003-ல் மத்திய சிறைச்சாலை உள்ள வேலூர் உட்பட 9 மாவட்டத் தலைநகரங்களுக்குக் கூடுதலாக மாவட்டம் ஒன்றுக்கு 64 பணியாளர்கள் அடங்கிய ஒரு ஆயுதப்படைப் பிரிவு (Armed Reserve Platoon) அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. மாவட்டத் தலைநகரங்களுக்குக் கூடுதலாக வழங்கப்பட்டுள்ள ஆயுதப்படையில் பணியாற்றும் காவலர்கள் மத்திய சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றங்களுக்குக் குற்றவாளிகளை அழைத்துச் செல்லும் பணியை மேற்கொள்கின்றனர்.

23—

தடுத்தல்

வினா எண் 1069—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில் தீவிரவாதிகள் ஊடுருவுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சென்னை மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் தீவிரவாதிகளின் ஊடுருவல் குறித்து எந்தத் தகவலும் இல்லை. தீவிரவாத இயக்கங்களின் நடவடிக்கைகள் அரசின் தீவிர கண்காணிப்பில் உள்ளன. தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தப் போதுமான எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

24—

தடுத்தல்

வினா எண் 1070—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

காவல் துறையில் உள்ள ஹைவே பெட்ரோல், காவல் துறை அதிகாரிகள் காரணமின்றி எல்லா வாகனங்களையும் நிறுத்தி பணம் வசூலிப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை.—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

நெடுஞ்சாலை சுற்றுக்காவல் படையில் பணிபுரியும் காவல் துறை அதிகாரிகள் இத்தவறு செய்யாவண்ணம் தடுக்க இப்படையில் பணி புரியும் அனைத்து காவல் துறை பணியாளர்களும் ஒவ்வொரு மாதமும் மாற்றப்படுகிறார்கள்.

25—

தடை செய்தல்

வினா எண் 1073—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாதி வெறியை, மத வெறியை கிளறி விட்டு சட்டம்-ஒழுங்கைக் கெடுக்க முயலும் அமைப்புகளைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை.—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

இன்றைய நிலவரப்படி, தமிழகத்தில் மதம் மற்றும் சாதிப் பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு, சட்டம்-ஒழுங்கு நிலைமைக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் செயல்படும் மதம் மற்றும் சாதி இயக்கங்களின் செயல்பாடுகள் குறித்து எந்தத் தகவலும் இல்லை. சாதி உணர்வைத் தூண்டிவிட்டு சட்டம்-ஒழுங்குக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய சாதி சங்கங்கள் மற்றும் அமைப்புகள், தற்போது தமிழகத்தில் இல்லாததால், எந்த அமைப்பையும் தற்போது தடை செய்யும் கேள்விக்கே இடமில்லை.

26—

காவல் நிலையம்

வினா எண் 1614—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் சாமியார் மடத்தில் புதிதாக ஒரு காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கன்னியாகுமரி மாவட்டம் சாமியார் மடத்தில் புதிதாக ஒரு காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

27—

புறக்காவல் நிலையம்

வினா எண் 1630—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, பெரிய கொழப்பலூர் கிராமத்தை மையமாகக் கொண்டு புறக்காவல் நிலையம் ஒன்று அமைக்க ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழகத்தில் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்களை முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவதே அரசின் கொள்கையாகும். எனவே, பெரணமல்லூர் தொகுதி, பெரிய கொழப்பலூர் கிராமத்தை மையமாகக் கொண்டு புறக்காவல் நிலையம் அமைப்பதென்பதான பொருள் அரசின் பரிசிலனையில் இல்லை.

28—

மாற்று இடம்

வினா எண் 1736—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) வால்பாறை தொகுதி, முடீஸ் காவல் நிலையத்திற்கு மாற்று இடம் ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, முடீஸ் காவல் நிலையம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதிய கட்டடம் கட்டுவதற்கு நிலம் ஏதும் கைவசம் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின் வருங்காலத்தில் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

29—

காவல் நிலையம்

வினா எண் 1739—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, முடிஸ் பகுதியில் மகளிருக்கு என்று தனியாக காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், முடிஸ் பகுதியில் மகளிர் காவல் நிலையம் அமைப்பது குறித்து கருத்துரு ஏதும் நிலைவையில் இல்லை.

30—

காவல் நிலையம்

வினா எண் 1741—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) வால்பாறை தொகுதி, சோலையார் அணைப் பகுதியில் தனி காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை காவல் நிலைய எல்லைக்குள் அமையப் பெற்றுள்ள சோலையார் அணைப் பகுதியில் தனிக் காவல் நிலையம் அமைப்பது குறித்து கருத்துரு தற்பொழுது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

31—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 1976—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்தில் தீயணைப்பு நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

நிலைக் குழுவின் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் முடிவு உரிய தருணத்தில் மேற்கொள்ளப்படும்.

32—

அவசர ஊர்தி

வினா எண் 1983—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் செயல்பட்டு வரும் தீயணைப்பு நிலையத்திற்கு அவசர ஊர்தி ஒன்று வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

இருக்கின்ற வாகனங்களே போதுமானதாக உள்ளது.

33—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 2395—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, கண்டாச்சிபுரத்தில் தியணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தி தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

இல்லை.

34—

கட்டட வசதி

வினா எண் 2396—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை காவல் நிலையத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை காவல் நிலையம் தனியார் கட்டடத்தில் இயங்குகிறது. மேற்படி காவல் நிலையத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு நிலம் கைவசம் உள்ளது. எனவே, 2007-2008-ம் ஆண்டு நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

35—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 2405—திரு. வீ.ஏ.டி கலியவரதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, மணலூர்பேட்டையில் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க அரசு அவன் செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

இல்லை.

36—

காவல் நிலையம்

வினா எண் 2483—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

செங்கல்பட்டு தொகுதி, பொன்விளைந்தகளத்தூரில் புதிய காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பொன்விளைந்தகளத்தூர் என்ற இடத்தில் புதிய காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

37—

காவல் நிலையம்

வினா எண் 2504—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

2011 பிப்ரவரி 10]

அரியலூர் ஒன்றியத்திலுள்ள வி.கைகாட்டி, விளாங்குடி கிராமத்தில் காவல் நிலையம் ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

பெரம்பலூர் மாவட்டத்தில், உள்ள விளாங்குடி தாய்கிராமத்தை உள்ளடக்கிய வகையில், வி. கைகாட்டி என்ற இடத்தில் ஒரு புதிய காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

38—

கட்டட வசதி

வினா எண் 2544—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

சேலம் மாவட்டம், ஓமலூர் தீயணைப்புத் துறைக்கு நிலம் தேர்வு செய்து கட்டடம் கட்டப்படாமல் உள்ளதை கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வருங்காலத்தில் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

39—

வீட்டு வசதி

வினா எண் 2552—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

உடுமலைப்பேட்டை தொகுதி, மடத்துக்குளம் காவலர் குடியிருப்பில் மேலும் வீடுகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கோவை மாவட்டத்தில் உள்ள மடத்துக்குளம் காவல் நிலையப் பணியாளர்களில் ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் 7 காவலர்களுக்குக் குடியிருப்புகள் தற்போது உள்ளன. மேலும் ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் 10 காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்பட வேண்டும். மேற்படி குடியிருப்புகள் கட்டுவதற்குத் தேவையான நிலம் இருப்பதால், ஆண்டுதோறும் 3,000 குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து, புதிய குடியிருப்புகள் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

40—

நவீனப்படுத்துதல்

வினா எண் 2912—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீயணைப்புத் துறையை புதிய தொழில்நுட்பத்தின் அடிப்படையில் நவீனப்படுத்தும் செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஆம். உள்ளது.

41—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 2986—திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் பகுதியில் ஏராளமான தொழிற்சாலைகள் இருப்பதால் உடனடியாக தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தற்போது இல்லை.

42—

சட்டம், தனிப் பிரிவு

வினா எண் 4412—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் போலிச் சாமியார்கள் மற்றும் வரைமுறையற்று புதிதாக உருவாக்கப்படும் வழிபாட்டுத் தலங்களை ஒழுங்குபடுத்துவதற்கு சட்டமும், காவல் துறையில் தனிப் பிரிவும் உருவாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) தமிழகத்தில் போலிச் சாமியார்கள் மற்றும் வரைமுறையற்று புதிதாக உருவாக்கப்படும் வழிபாட்டுத் தலங்களை ஒழுங்குபடுத்துவதற்கு சட்டமும், காவல் துறையில் தனிப் பிரிவும் உருவாக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

(ஆ) எழவில்லை.

43—

கட்டட வசதி

வினா எண் 4416—செல்வி ஆ. அங்கையற்கண்ணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

விழுப்புரம் மாவட்டம், கல்வராயன்மலை, கரியாலூரில் காவல் நிலையக் கட்டடம் மற்றும் காவலர் குடியிருப்பு கட்ட நடப்பு ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்து கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தொகுதி, கல்வராயன்மலை, கரியாலூரில் காவல் நிலையம் தற்போது மருத்துவத் துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் மற்றும் காவலர்கள் குடியிருப்பு கட்டுவதற்குத் தேவையான நிலம் தற்போது காவல் துறை வசமில்லை. எனவே புதிய காவல் நிலையக் கட்டடம் மற்றும் காவலர்கள் குடியிருப்பு கட்டுவதற்குத் தேவையான நிலத்தினைக் கண்டறியுமாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோரப்பட்டுள்ளார். தேவையான நிலம் கண்டறியப்பட்டதும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடமிருந்து நிலத்தகுதிச் சான்றிதழ் பெறப்பட்டு, நிதிநிலையினைக் கருத்திற்கொண்டு வருங்கால நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

44—

தரம் உயர்த்துதல்

வினா எண் 4417—திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் அருகே கீழ்க்குப்பம் புறக்காவல் நிலையத்தை தரம் உயர்த்தித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழகத்தில் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்களை முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவதே அரசின் கொள்கையாகும். இதன்படி விழுப்புரம் மாவட்டம், கீழ்க்குப்பம் புறக்காவல் நிலையத்தை முழுநேரக் காவல் நிலையமாகத் தரம் உயர்த்துவது குறித்து நன்கு ஆய்வு செய்து தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

45—

நவீனப்படுத்துதல்

வினா எண் 4428—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

காவல் துறையை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஆம். இவ்வாண்டில் (2006-2007)காவல் துறையை நவீனப்படுத்துதலுக்காக ரூபாய் 68 கோடிக்கான திட்டம் (75:25- மத்திய அரசு நிதியுதவி ரூ.51 கோடி+ மாநில அரசு நிதி உதவி ரூ. 17.00 கோடி) மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, அத்திட்டங்களை அமல்படுத்துவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது அத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

46—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 4434—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

இல்லை, எழவில்லை.

47—

நியமனம்

வினா எண் 4790—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, பூம்புகார் காவல் நிலையத்திற்குப் போதுமான காவலர்களை நியமனம் செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், பூம்புகார் காவல் நிலையம் முழு எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. எனவே இக்காவல் நிலையத்திற்கு மேலும் அதிகமாக காவலர்களை நியமிக்க வேண்டிய கேள்வி எழவில்லை.

48—

காவல் ஆணையர் பணியிடம்

வினா எண் 5009—திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகர காவல் துறையை இரண்டாகப் பிரித்து இரண்டு மாநகர காவல் ஆணையர் பணியிடம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரக் காவல் துறையை இரண்டாகப் பிரித்து மாதவரம், அம்பத்தூர் மற்றும் புனித தாமஸ் மலை ஆகிய காவல் மாவட்டங்களில் உள்ள 39 காவல் நிலையங்களை உள்ளடக்கி புனித தாமஸ் மலையை தலைமையிடமாகக் கொண்டு சென்னை புறநகர் காவல் ஆணையரகம் உருவாக்கி அரசாணை (நிலை) எண் 822 உள் (கா.14) துறை, நாள் 21-7-2008-ல் ஆணையிடப்பட்டு இயங்கி வருகின்றன. காவல் துறை தலைவர் அந்தஸ்திலுள்ள அதிகாரி சென்னை புறநகர் காவல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

49—

காவலர்கள் நியமனம்

வினா எண் 5010—திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) சென்னை மாநகர காவல் துறைக்கு கூடுதலாக காவலர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது சென்னை நகர காவல் துறைக்கு கூடுதலாக காவலர்களை நியமிக்க வேண்டிய தேவை எழவில்லை.

50—

தரம் உயர்த்துதல்

வினா எண் 5033—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், கட்டனூர் புறக்காவல் நிலையத்தை தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தற்போது 106 புறக்காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அப்புறக்காவல் நிலையங்களை அரசின் நிதிநிலை மற்றும் தேவைக்கேற்ப அவ்வப்போது முழுக்காவல் நிலையங்களாக தரம் உயர்த்துவதே அரசின் கொள்கையாகும். மானாமதுரையிலுள்ள கட்டனூர் புறக்காவல் நிலையத்தை அரசின் நிதி நிலைக்கேற்ப முழுக்காவல் நிலையமாக தரம் உயர்த்த உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

51—

கழிவறைகள்

வினா எண் 5104—திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

(அ) சென்னை, தலைமைச் செயலகத்திற்கு வரும் பார்வையாளர்கள் பயன்பாட்டிற்காக, கழிவறைகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இதன் மீது அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

52—

சிறு கடைகள்

வினா எண் 5105—திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலகத்தில் மூடப்பட்ட சிறு கடைகளைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) தலைமைச் செயலகத்தினுள், பாதுகாப்பு காரணமாக மூடப்பட்ட சிறு கடைகளைத் திறக்க உத்தேசமில்லை. மூடப்பட்ட கடைகளின் உரிமதாரர்களுக்கு மாற்று இடம் அளிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

53—

முழு நேரக் காவல் நிலையம்

வினா எண் 5565—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதி, மாகசாலை புறக்காவல் நிலையம் முழு நேரக் காவல் நிலையமாக மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் பூம்புகார் என்னுமிடத்தில் புறக்காவல் நிலையம் எதுவும் இயங்கவில்லை. அவ்வூரில் ஏற்கெனவே ஒரு முழு நேரக் காவல் நிலையம் இயங்கி வருகிறது.

54—

தண்டித்தல்

வினா எண் 5587—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?*

(அ) வழிப்பறி செய்பவர்களை கடுமையாக தண்டிக்க அரசு சட்டத் திருத்தம் கொண்டு வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநகரங்களிலும் மற்றும் மாவட்டங்களிலும் தனி அலுவலில் காவலர்களை நியமித்து வழிப்பறி கொள்ளை தடுத்து வரப்பட்டுள்ளது. வழிப்பறி கொள்ளையில் சம்பந்தப்பட்ட நபர்களை கைது செய்து கொள்ளை அடிக்கப்பட்ட பொருட்களை மீட்டு நீதிமன்றங்களின் மூலம் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாநிலத்தில் உள்ள மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களில் முக்கியமான நெடுஞ்சாலைகளில் நிரந்தரமாக சோதனைச் சாவடிகள் அமைத்து நெடுஞ்சாலைகளில் நடக்கும் வழிப்பறி கொள்ளை தடுக்கப்பட்டு வருகிறது. மாநிலத்தில் உள்ள மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களில் உள்ள சிறைச் சாலைகளிலிருந்து குற்றவாளிகள் விடுவிக்கப்பட்ட விவரத்தினை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

அறிந்து, அந்தந்த மாவட்டங்களுக்கு மேற்படி நபர்களை கண்காணிப்பு செய்ய தகவல் தெரிவிக்கப்படுகிறது. வழிப்பறி கொள்ளை வழக்குகளில் செயின் பறிப்பு வழக்கில் குற்றவாளிகளுக்கு 6 மாத தண்டனை வழங்கப்படுகிறது. மேற்படி தண்டனை அடைந்த குற்றவாளிகள் மீது குண்டர் தடுப்புச் சட்ட வழக்கு பதிவு செய்வதனால் வழிப்பறி கொள்ளை குற்றங்கள் தடுக்கப்படுகிறது.

55—

தண்டித்தல்

வினா எண் 5588—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகளை கடத்தும் கொடியவர்களை கடுமையாக தண்டிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் பணிபுரியும் அலுவலர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இடையே குழந்தைகள் கடத்தப்படுவதை தடுக்க விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், காவல் துறையில் காவல் ரோந்து பணியில் செல்லும் காவலர்களுக்கு இக்குற்றத்தை தடுக்க தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கூடும் கோவில் திருவிழாக்கள் மற்றும் மத பண்டிகை தினங்களில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவும், குழந்தைகள் கடத்தப்படுவதை தடுக்கவும் ஒலிபெருக்கி மூலம் காவல் துறையினரால் எச்சரிக்கப்படுகின்றனர்.

56—

நடவடிக்கை

வினா எண் 5589—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) பேருந்துகளில் பிக்பாக்கெட் செய்யும் சமூக விரோதிகளின்மீது காவல் துறைமூலம் கடுமையாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் முக்கியமாக பேருந்து நிலையங்களிலும் பேருந்து நிறுத்துமிடங்களிலும் மற்றும் பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களிலும் காவல் துறையினர் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தொலைக்காட்சி மூலமாகவும் மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலமாகவும் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க அறிவுறுத்தப்படுகின்றனர். மேலும் மாதத்தின் முதல் வாரத்தில் சம்பள தினத்தை முன்னிட்டு பிக்பாக்கெட் குற்றவாளிகளை கண்காணிக்க காவல் துறையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். பிடிபடும் குற்றவாளிகளைத் தண்டிக்க தற்போது நடைமுறையிலுள்ள இந்திய தண்டனைச் சட்டமே போதுமானதாக உள்ளது. மேலும் கொடூரமான பிக்பாக்கெட் குற்றவாளிகளை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

57—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 5621—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

இல்லை. எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

58—

சொந்தக் கட்டடம்

வினா எண் 5871—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நாகரசம்பட்டி காவல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதியில் நாகரசம்பட்டி காவல் நிலையம் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் வருங்கால நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

59—

புறக்காவல் நிலையம்

வினா எண் 5968—திரு. டி.கே. ராஜா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, புதூர் நாடு கிராமத்தில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, புதூர் நாடு கிராமத்தில் புறக்காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

60—

விபச்சாரம் ஒழித்தல்

வினா எண் 7299—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் விபச்சாரத்தை ஒழிக்க கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஆம். தமிழ்நாட்டில் விபச்சாரத்தை ஒழிக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

61—

புறநகர் காவல் நிலையம்

வினா எண் 7315—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையின் எல்லையும், கேரளாவின் எல்லையும் சந்திக்கும் இடத்தில் புறநகர் காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வால்பாறையின் எல்லையும், கேரளாவின் எல்லையும் சந்திக்கும் இடத்தில் புறநகர் காவல் நிலையம் அமைப்பது குறித்தான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

62—

குழு அமைத்தல்

வினா எண் 7317—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சாதி மத நல்லிணக்கத்தை மாவட்டந்தோறும் ஏற்படுத்த காவல் துறை உயர் அதிகாரி தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மதம் மற்றும் சாதிக் கலவரங்களைத் தவிர்க்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ரீதியாக அனைத்துக் கட்சிகள் மற்றும் சமுதாயத் தலைவர்கள், முக்கிய பிரமுகர்களைக் கொண்ட நிரந்தரமான அமைதிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை (தடுப்பு) சட்டம் 1989 மற்றும் குடியியல் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் 1955-ன் கீழ் வழக்குகள் பதிவு செய்வது குறித்து மட்டும் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் அலுவலகத்தில் மேற்பார்வையிடப்பட்டு வரப்படுகிறது. மாவட்ட அளவில் வன்கொடுமை தடுப்புச் சட்டம் தொடர்பான விழிப்புக் குழு ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்டு மாவட்ட அளவில் செயல்பட்டு வருகிறது. அதில் காவல் துறை உயர் அதிகாரிகள், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தீண்டாமையை கடைப்பிடிக்கா வண்ணம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அரசால் சார்ந்த மற்றும் அரசால் சாராத உறுப்பினர்களுடன் விழிக்கண் குழுக் கூட்டம் ஒவ்வொரு காலாண்டிலும் மாவட்ட வாரியத்தால் தேதி நிர்ணயம் செய்யப்பட்டு நடத்தப்படுகிறது. இதில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் உள்ள அனைத்து வழக்குகளின் நிலைகளும் பரிசீலனை செய்யப்பட்டு இதில்

2011 பிப்ரவரி 10]

நிலுவையினைப் போக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு கூட்டத்திலும் நிலுவை விழுக்காட்டினை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

இக்கூட்டத்தின் செயல்முறைகள், இயக்குநர் அவர்களுக்கும், அரசு செயலர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சென்னை-9க்கும் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியராலும் அனுப்பப்படுகிறது.

இவ்வினம் தொடர்பாக இயக்குநர் அவர்களால் மாவட்ட சுற்றுப்பயணத்தின் போதும், ஆய்வு கூட்டங்களின் போதும் ஆய்வுகள் மேற்கொண்டு முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது.

63—

புதிய தீயணைப்பு நிலையம்

வினா எண் 8247—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம், நாயுடுமங்கலம் ஆகிய பகுதிகளில் புதிய தியணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* இல்லை.

64—

காவல் நிலையம்

வினா எண் 8248—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம்புதூர் ஊராட்சியில் புதியதாக காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம்புதூர் ஊராட்சியில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்து கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

65—

காவல் நிலையம்

வினா எண் 9263—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

மொரப்பூர் தொகுதி, தென்கரைக்கோட்டையில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

காவல் நிலையங்கள் அமைப்பது தொடர்பாக வரக்கூடிய கோரிக்கைகள் அனைத்தும் அவ்வப்போது எழக்கூடிய தேவையையும், நிலவும் சூழலையும், கோரிக்கையின் நியாயத்தையும் கருத்தில் கொண்டு உரிய வகையில் முக்கியத்துவம் தந்து முன்னுரிமை அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் மட்டுமே புதிய காவல் நிலையங்கள் அமைத்து ஆணையிடுவது எனவும் இது குறித்த கோரிக்கை எதனையும் பிறவகையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதில்லை என்ற நிலை நடைமுறையில் உள்ளது.

மேற்கூறிய சூழ்நிலையில், மொரப்பூர் தொகுதி, தென்கரைக்கோட்டையில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்து, தற்போது அமைக்கப்பட்டுள்ள மூன்றாவது காவல் குழு பரிந்துரைக்குப் பின்னர் தேவை மற்றும் முக்கியத்துவம் அடிப்படையில் உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

66—

புறக்காவல் நிலையம்

வினா எண் 9264—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

மொரப்பூர் தொகுதி, சித்தேரியில் புறக்காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழகத்தில் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்களை, முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவதே அரசின் கொள்கையாகும். அதன்படி, நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் காவல் துறை மானியக் கோரிக்கைக்கு பதிலளித்தபோது இந்நிதியாண்டில் முதல் கட்டமாக 10 புறக்காவல் நிலையங்களை நிலை உயர்த்துவதாக இந்த அரசால் அறிவிப்பு செய்யப்பட்டு அதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, புதியதாக தமிழகத்தில் புறக்காவல் நிலையம் தோற்றுவித்தல் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

67—

காவல் நிலையம்

வினா எண் 9588—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், விக்கிரமங்கலம் காவல் நிலையம் அரசு கட்டடத்தில் இயங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மதுரை மாவட்டம், விக்கிரமங்கலம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பொருட்டு அரசு ஆணை எண் 943, உள் (நவீனம்) துறை, நாள் 4-10-2006-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்காவல் நிலையம் கட்டுவதற்கான பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம்மூலம் விரைவில் துவங்கப்பட உள்ளது.

68—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 9619—திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், பேரையூரில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

பேரையூரில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வாய்ப்பு தற்போது இல்லை.

69—

புறக்காவல் நிலையம்

வினா எண் 9638—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சூரக்காடு கூப்படுவான் உப்பனார் பாலத்தின் தென்புறம் புறக்காவல் நிலையம் துவங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழகத்தில் தற்போது 106 புறக்காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அப்புறக்காவல் நிலையங்கள் அரசின் நிதிநிலைமை மற்றும் தேவைக்கேற்ப ஆண்டுதோறும் முழுக் காவல் நிலையங்களாக தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டு வருகிறது. இந்நிலையில், சீர்காழி தொகுதி, சூரக்காடு உப்பனார் பாலத்தின் தென்புறம் புறக்காவல் நிலையம் தோற்றுவித்தல் குறித்த கருத்துரு அரசின் பரிசிலனையில் இல்லை.

70—

காவலர்கள் நியமனம்

வினா எண் 9874—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி காவல் நிலையத்திற்குப் போதிய காவலர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

30-08-2006 அன்று சட்டப் பேரவையில் செய்த அறிவிப்பின் அடிப்படையில் 23-1-2007-ம் நாளிட்ட உள் துறை அரசாணை (நிலை) எண் 148-ல் வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி காவல் நிலையம் உள்ளிட்ட 14 காவல் நிலையங்களை தரம் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி காவல் நிலையத்திற்கு போதிய கூடுதல் காவலர்கள் நியமிக்கப்படுவர்.

71—

புதிய காவல் நிலையம்

வினா எண் 10500—திரு. ச. லட்சுமணன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் புதிய காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

காவல் நிலையங்கள் தொடர்பாக வரக்கூடிய கோரிக்கைகள் அனைத்தும் அவ்வப்போது எழக்கூடிய தேவையையும், நிலவும் சூழலையும், கோரிக்கையின் நியாயத்தையும் கருத்தில் கொண்டு உரிய வகையில் முக்கியத்துவம் தந்து முன்னுரிமை அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் மட்டுமே புதிய காவல் நிலையங்கள் அமைத்து ஆணையிடுவது எனவும் இது குறித்த கோரிக்கை எதனையும் பிறவகையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதில்லை என்ற நிலை நடைமுறையில் உள்ளது.

மேற்கூறிய சூழ்நிலையில் தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்து தற்போது அமைக்கப்பட்டுள்ள மூன்றாவது காவல் குழு பரிந்துரைக்குப் பின்னர் தேவை மற்றும் முக்கியத்துவம் அடிப்படையில் உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

[2011 பிப்ரவரி 10

72—

காவல் நிலையம்

வினா எண் 10556—திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை கோயம்பேட்டில் இயங்கும் புறக்காவல் நிலையத்திற்குப் பதிலாக முழு அளவிலான காவல் நிலையம் அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சென்னை நகரில் கோயம்பேட்டில் ஒரு முழுக் காவல் நிலையம் 73 காவல் பணியாளர்களுடன் தற்போது செயல்பட்டு வருகிறது. மேலும் அரசாணை (நிலை) எண் 155, உள் துறை, நாள் 6-2-1999-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி கோயம்பேட்டில் ஒரு போக்குவரத்து காவல் நிலையம் 52 காவல் பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

73—

கட்டட வசதி

வினா எண் 10750—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

74—

கட்டட வசதி

வினா எண் 10751—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி காவல் நிலையம் தற்போது வாடகை கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட திருத்துறைப்பூண்டி தாலுகா மற்றும் நகரம் புல எண் 147/4-ல் 0.08.0 ஹெக்டேர் ஓடை புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டு நிலமாற்றம் செய்வதை நிலுவையில் வைத்து காவல் துறைக்கு முன்னுழைவு அனுமதி வழங்கி அரசாணை நிலை எண் 607, வருவாய் (நிமு 4(2) துறை, நாள் 20-10-2008-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் சொந்தக் கட்டடம் இல்லாத 273 காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடம் அடுத்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற மூன்றாம் காவல் ஆணையத்தின் பரிந்துரைப்படி, நிதி நிலையினைக் கருத்திற்கொண்டு இக்காவல் நிலையத்திற்கு வருங்கால காவல் துறை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

75—

போக்குவரத்துக் காவல் நிலையம்

வினா எண் 10752—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகரத்தில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் அமையப்பெற்றுள்ள வகை 4-ஐ சார்ந்த காவல் நிலைய பணியாளர்களைக் கொண்டு அக்காவல் நிலையங்களின் எல்லையில் போக்குவரத்து திறம்பட நிர்வகிக்கப்பட்டு வருகிறது. எனவே அவ்விடத்தில் தனியாக போக்குவரத்து காவல் நிலையம் அமைத்திடும் அவசியம் எழவில்லை.

76—

புதுப்பித்தல்

வினா எண் 10300—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் காவல் நிலையத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கோட்டூர் காவல் நிலையம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இச்செயற்குறிப்பு நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் சேர்த்து புதிய கட்டடம் கட்ட பரிசிலிக்கப்படும்.

77—

துணை கண்காணிப்பாளர் அலுவலகம்

வினா எண் 11143—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதி, பூம்புகார் பகுதியில் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி துணைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டில் பூம்புகார் காவல் நிலையம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மீண்டும் இப்பகுதியில் ஒரு துணை கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

78—

ஆம்புலன்ஸ் வசதி

வினா எண் 1248—திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தீயணைப்பு நிலையத்திற்கு ஆம்புலன்ஸ் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) பல்லடம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஒரு ஒற்றை ஊர்தி நிலையம் என்பதால், இந்நிலையத்திற்கு ஒரு நீர்தாங்கி வண்டி மட்டுமே ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அவசர அழைப்புகளின்போது நீர்தாங்கி வண்டிமூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நோயாளர் ஊர்தி தேவைப்படும்போது திருப்பூர் மற்றும் பொள்ளாச்சியில் அமைந்துள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திலுள்ள நோயாளர் ஊர்திகளை பயன்படுத்திக் கொள்ள இயலும். எனவே, தற்போது பல்லடம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நோயாளர் ஊர்தி வழங்க வேண்டிய நிலை எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

[2011 பிப்ரவரி 10

79—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 11865—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை, கண்டாச்சிபுரம், முகையூர் ஆகிய ஊர்களில் தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

முகையூர் தொகுதியைச் சேர்ந்த மணலூர்பேட்டை, கண்டாச்சிபுரம், முகையூர் ஆகிய ஊர்களைச் சுற்றி அமைந்துள்ள ஊர்களான திருக்கோவிலூர், திருவண்ணாமலை, சங்கராபுரம், விழுப்புரம், வேட்டவலம் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் ஆகிய இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருவதால், இவ்விடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

80—

காவல் நிலையம்

வினா எண் 11971—திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் மற்றுமொரு காவல் நிலையம் அமைக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

காவல் நிலையங்கள் அமைப்பது தொடர்பாக வரக்கூடிய கோரிக்கைகள் அனைத்தும் அவ்வப்போது எழக்கூடிய தேவையையும், நிலவும் சூழலையும், கோரிக்கையின் நியாயத்தையும்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

கருத்தில் கொண்டு உரிய வகையில் முக்கியத்துவம் தந்து முன்னுரிமை அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் மட்டுமே புதிய காவல் நிலையங்கள் அமைத்து ஆணையிடுவது எனவும் இது குறித்த கோரிக்கை எதனையும் பிறவகையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதில்லை என்ற நிலை நடைமுறையில் உள்ளது.

மேற்கூறிய சூழ்நிலையில், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் மற்றொரு காவல் நிலையம் அமைப்பது குறித்து, தற்போது அமைக்கப்பட்டுள்ள மூன்றாவது காவல் குழு பரிந்துரைக்குப் பின்னர் தேவை மற்றும் முக்கியத்துவம் அடிப்படையில் உரிய நேரத்தில் பரிசிலிக்கப்படும்.

81—

கட்டட வசதி

வினா எண் 12404—திரு. ஆர். சிவானந்தம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியிலுள்ள ஆரணி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சொந்தமான கட்டடத்தில்தான் நிலையம் இயங்கி வருகிறது.

82—

தீயணைப்புக் கருவிகள் மற்றும் வாகனங்கள்

வினா எண் 13839—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மற்றும் திருக்கழுக்குன்றம் தீயணைப்பு நிலையங்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய தீயணைப்புக் கருவிகள் மற்றும் தீயணைப்பு வாகனங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தற்போது பயன்பாட்டில் உள்ள கருவிகள் மற்றும் வாகனங்களே போதுமானதாக உள்ளது.

83—

விளம்பரப் பலகைகள்

வினா எண் 13871—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாஸ்மாக் கடையின் முன்பு மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விரிவான விழிப்புணர்வு விளம்பரப் பலகைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மதுவின் தீமைகளைக் கருத்தில் கொண்டு "மது நாட்டுக்கு, வீட்டுக்கு உயிருக்கு கேடு" என்ற வாசகம் அனைத்து டாஸ்மாக் பெயர்ப் பலகைகளில் எழுதப்பட்டும், அனைத்து வகை மதுபானப் பாட்டில்களில் அச்சிடப்பட்டும் உள்ளது. எனவே, விளம்பரப் பலகைகளை தனியே வைக்க வேண்டிய அவசியம் இல்லை.

84—

டாஸ்மாக் கடைகள் அகற்றுதல்

வினா எண் 13874—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு பகுதிகளில் கோயில்களுக்கும் பள்ளிகளுக்கும் அருகில் உள்ள டாஸ்மாக் கடைகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாமல்லபுரம் பகுதியில் செயல்பட்டு வந்த 5 மதுபானக்கடைகளில் 2 மதுபானக்கடைகள் (எண்கள் 4180 மற்றும் 4183) இடமாற்றம் செய்யப்பட்டுவிட்டன. Butter Ball

2011 பிப்ரவரி 10]

இடத்திற்கு எதிரில் செயல்படும் மதுபானக்கடைக்கு (எண்.4182) ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அக்கடை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருக்கழுக்குன்றம் மற்றும் செங்கற்பட்டு பகுதிகளில் செயல்படும் மதுபான கடைகள் அரசு விதி முறைகளுக்குட்பட்டு பொது மக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி செயல்பட்டு வருவதால், அவற்றை அகற்றவோ அல்லது இடமாற்றம் செய்ய வேண்டிய அவசியமோ எழவில்லை.

85—

முன்னுரிமை

வினா எண் 14291—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் தமிழ் படித்தவர்களுக்கு பணி நியமனங்களில் முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழை முதல் பாடமாகக் கொண்டும் பயிற்று மொழியாகக் கொண்டும் பயின்றவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் நிலை தற்போது நடைமுறையில் இல்லை.

86—

தரம் உயர்த்துதல்

வினா எண் 14541—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதியில் நடுவீரன்பட்டியில் புறக்காவல் நிலையத்தை முழுநேர காவல் நிலையமாக்க தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்களை தேவை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவதே அரசின் கொள்கையாகும். அதனடிப்படையில் தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப நெல்லிக்குப்பம் தொகுதி நடுவீரன்பட்டியில் இயங்கிவரும் புறக்காவல் நிலையத்தை தரம் உயர்த்துவது குறித்து தக்க தருணத்தில் அரசு முடிவெடுக்கும்.

87—

தீயணைப்பு ஊர்தி

வினா எண் 14552—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதி, சுனாமியால் பாதிக்கப்பட்ட சின்னங்குடி தற்காலிக குடியிருப்புப் பகுதியில், தீயணைப்பு ஊர்தி ஒன்றினை நிரந்தரமாக வைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ சின்னங்குடி தற்காலிக குடியிருப்புப் பகுதியில் நிரந்தரமாக தீயணைப்பு ஊர்தி ஒன்றினை நிறுத்தி வைக்க வேண்டிய நிலை தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

88—

கட்டட வசதி

வினா எண் 14644—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) தளி தொகுதி, கெலமங்கலம் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தளி தொகுதி, கெலமங்கலம் காவல் நிலையத்திற்கு (ஊரக வடிவமைப்பில்) புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு 2008-2009 ஆம் ஆண்டு காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு அரசாணை (நிலை) எண்.1447, உள் (நவீனம்) துறை, நாள் 28-.)-2008-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி காவல் நிலையத்திற்கான கட்டுமானப்பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

89—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 14773—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, தேசூர் பேரூராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, தேசூர் பேரூராட்சியிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில் பெரணமல்லூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும் இப்பகுதியை சுற்றியுள்ள இடங்களான செஞ்சி, சேத்பட் மற்றும் திண்டிவனம் ஆகிய இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் உள்ளன. எனவே, இங்கு புதியதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

90—

தரம் உயர்த்துதல்

வினா எண் 15621—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை, சோலையாறு அணைப் பகுதியில் உள்ள புறநகர் காவல் நிலையத்தை முழு நேரக் காவல் நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வால்பாறை, சோலையாறு அணைப் பகுதியிலுள்ள புறநகர் காவல் நிலையத்தை முழுநேர காவல் நிலையமாகத் தரம் உயர்த்த நன்கு ஆய்வு செய்து தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப முடிவு செய்யப்படும்.

91—

செப்பனிடுதல்

வினா எண் 17622—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், சேலம் கேம்ப் பகுதியிலுள்ள காவலர் குடியிருப்பைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சேலம் கேம்ப் பகுதியில் உள்ள காவலர் குடியிருப்புகளை செப்பனிடுவது தொடர்பாக முழுமையான கருத்துரு சேலம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடமிருந்து திட்ட மதிப்பீட்டினைப் பெற்று பழுது பார்ப்பது குறித்து பரிசிலனை செய்யப்படும்.

2011 பிப்ரவரி 10]

92—

கட்டட வசதி

வினா எண் 18751—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, கடையாலுமூடு காவல் நிலையத்திற்குப் புதுக் கட்டடம் கட்டும் பணியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் உள்ள கடையாலுமூடு காவல் நிலையம் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட கலியல் கிராம ஆர்.எஸ்.எண் 510/6 மற்றும் 510/3-ல் 0.13.58 ஹெக்டேர் நிலம் காவல் துறை வசம் உள்ளது. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் காவல் நிலையங்களுக்கு, அடுத்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டப்படவேண்டும் என்ற மூன்றாம் காவல் ஆணைய பரிந்துரையின் அடிப்படையில், இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தர பரிசிலனை செய்யப்படும்.

93—

புதிய கட்டடம்

வினா எண் 18818—திரு. வை. காவேரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காக்காபாளையம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி காவல் நிலையம் (காக்காபாளையம் காவல் நிலையம்) தற்போது அரசுக்கு சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

94—

தரம் உயர்த்துதல்

வினா எண் 20166—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், அம்பலூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட திம்மமாப்பேட்டை புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வேலூர் மாவட்டம், அம்பலூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட திம்மமாப்பேட்டை புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக தரம் உயர்த்துவது குறித்து தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப முடிவு செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
ALONE TRI

95—

போக்குவரத்துக் காவல் நிலையம்

வினா எண் 20170—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி நகரத்தில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட காவல் ஆளினர்களைக் கொண்டு முறையே சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றப் பிரிவு பணிகளை மேற்பார்வை செய்வதோடு அக்காவல் நிலைய எல்லைக்குள் தேவைப்படும் போக்குவரத்து பணிகளையும் நிர்வகித்து வருகிறார்கள். எனவே, வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி காவல் நிலையத்திற்கு கூடுதலாக வழங்கப்பெற்றுள்ள பணியாளர்களைக் கொண்டு அக்காவல் நிலைய எல்லைக்குள் போக்குவரத்தினை மேலும் திறம்பட நிர்வகிக்கத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே, வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் தனியாக போக்குவரத்து காவல் நிலையம் அமைத்திடும் அவசியம் எழவில்லை.

96—

காவல் நிலையம்

வினா எண் 20692—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாய்க்கன்பட்டியில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாய்க்கன்பட்டியில் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

97—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 21841—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தினைச் சுற்றி இலுப்பூர், மணப்பாறை, திருச்சி மற்றும் பொன்னமராவதி ஆகிய நான்கு இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருவதால், இவ்விடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

98—

திருக்குறளை தேசிய நூலாக அறிவித்தல்

வினா எண் 22481—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலகப் பொதுமறையான திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தி வந்தது.

தேசிய நூல் என்ற வகைப்பாடு இல்லை என்றும், மேலும் அவ்வாறு தேசிய நூல் என வகைப்படுத்த ஏதும் வழிமுறைகள் நிர்ணயம் செய்யப்படவில்லை என்றும், தேசிய நூல் என தனியே வகைப்படுத்தினால் அதற்கு என்ன சிறப்புகள் வழங்கப்படும் என முடிவெடுக்கப்படவில்லை என்றும், அவ்வாறு தேசிய நூல் என்ற வகைப்பாடு ஏற்படுத்த முடிவெடுத்தால் அந்த நேரத்தில்

2011 பிப்ரவரி 10]

திருக்குறளை அவ்வாறு அறிவிக்க முழு முயற்சி எடுக்கப்படும் என்று தற்பொழுது மத்திய அரசு தெரிவித்துள்ளது.

99—

உலகத் தமிழ் மாநாடு

வினா எண் 22503—திரு. சை. சையது கௌஸ் பாஷா: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுரை மாநகரில் ஏழாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஏழாவது உலகத் தமிழ் மாநாடு ஏற்கனவே மொரீசியசில் நடைபெற்றுள்ளது.

100—

புறக்காவல் நிலையம்

வினா எண் 23357—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் கோவில் முன்புறம் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவில் முன்புறம் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

101—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 23376—திரு. மா. ராஜசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தொட்டியம் தொகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியத்திலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் முசிறி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் செயல்பட்டு வருவதால், தொட்டியம் தொகுதியில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

102—

நடனக் கலைப் பள்ளி

வினா எண் 23578—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையில் நடனக் கலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் நடனக் கலைப் பள்ளி துவங்க அரசின் பரிசீலனை ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

103—

அருங்காட்சியகம்

வினா எண் 23923—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டங்கள் தோறும் அருங்காட்சியகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்டங்கள் தோறும் அருங்காட்சியகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

104—

கட்டட வசதி

வினா எண் 24257—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்ட அரசு இசைப் பள்ளிக்குத் தனியாக கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூரில் அரசு இசைப் பள்ளி இல்லாததால் இக்கேள்வி எழவில்லை.

105—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 25009—திரு. கோ. அரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், மணவூர் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், மணவூர் பகுதியினைச் சுற்றி பேரம்பாக்கம் மற்றும் அரக்கோணம் ஆகிய இரண்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருவதால், மணவூர் பகுதியில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

106—

புறக்காவல் நிலையம்

வினா எண் 25010—திரு. கோ. அரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், மணலூர் பகுதியில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், மணலூர் பகுதியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

107—

காவல் நிலையம்

வினா எண் 25083—திரு. வை. காவேரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

108—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 25084—திரு. வை. காவேரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியைச் சுற்றி சேலம், சங்ககிரி, எடப்பாடி ஆகிய மூன்று இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருவதால், மகுடஞ்சாவடியில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

109—

கட்டட வசதி

வினா எண் 25106—திருமதி பதர் சயீத்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவல்லிக்கேணி தொகுதி D-3 காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை நகரிலுள்ள D-3 காவல் நிலையம் தற்போது அரசுக்கு சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் கட்டுவது குறித்த உரிய செயற்குறிப்புகள் காவல் துறை தலைமை இயக்குநரிடமிருந்து பெறப்படும் போது, காவலர்களின் எண்ணிக்கை, நிலம் கைவசம் உள்ளதைப் பொருத்து நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

110—

அரசுடைமையாக்குதல்

வினா எண் 25674—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கவியரசு கண்ணதாசனின் படைப்புகளை அரசுடைமையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கவியரசு கண்ணதாசனின் படைப்புகளை நாட்டுடைமையாக்குதல் தொடர்பில் அவரின் மரபுரிமையர்களிடமிருந்து கோரிக்கை ஏதும் அரசுக்கு வரப்பெறவில்லை.

111—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 25736—திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை, மணல்மேடு பகுதியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் கோட்டம், மணல்மேடு பகுதியைச் சுற்றி 25 கிலோமீட்டர் சுற்றளவிற்குள் சீர்காழி, குத்தாலம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மூன்று இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டுவருவதால், மணல்மேடு பகுதியில் நிகழும் தீ அபாயங்களை இந்நிலையங்களிலுள்ள தீயணைப்பு ஊர்திகளைக் கொண்டே சமாளிக்க இயலும் என்பதால், மணல்மேட்டில் புதியதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

112—

தரம் உயர்த்துதல்

வினா எண் 25742—திரு. ஜான் ஜோசப்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கண்ணுமாமூடு புறக்காவல் நிலையத்தைக் காவல் நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பலுகள் என்று அழைக்கப்படும் கண்ணுமாமூடு புறக்காவல் நிலையம் அரசாணை எண் 868, உள் துறை நாள் 12-6-07-ன்படி முழுக்காவல் நிலையமாக (தரம்-5) உயர்த்தப்பட்டுள்ளது.

113—

அஞ்சல் தலை

வினா எண் 25801—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழாருக்கு அஞ்சல் தலை வெளியிட மத்திய அரசினை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழாருக்கு அஞ்சல் தலை வெளியிட வேண்டி இதுநாள் வரை அரசுக்கு கோரிக்கை எதுவும் வரப்பெறவில்லை. எனினும் உறுப்பினரின் வினாவையே கோரிக்கையாக ஏற்று, நடவடிக்கை எடுக்கப்பெற்று தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழாருக்கு அஞ்சல் தலை வெளியிட வேண்டி, நடுவண் அரசை வலியுறுத்தி, நடுவண் அரசின் தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் அவர்களுக்கு நேர்முகக் கடிதம் 12-4-2008 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

114—

கட்டட வசதி

வினா எண் 25842—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, குலசேகரம் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியைச் சார்ந்த குலசேகரம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் 25-4-1986 முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டத் தேவையான நிலம் கையகப்படுத்தப்படவில்லை. மேற்கண்ட நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு புறம்போக்கு நிலங்களோ அல்லது வேறு துறைகளுக்கான உபரி நிலங்களோ இருப்பின் அதன் விபரத்தை தெரிவிக்குமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரிடம் கோரப்பட்டுள்ளது. எனவே தேவைப்படுகின்ற நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னரே கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்க இயலும் என்பதால், இந்நிலையத்திற்குச் சொந்தமாக கட்டடம் கட்டும் நிலை தற்போது எழவில்லை.

2011 *பிப்ரவரி* 10]

115—

கட்டட வசதி

வினா எண் 25875—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் காவல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள புதுப்பட்டினம் காவல் நிலையம் தற்போது வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட புதுப்பட்டினம் கிராம சர்வே எண் 319/1-ல் 50 சென்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் காவல் நிலையங்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்ற மூன்றாம் காவல் ஆணைய பரிந்துரையின் அடிப்படையில், வருங்கால காவல் துறை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

116—

கட்டட வசதி

வினா எண் 26226—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு பெரியநெகமம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள நெகமம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் 2006—2007 ஆண்டுக்கான காவல் துறையை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு, தற்போது கட்டுமான பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிணத்துக்கடவு காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால காவல் துறையை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

117—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 26227—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவுப் பகுதியினைச் சுற்றி 25 கி.மீ. சுற்றளவிற்குள் பல்லடம் மற்றும் பொள்ளாச்சி ஆகிய இரண்டு இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடத்தினைச் சுற்றி ஏற்படும் தீ விபத்து அழைப்புகளை இந்நிலையங்களிலுள்ள ஊர்திகளைக் கொண்டே மேற்கொள்ள இயலுமென்பதால் கிணத்துக்கடவுப் பகுதியில் புதியதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

118—

புதிய காவல் நிலையம்

வினா எண் 26228—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவு தொகுதி, வடசித்தூர் கிராமத்தில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கிணத்துக்கடவு தொகுதி, வடசித்தூர் கிராமத்தில் புறக்காவல் நிலையம் அமைக்க கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

119—

கட்டட வசதி

வினா எண் 26229—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி, வடக்கிப்பாளையம் காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி உட்கோட்டத்தில் கீழ்க்கண்ட காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன:—

பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமானக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

பொள்ளாச்சி தாலுகா காவல் நிலையம் சிறைத் துறைக்கு சொந்தமானக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

பொள்ளாச்சி மேற்கு காவல் நிலையம் அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

பொள்ளாச்சி வடக்கிப்பாளையம் காவல் நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட நிலம் தற்பொழுது கைவசம் இல்லை. உரிய நிலம் கையகப்படுத்திய பின்னர் புதிய கட்டடம் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

120—

உட்கோட்டம்

வினா எண் 26231—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாலக்கோடு பகுதி காவல் நிலையங்களை உள்ளடக்கி பாலக்கோட்டில் உட்கோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

பாலக்கோடு பகுதி காவல் நிலையங்களை உள்ளடக்கி பாலக்கோட்டில் உட்கோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

121—

கட்டட வசதி

வினா எண் 26237—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி, அரூர் நக்சலைட் தனிப் பிரிவுகளுக்கும், மதுவிலக்கு அமல் பிரிவு அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மதுவிலக்கு மற்றும் நக்சலைட் தனிப் பிரிவுகளுக்கென்று தனியாக காவல் நிலையம் ஏதும் தற்போது கட்டடப்படுவதில்லை.

2011 பிப்ரவரி 10]

122—

போக்குவரத்துக் காவல் நிலையம்

வினா எண் 26239—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூரில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மூன்றாவது காவல் ஆணையம் மற்றும் உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின்படி வாகனங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், போக்குவரத்து நிலைமைகளை கருத்திற்கொண்டும் புதிய போக்குவரத்துக் காவல் நிலையங்கள் திறக்கப்படும் எனவும், அரசுக்கு பரிந்துரை செய்து அரசால் உரிய அரசாணையும் வழங்கப்பட்டுவிட்டது. அதனடிப்படையில் அரூரில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்க நிதி நிலைமையை கருத்தில்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

123—

காவல் நிலையம்

வினா எண் 26240—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மாட்லாம்பட்டியில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மொரப்பூர், மாட்லாம்பட்டியில் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

124—

புதிய தீயணைப்பு நிலையம்

வினா எண் 26243—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, ஆர்.கே. பேட்டையில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டையைச் சுற்றி 25கி.மீ. சுற்றளவிற்குள் திருத்தணி, பள்ளிப்பட்டு மற்றும் சோளிங்கர் ஆகிய மூன்று இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், கடந்த ஆண்டுகளில் இப்பகுதியில் மிகக் குறைந்த அளவிலேயே தீ விபத்து அழைப்புகள் பெறப்பட்டுள்ளன என்பதைக் கருத்தில் கொள்ளும்போது, இவ்விடத்தினைச் சுற்றி ஏற்படும் தீ விபத்து அழைப்புகளை இந்நிலையங்களிலுள்ள ஊர்திகளைக் கொண்டே மேற்கொள்ள இயலுமென்பதால் ஆர்.கே. பேட்டைப் பகுதியில் புதியதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

125—

புறக்காவல் நிலையம்

வினா எண் 26248—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், வெள்ளாளப்பட்டியில் மீண்டும் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழ்நாட்டில் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்களை முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக முழுக்காவல்

2011 பிப்ரவரி 10]

நிலையங்களாக நிலை உயர்த்துவதே அரசின் கொள்கையாகும். இந்நிதியாண்டில் 12 புறக்காவல் நிலையங்களை நிலை உயர்த்துவதாக அறிவிப்பு செய்து அதற்கான அரசாணை (நிலை) எண் 868, உள் (காவல் 14) துறை நாள் 12-6-2007-ல் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேற்கூறிய சூழ்நிலையில் ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், வெள்ளாளப்பட்டியில் மீண்டும் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

126—

அரசு இசைக் கல்லூரி

வினா எண் 27845—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, குன்னத்தில் அரசு இசைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வரகூர் தொகுதி, குன்னத்தில் அரசு இசைக்கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு எதும் அரசின் ஆய்வில் இல்லை.

127—

கட்டட வசதி

வினா எண் 28256—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் கோட்டம், வேப்பூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட வேப்பூர் ஓலைப்பாடி கிராமத்தில் வருவாய்த் துறையினரால் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டடம் கட்ட பொதுப் பணித் துறையினரிடம் மதிப்பீடுகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிதிநிலைக்கேற்ப உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

128—

தரம் உயர்த்துதல்

வினா எண் 28281—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, மழையூர் புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, மழையூர் புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக தரம் உயர்த்துவது குறித்து தேவை மற்றும் அரசின் நிதி நிலைக்கேற்ப உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

129—

மகளிர் காவல் நிலையம்

வினா எண் 29037—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியில் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியில் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

130—

கட்டட வசதி

வினா எண் 29238—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு முதலைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி காவல் நிலையத்திற்கு வேறு இடத்தில் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

131—

கட்டட வசதி

வினா எண் 29509—திரு. ஆர். சாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலவளவு காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மதுரை மாவட்டத்தில் உள்ள மேலவளவு காவல் நிலையம் தற்போது அரசுக்கு சொந்தமான பஞ்சாயத்து கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட நிலம் தற்போது கைவசம் இல்லை. எனவே, புதிய காவல் நிலைய கட்டடம் கட்டுவதற்கு தேவையான நிலத்தினை கண்டறியுமாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோரப்பட்டுள்ளார். தேவையான நிலம் கண்டறியப்பட்டதும் தமிழ்நாடு காவல் வீட்டு வசதி கழகத்திடமிருந்து நிலத்தகுதி சான்றிதழ் பெற்று நிதி நிலையினைக் கருத்திற் கொண்டு வருங்கால காவல் துறை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் சேர்த்து புதிய கட்டடம் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

132—

கட்டட வசதி

வினா எண் 29513—திரு. ஆர். சாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கொட்டாம்பட்டி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட, கொட்டாம்பட்டி ஊராட்சி மன்றத்தால் சர்வே எண் 247/6ஏ-ல் சுமார் 40 சென்ட் நிலம் ஒதுக்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வருவாய்த் துறையினர் முறைப்படி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு நில மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலமாற்றம் செய்யப்பட்டவுடன் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

133—

போக்குவரத்துக் காவல் நிலையம்

வினா எண் 29517—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் போக்குவரத்து காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் போக்குவரத்து காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப முடிவு செய்யப்படும்.

134—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 29525—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் என்னும் இடத்தினைச் சுற்றி 25 கி.மீ. சுற்றளவிற்குள் இராணிப்பேட்டையில் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் செயல்பட்டு வருகிறது. இவ்விடத்தினைச் சுற்றி ஏற்படும் தீ விபத்து அழைப்புகளை இந்நிலையத்திலுள்ள ஊர்திகளைக் கொண்டே

[2011 பிப்ரவரி 10

மேற்கொள்ள இயலுமென்பதால் காவேரிப்பாக்கத்தில் புதியதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

135—

காவல் நிலையம்

வினா எண் 29545—திரு. அ. ராஜன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் வடசேரி காவல் நிலையத்தை வடசேரி பேருந்து நிலையத்தின் அருகில் காலியிடத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், வடசேரி காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால "காவல் துறை நவீனமயமாக்கல்" திட்டத்தின்கீழ் சேர்த்து, நிதி நிலையைக் கருத்தில் கொண்டு கட்ட பரிசீலனை செய்யப்படும்.

136—

கட்டட வசதி

வினா எண் 29546—திரு. அ. ராஜன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில், கோட்டாறு காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோட்டாறு காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம், வருங்காலத்தில் "காவல்துறை நவீனமயமாக்கல்" திட்டத்தின்கீழ் சேர்த்துக்கட்ட பரிசீலனை செய்யப்படும்.

2011 பிப்ரவரி 10]

137—

கட்டட வசதி

வினா எண் 29552—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர், திருப்பனந்தாள் காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் காவல் நிலையங்கள் தற்போது அரசு கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இக்காவல் நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் நிதிநிலைமைக்கேற்ப வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

138—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 29553—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், பொம்மிடியில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், பொம்மிடிப் பகுதியினைச் சுற்றி தற்போது தருமபுரி மற்றும் அரூர் ஆகிய இடங்களில் செயல்பட்டுவரும் தீயணைப்பு மற்றும் மீட்புப்

[2011 பிப்ரவரி 10

பணிகள் நிலையங்களில் உள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

139—

மணி மண்டபம்

வினா எண் 29678—திரு. என். மாலைராஜா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாதஸ்வர கலைஞர்—காருக்குறிச்சி அருணாச்சலத்திற்கு திருநெல்வேலியில் மணி மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

நாதஸ்வர கலைஞர்—காருக்குறிச்சி அருணாச்சலத்திற்கு திருநெல்வேலியில் மணி மண்டபம் கட்டுவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

140—

காவல் நிலையம்

வினா எண் 29999—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியத்தில் புதிய காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் ஆகிய இடங்களில் ஏற்கெனவே காவல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

நிலையங்கள் இயங்கி வருகின்றன. எனவே, திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியத்தில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை.

141—

கட்டட வசதி

வினா எண் 30031—திரு. அருள் அன்பரசு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கம் காவல் நிலைய காவலர்களுக்குக் குடியிருப்பு கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கம் காவலர்களுக்கு 31 குடியிருப்புகள் கட்டுவது தொடர்பாக தகுதி சான்றிதழ் கோரியதில் கைவசம் உள்ள நிலத்தில் குடியிருப்புகள் கட்ட இயலாது என காவலர் வீட்டு வசதிக் கழகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, காவலர்கள் குடியிருப்பு கட்டுவதற்கு தகுதியான நிலத்தினை கண்டறியுமாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். தேவையான நிலம் கண்டறியப்பட்டதும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடமிருந்து நிலத்தகுதி சான்றிதழ் பெற்று ஆண்டுதோறும் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் வருங்காலத்தில் புதிய குடியிருப்புகள் கட்டித்தர பரிசீலனை செய்யப்படும்.

142—

அரசு இசைக் கல்லூரி

வினா எண் 30253—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

ஓமலூர் தொகுதியில் அரசு இசைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஓமலூர் தொகுதியில் இசைக் கல்லூரி அமைக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

143—

புறக்காவல் நிலையம்

வினா எண் 30343—திருமதி மு. சந்திரா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசபாளையம் தொகுதி, தென்றல் நகரில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

இராசபாளையம் தொகுதி, தென்றல் நகரில் புறக்காவல் நிலையம் அமைக்கக் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

144—

கட்டட வசதி

வினா எண் 30376—திரு. கோ. அரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், மணவாள நகர் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மணவாள நகர் காவல் நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

2011 பிப்ரவரி 10]

இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நிலம் தற்போது காவல் துறை வசம் இல்லை. தேவையான நிலம் கண்டறியப்பட்டதும், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடமிருந்து நிலத்தகுதி சான்றிதழ் பெற்று, 3வது காவல் ஆணைய பரிந்துரை அடிப்படையில் வருங்கால காவல்துறை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் சேர்த்து புதிய கட்டடம் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

145—

புறக்காவல் நிலையம்

வினா எண் 30394—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை தாயனூரில் புதிதாக புறக்காவல் நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழகத்தில் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்களை முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவதே அரசின் கொள்கையாகும். அதன்படி இந்த நிதியாண்டில் 12 புறக்காவல் நிலையங்களை தரம் உயர்த்துவதாக அறிவிப்பு செய்து அதற்கான அரசின் ஆணை 12-6-2007 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய சூழ்நிலையில் மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை தாயனூரில் புதிதாக புறக்காவல் நிலையம் தோற்றுவித்தல் தொடர்பான பொருள் அரசின் பரிசீலனையில் இல்லை.

146—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 30887—திரு. செ. புஷ்பராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்டமங்கலத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலத்தைச் சுற்றி 25 கிலோமீட்டர் சுற்றளவிற்குள் விழுப்புரம் மற்றும் வானூர் ஆகிய இரண்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. இவைகளைத் தவிர, 20 கி.மீ. தொலைவில் புதுவை யூனியன் பிரதேசத்திற்குச் சொந்தமான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. எனவே, கண்டமங்கலத்தில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை, மேற்கண்ட இரண்டு நிலையங்களில் உள்ள தீயணைப்பு ஊர்திகளைக் கொண்டே சமாளிக்க இயலும் என்பதால், இங்கு ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

147—

புதிய காவல் நிலையம்

வினா எண் 30946—திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, மருங்காபுரியில் புதிய காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, மருங்காபுரியில் புதிய காவல் நிலையம் அமைக்கக் கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

148—

ஒப்பிலக்கணத் துறை

வினா எண் 31494—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் மொழியை பிற நாட்டவரும் கற்க ஒப்பிலக்கணத் துறையை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஒப்பிலக்கணத் துறை என்ற துறையை உருவாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

149—

துணைக் காவல் நிலையம்

வினா எண் 31653—திரு. செ. புஷ்பராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்டமங்கலம் தொகுதி, பாக்கம் குறுக்குச் சாலையில் துணை காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் துணைக் காவல் நிலையம் என எதுவும் இயங்குவதில்லை. கண்டமங்கலத்தில் ஏற்கனவே ஒரு காவல் நிலையம் இயங்கி வருகிறது. எனவே, புதிதாக துணைக் காவல் நிலையம் அமைப்பது குறித்து அவசியம் எழவில்லை.

150—

துணைக் காவல் நிலையம்

வினா எண் 31855—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

(அ) திருவ்ண்ணாமலை மாவட்டம், அடிஅண்ணாமலையில் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், அடி அண்ணாமலையில் காவல் நிலையம் அமைப்பது குறித்து கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

151—

காவல் நிலையம்

வினா எண் 31856—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை (கிழக்கு) காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலையில் உள்ள திருவண்ணாமலை (கிழக்கு) காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் 2007-2008 ஆம் ஆண்டுக்கான காவல் துறையை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு இதற்கான அரசாணை (நிலை) எண் 1310, உள் (நவீனம்) துறை, நாள் 10-09-2007-ல் நிதி ஒப்பளிப்பும், நிருவாக ஒப்பளிப்பும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

152—

கட்டட வசதி

வினா எண் 31857—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டத் தேவையான நிலத்தை வருவாய்த் துறையினரிடமிருந்து நிலமாற்றம் மூலம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலமாற்றம் செய்து நிலம் பெறப்பட்டவுடன் கட்டடம் கட்டுவது குறித்து நிதி நிலைக்கேற்ப உரிய தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

153—

கட்டட வசதி

வினா எண் 31858—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர், வேட்டவலம் காவல் நிலைய காவலர்களுக்குப் புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கீழ்பென்னாத்தூர் மற்றும் வேட்டவலம் ஆகிய காவல் நிலையங்களில் பணிபுரியும் காவல் அலுவலர்களுக்கான புதிய குடியிருப்புகள், காவலர் எண்ணிக்கை, குடியிருப்புகளின் தேவை மற்றும் நிலம் கைவசம் உள்ளதைப் பொருத்து ஆய்வு செய்து, நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் வருங்காலங்களில் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தில் சேர்த்து புதிய குடியிருப்புகள் கட்டித்தர பரிசீலிக்கப்படும்.

[2011 பிப்ரவரி 10

154—

காவல் நிலையம்

வினா எண் 31872—திரு. ரெ. நெடுஞ்செழியன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை வட்டம், கோமாபுரத்தில் புதிய காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டை வட்டம், கோமாபுரத்தில் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

155—

குடியிருப்பு வசதிகள்

வினா எண் 31904—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி தீயணைப்பு நிலைய அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மதுரை கோட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவது குறித்து நிதி நிலைக்கேற்ப உரிய தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

2011 பிப்ரவரி 10]

156—

புதிய காவல் நிலையம்

வினா எண் 31928—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி, நெரூர் பகுதியில் புதிய காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் தொகுதி, நெரூர் பகுதியில் புதிய காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

157—

காவலர் குடியிருப்பு

வினா எண் 31948—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, சேவூரில் புதிய காவலர் குடியிருப்புகளை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அவினாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சேவூரில் புதிய காவலர் குடியிருப்பு கட்டுவது தொடர்பாக நிலம் மற்ற இதர விவரங்களை கோவை மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடமிருந்து பெற்று, தகுதியிருப்பின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

ஆண்டுதோறும் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து எதிர்காலத்தில் புதிய குடியிருப்புகள் கட்டித்தர பரிசீலனை செய்யப்படும்.

158—

கட்டட வசதி

வினா எண் 32384—திரு. சை. சையது கௌஸ் பாஷா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் தமிழ்ச் சங்கக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடம் கட்டுவது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

159—

இசைக் கல்லூரி

வினா எண் 32779—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதியில் இசைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

காவேரிப்பட்டினத்தில் இசைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

160—

புறக்காவல் நிலையம்

வினா எண் 33101—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் புறக்காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்களை முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவதே அரசின் கொள்கையாகும். 2007-2008 காவல் துறையின் மானியக் கோரிக்கையின் போது மேலும் 12 புறக்காவல் நிலையங்களை முன்னுரிமை அடிப்படையில் முழுக்காவல் நிலையமாக நிலை உயர்த்துவதாக அறிவிப்பு செய்து அதற்கான அரசாணையும் 12-6-2007-ல் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலும், அரசின் கொள்கை முடிவின்படி, வெட்டன்விடுதியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தான பொருள் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

161—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 33142—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், மணலூர்பேட்டையில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மணலூர் பேட்டையைச் சுற்றி 25 கிலோ மீட்டருக்குள் திருக்கோவிலூர் மற்றும் சங்கராபுரம் ஆகிய இரண்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் தற்போது செயல்பட்டுவருவதால், மணலூர்பேட்டையில் நிகழும் தீ அபாயங்களை திருக்கோவிலூர் மற்றும் சங்கராபுரம் ஆகிய இவ்விரு இடங்களில் உள்ள தீயணைப்பு ஊர்திகளைக் கொண்டே சமாளிக்க இயலும் என்பதால், புதியதாக இங்கு ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

162—

கட்டட வசதி

வினா எண் 33152—திரு. ச. லட்சுமணன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் நகரக் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

போடிநாயக்கனூர் நகரக் காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்காலத்தில் காவல் துறையை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

163—

நியமனம்

வினா எண் 33255—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மியான்மர் நாட்டில் வாழும் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவிக்க மென்பொருள்களை வழங்கவும், ஆசிரியர்களை நியமிக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

அயல்நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளின் கோரிக்கைக்கேற்ப தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடுகளை அறிந்துகொள்ளத்தக்க வகையில் நூல்கள் தமிழ் வளர்ச்சித் துறையால் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில் மியான்மர் நாட்டிற்கும் இலவசமாக நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மியான்மர் போன்ற நாடுகளிலிருந்து கோரிக்கை வரப்பெற்றால் அங்கு வாழும் தமிழர்களுக்குத் தமிழ் மொழி பயிற்றுவிக்க ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பாகவும், பாடநூல்கள் மற்றும் மென்பொருட்கள் வழங்குவது தொடர்பாகவும் உரிய துறை வாயிலாக நடவடிக்கை எடுக்கக் கருதும் வாய்ப்பு அமையும்.

164—

காவல் நிலையம்

வினா எண் 33309—திரு. அ. ராஜன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் அருகே புதிய காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

நாகர்கோவில் தொகுதி, வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் அருகே புதிய காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

165—

புறக்காவல் நிலையம்

வினா எண் 33828—திரு. தி. இராமசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு ஒன்றியம், கோட்டையூர் கிராமத்தை மையப்படுத்தி புறக்காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு ஒன்றியம், கோட்டையூர் கிராமத்தை மையப்படுத்தி புறக்காவல் நிலையம் அமைக்க தற்சமயம் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

166—

அரசு இசைக் கல்லூரி

வினா எண் 33918—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் அரசு இசைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழியில் ஏற்கெனவே அரசு இசைப் பள்ளி இயங்கி வருகிறது. எனவே, சீர்காழி தொகுதியில் இசைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

167—

கட்டட வசதி

வினா எண் 33976—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தளி, கெலமங்கலம் காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தளி காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் 2007-2008 ஆம் ஆண்டுக்கான நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கெலமங்கலம் காவல் நிலையம் தற்போது அரசுக்கு சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

168—

காவல் நிலையம்

வினா எண் 33978—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) தளி தொகுதி, மதகாண்டபள்ளியில் புதிய காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு நிதியாண்டிலும் காவல் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குச் சட்டமன்றப் பேரவையில் பதிலளித்துப் பேசுகையில் அறிவிப்புச் செய்யக்கூடிய இடங்களில் மட்டுமே புதிய காவல் நிலையங்கள் அமைப்பது ஆணையிடுவது எனவும், இது குறித்த கோரிக்கை எதனையும் பிறவகையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதில்லை என்ற நிலை நடைமுறையில் உள்ளது. மேலும் தற்போது தமிழக அரசு அமைத்துள்ள மூன்றாம் காவல் ஆணையம் காவல் நிலையங்களின் எண்ணிக்கை, காவலர்களின் எண்ணிக்கை போன்ற பல்வேறு பொருள்கள் குறித்தும் பரிசீலித்து அரசுக்கு பரிந்துரைகள் செய்ய உள்ளது.

2. எனவே, மேற்கூறிய சூழ்நிலையில் தளி தொகுதி மதகாண்டபள்ளியில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்து நன்கு ஆய்வு செய்து தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

169—

கட்டட வசதி

வினா எண் 33979—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தீயணைப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் தற்போது செயல்பட்டுவரும் தீயணைப்பு

2011 பிப்ரவரி 10]

மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு கட்டடம் கட்டத் தேவையான நிலம் உள்ளது. கட்டடம் கட்டத் தேவையான நிலம் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு படிப்படியாக நிதி நிலைக்கேற்ப கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதால், மேற்கண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து உரிய நேரத்தில் பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்படும்.

170—

கட்டட வசதி

வினா எண் 33980—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளருக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்ட தற்சமயம் நிலம் கைவசம் இல்லாததால், நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

171—

கட்டட வசதி

வினா எண் 33990—திரு. எஸ். மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொங்கலூர் தொகுதி, அவினாசிபாளையம் காவல் நிலையத்திற்கும், காவல்துறையினர் குடியிருப்பிற்கும் புதிய கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொங்கலூர் தொகுதி, அவினாசிபாளையம் காவல் நிலையம் தற்போது அரசுக்கு சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும். மேலும் இக்காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களுக்கான குடியிருப்பு, ஆண்டுதோறும் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து நிதி நிலையினை கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் கட்டித்தர பரிசிலனை செய்யப்படும்.

172—

கட்டட வசதி

வினா எண் 34130—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை பெண்கள் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை பெண்கள் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வீரக்குறிச்சி கிராமத்தில் ஆர்.எஸ். எண் 86 பி/2-ல் 012.00 ஹெக்டேர் (30 செண்ட்) நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்திய பின்னர், வருங்காலத்தில் காவல் துறையை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

173—

துணை தீயணைப்பு நிலையம்

வினா எண் 34181—திரு. அன்பில் பெரியசாமி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) திருச்சிராப்பள்ளி I-வது தொகுதி, மின்வாரியச் சாலையில் துணை தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி கோட்டம், திருச்சிராப்பள்ளி I-வது தொகுதி, மின்வாரியச் சாலைப் பகுதியைச் சுற்றி 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள், மேற்கே 3 கி.மீ. தொலைவில் திருச்சிராப்பள்ளி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமும், வடக்கே 5 கி.மீ. தொலைவில் திருவரங்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமும் செயல்பட்டுவருவதாலும், இப்பகுதியில் மாதாந்திர வாரியாக குறைந்த அளவிலேயே தீ விபத்து அழைப்புகள் பெறப்பட்டுவருவதாலும், இங்கு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

174—

குடியிருப்பு வசதி

வினா எண் 34189—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கலசப்பாக்கம் தொகுதி, கடலாடி காவல் நிலையக் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடலாடி காவல் நிலையக் காவலர்களுக்கான புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான கருத்துருவினை மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடமிருந்து பெற்று, ஆண்டுதோறும் 3,000 குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்ந்து எதிர்காலத்தில் புதிய குடியிருப்புகள் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 பிப்ரவரி 10

175—

காவல் நிலையம்

வினா எண் 34192—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கத்தில் மகளிர் காவல் நிலையமும், ஆதமங்கலம்புதூரில் காவல் நிலையமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஒவ்வொரு நிதியாண்டிலும் காவல் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குச் சட்டமன்றப் பேரவையில் பதிலளித்துப் பேசுகையில் அறிவிப்புச் செய்யக்கூடிய இடங்களில் மட்டுமே புதிய காவல் நிலையங்கள் அமைப்பது ஆணையிடுவது எனவும், இது குறித்த கோரிக்கை எதனையும் பிறவகையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதில்லை என்ற நிலை நடைமுறையில் உள்ளது.

2. மேலும் தற்போது தமிழக அரசு அமைத்துள்ள மூன்றாம் காவல் ஆணையம் காவல் நிலையங்களின் எண்ணிக்கை, காவலர்களின் எண்ணிக்கை போன்ற பல்வேறு பொருள்கள் குறித்தும் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரைகள் செய்ய உள்ளது.

3. எனவே, மேற்கூறிய சூழ்நிலையில் கலசப்பாக்கத்தில் மகளிர் காவல் நிலையமும், ஆதமங்கலம்புதூரில் காவல் நிலையமும் அமைப்பது குறித்து நன்கு ஆய்வு செய்து தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

176—

கட்டட வசதி

வினா எண் 34196—திரு. அ. ராஜன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

நாகர்கோவில் நகரிலுள்ள கோட்டாறு, நேசமணி நகர், வடசேரி ஆகிய காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு. கலைஞர் மு. கருணாநிதி முதலமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோட்டாறு மற்றும் வடசேரி காவல் நிலையங்கள் தற்போது அரசுக்கு சொந்தமான பழைய கட்டடத்திலும், நேசமணி நகர் காவல் நிலையம் வருவாய்த் துறைக்குச் சொந்தமான அரசு கட்டடத்திலும் இயங்கி வருகின்றன. இக்காவல் நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் வருங்காலத்தில் காவல் துறையை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

177—

மீட்புப் பணிகள் நிலையம்

வினா எண் 34198—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாப்பிரெட்டிப்பட்டி வட்டத் தலைநகரில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி முதலமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத் தலைநகர் பகுதியைச் சுற்றி 30 கிலோமீட்டர் தொலைவில் அரூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும் இங்கு நிகழும் தீ விபத்து அபாயங்களை அரூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய ஊர்திகளைக் கொண்டே சமாளிக்க இயலும் என்பதால், இங்கு புதியதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

178—

போக்குவரத்துக் காவல் நிலையம்

வினா எண் 34199—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூரில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஒவ்வொரு நிதியாண்டிலும் காவல் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளிக்கையில் அறிவிப்புச் செய்யக்கூடிய இடங்களில் மட்டுமே புதிய காவல் நிலையங்கள் அமைத்து ஆணையிடுவது எனவும், இது குறித்து கோரிக்கை எதனையும் பிறவகையில் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்வதில்லை என்ற நிலை நடைமுறையில் உள்ளது.

2. மேலும் தற்போது தமிழக அரசு அமைத்துள்ள மூன்றாம் காவல் ஆணையம் காவல் நிலையங்களின் எண்ணிக்கை, காவலர்களின் எண்ணிக்கை போன்ற பல்வேறு பொருள்கள் குறித்தும் பரிசீலித்து அரசுக்கு பரிந்துரைகள் செய்ய உள்ளது.

3. மேற்கூறிய சூழ்நிலையில் அரூரில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைப்பது குறித்து நன்கு ஆய்வு செய்து தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

179—

காவல் நிலையம்

வினா எண் 34427—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம், மேலநெட்டூரில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு நிதியாண்டிலும் காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குச் சட்டமன்றப் பேரவையில் பதிலளித்துப் பேசுகையில் அறிவிப்புச் செய்யக்கூடிய இடங்களில் மட்டுமே புதிய காவல் நிலையங்கள் அமைப்பது ஆணையிடுவது எனவும், இது குறித்த கோரிக்கை எதனையும் பிறவகையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதில்லை என்ற நிலை நடைமுறையில் உள்ளது. மேலும் தற்போது தமிழக அரசு அமைத்துள்ள மூன்றாம் காவல் ஆணையம் காவல் நிலையங்களின் எண்ணிக்கை, காவலர்களின் எண்ணிக்கை போன்ற பல்வேறு பொருள்கள் குறித்தும் பரிசீலித்து அரசுக்கு பரிந்துரைகள் செய்ய உள்ளது.

2. எனவே, மேற்கூறிய சூழ்நிலையில் மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம், மேலநெட்டூரில் காவல் நிலையம் அமைப்பது குறித்து நன்கு ஆய்வு செய்து தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

180—

போக்குவரத்துக் காவல் நிலையம்

வினா எண் 34430—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் போக்குவரத்து காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் போக்குவரத்து காவல் நிலையம் அமைப்பது குறித்து நன்கு ஆய்வு செய்து தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 பிப்ரவரி 10

181—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 34446—திரு. வை. காவேரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடங்கணசாலை பேரூர் எளம்பிள்ளையில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எளம்பிள்ளை பகுதியைச் சுற்றி 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் சேலம், எடப்பாடி, ஓமலூர் மற்றும் சங்ககிரி ஆகிய 4 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டுவருவதாலும் மற்றும் குறைந்த அளவிலேயே தீ விபத்து அழைப்புகள் பெறப்படுவதாலும், இப்பகுதியில் புதியதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

182—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 35161—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் பகுதியைச் சுற்றி 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள், நன்னிலம்,

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மூன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டுவருவதாலும் திருமருகல் பகுதியில் பெறப்படும் தீ விபத்து அழைப்புகளை மேற்கண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் உள்ள ஊர்திகளைக் கொண்டே மேற்கொள்ள இயலும் என்பதால், இங்கு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

183—

அருங்காட்சியகம்

வினா எண் 35230—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், செட்டிநாட்டில் அருங்காட்சியகம் ஒன்று துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சிவகங்கை மாவட்டத்தில், சிவகங்கையில் அருங்காட்சியகம் செயல்பட்டு வருகிறது. எனவே செட்டிநாட்டில் அருங்காட்சியகம் அமைக்க உத்தேசம் இல்லை.

184—

நாட்டிய இசைப் பள்ளி

வினா எண் 36648—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் நாட்டிய இசைப் பள்ளி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் நாட்டிய இசைப் பள்ளி அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

185—

காவல் நிலையம்

வினா எண் 37254—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விழுப்புரம் மாவட்டம், திருகோவிலூர் வட்டம், ஆயந்தூரில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருக்கோவிலூரில் ஏற்கெனவே ஒரு காவல் நிலையமும், ஒரு மகளிர் காவல் நிலையமும் இயங்கி வருகின்றன. எனவே, விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், ஆயந்தூரில் காவல் நிலையம் அமைக்க கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

186—

இசைக் கல்லூரி

வினா எண் 37603—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கற்பட்டு தொகுதி, மாமல்லபுரத்தில் இசைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

செங்கற்பட்டு தொகுதி, மாமல்லபுரத்தில் அரசு இசைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

187—

காவலர் குடியிருப்பு

வினா எண் 38457—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செய்யாறில் புதிதாக அடுக்குமாடி காவலர் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு காவல் நிலைய காவல் அலுவலர்களுக்கு புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவது தொடர்பாக ஆண்டுதோறும் காவலர் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து எதிர்காலத்தில் கட்டித் தர பரிசீலனை செய்யப்படும்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

188—

கட்டட வசதி

வினா எண் 38649—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி, மதிகோன்பாளையம் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள மதிகோன்பாளையம் காவல் நிலையம் தற்போது வாடகை கட்டடத்தில இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட சர்வே எண் 370/3-ல் 4800 சதுர அடி நிலம் கண்டறியப்பட்டு மாவட்ட ஆட்சியருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. உரிய முன்மொழிவு ஆணை மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெற்ற பின்னர், இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் நிதி நிலையினை கருத்திற்கொண்டு வருங்கால காவல் துறை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

189—

காவல் நிலையம்

வினா எண் 38650—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், வி.முத்தம்பட்டியில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், வி.முத்தம்பட்டியில் காவல் நிலையம் அமைக்க கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

190—

காவல் நிலையம்

வினா எண் 40662—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், லாடனேந்தலில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், லாடனேந்தலில் ஒரு காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

191—

தரம் உயர்த்துதல்

வினா எண் 41412—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சிப்காட் காவல் நிலையத்தை வட்டக் காவல் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, சிப்காட் காவல் நிலையத்தை வட்டக் காவல் நிலையமாக தரம் உயர்த்துவது குறித்து நன்கு ஆய்வு செய்து தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப உரிய தருணத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

192—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 42430—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினத்தைச் சுற்றி 25 கி.மீ. சுற்றளவிற்குள் மூன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருவதால், அங்குள்ள ஊர்திகளைக் கொண்டே காவேரிப்பட்டினத்தில் ஏற்படும் தீ விபத்து அழைப்புகளை மேற்கொள்ள இயலுமென்பதால், இங்கு புதியதாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

193—

இசைப் பள்ளி மற்றும் அருங்காட்சியகம்

வினா எண் 43491—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, சீர்காழியில் மூவர் மணிமண்டபத்துடன் இசைப் பள்ளி மற்றும் அருங்காட்சியகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சீர்காழி தொகுதி, சீர்காழியில் மூவர் மணிமண்டபத்தில் இசைப் பள்ளி மற்றும் அருங்காட்சியகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

194—

புறக்காவல் நிலையம்

வினா எண் 45068—திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

பழனி தொகுதி, மானூரில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

பழனி தொகுதி, மானூரில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

195—

துணைக் காவல் நிலையம்

வினா எண் **48660**—திரு. செ. புஷ்பராஜ்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கண்டமங்கலம் ஒன்றியம், சித்தலம்பட்டியில் துணைக் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கண்டமங்கலத்தில் ஏற்கெனவே காவல் நிலையம் இயங்கிவருகிறது. எனவே கண்டமங்கலம் ஒன்றியம், சித்தலம்பட்டியில் துணைக் காவல் நிலையம் அமைப்பது குறித்து அவசியம் எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

196—

தீயணைப்பு நிலையம்

வினா எண் **48666**—திரு. செ. புஷ்பராஜ்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விக்கிரவாண்டியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் தொகுதி, விக்கிரவாண்டியை சுற்றி 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் திண்டிவனம் மற்றும் விழுப்புரம் ஆகிய தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டுவருவதால், இந்நிலையங்களில் உள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால், தற்போது இங்கு ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

197—

கட்டட வசதி

வினா எண் 48856—திரு. வை. காவேரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரத்திலுள்ள தீயணைப்பு நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியிலுள்ள எடப்பாடி நகரத்தில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட சின்னமணி கிராமம், வார்டு-சி, பிளாக்-4, நகரளவை எண். 1, புல எண். 49/4சி3-ல் 0.20.0 ஹெக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, எடப்பாடி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசின் நிதி நிலைக்கேற்ப உரிய தருணத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2011 பிப்ரவரி 10]

198—

காவலர் குடியிருப்பு

வினா எண் 48911—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி நகரத்தில் காவலர் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சத்துவாச்சாரியில் காவலர் குடியிருப்பு கட்டுவது தொடர்பாக நிலம் கையிருப்பு மற்றும் ஏனைய விவரங்களை காவல் துறை தலைமை இயக்குநரிடமிருந்து பெற்று தகுதியிருப்பின், அரசாணை (நிலை) எண் 1090, உள் (காவல் 10) துறை, நாள்: 25-08-2008-ன் படி, ஆண்டு தோறும் காவலர்கள் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் புதிய காவலர் குடியிருப்புகளின் தேவை, நிலம் கையிருப்பு மற்றும் நிதி நிலைமையை கருத்திற் கொண்டு கட்ட பரிசீலனை செய்யப்படும்.

199—

காவல் நிலையம்

வினா எண் 53368—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வட்டம், எம்.எஸ். நகர் பகுதியில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், எம்.எஸ். நகர் பகுதியில் காவல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

200—

காவல் நிலையம்

வினா எண் 53403—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலை, புதூர்நாடு கிராமத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலை, புதூர்நாடு கிராமத்தில் ஒரு காவல் நிலையம் அமைப்பது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

201—

ஊக்குவித்தல்

வினா எண் 53773—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களில் சின்ன திருப்பதி, சந்தைபுதூரில் கடந்த பத்து ஆண்டுகளாக தொடர்ந்து மிக சிறப்பாக நடந்து வரும் பொன்னர் சங்கர் சரித்திர நாடக கலைஞர்களை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களில் சின்ன திருப்பதி, சந்தைபுதூர் பொன்னர் சங்கர் சரித்திர நாடக கலைஞர்கள் விண்ணப்பித்தால், அக்கோரிக்கையை ஏற்று அக்கலைஞர்களை அரசு ஊக்குவிக்கும்.

2011 பிப்ரவரி 10]

202—

கட்டட வசதி

வினா எண் 54168—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி நகரில் தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சீர்காழி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு சொந்தமாக நிலம் ஏதும் இன்னும் கையகப்படுத்தப்படவில்லை. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, தற்போது சீர்காழி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் நிலை தற்போது எழவில்லை.

203—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 54470—திரு. மா. சந்திரகாசி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், கொளகாநத்தத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் கோட்டம், வரகூர் தொகுதி, கொளகாநத்தம் என்ற இடத்தினைச் சுற்றி 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் அரியலூர் மற்றும் புள்ளம்பாடி ஆகிய தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வருவதால், இந்நிலையத்திலுள்ள ஊர்திகள் மற்றும் அருகில் உள்ள பிற நிலையங்களின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

ஊர்திகளைக் கொண்டும் கொளகாநத்தம் பகுதியில் ஏற்படும் தீ விபத்து அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இங்கு ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

204—

காவல் நிலையம்

வினா எண் 54557—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமகிரிபேட்டை ஊராட்சி ஒன்றியம், முள்ளுக்குறிச்சி ஊராட்சியில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

நாமகிரிபேட்டை ஊராட்சி ஒன்றியம், முள்ளுக்குறிச்சி ஊராட்சியில் ஒரு காவல் நிலையம் அமைப்பது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

205—

காவல் குழு

வினா எண் 57113—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி, சென்னை—கும்பகோணம் சாலையில் இரவு நேர நெடுஞ்சாலை காவல் குழு அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ).* பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி, சென்னை—கும்பகோணம் சாலையில் இரவு நேர நெடுஞ்சாலை காவல் குழு அமைத்திடும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2011 பிப்ரவரி 10]

206—

போக்குவரத்துக் காவல் பிரிவு

வினா எண் 57601—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகரில் போக்குவரத்து காவல் பிரிவை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டத்தில், வேலூரில் ஒரு போக்குவரத்து காவல் நிலையம் இயங்கி வருகிறது. மேலும் ஆற்காடு நகரில் போக்குவரத்து நெரிசலை சிர்செய்ய மறைமலை நகர் காவல் நிலையத்தில் பணியாற்றிவரும் காவலர்களை ஈடுபடுத்தி தற்சமயம் சரிசெய்யப்பட்டு வருகிறது. எனவே, ஆற்காடு நகரில் போக்குவரத்து காவல் பிரிவை துவக்க கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசிலனையில் இல்லை.

207—

குடியிருப்பு வசதி

வினா எண் 57602—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகர பழைய காவலர் குடியிருப்பை அகற்றி புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதிக்குட்பட்ட அனைத்து காவல் நிலையங்களில் பணிபுரியும் காவலர்களுக்கு குடியிருப்புகள் அனைத்தும் ஒரே ஆண்டில் கட்ட

[2011 பிப்ரவரி 10

இயலாததால், எந்தெந்த குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளன என்பதற்கான தகுதிச் சான்றிதழை காவலர் வீட்டுவசதி கழகத்தினரிடமிருந்து பெற்று அக்காவல் நிலைய காவலர்களுக்கான குடியிருப்புகள் ஆண்டுதோறும் காவலர் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

208—

மகளிர் காவல் நிலையம்

வினா எண் 57603—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகரில் மகளிர் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், வேலூர் உட்கோட்டத்தில் ஒரு மகளிர் காவல் நிலையம் ஏற்கெனவே இயங்கி வருகிறது. எனவே, ஆற்காடு நகரில் புதிதாக மகளிர் காவல் நிலையம் அமைக்கத் தேவை இல்லை.

209—

புறக்காவல் நிலையம்

வினா எண் 58040—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, திருமழபாடியில் புதிய புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

அரியலூர் தொகுதி, திருமழபாடி பகுதியில் புறக்காவல் நிலையம் அமைக்க கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

210—

காவல் நிலையம்

வினா எண் 59221—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, மழையூரிலுள்ள புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, மழையூரிலுள்ள புறக்காவல் நிலையத்தை காவல் நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அவ்வப்போது எழக்கூடிய தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப முடிவு செய்யப்படும்.

211—

ஆம்புலன்ஸ் வசதி

வினா எண் 60208—திரு. வை. காவேரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள தீயணைப்பு நிலையங்களில் ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலுள்ள 282 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் மற்றும் ஒக்கேனக்கல்லில் உள்ள ஒரு மீட்புப் பணி நிலையம் சேர்த்து 283 நிலையங்களில் தற்போது 82 நிலையங்களுக்கு மட்டுமே நோயாளர் ஊர்தி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, எஞ்சியுள்ள நிலையங்களுக்கு தேவைகளுக்கேற்ப அரசின் நிதிநிலைக்கேற்ப நோயாளர் ஊர்தி ஒப்பளிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

212—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 60304—திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தலைவாசல் தொகுதி, கெங்கவல்லியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தலைவாசல் தொகுதி, கெங்கவல்லிப் பகுதியிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் தற்போது செயல்பட்டுவரும் ஆத்தூர் தியணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திலுள்ள ஊர்தி மற்றும் அருகில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய ஊர்திகளைக் கொண்டே கெங்கவல்லியைச் சுற்றி ஏற்படும் தீ விபத்து அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் தற்போது அங்கு ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

213—

உரிமம் வழங்குதல்

வினா எண் 61614—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பதநீர் மற்றும் கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) தமிழக அரசின் மதுவிலக்கு கொள்கையின்படி தென்னை மற்றும் பனை மரங்களிலிருந்து கள் இறக்க அனுமதி இல்லை.

(ஆ) அவசியம் எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2011 பிப்ரவரி 10]

214—

இசைக் கல்லூரி

வினா எண் 63116—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் இசைக் கல்லூரி அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதியில் அரசு இசைக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

215—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 63510—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தளியில் தீயணைப்பு நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, தளி என்ற இடத்தில் குறைந்த அளவு தீ விபத்து அழைப்புகளே பெறப்பட்டுவருவதால், தற்போது இப்பகுதியைச் சுற்றி 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் செயல்பட்டுவரும் தேன்கனிக்கோட்டை மற்றும் ஓசூர்-சிப்காட் ஆகிய இரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களிலுள்ள ஊர்திகளைக் கொண்டே தளிப் பகுதியில் ஏற்படும் தீ விபத்து அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால், இங்கு ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

216—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 63524—திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வலங்கைமான் தொகுதி, அம்மாபேட்டையில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் தொகுதி, அம்மாபேட்டை பகுதியைச் சுற்றி 20 கி.மீ. தொலைவிற்குள் தற்போது நீடாமங்கலம். ஒரத்தநாடு மற்றும் பாபநாசம் ஆகிய இடங்களில் செயல்பட்டுவரும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களிலுள்ள ஊர்திகளைக் கொண்டே தீ விபத்து அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் அம்மாபேட்டைப் பகுதியில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

217—

கணினிமயமாக்குதல்

வினா எண் 63543—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து காவல் நிலையங்களையும் கணினிமயமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

விரைவான மேம்பாடு மற்றும் அதிவேக தொழில் வளர்ச்சிக்கு காரணமாக இவ்வுலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் கணினி முக்கிய பங்கு வகிக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் தமிழக காவல் துறையில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் காவல்

2011 பிப்ரவரி 10]

நிலையங்கள் உட்பட மின் ஆளுமையைப் புகுத்த வேண்டி கணினி வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் 1999-ம் ஆண்டு முதல் இதுவரை படிப்படியாக கணினிகள் வழங்கப்பட்டு வருகிறது.

218—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 63548—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டியில் தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாப்பிரெட்டிப்பட்டியில் கடந்த மூன்று ஆண்டுகளில் நிகழ்ந்த தீ விபத்து அழைப்புகளை கருத்தில் கொள்ளும்போது, தற்போது இப்பகுதியினைச் சுற்றி 30 கி.மீ. தொலைவில் செயல்பட்டுவரும் அரூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திலுள்ள ஊர்தியினைக் கொண்டே சமாளிக்க இயலும் என்பதால் பாப்பிரெட்டிப்பட்டியில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

219—

கட்டட வசதி

வினா எண் 63771—திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் காவல் நிலையம் தற்போது வருவாய்த் துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதிய கட்டடம் கட்டத் தேவையான நிலம் தற்போது காவல்துறை வசம் இல்லை. தேவையான நிலம் கண்டறியப்பட்டவுடன் சொந்தக் கட்டடம் இல்லாத காவல் நிலையங்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்ற மூன்றாம் காவல் ஆணையத்தின் பரிந்துரைப்படி, வருங்கால காவல் துறை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கட்ட பரிசிலனை செய்யப்படும்.

220—

போக்குவரத்துக் காவல் பிரிவு

வினா எண் 63789—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலையில் போக்குவரத்துக் காவல் பிரிவு துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சென்னிமலையில் போக்குவரத்து காவல் பிரிவு அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

221—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 63920—திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) பனமரத்துப்பட்டி தொகுதியிலுள்ள வாழப்பாடி நகரில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி தொகுதி, வாழப்பாடி பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட தீ விபத்து அழைப்புகளின் புள்ளிவிவரங்களை கருத்தில் கொள்ளும்போது, பனமரத்துப்பட்டி பகுதியைச் சுற்றி 25 கி.மீ. தொலைவில் செயல்பட்டுவரும் ஆத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திலுள்ள ஊர்தி கொண்டே சமாளிக்க இயலும் என்பதால் பனமரத்துப்பட்டி பகுதியில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

222—

இசைக் கல்லூரி

வினா எண் 67406—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் இசைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் இசைக் கல்லூரி தனியே தொடங்க உரிய கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

223—

இசைக் கல்லூரி

வினா எண் 69354—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதியில் இசைக் கல்லூரி மற்றும் இசைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் இசைக் கல்லூரி மற்றும் இசைப் பள்ளி தொடங்கிட கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

224—

காவலர்கள் நியமனம்

வினா எண் 71432—திரு. எல். ரவிச்சந்திரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காமராஜர் வளைவு ரவுண்டானா அருகில் போக்குவரத்துக் காவலர்களை நியமித்து சிக்னல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகர், காமராஜர் வளைவு ரவுண்டானா அருகில் ஒரு போக்குவரத்து சிக்னல் ஏற்படுத்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

225—

போக்குவரத்துக் காவலர்கள் நியமனம்

வினா எண் 71437—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னம்மாபேட்டை இரயில்வே கேட் பேருந்து நிறுத்தத்தில் போக்குவரத்து காவலர்களை நியமித்து சிக்னல் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

226—

காவல் நிலையம்

வினா எண் 71539—திரு. வை. காவேரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

227—

சிறப்புச் சலுகை

வினா எண் 76383—திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

வீர, தீரச் செயல்களுக்கான அண்ணா விருது பெற்றவர்களுக்கு அரசுப் பணியில் சிறப்புச் சலுகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வீர, தீரச் செயலுக்கான அண்ணா விருது பெற்றவர்களுக்கு அரசுப் பணியில் சிறப்புச் சலுகை வழங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

228—

தமிழ் மொழி ஆணையம்

வினா எண் 76411—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தமிழ்மொழி ஆணையம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழ்நாட்டில் தமிழ் மொழி ஆணையம் உருவாக்கும் நிலை ஏதுமில்லை.

229—

பயிற்சிப் பள்ளி

வினா எண் 97782—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கான பயிற்சிப் பள்ளி துவக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கான பயிற்சிப் பள்ளி துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

230—

தமிழ் வளர்ச்சி மையம்

வினா எண் 97882—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரத்தில் தமிழ் வளர்ச்சி மையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரத்தில் தமிழ் வளர்ச்சி மையம் ஏற்படுத்தும் நிலை எழவில்லை.

231—

தமிழ் வளர்ச்சி மையம்

வினா எண் 97895—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் தமிழ் வளர்ச்சி மையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் தமிழ் வளர்ச்சி மையம் ஏற்படுத்தும் நிலை எழவில்லை.

232—

கவின் கலைக் கல்லூரி

வினா எண் 105607—திரு. சபா. இராஜேந்திரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நெல்லிக்குப்பம் தொகுதியில் கவின் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் தொகுதியில் கவின் கலைக் கல்லூரி துவக்குவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் துறையின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

233—

தேர்தல் பணிக் கட்டுபாடு அறை

வினா எண் 111865—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் நிரந்தர தேர்தல் பணி கட்டுப்பாடு அறை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:

(அ) அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் நிரந்தர தேர்தல் பணி கட்டுப்பாடு அறை துவக்குவது தொடர்பாக அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

234—

நடை பாலம்

வினா எண் 5—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், ஈச்சங்குடி-மேல்உத்தமநல்லூர் கிராமங்களுக்கிடையே காவிரி ஆற்றின் குறுக்கே நடை பாலம் (Foot Bridge) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்குடி-மேல உத்தமநல்லூர் கிராமங்களுக்கிடையே காவிரி ஆற்றின் குறுக்கே நடை பாலம் (Foot Bridge) அமைக்க ரூ. 10.00 இலட்சம் தேவைப்படும். மேற்படி பணியினை செய்ய ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை.

235—

புதிய பாலம்

வினா எண் 6—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

தஞ்சை மாவட்டம், தஞ்சை வட்டம், சின்ன காங்கேயம்பட்டி கிராமம் அருகே கல்லணைக் கால்வாய் ஆற்றின் குறுக்கே உள்ள பழுதடைந்துள்ள (Foot Bridge) நடை பாலம் சீரமைத்து புதிய பாலம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், சின்ன காங்கேயம்பட்டி கிராமம் அருகே கல்லணைக் கால்வாய் ஆற்றின் குறுக்கே பழுதடைந்துள்ள நடை பாலம் (Foot Bridge) சீரமைத்து புதிய பாலம் அமைக்க ரூ.10.00 இலட்சம் தேவைப்படும். இப்பணியினை எடுத்துச் செய்ய தற்போது போதிய நிதி வசதியில்லை.

236—

புதிய பாலம்

வினா எண் 12—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், தஞ்சை வட்டம், மனையேரிப்பட்டி—அய்யனாபுரம் சாலையில் புங்கனூர் கிராமம் அருகே கல்லணைக் கால்வாய் ஆற்றின் குறுக்கே உள்ள பழுதடைந்த பாலத்திற்கு மாற்றாக புதிய பாலம் எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மனையேரிப்பட்டி—அய்யனாபுரம் சாலையில் புங்கனூர் கிராமம் அருகே கல்லணைக் கால்வாய் ஆற்றின் குறுக்கே உள்ள பழுதடைந்த பாலத்திற்கு மாற்றாக புதிய பாலம் அமைக்க ரூ.35.00 இலட்சம் தேவைப்படும். இப்பணியினை செய்ய தற்போது போதிய நிதி வசதியில்லை.

2011 பிப்ரவரி 10]

237—

ஊராட்சி ஒன்றியம்

வினா எண் 40—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து அஞ்செட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தளி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து அஞ்செட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

238—

ஊராட்சி ஒன்றியம்

வினா எண் 41—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரிய அளவிலான மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கடத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

பெரிய அளவிலான மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கடத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

239—

பணி நியமனம்

வினா எண் 43—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பராமரிக்க சாலைப் பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

அரசு கொள்கை முடிவின்படி, அரசு ஆணை (நிலை) எண் 1678, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16-8-1976-ல் புதிதாக சாலைப் பணியாளர் பணி நியமனம் செய்தல் கூடாது என்று ஆணையிடப்பட்டுள்ளது.

240—

தேர்தல்

வினா எண் 44—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உள்ளாட்சி மன்றங்களில் இனி வரும் காலத்தில் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்து தேர்தல் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு, 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், ஆதி திராவிடர் / பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆகியோர்களுக்கான, உறுப்பினர்கள் மற்றும் தலைவர் பதவியிடங்களுக்கு, சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்ய ஏதுவாக, தமிழ்நாடு ஊராட்சிகள் (இடம் மற்றும் பதவி இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி) விதிகள் 1995-ல் விதி 7-க்கு உரிய திருத்தம்

2011 பிப்ரவரி 10]

செய்யப்பட்டு, 1-9-2006 ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, அரசாணை எண் 105-ல் அறிவிக்கை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில், சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்து, 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 மற்றும் 15 ஆம் தேதிகளில் உள்ளாட்சிக்கான தேர்தல் நடைபெற்றுள்ளது.

241—

புதிய ஊராட்சிகள்

வினா எண் 45—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சித்தேரி ஊராட்சியை மூன்றாகப் பிரித்து அம்மாபாளையம், கலசப்பாடி ஆகிய ஊர்களை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சிகளை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சித்தேரி ஊராட்சியை மூன்றாகப் பிரித்து, அம்மாபாளையம், கலசப்பாடி ஆகிய ஊர்களை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சிகள் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

242—

கூட்டு குடிநீர்த் திட்டம்

வினா எண் 97—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைந்து நிறைவேற்றிட அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 6,755 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க அமைப்பு செலவு ரூ.1005.00 கோடிக்கும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.51.65 கோடிக்கும் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீடு ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவி பெற மாநில அரசால் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு மத்திய அரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவி கிடைக்கப்பெற்றவுடன் ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

243—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 111— திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் ஊராட்சி மற்றும் அங்கலக்குறிச்சி புதுக்காலனி பகுதிகளுக்கு தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிலிசின்னம்பாளையம், அங்கலக்குறிச்சி புதுக்காலனி பகுதிகளில் போதுமான தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு அவை உபயோகத்தில் உள்ளன. மேலும் தேவையான கிராம ஊராட்சி கருதினால் ஊராட்சியின் கருத்துரு கிடைக்கப் பெற்ற பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

2011 பிப்ரவரி 10]

244—

காந்தி சிலையைப் புதுப்பித்தல்

வினா எண் 113—திரு. என். நன்மாறன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை கிழக்கு தொகுதி, காந்தி பொட்டல் அருகிலுள்ள காந்தி சிலையைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தற்போது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

245—

ஆழ்குழாய்க் கிணறு

வினா எண் 143—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி சிவசுப்பிரமணியம் லே-அவுட் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சி, சிவசுப்பிரமணியம் லே-அவுட் பகுதியில் 20 வீடுகள் உள்ளன. இதில் 15 வீடுகளுக்கு வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 வீடுகளுக்கு ஒரு பொதுக் குழாய் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே ஆழ்குழாய்க் கிணறு அமைக்கத் தேவையில்லை.

[2011 பிப்ரவரி 10

246—

நோய் பரவுவதைத் தடுத்தல்

வினா எண் 144—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி, நெடுஞ்செழியன் காலனியில் கழிவு நீரினால் நோய் பரவுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

உடுமலைப்பேட்டை நகராட்சி, நெடுஞ்செழியன் காலனியில் கழிவு நீரினால் நோய் பரவுவதைத் தடுக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

247—

கழிவு நீர் வசதி

வினா எண் 145—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி, டி.வி. பட்டினம், சிங்கப்பூர் நகர் பகுதிகளில் கழிவு நீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* உடுமலைப்பேட்டை நகராட்சி, டி.வி. பட்டினம் பகுதிகளில் கழிவு நீர் வசதி செய்து தர ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பகுதி மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. சிங்கப்பூர் நகர் பகுதியில் எதிர்வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்படும்.

2011 பிப்ரவரி 10]

248—

குடிநீர் வசதி

வினா எண் 147—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சி, சிங்கப்பூர் நகர், பசீர் அகமது லே-அவுட் ஆகிய பகுதிகளில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில், திருமூர்த்தி அணை மற்றும் பாலாறு ஆகியவற்றை நீராதாரங்களாகக் கொண்டு முதலாம் மற்றும் இரண்டாம் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. உடுமலைப்பேட்டை நகராட்சி வார்டு 28-ல் அமைந்துள்ள சிங்கப்பூர் நகரில், ஆழ்துளைக் கிணறு ஒன்று உள்ளது. பசீர் அகமது லே-அவுட்டில் ஆழ்துளைக் கிணறு இல்லை. அப்பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளன. இவற்றின் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. இதுவே இப்பகுதிக்கு போதுமானதாக உள்ளது.

249—

குடிநீர் வசதி

வினா எண் 150—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சி, தங்கம்மாள் ஓடை பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில் திருமூர்த்தி அணை மற்றும் பாலாறு ஆகியவற்றை நீராதாரங்களாகக் கொண்டு முதலாம் மற்றும் இரண்டாம் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நகராட்சியில் உள்ள தங்கம்மாள் ஓடைப் பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்பட்டு 4 பொதுக் குழாய்கள், 3 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் 45 வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதி குடிநீர் தட்டுப்பாடு அற்றது.

250—

தார்ச் சாலை

வினா எண் 151—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி, வார்டு-14-ல் சாதிக் நகர், கண்ணப்பன் நகர் பகுதிகளில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். உடுமலை நகராட்சி, வார்டு-14-ல் சாதிக் நகர், பகுதியில் தார்ச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கண்ணப்பன் நகர் பகுதியில் தனியார் இடத்தில் சாலை அமைக்க வேண்டியுள்ளதால் அவ்விடத்தை நகராட்சியிடம் ஒப்படைப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2011 பிப்ரவரி 10]

251—

குடிநீர் வசதி

வினா எண் 153—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி, வார்டு 14-ல் சாதிக் நகர் பகுதிக்கு குடிநீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சி, வார்டு எண் 14-ல் உள்ள சாதிக் நகர் பகுதிக்கு போதுமான குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

252—

குடிநீர் வசதி

வினா எண் 154—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சி, ஏரிப்பாளையம் - காமராஜ் நகர் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சி, ஏரிப்பாளையம்-காமராஜ் நகர் பகுதியில் தற்போது புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு பயனில் உள்ளது.

[2011 பிப்ரவரி 10

253—

சாலை வசதி

வினா எண் 157—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி, V.G. ராவ் நகர், வேல்முருகன் நகர் பகுதிகளில் புதிதாக சாலை வசதி ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சி, வி.ஜி. ராவ் பகுதியில் 2005-2006 சாலை மேம்பாட்டு திட்டத்தின்கீழ், 1035 மீட்டர் நீளத்தில், ரூ.9,00,000/- மதிப்பீட்டில் புதியதாக நடைபெற்றுவரும் சாலைப் பணிகள் விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு விடப்படும். வேல்முருகன் நகர் பகுதி அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் அமைகிறது. அரசாணை எண் 59, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.1) துறை, நாள் 25-07-2006 பிறப்பிக்கப்பட்ட அரசாணையின்படி, மனை உரிமையாளர்களிடமிருந்து வரன்முறைப்படுத்துவதற்காக நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை வசூலித்துக் கொண்டு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி முறைப்படுத்த மனையின் உரிமையாளர்கள் கட்டணம் செலுத்தியுள்ள நிலையில், ஆய்வு மேற்கொண்டு, முறைப்படுத்தியபின் விரைவில் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

254—

பாதாள சாக்கடை

வினா எண் 159—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) உடுமலை நகரில் பாதாள சாக்கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்து நகராட்சிகளிலும் படிப்படியாக பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதியாதாரங்கள் உறுதி செய்யப்பட்டவுடன் நிர்வாக அனுமதி பெறப்பட்டு திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

255—

தெரு விளக்கு வசதி

வினா எண் 164—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சி, V.G. ராவ் நகர் பகுதியில் தெரு விளக்கு வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

V.G. ராவ் நகர் பகுதியில் உள்ள மொத்த சாலையில் 55 தெரு விளக்குகள் அமைக்கப்பட வேண்டும். தற்போது 50 விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் அமைக்கப்பட வேண்டிய 5 தெரு விளக்குகள் நகராட்சி பொது நிதியிலிருந்து அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

256—

சீரமைத்தல்

வினா எண் 179—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

திருவாரூர் மாவட்டம், குடவாசல், பேரளம்—அன்னியூர் சாலை பழுதடைந்துள்ளதை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், குடவாசல், பேரளம்-அன்னியூர் சாலையின் நீளம் 9.60 கி.மீ. ஆகும். இதில் 2.10 கி.மீ. சாலை, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் தார்ச் சாலையாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள சாலை ஊரக வளர்ச்சித் துறையின் பல்வேறு திட்டங்களின் மூலம் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

257—

இணைப்பு பாலம்

வினா எண் 187—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், மயிலாடுதுறை, மணல்மேடு-மயிலாடுதுறை செல்ல வரகடை-காவாளமேடு இணைப்புப் பாலம் பழவாற்றில் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியம், தாழஞ்சேரி ஊராட்சி மற்றும் கேசிங்கன் ஊராட்சிகளில் வரகடை மற்றும் காவாளமேடு பகுதிகளை இணைக்கும் வகையில் பழவாற்றின் குறுக்கே 30 மீட்டர் நீளத்திற்கு அணுகு சாலை உட்பட பாலம் அமைத்திட தோராய மதிப்பீடு ரூ.40.00 இலட்சம் செலவாகும். இப்பணியினை எடுத்து செய்ய ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதியில்லாததால், இப்பணியினை தற்போது செய்ய இயலாது.

2011 பிப்ரவரி 10]

258—

பாலம் கட்டுதல்

வினா எண் 191—திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மொரப்பூர் தொகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ஈச்சம்பாறை அருகே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

மொரப்பூர் தொகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ஈச்சம்பாறை அருகே பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

259—

பணி அமர்த்துதல்

வினா எண் 201—திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பணிநீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களை மீண்டும் பணியமர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

பணிநீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களை 1-6-2006 முதல் மீண்டும் பணியமர்த்தி அரசினால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

260—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 257—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) வால்பாறை தொகுதியில் சோலையாறு அணை இடதுகரை குடியிருப்புப் பகுதிக்கு கூடுதல் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை நகராட்சியில் சோலையாறு அணை இடது கரையில் 248 குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதியில் நகராட்சி மூலம் 250 வாட்ஸ் 4 அடி குழல் விளக்குகள் 24 எண்ணிக்கையும், சோடியம் ஆவி விளக்குகள் 7 எண்ணிக்கையும், 2005-2006 ஆம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து மூன்று தெரு விளக்குகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

261—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 258—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் சோலையாறு அணை வலது கரை குடியிருப்புப் பகுதிக்கு கூடுதல் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, சோலையாறு அணை வலது கரையில் சுமார் 60 குடியிருப்புகள் உள்ளன. மேற்படி பகுதியில் ஏற்கெனவே 10 எண்ணிக்கை 4 அடி குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கூடுதலாக 2 எண்ணிக்கை தெரு விளக்குகள் 8-8-2006 ஆம் தேதி அன்று அமைக்கப்பட்டுள்ளது.

2011 பிப்ரவரி 10]

262—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 259—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் முருகாளி குடியிருப்புப் பகுதிக்கு கூடுதல் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை தொகுதியில் முருகாளி எஸ்டேட் பகுதி பாசி அக்ரோ என்ற தனியார் நிறுவனத்திற்கு சொந்தமானதாகும். இப்பகுதியில் மொத்தம் 250 குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதிக்கு தெரு விளக்கு அமைக்க அரசின் சிறப்பு அனுமதி பெற்று 26 எண்ணிக்கை 4 அடி குழல் விளக்குகள் தேவையான இடங்களில் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

263—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 260—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் வாழைத்தோட்டம் குடியிருப்பு கீழ் பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்னேவருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை தொகுதியில் வாழைத்தோட்டம் கீழ் பகுதியில் சுமார் 480 குடியிருப்பு வீடுகள் உள்ளன. வால்பாறை நகராட்சி மூலம் 4 அடி குழல் விளக்கு 52 எண்ணிக்கையும், சோடியம் ஆவி விளக்கு 13 எண்ணிக்கையும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதிக்கு மேற்கண்ட எண்ணிக்கை கொண்ட தெரு விளக்குகளே போதுமானதாக உள்ளது.

264—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 261—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் வால்பாறை ராஜீவ் காந்தி நகர் குடியிருப்புப் பகுதிக்கு கூடுதல் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சிப் பகுதிக்குட்பட்ட ராஜீவ் காந்தி நகரில் தற்போதுள்ள குடியிருப்புகள் அடிப்படையில் தெரு விளக்குகள் போதுமானதாக உள்ளது. தேவைப்படின் இடம் நேராய்வு செய்து கூடுதலாக தெரு விளக்குகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

265—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 262—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) வால்பாறை தொகுதியில் வால்பாறை, கக்கன் நகர் குடியிருப்புப் பகுதிக்குச் செல்லும் பாதைக்கு கூடுதல் தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை நகராட்சியில் கக்கன் காலனியில் மொத்தம் 342 குடியிருப்புகள் உள்ளன. அப்பகுதியில் வால்பாறை நகராட்சி மூலம் 4 அடி குழல் விளக்குகள் 37 எண்ணிக்கையும், சோடியம் ஆவி விளக்குகள் 3 எண்ணிக்கையும், அமைத்துக் கொடுக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது. தற்போது இப்பகுதியில் போதுமான தெரு விளக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

266—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 263—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வால்பாறை, அண்ணா நகர் குடியிருப்புப் பகுதிக்கு கூடுதல் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதியில், சிலோன் காலனி, அண்ணா நகர் பகுதியில் 525 குடியிருப்புகள் உள்ளன. மேற்படி பகுதியில் ஏற்கெனவே 40 எண்ணிக்கை 4 அடி குழல் தெரு விளக்குகள், 5 எண்ணிக்கை கொண்ட சோடியம் ஆவி

விளக்குகளும் தேவையான இடங்களில் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது போதுமான தெரு விளக்குகள் உள்ளன.

267—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 264—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் வால்பாறை சிறுவர் பூங்கா குடியிருப்புப் பகுதிக்கு கூடுதல் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் சிறுவர் பூங்கா பகுதியில் 285 வீடுகள் உள்ளன. மேற்படி பகுதியில் ஏற்கெனவே 7 எண்ணிக்கை 4 அடி குழல் விளக்குகளும், ஒரு சோடியம் ஆவி விளக்கும் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பகுதி சாலைப் பகுதியை ஒட்டி இருப்பதால், சாலையின் இரு புறங்களிலும் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது இப்பகுதியில் போதுமான விளக்குகள் உள்ளன.

268—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 265—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் புதுத்தோட்டம் குடியிருப்புப் பகுதிக்கு கூடுதல் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை தொகுதியில் புதுத்தோட்டம் எஸ்டேட், உட்பியர் என்ற தனியார் தோட்ட நிறுவனமாகும். மேற்படி பகுதியில் சுமார் 150 வீடுகள் தனித் தனியாக உள்ளன. மேற்படி குடியிருப்புப் பகுதிகளுக்கு அரசு சிறப்பு அனுமதி பெற்று ஏற்கெனவே 15 தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

269—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 266—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகராட்சிக்குட்பட்ட சவரங்காடு குடியிருப்புப் பகுதிக்கு கூடுதல் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சிக்குட்பட்ட சவரங்காடு குடியிருப்புப் பகுதிக்கு 2007-2008 ஆம் ஆண்டு முடிய 4 அடி குழல் விளக்குகள் 30 எண்ணிக்கை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 3 எண்ணிக்கை 4 அடி குழல் விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே தேவையான தெரு விளக்கு வசதி இப்பகுதிக்கு செய்து கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

270—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 267—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) வால்பாறை தொகுதியில் மாணிக்கா, சக்தி தலைநார் எஸ்டேட், தலைநார் குடியிருப்பு, முடிஸ் மார்க்கெட் பகுதி, முடிஸ் பகுதி, தோணிமுடி குடியிருப்பு, தாய்முடி குடியிருப்பு, கஜமுடி குடியிருப்புப் பகுதிகளுக்கு கூடுதல் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சிக்குட்பட்ட மாணிக்கா, சக்தி தலைநார் எஸ்டேட், தலைநார் குடியிருப்பு, முடிஸ் மார்க்கெட் பகுதி, முடிஸ் பகுதி, தோணிமுடி குடியிருப்பு, தாய்முடி குடியிருப்பு, கஜமுடி குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு 2007-08 மற்றும் 2008-09 ஆம் ஆண்டுகளில் பொது நிதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 221 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

271—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 275—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் குரங்குமுடி, நல்லமுடி, ஆனைமுடி, நல்லகாத்து, நல்லமுடி ஹைபாரஸ்ட் எஸ்டேட் ஆகிய குடியிருப்புப் பகுதிகளுக்கு தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் தனியார் எஸ்டேட் நிறுவனத்திற்குச் சொந்தமானதாகும். மேற்படி

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

பகுதியில் சுமார் 875 வீடுகள் உள்ளன. குரங்குமுடி பகுதியில் 29 எண்ணிக்கை தெரு விளக்குகளும், நல்லமுடி பகுதியில் 27 எண்ணிக்கை தெரு விளக்குகளும், ஆனைமுடி பகுதியில் 11 எண்ணிக்கை தெரு விளக்குகளும், நல்லகாத்து பகுதியில் 23 எண்ணிக்கை தெரு விளக்குகளும், ஹைபாரஸ்ட் பகுதியில் 32 எண்ணிக்கை தெரு விளக்குகளும் அரசு சிறப்பு அனுமதி பெற்று, பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், மேற்படி பகுதிகளில் 2005-2006 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் பொது நிதியிலிருந்து அரசு சிறப்பு அனுமதி பெற்று 10 தெரு விளக்குகள் 8-8-2006 அன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

272—

சீர் செய்தல்

வினா எண் 305—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் அப்பர்பாரளை, சக்தி தலைநகர், சோலையாறு அணை குடியிருப்பு ஆகிய சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதை சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, சக்தி தலைநகர் சாலை, நகராட்சிக்குச் சொந்தமான 12 கி.மீ. நீளம் உள்ள சாலையாகும். நகராட்சி பொது நிதி மற்றும் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 12 கி.மீ. சாலையிலும் தார்ச் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டு நிலையில் உள்ளது. சோலையாறு அணை குடியிருப்புப் பகுதியில் நகராட்சிப் பொது நிதியிலிருந்து சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் முறையே 500 மீ. கான்கிரீட் சாலை மற்றும் 400 மீ. தார்ச் சாலை அமைக்கும் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. அப்பர்பாரளை தனியார் தோட்ட நிறுவனமான பாரி அக்ரோ லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான சாலை என்பதால், வால்பாறை நகராட்சிமூலம் செப்பனிட வழிவகை இல்லை.

[2011 பிப்ரவரி 10

273—

கழிப்பிட வசதி

வினா எண் 311—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வாட்டர்பால்ஸ் காவல் நிலையம், தபால் நிலையம் முன்பு மற்றும் முடிஸ் பேருந்து நிலையத்திலும் கழிப்பிடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை நகராட்சிக்குட்பட்ட வாட்டர்பால்ஸ் காவல் நிலையம் மற்றும் தபால் நிலையம் முன்பு நகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் ஏதுமில்லை. இருப்பினும் இங்கு நிற்கும் பேருந்துகள் பயணிகளை இறக்கி, ஏற்றிவிட்டு, உடன் சென்று விடுவதாலும் பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே குடியிருப்புகள் உள்ளதாலும் மேற்படி இடத்தில் கழிப்பிடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

மேலும் முடிஸ் பகுதியில் கழிப்பிடம் கட்ட 2006-2007 சிறு சேமிப்பு நிதியின்கீழ் ரூ.1.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

274—

அத்திக்கடவு திட்டம்

வினா எண் 381—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிறைவேற்றப்படாமல் உள்ள அவினாசி-அத்திக்கடவு திட்டத்தை குறிப்பிட்ட காலவரையரைக்குள் நிறைவேற்றிடும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

அவினாசி-அத்திக்கடவு திட்டப் பகுதியில் அடங்கிய பெரும்பாலான பகுதிகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளதால் அவினாசி-அத்திக்கடவு திட்டம் செயல்படுத்திடும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

275—

இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 386—திரு. க. சுந்தர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் ஊராட்சியை, உத்திரமேரூர், கால்வாக்கம் என இரண்டாகப் பிரிப்பது எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

உத்திரமேரூர் ஊராட்சியை, உத்திரமேரூர், கால்வாக்கம் என இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

276—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 392—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, கல்லாபுரம் ஊராட்சி, வேல்நகர் பகுதியில் பிரதான சாலை அருகில் மின் கம்பத்தில் தெரு விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

கல்லாபுரம் ஊராட்சியில் பிரதான சாலையில் போதுமான அளவு மின் விளக்குகள் உள்ளன. தேவைப்படும் பட்சத்தில் தேவைப்படும் இடத்தில் மின் விளக்கு அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

277—

தெரு விளக்கு வசதி

வினா எண் 393—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கல்லாபுரம் ஊராட்சி, மாவிளம்பாறை சாலை அருகேயுள்ள மின்கம்பத்தில் தெரு விளக்கு இல்லாததால் மக்கள் மிகவும் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, கல்லாபுரம் ஊராட்சி, மாவிளம்பாறை சாலையில் குழல் விளக்கு மூன்றும், சோடியம் ஆவி விளக்கு ஒன்றும், மெர்குரி விளக்கு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

278—

சாலை வசதி

வினா எண் 396—திரு. கோ. அரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், வேப்பஞ்செட்டி முதல் சிட்றம்பாக்கம் வரை மற்றும் அகரம் முதல் பிலிப்ஸ்புரம் வரை சாலைகள் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், வேப்பஞ்செட்டி முதல் சிட்றம்பாக்கம் வரை மற்றும் அகரம் முதல் பிலிப்ஸ்புரம் வரை சாலை அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

279—

தார்ச் சாலை

வினா எண் 397—திரு. கோ. அரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், காவாங்கொளத்தூர் முதல் பேரம்பாக்கம் வரை தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், காவாங்கொளத்தூர் முதல் பேரம்பாக்கம் வரை தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

280—

கழிவுநீர்க் கால்வாய் வசதி

வினா எண் 412—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி, பழனியாண்டவர் நகர் பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். உடுமலை நகராட்சி, பழனியாண்டவர் நகர் பகுதியில் ஏற்கெனவே 2.40 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர்க் கால்வாய் பயன்பாட்டில் உள்ளது. எதிர்வரும் நிதியாண்டில் 300 மீட்டர் நீளத்திற்கு ரூ.2,10,000/- மதிப்பீட்டில் புதியதாக கழிவுநீர்க் கால்வாய் அமைத்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

281—

கழிவுநீர்க் கால்வாய் சீர் செய்தல்

வினா எண் 413—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சி, எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் கழிவுநீர்க் கால்வாயை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சி, எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் கழிவுநீர்க் கால்வாய் சீர் செய்யப்பட்டு, அங்கு சிறு பாலம் அமைக்கும் பணியும் முடிவுற்றுள்ளது.

282—

கிராவல் சாலை

வினா எண் 414—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, முனீர் நகர், உடுமலை நகராட்சியிலுள்ள தெருக்களில் கிராவல் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

உடுமலைப்பேட்டை நகராட்சியில் முனீர் நகர் பகுதியில் 120 மீட்டர் நீளத்திற்கு ரூ.1,50,000/- மதிப்பீட்டில் தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிலுள்ளன.

283—

தார்ச் சாலை வசதி

வினா எண் 415—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி, சாய்ராம் லே-அவுட் பகுதியில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சி, சாய்ராம் லே- அவுட் பகுதியில் 400 மீட்டர் நீளத்தில் ரூ.5,00,000/- மதிப்பில் தார்ச் சாலைகள் புதுப்பிக்கும் பணிகள் 2007-2008 நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

284—

சாலை வசதி

வினா எண் 416—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சி, பழனியாண்டவர் நகர் பகுதியில் புதிதாக சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சி, பழனியாண்டவர் நகர்ப் பகுதியில் 2005-06 ஆம் ஆண்டு சாலைப் பணிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1,560 மீட்டர் நீளத்திற்கு ரூ.10,00,000/- மதிப்பில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 2007-2008 நிதியாண்டில் 100 மீட்டர் நீளத்திற்கு ரூ.1,20,000/- மதிப்பில் சாலைப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

285—

சாலை வசதி

வினா எண் 417—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, பழனி, பொள்ளாச்சி சாலை யு.கே.சி. நகர் பகுதியில் சாலை வசதி செய்து தர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, பழனி-பொள்ளாச்சி சாலைப் பகுதியில் அமைந்துள்ள யு.கே.சி. நகர் பகுதியில் சாலை அமைக்கும் பணி நடப்பு நிதியாண்டில் (2007-2008) மேற்கொள்ளப்படும்.

286—

சாலை வசதி

வினா எண் 418—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) உடுமலை நகரில் 30 ஆண்டுகளாக அங்கீகாரம் பெறாத குடியிருப்புப் பகுதிகளில் சாலை வசதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அங்கீகரிக்கப்படாத மனை பிரிவுகள் மொத்தம் 21 ஆகும். இதுவரை 19 மனைப் பிரிவுகளுக்கு சாலை வசதி செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. பாதாளச் சாக்கடைத் திட்டம் இந்த ஆண்டில் துவக்கப்பட உள்ளதால் தார்ச் சாலைப் பணிகள் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நிறைவுற்றவுடன் மீதமுள்ள 2 மனைப் பிரிவுகளுக்கும் சாலை வசதிகள் செய்து தரப்படும்.

287—

குடிநீர் வசதி

வினா எண் 419—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில் பாலாறு மற்றும் திருமூர்த்தி அணையிலிருந்து நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதுபோக பொதுமக்களின் தேவைக்காக 139 ஆழ்துளைக் கிணறுகள், 174 பொதுக் குழாய்கள், 8,971 வீட்டு இணைப்புகள் அமைக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நகராட்சி குடிநீர்த் தட்டுப்பாடு அற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

288—

பொதுக் குழாய் அமைத்தல்

வினா எண் 420—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சி, ருத்தரப்ப நகரில் பொதுக் குழாய் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சி, ருத்தரப்ப நகரில் பொதுக் குழாய்மூலம் தற்போது போதுமான அளவு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

289—

பொதுக் குழாய் அமைத்தல்

வினா எண் 421—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி, சாய்ராம் லே-அவுட் பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்க பொதுக் குழாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சி, சாய்ராம் லே-அவுட் பகுதியில் உள்ள 70 வீடுகளில் 49 வீடுகளுக்குக் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வீட்டு உரிமையாளர்கள் வீட்டு இணைப்பு வேண்டி விண்ணப்பித்தால் உடனடியாக குடிநீர் இணைப்புகள் வழங்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும். இப்பகுதியின் அருகாமையில் பொதுக் குழாய் இணைப்பும் நகராட்சியால் அமைக்கப்பட்டு,

2011 பிப்ரவரி 10]

நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் நாள்தோறும் ஒன்றரை மணி நேரம் எவ்வித தடங்கலும் இன்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

290—

பொதுக் குழாய் அமைத்தல்

வினா எண் 422—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சி, கோமதி நகர் பகுதியில் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்கும் விதத்தில் பொதுக் குழாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில் திருமூர்த்தி அணை மற்றும் பாலாறு ஆகியவற்றை நீராதாரங்களாகக்கொண்டு முதலாம் மற்றும் இரண்டாம் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் உள்ள கோமதி நகரில் 4 பொதுக் குழாய்கள், இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் 7 வீட்டுக் குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு, இவற்றின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதி குடிநீர்த் தட்டுப்பாடு அற்றதாகும்.

291—

பேருந்து நிலையம்

வினா எண் 429—திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனியில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புதிய பேருந்து நிலையம் அமைக்க வனத் துறைக்குச் சொந்தமான இடத்தினை அரசு பெற முயற்சிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தேனி நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க ஏற்ற இடத்தைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இடம் இறுதி செய்யப்பட்ட பின்பு புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

292—

பேருந்து நிலையம்

வினா எண் 438—திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை செம்மேட்டில் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். கொல்லிமலை செம்மேட்டில் பேருந்து நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

293—

குடிநீர் வசதி

வினா எண் 455—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்குக் குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு நாளொன்றுக்கு 1.50 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கிட பிரத்யேகமாக குழாய் பதிக்கப்பட்டு 20-05-2007 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

294—

பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 456—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உள்ளாட்சித் துறையில், பொது சுகாதாரம், குடிநீர் விநியோகம் மற்றும் அனைத்துப் பிரிவுகளிலும் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

அரசாணை எண் 14, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 7-2-2006-ல் காலிப் பணியிடங்களை நிரப்ப விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக்கொள்ளப்பட்டுள்ள விவரம் நகராட்சிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது உள்ளாட்சித் துறையில் காலியாக உள்ள பணியிடங்கள், அத்தியாவசியத் தேவையினைக் கருத்திற்கொண்டு நிரப்பப்பட்டு வருகின்றன.

295—

பொதுக் குடிநீர்க் குழாய்

வினா எண் 457—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரப் பகுதிகளில் தெரு விளக்கு, பொது குடிநீர்க் குழாய்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருப்பூர் நகர மன்ற தீர்மான எண்கள் 1692 முதல் 1696 வரையிலான தீர்மானங்களின்படி 1,015 எண்ணிக்கையில் குழல் விளக்குகள் மற்றும் 305 எண்ணிக்கையில் 150 வாட்ஸ் மெட்டல் ஹலாய்டு விளக்குகள் பொருத்த 8-02-2007 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்படி அப்பகுதிகளுக்குப் புதிய தெரு விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

திருப்பூர் நகரில் ஏற்கெனவே 678 பொதுக் குழாய்கள் உள்ளன. குடிசைப் பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் இப்பொதுக் குழாய்கள் அமைந்துள்ளன. பொதுவாக 50 குடும்பங்களுக்கு (சுமார் 250 பேர்களுக்கு) ஒன்று வீதம் என்கிற அடிப்படையில், நகரில் உள்ள 5 சதவீத மக்கள் பயன்பெறும் வகையில் பொதுக் குழாய்கள் அமைக்கப்படுகிறது. இந்நகரில் குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மொத்த மக்கள் தொகை 1,23,730. நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாகவே 678 பொதுக் குழாய்கள் உள்ளன. எனினும், பொதுக் குழாய் அமைக்க கோரிக்கைகள் வரப்பெறும் நேர்வில், ஆய்வுக்குப்பின் தேவைபடின் பொதுக் குழாய்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

296—

குடிநீர் இணைப்பு

வினா எண் 458—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகராட்சியில் குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை பெறப்பட்டு இன்னும் குடிநீர் இணைப்பு வழங்கப்படாமலுள்ளதால், குடிநீர் இணைப்பு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருப்பூர் நகராட்சியில் குடிநீர் இணைப்பு கோரி வந்துள்ள அனைத்து விண்ணப்பங்களுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2011 பிப்ரவரி 10]

297—

குடிநீர்ப் பிரச்சினை

வினா எண் 459—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் 3-வது குடிநீர்த் திட்டத்தின்மூலம் வழங்கப்படும் குடிநீர் சுவையற்றதாக, நோய் பரப்புவதாக உள்ளதால் இரண்டாவது குடிநீர்த் திட்டக் குடிநீரை மட்டும் குடிநீர் பயன்பாட்டிற்கென வழங்கி திருப்பூர் நகரின் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருப்பூர் மேம்பாட்டுக் கழகத்துடன் திருப்பூர் நகராட்சி ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தப்படி நாள் ஒன்றுக்கு தற்போது 16.48 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. திருப்பூர் மூன்றாவது குடிநீர்த் திட்டத்தின் மூலமாக மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீர் பரிசோதிக்கப்பட்டபோது குடிப்பதற்கு உகந்தது என உறுதியளிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கூட்டுக் குடிநீர் உற்பத்தி அளவு மொத்தத்திற்கும் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டு, உபரி குடிநீர் இல்லாததால், இத்திட்டத்திலிருந்து கூடுதல் குடிநீர் திருப்பூர் நகராட்சிக்கு வழங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

298—

வார்டுகளை இணைத்தல்

வினா எண் 460—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகராட்சிப் பகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தில் விடுபட்டுப் போன அனைத்து வார்டுகளையும் இணைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தால் தற்போது பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவடைந்த நிலையில் விடுபட்டுப்போன பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் நகராட்சி மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

299—

சாலையைப் பராமரித்தல்

வினா எண் 461—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரப் பகுதிக்குட்பட்ட அனைத்து சாலைகளும் மோசமாக பழுதடைந்துள்ளதால், வலுவான சாலைகள் அமைக்கவும் பராமரிக்கவும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருப்பூர் நகரப் பகுதிக்குட்பட்ட மோசமாகப் பழுதடைந்துள்ள 113 சாலைகளை வலுவான சாலைகளாக அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

300—

குப்பைக் கூளங்களை அழித்தல்

வினா எண் 462—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் குப்பைக் கூளங்களை முறையாக அப்புறப்படுத்தவும், அழிக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருப்பூர் மாநகராட்சியில் குப்பைக் கூளங்கள் அன்றாடம் முறையாக, பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் சேகரிக்கப்பட்டு நவீன முறையில் அகற்றப்பட்டு வருகின்றன.

301—

மாநகராட்சி

வினா எண் 463—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரை மாநகராட்சியாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற அரசு முடிவெடுத்துள்ளது.

302—

கூடுதல் நிதி

வினா எண் 470—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரின் அடிப்படை கட்டமைப்புக்கு மாநில அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தும், மத்திய அரசிடம் சிறப்பு நேர்வாக கூடுதல் நிதி பெற்றுத் தரவும் அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருப்பூர் நகராட்சி தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு ரூ.5.00 கோடி அரசு மானியமாக வழங்கியுள்ளது. மேலும், வெள்ள நிவாரண திட்டத்தின்கீழ் சாலைகளை மேம்படுத்த ரூ.50.00 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

303—

மின் மயானம்

வினா எண். 478—திரு. கே.பி. இராமசுவாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராசிபுரம் நகராட்சியில் மின் மயானம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ராசிபுரம் நகராட்சியில் மின் மயானம் அமைக்கவும், தொடர்ந்து பராமரிக்கவும் அதிக செலவாகும் என்பதால் மின் மயானம் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை. எனினும், இதற்கு மாற்றாக எரிவாயு தகனமேடை பல வழிகளில் பயனுள்ளதாக அமையும் என்பதால் 2008-2009 ஆம் ஆண்டில் எரிவாயு தகனமேடை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

304—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 500—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஆம். ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

305—

மழை நீர் வடிகால்

வினா எண் 508—திரு. ல. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகரில் பேருந்து நிலையம், காய்கனி மார்க்கெட், இரயில் நிலையம் போன்ற பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய்களைத் தூர்வாரி ஆழப்படுத்துவதுடன், மழைநீர் வடிகால் தனியே ஏற்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கோவில்பட்டி நகரில் பேருந்து நிலையம், காய்கனி மார்க்கெட், இரயில் நிலையம் போன்ற பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களில் கழிவுநீர் அகற்றி தூர்வாரும் பணிகள் நடைபெற்றுள்ளன.

[2011 பிப்ரவரி 10

306—

சோடியம் விளக்கு

வினா எண் 511–திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை நகராட்சியில் உபயோகப்படுத்தாமல் உள்ள சோடியம் விளக்குகள் மீண்டும் உபயோகத்திற்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை நகராட்சியில் உபயோகப்படுத்தாமல் உள்ள 138 சோடியம் விளக்குகளை ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் மீண்டும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணிகள் முழுவதும் 30-4-2007 ஆம் தேதிக்குள் முடிக்கப்பட்டுவிடும்.

307—

சொத்து வரி

வினா எண் 525–திரு. கு. சீனிவாசன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை மற்றும் தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசின் கட்டடங்கள் மற்றும் சொத்துக்களுக்கு உரிய சொத்து வரி, குடிமை வரிகளை மைய அரசு செலுத்துகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசு கட்டடங்கள் மற்றும் இரயில்வே துறையினரின் கட்டடங்களுக்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சொத்துவரிக்கு பதிலாக சேவை வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

2011 பிப்ரவரி 10]

(ஆ) சேவை வரி சொத்து வரியில் 75 சதவிகிதம் என்ற அளவில் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது. உதாரணத்திற்கு சென்னை தொலைபேசி, சேவை வரியாக அரையாண்டிற்கு ரூ.25 இலட்சம் செலுத்துகிறது. இரயில்வே துறை ரூ.16 இலட்சம் செலுத்துகிறது. ராஜாஜி பவன் சேவை வரியாக அரையாண்டிற்கு ரூ.11 இலட்சம் செலுத்துகிறது மற்றும் இரயில் பெட்டி தொழிற்சாலை சேவை வரியாக ஆண்டிற்கு ரூ.2 இலட்சம் செலுத்துகிறது.

308—

ஆய்வுக் கூட வசதி

வினா எண் **526—திரு. கு. சீனிவாசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பூங்கா நகர் தொகுதி, 44-வது வட்டத்திலுள்ள நலவாழ்வு மையத்தில் ஆய்வுக்கூட வசதியை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சென்னை பூங்கா நகர் தொகுதி, 44-வது வட்டத்திலுள்ள பி.கே. கார்டன் நலவாழ்வு மையத்தில் ஆய்வுக்கூட வசதியை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

309—

கழிவு நீர் இணைப்பு

வினா எண் **527—திரு. கு. சீனிவாசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகளில் ரூ.100/- என்ற சலுகைக் கட்டணத்தில் இதுவரை எத்தனை குடிசைகளுக்கு கழிவுநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன?

(ஆ) இந்தத் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகள் மற்றும் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள மக்களுக்கு ரூ.100/- என்ற சலுகை கட்டணத்தில் இதுவரை 28,305 கழிவுநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டம், சென்னைக் குடிநீர் வாரியத்தில் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.

310—

குடிநீர் வசதி

வினா எண் 534—திருமதி மு. சந்திரா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராஜபாளையம் நகராட்சி, மலையம்பட்டி பகுதியில் குடிநீர் வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். மலையம்பட்டி, ராஜபாளையம் நகராட்சியின் ஒரு பகுதியாகும். குடிநீர் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

311—

ஒருங்கிணைந்த சுகாதார வளாகம்

வினா எண் 535—திருமதி மு. சந்திரா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராஜபாளையம் தொகுதி, சேத்தூர், செட்டியார்பட்டி, சத்திரப்பட்டி, சமுசிகாபுரம் ஆகிய ஊர்களில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்ட அரசு முன்வருமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ராஜபாளையம் தொகுதி, சேத்தூர், செட்டியார்பட்டி, சத்திரப்பட்டி, சமுசிகாபுரம் ஆகிய ஊர்களில் பல்வேறு திட்டங்களின்கீழ் ஏற்கெனவே ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. அனைத்து சுகாதார வளாகங்களும் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளன.

312—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 540–திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். சிவகங்கை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஜூன் 2008-ல் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

313—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 542–திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கையில் ஒருங்கிணைந்த புதிய பேருந்து நிலையம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சிவகங்கை நகராட்சிக்குப் புதிய பேருந்து நிலையம் அமைக்க உத்தேசித்துள்ள இடம் வருவாய் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானது. நகராட்சிக்கு அவை நிலமாற்றம் செய்ய உத்தரவு பெறப்பட்டவுடன் நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

314—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 547—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். தாம்பரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க ஆவன செய்யப்பட்டு, சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. விரிவான திட்ட அறிக்கை மைய அரசுக்கு டுபிட்கோ மூலம் ஒப்புதலுக்காக அனுப்பி பெறப்பட்ட பின்பு பாதாள சாக்கடைத் திட்டம் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

315—

அடிப்படை வசதிகள்

வினா எண் 548—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

தாம்பரம் தொகுதி, பெருங்குடி சிறப்பு ஊராட்சி, கல்லுக்குட்டைப் பகுதியிலுள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தற்போது இயலாது. ஏனெனில், தாம்பரம் தொகுதி, பெருங்குடி சிறப்பு ஊராட்சி, கல்லுக்குட்டைப் பகுதி மக்களுக்கு (நில ஆக்கிரமிப்பாளர்கள்) அடிப்படை வசதி செய்து தருவது குறித்து நீதிமன்ற வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது.

316—

அடிப்படை வசதிகள்

வினா எண் 549—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, தரமணி காந்தி நகர் பகுதியில் உள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். தரமணி மகாத்மா காந்தி நகர் பகுதியில் மாநகராட்சி மூலம் அனைத்து அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

317—

குப்பை கொட்டும் இடம்

வினா எண் 551—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், வேங்கடமங்கலம் பகுதியில் ஆலந்தூர், தாம்பரம் மற்றும் பல்லவபுரம் நகராட்சிகளுக்கு சம்பந்தப்பட்ட குப்பைகளைக் கொட்டுவதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான நில ஒப்படைப்பு எப்போது நகராட்சிகளுக்கு வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், வேங்கடமங்கலம் கிராமம், மேய்க்கால் புறம்போக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டு உரக்கிடங்கு அமைக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

318—

தனி மின் விசைத் திட்டம்

வினா எண் 580—திரு. என். ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை தொகுதி, திட்டக்குடி ஊராட்சியில் தெற்குப் பகுதியில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை தொகுதி, திட்டக்குடி ஊராட்சியில் தெற்கு பகுதியில் 2007-2008-ம் ஆண்டில் ரூ.6.05/- இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள தனி மின் விசைத் திட்டம் நிறுவப்பட்டு போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

319—

கல்வெட்டு அமைத்தல்

வினா எண் 583—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சி, ருத்திரப்பா நகர் பகுதியில் உள்ள தெருக்களில் (பாலம்) கல்வெட்டு அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். உடுமலைப்பேட்டை நகராட்சியில் ருத்திரப்பா நகர்ப் பகுதியில் 14 சிறுபாலங்கள் (கல்வெட்டு) 2007-2008 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளன.

320—

புதிய பாலம்

வினா எண் 604—திரு. ஆர்.டி. கணேசன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வைகை ஆற்றின் குறுக்கே சங்ககோணம்பட்டி முதல் கண்டமனூர் பகுதியினை இணைக்க புதிய பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வைகை ஆற்றின் குறுக்கே சங்ககோணம்பட்டி முதல் கண்டமனூர் பகுதியினை இணைக்க புதிய பாலம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

321—

மேம்பாலம்

வினா எண் 617—திரு. ப. ரங்கநாதன் மற்றும் திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள பெரம்பூர் மேம்பாலம் கட்டும் பணி மீண்டும் தொடர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுது தொடங்கப்பெற்று பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு (2009) இறுதிக்குள் மேம்பால கட்டுமானப் பணிகள் விரைந்து முடிக்க அரசு, பணிகளை துரிதப்படுத்தியுள்ளது.

322—

சிறப்புத் திட்டங்கள்

வினா எண் 641—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை நகரில் அடிப்படை வசதி செய்ய நிதி ஒதுக்கீடு செய்து சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

323—

மின் வசதி

வினா எண் 657—திரு. ரா. வரதராஜன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) விருதுநகர் தொகுதிக்குட்பட்ட கிராமப்புறங்களில் மின் வசதி மற்றும் கழிப்பிட வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம் (ஆ) விருதுநகர் தொகுதிக்குட்பட்ட கிராமப்புறங்களில் மின் வசதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் மற்றும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழும், கழிப்பிட வசதி முழு சுகாதாரத் திட்டத்தின் கீழும் இந்த நிதி ஆண்டில் செய்துதர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

324—

பேரூராட்சிகள்

வினா எண் 695—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சிற்றூராட்சிகளாக மாற்றப்பட்டவை மீண்டும் பேரூராட்சிகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

அரசாணை எண் 55, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14-7-2006-ல் 561 சிறப்பு சிற்றூராட்சிகளை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920-ன்கீழ் மீண்டும் பேரூராட்சிகளாக வகை மாற்றம் செய்து அரசினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

325—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 703—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) திருவண்ணாமலையில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருவண்ணாமலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டப் பணிகள் நடவடிக்கையில் உள்ளது.

326—

அடிப்படை வசதிகள்

வினா எண் 770—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்ற தொகுதி, சென்னிமலை பேரூராட்சியில் சாலை வசதி, குடிநீர் வசதி, மின்விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2008-2009 நிதியாண்டில் சென்னிமலை பேரூராட்சியில் சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் மின்விளக்கு வசதி போன்றவை செய்து தரப்படும்.

327—

குடிநீர் வசதி

வினா எண் 793—திரு. சு. சிவராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) திருக்கோவிலூர் ஒன்றியம், சுந்தரேசபுரம் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் விடுபட்ட தேவியகரம் ஊராட்சிக்கு குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேவியகரம் ஊராட்சியிலுள்ள 3 குடியிருப்புகளில் கட்சிகுவசன் என்ற குடியிருப்பு முழுமையான குடிநீர் வசதி பெற்றது. மீதமுள்ள தேவியகரம் மற்றும் தேவியகரம் காலனி குடியிருப்புகள் தற்போது பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளாக உள்ளதால், கூடுதல் குடிநீர் வசதிக்கு வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் திட்டம் செயலாக்க நடவடிக்கை எடுக்கப்படும். சுந்தரேசபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து, தேவியகரம் ஊராட்சிக்கு குடிநீர் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

328—

சமத்துவபுரம்

வினா எண் 804—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, பருத்தித் திடலில் உள்ள வருவாய்த் துறை இடத்தில் சமத்துவபுரம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதி, பருத்தித் திடலில் உள்ள வருவாய்த் துறை இடத்தில் சமத்துவபுரம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

329—

காவிரி குடிநீர்த் திட்டம்

வினா எண் 810—திரு. மா. தண்டபாணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதிக்கு காவிரி குடிநீர் திட்டம் மீண்டும் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதியில், வேடசந்தூர், குஜிலியம்பாறை, வடமதுரை ஆகிய ஒன்றியங்களிலுள்ள குடியிருப்புகள் மற்றும் பாளையம், அய்யலூர், எரியோடு, வேடசந்தூர் மற்றும் வடமதுரை ஆகிய 5 பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வழங்க காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு கீழ்க்கண்ட இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1. திண்டுக்கல் நகராட்சி, தாடிக்கொம்பு, அகரம், வடமதுரை, எரியோடு பேரூராட்சிகள் மற்றும் அய்யலூர் பேரூராட்சி மற்றும் 764 குடியிருப்புகள் மற்றும் கரூர் மாவட்டத்தைச் சார்ந்த 52 குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன்கூடிய ரூ.85 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

2. வேடசந்தூர், பாளையம், ஒட்டன்சத்திரம், கன்னிவாடி, ஸ்ரீராமபுரம் பேரூராட்சிகள் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் 5 ஒன்றியங்களைச் சார்ந்த 740 ஊரக குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய ரூ.38 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

2011 பிப்ரவரி 10]

330—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 829—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்ட மக்களுக்கு குடிநீர் பிரச்சனை தீர்ந்திட ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டம் துவங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை–

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 6,755 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க அமைப்பு செலவு ரூ.1,005.00 கோடிக்கும் ஆண்டு பராமரிப்பு செலவு ரூ.51.65 கோடிக்கும் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீடு ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவி பெற மாநில அரசால் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவி கிடைக்கப்பெற்றவுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

331—

பாலம் கட்டும் பணி

வினா எண் 836—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பர்ரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு ஒன்றியம், துளசாபுரம் ஊராட்சி, சாக்கை கிராமத்தை இணைக்க அடப்பாற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை–

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், துளசாபுரம் ஊராட்சி, சாக்கை கிராமத்தை இணைக்கும் அடப்பாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் உள்ளது.

(ஆ) பாலம் கட்டு பணி விரைவில் துவங்கப்படும்.

332—

ஊராட்சி பிரித்தல்

வினா எண் 841—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், செண்பகராயநல்லூர் ஊராட்சியை செண்பகராயநல்லூர், தென்னம்புலம் என்று இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை–

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், செண்பகராயநல்லூர் ஊராட்சியை செண்பகராயநல்லூர், தென்னம்புலம் என்று இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

333—

ஊராட்சி பிரித்தல்

வினா எண் 859—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், ஒரே வருவாய் கிராமமாக செயல்படும் செட்டிபுலம், கரியாப்பட்டிணம் ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்து தனித்தனி வருவாய் கிராமமாக செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், ஒரே வருவாய் கிராமமாக செயல்படும் செட்டிபுலம், கரியாப்பட்டிணம் ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்து தனித் தனி வருவாய் கிராமமாக செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

334—

தடுப்பணை

வினா எண் 1108—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுகா, வெள்ளக்குட்டை பஞ்சாயத்தைச் சேர்ந்த துரிஞ்சிரிகுப்பம் கிராமப்பகுதி மலையில் குஜ்ஜிகான் ஏரி என்ற இடத்தில் தடுப்பணை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம்.

335—

பழுது பார்த்தல்

வினா எண் 1111—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

மதுரை கிழக்கு தொகுதியில் உள்ள புது இராமநாதபுரம் சாலை, கிருதுமால் நதி சாலை ஆகிய சாலைகளை பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை–

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

336—

குடிநீர் வசதி

வினா எண் 1112—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, பாலரெங்கபுரம் பகுதியிலுள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை ஊழியர் குடியிருப்புப் பகுதியில் கழிவுநீர் கால்வாய் மற்றும் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை–

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பாலரெங்கபுரம் பகுதியிலுள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை ஊழியர் குடியிருப்புப் பகுதிக்கு பாதாள சாக்கடை வசதி மற்றும் குடிநீர் வசதி உள்ளது.

337—

பணியிடம் நிரப்புதல்

வினா எண் 1114—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை சிறப்பு சிற்றூராட்சி அலுவலகத்தில் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். ஈரோடு மாவட்டம், சென்னிமலை பேரூராட்சியில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

338—

பாதாள சாக்கடை

வினா எண் 1125—திரு. அ. ராஜன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி விரைவுப்படுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. சாக்கடை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நிலம் தேர்வு செய்யப்பட்டு கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் மதிப்பீடுகள் முடிவு செய்து பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

339—

சுரங்கப்பாதை அமைத்தல்

வினா எண் 1127—திரு. அ. ராஜன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் நகரிலுள்ள அண்ணா பேருந்து நிலையத்திற்கும் நகராட்சி பூங்காவிற்கும் இடையில் சுரங்கப்பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

340—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 1126—திரு. அ. ராஜன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வலம்புரி விளையிலுள்ள உரக்கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றி அந்த இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

341—

பேருந்து நிலையம்

வினா எண் 1263—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், ஏலாக்குறிச்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், ஏலாக்குறிச்சியில் வரும் நிதியாண்டில் சுற்றுலா வளர்ச்சித் திட்டம்

2011 பிப்ரவரி 10]

அல்லது பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

342—

மின் விளக்குகள்

வினா எண் 1264—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமானூர் ஒன்றியம், கொரத்தக்குடி, அரியலூர் ஒன்றியம், புங்கங்குழி, ஆதனூர் ஆகிய குக்கிராமங்களின் தெருக்களிலுள்ள மின் விளக்குகள் சரியாக இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், கொரத்தக்குடி, அரியலூர் ஒன்றியம், புங்கங்குழி ஆதனூர் ஆகிய கிராமங்களில் உள்ள மின் விளக்குகள் தற்போது நல்ல முறையில் எரிந்து கொண்டுள்ளன.

343—

கட்டட வசதி

வினா எண் 1266—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, சிலுப்பனூர் கிராம ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு கட்டடமும், சுற்றுச் சுவரும் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

2006-07 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் சிலுப்பனூரில் உள்ள அரியலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ரூ.60,000/- (ரூபாய்

[2011 பிப்ரவரி 10

அறுபதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பள்ளியில் 59 மாணவ / மாணவியர் தற்போது படித்து வருகின்றனர். தற்போதுள்ள ஒரு ஏ.சி.சீட் கட்டடம் 59 குழந்தைகளுக்குப் போதுமானதால் புதிய கட்டடம் கட்டுவது தற்போது தேவையில்லை.

344—

மின்சாரக் கட்டணம்

வினா எண் 1277—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதியிலுள்ள காணை ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு கடந்த ஓராண்டு காலமாக மின்சாரக் கட்டணம் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் வழங்கப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இச்செலவினை அரசே ஏற்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை பற்றி மின் வாரியத்திலிருந்து எந்தவித கேட்பு விவரமும் காணை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வரப்பெறவில்லை.

345—

பேருந்து நிலையம்

வினா எண் 1319—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, போளூர் நகரில் நவீன வசதியுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருவண்ணாமலை மாவட்டம், போளூர் நகரில் நவீன வசதியுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

346—

குடிநீர்க் குழாய் அமைத்தல்

வினா எண் 1353—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி நகரில் பொன்னையாற்று குடிநீரை அனைத்துப் பகுதிகளுக்கும் குழாய் மூலம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி நகராட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் வேலூர்-சத்துவாச்சாரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் பாலாறு மற்றும் பொன்னையாற்று நீர் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு, 90 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

347—

சுகாதாரம்

வினா எண் 1356—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி நகராட்சி மலையடிவாரத்தில் பன்றிகள் வளர்க்கப்பட்டு வருவதால் ஏற்படும் சுகாதாரக் கேட்டை தடுக்க அரசு ஆவன செய்யுமா?

LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை–

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

348—

குடிநீர் வழங்கல்

வினா எண் 1358—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி, காகிதப்பட்டறை பகுதி மக்களுக்கு போதிய அளவு குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை–

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வேலூர் நகராட்சிக்குட்பட்ட காகிதப்பட்டறை பகுதிக்கு, 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் வேலூர்-சத்துவாச்சாரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இருந்து நீர் ஏற்றப்பட்டு பகிர்மானக் குழாய் மூலம் சீரான முறையில் போதிய அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

349—

பேருந்து வசதி

வினா எண் 1359—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சியின் பழைய பேருந்து நிலையத்திற்குள் மீண்டும் பேருந்துகள் வந்து செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தற்போது வேலூர் நகராட்சியில் அனைத்துப் பேருந்துகளும் ஒருங்கிணைந்த ஒரே இடத்தில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு வருவதால் பொதுமக்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றனர். பழைய பேருந்து நிலையத்தினையும் புதிய பேருந்து நிலையத்தினையும் இணைக்க போதுமான அளவு நகரப் பேருந்துகள் இயங்கி வருகிறது. மேலும், புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டதால் பழைய பேருந்து நிலையப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் பெரிதும் குறைந்துள்ளது.

எனவே, பழைய பேருந்து நிலையத்திற்குள் மீண்டும் பேருந்துகள் வந்து செல்லும் வினா எழ வாய்ப்பில்லை.

350—

பணி நியமனம்

வினா எண் 1360—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி நகராட்சி நகர் நல அலுவலர், துப்புரவுத் தொழிலாளர் ஆகியோரை நியமனம் செய்ய அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி நகராட்சியில் நகர் நல அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்படவில்லை. நகராட்சியில் மொத்தம் 45 பணியாளர்கள் பணியிடங்கள் உள்ளன. அவற்றில் 41 பணியிடங்கள் நிரப்பப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். காலியாக உள்ள நான்கு துப்புரவுப் பணியாளர் பணியிடங்களில் இரண்டு வாரிசுதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இரண்டு இடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

351—

குடிநீர் வழங்கல்

வினா எண் 1394—திரு. வி.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, செல்லங்குப்பம், கோட்டை மருதூர், கொடுக்கப்பட்டு ஆகிய கிராமங்களுக்கு தென்பெண்ணை ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், செல்லங்குப்பம், கோட்டை மருதூர் மற்றும் கொடுக்கப்பட்டு கிராமங்களுக்கு உள்ளூர் நீராதாரங்களைக் கொண்டு தனி மின்விசைத் திட்டம் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், தென்பெண்ணை ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கும் தேவை எழவில்லை.

352—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1396—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, காகாகுப்பம் கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை–

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். முகையூர் தொகுதி, காகாகுப்பம் கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தினை நடப்பு நிதியாண்டிலேயே செயலாக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

353—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 1398—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, ஆலம்பாடி, சத்தியகண்டநவலூர், சித்தாத்தூர், செங்கமேடு ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை–

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, முகையூர் ஒன்றியத்தைச் சேர்ந்த சித்தாத்தூர், செங்கமேடு ஆகிய குடியிருப்புகளுக்கு நடப்பு நிதியாண்டிலும் ஆலம்பாடி, சத்தியகண்டனூர் ஆகிய குடியிருப்புகளுக்கு வரும் நிதியாண்டிலும், கூடுதல் குடிநீர் வசதிக்காக நடவடிக்கை எடுக்கப்படுவதால் இக்குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

354—

குடிநீர் வழங்கல்

வினா எண் 1399—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதியில் கூட்டுத் குடிநீர்த் திட்டம் மூலம் கழுமரம், சொரயப்பட்டு, கொழுந்திராம்பட்டு, அத்திப்பாக்கம், சடைகட்டி வேளாகுளம் ஆகிய இடங்களுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கழுமரம், சொரயப்பட்டு, கொழுந்திராம்பட்டு, அத்திப்பாக்கம், சடைகட்டி மற்றும் வேளாகுளம் குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கும் கருத்துரு தற்போது பரிசீலனையில் இல்லை.

355—

நீர்த் தேக்கத் தொட்டி.

வினா எண் 1400—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதியில் பில்ராம்பட்டு (காலனி) பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் சட்டமன்றத் தொகுதி, பில்ராம்பட்டு ஊராட்சியைச் சேர்ந்த பில்ராம்பட்டு (காலனி) குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்க சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2011 பிப்ரவரி 10]

356—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 1402—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, வெள்ளம்பத்தூர் மற்றும் திருமலைப்பட்டு கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், வெள்ளம்பத்தூர் மற்றும் திருமலைப்பட்டு கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

357—

குடிநீர் வசதி

வினா எண் 1403—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, V. சித்தாமூர் காலனியில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், வி. சித்தாமூர் ஊராட்சியைச் சார்ந்த வி. சித்தாமூர் புது காலனி குடியிருப்பின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் இதர பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டிற்குள் இப்பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

[2011 பிப்ரவரி 10

358—

குடிநீர் வழங்கல்

வினா எண் 1404—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, காணை ஒன்றியம், அத்தியூர் திருக்கை கிராமத்திற்கு திருக்கோயிலூர் முதல் செஞ்சி வரையுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, காணை ஒன்றியம், அத்தியூர் திருக்கை ஊராட்சியைச் சேர்ந்த அத்தியூர் திருக்கை குடியிருப்புக்கு 100 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் மூலம் போதுமான அளவு குடிநீர் கிடைக்கப் பெறுகிறது. எனவே, செஞ்சி-அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்க வேண்டிய அவசியம் இல்லை.

359—

நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1405—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, காணை ஒன்றியம், போரூர் கிராமத்தில் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, கானை ஒன்றியம், போரூர் ஊராட்சியைச் சேர்ந்த போரூர் குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக போதுமான அளவு குடிநீர் கிடைக்கப் பெறுவதால், கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் இல்லை.

360—

நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1406—திரு. வி.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, மேலந்தல் கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, மேலந்தல் ஊராட்சியைச் சேர்ந்த மேலந்தல் குடியிருப்பில் தற்போது 1,00,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுடன் கூடிய குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. எனவே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் புதிய நீர்த்தேக்கத் தொட்டி தேவையில்லை.

361—

சாலை சீரமைத்தல்

வினா எண் 1429—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, நங்கவள்ளி பிரதான சாலையிலிருந்து மல்லியக்குட்டை வரையுள்ள சாலையை சீரமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், நங்கவள்ளி பிரதான சாலை முதல் மல்லியக்குட்டை சாலை வரை மொத்த நீளம் 3.8 கி.மீ. ஆகும். இதில் 2.6 கி.மீ நீளமுள்ள ஜல்லிசாலை நபார்டு திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டு ரூ.11.5 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 1.2 கி.மீ. தார்ச் சாலை 2006-2007 ஆம் ஆண்டு பன்னிரண்டாவது நிதிக் குழு மானியத்தில் ரூ.6.7 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

362—

நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1430—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் காவிரி குடிநீர் உரிய அளவு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு காவிரி குடிநீர் கீழ்க்கண்ட கூட்டுக் குடிநீர் திட்டங்களிலிருந்து வழங்கப்படுகிறது.

2011 பிப்ரவரி 10]

(அ) இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

(ஆ) சேலம்—ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

(இ) காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

ஜூலை 2007 முதல் அனைத்து முறையற்ற இணைப்புகளும் நீக்கப்பட்டு சீரான முறையில் வடிவமைப்புப்படி காவிரி குடிநீர் வழங்கப்படுகிறது.

363—

பேருந்து நிலையம்

வினா எண் 1455—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழப்பாவூரில் மொழிப்போர் தியாகி திரு. சின்னசாமி நினைவாக பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. இதற்கான திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

364—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 1465—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 6,755 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க அமைப்புச் செலவு ரூ. 1005.00 கோடிக்கும் ஆண்டுப் பராமரிப்பு செலவு ரூ.51.65 கோடிக்கும் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீடு ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவி பெற மாநில அரசால் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு மத்திய அரசும் பரிந்துரை செய்துள்ளது. ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவி கிடைக்கப்பெற்றவுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

வேலூர் மாவட்டத்திற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றுவது குறித்து:

வேலூர் மற்றும் 13 நகராட்சிகள், 10 பேரூராட்சிகள், 14 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 2,722 ஊரக குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க தோராய அமைப்புச் செலவு ரூ.900.00 கோடிக்கு விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. காவிரி ஆற்றிலிருந்து இத்திட்டத்திற்குத் தேவையான நீர் எடுப்பதற்கு நீர் பயனீட்டுக் குழுவின் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீர் பயனீட்டுக் குழுவின் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டு விரிவான மதிப்பீட்டிற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெற தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

365—

தார்ச் சாலை வசதி

வினா எண் 1494—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பருவாச்சி ஊராட்சி, அம்மன்பாளையம், வடக்கு கொட்டாய், நேரு நகர், பிச்சனூர், புரசக்காட்டூர் புதுபெருமாபாளையம், பருவாச்சி காட்டூர் ஆகிய பகுதிகளில் தார்ச் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பருவாச்சி ஊராட்சி, அம்மன்பாளையம், வடக்கு கொட்டாய், நேரு நகர், பிச்சனூர், புரசக்காட்டூர், புதுபெருமாபாளையம், பருவாச்சி காட்டூர் ஆகிய பகுதிகளில் தார்ச் சாலை வசதி செய்து தர பவானி ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதி தற்போது இல்லை.

366—

தார்ச் சாலை வசதி

வினா எண் 1496—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பருவாச்சி ஊராட்சி அம்மன்பாளையம், சிவத்தனைக்காரர் சாலை-ஐடியல் நகர், அம்மன்பாளையம் வடக்கு கொட்டாய்-பருவாச்சி மணியம்மன் கோயில்-வடக்கு கொட்டாய் பெருமாள் கோயில் ஆகிய பகுதிகளுக்கு புதிய தார்ச் சாலை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பருவாச்சி ஊராட்சி, அம்மன்பாளையம், சிவத்தனைக்காரர் சாலை-ஐடியல் நகர், அம்மன்பாளையம் வடக்கு கொட்டாய்-

[2011 பிப்ரவரி 10

பருவாச்சி மணியம்மன் கோயில்-வடக்கு கொட்டாய் பெருமாள் கோயில் ஆகிய பகுதிகளுக்கு புதிய தார்ச் சாலை அமைக்க பவானி ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதி இல்லை.

367—

தார்ச் சாலை வசதி

வினா எண் 1498—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, சித்தார் செல்லும் சாலையிலிருந்து கோணாரெட்டிபாளையம் சாலை வரை தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, சித்தார் செல்லும் சாலையிலிருந்து கோணாரெட்டிபாளையம் சாலை வரை தார்ச் சாலை அமைக்க தற்போது போதிய நிதி வசதியில்லை. நிதி வசதி அடிப்படையில் இச்சாலை அமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

368—

சாலை வசதி

வினா எண் 1499—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, நந்தமேடு செலையன் கொட்டாய் வினாயகர் கோவில்—சுப்பராயன் கொட்டாய் வரை புதிய சாலை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, நந்தமேடு செலையன் கொட்டாய் வினாயகர் கோவில்—சுப்பராயன் கொட்டாய் வரை புதிய சாலை அமைக்க அச்சாலையில் தனியார் பட்டா பூமி உள்ளதால் அந்நிலம் அரசிடம் வழங்கப்பட்டால் தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

369—

சாலை புதுப்பித்தல்

வினா எண் 1500—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, நந்தமேடு கொண்டையன் கொட்டாயில் பழுதடைந்துள்ள சாலையைப் புதுப்பித்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, நந்தமேடு கொண்டையன் கொட்டாயில் பழுதடைந்துள்ள சாலையை சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தால் இச்சாலையினை மேம்பாடு செய்ய நடவடிக்கைக் மேற்கொள்ளப்படும்.

[2011 பிப்ரவரி 10

370—

தார்ச் சாலை வசதி

வினா எண் 1501—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, நந்தமேடு ஆதி திராவிடர் காலனி, மெட்டல் சாலையை புதிய தார்ச் சாலையாக அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, நந்தமேடு ஆதி திராவிடர் காலனி, மெட்டல் சாலை 2007-2008 ஆம் ஆண்டில் எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தில் ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது.

371—

தார்ச் சாலை வசதி

வினா எண் 1512—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, வேட்டுவனூர்—சின்னதாண்டாம்பாளையம் வரை, வெள்ளக்காட்டூர் ஊராட்சி அலுவலகம் வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, வேட்டுவனூர்-சின்னதாண்டாம்பாளையம் வரை, வெள்ளக்காட்டூர் ஊராட்சி அலுவலகம் வரை தார்ச் சாலை இந்த நிதியாண்டில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

372—

தார்ச் சாலை வசதி

வினா எண் 1515—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, முகாசிபுதூர் ஊராட்சி, செட்டைபாறை—குருவரெட்டியூர் சாலையிலிருந்து நாகனூர் வரை தார்ச் சாலை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, முகாசிபுதூர் ஊராட்சி, செட்டைபாறை-குருவரெட்டியூர் சாலையிலிருந்து நாகனூர் வரை தார்ச் சாலை அமைக்க ரூ.10.50 இலட்சம் தேவைப்படும். நிதி வசதியின்மையால் தற்போது இப்பணியை செய்ய இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

373—

தார்ச் சாலை வசதி

வினா எண் 1517—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, கேசரிமங்கலம் கிராமத்தில், குப்பிச்சிபாளையம், கண்ணாங்காடு, இராமகவுண்டபுதூரில் தார்ச் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, கேசரிமங்கலம் ஊராட்சி, குப்பிச்சிபாளையம், கண்ணாங்காடு, இராமகவுண்டபுதூரில் தார்ச் சாலை அமைத்துத் தர தற்போது போதிய நிதி வசதி இல்லை.

374—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1532—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, பொட்டியபுரம் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது, எவ்வளவு மதிப்பீட்டில் அமைக்கப்படும்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பொட்டியபுரம் ஊராட்சி, பொட்டியபுரம் ஆதி திராவிடர் காலனி (எ) பொட்டியபுரம் எச் குடியிருப்பில் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 9/2006-ல் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

375—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1533—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, தும்பிப்பாடி ஊராட்சி, பெரியநாயக்கனூர் பகுதியில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், தும்பிப் பாடி ஊராட்சியிலுள்ள பெரியநாயக்கனூர் குடியிருப்புக்கு தற்சமயம் பெரியநாயக்கனூர் பகுதியிலுள்ள முள்ளிசெட்டிபட்டி அருந்ததியர் காலனி குடியிருப்பிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அத்தியாவசிய தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் குடிநீர் வழங்க 2007-2008-ல் திட்டம் செயல்படுத்தப்படும்.

[2011 பிப்ரவரி 10

376—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1534—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, நடுப்பட்டி ஊராட்சி, கொல்லத் தெரு, அருந்ததியர் தெரு ஆகிய பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது, எவ்வளவு மதிப்பீட்டில் அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சியில் உள்ள கொல்லத் தெரு என்கிற கொல்லர் தெரு குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (2006-2007-ல்) கூடுதலாக ஒரு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலும் அருந்ததியர் தெரு என்கிற காக்காயன் தெரு (நடுப்பட்டி ஏ.ஆர். காலனி) குடியிருப்பில் 2003-ம் ஆண்டு காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதாலும் அப்பகுதிகளுக்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை

377—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1535—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, நாரணம்பாளையம் ஊராட்சியில், பெருமாள் கோவில் வட்டம், எழுப்பாகவுண்டர் வட்டம், மோளாண்டிப்பட்டி பகுதி ஆகிய பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது, எவ்வளவு மதிப்பீட்டில் அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், நாரணம்பாளையம் ஊராட்சியில், பெருமாள் கோவில் வட்டம் என்பது கரடியான்குட்டை பிரதான குடியிருப்பின் பகுதியாகும். இக்குடியிருப்பில் 2003-ம் ஆண்டு அமைக்கப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பெருமாள் கோவில் வட்டப் பகுதிக்கும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

எழுப்பாகவுண்டர் வட்டம் என்ற பகுதி மறு ஆய்வில் இடம்பெறாத 6 வீடுகளே உள்ள பகுதியாகும். ஊரகக் குடிநீர் திட்ட விதிகளின்படி, இப்பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மேனாண்டிப்பட்டி என்ற மோளாண்டிப்பட்டி-எச் குடியிருப்பில் 1983-ம் ஆண்டு அமைக்கப்பட்ட 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம், டால்மியா கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. இக்குடியிருப்பிற்கு வரும் நிதியாண்டில் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க பரிசீலிக்கப்படும்.

378—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1536—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பிள்ளைகுட்டை ஊராட்சியில் பவானூர், செல்லப்பிள்ளைகுட்டை பிள்ளையார் கோவில் வட்டம், பாகல்பட்டிமேட்டு பகுதி வட்டம், அங்காளம்மன் நகர், கோனவயல் காட்டுப் பகுதி வட்டம் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பிள்ளைகுட்டை ஊராட்சியில் பவானூர், செல்லப்பிள்ளைகுட்டை பிள்ளையார் கோவில் வட்டம், பாகல்பட்டிமேட்டு பகுதி வட்டம், அங்காளம்மன் நகர் ஆகிய குடியிருப்புகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதாலும், அக்குடியிருப்புகளில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

379—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1537—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, கமலாபுரம் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி, சேவிக்காடு மற்றும் ஆண்டிக்காடு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது, எவ்வளவு மதிப்பீட்டில் அமைக்கப்படும்?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, கமலாபுரம் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி (எ) கமலாபுரம் ஏ.ஆர். காலனி குடியிருப்புக்கு 2006-2007-ல் 10,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. சேவிக்காடு குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், தனியே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஆண்டிக்காடு என்ற ஆண்டிவட்டம் குடியிருப்பின் மக்கள்தொகை 100 ஆகும். இப்பகுதி மக்கள் கையிறைப்பான் மற்றும் சிறு மின்விசைத் திட்டத்தின் மூலம் போதுமான அளவு (40 எல்பிசிடி) குடிநீர் பெற்று வருகிறார்கள். மேலும், மக்கள்தொகை அடிப்படையில் ஊரக குடிநீர்த் திட்ட விதிமுறைகளின்படி தனியே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

380—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கட்டட வசதி

வினா எண் 1540—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், புளியம்பட்டி NH 7 சாலையை ஒட்டி, புதிய வணிக வளாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது, எவ்வளவு மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், புளியம்பட்டி NH 7 சாலையை ஒட்டி புதிய வணிக வளாகக் கட்டடம் கட்ட, ஊராட்சிக்கு சொந்தமான போதிய இட வசதி இல்லை.

மேலும், இவ்வூராட்சிக்கு வணிக வளாகம் கட்டும் அளவிற்கு போதுமான அளவு நிதி ஆதாரம் இல்லை.

381—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1541—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, சிக்கனப்பட்டி ஊராட்சி, வீரன்காட்டுவளவு பகுதி, காட்டூர் பகுதி, குள்ளுக்காட்டு வளவு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது, எவ்வளவு மதிப்பீட்டில் செய்து கொடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, சிக்கனப்பட்டி ஊராட்சி, வீரன்காட்டுவளவு (என்கிற) குள்ளவீரன் காட்டுவளவு குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் செயலாக்கப்பட்டு பயனில் உள்ளதால், புதிய மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

காட்டூர் மற்றும் குள்ளுக்காட்டு வளவு பகுதிகள் சிக்கனப்பட்டி பிரதான குடியிருப்பின் பகுதிகளாகும். சிக்கனப்பட்டி குடியிருப்பிலுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தனித்தனியாக இப்பகுதிகளுக்கு குழாய் நீட்டிப்பு செய்யப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதி குடியிருப்புகளுக்கு ஊரக குடிநீர் திட்ட விதிகளின்படி தனியாக மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

382—

குடிநீராக்கும் திட்டம்

வினா எண் 1548—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்தை துரிதமாக நிறைவேற்ற அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் குடிநீர்த் தேவையினை ஈடு செய்ய சொந்தமாக வடிவமைத்து, கட்டி, சொந்தமாக்கி, இயக்கி, மாற்றுதல் (DROOT) அடிப்படையில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் சென்னைக்கு அருகிலுள்ள மீஞ்சூரில் அமைக்க ஏற்கெனவே எடுக்கப்பட்ட நடவடிக்கையை தொடரலாம் என்று அரசு கருதுகிறது. எனவே, இதற்கென முன்பு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விதிமுறைகளையும், வரைமுறைகளையும் அரசுக்கும், வாரியத்திற்கும் சாதகமாக மேம்படுத்தும் பொருட்டு ஒப்பந்ததாரர் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்த சென்னைக் குடிநீர் வாரியத்தால் பேச்சுவார்த்தை குழு அமைக்கப்பட்டு அக்குழுவினரால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

[2011 பிப்ரவரி 10

2. மேலும், 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றொரு நிலையத்தினை மத்திய அரசின் முழு மானியத்துடன் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

383—

தண்ணீர் வசதி

வினா எண் 1564—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, ஆதி திராவிடர்—காலனிக்கு புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்ய அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, ஆதி திராவிடர் காலனிக்கு மேல்நிலைத் தொட்டி மூலம் தினமும் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

384—

குடிநீர் வசதி

வினா எண் 1565—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, நத்தமேடு செழியன் கொட்டாய் பகுதி, செம்படாபாளையம் ஆகிய இடங்களில் மக்களுக்கு குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றம்
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, நத்தமேட்டில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மூலமும், நத்தமேடு விநாயகர் கோவில் அருகில் ஒரு சிறு மின்விசை பம்பு மூலமும் மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

385—

ஊராட்சி ஒன்றியம்

வினா எண் 1576—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி ஊராட்சியினை இரண்டாகப் பிரித்து அஞ்செட்டியை மையமாகக் கொண்ட புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) தளி ஊராட்சியினை இரண்டாகப் பிரித்து அஞ்செட்டியை மையமாகக் கொண்ட புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

386—

ஆழ்துளைக் கிணறு

வினா எண் 1583—திரு. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, சக்கர செட்டிபட்டி ஊராட்சி, நாலுக்கால்பாலம் கோபிநாதபுரம், வெள்ளேரிகாடு, நாய்க்கடிச்சான்பட்டி ஆகிய பகுதிகளில் ஆழ்துளைக் கிணறு கைபம்பு அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஓமலூர் ஒன்றியம், சக்கரசெட்டிப்பட்டி ஊராட்சி, நாலுக்கால்பாலம், கோபிநாதபுரம், வெள்ளேரிகாடு, நாய்க்கடிச்சான்பட்டி ஆகிய பகுதிகளில் தேவையான அளவு குடிநீர் சீராக விநியோகம் செய்யப்படுவதால், ஆழ்துளைக் கிணறு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

387—

தார்ச் சாலை வசதி

வினா எண் 1592—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், வேப்பிலை ஊராட்சியில் பாமலை காட்டுவளவு, வால்காடு கோரக்குட்டை, வீரியான்தண்டா முதல் சவுல்பட்டி கொட்டாய் வரை, கரடிகுண்டு சாலை, எருமாபாலை செல்லும் சாலைகள் மற்றும் கொங்குப்பட்டி-தாச்சனூர் வரை தார்ச் சாலையாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், வேப்பிலை ஊராட்சியில் பாமலை

2011 பிப்ரவரி 10]

காட்டுவளவு, வால்காடு கோரக்குட்டை, வீரியான்தண்டா முதல் சவுல்பட்டி கொட்டாய் வரை, கரடிகுண்டு சாலை, எருமாபாலை செல்லும் சாலைகள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களின்கீழ் தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். கொங்குப்பட்டி முதல் தாச்சனூர் வரை உள்ள தார்ச் சாலை நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமானது ஆகும்.

388—

கட்டட வசதி

வினா எண் 1808—திரு. து. அமரமூர்த்தி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், கிழாசனை கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு கூடுதல் பள்ளி கட்டடமும் சுற்றுச் சுவரும் விரைவில் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருமானூர் ஊராட்சி ஒன்றியம், சின்னபட்டாக்காடு ஊராட்சி, கிழாசனை கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு தற்போது உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிதாக கட்டடம் ஏதும் தேவை இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பள்ளிக்கூடம் ஊரின் வெளிப்புறத்தில் உள்ளது. பாதுகாப்பிற்கு சுற்றுச்சுவர் வரும் நிதியாண்டில் அரசு நிதி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி பெற்று செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

389—

சமுதாயக் கூடம்

வினா எண் 1607—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

முகையூர் தொகுதி, தேவரடியார் குப்பம் மற்றும் விளந்தை கிராமத்தில் சமுதாயக்கூடம் அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

முகையூர் தொகுதி, தேவரடியார் குப்பம் மற்றும் விளந்தை கிராமத்தில் முறையே 2008-2009 மற்றும் 2009-2010 ஆம் ஆண்டுகளில் சமுதாயக் கூடம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

390—

அடிப்படை வசதிகள்

வினா எண் 1636—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை நகராட்சியிலுள்ள பள்ளிகளுக்கு கழிப்பிடம், குடிநீர், இருக்கை போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வால்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள நகராட்சி, பொதுப் பணித் துறை, மின் வாரியம், ஆதி திராவிடர் நலத் துறைக்குச் சொந்தமான பள்ளிக் கட்டடங்களுக்கும் மற்றும் தனியார் தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான மானியம் பெறும் பள்ளிக் கட்டடங்களுக்கும் அடிப்படை வசதிகள் சம்பந்தப்பட்ட துறைகளால் செய்யப்பட்டு வருகிறது.

391—

சாலை பழுதுபார்த்தல்

வினா எண் 1638—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2011 பிப்ரவரி 10]

வால்பாறை தொகுதி, ஆழியார் நகர், கோட்டூர் சிறப்பு ஊராட்சியிலுள்ள நெல்லித்துளை மன்னம் சாலையை பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். சாலை பழுதுபார்க்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு விடப்பட்டுள்ளது.

392—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 1640—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் உடனடியாக நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் (UIDSSMT) சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்டவுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

393—

குப்பைகளை அகற்றுதல்

வினா எண் 1642—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, போத்தனூர் பகுதி, குறிச்சி நகராட்சி மற்றும் வெள்ளலூர் செல்லும் சாலைக்கு அருகில் மாநகராட்சி குப்பைகளை அகற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

போத்தனூர் பகுதி, குறிச்சி நகராட்சி மற்றும் வெள்ளலூர் செல்லும் சாலைக்கு அருகில் மாநகராட்சி குப்பைகளை உரமாக்குவதற்கும், அங்குள்ள குப்பைகளை விஞ்ஞானபூர்வமாக கையாளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

394—

குடிநீர்த் தொட்டி

வினா எண் 1643—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், இருசானூர் கூலிக்காரன்பாளையத்தில் குடிநீர்த் தொட்டி அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், இருசானூர் கூலிக்காரன்பாளையம் குடியிருப்புக்கு, காவிரி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு ஊராட்சிக் கோட்டை, தொட்டிபாளையம், வரதநல்லூர், சன்னியாசிப்பட்டி ஊராட்சிகள் மற்றும் 54 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், இக்குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

395—

பழுதுபார்த்தல்

வினா எண் 1644—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாட்சி ஊராட்சி, நத்தமேட்டில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுதுபார்த்து 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்டதாக அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாட்சி ஊராட்சி, நத்தமேடு குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நன்றாகவே உள்ளது. இது இப்பகுதியின் மக்கள் தொகையான 405 பேருக்கு போதுமானது. மேலும், இங்கு போதிய அளவு குடிநீர் விநியோகம் செய்யப்படுவதால் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அவசியம் இல்லை.

396—

தண்ணீர் வசதி

வினா எண் 1645—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, அட்டவணைப்புதூர் ஊராட்சி, அட்டவணைப்புதூர், ஏ.டி. காலனி, கஸ்பா, கோணமூக்கனூர் காலனி, சமயதாரனூர், பனங்காடு ஆகிய ஊர்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஆற்றுநீரை ஏற்றி தண்ணீர் பற்றாக்குறையைத் தீர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, அட்டவணைப்புதூர் ஊராட்சி, அட்டவணைப்புதூர் ஆதி திராவிடர் காலனி, அட்டவணைப்புதூர் கஸ்பா, கோணமூக்கனூர் காலனி, சமயதாரனூர் ஆகிய ஊர்களுக்கு காவிரி ஆற்று நீரை (கேசரிமங்கலம் அருகில்) நீராதாரமாகக் கொண்டு 1991 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு, தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பிலுள்ள காட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அட்டவணைப்புதூரில் அமைக்கப்பட்டுள்ள 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு, கோணமூக்கனூரில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு மற்றும் சமயதானூரில் அமைக்கப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஏற்கெனவே ஆற்றுநீர் ஏற்றப்பட்டு பகிர்மானக் குழாய்கள் மூலம் போதுமான குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. பனங்காடு குடியிருப்பில் தனி மின்விசைத் திட்டம் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே ஆற்றுநீர் வழங்கும் கருத்துரு பரிசிலனையில் இல்லை.

397—

மின் கம்ப வசதி

வினா எண் 1647—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, வார்டு எண் 3-ல் குடிநீர் குழாய் மற்றும் மின் கம்பம் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பவானி நகராட்சி, வார்டு எண் 3-ல் 5 பாதுகாக்கப்பட்ட பொதுக் குடிநீர்

2011 பிப்ரவரி 10]

குழாய்களும், 3 ஆழ்துளைக் கிணறு கைப்பம்புகளும் மற்றும் 236 வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகளும் உள்ளன. மேலும் தெருவிளக்குகளைப் பொறுத்த வரையில், அங்குள்ள 9 தெருக்களில் 49 குழல் விளக்குகளும், சோடியம் ஆவி விளக்கு ஒன்றும் உள்ளது.

398—

தார்ச் சாலை வசதி

வினா எண் **1648—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, கிழக்குகாடு கிராமத்தில் காட்டு மாரியம்மன் கோவில் பகுதியில் மேல்நிலை தொட்டி மற்றும் தார்ச சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பவானி தொகுதி, அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், கிழக்குகாடு பகுதியில் நமது கிராமம் திட்டத்தில் 2006-07-ல் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு சின்டெக்ஸ் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மக்கள் தொகை மிகக் குறைவாக உள்ளதால் மேல்நிலைத் தொட்டி அமைக்க தேவையில்லை.

399—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் **1650—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஓடத்துறை பட்டையகாளிபாளையம், ரங்கன்காட்டூர் பகுதியில் 60,000 லிட்டர்

[2011 பிப்ரவரி 10

கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஓடத்துறை, பட்டையகாளிபாளையம், ரங்கன்காட்டூர் பகுதியில் உள்ள தரைமட்ட தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க இயலாது.

400—

நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1651—திரு. கே.வி. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, பாட்டப்பன் கோவிலில் 20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, பாட்டப்பன் கோவில் குடியிருப்புக்கு காவிரி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு அந்தியூர் மற்றும் அம்மாபேட்டை ஒன்றியங்களுக்குட்பட்ட 190 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து 2005-06-ம் ஆண்டு சுவஜல்தாரா குடிநீர் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட 60,000 லிட்டர் மேல்நிலை

2011 பிப்ரவரி 10]

நீர்த்தேக்கத் தொட்டியின் மூலமும் தனி மின்விசைத் திட்டங்கள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே அக்குடியிருப்புக்கு புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கத் தேவை இல்லை.

401—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1652—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, மூகாசிபுதூர், கஸ்பா பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, முகாசிபுதூர் கஸ்பா பகுதி குடியிருப்புக்கு காட்டூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் அட்டவணைப் புதூரில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் அப்பகுதிக்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க இயலாது.

402—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1653—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, தொட்டிப்பாளையம் ஊராட்சி, சேர்வராயன்பாளையம், காந்தி நகரில் 30,000 லிட்டர்

கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, தொட்டிப்பாளையம் ஊராட்சி, காந்தி நகர் குடியிருப்பிற்கு காவிரி ஆற்றுநீரை ஆதாரமாகக் கொண்டு 2003-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் ஊராட்சிக்கோட்டை, தொட்டிப்பாளையம், வரதநல்லூர், சன்னியாசிப்பட்டி ஊராட்சிகள் மற்றும் 54 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் சேர்வராயன்பாளையம் குடியிருப்பில், காந்தி நகரின் மக்கள் தொகையையும் கணக்கில் கொண்டு ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து, குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, இக்குடியிருப்பிற்கு தனியாக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

403—

குடிநீர் வசதி

வினா எண் 1655—திரு. கே.வி. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பெரியபுலியூர் ஊராட்சி, வளையக்காரபாளையம் சாலையிலுள்ள ஆழ்குழாய் கிணற்றில் மின்மோட்டார் பொருத்தி, காமராஜ் நகர், வளையக்காரன்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றி குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பெரிய புலியூர் ஊராட்சி, காமராஜ் நகர் மற்றும் வளையக்காரன்பாளையம் குடியிருப்புகளுக்கான வளையக்காரன்பாளையம் சாலையிலுள்ள ஆழ்துளைக் கிணற்றில் உள்ளாட்சி நிர்வாகத்தின் மூலம் மின்மோட்டார் பொருத்தப்பட்டு மின் இணைப்பு பெறப்பட்டு, திட்டம் தற்போது மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

404—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1656—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பருவாச்சி ஊராட்சி, பொரக்காட்டூர் பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம் பவானி ஒன்றியம், பருவாச்சி ஊராட்சி, பொரக்காட்டூர் குடியிருப்புக்கு தற்போதுள்ள திட்டங்கள் மூலம் அத்தியாவசியத் தேவைக்குப் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பின் மக்கள் தொகைக்கேற்ப போதுமான கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. ஆகவே புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர தேவை தற்போது எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

405—

நீரேற்று குழாய் வசதி

வினா எண் 1657—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, புன்னம் ஊராட்சி, ஒலகடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் நாராபாளையம் நீரேற்று நிலையத்திலிருந்து நல்லாநாயக்கனூர், வேலமரத்தூர் வரை புதிய நீரேற்றுக் குழாய் பதித்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம் புன்னம் ஊராட்சி ஒலகடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், நல்லாநாயக்கனூரில் தரை மட்ட தொட்டி அமைத்து, நீரேற்றிகள் மூலம் புதிதாக அமைக்கப்பட்ட 10,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீரேற்றி நல்லாநாயக்கனூர் வேலமரத்தூர், பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், புதிய நீரேற்று குழாய் பதித்து குடிநீர் வழங்க அவசியம் எழவில்லை.

406—

குடிநீர் வசதி

வினா எண் 1658—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, புன்னம் ஊராட்சி, காக்காச்சிகாடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தனியாக குடிநீர் குழாய் அமைத்து புது பெருமாபாளையத்தில் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி புதுபெருமாபாளையத்திற்கு பருவாச்சி காட்டூர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் காக்காச்சிகாடு மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தனியாக குடிநீர் குழாய் அமைக்கும் அவசியம் எழவில்லை.

407—

குடிநீர் வசதி

வினா எண் 1659—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, வரதநல்லூர் ஊராட்சி, ஏமம்பாளையம் சாலையிலுள்ள ஆழ்குழாய் கிணற்றில் 7.5 HP நீர்மூழ்கி மின்மோட்டார் மூலம் வெங்கல்மேடு மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றி குடிநீர் பற்றாக்குறையை நீக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவரி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு பயனில் உள்ள ஊராட்சிக் கோட்டை, தொட்டிபாளையம் வரதநல்லூர், சன்னியாசிப்பட்டி மற்றும் 54 வழியோர கிராமங்களின் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் வெங்கல்மேடு குடியிருப்பிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், ஏமம்பாளையம் சாலையில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

408—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1660—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, செம்புளிச்சம்பாளையம் காலனிக்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, செம்புளிச்சம்பாளையம் காலனிக்கு காவிரி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு பயனில் உள்ள அந்தியூர் மற்றும் அம்மாபேட்டை கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதாலும், ஏற்கெனவே உள்ள 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி போதுமானதாக உள்ளதாலும் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

409—

சீரமைத்தல்

வினா எண் 1661—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஊராட்சிக்கோட்டையில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, தொட்டிப்பாளையம் ஊராட்சி, ஊராட்சிக்கோட்டை குடியிருப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் உள்ள பழுதுகளை புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

410—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1662—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குருப்பன்நாயக்கன்பாளையம் ஊராட்சி, காமராஜர் நகர் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பவானி ஒன்றியம், குருப்பன்நாயக்கன்பாளையம் ஊராட்சி, காமராஜர் நகர் குடியிருப்பிற்கென ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் (2006-2007) முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர இலக்கிடப்பட்டுள்ளது.

411—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1663—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஆண்டிக்குளம் செங்காடு குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், ஆண்டிக்குளம் ஊராட்சி, செங்காடு குடியிருப்புக்கு மாவட்ட நிர்வாகத்தின்மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு 15-12-2006 முதல் மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

412—

மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

வினா எண் 1664—திரு. கே.வி. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, இராமகவுண்டனூரில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, இராமகவுண்டனூரில் சிறு மின் இறைப்பான் திட்டத்தின் மூலமும் காவிரி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு பயனில் உள்ள அந்தியூர் மற்றும் அம்மாபேட்டை ஒன்றியங்களுக்குட்பட்ட 190 குடியிருப்புகளுக்கான

2011 பிப்ரவரி 10]

கூட்டுக் குடிநீர் திட்டம் மூலமும் 2,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்டத் தொட்டி வழியாக போதிய அளவு குடிநீர் விநியோகம் செய்யப்படுவதால், அங்கு புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

413—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 1665—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி வெள்ளக்காட்டூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, வெள்ளக்காட்டூருக்கு காவிரி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு அந்தியூர் மற்றும் அம்மாபேட்டை ஒன்றியங்களுக்குட்பட்ட 190 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியின் மூலமும் தனி மின்விசைத் திட்டம் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, மேலும் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அவசியம் இல்லை.

414—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1666—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஓட்டப்பாளையம் ஊராட்சி, குந்துபாயூரில் புதிதாக கட்டியுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஆற்று நீர் ஏற்றி குடிநீர் வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஓட்டப்பாளையம் ஊராட்சி, குந்துபாயூரில் புதிதாக கட்டியுள்ள மேல்நிலைத் தொட்டியில் காவிரி ஆற்று நீர் ஏற்றி 1-08-2006 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

415—

மயான வசதி

வினா எண் 1667A—திரு. கே.வி. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குறிச்சி ஊராட்சி, செம்படாபாளையத்தில் மயான வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குறிச்சி ஊராட்சி, செம்படாபாளையத்தில் மயான வசதி ஏற்கெனவே செய்து தரப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

416—

தொகுப்பு விடுகள்

வினா எண் 1672—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, மைலம்பாடி ஊராட்சி, கண்ணடிபாளையம் காலனிக்கு புதிய தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கண்ணடிபாளையம் ஆதி திராவிடர் காலனியில் 2006-2007 வரை 27 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

417—

குடிநீர் வசதி

வினா எண் 1690—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணையிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் கீழ்பென்னாத்தூருக்கு குடிநீர் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சாத்தனூர் அணையிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் கீழ்பென்னாத்தூருக்கு குடிநீர் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

418—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1699—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாம்பரம் ஊராட்சி, கள்ளிக்காட்டான்வளவு, ஆராயிக்காடு, கோல்காரான்காடு பகுதியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், இருப்பாளி ஊராட்சியிலுள்ள ஆராயிக்காடு என்கிற ஆராயிக்காட்டுவளவு குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளதால், தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் ஊராட்சியைச் சார்ந்த கள்ளிக்காட்டான்வளவு மற்றும் கோல்காரான்காடு ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கும் வரும் நிதியாண்டுகளில் தேவை, தகுதி மற்றும் நிதி ஆதார அடிப்படையில் புதிய திட்டம் செயலாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

419—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1700—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், வெள்ளரிவெள்ளி ஊராட்சி, சென்றாயன் காட்டுவளவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஒன்றியம், வெள்ளரிவெள்ளி ஊராட்சி, சென்றாயன் காட்டுவளவு, செங்காய்கொட்டாய், பறையன்காடு என்ற ஒரு புதிய குடியிருப்புக்கு வரும் நிதியாண்டில் (2007-2008) திட்டம் செயலாக்க ஏதுவாக நீராதாரம் உருவாக்கும் பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

420—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1701—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அ.புதூர் ஊராட்சி, இச்சுகாயன்வளவு, கோயில்காடு, பாப்பான்காடு பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகுடஞ்சாவடி ஒன்றியம், அ.புதூர் ஊராட்சியைச் சார்ந்த இச்சகாயன்வளவு, கோயில்காடு, பாப்பான்காடு பகுதிகள் அடங்கிய பாப்பான்காடு கோயில் காடு என்ற புதிய குடியிருப்புக்கு வரும் நிதியாண்டில் (2007-2008) திட்டம்

செயலாக்க ஏதுவாக தற்போது நீராதாரம் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

421—

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

வினா எண் 1702—திரு. வை. காவேரி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இருப்பாளி ஊராட்சியில் காட்டுப்பாளையம், மாணிக்கம்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஒன்றியம், இருப்பாளி ஊராட்சியிலுள்ள காட்டுப்பாளையம் குடியிருப்பிலுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து இருப்பாளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் போதுமான அளவு காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருவதாலும் இக்குடியிருப்புக்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை. மாணிக்கம்பட்டி குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (2006-2007) 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படவுள்ளது.

422—

கட்டுமானப் பணிகள்

வினா எண் 1703—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2011 பிப்ரவரி 10]

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நகராட்சி சின்ன ஏரியில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையக் கட்டுமானப் பணியை உடனடியாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி நகராட்சி, சின்ன ஏரியில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலைய கட்டுமானப் பணி மே மாதம் 2007-க்குள் நிறைவு பெறும்.

423—

பாதாளச் சாக்கடை வசதி

வினா எண் 1704—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நகராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு ரூ.18.24 கோடியில் தயாரிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நிதியுதவியுடன் இத்திட்டத்தினை செயல்படுத்த நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

424—

பழுதுபார்த்தல்

வினா எண் 1706—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

வால்பாறை தொகுதியிலுள்ள கிராமச் சாலைகளை பழுதுபார்த்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வால்பாறை தொகுதியிலுள்ள கிராமச் சாலைகளை பழுதுபார்த்துத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

425—

பழுதுபார்த்தல்

வினா எண் 1707—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் பெருமாள் கோவில் சாலையினை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் பெருமாள் கோவில் சாலையினை ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பழுதுபார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

426—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 1763—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) வால்பாறை தொகுதியில், தென்சித்தூர், ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், காளியாபுரம், வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் ஆகிய ஊராட்சிகளுக்கு இந்த ஆண்டில் கூடுதலாக தொகுப்பு வீடுகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தென்சித்தூர், ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், காளியாபுரம் ஆகிய ஊராட்சிகளில் 2007-08-ம் ஆண்டு 46 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. 2008-09-ம் ஆண்டிற்கு 21 வீடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் ஆகிய இரு பகுதிகளும் பேரூராட்சியைச் சேர்ந்தவை. எனவே, இவ்விடங்களில் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடு கட்ட வாய்ப்பில்லை.

427—

தெரு விளக்கு வசதி

வினா எண் 1806—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோமந்துறை, தென்சித்தூர், ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், காளியாபுரம், கோட்டூர், வேட்டைக்காரன்புதூர் ஆகிய ஊராட்சிகளுக்கு தெருவிளக்குகள் அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்காண் கிராம ஊராட்சிகளில் போதிய அளவு தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை உபயோகத்தில் உள்ளன.

428—

குடிநீர் வசதி

வினா எண் 1822—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, அணைமேடு, 1-வது வார்டில் சிறுவாணி குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சி நகராட்சிக்கு சிறுவாணி குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு அணைமேடு, 1-வது வார்டு பகுதிக்கு நகராட்சியினால் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

429—

குடிநீர் வசதி

வினா எண் 1847—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, போத்தனூர், மீன்கடை சந்து, நஞ்சுண்டாபுரம் சாலை பகுதியில் சிறுவாணி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, போத்தனூர், மீன் கடை சந்து, நஞ்சுண்டாபுரம் சாலை பகுதிகளுக்கு, குறிச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதி 2 (மேட்டூர்) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு சிறுவாணி குடிநீர் ஏற்றப்பட்டு அதிலிருந்து நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் நகராட்சிமூலம் வழங்கப்பட்டு வருகிறது.

430—

குடிநீர் வசதி

வினா எண் 1918—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை ஊராட்சி ஒன்றியம், உடுக்கம்பாளையம் கிராமம், முக்கோணம் கிராமம், அந்தியூர் ஊராட்சி ஆகிய இடங்களில் குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூலாங்கிணறு கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் முக்கோணம், அந்தியூர் ஆகிய கிராம மக்களுக்கு தற்போது குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. உடுக்கம்பாளையம் கிராமத்தில் மின்பம்புகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

431—

குடிநீர் வசதி

வினா எண் 1921—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2011 பிப்ரவரி 10

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கணக்கம்பாளையம் ஊராட்சி, கமல் ஸ்பின்னர்ஸ் பகுதி, போடிப்பட்டி ஊராட்சி, காமராஜ்நகர் பகுதி, பெரியகோட்டை ஊராட்சி, கலைஞர் நகர் பகுதி ஆகிய இடங்களில் குடிநீர்க் குழாய் புதியதாக அமைத்து குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்கெனவே குடிநீர் வசதி ஓரளவு செய்யப்பட்டிருந்தாலும்கூட கமல் ஸ்பின்னர்ஸ் பகுதி, காமராஜ் நகர் கலைஞர் நகர் பகுதிகள் ஊரைவிட்டு தள்ளியுள்ள குறைந்த மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகள் ஆதலால் நடப்பாண்டில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து மினிபவர் பம்பு மூலம் குடிநீர்வசதி கூடுதலாக செய்து தரப்படும்.

432—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 1933—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், கல்லாபுரம்—கரட்டுபதி பகுதியில் குடியிருப்பவர்களுக்கும், உடுக்கம்பாளையம் கிராம நெசவாளர்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கல்லாபுரம் பகுதியில் உள்ள செட்டில்மெண்ட் பகுதியாகும். இங்கு மலைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்களுக்கு நிலப் பட்டா ஏதும் வழங்கப்படவில்லை. எனவே, வருவாய்த்

2011 பிப்ரவரி 10]

துறை மூலம் இலவச நிலப் பட்டா வழங்கி வனத் துறை அனுமதியுடன் தொகுப்பு வீடுகள் 2008-09-ம் ஆண்டில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உடுக்கம்பாளையம் கிராமத்தில் நெசவாளர்களுக்கு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் இதுவரை மொத்தம் 22 தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

433—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 1948—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, நாச்சிபாளையம் ஊராட்சி, பாலத்துறை ஊராட்சி, பிச்சனூர் ஊராட்சி, மாவுத்தம்பதி ஊராட்சி, சீரபாளையம் ஊராட்சி ஆகிய இடங்களிலுள்ள பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, பாலத்துறையில், எஸ்.ஜி.ஆர்.ஓய் திட்டத்தில் 2007-2008 ஆம் ஆண்டில் 3 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் 2007-2008-ஆம் ஆண்டில் நாச்சிபாளையம், பாலத்துறை, பிச்சனூர், மாவுத்தம்பதி, சீரபாளையம் ஆகிய ஊராட்சிகளில் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர்களுக்கும் சேர்த்து 63 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. 2008-2009 ஆம் ஆண்டிற்கு இவ்வட்டாரத்தில் 9 ஊராட்சிகளுக்கு சேர்த்து 38 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் பாலத்துறை ஊராட்சிக்கு 3 வீடுகளும் நாச்சிபாளையம் ஊராட்சிக்கு 3 வீடுகளும் பிச்சனூர் ஊராட்சிக்கு 16 வீடுகளும், மாவுத்தம்பதி ஊராட்சிக்கு 10 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

[2011 பிப்ரவரி 10

434—

தொகுப்பு விடுகள்

வினா எண் 1953—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, அரிசிபாளையம், வழுக்குப்பாறை, மலுமச்சப்பட்டி, மயிலேரிபாளையம் ஆகிய ஊராட்சிகளில் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, மலுமச்சம்பட்டியில் எஸ்.ஜி.ஆர்.ஓய். திட்டத்தில் 2007-2008 ஆம் ஆண்டிற்கு 3 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் அரிசிபாளையம், வழுக்குப்பாறை, மலுமச்சப்பட்டி, மயிலேரிபாளையம் ஆகிய ஊராட்சிகளில் 2007-2008 ஆம் ஆண்டு பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோருக்கும் சேர்த்து 68 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 2008-09 ஆம் ஆண்டிற்கு இவ்வட்டாரத்தில் 9 ஊராட்சிகளுக்கு சேர்த்து 38 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

435—

எத்தனால் தயாரிப்பு

வினா எண் 1973—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் தயாரிப்புப் பணிகள் இந்த ஆண்டிற்குள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில் உள்ள செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து (NCDC) கடன் ஒப்புதல் பெற்று எரிசாராயத்துடன் கூடிய எத்தனால் ஆலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

436—

குடிநீர் வசதி

வினா எண் 2039—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சி, பழனியாண்டவர் நகர், அண்ணா காலனி பகுதியில் குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயமுத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி, வார்டு 22 பழனியாண்டவர் நகர், அண்ணா காலனி பகுதியில் ஏற்கெனவே உள்ள 3 பொதுக் குழாய்கள், 2 ஆழ்துளைக் கிணறுகள், மற்றும் 160 வீட்டுக் குடிநீர்க் குழாய் இணைப்புகள் ஆகியவற்றின் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

437—

பாலம் அமைத்தல்

வினா எண் 2043—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சி, வார்டு 28-ல் தங்கம்மாள் ஓடையில் சிறுபாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு உட்பட்ட தங்கம்மாள் ஓடை பகுதியில் தற்போது சிறு பாலங்கள் அமைக்கும் பணி முடிவுற்று பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

438—

குடிநீர் வசதி

வினா எண் **2044**—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சி, வாசுகி நகர் பகுதியில் குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சிப் பகுதியில் உள்ள வாசுகி நகருக்கு திருமூர்த்தி அணையிலிருந்தும் மற்றும் பாலாற்றிலிருந்தும் கிடைக்கப்பெறும் குடிநீரினைக் கொண்டு ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 8 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 110 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

439—

குடிநீர் வசதி

வினா எண் 2050—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சி, பெரியார் நகர், சிந்தாமணி குடோன் அருகில் குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி, வார்டு 8 பெரியார் நகர், சிந்தாமணி குடோன் பகுதிக்கு ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறு ஒன்று, பொதுக் குழாய்கள் 2, ஆகியவற்றின் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

440—

குடிநீர் வசதி

வினா எண் 2052—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை நகராட்சி, வேலன் நகர் 7-வது தெருவில் குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில் உள்ள 7-வது வார்டில் உள்ள வேலன் நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட வீட்டுக் குடிநீர் இணைப்புகளின்மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு இல்லை.

441—

குடிநீர் வசதி

வினா எண் 2053—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சி, U.S.S. காலனி மற்றும் பார்வதி கல்யாண மண்டபம் பகுதிகளில் குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில், 4-வது வார்டில் அமைந்துள்ள U.S.S. காலனி பகுதிக்கு, இரண்டாவது குடிநீர்த் திட்டத்தில், சிவசக்தி காலனியில் அமைக்கப்பட்ட 8.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து

2011 பிப்ரவரி 10]

போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பெரிய கோட்டை ஊராட்சி, 5-வது வார்டில் அமைந்துள்ள பார்வதி கல்யாண மண்டபம் பகுதிக்கு கணக்கம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் செல்லம் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இவ்விரு பகுதிகளுக்கும் புதியதாக குடிநீர் வசதி செய்து தரும் திட்டம் ஏதும் இல்லை.

442—

குடிநீர் வசதி

வினா எண் 2055—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சி, S.V.மில் காலனியில் குடிநீர் வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில் உள்ள S.V.மில் காலனி பகுதியில், புதியதாக கடந்த 2005-ம் ஆண்டில் பகிர்மான குழாய்கள் அமைத்து, குடிநீர் வசதி செய்யப்பட்டு, நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதி குடிநீர்த் தட்டுப்பாடு அற்றதாகும்.

443—

குடிநீர் வசதி

வினா எண் 2056—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சி, வார்டு 16, ஜின்னா சந்து, திரு.வி.க.சந்து ஆகிய பகுதிகளில் குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயமுத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில் உள்ள 16-வது வார்டு ஜின்னா சந்து, திரு.வி.க. சந்து ஆகிய பகுதிகள் அனைத்திலும் பகிர்மானக் குழாய்கள் அமைத்து குடிநீர் வசதி செய்யப்பட்டு, நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

444—

குடிநீர் வசதி

வினா எண் 2058—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சி, திருப்பூர் சாலை பகுதி மற்றும் 18-வது வார்டு நூர் சந்து பகுதியில் குடிநீர் வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில் உள்ள திருப்பூர் சாலை பகுதி மற்றும் 18-வது வார்டு நூர் சந்து பகுதியில் அனைத்து வீடுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் மற்றும் இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதி குடிநீர்த் தட்டுப்பாடு அற்றவை ஆகும்.

445—

பேருந்து நிலையம்

வினா எண் 2081—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொழுமத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொழுமத்தில் பேருந்து நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

446—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 2091—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், ஆண்டிக்குப்பம் கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரவும் மற்றும் பட்டிக்காடு காலனியில் தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்க்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆண்டிக்குப்பம் கிராமத்தை உள்ளடக்கிய குழிப்பாந்தன்டலம் ஊராட்சியில் 1997-98 ஆண்டு முதல் 2007-08 ஆம் ஆண்டு முடிய 53 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் 2008-09 ஆம் ஆண்டில் 14 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், பட்டிக்காடு ஊராட்சி காலனியில் *1991* ஆம் ஆண்டுக்கு முன்பு கட்டப்பட்ட வீடுகளில் *18* தொகுப்பு வீடுகளை அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ் *2005-2006*-ல் பழுது பார்த்து முடிக்கப்பட்டன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் *2005-2006*-ல் *5* வீடுகள் பழுதுபார்த்து முடிக்கப்பட்டுள்ளன.

447—

குடிநீர் வசதி

வினா எண் 2155—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, நாச்சிபாளையம், சீரபாளையம் மயிலேரிபாளையம், அரிசிபாளையம், மாவுத்தம்பி, பிச்சானூர், பாலத்துறை ஆகிய ஊராட்சிகளில் சீரான குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, நாச்சிபாளையம், சீரபாளையம், மயிலேரிபாளையம், அரிசிபாளையம், மாவுத்தம்பி, பிச்சானூர், பாலத்துறை ஆகிய ஊராட்சிகளில் பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

448—

பேருந்து நிலையம்

வினா எண் 2246—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். நடவடிக்கையில் உள்ளது.

449—

பேருந்து நிலையம்

வினா எண் 2264—திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, மறைமலை நகர் பகுதியில் பேருந்து நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மறைமலை நகர் நகராட்சிக்கு பேருந்து நிலையம் அமைப்பதற்கான இடம் ஒதுக்கீடு செய்வதற்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2011 பிப்ரவரி 10]

450—

இணைப்புச் சாலை

வினா எண் 2281—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள மேட்டுப்பாளையம் பாலம் முதல் நத்தம், நங்காளி இணைப்புச் சாலை (3 கி.மீ.) அமைக்கும் பணி விரைவில் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள மேட்டுப்பாளையம் பாலம் முதல் நத்தம், நங்காளி இணைப்புச் சாலை 3.575 கி.மீ. நீளம் உள்ளது. இச்சாலை பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களின் மூலம் ஜல்லி சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலையை நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப தார்ச் சாலையாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

451—

குடிநீர் இணைப்பு

வினா எண் 2287—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, பாரதி நகரில் சிறுவாணிக் குடிநீர் இணைப்பு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சி நகராட்சியில் உள்ள 5-வது வார்டு பாரதி நகரில் சிறுவாணிக் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு குடிநீர் சீரான முறையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

452—

பயிற்சி நிலையம்

வினா எண் 106191—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசியில் அர்ச்சகர்களுக்கு பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள இந்து திருக்கோயில்களில் இந்துக்களில் உரிய பயிற்சியும் தகுதிகளும் உள்ள அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கிட, நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளின்படி அரசாணை (நிலை), எண் 1, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 2-1-2007-ல் தொடர் நடவடிக்கை எடுத்திட அரசால் ஆணையிடப்பட்டது. இதனடிப்படையில் முதற்கட்டமாக மதுரை, பழனி, திருச்செந்தூர், திருவண்ணாமலை, சென்னை மற்றும் திருவரங்கம் ஆகிய ஆறு இடங்களில் அர்ச்சகர்களுக்கான பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன. எனவே, அரசாணையில் தெரிவிக்கப்பட்ட இடங்களைத் தவிர வேறு இடங்களில் அர்ச்சகர் பயிற்சி நிலையங்களைத் தொடங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

2011 பிப்ரவரி 10]

453—

மேம்படுத்துதல்

வினா எண் **107397**—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் .வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு, வல்லம் குடவரைக் கோயிலை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், வல்லம் அருள்மிகு வேதாந்தீஸ்வரர் மற்றும் கரிவரதராஜப் பெருமாள் திருக்கோயிலின் முன்மண்டபம் நன்கொடையாளர்கள்மூலம் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருவதால் திருக்கோயிலை மேம்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

454—

பணி நிரப்புதல்

வினா எண் **107575**—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் இந்து சமய கோயில்களில் காலியாகவுள்ள செயல் அலுவலர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

இந்து சமய அறநிலையத் துறையில் நிலை-1, 3 மற்றும் 4 ஆகிய செயல் அலுவலர் பணியிடங்களுக்கான உத்தேச காலியிட

மதிப்பீடு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. தேர்வாணையத்திலிருந்து மேற்படி பணியிடங்களுக்குத் தகுதி வாயந்த நபர்களைத் தெரிவு செய்து பட்டியல் அனுப்பப்பட்டவுடன், தமிழகத்தில் காலியாகவுள்ள செயல் அலுவலர் பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

455—

தங்கும் விடுதி

வினா எண் 107743—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு நவீன தங்கும் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்குவதற்கு உபயதாரர்மூலம் நான்கு குடில்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இத்தங்கும் விடுதிகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டில் இருந்து வருவதால் மேற்கொண்டு தங்கும் விடுதிகள் கட்ட் வேண்டிய அவசியம் எழவில்லை.

456—

சீரமைத்தல்

வினா எண் 107746—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலின் மண்டபங்கள், ராஜகோபுரங்கள் மற்றும் கற்சிற்பங்கள் ஆகியவற்றை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலின் குடமுழுக்கு கடந்த 1999ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது. தற்போது திருக்கோயிலில் உள்ள மண்டபங்கள், ராஜகோபுரங்கள் மற்றும் கற்சிற்பங்கள் ஆகிய அனைத்து பகுதிகளையும் புதுப்பித்து திருக்கோயில் குடமுழுக்கு விழாவினை எதிர்வரும் 2011-ம் ஆண்டு செய்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

457—

இராஜகோபுரம்

வினா எண் **107751—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு வட்டம், திருக்கச்சூர், அருள்மிகு தியாகராஜ சுவாமிகள் திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருக்கச்சூர், அருள்மிகு தியாகராஜ சுவாமிகள் மற்றும் மருந்தீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் நிலை-2 செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

[2011 பிப்ரவரி 10

தற்போது மேற்படி திருக்கோயிலுக்கு சுமார் 42.5 அடி உயரத்தில் புதிய மரத்தேர் செய்யும் பணி மேற்கொள்ளப்பட உள்ளதால், இத்திருத்தேர் திருப்பணி வேலைகள் முடிவடைந்தவுடன், இராஜகோபுரம் கட்டும் பணியினை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

458—

அரசு ஏற்று நடத்துதல்

வினா எண் 108445—திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை பெருமாள் கோயில் தெருவில் அமைந்துள்ள பெருமாள் கோயிலை அரசு ஏற்று நடத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, சைதாப்பேட்டை பெருமாள் கோயில் தெருவில் உள்ள அருள்மிகு பிரசன்ன வெங்கட நரசிம்ம சுவாமி திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறை ஏற்று நடத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

459—

கோயில் சொத்துக்களைப் பாதுகாத்தல்

வினா எண் 108570—திரு. ஜி. கே. மணி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில் சொத்துக்களைப் பாதுகாக்க மண்டல அளவில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை (I.A.S.) நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களின் நிர்வாகத்திற்கென, இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நிலையில் மாநில அளவில் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் தமிழ்நாடு அறக்கொடைகள் சட்டம் 22/1959-ன்படி பணியாற்றி வருகிறார். ஆணையர் அலுவலகத்தில் நிலங்கள் தொடர்பான பணிகளை கவனித்திட வருவாய்த் துறையிலிருந்து இரு மாவட்ட வருவாய் அலுவலர்கள் தனி அலுவலர் (ஆலய நிலங்கள்) என்ற பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். எனவே, தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சொத்துக்கள் பாதுகாப்பு செய்யப்பட்டு வருவதால் மண்டல அளவில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை (I.A.S.) நியமனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

460—

குடியிருப்புகள்

வினா எண் 108583—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக கோயில்களில் பணிபுரியும் ஊழியர்கள், அர்ச்சகர்களுக்கு அறநிலையத் துறைமூலம் குடியிருப்புகளைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள 38,465 திருக்கோயில்களில் அர்ச்சகர்கள் உட்பட பணியாளர்கள் சுமார் 60,000 வரை பணிபுரிகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் அறநிலையத் துறைமூலம் குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கான திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

[2011 பிப்ரவரி 10

461—

வரன்முறைப்படுத்துதல்

வினா எண் 109540—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் பேரூராட்சியிலுள்ள அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் 30 வருடங்களுக்கு மேலாக குடியிருப்பவர்களுக்கு தரை வாடகை நிர்ணயம் செய்து வரன்முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் 30 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருபவர்களுக்கு தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையின் அரசாணை (நிலை) எண் 340, நாள் 06-08-2007 மற்றும் அரசாணை (நிலை) எண் 456, நாள் 9-11-2007-ல் கண்டுள்ள நிபந்தனைகளின்படி மனை வாடகை நிர்ணயம் செய்து வரன்முறைப்படுத்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் சுமார் 294 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதில் 273 இடங்கள் குடியிருப்புகளாகவும், 21 இடங்கள் வணிக நோக்கத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண் 456, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 09-11-2007-ன்படி நியாய வாடகை கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது. அரசாணைகளில் கண்டுள்ள நிபந்தனைகளை ஏற்று வழிகாட்டுதலின்படி நியாய வாடகையினை செலுத்திட முன் வரும் ஆக்கிரமிப்புதாரர்களை மனை வாடகைதாரர்களாக மாற்றம் செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

2011 பிப்ரவரி 10]

462—

புதுப்பித்தல்

வினா எண் 14433—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு, அருள்மிகு தேசிகர் திருக்கோயிலை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம் மற்றும் நகரம் அருள்மிகு சீனிவாசப் பெருமாள் மற்றும் வேதாந்த தேசிகர் திருக்கோயிலின் திருக்குடமுழுக்கு விழா 30-06-2001 அன்று நடைபெற்றுள்ளது. திருக்கோயில் மற்றும் அனைத்து சன்னதிகளும் நல்ல நிலையில் இருப்பதால் தற்போது மீண்டும் புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

463—

புதுப்பித்தல்

வினா எண் 14435—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு, அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலினை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

இத்திருக்கோயிலின் சுவாமி சன்னதியின் மேற்கூரை தட்டோடு பதித்தல் திருப்பணிக்கு அரசு நிதியுதவி மூலம் ரூ.25,000/-க்கான

தொகை செலவிடப்பட்டு பணிகள் முடிவுற்றது. திருக்கோயில் முழுவதும் உபயதாரர் மூலம் வண்ணம் தீட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. எனவே, இத்திருக்கோயிலை புதுப்பிக்கப் வேண்டிய அவசியம் எழவில்லை.

464—

குடமுழுக்கு

வினா எண் 115089—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி அருள்மிகு புஜங்கேஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு திருபபணி செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பாகல்பட்டி, அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு புஜங்கேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு உபயதாரர் மூலம் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி உபயதாரர் செலவில் விரைவில் குடமுழுக்கு விழா நடத்தப்படவுள்ளது.

465—

திருத்தேர் அமைத்தல்

வினா எண் 117021—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு வட்டம், செந்தலை கிராமம், அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு புதிய திருத்தேர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், செந்தலை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு புதியதாக தேர் செய்திட ரூ. 20.00 இலட்சம் உத்தேசமாக தேவைப்படும். இதற்கான நிதி ஆதாரம் திருக்கோயிலில் இல்லை. எனவே, புதிய தேர் செய்திட திட்டம் ஏதுமில்லை.

466—

சீரமைத்தல்

வினா எண் 117023—திரு. துரை சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், தோகூர் கிராமம், அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தினை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், தோகூர், அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலுக்கு 15-12-1983 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. தற்போது திருக்கோயிலின் சில பகுதிகள் சிதிலமடைந்துள்ளன. இவற்றினைச் சீரமைத்திட உத்தேசமாக ரூ.11.00 இலட்சம் தேவைப்படுகிறது. இதற்கான நிதியாதாரம் திருக்கோயிலில் இல்லை. எனவே, பொதுமக்களின் பங்களிப்பு பெற்றும், துறை நிதியுதவி ஓரளவு அளித்தும் திருப்பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 10

467—

சீரமைத்தல்

வினா எண் 117025—திரு. துரை சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் வட்டம், மாரனேரி கிராமம், அருள்மிகு பசுபதீஸ்வரர் ஆலயத்தினை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், மாரனேரி கிராமம், அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இப்பழமையான திருக்கோயிலின் திருப்பணிகளை செய்திட அதிகளவில் நிதியாதாரம் தேவைப்படுகிறது. இதற்கான நிதி வசதி திருக்கோயிலில் இல்லை. இத்திருக்கோயிலின் பழமையினை கருத்தில் கொண்டு இப்பணிக்கான நிதி ஆதாரத்தை 13-ஆம் நிதி ஆணைய நிதியுதவியில் இருந்து பெற்று அத்தியாவசிய பணிகள் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

468—

சிமெண்ட் தளம் அமைத்தல்

வினா எண் 117801—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளித்தலை, அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயிலைச் சுற்றி வெளிப்புறத்தில் சிமெண்ட் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், கடம்பர்கோயில், அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலைச் சுற்றி வெளிப்புறத்தில் உள்ள நான்கு வீதிகளும் தேரோடும் வீதிகள் ஆகும். இவற்றிற்கு திருக்கோயில் பெயரில் பட்டா உள்ளது. இவற்றில் வடக்கு மற்றும் கிழக்கு வீதிகளில் தார்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கு மற்றும் தெற்கு வீதிகள் மண்சாலைகளாக உள்ளன. இந்த இரண்டு வீதிகளையும் தார்சாலை அல்லது சிமெண்ட் சாலையாக மாற்ற திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லை.

469—

குடமுழுக்கு

வினா எண் **119901—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தியில் சிவன் கோயிலை சீரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்பாச்சேத்தி, திருக்கோவிலில் உள்ள சுவாமி அருள்மிகு திருநோக்கிய அழகியநாத சுவாமி என்ற பெயரிலும், அம்பாள் அருள்மிகு மருநோக்கும் பூங்குழலி அம்மன் என்ற பெயரிலும் உள்ளது என்றும், இத்திருக்கோயிலில் மராமத்துப் பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு 30-06-2004-ம் தேதி

கும்பாபிஷேகம் நடைபெற்று நல்ல நிலையில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இத்திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்ய வேண்டிய நிலை எழவில்லை.

470—

புதுப்பித்தல்

வினா எண் 120136—திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் பெருமாள் கோயிலை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம் மற்றும் நகர் அருள்மிகு நைனாமலை வரதராஜப்பெருமாள் திருக்கோயிலை புதுப்பிக்க உத்தேச மதிப்பீடு ரூ.30 இலட்சம் ஆகும். இப்பணிகளைச் செய்ய திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லை. எனவே, தற்போதைக்கு இத்திருக்கோயிலை புதுப்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

471—

புதிய தேர்

வினா எண் 120142—திரு. கு. சின்னதுரை: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தலைவாசல் தொகுதி, வடசென்னிமலை, அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு புதிய தேர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், வடசென்னிமலை, அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் வருடந்தோறும் நடத்தப்படும் பங்குனி உத்திரத்தன்று திருத்தேர் உற்சவம் நடைபெற்று வருகிறது. தற்போது மரத்தேர் மரப்பொம்மைகள் ஏதுமின்றி சகடையாக உள்ளது. எனவே, மேற்படி திருக்கோயிலுக்கு திருத்தேர் செய்திட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது.

472—

புதுப்பித்தல்

வினா எண் 120143—திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, கெங்கவல்லியிலுள்ள பெருமாள் கோயிலை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம் மற்றும் கிராமம், அருள்மிகு கைலாசநாதர் மற்றும் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் தற்போது கெங்கவல்லி, அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் 19 இலட்சம் செலவில் உபய திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 15-07-2002-ல் குடமுழுக்கு நடைபெற்று நல்ல நிலையில் உள்ளது. அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயிலை புதியதாக கட்ட வரைபடம் ஒப்புதல் பெறப்பட்டு, தற்போது 23 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீடு அங்கீகாரம் பெறப்பட்டவுடன் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

473—

புதிய தேர்

வினா எண் 121553—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை, அழகர் கோயிலுக்கு புதிய தேர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, அருள்மிகு வீரழகர் திருக்கோயில் சிவகங்கை தேவஸ்தானத்திற்குட்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் சித்திரை திருவிழாவில் அருள்மிகு வீரழகர் 5-ம் திருநாள் காலை, குதிரை வாகனத்தில் வீதி உலா வருவதாகவும், 9-ம் திருநாள் மண்டகப்படியன்று அலங்கரிக்கப்பட்ட கோரதத்தில் திருக்கோயிலைச் சுற்றி வீதி உலா வருவதும் வழக்கமானது. திருக்கோயிலைச் சுற்றியுள்ள வீதிகள் அனைத்தும் மிகவும் குறுகலாக உள்ளதாலும், அத்திருக்கோயிலை மட்டுமே சுற்றுவதாலும் தேரை பயன்படுத்த இயலாது. எனவே, புதிய தேர் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

474—

தரம் உயர்த்துதல்

வினா எண் 42962—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பள்ளிப்பட்டு தொகுதி, ஆர்.கே.பேட்டை அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 122, பள்ளிக் கல்வி, நாள் 6-6-2008-ல் திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதி, ஆர்.கே. பேட்டை அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

475—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57464—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, முத்துப்பட்டி துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி, முத்துப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலையுயர்த்தி அரசு ஆணை (நிலை) எண் 123, பள்ளிக் கல்வித் துறை, நாள் 06-06-2008-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

476—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57465—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) தருமபுரி தொகுதி, பள்ளக்கொல்லை துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், பள்ளக்கொல்லை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலையுயர்த்தி அரசு ஆணை (நிலை) எண் 123, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள் 6-6-2008-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

477—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57466—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கெங்கான்கொட்டாய் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், கெங்கான்கொட்டாய் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி அரசு ஆணை (நிலை) எண் 123, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள் 6-6-2008-ல் நடுநிலைப் பள்ளியாக நிலையுயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2011 பிப்ரவரி 10]

478—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57468—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், இராமதாஸ்தண்டா துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், இராமதாஸ்தண்டா ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

479—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57473—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, மேல் கொட்டாயூர் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், மேல்கொட்டாயூர் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான கருத்துரு ஏதும் இப்போதைக்கு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

480—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57477—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, நகர்கூடல் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை –

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2008-2009-ஆம் கல்வி ஆண்டில் அரசாணை (நிலை) எண் 121, பள்ளிக் கல்வித் (இ1), துறை, நாள் 6-6-2008-ன்படி தருமபுரி மாவட்டம், நகர்கூடல் நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு விட்டது.

481—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57478—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, வெங்கட்டானூர் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி தொகுதி, வெங்கட்டானூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலையுயர்த்தி அரசு ஆணை (நிலை) எண் 123, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள் 6-6-2008-ல் அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

482—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57479—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, குப்பூர் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், குப்பூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி அரசு ஆணை (நிலை) எண் 123, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள் 6-6-2008-ல் நடுநிலைப் பள்ளியாக நிலையுயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

483—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57480—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, லாலாக்கொட்டாய் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், லாலாக்கொட்டாய் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலையுயர்த்தி அரசு ஆணை (நிலை) எண் 208, பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள் 12-8-2009-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. 20-8-2009 முதலாக இப்பள்ளி நடுநிலைப் பள்ளியாக இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

484—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57489—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, என்.எஸ்.ரெட்டியூர் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், என்.எஸ். ரெட்டியூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கான நிபந்தனைகளை நிறைவு செய்யவில்லை. எனவே, நடுநிலை பள்ளியாகத் தரம் உயர்த்த இப்பள்ளி தகுதி பெறவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2011 பிப்ரவரி 10]

485—

தரம் உயர்த்துதல்

வினா எண் 58174—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, மூங்கில்பாடி ஊராட்சி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, மூங்கில்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலையுயர்த்தி அரசு ஆணை (நிலை) எண் 208, பள்ளிக் கல்வித் துறை, நாள் 12-8-2009-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

486—

குடிநீர் வசதி

வினா எண் 62023—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு பகுதி 9-ன்கீழ் ரூ.1.38 இலட்சம் செலவில் 1 ஆழ்துளை கிணறு ஒன்று போடப்பட்டு அதன் மூலம் மேற்கண்ட பள்ளிக்கு குடிநீர் வசதி செய்திட கட்டட பணிகள் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2011 பிப்ரவரி 10

487—

தரம் உயர்த்துதல்

வினா எண் 63064—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, திருவதிகையில் உள்ள பாவாடை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவதிகையில் உள்ள பாவாடை அரசு உயர்நிலைப் பள்ளிக்கான பொதுமக்கள் பங்குத்தொகை ரூ.2.00 லட்சம் இதுவரையில் செலுத்தப்படவில்லை. இப்பள்ளிக்கு போதுமான இடவசதியும் இல்லை. தவிர, இப்பள்ளியிலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்திற்குள் 2 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. மேற்கண்ட சூழ்நிலையில், இக்கோரிக்கையை இவ்வாண்டு பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

488—

தரம் உயர்த்துதல்

வினா எண் 66089—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், சோழமாதேவி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை--

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2009-2010-ஆம் கல்வி ஆண்டில், அரசாணை (நிலை) எண் 129, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள் 15-6-2009-ன்படி கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், சோழமாதேவி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு விட்டது.

489—

தரம் உயர்த்துதல்

வினா எண் 90819—திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், காமநாயக்கன்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை--

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2009-2010-ஆம் கல்வி ஆண்டில், அரசாணை (நிலை) எண் 129, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள் 15-6-2009-ன்படி கோயம்புத்தூர் மாவட்டம், காமநாயக்கன்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுவிட்டது.

490—

தரம் உயர்த்துதல்

வினா எண் 102560—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆணைகுளம் ஊராட்சி, துலுக்கர்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 186, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள் 28-7-2009-ன்படி திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆணைகுளம் ஊராட்சி, துலுக்கர்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியானது நிலை உயர்த்தப்பட்டு, 31-8-2009 முதல் உயர்நிலைப் பள்ளியாக இயங்கி வருகிறது.

491—

தொடக்கப் பள்ளி துவக்குதல்

வினா எண் 105456—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் ஒன்றியம், கொளகம்பட்டி ஊராட்சி, பாப்பாரப்பட்டியில் (காமராசர் நகர்) தொடக்கப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரூர் ஒன்றியம், கொளகம்பட்டி ஊராட்சி, பாப்பாரப்பட்டியில் (காமராசர் நகர்) தொடக்கப் பள்ளி தொடங்க தற்போதைக்கு வாய்ப்பு இல்லை.

492—

பயிற்சிப் பள்ளி

வினா எண் 106190—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) அவினாசியில் இருபாலர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அவினாசியில் புதிதாக இருபாலர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவங்க தற்போது அவசியம் எழவில்லை.

493—

துவக்கப் பள்ளி

வினா எண் 106224—திருமதி ஜி. லதா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் தொகுதி, சின்ன அல்லாபுரம் பகுதியில் தொடக்கப்பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வேலூர் தொகுதி, சின்ன அல்லாபுரம் பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி துவங்குவதற்கான கருத்துரு ஏதும் இப்போதைக்கு பரிசீலனையில் இல்லை.

494—

தரம் உயர்த்துதல்

வினா எண் 106322—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, பூவந்தி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, பூவந்தி அரசு உயர்நிலைப் பள்ளிக்கான பொதுமக்கள் பங்குத்தொகை ரூ.2.00 இலட்சம் இதுவரையில் செலுத்தப்படவில்லை. தவிர, இப்பள்ளியிலிருந்து 6 கிலோ மீட்டர் தூரத்திற்குள் 3 மேல்நிலைப் பள்ளிகள் உள்ள நிலையில் பூவந்தி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த கருத இயலாத நிலை உள்ளது.

495—

தரம் உயர்த்துதல்

வினா எண் 106324—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல் அரசு உயர்நிலைப் பள்ளியில் பொதுமக்கள் பங்குத்தொகையான ரூ.2.00 இலட்சம் கட்டப்படவில்லை. எனவே, பொதுமக்கள் பங்குத்தொகையை கட்டாத நிலையில் இப்பள்ளியை தரம் உயர்த்துவது குறித்து பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

2011 பிப்ரவரி 10]

496—

தரம் உயர்த்துதல்

வினா எண் 106584—திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடமதுரை, அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வடமதுரை, அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கான பொது மக்கள் பங்குத்தொகை ரூ.2.00 இலட்சம் இதுவரையில் செலுத்தப்படவில்லை. தவிர, இப்பள்ளியிலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்திற்குள் 2 மேல்நிலைப் பள்ளிகள் உள்ள நிலையில் வடமதுரை அரசு (பெண்கள்) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த கருத இயலாத நிலை உள்ளது.

497—

பொது நூலகம் அமைத்தல்

வினா எண் 106593—திரு. வை. காவேரி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, அ. தாழையூர் ஊராட்சி, மாங்குட்டபட்டியில் பொது நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, அ. தாழையூர் ஊராட்சி, மாங்குட்டபட்டியில் பொது நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

498—

பொது நூலகம் அமைத்தல்

வினா எண் 106596—திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் பொது நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் செம்மேடு என்ற இடத்தில் வாழவந்திநாடு ஊராட்சியில் 14-11-1990 முதல் கிளை நூலகம் ஒன்று செயல்பட்டு வருகின்றது.

499—

கூடுதல் கட்டடம்

வினா எண் 107265—திருமதி ஜி. லதா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடியாத்தம் தொகுதி, கூடநகரம் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, கூடநகரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி நிதி உதவித் திட்டம் பகுதி 3-ன்கீழ் (அரசாணை எண் 115, பள்ளிக் கல்வி, நாள் 24-8-2004) ரூ.21.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு மேற்கண்ட பள்ளிக்கு 4 வகுப்பறைகள், 1 ஆய்வுக் கூடம், 2 கழிவறைகள் போன்ற அடிப்படை வசதிகள் பொதுப்பணித் துறையின் மூலமாக செய்து தரப்பட்டுள்ளது.

500—

ஆரம்பப் பள்ளி

வினா எண் 107289—திருமதி ஜி. லதா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடியாத்தம் தொகுதி, கொண்டசமுத்திரம் ஊராட்சி, ஜீவா நகர் மற்றும் சீவூர் ஊராட்சி, லட்சுமணபுரம் ஆகிய பகுதிகளில் புதிய ஆரம்பப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, கொண்டசமுத்திரம் ஊராட்சிக்குட்பட்ட ஜீவா நகர் குடியிருப்புப் பகுதியில் 29-07-2010 அன்று புதிய தொடக்கப் பள்ளி துவக்கப்பட்டு 1-5 வகுப்புகளில் 29 மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர். மேலும், குடியாத்தம் தொகுதி, சீவூர் ஊராட்சிக்குட்பட்ட லட்சுமணபுரம் பகுதியில் புதிய பள்ளி துவங்குவதற்கான நிபந்தனைகளை நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி துவக்குவதற்கு தற்போது தகுதி பெறவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

பட்டியல்—10

1—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 2294—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, குனியமுத்தூர் நகராட்சி மற்றும் குறிச்சி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 01-07-2006 அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில், குனியமுத்தூர் மற்றும் குறிச்சி முதலிய நகராட்சிகளுக்கும் கோவையை சுற்றியுள்ள இதர நகரங்களுக்கும் சேர்ந்து பாதாளச் சாக்கடைத் திட்டம் தயாரிக்க கோவை மாநகராட்சியின் ஆய்வு பணிகள் முன்னேற்றத்திலுள்ளது. இந்த ஆய்வு பணிகள் அடுத்த 3 மாதங்களில் முடிக்கப்பட்டு, திட்ட மதிப்பீடு இறுதி செய்யப்பட்ட உடன் மத்திய அரசின் ஜவகர்லால் நேரு நகர்ப்புற வளர்ச்சி (JNNURM) திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற்று திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

2—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 2308—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, எம்.ஜி.ஆர். நகருக்கு அத்திக்கடவு குடிநீர் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், பிச்சனூர் ஊராட்சியிலுள்ள எம்.ஜி.ஆர். நகருக்கு தற்போது தேவையான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் இப்பகுதிக்கு பில்லூர் இரண்டாவது குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3—

மதகு மேம்படுத்துதல்

வினா எண் 2399—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, பில்ராம்பட்டு பெரிய ஏரி கரையும், மதகும் மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியம், பில்ராம்பட்டு பெரிய ஏரி கரையும், மதகும் பழுது அடைந்ததை, 2006-2007-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் சீர் செய்யப்பட்டுவிட்டது.

4—

இணைப்புச் சாலை

வினா எண் 2408—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, ஆலம்பாடி முதல் பில்ராம்பட்டு வரை இணைப்பு சாலை நபார்டு திட்டத்தின்கீழ் அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

முகையூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆலம்பாடி-பில்ராம்பட்டு இணைப்பு சாலை 2006-2007-ம் ஆண்டு எஸ்ஜிஆர்ஒய். (சிறப்பு கூறு) திட்டத்தின்கீழ் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் ஓர் அடுக்கு ஜல்லி சாலையாக அமைக்கும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

5—

ஏரி சீர் செய்தல்

வினா எண் 2414—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

முகையூர் தொகுதி, ஆலம்பாடி கிராமத்தில் உள்ள பெரிய ஏரியை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

முகையூர் தொகுதி, ஆலம்பாடி கிராமத்தில் உள்ள பெரிய ஏரி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் சீர் செய்யப்பட்டு விட்டது.

6—

ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

வினா எண் 2448—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் கம்பலாபட்டி ஊராட்சி, பாரமடையூர் கிராமத்திற்கு ஆழ்குழாய் கிணறு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ஒதுக்கீடு கிடைக்கப்பெறின் மேற்காண் கிராமங்களில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்படும்.

7—

மேம்பாலம்

வினா எண் 2508—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதியில் கட்டுநாடு என்று அழைக்கப்படும் கண்டக்குடியில் உடைந்து போன பாலத்தை மேம்பாலமாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

அரியலூர் தொகுதியில் கட்டுநாடு என்று அழைக்கப்படும் கண்டக்குடியில் உடைந்துபோன பாலத்தை மேம்பாலமாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

8—

புதிய பாலம் அமைத்தல்

வினா எண் 2519—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குறிச்சி ஊராட்சி, குறிச்சி ஆதி திராவிடர் காலனி பகுதியில் இடுகாட்டிற்கு செல்ல வசதியாக சித்தார் ஓடையில் புதிய பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குறிச்சி ஊராட்சியில், ஆதி திராவிடர் காலனிக்கு 2007-2008 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் மயானம் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதி மக்கள் இனி இந்த மயானத்தையே பயன்படுத்தலாம். ஓடையை தாண்டிச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது. எனவே, சித்தார் ஓடையில் புதியதாக பாலம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

9—

சீரமைத்தல்

வினா எண் 2533—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி ஒன்றியம், வெள்ளாளம்பட்டி ஊராட்சி, வெள்ளாளம்பட்டி முதல் புளியம்பட்டி செல்லும் சாலை வடிவேல் கொட்டாய் என்னும் இடத்தில் உள்ள பாலம் மிகவும் பழுது அடைந்து உள்ளதால் இந்தப் பாலத்தை பொதுப்பணித் துறை மூலம் சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசிலணையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி ஒன்றியம், வெள்ளாளம்பட்டி ஊராட்சி, வெள்ளாளம்பட்டி முதல் புளியம்பட்டி செல்லும் சாலையில் வடிவேல் கொட்டாய் என்னும் இடத்தில் உள்ள பழுதடைந்துள்ள பாலத்தை சீர்செய்ய ரூ.10.00 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பாலத்தினை சீர் செய்ய தற்போது போதிய நிதி வசதியில்லை. எனினும் நிதி வசதிகேற்ப இப்பணிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

2011 பிப்ரவரி 10]

10—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2647—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் .வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், ஈகைரத்தினாபுரத்தில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி முழுவதும் பழுதடைந்துள்ளது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், ஈகைரத்தினாபுரம் கிராமத்திற்கு 2006-2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு, தேவையான அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

சத்யமேவ ஜயதே
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

11—

குடிநீர்

வினா எண் 2669—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பாலபட்டி ஊராட்சிக்கு ஆழியார் குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி, கம்பாலப்பட்டி ஊராட்சியில் ஏற்கெனவே ஆழியார் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும் கம்பாலப்பட்டி ஊராட்சியில் போதுமான குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதால் தற்சமயம் குடிநீர் பிரச்சனை ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

12—

குடியமர்த்துதல்

வினா எண் 2675—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், 52 புதுக்குடி கிராமத்தில் உள்ள கட்டி குடியமர்த்தப்படாமல் உள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் பயனாளிகளை குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், 52 புதுக்குடி கிராமத்தில் உள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு அனுமதிக்கப்பட்ட 100 வீடுகளில் 98 வீடுகளில் பயனாளிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மீதம் உள்ள இரண்டு பயனாளிகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளில் குடியேறாததால் அந்த வீடுகளுக்கான ஒதுக்கீட்டு ஆணையை ரத்து செய்து விட்டு தகுதியான சம்பந்தப்பட்ட இனத்தவருக்கு மறு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

13—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 3050—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கரியாஞ்செட்டிபாளையம், பிலிசின்னாம்பாளையம், காளியாபுரம், கோட்டூர், ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், சோமந்துறை, தென்சித்தூர், தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிபாளையம், கம்பாலப்பட்டி, ஜல்லிப்பட்டி, அங்கலகுறிச்சி ஆகிய ஊராட்சிகளில் போதுமான குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வால்பாறை கரியாஞ்செட்டிபாளையம், பிலிசின்னாம்பாளையம், காளியாபுரம், கோட்டூர், ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், சோமந்துறை, தென்சித்தூர், தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிபாளையம், கம்பாலப்பட்டி ஜல்லிப்பட்டி, அங்கலகுறிச்சி ஆகிய ஊராட்சிகளுக்கு சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

14—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 3100—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன் புதூர் சிறப்பு ஊராட்சிக்கு போதுமான குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சியில் நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

15—

நிழற்குடை

வினா எண் 3354—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் சோமந்துறை ஊராட்சி, கடைவீதி, கோட்டூர்-தென்சங்கம்பாளையம் சந்திப்பு, தென்சங்கம்பாளையம் ஊராட்சி, காளியாபுரம் ஊராட்சி, ரமணமுதலிபுதூர் ஊராட்சி ஆகிய இடங்களில் நிழற்குடை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், சோமந்துறை ஊராட்சி கடைவீதியில் பேருந்து திரும்பும் இடமாக இருப்பதாகவும், குறுகிய இடமாக இருப்பதாலும் நிழற்குடை கட்ட இட வசதி இல்லை. இதன் காரணமாக நிழற்குடை அமைக்க இயலாத நிலை உள்ளது.

கோட்டூர்-தென்சங்கம்பாளையம் சந்திப்பில் ஏற்கெனவே 2001-2002 ஆம் ஆண்டு நிழற்குடை அமைக்கப்பட்டுள்ளது.

தென்சங்கம்பாளையம் ஆதி திராவிடர் காலனி மதுரை வீரன் கோவில் அருகில் ரூ.75,000/- மதிப்பீட்டில் 2008-2009 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நிழற்குடை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2011 பிப்ரவரி 10]

காளியாபுரம் ஊராட்சியில் முக்கோணம் மற்றும் ஆதி திராவிடர் காலனி ஆகிய இடங்களில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.50,000 மதிப்பீட்டில் நிழற்குடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ரமணமுதலிபுதூர், ஜெ.ஜெ. நகரில் 2008-2009 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நிழற்குடை கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

16—

சாலை செப்பனிடல்

வினா எண் 3359—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கோட்டூர் பேரூராட்சியில்

1. பெருமாள் கோயில் வீதி-காமராஜ் பிரதான சாலை இணைப்பு சாலை
2. 4-வது வார்டு ஆதி திராவிடர் காலனி-அங்கலக்குறிச்சி இணைப்பு சாலை
3. புளியங்கண்டி-வால்பாறை பிரதான சாலை
4. மூங்கிலடி-தேங்காய்ப்பாறை சாலை
5. பந்தக்காலம்மன்பதி-தேங்காய்ப்பாறை சாலை
6. பழனியூர்-பூலாங்கினர் சாலை
7. ஆலாஞ்சிறை-தேங்காய்ப்பாறை சாலை
8. மன்னம்பதி-வால்பாறை பிரதான சாலை

ஆகிய சாலைகளை பழுதுபார்த்து செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்கண்ட எட்டு சாலைகளும் செப்பனிடப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன.

[2011 பிப்ரவரி 10

17—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 3374—திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் பாதாளச் சாக்கடைத் திட்டம் மாவட்ட தலைநகரங்களில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதர நகராட்சிகளில் இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருதால், கள்ளக்குறிச்சி மூன்றாம் நிலை நகராட்சியில் ஆய்வு மேற்கொண்டு அதற்கேற்ப இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

18—

மின் மயானம்

வினா எண் 3391—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை நகராட்சியில் மின் மயானம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை நகராட்சியில் மின் மயானம் அமைக்க திட்டம் ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

19—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 3415—திரு. வை. சிவபுண்ணியம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்ற அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். அனைத்து நகராட்சிகளிலும் படிப்படியாக பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். மன்னார்குடி நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நிதியாதாரங்கள் இறுதி செய்யப்பட்டவுடன் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

20—

சோடியம் விளக்கு

வினா எண் 3468—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில், கோட்டூர் சிறப்பு சிற்றூராட்சியில், பூலாங்கினார், பழனியூர், மூங்கிலடிப்பாறை புளியங்கண்டி குடியிருப்பு, தேங்காய்ப்பாறை சாலை, காமராஜ் பிரதான சாலை, பெருமாள் கோயில் வீதி பந்தக்கால் அம்மன் மன்னம்பதி, ஆலாஞ்சித்துறை ஆகிய பகுதிகளில் சோடியம் தெரு விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்குறிப்பிட்ட ஊராட்சிகளில் சோடியம் தெரு விளக்குகள் அமைப்பதால் ஊராட்சிக்கு அதிகமாக மின் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. அதனால் தேவையான குழல் விளக்குகள் அமைக்க பேரூராட்சி செயல் அலுவலர்க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

21—

கழிப்பிடம்

வினா எண் 3492—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், சோமந்துறை ஊராட்சியில் பேருந்து நிற்கும் இடம் மற்றும் மாரியம்மன் கோயில் அருகில் நவீன கழிப்பிடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோமந்துறை ஊராட்சியில் 4 கழிப்பறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. சோமந்துறை ஊர் நடுவே பேருந்து நிற்கும் இடத்திற்கருகே கட்ட இட வசதியில்லை. மாரியம்மன் கோயில் அருகில் நவீன கழிப்பிடம் கட்ட ஊராட்சியில் நிதி வசதியில்லை.

22—

குடிநீர்த் தொட்டி

வினா எண் 3521—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) வால்பாறை தொகுதி, ரமணமுதலிபுதூர் ஊராட்சிக்கு காந்திபுரம் பகுதி மற்றும் சோமந்துறை ஊராட்சியிலும் உயர்மட்ட குடிநீர்த் தொட்டி கட்ட அரசு முன்வருமா

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ரமணமுதலிபுதூர் காந்திபுரம் பகுதி மேல்நிலைத் தொட்டி ஏற்கெனவே பழுதுபட்டுள்ளது. அரசு நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றால் மேல்நிலைத் தொட்டி சரிசெய்யப்பட்டு இயக்கப்படும். சோமந்துறை ஊராட்சியில் போதுமான குடிநீர் வசதி உள்ளது. எனவே புதிய மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைக்க தேவை ஏற்படவில்லை.

23—

பாலம் கட்டுதல்

வினா எண் 3557—திரு. வை. சிவபுண்ணியம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, கூத்தாநல்லூர்-பாய்க்காரத் தெரு அருகில் வெண்ணாற்றின் குறுக்கே போக்குவரத்து பாலம் இவ்வாண்டில் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, கூத்தாநல்லூர்-பாய்க்காரத் தெரு அருகில் வெண்ணாற்றின் குறுக்கே போக்குவரத்து பாலம் கட்டும் பணிக்கு 2006-2007-ம் ஆண்டு 2-வது மாநில நிதிக்குழு நிதியிலிருந்து நீர்நிலை ஆதாரங்களில் மழை நீர் சேமிப்பு கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணிக்காக RWH என்ற தலைப்பில் ரூ.61.37 இலட்சம்

நிதி ஒதுக்கீடும், பின்னர் மேற்படி பணிக்காக நகராட்சி நிர்வாக ஆணையரக வட்டித் தொகையிலிருந்து ரூ.29.00 இலட்சமும், கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈட்டு நிதியிலிருந்து ரூ.19.63 இலட்சமும் சேர்த்து ஆக ரூ.110.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு உரிய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு பாலம் கட்டும் பணிக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

24—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 3585—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், பாண்டூர் கொல்லமேடு கிராமம், அங்கம்பட்டு கிராமம், மாம்பாக்கம் ஊராட்சி; முடையூர் கிராமம் ஆகிய கிராமங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கொல்லமேடு உள்ளடக்கிய பாண்டூர் ஊராட்சிக்கு 23 தொகுப்பு வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அங்கம்பட்டு கிராமத்திற்கு 2007-2008-ம் ஆண்டில் 4 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாம்பாக்கம் ஊராட்சிக்கு கடந்த 3 ஆண்டுகளில் 16 தொகுப்பு வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வூராட்சியைச் சேர்ந்த முடையூர் கிராமத்திற்கு கடந்த 3 ஆண்டுகளில் 10 தொகுப்பு வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

25—

குடிநீர்

வினா எண் 3695—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) ஓமலூர்-சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தீவட்டிப்பட்டி ஊராட்சி, நைனாகாடு ஆதி திராவிடர்கள் உள்ளிட்ட பகுதிகளுக்கு காவிரி குடிநீர் வழங்க நீர் உந்துதல் நிலையம் அமைத்து மேல்நிலைத் தொட்டிகளுக்கு குடிநீர் நிரப்பப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தீவட்டிப்பட்டி ஊராட்சியில் நைனாகாடு ஆதி திராவிடர் உள்ளிட்ட பகுதி, நைனாகாடு குடியிருப்பின் உள்ளடங்கிய பகுதியாகும். இக்குடியிருப்பில் கையிறைப்பான் ஒன்றும், சிறுமின் விசைத் திட்டம் ஒன்றும் பயனில் உள்ளது. மேலும் இக்குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர்கள் வீதம் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

26—

பாதை வசதி

வினா எண் 3741—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், சாமிநாயக்கன்பட்டி கிராமத்தில் ச.எண் 8/1ஏ4, 8/3இ, 7/14பி, 7/5ஏ2, 7/4சி, 7/6, 36/2 ஆகிய புல எண்கள் வழியாக பொது மக்களுக்கு பாதை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சாமிநாயக்கன்பட்டி கிராமம் புல எண் 8/1ஏ4, 8/3இ, 7/14பி, 7/5ஏ2, 7/4சி, 7/6, 36/2 ஆகிய அனைத்தும் பட்டா நிலங்கள் ஆகும். எனவே மேற்படி நிலங்களில் பாதை வசதி செய்து தர இயலாது.

27—

மயானப் பாதை

வினா எண் 3748—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், தும்பிப்பாடி ஊராட்சி, ஆத்துக்காடு பகுதியில் மயானப் பாதை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

28—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 3793—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், உம்பிளிக்கம்பட்டி ஊராட்சி மற்றும் பொட்டியபுரம்

2011 பிப்ரவரி 10]

ஊராட்சியிலுள்ள ஏழை குடும்பங்களுக்கு அரசு இலவச தொகுப்பு வீடு ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டிலேயே ஒதுக்கீடு செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், உம்பிளிக்கம்பட்டி ஊராட்சியில் 2000-2001 முதல் 2007-2008 வரை 93 தொகுப்பு வீடுகளும் பொட்டியபுரம் ஊராட்சியில் 2000-2001 முதல் 2007-2008 வரை 53 தொகுப்பு வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

29—

புதிய குடிநீர்க் கிணறு அமைத்தல்

வினா எண் 3890—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம்-பொன்பதிர்கூடம் ஊராட்சி, பள்ளவீரகுப்பம் ஆதி திராவிடர் குடியிருப்பு மற்றும் பொன்விளைந்த களத்தூர் ஊராட்சி, கொல்லமேடு கிராமம் ஆகிய இடங்களில் புதிய குடிநீர்க் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றியக் குழுவின் ஒப்புதல் பெற்று ஒன்றிய பொது நிதியில் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 4390—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உள்ளகரம்-புழுதிவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். உள்ளகரம்-புழுதிவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் துவக்கப்பட உள்ளன.

31—

காலனி வீடு கட்டுதல்

வினா எண் 4406—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி ஊராட்சி, இராமகிருஷ்ணன் ஊரில் உள்ள அருந்ததியர் காலனியில் காலனி வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி ஊராட்சி, இராமகிருஷ்ணனூரில் வசிக்கும் மக்கள் அனைவரும் இதர வகுப்பைச் சார்ந்தவர்களே.

32—

குடிநீர்

வினா எண் 4555—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, கவுண்டன்பாளையம் பகுதிக்கு மின் விசைத் தொட்டி கட்டி குடிநீர் இணைப்பு வழங்கவும்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

வடுகம்பாளையம் மற்றும் சென்னிமலை ஊராட்சியில் குடிநீர் பற்றாக்குறையை போக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், சென்னிமலை ஒன்றியம், பனியம்பள்ளி ஊராட்சி, கவுண்டன்பாளையம் குடியிருப்புக்கு பெருந்துறை மற்றும் சென்னிமலை ஒன்றியங்களைச் சார்ந்த 392 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஏற்கெனவே கட்டப்பட்டு அதன் மூலம் 01-12-2007 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சென்னிமலை ஒன்றியம், முருங்கத்தொழுவு ஊராட்சி, வடுகம்பாளையம் குடியிருப்புக்கு சென்னிமலை ஒன்றியத்தைச் சார்ந்த 99 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குழாய் நீட்டிப்பு செய்தும், இங்கு ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனிமின் விசைத் திட்டத்தின் மூலமும் மீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

33—

கிணறு செப்பனிடல்

வினா எண் 4564—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் ஒன்றியம், அகரம், கொந்தகை, கோதிபுரம், மணலூர், மேலச்சொரிக்குளம் மற்றும் சில கிராமங்களிலுள்ள ஆழ்குழாய்க் கிணற்றை செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், அகரம், கொந்தகை, கோதிபுரம், மணலூர் மேலச்சொரிக்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள ஆழ்குழாய் கிணறுகள், நிலத்தடி நீர் கீழே சென்றுள்ளதால் போதிய அளவு ஊற்று இல்லை. எனவே, செப்பனிட இயலாது.

34—

கட்டடம்

வினா எண் 4658—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், எஸ். நாங்கூர் கிராம மகளிருக்காக மகளிர் மன்ற கட்டடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில், 2007-2008 ஆம் ஆண்டின் பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கே. பூலாங்குளம் ஊராட்சியில், எஸ். நாங்கூர் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, கட்டடம் கட்ட நடவடிக்கையில் உள்ளது.

35—

செப்பனிடல்

வினா எண் 4665—திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) சென்னை மாநகராட்சிப் பள்ளிக் கட்டடங்களைச் செப்பனிட அரசு நிதி உதவி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

36—

கணினி வழங்குதல்

வினா எண் 4667—திரு. வி.எஸ். பாபு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை மாநகராட்சிப் பள்ளிகள் அனைத்திற்கும் கணினி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

37—

இலவச சீருடை

வினா எண் 4668—திரு. வி.எஸ் பாபு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் சத்துணவு உண்ணும் மாணவ/மாணவிகளுக்கு மட்டும் இலவச சீருடை வழங்கப்பட்டு வருகிறது.

38—

மேம்பாலம் நீட்டித்தல்

வினா எண் 4669—திரு. வி.எஸ். பாபு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை பெரம்பூர் மேம்பாலத்தை அயனாவரம் பேருந்து நிலையம் வரை நீட்டித்துக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

39—

நடை மேம்பாலம்

வினா எண் 4671—திரு. வி.எஸ். பாபு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை பெரம்பூர் இரயில் நிலையம் முன்பு நடை மேம்பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

40—

மார்க்கெட்

வினா எண் 4673—திரு. வி.எஸ். பாபு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை நடைபாதை சிறு வியாபாரிகளுக்கென தனியாக ஒரு இடத்தை தேர்வு செய்து மார்க்கெட் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இது குறித்து கருத்துரு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

41—

கொசுக்களை ஒழித்தல்

வினா எண் 4674—திரு. வி.எஸ். பாபு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை மாநகரில் கொசுக்களை ஒழிக்க அரசு நிரந்தர நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

42—

நிரந்தர பாலம் அமைத்தல்

வினா எண் 4801—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், பூம்புகார் ஊராட்சி, ராசான்குளம் ஆதி திராவிடர் பகுதிக்குச் செல்லும் காவிரி ஆற்றில் நிரந்தர பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், ராசான்குளம் கிராமத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க ரூ.140 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலைத் துறையால் செயல்படுத்தப்படும்.

43—

கண்மாய் ஆழப்படுத்துதல்

வினா எண் 4809—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், எஸ். கல்லுமடை கிராமத்தின் விவசாயப் பாசனக் கண்மாயை ஆழப்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், கல்லுமடை பூலாங்குளம் கண்மாய் 2008-2009-ம் நிதியாண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆழப்படுத்தி தரப்படும்.

44—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 4859—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, விளாமரத்துப்பட்டி கிராமத்தில் இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கியவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டாரம், பெரியபாப்பனூத்து ஊராட்சியைச் சேர்ந்த குக்கிராமம், விளாமரத்துப்பட்டியில் 1990-1991 முதல் 2005-2006 வரை 82 தொகுப்பு வீடுகள் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

2007-2008-ம் ஆண்டு 5 பயனாளிகள் தேர்வு செய்து பணிகள் முடிவுற்றன. 2008-2009-ல் 6 பயனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 10

45—

அடிப்படை வசதி

வினா எண் 4928—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதிக்கு உட்பட்ட வரப்பாளையம் ஊராட்சியில் உள்ள தெரு விளக்கு, புங்கம்பாடியில் தெரு விளக்கு மற்றும் சாக்கடை வசதியும், தண்ணீர் பந்தலில், சாலை, தெரு விளக்கு மற்றும் கழிப்பிட வசதியும் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்கு உட்பட்ட வரப்பாளையம் ஊராட்சியில் உள்ள தெரு விளக்கு, புங்கம்பாடியில் தெரு விளக்கு, தண்ணீர் பந்தலில், சாலை, தெரு விளக்கு மற்றும் கழிப்பிட வசதியும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும். புங்கம்பாடியில் ஆதி திராவிடர் காலனிக்கு சாக்கடை வசதி SGRY திட்டத்தில் செய்யப்பட்டுள்ளது.

46—

ஏரியை ஆழப்படுத்துதல்

வினா எண் 5007–அ—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புழுதிவாக்கம் ஏரியை ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், புழுதிவாக்கம் ஏரியை ஆழப்படுத்த 2008-2009 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

47—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 5039—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், பொன்விளைந்த களத்தூரில் சாலையில் இருந்து வெண்பாக்கம் வரை, சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், பொன்விளைந்த களத்தூர் சாலையிலிருந்து வெண்பாக்கம் சாலை 1.300 கி.மீ. ஆகும். இதில் 1 கி.மீ. சாலை பணிகள் 2007-2008 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதம் உள்ள 300 மீட்டர் சாலை பணிகள் 2008-2009 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து செய்யப்படும்.

[2011 பிப்ரவரி 10

48—

மயானம் சீரமைத்தல்

வினா எண் 5082—திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட சரவணபட்டி மயானத்தைச் சீர் செய்து கொடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தார்ச் சாலை வசதி, குழல் விளக்கு, சோடியம் விளக்கு, எரி மேடை, தண்ணீர் தொட்டி ஆகிய சகல வசதிகளும் சரவணபட்டி மயானத்தில் செய்யப்பட்டுள்ளன.

49—

தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் 5097—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார் கோயில் ஒன்றியம், முடிதிருச்சம்பள்ளி-புளியந்தோப்பு தெருவில் மருதம்பள்ளம் பயணிகள் நிழலகம்-மருதம்பள்ளம் பண்ணை வரை, உமையாள்புரம்-நாச்சிக்கட்டளை வரை தெரு விளக்கு புதியதாக அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், பாராளுமன்ற உறுப்பினர் பரிந்துரை பெற்று

2011 பிப்ரவரி 10]

செம்பனார் கோயில் ஊராட்சி ஒன்றியம், திருமுடிச்சம்பள்ளி புளியந்தோப்பு தெரு மற்றும் மருதம்பள்ளத்தில் பயணிகள் நிழலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். உமையாள்புரம்-நாச்சிக்கட்டளை வரை சம்பந்தப்பட்ட ஊராட்சி 2008-2009ல் ஊராட்சி நிதியினைக் கொண்டு புதியதாக தெரு விளக்குகள் அமைக்கப்படும்.

50—

தார்ச் சாலை

வினா எண் 5110—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியேரிப்பட்டி ஊராட்சி, அம்மன் கோவில்பட்டி சாலை ஆழ்துளை கிணறு முதல் பாட்டாளி நகர் வரை பழுது அடைந்த தார்ச் சாலையைச் சீர் அமைக்கவும் தொளசம்பட்டி ஊராட்சி, கெடக்காரன் தெரு வழியாக இராமகிருஷ்ணனூர் வரை, சிக்கம்பட்டி ஊராட்சி, தாரமங்கலம் பிரதான சாலை முதல் குப்பனூர் வரையிலும் கப்பி சாலையைத் தார்ச் சாலையாக மாற்றிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பெரியேரிப்பட்டி ஊராட்சி, அம்மன் கோவில்பட்டி சாலை ஆழ்துளைக் கிணறு முதல் பாட்டாளி நகர் வரை உள்ள 3 கி.மீ. நீளமுள்ள சாலை ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க 2008-2009 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தொளசம்பட்டி ஊராட்சி, கெடக்காரன் தெரு வழியாக இராமகிருஷ்ணனூர் வரை உள்ள 2 கி.மீ. நீளமுள்ள சாலை ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் 2008-2009-ம் ஆண்டு நபார்டு

திட்டத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், சிக்கம்பட்டி ஊராட்சி தாரமங்கலம் பிரதான சாலை முதல் குப்பனூர் வரையிலும் உள்ள ஊராட்சி. சாலை 2 கி.மீ. நீளமுள்ள சாலையாகும். ஈரடுக்கு ஜல்லி பரப்பி தார்ச் சாலை அமைக்க சுமார் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில், இப்பணியினை 2008-2009-ம் ஆண்டு நபார்டு திட்டத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

51—

துவக்கப் பள்ளிக்கு அறைகள்

வினா எண் 5122—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, புளியமரத்துகாடு பகுதி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு வகுப்பு அறைகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், புளியமரத்துக்காடு கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கைக்கு தற்போதுள்ள கட்டடம் போதுமானதாக உள்ளதால், இப்பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் தற்போது தேவைப்படவில்லை.

52—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 5163—திரு. செ. பொன்னுதுரை: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

பெருந்துறை, கருமாண்டி, செல்லிப்பாளைய்ம் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம் உடனடியாக செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், பெருந்துறை, கருமாண்டி, செல்லிப்பாளையம் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்க ஒரு கூட்டுக்குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக அரசு ஆணை 42 நாள் 26-5-2003-ல் ரூ.2304.00 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 14-2-2007-ல் இறுதி செய்யப்பட்டு பணி ஏற்பு ஆணை 29-05-2007-ல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகள் 11/2008-ல் முடித்து மக்கள் பயனுக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

53—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 5164—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சலங்கைப் பாளையம், பாண்டியம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கருக்குப்பாளையம் ஊராட்சி பகுதியில் உள்ள கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பெருந்துறை ஒன்றியம், கருக்குப்பாளையம் ஊராட்சிக்கு சலங்கைப்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்க தொழில் நுட்ப சாத்தியக்கூறுகள் இல்லை. கருக்குப்பாளையம் ஊராட்சியிலுள்ள 12 குடியிருப்புகளில் 8 குடியிருப்புகளுக்கு குன்னத்தூர், கொளப்பலூர்

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதர நான்கு குடியிருப்புகளான எல்லைநாவிதம்பாளையம், காட்டுவலசு மேற்கு, காட்டுவலசு தெற்கு, கல்லன்காட்டுவலசு ஆகியவற்றுக்கு நடப்பு நிதியாண்டில் (2007/2008) தனி மின்விசைத் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கும் பொருட்டு பணிகள் 10/2007-க்குள் முடித்து மக்கள் பயனுக்கு கொண்டு வரப்படும்.

54—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 5182—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி பேரூராட்சி, பொறையாறில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தரங்கம்பாடி பேரூராட்சி, பொறையாறில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி நடைபெறுகிறது.

55—

மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 5188—திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டையார்பேட்டை காலரா மருத்துவமனை அருகில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம்.

2011 பிப்ரவரி 10]

56—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 5189—திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, மீனாம்பாள் நகரில் மேம்பாலம் கட்டும் பணி எப்போது துவங்கப்பட உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணி விரைவில் தொடங்கப்படும்.

57—

சுரங்கப்பாதை அமைத்தல்

வினா எண் 5197—திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொருக்குப்பேட்டை யோஜராஜா நகர் பகுதியில் சுரங்கப்பாதை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இரயில்வே துறையினரால் நிறைவேற்றப்படவுள்ள இத்திட்டத்திற்கு, சென்னை மாநகராட்சி நிதி ஒதுக்கீடு செய்ய ஒப்புக் கொண்டுள்ளது. இரயில்வே துறையின் மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கப்பட்டவுடன் இரயில்வே துறையால் இப்பணி மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

58—

பாதாள சாக்கடை வசதி

வினா எண் 5210—திரு. ஆர். சின்னசாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிங்காநல்லூர் தொகுதியில் பாதாளச் சாக்கடை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் 'JNNURM' திட்டத்தின்கீழ் கோவை மாநகராட்சி பகுதி முழுமைக்கும் சிங்காநல்லூர் தொகுதி உட்பட பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

59—

ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

வினா எண் 5231—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, சங்கராமநல்லூர் பேரூராட்சி என்.ஜி. புதூர் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இயலும்

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சங்கராமநல்லூர் பேரூராட்சி, என்.ஜி. புதூர் கிராமத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

60—

குடிநீர் வசதி

வினா எண் 5235—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை நகராட்சி, கலைஞர் நகர் பகுதியில் குடிநீர் வசதி செய்து தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில் உள்ள கலைஞர் நகர் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 3 பொதுக் குழாய்கள், 3 ஆழ்துளைக் கிணறுகள், 6 வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் மூலமும் திருமூர்த்தி அணை மற்றும் பாலாறு ஆகியவையிலிருந்தும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதி குடிநீர் தட்டுப்பாடு அற்றது.

61—

குடிநீர் வசதி

வினா எண் 5236—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சியில் பொதுக் குழாய் அமைத்து குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சியில் அனைத்துப் பகுதிகளிலும் போதுமான

எண்ணிக்கையில் 174 பொதுக்குழாய்கள் அமைக்கப்பட்டு, இதன் மூலம் இந்நகராட்சியில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

62—

குடிநீர் வசதி

வினா எண் 5237—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கண்ணமநாயக்கனூர் ஊராட்சி, பாலப்பம்பட்டி, சமத்துவபுரம், ஜெஜெ. நகர் கிராமத்தில் கணக்கம்பாளையம் கூட்டுக்குடிநீர் திட்டம்மூலம் திருமூர்த்தி அணையிலிருந்து குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், கண்ணமநாயக்கனூர் ஊராட்சியைச் சேர்ந்த பாலப்பம்பட்டி, சமத்துவபுரம் மற்றும் ஜெஜெ. நகர் ஆகிய கிராமங்களுக்கு திருமூர்த்தி அணையில் இருந்து கணக்கம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க சாத்தியக்கூறு இல்லை.

63—

தெரு விளக்கு

வினா எண் 5254—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூலாங்கிணர் ஊராட்சி, பெரிய பூலாங்கிணறு கிராமம், அந்தியூர் ஊராட்சி, அண்ணா நகர் ஆகிய பகுதிகளில் தெருவிளக்கு வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பூலாங்கிணறு ஊராட்சி, பெரிய பூலாங்கிணறு பகுதியில் 23 தெருவிளக்குகளும், அந்தியூர் ஊராட்சி, அண்ணாநகர் பகுதியில் இரு தெருவிளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

64—

குடிநீர் வசதி

வினா எண் 5265—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, கிராமப் பஞ்சாயத்துகளுக்கு போதுமான குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள 12 ஊராட்சிகளிலும் போதுமான குடிநீர் வசதி செய்து தரப்பட்டு உள்ளது. மேற்கண்ட 12 ஊராட்சிகளிலும் குடிநீர் பிரச்சினை ஏதும் ஏற்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

65—

கூடுதல் வகுப்பறைகள்

வினா எண் 5282—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்கு ஊராட்சியில் லட்சுமாயூர் தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பு அறைகள் கட்டித் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தெசவிளக்கு ஊராட்சியில் உள்ள லட்சுமாயூர் கிராம தொடக்கப் பள்ளி 2002-2003-ஆம் ஆண்டில் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்த நடுநிலைப் பள்ளியில் 390 மாணவ/மாணவியர் கல்வி பயில்கின்றனர். இந்த எண்ணிக்கையுள்ள மாணவர்களுக்கு தற்போதுள்ள 5 பள்ளிக் கட்டடங்கள் போதுமானதால் புதிய கட்டடம் தேவைப்படவில்லை.

66—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 5343—திரு. ஓ. கே. சின்னராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில், அத்திக்கடவு பில்லூர் அணைப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், அத்திக்கடவு பில்லூர் அணைப் பகுதிகளில் உள்ள பழங்குடியினர் வசிக்கும் 11 குடியிருப்புகளில் 7 குடியிருப்புகளுக்கு ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் கையிறைப்பான்கள் மூலம்போதுமான அளவு(40 எல்பிசிடி) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதர 4 குடியிருப்புகளுக்கு போதுமான அளவு குடிநீர்வழங்கும் வகையில் நடப்பு நிதியாண்டில் திட்டமிடப்பட்டு, குடிநீர்த்திட்டப்பணிகள் தற்போது முன்னேற்றத்தில் உள்ளன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

67—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 5344—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் துவக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் நகராட்சியின் 2001-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 66,313 ஆகும். மேலும், இந்நகராட்சிக்கு 2007-08 ஆம் நிதியாண்டு பாதாள சாக்கடைத் திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

68—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 5361—திரு. கே.எல். இளவழகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் துவக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகரில் பாதாள சாக்கடை திட்ட ஆய்வுப்பணிகள் நடவடிக்கையில் உள்ளது. ஆய்வுப்பணிகள் முடிவுற்றபின்பு, நிதியாதாரங்கள் இறுதி செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

69—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 5362—திரு. கே.எல். இளவழகன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகரில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், ஆற்காடு நகராட்சியில் தற்போது வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பாலாற்றில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீருறிஞ்சி கிணறு மற்றும் ஏற்கெனவே உள்ள இரண்டு நீருறிஞ்சி கிணற்றிலிருந்தும் இயற்கையான மணல் பரப்பு மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புதிய சேகரிப்பு கிணறுமூலம் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மோட்டார் பம்பு செட்டினை கொண்டு நகருக்கு நல்ல சுத்திகரிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2011 பிப்ரவரி 10]

70—

இடம் ஒதுக்குதல்

வினா எண் 5385—திரு. எம்.ஆர். சுந்தரம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆத்தூரில் சந்தை அருகில் லாரி, வேன் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆத்தூர் நகராட்சியில் பிரதிவாரம் வாரச் சந்தை நடைபெறும் இடம் குத்தகைக்கு விடப்பட்டு, 2008-2009 ஆம் ஆண்டிற்காக ரூ. 1,70,000/-க்கு ஏலம் விடப்பட்டுள்ளது. அதன் அருகில் குடியிருப்பு பகுதிகள் உள்ளதாலும் நகராட்சிக்கு சொந்தமான காலி இடங்கள் ஏதும் இல்லாததாலும் லாரி, வேன் போன்றவை நிறுத்துவதற்கு இடம் வழங்க இயலாது.

71—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 5390—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காவிரி ஆற்றிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் விரைவில் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள 5 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 3,163 ஊரக

குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை ரூ.616.00 கோடி செலவில் செயல்படுத்த அரசாணை (நிலை) எண் 146, நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை, நாள் 1-12-2006-ல் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்மூலம் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 4 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் 2,322 ஊரகக் குடியிருப்புகள் பயன் பெறும்.

72—

தெரு விளக்கு

வினா எண் 5407—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் தொகுதி, அரசம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட அனைத்து கிராமங்கள் தளிப்பட்டியிலிருந்து ராமசாமி கொட்டாய், வீரமலை கிராம பகுதி, குட்டி வெடிச்சம்பட்டி, கொட்டாவூர் ஆகிய கிராம பகுதிகளுக்கு தெருவிளக்கு அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் தொகுதி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அரசம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட அனைத்து கிராமங்களிலும் தற்போது 186 தெருவிளக்குகள் (குழல், சோடியம், சோலார், மெர்குரி ஆகிய விளக்குகள் சேர்த்து) போடப்பட்டுள்ளது, தளிஅள்ளி ஊராட்சியில் 71 தெருவிளக்குகளும், வீரமலை ஊராட்சியில் 86 தெருவிளக்குகளும், சௌட்ட அள்ளி ஊராட்சியில் 89 தெருவிளக்குகளும் அமைக்கப்பட்டு (குழல், சோடியம், சோலார், மெர்குரி ஆகிய விளக்குகள் சேர்த்து) பயன்பாட்டிலுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

73—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 5424—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, ஆண்டிப்பட்டி-சேடபட்டி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தொட்டப்பநாயக்கன் பஞ்சாயத்து, நடுப்பட்டி காலனி மற்றும் இ. புதுப்பட்டி பிரதான தெருவில் குடிநீர் வழங்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தொட்டப்பநாயக்கனூர் ஊராட்சிக்குட்பட்டுள்ள இ.புதுப்பட்டி குடியிருப்பின் பிரதான தெருவிற்கு இ. புதுப்பட்டியில் அமைந்துள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து 9/2006 ஆம் மாதத்திலிருந்து பைப்லைன் விஸ்தரிப்பு செய்து, ஊராட்சி நிர்வாகம் மூலமாக கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நடுப்பட்டி காலனி பகுதி மக்களுக்கு 2003-04 ஆம் ஆண்டு, சுவஜல்தாரா திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனிமின் விசைத்திட்டம் அமைக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆண்டிப்பட்டி-சேடப்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் வழங்கும் சுத்திக்கரிக்கப்பட்ட குடிநீர் தொட்டப்ப நாயக்கனூர் ஊராட்சி நிதியிலிருந்து பகிர்மான குழாய் அமைத்து நடுப்பட்டி காலனி பகுதிக்கு ஜூலை 2007 முதல் சீரான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

[2011 பிப்ரவரி 10

74—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 5426—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, ஆண்டிப்பட்டி, சேடபட்டி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வடுகபட்டி ஊராட்சி. செங்கம்பட்டி காலனி, புதிய பழைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியிலுள்ள கொங்கபட்டி காலனிக்கு தேவையான குடிநீர் ஆண்டிப்பட்டி-சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் கொங்கபட்டியில் உள்ள 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. கொங்கபட்டியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து கொங்கபட்டி காலனிக்கு பகிர்மான குழாய் நீட்டிப்பு செய்து இரண்டு தெருக் குழாய்கள்மூலம் தற்போது குடிநீர் வழங்கப்படுகிறது. கொங்கபட்டி காலனிக்கு தனியாக ஒரு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டமும் உள்ளது. இது நல்லமுறையில் இயங்கி வருகிறது.

75—

இணைப்புச் சாலை

வினா எண் 5479—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இராதாபுரம்-ஆத்தங்கரை பள்ளிவாசல் சாலையில் இணையநயினார்குளம், சிதம்பராபுரம் ஊர்களுக்கு இடையில் வட்டவிளை விலக்கிலிருந்து

2011 பிப்ரவரி 10]

பிரகாசபுரம், அழகனாபுரம், ஆத்துக்குறிச்சி, கைலாசபுரி, மங்கம்மாள் சாலை வழியாக வட்டவிளை, உறுமன்குளம் விலக்குகளுக்கு இணைப்புச் சாலை அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

76—

குடிநீர்க் குழாய் அமைத்தல்

வினா எண் 5488—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உறுமன்குளம் ஊராட்சி, இடையன்குடி பிரதான சாலை திசையின்விளை, கிழநந்தன்குளம் கிழத் தெருவில் குட்டம் ஊராட்சி, தோட்டிவிளை ஆகிய பகுதிகளில் பொது குடிநீர் குழாய் அமைத்துக் கொடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உறுமன்குளம் ஊராட்சி, இடையன்குடி ஊராட்சி, குட்டம் ஊராட்சிகளில் குடிநீர் இணைப்புகள்மூலம் குடிநீர் விநியோகம் சீராக நடைபெற்று வருகின்றது.

77—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 5491—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கூடன்குளம் ஊராட்சி, கூடன்குளம் புறநகர் (பைபாஸ்) சாலை மேற்குப் பகுதி அடங்கார் குளம் ஊராட்சி, ஊரல்வாய்மொழி பகுதி, ஆ. திருமலாபுரம் கிராமப் பகுதி, குமாரபுரம் ஊராட்சி, ஏறாந்தை விஜயாபதி ஊராட்சி, தில்லை வனந்தோப்பு, சிதம்பராபுரம் ஊராட்சி, அத்துக்குறிச்சி, கண்ணநல்லூர் ஊராட்சி, தாமரைக்குளம், கோவன்குளம் ஊராட்சி, கோவன்குளம் ஆகிய பகுதிகளுக்கு சீராக தாமிரபரணி தண்ணீர் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கூடன்குளம் ஊராட்சி, கூடன்குளம் புறநகர் (பைபாஸ்) சாலை மேற்குப் பகுதி அடங்கார் குளம் ஊராட்சி, ஊரல்வாய்மொழி பகுதி, ஆ. திருமலாபுரம் கிராமப் பகுதி, குமாரபுரம் ஊராட்சி, ஏறாந்தை விஜயாபதி ஊராட்சி, தில்லை வனந்தோப்பு, சிதம்பராபுரம் ஊராட்சி, அத்துக்குறிச்சி, கண்ணநல்லூர் ஊராட்சி, தாமரைக்குளம், கோவன்குளம் ஊராட்சி, கோவன்குளம் ஆகிய பகுதிகளுக்கு சீராக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

78—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 5536—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் துவங்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தமிழக அரசின் கொள்கை முடிவின்படி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளுக்கும் பல்வேறு கட்டங்களாக பாதாள

2011 பிப்ரவரி 10]

சாக்கடைத் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகையால் திருப்பத்தூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

79—

சாலை வசதி

வினா எண் 5629—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, ஏகாபுரம் வண்ணாங்காடு முதல் மாக்காண்காடு வழியாக தைலாங்காட்டுக்கு சாலை வசதி செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

80—

பாலம் கட்டுதல்

வினா எண் 5634—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, முல்லக்காடு வேம்பனேரியிலிருந்து மணியகாரம்பாளையம் ஏரி வாய்க்காலில் பாலம் கட்டப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, முல்லக்காடு வேம்பனேரி மணியகாரம்பாளையம் ஏரி வாய்க்காலில் 2008-09ஆம் ஆண்டில் ரூ.1 லட்சம் மதிப்பீட்டில் தாதாபுரம் ஊராட்சி நிதியில் பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 பிப்ரவரி 10

81—

மின் மயானம் அமைத்தல்

வினா எண் 5646—திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி நகராட்சியில் மின்மயானம் அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

82—

சந்தை அமைத்தல்

வினா எண் 5683—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில் விவசாய மக்களின் நலன் கருதி ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு சந்தை கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் மக்கள் தொகை அதிகமாக உள்ள 4 ஊராட்சிகளில் ஏற்கெனவே வாரச்சந்தை உள்ளது. இதர 16 ஊராட்சிகளில் மக்கள் தொகை குறைவாக உள்ளதால் சந்தை அமைக்க வாய்ப்புகள் இல்லை. தேவைப்படும்போது அனைத்து ஊராட்சிகளிலும் படிப்படியாக வாரச்சந்தை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2011 பிப்ரவரி 10]

83—

குடிநீர் வசதி

வினா எண் 5698—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, பாலப்பம்பட்டி கிராமம், மானுப்பட்டி ஊராட்சி, தெற்கு ஆதிதிராவிடர் பகுதி, மானுப்பட்டி ஆதிதிராவிடர் காலனி, ஆலாம்பாளையம் கிராமம் ஆகிய இடங்களுக்கு கணக்கம்பாளையம் திட்டத்தில் சேர்த்து குடிநீர் வசதி செய்து தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, பாலப்பம்பட்டி கிராமம், மானுப்பட்டி ஊராட்சி, தெற்கு ஆதிதிராவிடர் பகுதி, மானுப்பட்டி ஆதிதிராவிடர் காலனி, ஆலாம்பாளையம் கிராமம் ஆகிய இடங்களுக்கு கணக்கம்பாளையம் கூட்டு குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

84—

ஆழ்துளைக் கிணறு சரிசெய்தல்

வினா எண் 5711—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஆலாம்பாளையம் கிராமத்தில் கிழக்குப் பகுதியிலுள்ள ஆழ்துளை கிணற்றை சரி செய்ய அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, ஆலாம்பாளையம் கிராமத்தில் கிழக்குப் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறு மின் மோட்டார் குழாய்கள் சரி செய்யப்பட்டுள்ளது.

85—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 5730—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், முக்கரும்பூர் வல்லம் பிரதான சாலை இணைக்கும் இணைப்பு சாலை நாச்சிக்கட்டளை-தலைச்சங்காடு வரை செம்பனார் கோயில் காவேரி ஆற்றங்கரை-மருதூர் பிரதான சாலை வரை தார்ச் சாலையாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், முக்கரும்பூர் வல்லம் பிரதான சாலை, தலைச்சங்காடு வரை செம்பனார்கோயில் காவிரி ஆற்றங்கரை மருதூர் பிரதான சாலை வரை தார்ச் சாலையாக மாற்றிட தற்போது ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதியில்லை. நிதி ஒதுக்கப்படும்போது இப்பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

86—

ஊதியம் வழங்குதல்

வினா எண் 5756—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்கள்/ பகுதி நேர எழுத்தர்கள்/மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குநர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்கு மாத ஊதியம் ஒன்றியத்தின்மூலம் குறிப்பிட்ட தேதிக்குள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி உதவியாளர்கள்/பகுதி நேர எழுத்தர்கள்/மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோர் ஊராட்சிப் பணியாளர்கள் ஆவார்கள். எனவே, அவர்களுக்கு ஊராட்சி நிதியிலிருந்து மாதந்தோறும் தொகுப்பு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்கள் ஊராட்சி பணியாளர்களால், அவர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் மாத ஊதியம் வழங்க வேண்டிய நிலை எழவில்லை.

87—

ஊராட்சி அமைத்தல்

வினா எண் 5764—திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதியில் ஜங்கால்பட்டி ஊராட்சி, நாகராபுரம் ஊராட்சி ஊஞ்சாம்பட்டி ஊராட்சி, முத்துலாபுரம் ஊராட்சியினை பிரித்து புதிய ஊராட்சிகள் அமைக்க அரசு முன் வருமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தேனி தொகுதியில் ஜங்கால்பட்டி ஊராட்சி, நாகராபுரம் ஊராட்சி, ஊஞ்சாம்பட்டி ஊராட்சி, முத்துலாபுரம் ஊராட்சியினை பிரித்து புதிய ஊராட்சிகள் அமைப்பதற்கு தற்போது வழிவகை இல்லை.

88—

குடிநீர் விநியோகம்

வினா எண் 5766—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் ஒன்றியம், ராமாபுரம் சிற்றூராட்சி, தண்டகாரன்குப்பம், கொல்லத்தங்குறிச்சி, பக்கிரி மான்யம், ராமாபுரம், வாலிஸ்பேட்டை ஆகிய கிராமங்களில் உள்ள கடுமையான குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் ஒன்றியம், ராமாபுரம் சிற்றூராட்சி, தண்டகாரன்குப்பம், கொல்லத்தங்குறிச்சி, பக்கிரி மான்யம், ராமாபுரம், வாலிஸ்பேட்டை ஆகிய கிராமங்களில் உள்ள குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

89—

தனி ஒன்றியம்

வினா எண் 5767—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் ஒன்றியத்திலும் சிதம்பரம் தொகுதியிலும் வரும் ஸ்ரீமுஷ்ணம் பகுதியைத் தனி ஒன்றியமாக ஆக்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் ஒன்றியத்திலும் சிதம்பரம் தொகுதியிலும் வரும் ஸ்ரீமுஷ்ணம் பகுதியைத் தனி ஒன்றியமாக ஆக்க நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

90—

பேருந்து நிலையம்

வினா எண் 5806—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, தெலுங்குபாளையம் பகுதியில் பேருந்து நிலையம் அமைத்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

91—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 5861—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, அரசம்பட்டியிலிருந்து பெண்டா அள்ளி வரை உள்ள 2.கி.மீ. மண் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, அரசம்பட்டியில் இருந்து பெண்டரஅள்ளி வரை உள்ள 2 கி.மீ. தூரம் மண்சாலையாக உள்ளது. அதில் ஒரு பகுதி 1.2 கி.மீ. 2005-2006 ஆம் ஆண்டு தார்ச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள சாலை தார்ச் சாலையாக மாற்ற, வரும் நிதியாண்டில் (2008-09)-ல் நடவடிக்கை எடுக்கப்படும்.

92—

சாலை செப்பனிடல்

வினா எண் 5873—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பத்தூர் தொகுதி, பெரிய ஏரிக்கரை சாலையை செப்பனிட அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் பெரிய ஏரிக்கரை சாலை 2008-09-ம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

93—

கால்வாய் புதுப்பித்தல்

வினா எண் 5877—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், பால்நாங்குப்பம் ஊராட்சி, பாப்பண்ண ஏரி கால்வாயை புதுப்பித்து தர அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பால்நாங்குப்பம் ஊராட்சி, பாப்பண்ண ஏரி கால்வாய் தூர்வார சுமார் ரூ.1.00 லட்சம் தேவைப்படும். இப்பணியை 2007-08 ஆம் ஆண்டு, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் (என்.ஆர்.இ.ஜி.பி.) அல்லது எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தில் மேற்கொள்ள முன்னுரிமை வழங்கப்படும்.

94—

கால்வாய் அமைத்தல்

வினா எண் 5975—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, பார்பானூர் கிராம ஏரிக்கு புதிய கால்வாய் (வாய்க்கால்) அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, பார்பானூர் ஏரிக்கு புதிய கால்வாய் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

95—

தூர் வாருதல்

வினா எண் 5976—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

திருப்பத்தூர் தொகுதி, கொடுமாம்பள்ளி புது ஏரி, கோடி ஏரியிலிருந்து கொடுமாம்பள்ளி ஏரிக்கு தண்ணீர் வரும் கால்வாயை தூர்வார அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த புதிய ஏரியிலிருந்து கொடுமாம்பள்ளி ஏரிக்கு தண்ணீர் செல்லும் கால்வாய் தூர்வாரும் பணி 2008-09-ம் ஆண்டு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படும்.

96—

தூர் வாருதல்

வினா எண் 5978—திரு. தி.க. இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், அனந்தனேரி தூர் வாரப்பட்டு மாசடைந்த நீர் மாற்றப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், அனந்தனேரி தூர்வாரும் பணி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படும்.

97—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 5980—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

திருப்பத்தூர் தொகுதி, புதுபூங்குளத்திலிருந்து ஜம்மனாபுதூர் செல்லும் சாலை தார் சாலையாக மாற்றப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஏ.கே. மோட்டூர் புதுபூங்குளத்திலிருந்து ஜம்மனாபுதூர் இணைப்பு சாலையானது பாரத் நிர்மான் கட்டம்-I (Phase-I) - 2007-2008 மூலம் மேம்பாடு செய்வதற்கு திட்ட மதிப்பீடு ரூ.23.27 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, மாநில தொழில் நுட்ப குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, தேசிய ஊரக சாலைகள் மேம்பாடு குழுமத்தின் (NRRDA) அங்கீகாரத்திற்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

98—

கிணறு ஆழப்படுத்துதல்

வினா எண் 5993—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், திம்மரைமத்தூர் ஊராட்சி, பசலிகுட்டை கிராம மக்களின் குடிநீர் பிரச்சனையை போக்க திறந்தவெளி கிணற்றை ஆழப்படுத்த அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நிலத்தடி நீர் ஆய்வாளர் சர்வே செய்து தேசிய ராஜீவ் காந்தி குடிநீர் திட்டத்தின்கீழ் நிதிஒதுக்கீடு பெற்று கிணற்றினை ஆழப்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பரிந்துரை செய்யப்படும்.

99—

குடிநீர் வசதி

வினா எண் 5997—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, குறிஞ்சிசேரி ஊராட்சியில் சில பகுதியில் மற்றும் பெரிய பூலாங்கிணர் கிராமத்தில் வார்டு 1-ல் ராகல்பாலி ஊராட்சி, கிருஷ்ணபுரம் கிராம ஆதி திராவிடர் காலனி ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரச்சினையை போக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, குறிஞ்சிசேரி ஊராட்சி மற்றும் இதர பகுதிகளில் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தற்போது சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

100—

தனி ஊராட்சி

வினா எண் 6026—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கோனேரி குப்பம் ஊராட்சியிலிருந்து அறப்பணஞ்சேரி கிராமத்தைப் பிரித்து தனி ஊராட்சியாகவும் மற்றும் ரத்தப்பேட்டை ஊராட்சியில் திருக்காவிமேடு கிராமத்தை பிரித்து தனி ஊராட்சியாகவும் செயல்பட நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கோனேரி குப்பம் ஊராட்சியிலிருந்து அறப்பணஞ்சேரி கிராமத்தைப் பிரித்து தனி ஊராட்சியாகவும் மற்றும் ரத்தப்பேட்டை ஊராட்சியில் திருக்காவிமேடு கிராமத்தை பிரித்து தனி ஊராட்சியாகவும் செயல்படுத்த தற்போது வழிவகை இல்லை.

(ஆ) எழவில்லை.

101—

இட ஒதுக்கீடு

வினா எண் 6057—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், மூங்கில்பாடி ஊராட்சி, சேனைகவுண்டனூர் பகுதி மக்களுக்கு மயானத்திற்கு இடம் ஒதுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், மூங்கில்பாடி ஊராட்சி, சேனைகவுண்டனூர் பகுதி மக்களுக்கு போதிய மயான வசதி உள்ளது.

102—

மின்சார மயானம்

வினா எண் 6242—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

(அ) காஞ்சிபுரம் நகராட்சியில் நவீன மின்சார மயானம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

103—

பாலங்கள் கட்டுதல்

வினா எண் 6346—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, தெப்பத்துப்பட்டி ஓடை, பூதிப்புரம் சந்தனமாரியம்மன் கோயில் அருகே, வில்லாணி ஓடையின் குறுக்கே புதுநகர் பகுதி, மஞ்சமாலை ஓடையின் குறுக்கே, கல்யாணிபட்டி ஓடையின் குறுக்கே பாலங்கள் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தெப்பத்துப்பட்டி ஓடை, பூதிப்புரம் சந்தனமாரியம்மன் கோயில் அருகே, வில்லாணி ஓடை குறுக்கே புதுநகர் பகுதி, மஞ்சமாலை ஓடையின் குறுக்கே, கல்யாணிபட்டி ஓடையின் குறுக்கே பாலங்கள் கட்டிக் கொடுக்க ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் போதுமான நிதி இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

104—

பூங்கா அமைத்தல்

வினா எண் 6261—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் நகரத்தில் பூங்கா அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் நகராட்சியில் கந்தன் பூங்கா, அய்யாசாமி பூங்கா மற்றும் வைகுண்ட பெருமாள் மனைப்பிரிவு பூங்கா ஆகியவைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

105—

மயானப் பாதை

வினா எண் 6474—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலைப்பேட்டை தொகுதி, கொழுமம் ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானபாதை அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, கொழுமம் ஆதி திராவிடர் மக்களுக்கு 2004-2005-ல் மயானப்பாதை ரூ.5.05 லட்சம் செலவில் அமைத்து தரப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
VAIMAIYE VELLUM
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

106—

தார்ச்சாலை வசதி

வினா எண் 6506—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, அனுசம் தியேட்டர் பின்புறம் 100 அடி தார்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட அனுசம் தியேட்டர் பின்புறம் உள்ள 100 அடி திட்ட சாலையில் தற்போது பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

107—

இணைப்பு

வினா எண் 6567—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, குரிசிலாப்பட்டு ஊராட்சியில் பாதியும், இருணாபட்டு ஊராட்சியில் பாதியுமாக உள்ள பாப்பானூர் கிராமத்தை ஏதாவது ஒரு ஊராட்சியுடன் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, குரிசிலாப்பட்டு ஊராட்சியில் பாதியும், இருணாபட்டு ஊராட்சியில் பாதியுமாக உள்ள பாப்பானூர் கிராமத்தை ஏதாவது ஒரு ஊராட்சியுடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

108—

குடிநீர் வசதி

வினா எண் 6733—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு வள்ளியூர் ஊராட்சி, கோரியூர், காருண்யாபுரம், இராஜலிங்கபுரம் கிராமங்களுக்கு தாமிரபரணி தண்ணீர் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், தெற்கு வள்ளியூர் ஊராட்சியில் உள்ள காருண்யாபுரம் குடியிருப்பு மற்றும் இக்குடியிருப்பில் அடங்கியுள்ள இராஜலிங்கபுரம் பகுதிகளுக்கு உள்ளூரில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் 40 எல்.பி.சி.டி. குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பணகுடி—வடக்கு வள்ளியூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தை விஸ்தரிப்பு செய்து இக்குடியிருப்புகளுக்கு தாமிரபரணி தண்ணீர் வழங்கிட தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இல்லை. பணகுடி பேரூராட்சியில் உள்ள கோரியூர் பகுதியில் தாமிரபரணி தண்ணீர் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் 70 எல்.பி.சி.டி. விநியோகிக்கப்படுகிறது.

109—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 6738—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், இராஜேந்திர நகர் பகுதியை பாதாள சாக்கடைத் திட்டப் பணியில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

110—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 6740—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய நதி நீர் ஆணையத்தினரால் செயல்பட்டு வரும் பாதாள சாக்கடைப் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளித் தொகை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் தேசிய நதிநீர் பாதுகாப்பு ஆணையரக நிதியுதவியுடன் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுற்று வீட்டிணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் தொகை ரூ.*36.72* கோடியாகும். ஆனால், செயல்படுத்தும்போது தல அமைப்பின் படி சில கூடுதல் செலவினங்கள் ஏற்பட்டதால், இத்திட்டத்தில் *(10/2006)* வரை ரூ.*47.23* கோடி செலவிடப்பட்டுள்ளது.

111—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 6746—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) திருநெல்வேலி மாவட்டம், தெற்கு வள்ளியூர் ஊராட்சி, இராஜலிங்கபுரம், காருண்யாபுரம், சகாயபுரம் ஆகிய கிராமங்களை தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், தெற்கு வள்ளியூர் ஊராட்சியில் உள்ள சகாயபுரம் குடியிருப்பிற்கு வள்ளியூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே தாமிரபரணி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

காருண்யாபுரம் குடியிருப்பு மற்றும் இக்குடியிருப்பினுள் அடங்கியுள்ள இராஜலிங்கபுரம் பகுதி ஆகியவற்றிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே பணகுடி-வடக்கு வள்ளியூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தை விரிவாக்கம் செய்து இக்குடியிருப்புகளுக்கு தாமிரபரணி தண்ணீர் வழங்கிட தொழில் நுட்ப சாத்தியக்கூறுகள் இல்லை.

112—

குடிநீர் வசதி

வினா எண் 6848—திரு. வை. காவேரி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, கச்சுப்பள்ளி கிராமத்திற்கு மேட்டூர் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கிராமத்திற்கு,

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2011 பிப்ரவரி 10

மேட்டூரிலிருந்து வழங்கப்படும் காவிரி ஆற்றின் நீராதாரத்தைக் கொண்டு செயல்பட்டு வரும் இருப்பாளிக் கூட்டுக் குடிநீர்த்திட்டத்தின்மூலம் கச்சுப்பள்ளி குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

113—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 6367—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் மேட்டூர் குடிநீர் கணவாய்புதூர் ஊராட்சி, வேப்பிலை ஊராட்சி பகுதிகளுக்கு குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர்-தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்புதூர் மற்றும் வேப்பிலை ஊராட்சிகளிலுள்ள குடியிருப்புகளில் ஆழ்துளைக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்ட தனி மின்விசைத் திட்டங்கள் மூலமாகவும், சிறு மின்விசைத் திட்டங்கள் மூலமாகவும் மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

114—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 6888—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு கூட்டுக் குடிநீர் திட்டத்தினை (கடற்கரையோர கிராமம்) நிறைவேற்ற அரசு முன்வருமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தினை விரைவில் முழுமையான அளவில் நிறைவேற்ற தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

115—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 6894—திரு. மு. பரஞ்சோதி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீரங்கம் நகரில் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருச்சி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் நகரில் பாதாளச் சாக்கடை திட்டம் தேசிய நதி நீர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ரூ.132.00 கோடி ரூபாய் செலவில் மத்திய மாநில மற்றும் மாநகராட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு, 30-10-2007 முதல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

116—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 6905—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசிபுரம் நகராட்சிக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். இராசிபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கு ரூ.16.50 கோடிக்கு நிர்வாக ஒப்புதல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வழங்கப்பட்டுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இடம் தெரிவு செய்யவும், தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணியும் நடவடிக்கையில் உள்ளன.

117—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 6923—திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மறைமலை நகரில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். மறைமலை நகரில் வழங்கப்படும் குடிநீரை மேம்படுத்த தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

118—

நிரந்தர பணி நியமனம்

வினா எண் 6969—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, ராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர் திட்டம், புளோராடு குடிநீர் திட்டம், ஆகிய இரண்டு திட்டங்களிலும் பல ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக பணி நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர் திட்டம், புளோராடு குடிநீர் திட்டம் ஆகியவற்றில் பணிபுரியும் ஒப்பந்தப் பணியாளர்கள் அனைவரும் ஒப்பந்தக்காரர் மூலம் பணி அமர்த்தப்பட்டு,

2011 பிப்ரவரி 10]

ஒப்பந்தக்காரர் மூலமாகவே ஊதியம் பெறுபவர்கள். இப்பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக பணி நியமனம் செய்ய பரிசீலனை ஏதுமில்லை.

119—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 6985—திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, தேனி மற்றும் சின்னமனூர் நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தேனி தொகுதி, தேனி மற்றும் சின்னமனூர் நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் நடவடிக்கைகளில் உள்ளன.

120—

அடிப்படைப் பணிகள்

வினா எண் 7015—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் உள்ளாட்சித் துறை மூலம் நடைபெற வேண்டிய அடிப்படை பணிகள் உடனடியாக நிறைவேற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கோவை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மூலம் நடப்பு ஆண்டில் *(2007-08)* அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

11-494—38a

[2011 பிப்ரவரி 10

121—

உரம் தயாரித்தல்

வினா எண் 7201—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகராட்சி, கோட்டூர் மற்றும் வேட்டைகாரன் புதூர் சிறப்பு ஊராட்சிகளில் குப்பைகள் மூலம் உரம் தயாரிக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) உரிய நடைமுறைகளைப் பின்பற்றி 30-6-07-க்குள் இயந்திரங்கள் வாங்கி பொருத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

122—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 7272—திரு. பி.கே. சேகர் பாபு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, மீனாம்பாள் நகர் அருகே ரயில் பாதையைக் கடக்க மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2011 பிப்ரவரி 10]

123—

வாகனங்கள் நிறுத்த இடவசதி

வினா எண் 7380—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் நகரில் வாகனங்கள் நிறுத்த இட வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். உதகமண்டலம் நகரில் வாகனங்கள் நிறுத்த இட வசதி செய்துதர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

124—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 7462—திரு. கே.வீ. இராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஆப்பக்கூடல் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஆப்பக்கூடல் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசுக்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. மேலும், தனியாரிடமிருந்து விலைக்கிரையத்திற்கு நிலத்தை பெற்று பேருந்து நிலையம் அமைக்க இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

125—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 7605—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியிலுள்ள பில்லூர் மூன்றாவது குடிநீர் திட்டத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தொகுதியிலுள்ள பில்லூர் மூன்றாவது குடிநீர்த்திட்டம், பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்டு செயல்படுத்த ஆய்வில் உள்ளது.

126—

குடிநீர் வசதி

வினா எண் 7922—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கத்தில் தலைமைச் செயலக அலுவலர்கள் குடியிருப்புப் பகுதியில் உடனடியாக குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒக்கியம்-துரைப்பாக்கத்தில் தலைமைச் செயலக அலுவலர்கள் குடியிருப்பிற்கு குடிநீர் வழங்கும் திட்டம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2011 பிப்ரவரி 10]

ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிவுற்று மதிப்பீடு தயாரித்த பின்னர் அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

127—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 7923—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பள்ளங்குடி ஊராட்சியைச் சார்ந்த பெரியகொப்பியம், ஓதவந்தான்குடி, மகாராஜபுரம் பச்சைபெருமாள்நல்லூர், ஆரப்பாக்கம், கடவாசல் ஆகிய பகுதிகளை கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, பள்ளங்குடி ஊராட்சி, பெரியகொப்பியம் மற்றும் மகாராஜபுரம் பச்சைபெருமாள் நல்லூர், ஆரப்பாக்கம், கடவாசல் ஆகிய ஊராட்சிகளுக்கு ஆழ்துளைக் கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய தனி மின்விசைத் திட்டங்கள் மூலம் குடிநீர் முழு அளவில் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இயங்கிவரும் 108 கடலோரக் குடியிருப்புகளுக்கான கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 108 குடியிருப்புகளுக்கு மட்டும் வடிவமைக்கப்பட்டு உள்ளதால் 108 குடியிருப்புகள் தவிர கூடுதலாகப் பிற பகுதிகளை கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் சேர்த்திட வாய்ப்பில்லை.

128—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 7925—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரத்திற்கு தென்பெண்ணை ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சிக்கு தென்பெண்ணை ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க ரூ646 இலட்சங்களுக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஆதாரங்களை உறுதி செய்தவுடன் சிறிய மற்றும் நடுத்தர நகரக உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தின்கீழ் செயலாக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

129—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 7944—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் பாதாள சாக்கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தமிழக அரசின் கொள்கை முடிவின்படி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளுக்கும் பல்வேறு கட்டங்களாக பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த உள்ளதால், திருப்பத்தூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் 2008-2009-ஆம் நிதியாண்டில் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

130—

பாலம் கட்டுதல்

வினா எண் 7946—திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், தியாகப்ப செட்டி தெரு, கொருக்குப்பேட்டை சந்திப்பில் இரயில்வே பாதையை கடக்க பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

131—

குழாய் அமைத்தல்

வினா எண் 7961—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குண்டடம் ஒன்றியம், பெருமாள்பாளையம் ஊராட்சி, வானவராயநல்லூரில் அக்கரைப்பாளையம் அமராவதி கூட்டுக் குடிநீர் திட்ட நீருற்று நிலையத்திற்கு 2 ஆவது திட்டம் அமைத்து குழாய் பொருத்தித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், குண்டடம் ஒன்றியம், அக்கரைப்பாளையம் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் பெருமாள் பாளையம் மற்றும் வானவராயநல்லூர் சேர்க்கப்பட்டு, 30,000 லிட்டர் மற்றும் 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

எனவே, இத்திட்டத்தில் இரண்டாவதாக நீர் உறிஞ்சு மற்றும் நீர் உந்து குழாய் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

132—

தரைப் பாலம்

வினா எண் 8251—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, எர்ணாமங்கலம்-மேல்வில்வராயநல்லூர் சாலை மற்றும் வெங்கிட்டம்பாளையம்-நல்லான்பிள்ளைபெற்றான் காலனிகளுக்குச் செல்லும் வழியில் மிருகண்டா நதியின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இத்திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, எர்ணாமங்கலம்-மேல்வில்வராயநல்லூர் சாலையில் மிருகண்டா நதியின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு இல்லை. வெங்கிட்டம்பாளையம்-நல்லான்பிள்ளை பெற்றான் காலனி கிராமத்திற்கு செல்லும் வழியில் மிருகண்டா நதியின் குறுக்கே தரைப்பாலம் 2006-07 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டு உள்ளது.

133—

புதிய பாலம்

வினா எண் 8264—திரு. ஆர். கே. பாரதிமோகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, துகிலிக்கும், நரசிங்கன்பேட்டைக்கும் இடையில் புதிய பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவிடைமருதூர் தொகுதி, துகிலிக்கும் நரசிங்கன்பேட்டைக்கும் இடையில் உள்ள காவரி ஆற்றுப்பாலம் தற்போது பயன்பாட்டில் உள்ளது. புதிய பாலம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

134—

மயானம் அமைத்தல்

வினா எண் 8277—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, நால்ரோடு கஸ்பாவிற்கு மயானம் அமைத்திட அரசு நிலம் ஒதுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், நால்ரோடு கஸ்பாவிற்கு மயானம் அமைக்க அரசு புறம்போக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை எதிர்த்து இதன் அருகில் உள்ள நில உரிமையாளர்கள் வழக்கு தொடர்ந்துள்ளனர். நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

135—

மயானம் அமைத்தல்

வினா எண் 8282—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குதிரைப்பள்ளம் பொன்னி நகர் மயானம் அமைத்திட அரசு நிலம் வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் பேரூராட்சிக்குட்பட்ட குதிரைப்பள்ளம் செல்லும் சாலையில் பொன்னி நகர் உள்ளது. பொன்னி நகரைச் சுற்றியுள்ள பூமிகளின் சந்தை மதிப்பு விலை மிக அதிகமாகி உள்ளது. நகருக்கு அருகில் புறம்போக்கு நிலம் ஏதும் இல்லை. எனவே பொன்னி நகருக்கு தனியாக மயானம் அமைக்க இயலாது.

136—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 8322—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் பெருமாள்கோயில் சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் பெருமாள்கோயில் மண்சாலை ஆனைமலை ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் 2007-08 ஆம் நிதியாண்டில் ரூ. 50,000/-மதிப்பீட்டில் சாலை சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

137—

தார்ச் சாலை

வினா எண் 8326—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் எதிரில் அமைந்துள்ள வீரானம் எல்.என்.புரம்

2011 பிப்ரவரி 10]

உளுந்து மண்டி சாலையை தார்ச்சாலையாக மாற்றிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வெள்ள நிவாரண பணியின்கீழ் கோரப்பட்ட ரூ. 4.00 இலட்சம் தொகை கிடைக்கப்பெற்றவுடன் பணிகள் செய்யப்படும்.

138—

பாலம் கட்டுதல்

வினா எண் 8332—திரு. மு. பரஞ்சோதி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீரங்கம் தொகுதி, மணிகண்டம் ஒன்றியம், அதவத்தூர் கிராமம், சுண்ணாம்புகாரன்பட்டி முதல் நொண்டி திருமண்காடு வரை அரியாற்றில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். தேசிய நெடுஞ்சாலை 67-ல் அரியாற்றின் குறுக்கே ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் அமைக்க தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

139—

பாலம் கட்டுதல்

வினா எண் 8336—திரு. மு. பரஞ்சோதி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

ஸ்ரீரங்கம் தொகுதி, அந்தநல்லூர் ஒன்றியம், பேரூர்-மேக்குடி கிராமத்தில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். *2008-2009* ஆம் நிதியாண்டில் நபார்டு திட்டத்தில் சாலைகள் மேம்பாடு செய்யும் பணியில் பேரூர்-மேக்குடி சாலை கி.மீ. *0/0-1/6* சேர்க்கப்பட்டு சாலையுடன் பாலம் கட்டும் பணியும் ஒருங்கே முடிக்கப்பட்டு உள்ளது.

140—

பாலம் அமைத்தல்

வினா எண் 8337—திரு. கோ. அரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாலங்காடு ஒன்றியம், சின்னமாபேட்டையிலிருந்து வியாசபுரம் வழியாக அரக்கோணம் செல்லும் சாலையில் பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம், சின்னமாபேட்டை சாலையிலிருந்து வியாசபுரம் வழியாக அரக்கோணம் செல்லும் பாதையில் *3* சிறு பாலங்கள் (Culverts) தலா ஒரு இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு உள்ளது.

141—

பாலம் அமைத்தல்

வினா எண் 8343—திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி ஒன்றியம், மாங்கனாப்பட்டி மற்றும் கோசிப்பட்டிக்கு குறுக்கே மாங்கனாப்பட்டி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், மாங்கனாப்பட்டி மற்றும் கோசிப்பட்டிக்குச் செல்லும் சாலை சுமார் 2 கி.மீ. தூரம் உள்ளது. மேற்படி சாலையில் கண்ணூத்து ஆறு (மாங்கனாப்பட்டி ஆறு) எனுமிடத்தில் பாலம் கட்டி இணைப்புச் சாலையாக மாற்றுவதற்கு ரூ. 35.00 இலட்சம் நிதி தேவைப்படும். தற்போது, மேற்படி பாலம் கட்டத் தேவையான நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை. எனவே, தற்போது இப்பாலம் கட்ட இயலாது.

142—

பாலம் அமைத்தல்

வினா எண் 8344—திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, ஆவாரம்பட்டியிலிருந்து புங்கம்பாடி செல்லும் சாலையில் பொன்னி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆவாரம்பட்டியில் இருந்து புங்கம்பாடி செல்லும் சாலையில்

கிமீ 1/0-2/1 என்ற பகுதியில் தார்ச் சாலை அமைத்தல் மற்றும் பாலம் அமைக்கும் பணிக்கு 2006-07 ஆம் ஆண்டு பாரத பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தில் ரூ. 29.90 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளன.

143—

பாலம் கட்டுதல்

வினா எண் 8352—திரு. மு. பரஞ்சோதி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீரங்கம் தொகுதி, எல்லக்கரை கிராமம், உய்யக்கொண்டான் வாய்க்காலில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதி, எல்லக்கரை கிராமம், உய்யக்கொண்டான் வாய்க்காலில் பாலம் கட்ட ரூ.4.00 இலட்சம் மதிப்பீடாகும். இதனை சட்டமன்ற உறுப்பினர் தமது தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள பரிந்துரை செய்தால் இப்பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

144—

தடுப்புச் சுவர்

வினா எண் 8362—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, மேலிருப்பு வடக்குத் தெருவில் கால்வாய் வெட்டி தடுப்புச் சுவர் அமைத்திட அரசு முன்வருமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பண்ருட்டி தொகுதி, மேலிருப்பு வடக்குத் தெருவில் பெரியகால்வாய் 2006-07ஆம் ஆண்டு செய்து முடிக்கப்பட்டது. கரையோரம் வடக்குத் தெருவில் தடுப்புச் சுவரும் அமைக்கப்பட்டுவிட்டது.

145—

குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

வினா எண் **8663—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, மறைமலைநகர் நகராட்சியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், மறைமலைநகர் நகராட்சிக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கிடவும் மற்றும் தற்போதுள்ள நீராதாரத்தை மேம்படுத்தவும் ரூ.254 இலட்சம் மதிப்பீட்டில், 1/2008 முதல் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தினை 10/2008ல் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

146—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் **8709—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி ஆரணி பாளையம், கொசப்பாளையம் மற்றும் சைதாப்பேட்டை ஆகிய பகுதிகளை உள்ளடக்கி பாதாள சாக்கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆரணி தொகுதி, ஆரணி பாளையம், கொசப்பாளையம் சைதாப்பேட்டை ஆகிய பகுதிகளை உள்ளடக்கி ஆரணி நகராட்சிக்கு பாதாள சாக்கடை அமைக்க ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

147—

பேருந்து நிலையம்

வினா எண் 8725—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் பணியினை செயவதற்கு தற்போது ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதியில்லை. வேறு திட்டங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமானால் திட்டம் செயல்படுத்தப்படும்.

148—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 8813—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) தருமபுரி நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த ரூ. 16.53 கோடி நிதி ஒதுக்க அரசாணை 3(டி) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி.3 (2) துறை, நாள். 4-9-2006-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 28-3-2007 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி முடிவு செய்யும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று வருகிறது.

149—

சாயக் கழிவு

வினா எண் 8940—டாக்டர் க. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழசிராமணி மற்றும் மொளசி காவேரி ஆற்றில் கலக்கும் சாயக் கழிவு நீரைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தற்போது சோழசிராமணி மற்றும் காவேரி ஆற்றில் கலக்கும் சாயக் கழிவுநீர் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 10

150—

உயர்மின் கோபுர விளக்கு

வினா எண் 8974—திரு. ஞா. செந்தமிழன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சைதாப்பேட்டை தொகுதி, கோட்டூர் என்.எஸ்.கே. மேற்கு கால்வாய் கரை சாலை சந்திப்புப் பகுதியில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

151—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 8989—செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திண்டுக்கல் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணி துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் இரு கட்டமாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டு, நகரில் மிக முக்கியப் பகுதிகளில் மட்டும் முதற்கட்டமாக ரூ. 23.76 கோடி மதிப்பில் துவங்க அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்படுள்ளது. பணிகள் இரு பகுதிகளாகத் துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

2011 பிப்ரவரி 10]

152—

பாலம் கட்டுதல்

வினா எண் 9241—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, கம்மம்பட்டி ஊராட்சி, தொப்பையாற்றின் குறுக்கே கஸ்தூரிகோம்பை செல்ல பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, கம்மம்பட்டி ஊராட்சியில், தொப்பை ஆற்றின் குறுக்கே கஸ்தூரிகோம்பை செல்ல தரைமட்டப் பாலம் கட்ட ரூ. 20 இலட்சம் ஆகும். நபார்டு வங்கி கடன் உதவி திட்டத்தின்கீழ் எடுத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

153—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 9476—திரு. என். மாலைராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தச்சநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் சிதம்பரநகர், கண்டியப்பேரி, தச்சநல்லூர், கீழக்கரை ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டு வரும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் பகுதியில் வார்டு 1 முதல் 4 மற்றும் 55 (பகுதி)க்கான குடிநீர் மேம்பாட்டுத்

திட்டப் பணிகளுக்கு ரூ. 594 இலட்சங்கள் செலவில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் எலந்தைகுளம் (கண்டியரப்பேரி) மற்றும் மேலக்கரையில் (கிழக்கரை என்ற பகுதி இல்லை) ஒவ்வொன்றிலும் 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் தச்சநல்லூரில் 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் மற்றும் சிதம்பர நகரில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டப்பட்டு 5-10-2007 முதல் குடிநீர் வழங்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.

154—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 9488—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்புதூர் ஊராட்சி, நாராயணபுரம், ஜாலிக்கொட்டாய் மற்றும் எஸ்.பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள துவக்கப் பள்ளிகளுக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய்புதூர் ஊராட்சி, நாராயணபுரம், ஜாலிக்கொட்டாய் மற்றும் எஸ்.பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள துவக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு போதுமான கட்டடங்கள் உள்ளன. ஆதலால், மேற்கண்ட தொடக்கப் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

155—

தூர் எடுத்தல்

வினா எண் 9594—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கொடிக்குளம் ஊரணியைத் தூர் எடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கொடிக்குளம் ஊராட்சியைச் சார்ந்த கொடிக்குளம் ஊரணியில் நீர் நிறைந்துள்ளது. தண்ணீர் வற்றிய பின் தூர்வாரும் பணி எடுத்துச் செய்யப்படும்.

156—

தூர்வாரி மடைகள் கட்டுதல்

வினா எண் 9596—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கருமாமத்தூர் ஊராட்சி, கரிசல்பட்டி, குன்னாட்டு கண்மாயில் தூர் எடுத்து மடைகளைக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?"

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கருமாமத்தூர் ஊராட்சியில் உள்ள கரிசல்பட்டி குன்னாட்டு கண்மாய் தூர் வாரி மடைகள் கட்டிக் கொடுக்கும் பணி 2008-09 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

[2011 பிப்ரவரி 10

157—

சாலை அமைத்தல்

வினா எண் 9598—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கொடிக்குளம் ஊராட்சி, உடன்காட்டுப்பட்டியிலிருந்து முதலைக்குளம் ஊராட்சி கொசவப்பட்டி வரை சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கொடிக்குளம் ஊராட்சி, உடன்காட்டுப்பட்டியிலிருந்து முதலைக்குளம் ஊராட்சி, கொசவப்பட்டி வரை சாலை அமைக்கத் தேவைப்படும் நிலம் பட்டா நிலங்களாக உள்ளதால், மேற்படி சாலையை அமைப்பது சாத்தியமில்லை.

158—

பாலம் கட்டுதல்

வினா எண் 9604—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பூதிப்புரம் காலனி அருகில் பாலம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பூதிப்புரம் காலனி அருகில் பாலம் கட்டிக் கொடுக்க உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய பரிந்துரை செய்தால் இப்பணியினை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

2011 பிப்ரவரி 10]

159—

தார்ச் சாலை

வினா எண் 9859—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, டேனிஷ்பேட்டை முதல் ஏற்காடு வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

160—

தூர் வாருதல்

வினா எண் 10206—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், கோங்குடிப்பட்டி ஊராட்சி, பிலிப்பட்டி, பெரிய பிலிக்குளம் மற்றும் சின்னப் பிலிக்குளம் ஆகியவற்றைப் பழுதுநீக்கி தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2006-07 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா (SGRY) சிறப்புக் கூறுத் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், கோங்குடிப்பட்டி ஊராட்சி, பிலிப்பட்டி, பெரிய பிலிக்குளம் மற்றும் சின்னப்பிலிக்குளம் ஆகிய இரண்டு குளங்களிலும் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

161—

தூர் வாருதல்

வினா எண் 10539—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அழகுசமுத்திரம் ஊராட்சி, அழகுசமுத்திரம் ஏரியைத் தூர் வாரி ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அழகுசமுத்திரம் ஏரியைத் தூர் வாரி ஆழப்படுத்த தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் 2008-09ஆம் ஆண்டு இப்பணி செயல்படுத்தப்படும்.

162—

தூர் வாருதல்

வினா எண் 10540—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, சிக்கம்பட்டி ஊராட்சி, குப்பனூரில் கருப்பண்ண ஏரியைத் தூர் வாரி ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், சிக்கம்பட்டி ஊராட்சி, குப்பனூர்

2011 பிப்ரவரி 10]

கருப்பண்ண ஏரியை 2008-09 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொண்டு தூர் வாரி ஆழப்படுத்தப்படும்.

163—

வாய்க்கால் சீரமைத்தல்

வினா எண் 11091—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், செல்லப்பிள்ளை குட்டை ஊராட்சியில் உள்ள ஏரிக்குத் தண்ணீர் வரும் பூலோரி வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டுள்ளதை சரி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பிள்ளை குட்டை ஊராட்சியில் உள்ள ஏரிக்கு தண்ணீர் வரும் பூலோரி வாய்க்காலில் ஏற்பட்டுள்ள உடைப்பினைச் சீரமைக்க 2008-09 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படும்.

164—

தார்ச் சாலை

வினா எண் 11132—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அக்கரைப்பட்டி முதல் சவுதாரம் திருமணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைத்து, தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

165—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 11133—திரு. கே.பி. இராமசுவாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதியம்பட்டி முதல் சவுரிப்பாளையம் வரை திருமணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைத்துத் தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், மதியம்பட்டி ஊராட்சியில், மதியம்பட்டி முதல் சௌரிப்பாளையம் சாலை வரை உள்ள சாலை நபார்டு, ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி **(RIDF)**-*ன் கீழ் 2.00 கி.மீ. தூரம் தார்ச் சாலை அமைக்கும் பணி ரூ.30.005 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. உயர்மட்டப் பாலம் அமைக்க ரூ.1 கோடி ஆகும் என்பதால் நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்படும்.*

166—

தூர் வாருதல்

வினா எண் 11186—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட செம்பனார் கோயில் ஒன்றியம், திருச்சம்பள்ளி ஊராட்சியில் அய்யன்குளம் தூர் வாருவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட செம்பனார்கோயில் ஒன்றியம், திருச்சம்பள்ளி ஊராட்சியில் அய்யன்குளம் தூர் வாருவதற்கு தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணி நிறைவேற்றப்படும்.

167—

தார்ச் சாலை

வினா எண் 11198—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், காக்கனாம்பாளையம் ஊராட்சி, சிங்கம்பாளையத்தில் 1 கி.மீ. ஜல்லி சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, காக்கனாம்பாளையம் ஊராட்சி, சிங்கம்பாளையத்தில் உள்ள சாலை 500 மீ நீளம் ஆகும். இதில் 300 மீட்டர் 2006-07 ஆம் ஆண்டில் மாவட்ட ஊராட்சியின் மாநில நிதிக் குழு மானிய நிதி மூலம் தார்ச்சாலையாக அமைக்கப்பட்டது. மீதமுள்ள 200 மீட்டர் ஜல்லி சாலை ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் 2008-2009ஆம் ஆண்டில் ஒன்றிய பொது நிதியில் தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

168—

தரம் உயர்த்துதல்

வினா எண் 11535—திரு. வே. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கரூர் தொகுதியில், கரூர் நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி ஆகிய மூன்று நகராட்சிகளையும் சேர்த்து கரூர் மாநகராட்சியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கரூர் நகராட்சியுடன் அதன் அருகில் உள்ள பகுதிகளை இணைத்து, அந்நகராட்சியினை மாநகராட்சியாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

169—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 11538—திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, தாந்தோணி நகராட்சி மற்றும் காந்தி கிராமப் பகுதிக்குப் புதிய குடிநீர்த் (காவிரி) திட்டம் உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம், அரசு நடவடிக்கை எடுக்கும்.

170—

குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

வினா எண் 11588—திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, வைகை ஆற்றில் கழிவு நீர் கலப்பதால் பேரணை, நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, திண்டுக்கல், ஆத்தூர்,

2011 பிப்ரவரி 10]

உசிலம்பட்டிக்கும் செல்லும் குடிநீர் கிணறுகள் மாசுபடுவதைத் தடுக்க குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொகுதி, வைகை ஆற்றுப்படுகையில் உள்ள கிணறுகளில் உள்ள குடிநீர் மாதிரிகளைப் பரிசோதனை செய்ததில், மேற்படி குடிநீர் குடிப்பதற்கு உகந்ததாக அறியப்படுகிறது. மேலும், வைகை ஆற்றுப்படுகையில் நீர் உறிஞ்சு கிணறுகள் மூலமாக ஆற்றுப்படுகையில் கீழே இருந்து குடிநீர் எடுக்கப்படுவதால் குடிநீர் மாசுபட வாய்ப்பில்லை. எனவே, குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்தத் தேவையில்லை.

171—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 11608—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 6755 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அமைப்புச் செலவு ரூ.1.005.00 கோடி எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.51.65 கோடி எனவும் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 10

இத்திட்ட மதிப்பீடு ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவி பெற மாநில அரசால் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவி கிடைக்கப்பெற்றவுடன் ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

172—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 11826—திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள பொன்னமராவதி, திருமயம் அரிமளம் ஆகிய பகுதிகளுக்கு காவிரி குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியில் உள்ள பொன்னமராவதி, திருமயம், அரிமளம் ஆகிய பகுதிகளுக்கு காவிரி குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

173—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 11850—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை நகராட்சி, அருள்மிகு பரிமள ரெங்கநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை நகராட்சி, அருள்மிகு பரிமள ரெங்கநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க உயர் நீதிமன்றத்தில் தடையாணை பெறப்பட்டுள்ளதால், தற்போது நகராட்சிக்குச் சொந்தமான தரங்கம்பாடி சாலையில் உள்ள இடத்தில் பேருந்து நிலையம் அமைக்கலாம் என்று நகர்மன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

174—

பலப்படுத்துதல்

வினா எண் 11899—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கல்லூரணி கிராம பெரிய கண்மாய் கரையினைப் பலப்படுத்தித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கல்லூரணி பெரிய கண்மாய் கரை பலப்படுத்தப்பட்டு, கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் 4. கி.மீ. தூரத்திற்கு தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது.

175—

தார்ச் சாலை

வினா எண் 11946—திரு. செ. சின்னச்சாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) மருங்காபுரி தொகுதி, தாதகவண்டம்பட்டியிலிருந்து கோட்டைப்பட்டி செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, தாதகவண்டம்பட்டியிலிருந்து கோட்டைப்பட்டி செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்ற ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு (AGAMT) திட்டம் 2007-08-ல் பணி எடுத்துச் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

176—

தார்ச் சாலை

வினா எண் 11947—திரு. செ. சின்னச்சாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மருங்காபுரி தொகுதி, கார்வாடி சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், கார்வாடி சாலையை தார்ச் சாலையாக மாற்ற நபார்டு RIDF 2007-08 ஆம் ஆண்டு திட்டத்தில் ரூ.15.60 இலட்சம் மதிப்பில் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

177—

கூட்டுக் குடிநீர் திட்டம்

வினா எண் 12266—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலச்சொரிக்குளம் கிராமத்திற்கு பிரமனூரை மையமாக வைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மானாமதுரை வட்டம், திருப்புவனம் ஒன்றியம், மேலச்சொரிக்குளம் கிராமத்திற்கு பிரமனூரை மையமாக வைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்தவுடன் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

178—

சீரமைத்தல்

வினா எண் 12308—திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொள்ளாச்சி நகரில் இயங்கி வரும் லாரிப்பேட்டையை நகரின் வெளிப்பகுதியில் மாற்றித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி நகரில் இயங்கி வரும் லாரிப்பேட்டைக்கு அருகில் உள்ள பழைய இரும்பு மார்க்கெட்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

வேறு இடத்திற்கு மாற்றப்பட உள்ளதால் லாரிப்பேட்டைக்கு அதிகமான இடம் கிடைக்கும். எனவே லாரிப்பேட்டையை நகரின் வெளிப்பகுதியில் மாற்றி அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

179—

புதிய ஒன்றியம்

வினா எண் 12736—திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய இரண்டு ஒன்றியங்களைப் பிரித்து கள்ளிமந்தயத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கும், அவைகளைப் பிரிப்பதற்கும் ஏதுவாக பரிந்துரை செய்ய அரசு ஆணை (ப) எண்.131, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16-3-2007-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சில நடைமுறைகளையும், அரசின் முடிவினையும் தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய இரண்டு ஒன்றியங்களைப் பிரித்து கள்ளிமந்தயத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

180—

இணைப்பு

வினா எண் 13223—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) காங்கேயம் தொகுதி, வடசின்னாரிபாளையம் ஊராட்சியை காங்கேயத்துடன் இணைக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கும், அவைகளைப் பிரிப்பதற்கும் ஏதுவாக பரிந்துரை செய்ய அரசு ஆணை (ப) எண்.131, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16-3-2007-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சில நடைமுறைகளையும், அரசின் முடிவினையும் தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் காங்கேயம் தொகுதி, வடசின்னாரிபாளையம் ஊராட்சியை காங்கேயத்துடன் இணைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

181—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 13964—திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கீழ்கோத்தகிரி, இட்டக்கல் ஆடாவிலிருந்து இட்டக்கல் அட்டிக்கு தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2008-09 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து எடுத்துச் செய்ய குன்னூர் சட்டமன்ற

[2011 பிப்ரவரி 10

உறுப்பினர் பரிந்துரை செய்யும் பட்சத்தில், மேற்கண்ட கீழ்கோத்தகிரி இடடக்கல் ஆடாவிலிருந்து இட்டக்கல் அட்டிக்கு தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

182—

குடிநீர் வசதி

வினா எண் 14123—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம், மாவட்டம், பூம்புகார் தொகுதி மாணிக்கபங்கு ஊராட்சி ஆணைக்கோவில் கிராமத்தை கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இணைத்து குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, மாணிக்கபங்கு ஊராட்சி, ஆணைக்கோவில் கிராமத்திற்கு தற்பொழுது சீர்காழி, செம்பனார்கோவில் ஒன்றியத்திலுள்ள 133 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

183—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 14169—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள சாலைகளில் பாதசாரிகள் நடப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள நடைபாதையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம்.

184—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 14203—திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலை, இலுப்பூர் பகுதிகளுக்குக் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதிக்குட்பட்ட விராலிமலை ஊராட்சி மற்றும் இலுப்பூர் பேரூராட்சிக்கு தற்சமயம் புதுக்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு முறையே 5.50 இலட்சம் லிட்டர் மற்றும் 8.00 இலட்சம் லிட்டர் காவிரிக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

185—

பாலம் கட்டுதல்

வினா எண் 14536—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தளி தொகுதி, பெரிய பாலேகுளி கிராமத்திற்கும், திப்பசந்திரம் கிராமத்திற்கும் இடையே உள்ள ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, பெரியபாலேகுளி கிராமத்திற்கும் திப்பச்சந்திரம் கிராமத்திற்கும் இடையே உள்ள ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

186—

இணைப்புப் பாலம்

வினா எண் 14572—திருமதி சா. லீமா றோஸ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, அருவிக்கரை-அணைக்கரை இணைப்புப் பாலம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு. க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி அருவிக்கரை அணைக்கரை இணைப்புப் பாலம் கட்டும் வேலை, பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தில் 2003-2004-ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பாலம் அருவிக்கரை கிராமத்திற்கும் மாத்தூர் கிராமத்திற்கும் இடையே பரளியாற்றின் குறுக்கே 84 மீட்டர் நீளத்தில் அணைக்கரை என்ற இடத்தில் ரூ.90,44 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட இருந்தது. இவ்வேலைக்காக பெறப்பட்ட ஒப்பந்தங்கள், மதிப்பீட்டை விட அதிகமாக இருந்ததாலும் அரசு விதிகளின்படி தற்போதைய விலை நிலவரங்களுக்கேற்றவாறு திருத்திய மதிப்பீடு ரூ.114.50 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டது. இதற்கேற்ப மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

187—

ஏரிக்கரையைச் சீரமைத்தல்

வினா எண் 14632—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, பச்சப்பனெட்டி கிராமம், திம்மராயசுவாமி ஏரிக் கரையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தளி தொகுதி, பச்சப்பனெட்டி கிராமம், திம்மராயசுவாமி ஏரியின் கரையை 2007-08 ஆம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் சீரமைக்கப்பட்டுள்ளது.

188—

மயான வசதி

வினா எண் 14665—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, பூனாச்சி, முகாசிப்புதூர் கிராமம், நாகனூரில் மயான வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி, பூனாச்சி, முகாசிப்புதூர் கிராமம் நாகனூரில் 15 குடும்பமே உள்ளதாலும் இவர்கள் கன்னப்பள்ளி கிராம மயானத்தைப் பயன்படுத்தி வருவதாலும் இங்கு தனி மயானம் தேவையில்லை. தேவை எனில் ஊராட்சியே அமைத்துக் கொள்ளலாம்.

[2011 பிப்ரவரி 10

189—

சுகாதார வளாகம்

வினா எண் 14670—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பவானி தொகுதி, அட்டவணைப்புதூர் கிராமம், கோணமூக்கனூர் பகுதியில் புதிய சுகாதார வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி, அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், அட்டவணைப்புதூர் ஊராட்சிக்குட்பட்ட கோணமூக்கனூர் குக்கிராமத்தில் 155 வீடுகளுக்கு கடந்த ஆண்டுகளில் தனியார் இல்லக் கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கான 24 வீடுகளில் ஏற்கெனவே கழிப்பிடங்கள் உள்ளன. மீதமுள்ள 12 வீடுகளுக்கு முழு சுகாதாரத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மானியத்தில் கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் தற்சமயம் இப்பகுதிக்கென புதிய மகளிர் சுகாதார வளாகம் அமைக்கத் தேவையில்லை.

190—

இணைப்புச் சாலைகள்

வினா எண் 14722—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, ஜெகநாதபுரம் முதல் ஜெ. பட்டி வரை மற்றும் மேலானூரிலிருந்து குடிசைக்கரை வரை இணைப்புச் சாலைகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, ஜெகநாதபுரம் ஊராட்சி, ஜெகநாதபுரம் முதல் ஜெ.பட்டி வரை இடையிலுள்ள நிலப்பரப்பு தனியார்களுக்குச் சொந்தமானது. எனவே, இணைப்புச் சாலை அமைக்க இயலாது. மேலானூரிலிருந்து குடிசைக்கரை வரை உள்ள தூரம் 3 கி.மீ. அதில் 1 கி.மீ சாலை 2007-08 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

191—

சாலை சீரமைத்தல்

வினா எண் 14725—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் சோழவரம் முதல் பெரணமல்லூர் வரை சாலை சீரமைத்துத் தரப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சோழவரம் ஊராட்சியிலிருந்து பெரணமல்லூர் செல்லும் சாலை 2007-2008 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5,00,000/- மதிப்பீட்டில் ஓரடுக்கு ஜல்லிசாலை பணி முடிக்கப்பட்டது. மேலும் மாநில நிதிக்குழு மானியத் திட்டத்தின் மூலம் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 2,00,000/- மதிப்பீட்டில் இரண்டாம் அடுக்கு ஜல்லிசாலை பணியும் முடிக்கப்பட்டது.

192—

காளான் வளர்ப்புப் பயிற்சி

வினா எண் 15164—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு காளான் வளர்ப்புப் பயிற்சி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் ஆண்டில் 50 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு காளான் வளர்ப்புப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

193—

உரம் தயாரிக்கும் பயிற்சி

வினா எண் 15165—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மண் புழு உயிர் உரம் தயாரிக்கும் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் ஆண்டில் 44 சுய உதவிக் குழுக்களுக்கு மண்புழு உயிர் உரம் தயாரிப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

194—

கூடுதல் அதிகாரங்கள்

வினா எண் 15383—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரம் மற்றும் பொறுப்புகள் வழங்குவது தொடர்பாக பரிசிலிக்க மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர்நிலைக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகளைப் பெற்று தக்க மேல்நடவடிக்கைகள் தொடரப்படும்.

195—

பேருந்து நிலையம்

வினா எண் 15393—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை முதன்மைச் சாலையில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் புதிய பேருந்து நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகரில் அரசு போக்குவரத்துத் துறையால் பராமரிக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வரும்

[2011 பிப்ரவரி 10

பேருந்து நிலையமே போதுமானதாக உள்ளதால், நகராட்சி மூலம் வால்பாறையில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

196—

கசிவுநீர்க் குட்டை

வினா எண் 15779—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, குருக்குப்பட்டி ஊராட்சி, பாட்டப்பன் கோவில் பகுதியில் கசிவுநீர்க் குட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, குருக்குப்பட்டி ஊராட்சி, பாட்டப்பன் கோவில் பகுதியில் கசிவுநீர் குட்டை அமைக்க ரூ.5 லட்சம் மதிப்பீடு ஆகும். இதற்கு 1/3 பங்கு பொதுமக்கள் பங்குத்தொகை பெறப்பட்டால் நமக்கு நாமே திட்ட வழிகாட்டு நெறிமுறையின்படி பணி மேற்கொள்ளப்படும்.

197—

மகளிர் சுய உதவிக் குழு

வினா எண் 15800—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கறவை மாடு வாங்குவதற்கு கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட ஊராட்சிகளில் செயல்படும் சுய உதவிக் குழுக்களில், தரம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மகளிர் சுய உதவி குழுக்களில், தகுதி வாய்ந்த குழுக்கள், வருவாய் ஈட்டும் தொழில் செய்ய கறவை மாடுகள் வாங்க கடனுதவி கோரினால், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடனுதவி பெற அவர்களது கோரிக்கை வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

198—

குடிநீர் வசதி

வினா எண் 15885—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், ஓமலூருக்கு மேட்டூரிலிருந்து வழங்கப்படும் குடிநீர் கொள்ளளவினை அதிகரிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மேட்டூர், ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து ஓமலூர் பேரூராட்சிக்கு நாளொன்றுக்கு வடிவமைப்புப்படி 10,16,000 லிட்டர் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது, ஓமலூர் பேரூராட்சிக்கு நாளொன்றுக்கு 16,00,000 லிட்டர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சியில் அமைக்கப்பட்டுள்ள 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 114 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஓமலூருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவு போதுமானதாக உள்ளது.

[2011 பிப்ரவரி 10

199—

சிமென்ட் தளம்

வினா எண் 15887—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை, பிராட்வே பேருந்து நிலையத்தில் சிமென்ட் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பிராட்வே பேருந்து நிலையத்தில் அடுக்குமாடி தானியங்கி வாகன நிறுத்தம் அமைத்த பின்னர் சிமென்ட் தளம் அமைக்கும் பணி அமைக்கப்படும்.

200—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

வினா எண் 15993—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கருக்கல்வாடி ஊராட்சி, இரட்டை புளியமரம், மந்திவளவு, கிருஷ்ணம்புதூர் காட்டு வளவு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, இரட்டை புளியமரம் என்ற பகுதி கருக்கல்வாடி பிரதான

2011 பிப்ரவரி 10]

குடியிருப்பைச் சார்ந்தது. இக்குடியிருப்பிலும் மந்திவளவு குடியிருப்பிலும் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள முறையே 60,000 (மற்றும்) 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து போதுமான அளவு குடிநீர் (40 எல்பிசிடி) வழங்கப்படுகிறது. எனவே, இரட்டை புளியமரம் பகுதி குடியிருப்புக்கும், மந்திவளவு குடியிருப்புக்கும் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் சாத்தியக்கூறுகள் இல்லை. கிருஷ்ணம்புதூர் காட்டுவள்வு பகுதி கிருஷ்ணன் புதூர் H.C. என்ற புதிய குடியிருப்பைச் சார்ந்தது. இப்புதிய குடியிருப்புக்கு வரும் நிதியாண்டில் (2007-2008) முன்னுரிமை அடிப்படையில் குடிநீர்த் திட்டம் செயலாக்க பரிசீலிக்கப்படும்.

201—

ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 16795—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையம்பட்டி ஒன்றியம், கஞ்சிநாயக்கன்பட்டி, கணவாய்புதூர், கொங்குப்பட்டி ஆகிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையம்பட்டி ஒன்றியம், கஞ்சிநாயக்கன்பட்டி, கணவாய்புதூர், கொங்குப்பட்டி ஆகிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிப்பதற்கு தற்போது வழிவகை இல்லை.

202—

பாலம் கட்டுதல்

வினா எண் 16811—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், முடிகண்டநல்லூர் ஊராட்சி, வக்காரமாரியிலுள்ள இராஜன் வாய்க்காலில் பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், முடிகண்டநல்லூர் ஊராட்சி, வக்காரமாரியிலுள்ள இராஜன் வாய்க்காலில் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

203—

பாலம் கட்டுதல்

வினா எண் 17575—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி ஊராட்சி, மனக்காட்டூருக்கும் பேக்காடூருக்கும் இடையே பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தொளசம்பட்டி ஊராட்சி, மனக்காட்டூருக்கும் பேக்காட்டூருக்கும் இடையே சிறுபாலம் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் 2009-2010-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதிமூலம் மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

204—

கிணறுகள் அமைத்தல்

வினா எண் 17788—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் ஜீவன்தாரா திட்டத்தில் கிணறுகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜீவன்தாரா திட்டம் தற்போது செயல்பாட்டில் இல்லாததால் அத்திட்டத்தின்கீழ் கிணறுகள் அமைக்க வாய்ப்பில்லை.

205—

குடிநீர் வசதி

வினா எண் 17835—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குண்டடம் ஒன்றியம், கொக்கம்பாளையம் ஊராட்சி, செ.அம்மாபாளையம் கிராம ஆதி திராவிடர் காலனிக்கு காவிரி குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் செ. அம்மாபாளையம் ஆதி திராவிடர் காலனிக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

206—

கான்கிரீட் சாலை

வினா எண் 17856—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குண்டடம் ஒன்றியம், ஆறுத்தொழுவு ஊராட்சி, தேவணாம்பாளையம், ஆதி திராவிடர் காலனியில் கான்கிரீட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், குண்டடம் ஒன்றியம், ஆறுத்தொழுவு ஊராட்சி, தேவணாம்பாளையம், ஆதி திராவிடர் காலனியில் 2007-08 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

207—

வனத் துறையிடம் ஒப்படைத்தல்

வினா எண் 17878—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்கு ஊராட்சியிலுள்ள கசப்பேரியை வனத் துறையில் ஒப்படைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தெசவிளக்கு ஊராட்சிக்குச் சொந்தமான கசப்பேரியை வனத் துறையிடம் ஒப்படைக்கும் நோக்கம் ஏதுமில்லை.

208—

குடிநீர் வசதி

வினா எண் 17889—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், வேப்பிலை, கணவாய்புதூர் ஊராட்சிக்கு மேட்டூர் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், வேப்பிலை மற்றும் கணவாய்புதூர் ஊராட்சிகளுக்கு மேட்டூர் குடிநீர் திட்டத்தில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

209—

வீடுகள் கட்டுதல்

வினா எண் 17895—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், தொளசம்பட்டி, செம்மண்கூடல் ஊராட்சிகளில் ஆதி திராவிடர் நலத் துறையின் மூலம் காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ள விபரம் கீழ்குறித்தவாறு:

தொளசம்பட்டி ஊராட்சியில் 59 வீடுகளும், செம்மண்கூடலில் 62 வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

210—

வணிக வளாகம்

வினா எண் 17900—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி வாரச் சந்தையில் வணிக வளாகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

211—

நீர்த் தொட்டி

வினா எண் 17906—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பட்டி ஊராட்சி, தச்சங்காட்டூர் மணியாரன் வளவு பகுதியில் ஆழ்துளைக் கிணறு, சிறிய நீர்த் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பட்டி ஊராட்சி, தச்சங்காட்டூர் மணியாரன்வளவு பகுதியில் ஆழ்துளைக் கிணறு மூன்று ஏற்கெனவே உள்ளது. 2008-09 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியில், இந்த ஆழ்துளை கிணற்றில் இரண்டு சின்டெக்ஸ் டேங்க் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

212—

ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 17907—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பெரியேரியேரிபட்டி ஊராட்சியை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கும், அவைகளை பிரிப்பதற்கும் ஏதுவாக பரிந்துரை செய்ய அரசு ஆணை (ப) எண் 131, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16-3-2007-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சில நடைமுறைகளையும், அரசின் முடிவினையும் தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பெரியேரியேரிபட்டி ஊராட்சியை இரண்டாகப் பிரிப்பதற்கு தற்போது வாய்ப்பு இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

213—

கூடுதல் கட்டடம்

வினா எண் 17930—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, கொப்பக்கரை துவக்கப்பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊராட்சி ஒன்றியம், திப்பிரெட்டி அள்ளி ஊராட்சி, கொப்பக்கரை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கைக்கு தற்போது உள்ள கட்டடங்கள் போதுமானதாக உள்ளது. எனவே, இத்தொடக்கப்பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான தேவை எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

214—

ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 17951—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, மானியதஅள்ளி ஊராட்சியினை இரண்டாகப் பிரிக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கும், அவைகளை பிரிப்பதற்கும் ஏதுவாக பரிந்துரை செய்ய அரசு ஆணை (ப) எண் 131, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16-3-2007-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சில நடைமுறைகளையும், அரசின் முடிவினையும் தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் தருமபுரி தொகுதி, மானியதஅள்ளி ஊராட்சியினை இரண்டாகப் பிரிப்பதற்கு தற்போது வாய்ப்பு இல்லை.

215—

குடிநீர்

வினா எண் 18204—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், தெற்கு வள்ளியூர் ஊராட்சி, சுப்பிரமணியபுரம் பகுதியில் பொது தண்ணீர் குழாய்ப் பதித்து தாமிரபரணி குடிதண்ணீர் வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், தெற்கு வள்ளியூர் ஊராட்சி, சுப்பிரமணியபுரம் கிராமத்திற்கு தனி குழாய்ப் பதித்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

216—

சமத்துவபுரம் அமைத்தல்

வினா எண் 18221—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் புதியதாக சமத்துவபுரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் தென்சங்கம்பாளையம் கிராமத்தில் 1999-2000 ஆண்டில் சமத்துவபுரம் திட்டத்தின்கீழ் 100 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. ஒரே சட்டமன்றத் தொகுதியிலோ அல்லது ஊராட்சி ஒன்றியப் பகுதியிலோ மீண்டும் சமத்துவபுரம் அமைக்க வழிவகை இல்லை. எனவே, வால்பாறை தொகுதியில் புதியதாக சமத்துவபுரம் அமைக்க இயலாது.

217—

வீட்டு வசதி

வினா எண் 18298—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், முதலைக்குளம் ஊராட்சி, முதலைக்குளம் கிழக்குக் காலனி மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், முதலைக்குளம் ஊராட்சி கிழக்கு காலனியில் தொகுப்பு வீடுகள் 2007-2008 நிதியாண்டில் ஆதி திராவிடர் பிரிவில் ஒரு நபருக்கும், பொதுப்பிரிவில் ஒரு நபருக்கும் ஆக இருவருக்கு தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளது.

218—

நீருந்து நிலையம்

வினா எண் 18570—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நீர் உந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி வழங்கும் வகையில், காவேரிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் தனியாக, தலைமை நீரேற்று நிலையம் அமைக்க 2007-2008 ஆம் ஆண்டு புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.30.00 இலட்சங்களுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

219—

குடிநீர் வழங்கல்

வினா எண் 18587—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ், பள்ளநாயக்கன்பாளையம், தம்மிரெட்டிப்பாளையம் புதூர், மறவபாளையம் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளநாயக்கன்பாளையம், தம்மிரெட்டிப் பாளையம் புதூர், மறவபாளையம் ஆகிய குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்று நீரினைக் கொண்டு செயல்படுத்தப்படும் முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ், கட்டப்பட்டுள்ள 10,000 லிட்டர், 60,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின்மூலம் 2004 முதல் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

220—

குடிநீர் வசதி

வினா எண் 18588—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், முத்தூர்-காங்கேயம் குடிநீர் திட்டத்தின்கீழ், செம்மங்குழிபாளையம், திட்டம்பாளையம், காமாட்சிபுதூர், எஜமானன்புதூர் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்தப்பட்ட முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் செம்மங்குழிபாளையம், திட்டம்பாளையம், காமாட்சிபுரம் (காமாட்சிபுதூர்), எஜமானன் புதூர் ஆகிய நான்கு கிராமங்களுக்கும் 2004 முதல் காவிரி குடிநீர் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

221—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 18594—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் ஒன்றியம், பழைய கோட்டை ஊராட்சி, புது வெங்கரையாம்பாளையம் கிராமங்களுக்கு புரவிபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் ஒன்றியம் பழைய கோட்டை ஊராட்சிக்குட்பட்ட புது வெங்கரையாம் பாளையம் குடியிருப்பிற்கு ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியுடன் கூடிய புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டம் 2008-09 ஆம் ஆண்டில் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

222—

குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

வினா எண் 18648—திரு. ஞா. ஜாண் ஜோசப்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விளவங்கோடு தொகுதி, மெதுகும்மல்-களியக்காவிளை-ஏழுதேசம்-கொல்லங்கோடு கூட்டுக் குடிநீர் திட்ட சுத்திகரிப்பு நிலையப் பணிகளை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மெதுகும்மல்-களியக்காவிளை, ஏழுதேசம்-கொல்லங்கோடு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க திட்டம் ஆய்வில் உள்ளது.

223—

தூர் வாருதல்

வினா எண் 18753—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், உங்கரான அள்ளி ஊராட்சி, உங்கரான அள்ளி ஏரியைத் தூர்வாரி, ஆழப்படுத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், உங்கரான அள்ளி ஊராட்சி, உங்கரான அள்ளி ஏரியை தூர்வாரும் பணி 2008-2009 ஆம் ஆண்டு ரூ.3.00 லட்சம் மதிப்பீட்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்து செயல்படுத்தப்படும்.

2011 பிப்ரவரி 10]

224—

மருத்துவர் நியமனம்

வினா எண் 18829—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, கொற்கை கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையில் உடனடியாக மருத்துவர் ஒருவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செய்யாறு தொகுதி, கொற்கை கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைக்கு தற்பொழுது மருத்துவரை நியமிக்க இயலாது.

225—

சாக்கடை அமைத்தல்

வினா எண் 18977—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி 56-வது வட்டம், ரங்கசாமி காலனி, 2-வது வீதி, கோனார் தோட்டம், சண்முகராஜபுரம், பழனிசாமி காலனி முதல், 2-வது வீதி, ராஜரத்தினம் நகர் ஆகிய பகுதியில் பாதாள சாக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, வார்டு எண் 56, உள்ளடங்கிய பகுதியினையும் சேர்த்து ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட கோவை மாநகராட்சியின் ரூ.377.13 கோடி மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த 28-6-2007-ல் மத்திய அரசின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்புக் குழுவால் (CSMC) *அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கான நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

226—

பாதாளச் சாக்கடை வசதி

வினா எண் 18983—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, 56-வது வட்டம், பெரியதம்பி நகர் முதல் வீதி, நஞ்சப்பா கார்டன், ஏ.கே.எஸ். நகர், சண்முகா நகர், பழனியப்பா நகர், அன்னை இந்திரா நகர், பாலாஜி நகர், கருப்பண்ண பாதை ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, 56-வது வட்டத்திலுள்ள பெரியதம்பி நகர் முதல் வீதி, நஞ்சப்பா கார்டன், ஏ.கே.எஸ். நகர், சண்முகா நகர், பழனியப்பா நகர், அன்னை இந்திரா நகர், பாலாஜி நகர், கருப்பண்ண பாதை ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க

2011 பிப்ரவரி 10]

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி ஒட்டுமொத்தமான பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மதிப்பீடு தயார் செய்யவும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் தேவையான ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

227—

பாதாளச் சாக்கடை வசதி

வினா எண் 18991—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி 55-வது வட்டம், இந்திரா நகர், ரங்கப்பா லே அவுட், சரோஜினி நகர், ராஜ் நகர், அம்லு நகர், சி.ஜி.வி. நகர், முனியப்பன் நகர் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, வார்டு எண் 55 உள்ளடங்கிய பகுதியினையும் சேர்த்து ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட கோவை மாநகராட்சியின் ரூ. 377.13 கோடி மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த 28-6-2007-ல் மத்திய அரசின் ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்புக் குழுவால் (CSMC) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கான நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

228—

தார்ச் சாலை

வினா எண் 19022—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, தொட்டமஞ்சு மலை கிராமத்திற்கு தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

229—

தார்ச் சாலை

வினா எண் 19023—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, இரத்தினகிரி ஊராட்சி, குடியூர் மலை கிராமத்திற்கு தார்ச் சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, இரத்தினகிரி ஊராட்சி, குடியூர் மலை கிராமத்திற்கு தார்ச் சாலை வசதி செய்ய ரூ.30.00 இலட்சம் செலவாகும். தற்போது இதனை செயல்படுத்த ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

230—

தார்ச் சாலை

வினா எண் 19024—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, கொடகரை மலை கிராமத்திற்கு தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

231—

தெரு விளக்கு வசதி

வினா எண் 19072—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, ஈச்சனாரி ஆதி திராவிடர் பகுதியில் தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குறிச்சி நகராட்சி, ஈச்சனாரி ஆதி திராவிடர் பகுதியில் 11 குழல் விளக்குகள் மற்றும் 2 சோடியம் விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

[2011 பிப்ரவரி 10

232—

குடிநீர் வசதி

வினா எண் 19186—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஒட்டன் குட்டை கிணற்றிலிருந்து அம்மாபாளையத்திற்கு இரும்புக்குழாய் பதித்துக் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், சென்னிமலை ஒன்றியத்தின் முகாசிபிடாரியூர் ஊராட்சிக்குட்பட்ட அம்மாபாளையம் குடியிருப்பிற்கு இரும்புக் குழாய் பதிக்கும் பணி உள்ளாட்சியால் பனிரண்டாம் நிதிகுழு மானியம்மூலம் ரூ.2.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 27-7-07 அன்று பணி முடிக்கப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

233—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 19192—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, பாலத்தொழுவு கிராமத்தில் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட சென்னிமலை ஒன்றியம், பாலத்தொழுவு என்கிற ஆலமரம் குடியிருப்பிற்கு ஆழ்துளைக் கிணற்று நீரை ஆதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மக்கட் தொகை அடிப்படையில், வாரிய விதிமுறைகளின்படி, தற்போதுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானதாகையால் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் ஏற்படவில்லை.

234—

குடிநீர் வழங்கல்

வினா எண் 19196—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, கொக்கம்பாளையம் கிராமம், அம்மாபாளையம் தெருவிற்கு கொடுமுடி காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் தொடர்ந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், குண்டடம் ஒன்றியம், கொக்கம்பாளையம் ஊராட்சியில் அமைந்துள்ள அம்மாபாளையம் தெரு குடியிருப்பிற்கு முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் மேட்டுக்கடையில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் காவிரி குடிநீர் 1-2-2007 முதல் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

[2011 பிப்ரவரி 10

235—

குடிநீர் வழங்கல்

வினா எண் 19198—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, வெங்கரையாம்பாளையம் பகுதிக்கு புரவிபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், காங்கேயம் ஒன்றியம், பழைய கோட்டை ஊராட்சி, வெங்கரையாம் பாளையம் பகுதிக்கு புரவிபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நான்கு பொதுக் குழாய்கள்மூலம் 16-3-2007 முதல் காவிரி ஆறு மற்றும் உள்ளூர் நீராதாரங்கள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

236—

பாதாளச் சாக்கடை

வினா எண் 19375—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், 26-வது பகுதி, கேஎம்ஏ. நகரின் 4-வது தெருவை பாதாளச் சாக்கடைத் திட்டப் பணியில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி நகராட்சி பகுதியில் ரூ.5,200.90 இலட்சத்திற்கு தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மத்திய, மாநில அரசுகள்,

2011 பிப்ரவரி 10]

உள்ளாட்சி அமைப்பு மற்றும் மக்கள் பங்களிப்புடன் பாதாளச் சாக்கடைத் திட்டம் முடிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இதர விடுபட்ட பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்ற ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

237—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 19480—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை, பேரூர் புதுரெட்டியூர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், இடங்கணசாலை பேரூராட்சியைச் சார்ந்த புதுரெட்டியூர் குடியிருப்பு பகுதிக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 30,000 லிட்டர் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

238—

குடிநீர் வழங்கல்

வினா எண் 19494—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கூடலூர், புதுவளவு அருந்ததியர் காலனிக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 *பிப்ரவரி* 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் உள்ள கூடலூர் புதுவளவு அருந்ததியர் காலனி என்ற கூடலூர் அருந்ததியர் தெரு குடியிருப்பிற்கு *2008-09* ஆம் நிதியாண்டில் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை நீராதாரமாகக் கொண்டு குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட உள்ளது.

239—

வீட்டு வசதி

வினா எண் 203664—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, ஆண்டிக்கரை ஆதி திராவிடர் காலனிக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சி, ஆண்டிக்கரை என்ற குக்கிராமத்தில் ஆதி திராவிடர் காலனி என தனியாக இல்லை. இங்கு ஆதி திராவிட இன மக்கள் தற்போது குடியிருக்கவில்லை.

240—

பேருந்து நிலையத்தை சீரமைத்தல்

வினா எண் 20482—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் பேரூராட்சி, பேருந்து நிலையத்தை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். பணி நடைபெற்று வருகிறது.

241—

குடிநீர் வழங்கல்

வினா எண் 20484—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சிக்குக் காவிரி ஆற்றிலிருந்து கூடுதலாகக் குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் நகராட்சிக்குக் காவிரி ஆற்றிலிருந்து கூடுதலாகக் குடிநீர் வழங்கும் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஆய்வில் உள்ளது.

242—

வீட்டு வசதி

வினா எண் 20542—திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2011 பிப்ரவரி 10

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம், பூதகுடி ஊராட்சி, சாரணக்குடி ஆதி திராவிட குடும்பங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், பூதக்குடி ஊராட்சி, சாரணக்குடி குக்கிராமத்தில் ஆதி திராவிடர் குடியிருப்பில் 30 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதில் 2005-06-ம் ஆண்டு ஒரு குடும்பத்திற்கு தொகுப்பு வீடு வழங்கப்பட்டுள்ளது. 2007-08-ம் ஆண்டு எஸ்ஜி.ஆர்.வ்ய். 30%-ல் ஒரு வீடு வழங்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

243—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 20554—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி அன்னவாசல் ஒன்றியம், ஆலத்தூர் ஊராட்சி ஆதி திராவிட இன மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், ஆலத்தூர் ஊராட்சியில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை 35. இதில் 2007-08-ம் ஆண்டில் 5 பேருக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 2008-09ம் ஆண்டில் 6 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்பட உள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

244—

கிணறு அமைத்தல்

வினா எண் 20568—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம் நன்செய் இடையாறு ஊராட்சிக்குக் குடிநீர் வழங்க காவிரி ஆற்றில் புதிய கிணறு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஒன்றியம், நன்செய் இடையார் ஊராட்சியில் உள்ள குடியிருப்புகளுக்கு காவிரி குடிநீர் வழங்கும் பொருட்டு 1993-ம் ஆண்டு காவிரி ஆற்றின் கரைப்பகுதியில் கட்டப்பட்ட நீர் உறிஞ்சு கிணற்றின் கொடு திறன் குறைந்து உள்ளது. எனவே, இதனை மேம்படுத்த புதிதாக நீர் உறிஞ்சு கிணறு, மின் மோட்டார் அறை, மின் மோட்டார் மற்றும் குழாய்கள் அமைக்கும் பணிக்கு ரூ.12.11 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 06/08-க்குள் முடிக்கப்பட்டு திட்டம் பயனுக்கு கொண்டு வரப்படும். எனவே புதிய கிணறு அமைக்க அவசியம் எழவில்லை.

245—

குடிநீர் வசதி

வினா எண் 20599—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, சேண்பாக்கம், அல்லாபுரம், தொரப்பாடி பேரூராட்சிகளில் தனித்தனியே புதிய குடிநீர்த் திட்டம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேண்பாக்கம் பேரூராட்சி, குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் அனைத்தும் பிப்ரவரி 2008-ல் முடிக்கப்பட்டு தற்போது இத்திட்டம் சோதனை ஓட்டத்தில் உள்ளது.

அல்லாபுரம், தொரப்பாடி பேரூராட்சிகளுக்கு தனிக் குடிநீர்த் திட்டம் அமைக்க ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நீராதாரம் இறுதி செய்தவுடன் விரிவான மதிப்பீடுகள் தயாரித்து, நிதியாதார மற்றும் நிருவாக ஒப்புதலுக்குப் பின் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

246—

மருத்துவமனை

வினா எண் 20601—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி நகராட்சி மருத்துவமனை, அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சத்துவாச்சாரி 3-ம் நிலை நகராட்சியில் மருத்துவமனை அமைக்கும் உத்தேசம் ஏதுமில்லை.

247—

பூங்காவைச் சீரமைத்தல்

வினா எண் 20640—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சியில் உள்ள பூங்காவை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தற்போது ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு தயார் செய்யப்பட்டு வருகிறது. 2008-09-ம் நிதியாண்டில் பூங்காவினை நவீன முறையில் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

248—

தார்ச் சாலை

வினா எண் 20695—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பவானி தொகுதி, மாணிக்கம்பாளையம் கிராமம், சித்தார்குறிச்சி இணைப்புச் சாலையில் சின்னக்கவுண்டனூர் வரை புதிய தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

249—

குடிநீர்

வினா எண் 20751—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, தொட்டப்பநாயக்கனூர் ஊராட்சி, தேனி முதன்மை சாலையிலுள்ள இடையப்பட்டி மக்களுக்கு சேடப்பட்டி-ஆண்டிபட்டி கூட்டுக் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தொட்டப்பநாய்க்கனூர் ஊராட்சியில் தேனி முதன்மை சாலையிலுள்ள இடையப்பட்டி என்பது இ.புதுப்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இப்பகுதி மக்களுக்கு தேவையான மொத்த குடிநீர் அளவு 52,000 லிட்டர் ஆகும். இதில் 36,000 லிட்டர் ஆண்டிப்பட்டி-சேடப்பட்டி குடிநீர் திட்டம் மூலமாகவும், 16,000 லிட்டர் தனி மின் விசைத் திட்டம் மூலமாகவும் ஆக மொத்தம் 52,000 லிட்டர் குடிநீர் அங்குள்ள 30,000 லிட்டர் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக தினசரி வழங்கப்படுகிறது.

250—

குடிநீர் வழங்கல்

வினா எண் 20752—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, போத்தம்பட்டி ஊராட்சி, பண்ணைப்பட்டி மேற்கு பகுதி மக்களுக்கு ஆண்டிபட்டி-சேடப்பட்டி குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பண்ணைப்பட்டி கிராமத்திற்கு தினமும் 43,200 லிட்டர் குடிநீர் ஆண்டிப்பட்டி-சேடப்பட்டி குடிநீர் திட்டத்திலிருந்து வழங்கப்படுகிறது.

2011 பிப்ரவரி 10]

251—

குடிநீர் வசதி

வினா எண் 20754—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதி மக்களுக்கு அணைப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி ஒன்றியத்திலுள்ள கிராம மக்களுக்கு குடிநீர் வழங்க அமைக்கப்பட்ட அணைப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம், அனைத்து பணிகளும் 5/2008-க்குள் நிறைவு செய்து, மக்கள் பயனுக்கு கொண்டு வரப்படும்.

252—

குடிநீர் வசதி

வினா எண் 20809—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம், கசவனூர், சேனியபட்டி ஆகிய கிராமங்களுக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்ட குழாயிலிருந்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம், கசவனூர் ஊராட்சியில் உள்ள கசவனூர் மற்றும் சேனியப்பட்டி குடியிருப்புகளுக்கு அக்குடியிருப்புகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

[2011 பிப்ரவரி 10

காவிரியை நீராதாரமாகக் கொண்டு ஏற்கெனவே, செயல்படுத்தப்பட்டு வரும் மருங்காபுரி கூட்டுக் குடிநீர்த் திட்ட பிரதானக் குழாய்க்கும் இக்குடியிருப்புகளுக்கும் சுமார் 3 கி.மீ. தூரம் இருப்பதாலும் மேலும் இங்கு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு நடைமுறையில் இருப்பதாலும் இவ்விரு கிராமங்களுக்கும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

253—

குடிநீர் வசதி

வினா எண் 20810—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம், வான்திராயன்பட்டி ஊராட்சி கிராமங்களுக்கு காவிரி கூட்டுக் குடிநீர் குழாயிலிருந்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை ஒன்றியம், வானதிராயன்பட்டி ஊராட்சியில் உள்ள மொத்தம் 20 குடியிருப்புகளில் 12 குடியிருப்புகள் முழுமையான குடிநீர் வசதி பெற்று உள்ளது. மீதியுள்ள 8 குடியிருப்புகளில் அத்திப்பள்ளம் குடியிருப்பு மட்டுமே இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதர குடியிருப்புகள் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. இக்குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டுமே குடிநீர் வழங்கும் வகையில் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டதால் இவ்வூராட்சியில் உள்ள குடியிருப்புகளை இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இணைத்து காவிரி குடிநீர் வழங்க தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

2011 பிப்ரவரி 10]

254—

குடிநீர் வசதி

வினா எண் 20857—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி அணையிலிருந்து குடிநீர் வழங்கும் மானுப்பட்டி-ஜோதிபாளையம் குடிநீர்த் திட்டத்திற்கு வடிமுனைப் படுகை அமைத்துக் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், மானுப்பட்டி-ஜோதிபாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் ஏற்கெனவே வடிமுனைப் படுகை கடந்த 1990-ம் ஆண்டில் அமைக்கப்பட்டு வடிமுனைப் படுகைமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் வடிமுனைப்படுகை எண். 1 மற்றும் 2-ல் உள்ள வடிமணல் மாற்றியமைக்கப்பட்டு பயனுக்கு கொண்டு வரப்பட்டு உள்ளது. படுகை எண். 3 மற்றும் 4ல் உள்ள வடிமணலை மாற்றியமைக்க ரூ.15.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இந்நிதியாண்டில் (2008-2009) செயல்படுத்தப்பட உள்ளது.

255—

ஆய்வு மாளிகை

வினா எண் 20859—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி நகரில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை ஆய்வு செய்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு

குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் ஆய்வு மாளிகை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி நகரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் ஆய்வு மாளிகை ஏற்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை.

256—

சிமெண்ட் சாலை

வினா எண் 20863—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோயிலைச் சுற்றி சிமெண்ட் சாலை, கழிவுநீர்க் கால்வாய் வசதி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோவிலை சுற்றி அடிப்படை வசதிகள் தமிழ்நாடு சுற்றுலாத் துறை மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

257—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 20885—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூருக்கு திறந்தவெளி கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஒன்றியம், மேல்மலையனூர் ஊராட்சியைச் சேர்ந்த மேல்மலையனூர் குடியிருப்பில் திறந்தவெளிக் கிணறுகளை நீராதாரங்களாகக் கொண்டு 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய 2 குடிநீர்த் திட்டங்கள் தற்போது நல்ல முறையில் இயங்கி போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

258—

புதிய அலுவலகக் கட்டடம்

வினா எண் 21084—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பேரூராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை பேரூராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு நிதி விடுவிக்கப்பட்டு தற்போது புதிய அலுவலகக் கட்டடப் பணி நடைபெற்று வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

259—

வணிக வளாகம்

வினா எண் 21124—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் வணிக வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தேர்வுநிலை பேரூராட்சியில் வணிக வளாகம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

260—

வணிக வளாகம்

வினா எண் 21126—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் வணிக வளாகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சியில் மதுரை மண்டபம் மெயின் ரோட்டில் வணிக வளாகப் பெரிய கடைகள் 8-ம், அலுவலக வணிக வளாகக் கடைகள் 4-ம் உள்ளன. மேலும் தினசரி மார்க்கெட்டில் 10 கடைகள் உள்ளன.

2011 பிப்ரவரி 10]

இதுதவிர தினசரி மார்க்கெட் உட்பகுதியில் 24 சிறிய கடைகள் உள்ளன. மேற்படி கடைகள் தவிர புதிதாக இப்பேரூராட்சியில் வணிக வளாகம் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

261—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 21139—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தமிழகத்தின் அனைத்து நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கும் பணிகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மக்கள்தொகை மற்றும் நிதிநிலையைப் பொறுத்தும் மற்றும் மாநகராட்சிகளை ஒட்டியும் அமைந்துள்ள பேரூராட்சிகளுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. திருப்புவனம் பேரூராட்சிக்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் தற்போதைக்கு இல்லை.

262—

சமுதாயக் கூடம்

வினா எண் 21229—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பரமக்குடி ஒன்றியம், ஏனாதிக்கோட்டை கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2008-2009-ம் ஆண்டிற்கு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் ஏனாதிக் கோட்டை கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டிக்கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

263—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 21279—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதியைச் சார்ந்த துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 2007-2008 வரை பிற்பட்டோர் மற்றும் இதர வகுப்பினருக்கு 620 வீடுகளும் கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் 529 வீடுகளும் மொத்தம் 1,149 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2008-2009 ஆண்டிற்கு 134 தொகுப்பு வீடுகள் பிற்பட்டோர் மற்றும் இதரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர்.

264—

ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 21963—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) அரியலூர் தொகுதி, கண்டிராதீர்த்தம், கடுகூர், பூண்டி வடுகபாளையம் ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்: 16-3-2007-ன்படி உள்ளாட்சி அமைப்புகள் சீரமைத்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பெரம்பலூரில் இரண்டுமுறை பொது குறை கேட்டல் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. (11-7-2007 மற்றும் 27-9-2007) இந்தக் கூட்டங்களில் மேற்கண்ட ஊராட்சிகளை பிரித்தல் தொடர்பாக எந்தவிதமான பரிந்துரைகளும், மக்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களிடமிருந்து வரப்பெறவில்லை. எனவே, மேற்கண்ட ஊராட்சிகளைப் பிரிப்பதற்கான உத்தேசம் தற்போது இல்லை.

265—

திட்டப் பணி

வினா எண் 22152—திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் நகர், பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் பணியை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம்.

266—

நவீன குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

வினா எண் 22530—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) வால்பாறையில் நவீன குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை நகராட்சிக்கு சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த ரூ.221.40 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, தற்பொழுது அனைத்துப் பணிகளும் 31-8-2008-ல் நிறைவேற்றப்பட்டு இத்திட்டம் சோதனை ஓட்டத்தில் உள்ளது.

267—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 22851—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் பாதாளச் சாக்கடை திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

268—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 22852—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) வால்பாறையில் பாதாளச் சாக்கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணிகளுக்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வுப்பணிகள் முடிவடைந்த பின்னர், நிதியாதாரங்கள் இறுதி செய்யப்பட்டு திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

269—

நவீன பேருந்து நிலையம்

வினா எண் **22862**—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகராட்சியில் நவீன பேருந்து நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகரில் அரசுப் போக்குவரத்து துறையால் பராமரிக்கப்பட்டு வரும் பேருந்து நிலையமே போதுமானதாக உள்ளதால், நகராட்சிமூலம் வால்பாறையில் புதிய பேருந்து நிலையம் அமைக்க திட்டம் ஏதும் தற்போது இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

270—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 22900—திரு. சிகா. கோவிந்தசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலம்பாளையம் மூன்றாம் நிலை நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலம்பாளையம் மூன்றாம் நிலை நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த ஆரம்ப கட்டப் பணிகள் நடவடிக்கையில் உள்ளன.

271—

சிறுவர் விளையாட்டு மைதானம்

வினா எண் 22922—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலத்தில் சிறுவர் விளையாட்டு மைதானமும், பூங்காவும் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

272—

வீடுகளைச் சீரமைத்தல்

வினா எண் 23033—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர்கள் குடியிருப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திண்டுக்கல் நகராட்சிக்குட்பட்ட நெட்டுக் தெரு, முனிசிபல் காலனியில் உள்ள 35 துப்புரவுப் பணியாளர் குடிருப்புக் கட்டடங்களைச் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

273—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 23129—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட அனைத்து ஊராட்சிகளும், நகராட்சிகளும் பயன்பெறும் வகையில் ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட அனைத்து ஊராட்சிகளும், நகராட்சிகளும் பயன்பெறும் வகையில் ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்ட மதிப்பீடு மத்திய, மாநில அரசின் பரிந்துரையுடன் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவி பெறுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

274—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 23134—திரு. கே. மகேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பூர் தொகுதி, கணேசபுரம் இரயில்வே உட்கடவில் மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

275—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 23136—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னிமலை, பெருந்துறை, கருமாண்டி, செல்லிபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சென்னிமலை, பெருந்துறை, கருமாண்டி, செல்லிபாளையம் பேரூராட்சிகள் மற்றும் 69 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பணிகள் துவங்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளையும் 12/2008-ல் முடித்து மக்கள் பயனுக்குக் கொண்டுவர இலக்கிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

276—

குடிநீர் விரிவாக்கம்

வினா எண் 23159—திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நகரத்தில் குடிநீர் விரிவாக்கம் செய்யும் பணியைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் செயல்படுத்துவதற்கு ரூ.930.18 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முதல் கட்டமாக ரூ.745.00 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணியும் மற்றும் பகிர்மானக் குழாய் அமைக்கும் பணியும் தற்பொழுது நடைபெற்று வருகிறது. தலைமை நீரேற்று நிலையத்தில் மின் மோட்டார்கள் மாற்றுதல், தடுப்புச் சுவர் கட்டும் பணி, வடிதொட்டி பராமரிப்புப் பணி ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி 30-9-2008-க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

277—

சிமெண்ட் சாலை

வினா எண் 23199—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, மடிப்பாக்கம், டாக்டர் அம்பேத்கர் ஒன்றியச் சாலையை சிமெண்ட் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் மடிப்பாக்கம், டாக்டர் அம்பேத்கர் ஒன்றியச் சாலை சிமெண்ட் சாலையாக மாற்றப்படும்.

278—

ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 23204—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், நெய்தலூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கும், அவற்றைப் பிரிப்பதற்கும் மற்றும் சேர்ப்பதற்கும் தொடர்பாகப் பரிந்துரை செய்ய அரசு ஆணை (ப) எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16-3-2007-ல் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு சில நடைமுறைகளையும், அரசின் முடிவினையும் தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதனடிப்படையில் குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், நெய்தலூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிப்பதற்கு தற்போது வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

279—

புதிய வணிக வளாகம்

வினா எண் 23423—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, ஆண்டி அள்ளி ஊராட்சி, நாயகன் கொட்டாய் சந்தையில் புதிய வணிக வளாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

280—

குடிநீர் வசதி

வினா எண் 23431—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, திப்பிரெட்டி அள்ளி ஊராட்சி, கொப்பக்கரை கிராமத்திற்குக் குடிநீர் வழங்கு புதிய கிணறு ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, திப்பிரெட்டி அள்ளி ஊராட்சி, கொப்பக்கரை கிராமத்திற்குப் போதுமான அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் புதிய கிணறு அமைக்க அவசியம் எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

281—

பேரூராட்சியாக மாற்றுதல்

வினா எண் 23476—திரு. கோ. அரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் ஊராட்சியைப் பேரூராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கும், அவற்றைப் பிரிப்பதற்கும் ஏதுவாகப் பரிந்துரை செய்ய அரசு ஆணை *(ப)* எண் *131*, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் *16-3-2007*-ல் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு சில நடைமுறைகளையும், அரசின் முடிவினையும் தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் ஊராட்சியைப் பேரூராட்சியாக மாற்ற தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

282—

வீடுகளைச் செப்பனிடுதல்

வினா எண் 23594—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் ஆதி திராவிடர் காலனி வீடுகளைச் செப்பனிட சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர்களுக்காக கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்கும் பணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மட்டுமே செய்யப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் இப்பணிகளை எடுத்துச் செய்யலாம்.

283—

மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம்

வினா எண் **23627—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் டி. வேளாங்குளத்தில் மகளிர் சுய உதவக் குழுக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், டி. வேலாங்குளம் கிராமத்தில் 2003-2004 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

284—

அழகுபடுத்துதல்

வினா எண் 23651—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நகரை அழகுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை நகரை அழகுபடுத்தும் விதமாக 2006-2007-ம் நிதியாண்டு தேசிய சமவளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டில் 6 இடங்களில் பூங்கா அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு, 31-07-2008-ல் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு பூங்காக்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

285—

குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

வினா எண் 23652—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் விநியோகம் செய்யப்படும் குடிநீர் தர ஆய்வு செய்யப்பட்டதில் குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது. எனவே, குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

286—

குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

வினா எண் 23653—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், கட்டனூரில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், கட்டனூரில் விநியோகிக்கப்படும் நீரினைத் தர ஆய்வு செய்ததில் தண்ணீர் குடிப்பதற்கு உகந்ததாகவே உள்ளது. எனவே, இங்கு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

287—

அழகுபடுத்துதல்

வினா எண் 23655—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் கடற்கரையை அழகுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் நகராட்சி பகுதிக்குட்பட்ட அக்னி தீர்த்த கடற்கரைப் பகுதி

[2011 பிப்ரவரி 10

ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய அரசு சுற்றுலா அமைச்சகத்தின் 100 சதவீதம் நிதியுதவியுடன், நடைமேடை மற்றும் 21 சோலார் விளக்குகள் அமைக்கப்பட்டு கடற்கரை அழகுபடுத்தப்பட்டுள்ளது.

288—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 23692—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவுர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, கிருஷ்ணாபுரம் ஊராட்சி, கிருஷ்ணாபுரத்தில் புதிய கிணறு ஏற்படுத்தி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் குடியிருப்பின் மக்கள் தொகைக்கேற்ப 60,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மற்றும் 6 கையிறைப்பான்கள் ஆகியவை மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் புதிய கிணறு ஏற்படுத்தி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அவசியம் எழவில்லை.

289—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 23717—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகரத்தில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். காஞ்சிபுரம் நகரத்தில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

290—

குடிநீர்த் திட்டப் பணி

வினா எண் 23787—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வைகை இரண்டாம் கட்ட குடிநீர்த் திட்டப் பணி எந்த நிலையில் உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வைகை இரண்டாம் கட்ட குடிநீர்த் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பணிகளை 31-12-2008-க்குள் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

291—

சிமெண்ட் சாலை

வினா எண் 23824—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, நெல்லிக்குப்பம் நகராட்சி, திருகண்டேஸ்வரம் தோப்புத் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் நகராட்சி, திருகண்டேஸ்வரர் தோப்புத் தெருவில் ஒரு பகுதி தார்ச் சாலையாகவும் மற்றொரு பகுதி மண் சாலையாகவும் உள்ளது. இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் மேற்கொள்ள ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதால், தற்சமயம் சிமென்ட் தளம் அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை. இருப்பினும் 215 மீ. நீளம் மற்றும் 3 மீ. அகலத்திற்கு மண் சாலையாக உள்ள தோப்புத் தெருவில், வெள்ள நிவாரண நிதி 2007-08-ன்கீழ் ரூ.2.00 லட்சம் செலவில் தார்ச் சாலை அமைக்கும் பணி முடிவுற்று பயனில் உள்ளது.

292—

உயர் மின் கோபுர விளக்கு

வினா எண் 23827—திரு. சபா. இராஜேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நெல்லிக்குப்பம் சட்டமன்ற தொகுதி, மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி பிரதான சாலை சந்திப்பில் உயர் மின் கோபுர விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 2006-07-ம் ஆண்டு நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் உயர் மின் கோபுர விளக்கு ரூ.1.75 லட்சத்தில் அம்பேத்கர் சிலையருகே ஜூன் 2007-ல் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

2011 பிப்ரவரி 10]

293—

சீரமைத்தல்

வினா எண் 23937—திருமதி எஸ். தேன்மொழி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு பேருந்து நிலையத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பேருந்து நிலையம் சிமெண்ட் தளம், சிமெண்ட் ஓடுதளம், நவீன கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வசதி கொண்டதாக உள்ளதால் மேலும் சீரமைக்கும் நிலை இல்லை.

294—

சிமெண்ட் சாலை.

வினா எண் 24235—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு பேரூராட்சி, 18-வது வார்டு, கண்ணகி தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு பேரூராட்சி, 18-வது வார்டு, கண்ணகி தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2011 பிப்ரவரி 10

295—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 24243—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, கீழ்ப்பட்டு கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம், கீழ்ப்பட்டு ஊராட்சி, கீழ்ப்பட்டு கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் உள்ளது. இத்திட்டத்தின் நீராதாரம் கொடுதிறன் குறைவு காரணமாக கடந்த நிதியாண்டில் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் புதிய நீராதாரம் அமைத்து நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த சாத்தியக் கூறுகள் இல்லை.

296—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 24245—திரு. அ. ராஜன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் தொகுதியில் புதிதாகக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் தொகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு கடலோரக் குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டம் உலக்கருவியார் அணையை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மற்றும் குழித்துறையார் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவை குறித்து ஆய்வில் உள்ளது.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

297—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் **24272—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரத்தில் பாதாளச் சாக்கடை அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சியில் 2008-2009-ம் நிதியாண்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடிந்த பின்னர் இதற்கான மதிப்பீடுகள், நிதி ஆதாரம் ஆகியவை முடிவு செய்த பின்னர் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

298—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் **25141—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சாத்தியக்கூறுகள் இல்லை.

[2011 பிப்ரவரி 10

299—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 25142—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

300—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 25246—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, பொதட்டூர்பேட்டையில் புதிய பேருந்து நிலையம் அதிநவீன முறையில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தற்போதைய பேருந்து நிலையம் மேம்பாடு செய்யப்பட்டுள்ளதால், புதிய பேருந்து நிலையம் அமைக்கும் தேவை எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

301—

சுற்றுச் சுவர்

வினா எண் 25248—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பள்ளிப்பட்டுத் தொகுதி, முனிரெட்டிகண்டிகை கிராம துவக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பள்ளிப்பட்டுத் தொகுதி, முனிரெட்டிகண்டிகை கிராம துவக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் 2008-09-ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு பெற்று பணியை எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

302—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 25668—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பள்ளிப்பட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தற்போதுள்ள பேருந்து நிலையம் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது. எனவே, புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

[2011 பிப்ரவரி 10

303—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 26187—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் பாதாள சாக்கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

304—

குடிநீர் வசதி

வினா எண் 26218—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரைக் கிராமங்கள் மற்றும் 113 கிராமங்களுக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரைக் கிராமங்கள் மற்றும் 113 கிராமங்களுக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. இதுவரை 78 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகளையும் முடித்து மார்ச் 2009-க்குள் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்களின் பயனுக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

305—

கூடுதல் பள்ளிக் கட்டடம்

வினா எண் 26357—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், ஈஸ்வரமூர்த்திபாளையம் ஊராட்சியில் துவக்கப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஈஸ்வரமூர்த்திபாளையம் ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 250 மாணவ/மாணவியர் பயின்று வருகின்றனர். அப்பள்ளிக்கு இரண்டு ஓட்டுக் கட்டடங்களும், இரண்டு தார்சு கட்டடங்களும் போதுமானதாக உள்ளதால் கூடுதல் பள்ளிக் கட்டடம் தற்போது தேவையில்லை.

306—

திடக் கழிவு மேலாண்மை

வினா எண் 26382—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் பகுதியில் கிராமப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மையை முழு அளவில் அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் பகுதியில் திடக் கழிவு மேலாண்மையைச் செயல்படுத்த போதுமான துப்புரவுப் பணியாளர்கள் இல்லை. எனவே, தற்போது திடக் கழிவு மேலாண்மையைச் செயல்படுத்த இயலாது.

[2011 பிப்ரவரி 10

307—

பாதுகாக்கப்பட்ட குடிநீர்

வினா எண்—26523 திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, குக்கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் முழு அளவில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதிக்குட்பட்ட 259 குடியிருப்புகளில் 240 குடியிருப்புகளுக்கு மேட்டூர் ஆத்தூர் கூட்டுக் குடியிருப்புத் திட்டத்தின்மூலமும், காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமும், தனி மின் விசை திட்டம்மூலமும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 19 குடியிருப்புகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் திட்டம் நிறைவேற்றி முழு அளவில் குடிநீர் வழங்கப்படும்.

308—

நவீனமயமாக்குதல்

வினா எண்—26556 திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேருந்து நிலையத்தை நவீனமயமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேருந்து நிலையத்தை நவீனப்படுத்துவதற்காக ஜெர்மனி நாட்டு KFW நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ. 37.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 12-02-2008 அன்று நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2011 பிப்ரவரி 10]

309—

குடிநீர் வசதி

வினா எண்—26562 திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி 22-வது வார்டு, சேந்தமங்கலம் பிரிவு சாலை, காமராசர் நகருக்கு காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சியில் காவிரி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்ட குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளன. இத்திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டவுடன், இராசிபுரம் நகராட்சி, வார்டு எண் 22, சேந்தமங்கலம் பிரிவு சாலை, காமராஜர் நகருக்கு காவிரி குடிநீர் வழங்கப்படும்.

310—

உரம் தயாரிக்கும் மையம்

வினா எண்—26567 திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம்.

[2011 பிப்ரவரி 10

311—

பாலாற்று கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண்—26784 திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், அம்மணம்பாக்கம்-பெரும்பேடு-நடுவக்கரை-ஈச்சங்கரணை ஆகிய ஊராட்சிகளுக்கு பாலாற்று கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தைச் சார்ந்த அம்மணப்பாக்கம்-பெரும்பேடு-நடுவக்கரை-ஈச்சங்கரனை ஆகிய ஊராட்சிகளுக்கு தற்போது பாலாற்றில் போதிய நீராதாரம் இல்லாததால் பாலாற்று கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை செயல்படுத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

312—

சமுதாயக் கூடம்

வினா எண்—27221 திரு. சபா. இராஜேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, சன்னியாசிப்பேட்டை ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் (2007-2008) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சட்டமன்ற

2011 பிப்ரவரி 10]

உறுப்பினர் பரிந்துரை பெற்று நெல்லிக்குப்பம் தொகுதி, சன்னியாசிப்பேட்டை கிராமத்தில், சமுதாயக் கூடம் கட்டுவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

313—

விற்பனை செய்தல்

வினா எண்—27408 திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்ய மாவட்டம் தோறும் சிறப்புப் பொருட்காட்சிகளை நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விறபனை செய்ய மாவட்ட அளவிலான விற்பனைக் கண்காட்சிகளும் மற்றும் கோவை போன்ற பெருநகரங்களில் மண்டல அளவிலான சிறப்பு கண்காட்சிகளும் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், அரசு கண்காட்சிகளிலும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கு பெற்று உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

314—

பாலம் அமைத்தல்

வினா எண்—27449 திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி, இடையப்பட்டியிலிருந்து சுக்காம்பட்டி செல்லும் புங்காற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

315—

பாலம் அமைத்தல்

வினா எண்—27451 திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கருப்பத்தூர் ஊராட்சி, வரகூர்-வயலூர் சாலையில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

316—

பாலம் அமைத்தல்

வினா எண்—27452 திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மகாதானபுரம் ஊராட்சி, மேட்டு மகாதானபுரம் கோட்டைகளம் சாலையில் புதிதாக பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி .10]*

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் வட்டாரம், மகாதானபுரம் ஊராட்சி, மேட்டு மகாதானபுரம் சாலையில் புதியதாக பாலம் ரூ. 1.60 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய பொது நிதி மூலம் 2008-2009 ஆம் ஆண்டில் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

317—

பாலம் அமைத்தல்

வினா எண்—27453 திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாயனூர் கிருஷ்ணராயபுரம் வாய்க்காலில் பெண்கள் படித்துறை அருகில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாயனூர் கிருஷ்ணராயபுரம் வாய்க்காலில் மாரியம்மன் கோயில் அருகில் பாலம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

318—

புதிய கட்டடம்

வினா எண்—27763 திரு. மா. சந்திரகாசி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், கீழப்புலியூர், சின்னபரவாய், ஆலத்தூர், வேப்பூர் ஆகிய பகுதிகளில் இயங்கும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியத்தில், கிழப்புலியூர் ஊராட்சியில் கிழப்புலியூர், பரவாய் ஊராட்சியில் பரவாய், ஓலைப்பாடி ஊராட்சியில் கல்லை மற்றும் இரூர் ஊராட்சியில் இரூர் ஆகிய இடங்களில் ஏற்கெனவே சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடம் உள்ளது. ஒரு ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழு கட்டடம் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதால், பரவாய் ஊராட்சியில் சின்னப்பரவாய், இரூர் ஊராட்சியில் ஆலத்தூர், ஓலைப்பாடி ஊராட்சியில் வேப்பூர் ஆகிய கிராமங்களில் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்படவில்லை.

319—

சமுதாயக் கூடம்

வினா எண்—27767 திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், பெருமத்தூரில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், பெருமத்தூரில் சமுதாயக் கூடம் கட்ட வாய்ப்பு இல்லை.

2011 பிப்ரவரி 10]

320—

குடிநீர் வசதி

வினா எண்—27769 திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், பரவாய் ஊராட்சி, கல்லம்புதூர் கிராமத்திற்கு குடிநீர் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியம், பரவாய் ஊராட்சி, கல்லம்புதூர் கிராமத்திற்கு கொள்ளிடம் கூட்டு குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க வகை செய்யப்படும்.

321—

குடிநீர் வசதி

வினா எண்—27770 திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், துங்கபுரத்திற்கு வெள்ளாற்றிலிருந்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தொகுதி, வேப்பூர் ஊராட்சி ஒன்றியம், துங்கபுரம் ஊராட்சி பகுதிகளுக்கு

[2011 பிப்ரவரி 10

ஆழ்துளைக் கிணற்று நீரை ஆதாரமாகக் கொண்டு, போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழும், இப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

322—

பேருந்து நிலையம்

வினா எண்—27781 திரு. மா. சந்திரகாசி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம் வேப்பூரில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வேப்பூரில் பேருந்து நிலையம் அமைக்க ஊராட்சி/ஊராட்சி ஒன்றியம்/அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் ஏதும் இல்லாததால் பேருந்து நிலையம் அமைக்க இயலாது.

323—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 27848—திரு. மா. சந்திரகாசி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர், ஆலத்தூர் ஒன்றியங்களில், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியத்தில் உள்ள 143 குடியிருப்புகளில் 140 குடியிருப்புகளும், ஆலத்தூர் ஒன்றியத்தில் உள்ள 145 குடியிருப்புகளில், 3 குடியிருப்புகளும் கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்ட அரியலூர், வேப்பூர், செந்துறை ஒன்றியங்களைச் சார்ந்த 525 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு 80 விழுக்காடு பணிகள் முடிவுற்று உள்ளன. மீதமுள்ள பணிகள் அனைத்தும் 6/2008-க்குள் முடிக்கப்படவிருக்கின்றன.

வேப்பூர் ஒன்றியத்தைச் சார்ந்த மீதமுள்ள 3 குடியிருப்புகளுக்கு 2007-08 ஆம் ஆண்டில் தனி மின்விசைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனில் உள்ளன.

ஆலத்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த மீதமுள்ள 142 குடியிருப்புகளில் 139 குடியிருப்புகள் பெரம்பலூர் மற்றும் 82 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், பெரம்பலூர், ஆலத்தூர், வேப்பந்தட்டை, அரும்பாவூர், பூலாம்பாடி ஒன்றியங்களிலுள்ள 306 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், திருமானூர் மற்றும் ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 111 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ளன. 3 குடியிருப்புகள் தனி மின்விசைத் திட்டங்களின்கீழ் பயன்பெறுகின்றன.

324—

குடிநீர் வசதி

வினா எண் 27870—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, ரெங்கநாதபுரம் ஊராட்சியின் அனைத்து கிராமங்களுக்கும் காவிரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, ரெங்கநாதபுரம் ஊராட்சியில் உள்ள அனைத்து 12 குடியிருப்புகளுக்கும், காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு முழுமையான அளவு 40 எல்.பி.சி.டி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

325—

குடிநீர் வசதி

வினா எண் 27871—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தான்தோன்றிமலை ஊராட்சி ஒன்றியம், வெள்ளியணை ஊராட்சிக்கு திண்டுக்கல் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், தான்தோன்றிமலை ஊராட்சி ஒன்றியம், வெள்ளியணை ஊராட்சியில் உள்ள 39 குடியிருப்புகளில் 30 குடியிருப்புகளுக்கு, திண்டுக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 9 குடியிருப்புகளில் 8 குடியிருப்புகளுக்கு ஆழ்துளைக் கிணறு மற்றும் ஒரு குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் வெள்ளியணை ஊராட்சியில் உள்ள 39 குடியிருப்புகளில், 33 குடியிருப்புகளில் அமைக்கப்பட்டுள்ள 34 மேல்நிலை நீர்த் தொட்டிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு

2011 பிப்ரவரி 10]

வருகிறது. இரண்டு குடியிருப்புகளில் சிறு மின் விசைத் திட்டத்தின் (1000 லிட்டர் HDPE தொட்டி) மூலமும் 4 குடியிருப்புகளுக்கு, ஒவ்வொன்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டங்கள் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

326—

குடிநீர் வசதி

வினா எண் 27874—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, போத்துராவுத்தன்பட்டி ஊராட்சிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தைச் சார்ந்த போத்துராவுத்தன்பட்டி ஊராட்சியின் 17 குடியிருப்புகள் உட்பட 174 குடியிருப்புகளுக்கு காவிரி குடிநீர் வழங்குவதற்கு ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் நிதியாண்டில் திட்டப் பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

327—

கட்டுமானப் பணிகள்

வினா எண் 27893—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையக் கட்டுமானப் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள் முடிவுற்று 26-2-2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

328—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 27894—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி பாதாள சாக்கடைத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் ஆய்வுப் பணிகள் முடிக்கப்பெற்று முதல் கட்டமாக 16 வார்டுகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த திருத்திய மதிப்பீடு ரூ. 33.96 கோடியில் தயாரிக்கப்பட்டுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தவிர்த்து பிற பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

329—

தொகுப்பு விடுகள்

வினா எண் 27985—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், குட்டப்பட்டி ஊராட்சி, மலையடிப்பட்டி, கணக்குபட்டி, எல்லைக்குட்டையனூர்,

2011 பிப்ரவரி 10]

பழக்காரனூர். விருதாசம்பட்டி, ஏர்வாடி ஆகிய பகுதிகளில் தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், குட்டப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட குக்கிராமங்களில் கீழ்க்குறித்தவாறு தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன:—

வ எண்.	குக்கிராமத்தின் பெயர்	2007-2008 வரை
1	குட்டப்பட்டி	25
2	மலையடிப்பட்டி	16
3	கணக்குப்பட்டி	8
4	எல்லைக்குட்டையனூர்	4
5	பழக்காரனூர்	4
6	விருதாசம்பட்டி	9
7	ஏர்வாடி	55
	மொத்தம்	121

2008-2009 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன:—

வ. எண்.	குக்கிராமத்தின் பெயர்	எண்ணிக்கை
1	கணக்குப்பட்டி	2
2	பழக்காரனூர்	1
3	எல்லைக்குட்டையனூர்	2
	மொத்தம்	5

[2011 பிப்ரவரி 10

330—

ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 27988—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பெரியேரிபட்டி ஊராட்சியை இரண்டாகப் பிரித்து அம்மன் கோவில்பட்டி ஊராட்சியை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கும், அவற்றையும் பிரிப்பதற்கும் மற்றும் சேர்த்தல் தொடர்பாக பரிந்துரை செய்ய அரசு ஆணை (ப) எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16-3-2007-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சில நடைமுறைகளையும், அரசின் முடிவினையும் தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படிப்படையில் தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பெரியேரிபட்டி ஊராட்சியை இரண்டாகப் பிரித்து அம்மன்கோவில்பட்டி ஊராட்சியை ஏற்படுத்த தற்போது வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

331—

பாதுகாக்கப்பட்ட குடிநீர்

வினா எண் 28028—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் தொகுதி, புதூர் மலையாம்பட்டி கிராமத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம், பட்டணம் முனியம்பாளையம் ஊராட்சி, புதூர் மலையாம்பட்டி கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வருடம் முழுவதும் தடங்கலின்றி பொதுமக்களுக்குத் தேவையான அளவு வழங்கப்பட்டு வருகின்றது.

332—

வணிக வளாகம்

வினா எண் 28042—திரு. எஸ். இராசசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குடி தொகுதி, ஊரணிபுரம் பகுதியில் வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், தீத்தான்விடுதி ஊராட்சியில் ஊரணிபுரம் பகுதியில் 2006-2007–ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.1,05,000/- மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்பட்டு 06-02–2008 அன்று ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது.

333—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 28058—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

ராசிபுரம் தொகுதி, கீழூரிலுள்ள திறந்தவெளி குடிநீர் கிணற்றில் டீசல் என்ஜின் மூலம் குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் ஒன்றியம், கீழூர் குடியிருப்பிற்கு திறந்தவெளிக் கிணற்றில் 5 குதிரைத் திறன் (HP) டீசல் மோட்டார் பொருத்தப்பட்டு குடிநீர்த் திட்டம் 8/2006 முதல் செயல்பட்டு வருகிறது.

334—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 28060—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராசிபுரம் தொகுதி, வெண்ணந்தூர் ஒன்றியம், மின்னக்கல் ஊராட்சி கிராமங்களை பூலாம்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், வெண்ணந்தூர் ஒன்றியம், மின்னக்கல் ஊராட்சியில் உள்ள 10 கிராமங்களும், இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு தற்பொழுது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே பூலாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இணைக்க அவசியம் எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

335—

தடுப்புச் சுவர்

வினா எண் 28522—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாலவிடுதி ஊராட்சி, சாந்துவார்ப்பட்டியில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடவூர் ஊராட்சி ஒன்றியம், பாலவிடுதி ஊராட்சி, சாந்துவார்ப்பட்டியில் 2007-2008ஆம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.1,17,185/- (ரூபாய் ஒரு இலட்சத்து பதினேழாயிரத்து நூற்று எண்பத்து ஐந்து மட்டும்) மதிப்பீட்டிலான செலவில் 52 மீட்டர் நீளமுள்ள வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

336—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 28526—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கருப்பத்தூர் ஊராட்சி, உடையாப்பட்டி புங்காறு காட்டாற்றில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கருப்பத்தூர் ஊராட்சி, உடையாப்பட்டி புங்காறு காட்டாற்றில் ஏற்கெனவே தடுப்பணை கட்டப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 10

337—

பாலம் அமைத்தல்

வினா எண் 28529—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பிள்ளபாளையம் ஊராட்சி, வீரக்குமாரன்பட்டி-குளித்தலை காட்டுவாரியில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

338—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 28782—திரு. வீ.பெ. துரைசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, புள்ளாகவுண்டம்பட்டியிலிருந்து சங்ககிரி பேரூராட்சிக்கு தனியாக கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சங்ககிரி தொகுதி, புள்ளாகவுண்டம்பட்டியிலிருந்து சங்ககிரி பேரூராட்சிக்கு தனியாக கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்தும் திட்டம் தற்போது இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

339—

சிமெண்ட் சாலை

வினா எண் 28793—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செல்லும் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

340—

சுற்றுச் சுவர்

வினா எண் 28802—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பெரும்பேடு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த பெரும்பேடு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைக்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ரூ.2,00,000/- மதிப்பில் மேற்கொள்ள சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரை கோரப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யும் பட்சத்தில் 2008-2009 ஆம் நிதியாண்டில் இப்பணி எடுத்து செய்யப்படும்.

341—

குடிநீர் வசதி

வினா எண் 28810—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகராட்சி, அம்பேத்கர் நகர் பகுதிக்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள அம்பேத்கர் நகர் பகுதியில் ஏற்கெனவே உள்ள 9 பொதுக் குழாய்களின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

342—

குடிநீர்

வினா எண் 28979—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி பேரூராட்சி, வார்டு எண் 15-ல் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி பேரூராட்சி வார்டு எண் 15, அக்ரஹாரம் தெருவில் பொது நிதியிலிருந்து சின்டெக்ஸ் டேங்க் மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் வழங்க பேரூராட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

343—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 28996—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தாம்பரம் தொகுதி, உள்ளகரம், புழுதிவாக்கம் பாதாள சாக்கடை திட்டத்தின்மூலம் அமைக்கப்பட உள்ள நீரேற்று நிலையத்தினைத் தெரிவு செய்யப்பட்ட இடத்திலிருந்து மாற்று இடத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

உள்ளகரம் புழுதிவாக்கம் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை நிறைவேற்ற ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு கழிவுநீர் வந்தடையுமாறு வாட்டம் (Contour Lever) உள்ளதாலும், மேற்படி திட்டம் மத்திய ஒப்பளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவால் மேற்படி இடங்களே ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதாலும் மாற்று இடத்திற்கு மாற்ற இயலாது.

344—

சிறுவர் விளையாட்டுத் திடல்கள்

வினா எண் 28999—திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குச் சொந்தமான காலி மனைகளில் சிறு பூங்காக்கள், சிறுவர் விளையாட்டுத் திடல்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இப்பணிகள் 2008-2009 நிதியாண்டில் ரூ.300 இலட்சம் செலவில் மேற்கொள்ள மாநகராட்சியால் திட்டமிடப்பட்டுள்ளது.

345—

சமூகக் கூடம்

வினா எண் 29262—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, கொட்டிவாக்கம் ஊராட்சி, இளங்கோ நகர், சாமிநாத நகர், வெங்கடேசபுரம் ஆகிய பகுதிகளில் சமூகக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

அரசுக்குச் சொந்தமான நிலம் அங்கு இல்லை என்பதால் வாய்ப்பில்லை.

346—

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்

வினா எண் 29354—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

தாம்பரம் தொகுதி, மடிப்பாக்கம் ஊராட்சியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம், மடிப்பாக்கம் ஊராட்சியில் உள்ள குடியிருப்புகளுக்கு ஊரக குடிநீர்த் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் தனி மின்விசைத் திட்டங்கள்மூலம், தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீர்த்தரம் சோதனை முடிவுகளின் அடிப்படையில் குடிப்பதற்கு உகந்ததாகவே உள்ளது.

347—

விரிவுபடுத்துதல்

வினா எண் 29355—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, மடிப்பாக்கம் ஊராட்சியில் சென்னை குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தாம்பரம் வட்டம், மடிப்பாக்கம் ஊராட்சியில் சென்னைக் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் தயாரிக்கப்பட உள்ளது. இப்பணி முடிக்க இரண்டாண்டு காலம் ஆகும். அதன்பிறகு நிதியாதாரங்கள் உறுதி செய்யப்பட்டு திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

348—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 29413—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், தேனி நகரத்தில், புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தேனி மதுரை சாலையில் சிட்கோ பின்புறம் அமைந்துள்ள வனத் துறைக்கு சொந்தமான 7.35 ஏக்கர் நிலத்தில் தேனி-அல்லி நகரம் நகராட்சிக்குப் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகர்மன்றத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டு அந்த நிலத்தை வனத் துறையிடமிருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

349—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 29414—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் 3-வது குடிநீர்த் திட்டத்திற்கான வைப்புத் தொகையை குறைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருப்பூரில் 3-வது குடிநீர்த் திட்டம் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் என்ற தனியார் நிறுவனத்தின்மூலம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

350—

மின்னிணைப்பு

வினா எண் 29619—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஒன்றியங்களிலுள்ள அனைத்து ஊராட்சி மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்களுக்கும் மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்களுக்கு 2006-2007 ஆம் ஆண்டில் பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

351—

குடிநீர் வசதி

வினா எண் 29691—திரு. பி. தங்கமணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு தொகுதி, படவீடு பேரூராட்சியில் குடிநீர் வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், படவீடு பேரூராட்சிக்கு கலியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

[2011 பிப்ரவரி 10

352—

திருப்பாற்கடல் குடிநீர்த் திட்டம்

வினா எண் 29718—திரு. கோ. அரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருப்பாற்கடல் குடிநீர்த் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருத்தணி நகராட்சி, திருப்பாற்கடல் அருகில் பாலாற்றை நீராதாரமாகக் கொண்டு அரக்கோணம் நகராட்சி மற்றும் திருத்தணி நகராட்சிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

353—

அவைக்கூடம் அமைத்தல்

வினா எண் 29723—திரு. கோ. அரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி நகராட்சியில் அவைக்கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருத்தணி நகராட்சியில் அவைக்கூடம் நகராட்சிப் பொது நிதியிலிருந்து ரூ.4.40 இலட்சம் செலவில் 2007-2008 நிதியாண்டில் கட்டி முடிக்கப்பட்டு, 10-1-2008 முதல் பயன்பாட்டில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
SATYAMEVA JAYATE
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

354—

தொகுப்பு விடுகள்

வினா எண் 29842—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தளி ஒன்றியம், பாலத்தோட்டனப்பள்ளி கிராம ஆதி திராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், பாளையம்கோட்டை ஊராட்சி, பாலத்தோட்டனப்பள்ளி கிராமத்தில் 8 நபர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

355—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 29847—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி-நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 50 லிட்டர் தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி-நாங்குநேரி-திசையன்விளை மற்றும் 342 வழியோர

[2011 பிப்ரவரி 10

கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 342 வழியோர கிராமங்களுக்கு உள்ளூர் நீராதாரங்களின் மூலமாகவும் தாமிரபரணி ஆற்று நீரும் வழங்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆனால், தற்சமயம் உள்ளூர் நீராதாரங்களின் நீரின் கொடுதிறன் குறைந்து விட்டதால் வாரிய விதிமுறைகளின்படி கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் பயன்பெறும் குடியிருப்புகளுக்கு 40 லிட்டர் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு குடிநீர் வழங்க மேற்கண்ட 342 குடியிருப்புகளுக்கும் இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் இந்த நிதியாண்டிற்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

356—

பேருந்து நிலையம்

வினா எண் 29848—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, அருள்மிகு வரகுண பாண்டீஸ்வரர் நித்திய கல்யாணி அம்மன் கோயில் நிலத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, ராதாபுரம் அருள்மிகு வரகுண பாண்டீஸ்வரர் நித்திய கல்யாணி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் பேருந்து நிலையம் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

357—

குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்

வினா எண் 29966—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை பேரூராட்சி, குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் சுமார் ரூ. 2.14 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஆணை எண் 64, நாள் 27-6-2007-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. திட்டப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. திட்டப் பணிகளை ஜூலை 2008-ல் முடித்து மக்கள் பயனுக்கு கொண்டுவர இலக்கிடப்பட்டுள்ளது.

358—

பூங்கா அமைத்தல்

வினா எண் 30134—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு* **ஊரக** *வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்தி அணையின் முன்புறம் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்தி அணையின் முன்புறம் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

359—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

வினா எண் 30157—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு* **ஊரக** *வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) தாம்பரம் தொகுதி, நன்மங்கலம் ஊராட்சி, அபிநந்தா நகர், ராணி நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், புனித தோமையார்மலை ஒன்றியம், நன்மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட ராணி நகரில் ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் மேற்கண்ட ஊராட்சிக்குட்பட்ட அபிநந்தா நகர் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (2008-09)-ல் தனி மின்விசைத் திட்டம் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

360—

கான்கிரீட் விடுகள்

வினா எண் 30235—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, தளிஞ்சி குடியிருப்புப் பகுதியில் கான்கிரீட் வீடுகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டாரம், மானுப்பட்டி ஊராட்சி பகுதியில்

2011 பிப்ரவரி 10]

தளிஞ்சி குடியிருப்பு அமைந்துள்ளது. ஏற்கெனவே மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்மூலம் நிதி உதவி அளித்து வனத் துறை மூலம் தகரக் கொட்டகை அமைத்து மலைவாழ் மக்கள் குடியிருந்து வருகின்றனர். இந்தப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. பட்டா ஏதும் இல்லாததால் கான்கிரீட் வீடுகள் அமைக்க இயலவில்லை.

361—

மின் மயானம்

வினா எண் 30305—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் நகரில் மின் மயானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்:

(அ) ஆம்.

(ஆ) பணிகள் நடைபெற்று வருகின்றன.

362—

பூங்கா அமைத்தல்

வினா எண் 30655—திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதி, ரெட்டிகுப்பம் கால்வாயைத் தூர்வாரி, கான்கிரீட் தளம், பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு. க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

363—

குடிநீர் வசதி

வினா எண் 31038—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, தொப்பூர், கம்மப்பட்டி ஊராட்சிகளுக்கு காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தொப்பூர் மற்றும் கம்மம்பட்டி ஊராட்சிகளுக்கு காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் தற்போது முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டமானது 18-12-2009-க்குள் முடிக்கப்பட்டு, செயல்பாட்டிற்குக் கொண்டு வர இலக்கிடப்பட்டுள்ளது.

364—

பேருந்து நிலையம்

வினா எண் 31183—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொமரலிங்கம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொமரலிங்கம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

365—

குடிநீர் வசதி

வினா எண் 31377—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், காணை ஒன்றியம் கொரளூரில் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) விழுப்புரம் மாவட்டம், காணை ஊராட்சி ஒன்றியம், கொரளூர் கிராமத்திற்குப் போதுமான குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

366—

புதிய காய்-கனி அங்காடி

வினா எண் 31472—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) திருவண்ணாமலை நகராட்சியில் ஹட்கோ திட்டத்தின்கீழ் புதிய காய்கனி அங்காடி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை நகராட்சியில் ஹட்கோ நிறுவனத்தின்மூலம் காய்கனி அங்காடி கடைகள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

367—

குடிநீர் வசதி

வினா எண் 31486—திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை ஒன்றியப் பகுதிகளுக்கு பெரியார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஒன்றியப் பகுதிகளுக்கு பெரியார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

368—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 31612—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பொன் விளைந்தகளத்தூர், திருவாணைக்கோவில், மோசிவாக்கம், சோகண்டி ஊராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தைச் சார்ந்த பொன்விளைந்தகளத்தூர், திருவாணைக் கோவில், மோசிவாக்கம், சோகண்டி ஊராட்சிகளுக்கு, கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

369—

பேருந்து நிலையம்

வினா எண் 31613—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரத்தின் புறவழிச் சாலையில் வெளியூர் பேருந்துகளுக்குப் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தற்போது செங்கல்பட்டு நகராட்சியால் பேருந்து நிலையம் ஒன்று நல்லமுறையில் பராமரிக்கப்படுவதாலும், இப்பேருந்து நிலையத்திற்கு வெளியூர் பேருந்துகளும் வந்து செல்வதால், செங்கல்பட்டு நகரத்தின் புறவழிச் சாலையில் வெளியூர் பேருந்துகளுக்குப் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2011 பிப்ரவரி 10

370—

மகப்பேறு மருத்துவமனை

வினா எண் 31876—திரு. என். நன்மாறன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை முனிச்சாலை மகப்பேறு மருத்துவமனையை புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மதுரை மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண் 49-ல் முனிச்சாலை மகப்பேறு மருத்துவமனை ரூ.44.50 இலட்சம் செலவில் கட்டும் பணி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

371—

குடிநீர் வசதி

வினா எண் 32268—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியப் பகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஒன்றியத்தில் உள்ள குடியிருப்புகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிவுற்று தற்போது சோதனை ஓட்டத்தில் உள்ளது.

2011 பிப்ரவரி 10]

372—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 32296—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இடைக்காட்டூரில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இடைக்காட்டூர் ஊராட்சியைச் சேர்ந்த இடைக்காட்டூர் குடியிருப்பு, இடைக்காட்டூர் காலனி குடியிருப்பு மற்றும் இடைக்காட்டூர் ஆதி திராவிடர் காலனி குடியிருப்புகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இடைக்காட்டூரில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க அவசியம் எழவில்லை.

373—

பேருந்து நிலையம்

வினா எண் 32342—திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, 58-வது வட்டம், சிரநாய்க்கன் பாளையத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

374—

புதிய குழாய் அமைத்தல்

வினா எண் 32398—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் நகருக்கு நெரூரிலிருந்து குடிநீர் வழங்கும் குழாயை மாற்றிப் புதிய குழாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காவிரி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் 1995-ல் துவங்கப்பட்டு நல்லமுறையில் தற்போது 13 வருடங்களாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டமானது 30 ஆண்டுகள் வரை நல்லமுறையில் செயல்படுத்த வடிவமைக்கப்பட்டதாகும். எனவே, தற்போது நெரூரிலிருந்து கரூர் நகருக்கு வரும் குடிநீர்க் குழாயினை மாற்றி அமைக்கும் தேவை எழவில்லை.

375—

ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 32426—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தொட்டப்பநாயக்கனூர், நக்கலப்பட்டி, போத்தம்பட்டி ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தொட்டப்பநாயக்கனூர், நக்கலப்பட்டி, போத்தம்பட்டி ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றியக் குழு தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகிய அனைத்து பிரிவினருக்கும் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் நிலையை உயர்த்துதல், தாழ்த்துதல் மற்றும் அவ்வமைப்புகளைப் பிரித்தல் மற்றும் சேர்த்தல் தொடர்பாக அறிவுரை வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் மேற்கூறிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிப்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

376—

கான்கிரீட் நடைபாலம்

வினா எண் 32548—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், விக்ரபாண்டியம் ஊராட்சி, காரியமங்கலம் ஏரி கிராமத்திற்கு கான்கிரீட் நடைபாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

377—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 32562—திரு. கே.எஸ். விஜயகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிப்பூண்டி தொகுதி, மங்கலம் கிராமத்தையும், ஆரணி பேரூராட்சியையும் இணைக்க ஆரணி ஆற்றில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கும்மிடிப்பூண்டி தொகுதி, மங்கலம் கிராமத்தையும், ஆரணி பேரூராட்சியையும் இணைக்க ஆரணி ஆற்றில் மேம்பாலம் கட்டும் திட்டம் தற்போது இல்லை.

378—

திறந்தவெளிக் கிணறு

வினா எண் 32646—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஒன்றியம், குருவிமலை ஊராட்சியில் குடிநீருக்காக ஆற்றுப் பகுதியில் திறந்தவெளிக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஒன்றியம், குருவிமலை ஊராட்சியில் குடிநீருக்காக ஆற்றுப்பகுதியில் திறந்தவெளிக் கிணறு மாநில நிதிக்குழு, மானிய உபரி நிதி இருப்பைக் கொண்டு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

379—

நீருந்து நிலையங்கள்

வினா எண் 32771—திரு. வை. காவேரி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. தழையூர், மாங்குட்டப்பட்டி., வைகுந்தம், வேடிச்சிக்காடு ஆகிய பகுதிகளில் நீர் உந்து நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், அ.தழையூர் ஊராட்சி, மாங்குட்டப்பட்டி குடியிருப்பிலும், வைகுந்தம் ஊராட்சி வேடிச்சிக்காடு குடியிருப்பிலும் நீருந்து நிலையங்கள் அமைக்க இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ரூ. 70.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 5/2008-ல் முடிவடையவுள்ளன.

380—

பேருந்து நிலையம்

வினா எண் 32791—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டையில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜோலார்பேட்டை நகராட்சிக்குத் தனியாக பேருந்து நிலையம் அமைக்க நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் போதுமான இட வசதி இல்லாததால், தற்போது ஜோலார்பேட்டையில் பேருந்துகள் நின்று செல்லும் இடத்திற்கு அருகில் காலியாக உள்ள தென்னக இரயில்வே நிர்வாகத்திற்குச் சொந்தமான இடத்தினைப் பெற்று பேருந்து நிலையம் அமைக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

381—

தூர் வாருதல்

வினா எண் 32872—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலையில் உள்ள ஏரியை தூர் வார அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலையில் உள்ள புங்கனூர் ஏரி 2006-2007-ம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 2.6 இலட்சத்தில் தூர் வாரப்பட்டது.

382—

படகு விடுதல்

வினா எண் 32873—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலையிலுள்ள நிலாவூர் ஏரியை ஆழப்படுத்தி படகு விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி மலையிலுள்ள நிலாவூர் ஏரியை 1 மீட்டர் ஆழத்திற்கு தூர் வாரி ஆழப்படுத்தி ஏலகிரி மலை செம்மகளிர் சுய உதவிக் குழுவினரால் படகுத் துறை பொறுப்பேற்று நடத்தப்பட்டு வருகின்றது.

383—

குடிநீர் வசதி

வினா எண் 33013—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நெல்லடிக்குப்பத்தில் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி ஒன்றியம், மருங்கூர் ஊராட்சி, நெல்லடிக்குப்பத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, தற்போது முழுமையான அளவு நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

384—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 33034—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

புதுக்கோட்டை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். புதுக்கோட்டை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளைத் துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

385—

குடிநீர் வசதி

வினா எண் 33218—திரு. வீ.ஏ.டி. கலியவாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, கண்டாச்சிபுரத்தில் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, கண்டாச்சிபுரம் ஊராட்சியில் உள்ள மக்களுக்கு தற்போது போதுமான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

386—

கட்டடம்

வினா எண் 33414—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, செட்டிமாங்குறிச்சி, ஊராட்சி சின்னத்தாண்டவனூர் துவக்கப் பள்ளிக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, சின்னத்தாண்டவனூர் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டும் பணி 2007-2008-ம் ஆண்டு அனைவருக்கும் கல்வி (SSA) திட்டத்தின்கீழ் ரூ. 4.90 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

387—

புதிய ஆழ்துளைக் கிணறு

வினா எண் 33482—திரு. து. ரவிக்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, தில்லைநாயகபுரத்திற்கு கொள்ளிடம் ஆற்றிலிருந்து ஆழ்துளைக் கிணறுமூலம் தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குமாராட்சி ஊராட்சி, தில்லைநாயகபுரம் குடியிருப்பிற்கு கொள்ளிடம் ஆற்றங்கரையில் நீராதாரம் அமைக்கப்பட்டு, 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் செயலாக்கப்பட்டு 10/2007 முதல் மக்கள் பயனில் உள்ளது. புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

388—

பாதுகாக்கப்பட்ட குடிநீர்

வினா எண் 33483—திரு. து. ரவிகுமார்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஜெயங்கொண்ட பட்டினம் பழங்குடி இருளர் காலனிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், ஜெயங்கொண்டபட்டினம் ஊராட்சி, ஜெயங்கொண்ட பட்டினம் இருளர் காலனிக்கு தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது.

389—

காவிரி குடிநீர்

வினா எண் 33534—திரு. செ. சின்னசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, ஆமணக்கப்பட்டி ஊராட்சி, தாதகவிண்டம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு காவிரி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, ஆமணக்கப்பட்டி ஊராட்சி, தாதகவிண்டம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஏற்கெனவே காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2011 பிப்ரவரி 10]

390—

புதிய கண்மாய் அமைத்தல்

வினா எண் 33682—திரு. தி. இராமசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், நெடுங்குளம் கிராமத்தில் புதிய கண்மாய் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், நெடுங்குளம் கிராமத்தில் புதிய கண்மாய் அமைக்கும் திட்டம், பொருளாதார ரீதியில் பயனற்ற திட்டம் என்பதால் 1988 ஆம் ஆண்டிலேயே அரசால் கைவிடப்பட்டது.

391—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 33895—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் வையம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரைவில் நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் வையம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, தற்போது சோதனை ஓட்டத்தில் உள்ளது.

[2011 பிப்ரவரி 10

392—

உயர்கோபுர மின் விளக்கு

வினா எண் 34220—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சியில் உயர்கோபுர மின் விளக்கு, சோடியம் தெரு விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சியில், போளூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் உயர் கோபுர மின் விளக்கும், போளூர் ஊராட்சி ஒன்றியம் மூலம் 20 சோடியம் விளக்குகளும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

393—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 34281—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டுக்கோட்டையில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை நகராட்சியில் தற்போது செயல்பட்டு வரும் பேருந்து நிலையம் போதுமானதாக உள்ளதால், புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

2011 *பிப்ரவரி* 10]

394—

சுகாதார வசதி

வினா எண் 34480—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு குண்டூர் ஏரியில் கழிவு நீர் கலப்பதையும், குப்பைகள் கொட்டப்படுவதையும் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு குண்டூர் ஏரியில் கழிவு நீர் கலப்பதைத் தவிர்க்கும் பொருட்டு பொதுப் பணித் துறைமூலம் வாய்க்கால் கட்டப்பட்டுள்ளது. எனவே, தற்போது ஏரியில் கழிவு நீர் கலப்பதில்லை. மேலும், குப்பைகள் குண்டூர் ஏரியில் கொட்டப்படுவதைத் தடுக்கும்பொருட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் பழவேலி குப்பை கொட்டும் இடத்தில் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு வருவதால், ஏரியில் குப்பை கொட்டுவதும் தடுக்கப்பட்டுள்ளது.

395—

குடிநீர் வசதி

வினா எண் 34805—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை கலசப்பாக்கம் வரை நீட்டிக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் ஒன்றியம், கலசப்பாக்கம் ஊராட்சி, கலசப்பாக்கம் குடியிருப்புக்கு

[2011 பிப்ரவரி 10

கலசப்பாக்கம் நீர் உறிஞ்சு கிணறுகளின்மூலம் செயல்படுத்தப்படும் தனி மின்விசைத் திட்டத்தின்மூலம் கட்டப்பட்டுள்ள 1,00,000 மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள இரண்டு மேல்நிலைத் தொட்டிகளின்மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் (முழுமையான அளவில்) குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் கலசப்பாக்கம் ஊராட்சி பகுதிக்கு குடிநீர் வழங்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

396—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 34878—திரு. ஆர்டி. கணேசன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி-அல்லி நகரம் நகராட்சியில், புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தேனி-மதுரை சாலையில் சிட்கோ பின்புறம் அமைந்துள்ள வனத் துறைக்கு சொந்தமான 7.35 ஏக்கர் நிலத்தில் தேனி—அல்லி நகரம் நகராட்சிக்குப் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகர்மன்றத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

397—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 34883—திரு. ஆர்டி. கணேசன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி அல்லி நகரம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு முன் வருமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தேனி அல்லி நகரம் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதற்கு ரூ.35.29 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தேவையான நிலம் கூடியவிரைவில் தேர்வு செய்யப்பட்டு, பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

398—

பேருந்து நிலையம்

வினா எண் 34943—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அனகாபுத்தூர் நகராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். விரைவில் நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

399—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 35578—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

(அ) காங்கேயம் தொகுதி, பாலசமுத்திரபுதூர் ஊராட்சிக்கு திருப்பூர் மூன்றாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

400—

புறநகர் பேருந்து நிலையம்

வினா எண் 35847—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, பணிக்கன்குப்பம் ஊராட்சி, சந்தை தோப்பிலுள்ள பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பண்ருட்டி நகரப் புறநகர் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சி பேருந்து நிலையத்தில் நாளொன்றுக்கு 300 பேருந்துகள் வந்து செல்கின்றன. அனைத்து பேருந்துகளும் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்ல போதுமான இட வசதி உள்ளது. எனவே, பண்ருட்டி நகராட்சியில் புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

401—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 36078—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். செங்கல்பட்டு நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதியாதாரங்கள் இறுதி செய்யப்பட்டவுடன் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

402—

பூங்கா அமைத்தல்

வினா எண் 36307—திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதி, 136-வது வட்டம், மாம்பலம் ரெட்டிகுப்பம் கால்வாய்க் கரையோரம் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

403—

தொகுப்பு விடுகள்

வினா எண் 36569—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, கல்ராயன் மலைப்பகுதியில் மலைவாழ் மக்களுக்கு 2007-2008 ஆம் நிதியாண்டில் தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்தைச் சார்ந்த கல்ராயன் மலைப்பகுதியில் 2007-2008 ஆம் ஆண்டு கீழ்க் குறித்த ஊராட்சிகளில் மலைவாழ் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளது.

ஊராட்சியின் பெயர்	*கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை*
சின்னக்கல்ராயன்மலை தெற்கு நாடு	12
வடக்குநாடு	25
பெரியகல்ராயன்மலை மேல்நாடு	35
பெரியகல்ராயன்மலை கீழ்நாடு	30
மொத்தம்	102

404—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 36593—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் திறந்தவெளிக் கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறுகளை நீராதாரமாகக் கொண்ட குடிநீர்த் திட்டம் மூன்று கட்டமாக முடிக்கப்பட்டு, பேரூராட்சிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

405—

வணிக வளாகம்

வினா எண் 36707—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் நகரிலுள்ள பழைய பேருந்து நிலையத்தைப் புதுப்பித்து வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆத்தூர் நகரிலுள்ள பழைய பேருந்து நிலையத்தைப் புதுப்பித்து வணிக வளாகம் கட்டும் உத்தேசம் ஏதுமில்லை.

[2011 பிப்ரவரி 10

406—

தடுப்பணை அமைத்தல்

வினா எண் 37257—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பெண்ணேஸ்வரமடத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து நெடுங்கல் கிராமத்திற்குக் குடிநீர் வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காவேரிப்பட்டினம் தொகுதியில் தென்பெண்ணையாற்றின் குறுக்கே பெண்ணேஸ்வரமடம் அருகில் தடுப்பணை அமைத்தால் பாசன வசதிக்காக ஏற்கெனவே வழங்கப்படும் ஏரியின் நீரின் அளவும், நீர் ஆதார உரிமையும் (Riparian Rights) பாதிக்கப்படும். நெடுங்கல் கிராமத்திற்கு தற்போது கோவிலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து போதிய அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், தடுப்பணை அமைக்கும் அவசியம் எழவில்லை.

407—

தரைப் பாலம் அமைத்தல்

வினா எண் 37272—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், பசுவபட்டிக்கும், திட்டுப்பாறைக்கும் இடையே நொய்யலாற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், பசுவபட்டிக்கும், திட்டுப்பாறைக்கும் இடையே நொய்யலாற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

408—

தொகுப்பு வீடுகள்

வினா எண் **38649**—**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை தொகுதி, சிவகங்கை ஒன்றியம், தமறாக்கி வடக்கு கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, சிவகங்கை ஒன்றியம், தமறாக்கி ஊராட்சியில் (வடக்கு கிராமம்) 2007-2008ஆம் ஆண்டு 12 ஆதி திராவிடர், 7 பிற்பட்டவர்களுக்கு இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு கச்சா வீடுகள் மேம்பாடு செய்ய 9 வீடுகள் அனுமதிக்கப்பட்டு பணிகள் செய்யப்பட்டுள்ளன.

409—

ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்

வினா எண் **38865**—**திரு. அ. தமிழரசு:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பூசாரிப்பட்டி ஊராட்சியை இரண்டாகப் பிரித்து தாச சமுத்திரத்தை ஊராட்சியாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூசாரிப்பட்டி மிகச் சிறியதான 5,359 மக்கள் தொகை கொண்ட ஊராட்சியாகும். இவ்வூராட்சியின் மொத்த ஆண்டு வருவாய் ரூ. 1,21,800/- ஆகும். எனவே, இவ்வூராட்சியை இரண்டாகப் பிரிக்க இயலாது என ஊராட்சியில் தீர்மானம் எண் 2/11, நாள் 16-10-2007-ல் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. எனவே, இவ்வூராட்சியை இரண்டாகப் பிரிக்க இயலாது.

410—

சமுதாயக் கூடம்

வினா எண் 39032—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தியில் கலையரங்கம், திருமண மண்டபம், சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தியில் 2007-2008 மாவட்ட ஊராட்சி நிதியில் ரூ.1.70 இலட்சத்தில் கலையரங்கம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி

2011 பிப்ரவரி 10]

மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 4.60 இலட்சத்தில் சமுதாயக் கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சமுதாயக் கூடத்திலேயே திருமணம் போன்ற இதர விசேஷங்கள் நடைபெற்று வருவதால் தனியாக திருமண மண்டபம் கட்டத் தேவையில்லை.

411—

சமுதாயக் கூடம்

வினா எண் 39085—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழடியில் கலையரங்கம், திருமண மண்டபம், சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமுதாயக் கூடம் அல்லது திருமண மண்டபம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மட்டுமே கட்டுவதற்கு வழிகாட்டி நெறிமுறைகள் உள்ளது. இதர திட்டங்களில் எடுத்துச் செய்ய இயலாது. எனவே, கலையரங்கம் மற்றும் திருமண மண்டபம் அல்லது சமுதாயக் கூடம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படின் மேற்கண்ட பணி எடுத்துச் செய்யப்படும்.

412—

பாலம் அமைத்தல்

வினா எண் 39153—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி-அரூர் சாலையில் மூக்கனூர் ஊராட்சி, செம்மனஅள்ளி பகுதி காட்டாற்றில் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி—அரூர் சாலையில் மெம்மனஅள்ளி காட்டாற்றில் பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

413—

பாலம் அமைத்தல்

வினா எண் 39154—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, நெருப்பூர், நாகமரை இடையே காட்டாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நெருப்பூர் நாகமரை இடையே காட்டாறு எதுவும் செல்லவில்லை. எனவே, பாலம் அமைப்பது எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

414—

சீரமைத்தல்

வினா எண் 39248—திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி வட்டம், மேலக்காடுவெட்டி கிராம குளம் நீரின்றி உள்ளதால் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி வட்டம், மேலக்காடுவெட்டி கிராம குளம் 2008-2009 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் சீரமைக்கப்படும்.

415—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 39708—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வயல்சேரியில் கூட்டுக் குடிநீர் திட்டம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியத்தைச் சார்ந்த வயல்சேரி மற்றும் 19 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 98.64 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 10

416—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 40124—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், நரிப்பையூர் குடிநீர்த் திட்டத்தை முழுமையாக செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நரிப்பையூர் குடிநீர்த் திட்டம் தற்போது முழுமையாக செயல்படுத்தப்பட்டு இத்திட்டத்தின் மூலம் அனைத்து 215 குடியிருப்புகளுக்கும் முழுமையான அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட குடிநீர்த் திட்டத்திலிருந்து, விடுவிக்கப்பட்ட 91 குடியிருப்புகளுக்கு தனி மின்விசை திட்டம் மூலமாகவும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாகவும் முழுமையான அளவில் குடிநீர் வழங்கப்படுகிறது.

417—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 41019—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், ஓடாத்தூரில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், ஓடாத்தூர் ஊராட்சியைச்

2011 பிப்ரவரி 10]

சார்ந்த ஓடாத்தூர் குடியிருப்பில் தனி மின்விசைத் திட்டமும், சிறு மின்விசைத் திட்டமும் பயனில் உள்ளது. இதன் மூலம் நாளொன்றுக்கு நபரொருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. ஓடாத்தூர் குடியிருப்பு முழு அளவு குடிநீர் வசதி பெற்ற கிராமமாகும். எனவே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்க அவசியம் எழவில்லை.

418—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 41492—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், புல்வாய்க்கரையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், புல்வாய்க்கரை ஊராட்சியைச் சார்ந்த புல்வாய்க்கரை குடியிருப்பில் தனி மின்விசைத் திட்டமும், சிறு மின்விசைத் திட்டமும், பயனில் உள்ளது. இதன்மூலம் நாளொன்றுக்கு நபரொருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. இது முழு அளவு குடிநீர் வசதி பெற்ற கிராமமாகும். எனவே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்க அவசியம் எழவில்லை.

419—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 41493—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பழையனூரில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பழையனூர் மற்றும் 12 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 2005-2006-ல் முழுமையாக முடிக்கப்பட்டு 13-09-2006 முதல் திட்டம் மக்கள் பயனில் உள்ளது. எனவே வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான தேவை எழவில்லை.

420—

கூட்ட அரங்கம்

வினா எண் 42277—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, பெருந்துறை ஒன்றியம், போலநாயக்கன்பாளையம் ஆதி திராவிடர் காலனியில் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கூட்ட அரங்கம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம் போலநாயக்கன்பாளையத்தில் மகளிர் சுய உதவிக் குழு கூட்டரங்கம் கட்டப்பட்டுள்ளது. போலநாயக்கன்பாளையம் ஆதி திராவிடர் காலனியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவினரும் இக்கூட்ட அரங்கினை பயன்படுத்தி வருகின்றனர்.

2011 பிப்ரவரி 10]

421—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 42615—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியங்களில் இராசிபுரம்—எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

422—

நிலை உயர்த்துதல்

வினா எண் 42807—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வேலூர் நகராட்சி, 2008-09 ஆம் நிதியாண்டில் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்படும்.

423—

ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 43740—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 38 சிற்றூராட்சிகள் உள்ளன. இவ்வொன்றியத்தின் மக்கள் தொகை 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1,04,891 ஆகும். இவ்வொன்றியத்தின் பரப்பளவு 74.522 ஹெக்டேர் பரந்து விரிந்துள்ளது. மக்கள் தங்களது தேவைகளை பூர்த்தி செய்ய ஊராட்சி ஒன்றியத்தை அணுகுவதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. அரசு அலுவலர்களுக்கும் அரசின் நலத் திட்ட உதவிகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 17 ஊராட்சிகளையும், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு அருகில் உள்ள ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 10 ஊராட்சிகளையும் சேர்த்து இரண்டுக்கும் மையப்பகுதியில் உள்ள கள்ளிமந்தயத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக கள்ளிமந்தயம் ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்க சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழுக்களில் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. இது குறித்த திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்மொழிவு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குனரின் மூலமாக அரசுக்கு வரப்பெற்றதும் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யும்.

424—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 43923—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

செங்கல்பட்டு தொகுதி, கிளாப்பாக்கம், பாண்டூர், தத்தளூர் ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பாலாற்றில் போதிய நீராதாரம் இல்லாததால் இக்குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

425—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 45877—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, போடிப்பட்டி ஊராட்சி, போடிப்பட்டி புதூர் பகுதி, சூரியா கார்டன் லே அவுட் பகுதி மற்றும் அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், போடிப்பட்டி ஊராட்சி போடிப்பட்டி புதூர், அண்ணாநகர் மற்றும் சூரியா கார்டன் லே அவுட் பகுதி ஆகியவற்றில் தற்போது வாரிய விதிமுறைகளின்படி மக்கட் தொகைக்கேற்ப கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்புகளுக்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

426—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 46906—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் சந்தைத்திடலில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சியில் நெல்முடிகரை வருவாய் கிராமத்தில் சர்வே எண் 16/16ல் உள்ள வாரச்சந்தைத் திடல் இடம் தொடர்பாக சென்னை உயர் நீதி மன்றத்தில் சிவகங்கை தேவஸ்தானத்தால் தொடரப்பட்ட வழக்கில் 11-1-2001 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் 30-8-2001-ல் மேற்படி இடம் சிவகங்கை தேவஸ்தானத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

தற்போது வாரச்சந்தை நடைபெற்று வரும் புல எண் 16.4 ஏற்கெனவே மட்டை ஊரணியாக இருந்ததால் நீர்நிலை ஆதாரங்களில் நிலையான உறுதியானக் கட்டுமானங்களை அமைக்க கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளத்தக்க இடமாக இல்லாததால் மேற்படி பேருந்து நிலையம் அமைக்க இயலாது.

427—

நவீன குப்பை மாற்று நிலையம்

வினா எண் 47610—திரு. கு. சீனிவாசன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

பூங்காநகர், பேசின்பாலம் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி மண்டலம்-5க்கான குப்பை மாற்று வளாகத்தை உடனடியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். நவீன குப்பை மாற்று நிலையப் பணி மார்ச் 2009-க்குள் முடிவடைந்து, அது இயங்க துவங்கியவுடன் தற்போதுள்ள குப்பை மாற்று நிலையம் மூடப்படும்.

428—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 47683—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கட்டுமான பொருட்களின் விலை உயர்வின் காரணமாக தொகுப்பு வீடுகள் கட்ட வழங்கப்படும் தொகையை உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 91, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 6-6-2008-ல், 1-4-2008 முதல், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு ஓர் அலகிற்காக வழங்கப்படும் உதவித் தொகை, சாதாரண தரையில் ரூ.25,000/-லிருந்து ரூ. 35,000/- ஆகவும், மலைப்பகுதி/கடின தரையில் ரூ.27,500/-லிருந்து ரூ.38,500/-ஆகவும், கச்சா வீடுகளை மேம்படுத்துவதற்கான உதவித் தொகை ரூ.12,500/-லிருந்து ரூ.15,000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், வீடுகள் கட்டுவதில் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக மாநில அரசால் வழங்கப்படும் கூடுதல் நிதியுதவி ரூ. 12,000/-லிருந்து ரூ.20,000/- ஆகவும் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

429—

சமத்துவபுரம் அமைத்தல்

வினா எண் 48379—திருமதி ரா. லீமா றோஸ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவட்டாறு தொகுதி, பேச்சிப்பாறை ஊராட்சி அன்பு நகரில் சமத்துவபுரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

2008-09ம் ஆண்டில் மாநிலத்தில் மாவட்டத்திற்கு தலா ஒரு சமத்துவபுரம் வீதம் (சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக) 29 சமத்துவபுரங்களை அமைக்க வெளியிடப்பட்ட விரிவான வழிகாட்டு நெறிமுறையின்படி சமத்துவபுரம் அமைப்பதற்காக இடம் தேர்வு செய்யும்போது சுமார் 8 முதல் 9 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தை மாவட்டத்தில் கிராமப்புரத்தில் தேர்வு செய்யவேண்டும். ஆனால் கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, பேச்சிப்பாறை ஊராட்சி, அன்பு நகரில் சமத்துவபுரம் அமைப்பதற்கு போதுமான புறம்போக்கு நிலம் இல்லை. எனவே, மேற்கூறிய இடத்தில் சமத்துவபுரம் அமைக்க இயலாது.

430—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 48546—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, படவேடு, குப்பம் போன்ற பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணமலை மாவட்டம், போளூர் வட்டம், படவேடு ஊராட்சி மற்றும் குப்பம் ஊராட்சியைச் சேர்ந்த மொத்தமுள்ள 37 குடியிருப்புகளில் 4 குடியிருப்புகள் தவிர மீதமுள்ள 33 குடியிருப்புகளிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய தனி மின் விசைத் திட்டங்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் வசதி குறைவாக உள்ள மீதமுள்ள 4 குடியிருப்புகளிலும் (அன்னபூரணி நகர், காளியம்மன் நகர், மேல்குப்பம் மற்றும் அண்ணாநகர்) நடப்பு (2008/09) நிதியாண்டில் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்படவுள்ளன. எனவே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தும் திட்டம் ஏதும் பரிசிலனையில் இல்லை.

431—

சமத்துவபுரம் அமைத்தல்

வினா எண் 50130—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பில்சின்னம்பாளையம், கரியாஞ்செட்டிபாளையம், அங்கலக்குறிச்சி, ஜல்லிபட்டி, அர்த்தநாரிபாளையம் மற்றும் கம்பலாபட்டி ஆகிய ஊராட்சிகளில் சமத்துவபுரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில், தென் சங்கம்பாளையம் ஊராட்சியில் ஏற்கெனவே சமத்துவபுரம் அமைக்கப்பட்டு விட்டதால் அதே ஊராட்சி ஒன்றியத்தில் மேலும் ஒரு சமத்துவபுரம் அமைக்க சாத்தியம் இல்லை.

[2011 பிப்ரவரி 10

432—

வைகை கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 54271—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியப் பகுதியில் அணைப்பட்டி வைகை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஒன்றியத்தில் 46 குடியிருப்புகளுக்கும், செல்லம்பட்டி ஒன்றியத்தில் 39 குடியிருப்புகளுக்கும் அணைப்பட்டி அருகில் வைகை ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ரூ.385.76 இலட்சம் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

433—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 54272—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க மண்ணாடிமங்கலம் வைகை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு மண்ணாடிமங்கலம் அருகே வைகையாற்றில் நீர்உறிஞ்சு கிணறுகள் அமைத்து, செல்லம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 95 குடியிருப்புகள் மற்றும் வாடிப்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 4 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 10/2008-ல் நிறைவுபெற்று மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

434—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 56963—திருமதி ரா. லீமா ரோஸ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், வேர்கிளம்பி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் வேர்கிளம்பி, பொன்மனை, குலசேகரம், குமாரபுரம், கோதநல்லூர், விளாவூர் மற்றும் நெய்யூர் பேரூராட்சிகள் மற்றும் 26 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு 9/2007 முதல் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

435—

தடுப்பணைகள்

வினா எண் 57990—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

காவேரிப்பட்டினம் தொகுதியில் திம்மாபுரம், காவேரிப்பட்டினம், தளிபட்டி, வாடமங்கலம், அரசம்பட்டி ஆகிய பகுதிகளில் தடுப்பணைகள் கட்டி குடிநீர் பிரச்சனையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காவேரிப்பட்டினம் தொகுதியில் திம்மாபுரம், காவேரிப்பட்டினம், தளிபட்டி, வாடமங்கலம், அரசம்பட்டி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள கிராமங்களுக்கு தற்போது தென்பெண்ணையாற்றிலிருந்து நீர்உறிஞ்சு கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பகுதிகளில் தடுப்பணைகள் கட்ட வேண்டிய உடனடி அவசியம் இல்லை.

436—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 58100—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், மூதூர் ஊராட்சி, செந்தில் நகர் பகுதியில் தொகுப்பு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மூதூர் ஊராட்சிக்கு 2008-2009 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 5 தொகுப்பு வீடுகள் (பழங்குடியினர் ஒதுக்கீட்டில்) ஒதுக்கீடு செய்யப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 5 பயனாளிகளும், அதற்கடுத்தபடியாக உள்ள வேறு தகுதியான பயனாளிகளும் வீடு கட்டிக்கொள்ள முன்வரவில்லை. இதனால் மூதூர் ஊராட்சி செந்தில் நகருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகுப்பு வீடுகள் நடப்பு நிதியாண்டில் ரத்து செய்யப்பட்டுள்ளது.

2011 பிப்ரவரி 10]

437—

தரம் உயர்த்துதல்

வினா எண் 58302—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் நகராட்சியினை மாநகராட்சியாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

438—

பாதுகாக்கப்பட்ட குடிநீர்

வினா எண் 58307—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஆற்காடு நகராட்சியில் பாலாற்றில் வேப்பூர் அருகே 3 நீருறிஞ்சு கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு 6 மேல்நிலை தொட்டிகளிலிருந்து 47 கி.மீ. பகிர்மானக் குழாய்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

439—

குடிநீர் வசதி

வினா எண் 59022—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, கீழ்மொரப்பூர் ஊராட்சி பகுதிகளுக்கு தென்பெண்ணை ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், அரூர் ஒன்றியம், கீழ்மொரப்பூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு தென்பெண்ணை ஆற்றை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வசதி செய்யும் திட்டம் ஏதும் இல்லை.

440—

பேருந்து நிலையம்

வினா எண் 59744—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் வால்பாறை நகராட்சி மூலமாக பேருந்து நிலையம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பேருந்து நிலையம் அமைக்க நகராட்சி வசம் நிலம் இல்லை என்பதால் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தை பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

441—

பேருந்து நிலையங்கள் அமைத்தல்

வினா எண் 62031—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் போக்குவரத்துக்கு இடையூறில்லாமல் பேருந்துகள் செல்ல இரண்டு பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்திற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையில் தற்போது உள்ள ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்யவும் புதிதாக திருநெல்வேலி சாலையிலும் திண்டுக்கல் சாலையிலும் இரண்டு பேருந்து நிலையங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கைக்கு மத்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்ட பின் பணிகள் மேற்கொள்ளப்படும்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

442—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 63120—திரு. கே.எல். இளவழகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், திமிரி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி பேரூராட்சியில் உள்ள காவல் துறைக்கு சொந்தமான இடம் பேரூராட்சிக்கு கிடைக்கப்பெற்றதும் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

443—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 65090—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முகையூர் தொகுதி, காணை ஒன்றியம், பணமலை, கருவாட்சி, உடையாநத்தம் ஆகிய பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், காணை ஒன்றியத்தைச் சேர்ந்த பணமலை மற்றும் கருவாட்சி குடியிருப்புகளில் முறையே

2011 பிப்ரவரி 10]

60,000 மற்றும் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் செஞ்சி-அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 3 குடியிருப்புகளும் முழுமையான குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளாக உள்ளதால் தற்போது மேலும் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

444—

சிறப்புக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 66054—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னிமலை, சிப்காட் கழிவுநீரால் பாதிக்கப்பட்டுள்ள ஈங்கூர் பகுதிக்கு சிறப்புக் குடிநீர்த் திட்டம் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை மற்றும் சென்னிமலை ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 392 வழியோர கிராமங்களுக்கு காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம், ஈங்கூர் பகுதிக்கு 55 எல்.பி.சி.டி. குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

445—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

வினா எண் 66244—திரு. கே.எல். இளவழகன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) ஆற்காடு நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். ஆற்காடு நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. நிதி ஆதாரம் முடிவு செய்யப்பட்ட பின் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

446—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 70268—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கூடத்துப்பட்டியில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியம் ஊராட்சியைச் சேர்ந்த கூடத்துப்பட்டி கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலம் போதுமான அளவு குடிநீர் தற்போது வழங்கப்படுகிறது. எனவே இக்கிராமத்திற்கு புதிதாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏதும் செயல்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

447—

தொழிற்பேட்டை

வினா எண் 73821—திரு. கே.சி.கே. ராஜேந்திரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மகளிர் சுய உதவிக் குழுவின் தயாரிப்புகளுக்காக தனியாக தொழிற்பேட்டை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளாச்சேரியில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 12.30 இலட்சம் மதிப்பீட்டில் தொழிற்கூடம் கட்டப்பட்டு, அப்பகுதியிலுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்கள் தயாரிப்புகளை உற்பத்தி செய்து வருகின்றனர்.

448—

விற்பனைக் கூடம்

வினா எண் 73822—திரு. கே.சி.கே. ராஜேந்திரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை மாநகரில் மகளிர் சுய உதவிக் குழுவின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய விற்பனைக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகரில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திற்கு எதிர்புறத்தில் 32 கடைகள் அடங்கிய பூமாலை வணிக வளாகக் கட்டடம் கட்டப்பட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

449—

சுரங்கப்பாதை அமைத்தல்

வினா எண் 74739—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரின் மையப்பகுதியான திருவள்ளுவர் சிலை அருகே சுரங்கப்பாதை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. சேலம் மாநகரின் மையப்பகுதியான திருவள்ளுவர் சிலை அருகே சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

450—

பேருந்து நிலையம்

வினா எண் 90927—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இளம்பிள்ளை நகரில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், இளம்பிள்ளை பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் தனியாக பேருந்து நிலையம் அமைக்க இயலவில்லை.

2011 பிப்ரவரி 10]

451—

குடிநீர் வசதி

வினா எண் 92044—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் தொகுதி, கூடலூர் கிராமத்திற்கு செய்யாறிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஒன்றியம், கூடலூர் ஊராட்சியைச் சேர்ந்த கூடலூர் குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுவதால் செய்யாற்றிலிருந்து கூடலூர் கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குவது என்ற கேள்வி எழவில்லை.

452—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 101727—திரு. பெ. மோகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டபிடாரம் தொகுதி, ஒட்டபிடாரம் ஒன்றியம், புதியபுத்தூர் ஊராட்சி, நடுவக்குறிச்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

11-494—50

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டபிடாரம் ஒன்றியம், சாமிநத்தம் ஊராட்சியை சார்ந்த நடுவக்குறிச்சி குடியிருப்பிற்கு ஏற்கெனவே அங்கு அமைக்கப்பட்டுள்ள 60,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலம் தனி மின் விசைத் திட்டத்தின் கீழ் உள்ளூர் நீராதாரத்தினைக் கொண்டும், 239 கடலோர கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆற்று நீரும் முழு அளவில் வழங்கப்பட்டு வருவதால் கூடுதலாக மேல்நிலைத் தொட்டி அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

453—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 101728—திரு. பெ. மோகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டபிடாரம் தொகுதி, ஒட்டபிடாரம் ஒன்றியம், ஜம்புலிங்கபுரம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டபிடாரம் ஒன்றியம், ஜம்புலிங்கபுரம் ஊராட்சியை சார்ந்த ஜம்புலிங்கபுரம் குடியிருப்பில் தற்போத பயனில் உள்ள 30.000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் தாமிரபரணி ஆற்று நீரும், ஆழ்துளைக் கிணற்று நீரும் முழு அளவில் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பின் மக்கட் தொகைக்கு ஏற்ப மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைத்து குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளதால், கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

2011 பிப்ரவரி 10]

454—

பணி நியமனம்

வினா எண் 1233—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை மலைப்பகுதிக்கு மின்சாரத் துறையில் கூடுதலாக பணியாளர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப்பகுதிக்கு, கூடுதலாக களப்பணியாளர் பதவிகள் அளிப்பது குறித்து ஆய்வு நடைபெற்று வருகிறது. ஆய்வு முடிந்தவுடன் காலியிடங்கள் படிப்படியாக நிரப்பப்படும்.

455—

கூடுதல் மின் உற்பத்தி

வினா எண் 15271—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தியைக் கூடுதலாக உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) **காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் பணி மேன்மேலும் தனியார் துறைமூலம் தொடரும் வாய்ப்புள்ளது.**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

456—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 61985—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, மைலேரிபாளையம் ஊராட்சியில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

457—

துணை மின் நிலையம்

வினா எண் 63032—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தக்கட்டி ஊராட்சியில் துணை மின்நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தளி தொகுதி, தக்கட்டி ஊராட்சியில் துணை மின்நிலையம் அமைக்கும் அவசியம் தற்பொழுது எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

458—

துணை மின் நிலையம்

வினா எண் 75403—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

இல்லை.

459—

காற்றாலை மூலம் மின்சாரம்

வினா எண் 75697—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை, அழகர்கோவில், பைக்காரா, பசுமலை போன்ற பகுதிகளில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2011 பிப்ரவரி 10

460—

துணை மின் நிலையம்

வினா எண் 101166—டாக்டர் க. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கபிலர்மலை ஒன்றியம், சோழசிராமணி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

கபிலர்மலை ஒன்றியம், சோழசிராமணி பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

461—

துணை மின் நிலையம்

வினா எண் 101911—திரு. போ. சின்னப்பன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளாத்திகுளம் தொகுதி, வெம்பூர் கிராமத்தில் துணை மின்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) விளாத்திகுளம் தொகுதி, வெம்பூர் பகுதியில் ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் 11-வது பெருந்திட்டக் காலத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

462—

துணை மின் நிலையம்

வினா எண் 102949—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, எலத்தூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, எலத்தூரில் தற்பொழுது புதிய துணை மின் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

463—

மரபுசாரா மின் உற்பத்தி நிலையம்

வினா எண் 103204—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் பகுதியில் மரபுசாரா மின் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[2011 பிப்ரவரி 10

464—

துணை மின் நிலையம்

வினா எண் 103939—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முகையூர் தொகுதி, தேவரடியார் குப்பத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) முகையூர் தொகுதி, தேவரடியார் குப்பத்தில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

465—

துணை மின் நிலையம்

வினா எண் 104554—திரு. தா. மலரவன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கோவையில் ஆர்.எஸ்.புரம் பகுதியில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையமும் கவுண்டம்பாளையம் பகுதியில் 110/22-

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

11 கி.வோ. துணை மின் நிலையமும் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டுள்ளது. மேலும், பந்தய சாலை பகுதியில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க 11-வது ஐந்தாண்டு பெருந்திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி துணை மின்நிலையம் அமைப்பதற்கு வாரிய அனுமதி வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்படும்.

466—

துணை மின் நிலையம்

வினா எண் 104972—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

467—

பயிர்க் கடன்

வினா எண் 405—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறுவை சாகுபடிக்காக விவசாயிகளுக்கு வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் பயிர்க்கடன் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழ்ங்கப்படும்?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கியின் நிதியுதவி பெற்றும், அவற்றின் சொந்த நிதியை பயன்படுத்தியும், அரசு அளிக்கும் நிதி உதவியைக் கொண்டும் விவசாயிகளுக்கு பயிர்க்கடன்கள் வழங்கி வருகின்றன.

468—

சொந்தக் கட்டடங்கள்

வினா எண் 16253—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் 43 முழுநேரக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 21 நியாயவிலைக் கடைகள் வாடகை கட்டடத்திலும், 6 நியாய விலைக் கடைகள் சொந்தக் கட்டடத்திலும், 16 நியாய விலைக் கடைகள் அரசு திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்ட சிறப்பினமாக அனுமதியளித்து ஆணைகள் வெளியிடபட்டுள்ளது. அதனடிப்படையில், வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் 21 நியாய விலைக் கடைகளில் எங்கெங்கு நிலமுள்ளதோ அங்கு கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

469—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 17913—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், கணக்குப்பட்டி பகுதியில் புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட கணக்குப்பட்டி பகுதியில் கணக்குப்பட்டி நியாய விலைக் கடை 577 குடும்ப அட்டைகளுடன் முழுநேர நியாய விலைக் கடையாக குட்டப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடைக்கு 1997-1998 ஆம் ஆண்டு வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட அரசு கட்டடத்தில் 3-10-1998-ம் தேதி முதல் செயல்பட்டு வருவதால், இந்நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

470—

புதிய கட்டடம்

வினா எண் 18529—திரு. வை. காவேரி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் ஊராட்சி, நல்லாரம் பூசாரி வளவு நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் ஊராட்சி, நல்லாரம் பூசாரி வளவு நியாய விலைக் கடை, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றிய 2005-2006-ம் ஆண்டிற்கான பொது நிதியிலிருந்து கட்டப்பட்ட அரசுக் கட்டடத்தில் 11-3-2007 முதல் செயல்பட்டு வருகிறது.

471—

புதிய கட்டடம்

வினா எண் 18559—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், செலவடை ஊராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் சரகத் துணைப் பதிவாளரின் கட்டுப்பாட்டில் செயல்படும் செலவடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தமாக அடி மனை இல்லாததால், இவ்வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்ட தற்போது வாய்ப்பில்லை.

472—

வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

வினா எண் 19000—திரு. வை. காவேரி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவக்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள பல்வேறு நிபந்தனைகளில், அவ்வங்கியின் விவகார எல்லையில், குறைந்தது 2,000 ஹெக்டேர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு இருக்க வேண்டும். ஆனால், கன்னந்தேரி கிராமத்தில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 779.39 ஹெக்டேர் நிலம் மட்டுமே. எனவே, நிபந்தனை பூர்த்தி ஆகாத நிலையில், அக்கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

473—

மானியம்

வினா எண் 20436—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு விவசாயம் செய்ய மானியத்துடன் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) அரசு 1-4-2006 முதல் விவசாயம் செய்ய பயிர்க்கடன்களை 7% வட்டி விகிதத்தில் வழங்க ஆணைகள் வெளியிட்டதை அடுத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பயிர்க்கடன்களை 7% வட்டி விகித்தில் அளித்து வருகின்றன. இத்தகைய கடன்களுக்கு கூடுதல் மானியம் ஏதும் வழங்க கருத்துரு ஏதுமில்லை.

474—

பதப்படுத்தும் தொழிற்சாலை

வினா எண் 26834—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் நெல்லிக்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதியில் நெல்லிக்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

475—

செயற்குறிப்பு

வினா எண் 61125—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரும்பு வெட்டும் கூலியை அரசே ஏற்றுக் கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கரும்பு வெட்டும் கூலியை அரசே ஏற்றுக் கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

476—

உழவர் சந்தை அமைத்தல்

வினா எண் 95459—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மேச்சேரியில் (மேட்டூர் தாலுகா) உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மேச்சேரியில் (மேட்டூர் தாலுகா) உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

477—

மெகா உழவர் சந்தை

வினா எண் 95842—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் "மெகா உழவர் சந்தை" அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

திருப்பூரில் "மெகா உழவர் சந்தை" அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

478—

உழவர் சந்தை

வினா எண் 97848—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் உழவர் சந்தை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

479—

அமர்வு நீதிமன்றம்

வினா எண் 611—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில் இருந்து தருமபுரிக்கு பிரித்து ஆரம்பிக்கப்படாமல் உள்ள மாவட்ட அமர்வு நீதிமன்றம் உடனடியாக செயல்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரியில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் கிருஷ்ணகிரியில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த இரண்டாவது முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை

மாற்றி தருமபுரியில் முதன்மை குற்றவியல், நீதிமன்றம் (District and Sessions Court and Chief Judicial Magistrate Court at Dharmapuri by shifting the existing Chief Judicial Magistrate Court as No.II Krishnagiri) *அமைத்திட அ.ஆ. (நிலை) எண்.1099, உள் (நீ.ம.3) துறை, நாள்: 24-7-2007-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

(ஆ) வினா எழவில்லை.

480—

சட்டக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 6317—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

481—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

வினா எண் 6259—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலையில் மாவட்ட ஒருங்கிணந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலையில் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படவில்லை. உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டவுடன் தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

482—

நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 13485—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாப்பிரெட்டிப்பட்டி வட்டத் தலைநகரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

483—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

வினா எண் 13728—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* அரியலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு உயர் நீதிமன்ற தலைமை பதிவாளரிடமிருந்து பெறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு மத்திய அரசின் தொலைநோக்குத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, மத்திய அரசின் நிதி ஒப்பளிப்பு வேண்டி மத்திய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி நிதி ஒப்பளிப்பு பெறப்பட்ட பின்பு தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

484—

பயிற்சி அளித்தல்

வினா எண் 14242—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதியதாக படித்து பட்டம் பெற்று வரும் வழக்கறிஞர்களுக்கு அரசே பயிற்சி அளிக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) புதியதாக படித்து பட்டம் பெற்று வரும் வழக்கறிஞர்களுக்கு அரசே பயிற்சி அளிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

485—

நீதிபதி நியமனம்

வினா எண் 14518—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடம் கட்டி கூடுதலாக நீதிபதி நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

486—

நீதிமன்றக் கிளை

வினா எண் 14901—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூரில் நீதிமன்றக் கிளை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) இப்பொருள் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

487—

விரிவுபடுத்துதல்

வினா எண் 14903—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) கோவை மாநகரில் உள்ள செசன்ஸ் நீதிமன்றத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கோவை மாநகரில் உள்ள அமர்வு நீதிமன்றத்தை விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்தால் அரசுக்கு அனுப்பப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறும் பட்சத்தில் அம்மாநகரில் உள்ள அமர்வு நீதிமன்றத்தை விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்பை அரசின் நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும்.

488—

நூலகம் அமைத்தல்

வினா எண் 14910—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு நூலகம் ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு நூலகம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

489—

அமர்வு நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 28420—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் தொகுதியில் சார்பு நீதிமன்றம், அமர்வு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

ராசிபுரத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க அ.ஆ. (நிலை) எண் 919, உள் (நீ.ம.3) துறை, நாள் 15-6-2007-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் ராசிபுரத்தில் அமர்வு நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

490—

சட்டக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 30195—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதியில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

இல்லை.

2011 பிப்ரவரி 10]

491—

சார்பு நீதிமன்றம்

வினா எண் 30361—திரு. கோ. அரி: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணியில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை உயர் நீதிமன்றத்தின் விதிமுறைகளின்படி தற்பொழுது திருத்தணியில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை.

492—

விரைவு நீதிமன்றம்

வினா எண் 31939—திரு.ச. லட்சுமணன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

போடிநாயக்கனூர் தொகுதி, போடிநாயக்கனூரில் விரைவு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

இப்பொருள் குறித்த செயற்குறிப்பு உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படவில்லை. செயற்குறிப்பு பெறப்பட்டவுடன் தகுந்த மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

[2011 பிப்ரவரி 10

493—

ஒருங்கிணைந்த நீதிமன்றம்

வினா எண் 33144—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவட்டாறுக்குட்பட்ட பகுதியில் எழும் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் பத்மநாபபுரம் நீதிமன்றங்களில் நடைபெறுவதால், திருவட்டாறில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

494—

சட்டக் கல்லூரி

வினா எண் 34230—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் சட்டக் கல்லூரி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

இல்லை.

495—

புதிய கட்டடம்

வினா எண் 34443—திரு. ச. லட்சுமணன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நீதிமன்றத்துக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நீதிமன்றத்துக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்தால் அரசுக்கு அனுப்பப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறும் பட்சத்தில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப அந்நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பை அரசு பரிசீலிக்கும்.

496—

சார்பு நீதிமன்றம்

வினா எண் 34767—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சார்பு நீதிமன்றம் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சார்பு நீதிமன்றம் அமைத்திட வேண்டிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

497—

கட்டடம்

வினா எண் 36293—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் நீதிமன்றத்திற்குச் சொந்தமாக கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், நன்னிலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் ஒன்றை மைய அரசின் உதவியுடன் கட்டுவதற்கான செயற்குறிப்பு மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

ஒப்புதல் பெறப்பட்டவுடன், நாகப்பட்டினம் மாவட்டம், நன்னிலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட அரசினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

498—

குடியிருப்பு வளாகம்

வினா எண் 36371—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் நீதிபதிகள் குடியிருப்பு வளாகம் நவீன முறையில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில் நீதிபதிகள் குடியிருப்பு வளாகம் நவீன முறையில் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்தால் அரசுக்கு அனுப்பப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறும் பட்சத்தில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப கோயம்புத்தூரில் நீதிபதிகள் குடியிருப்பு வளாகம் நவீன முறையில் கட்டுவதற்கான செயற்குறிப்பை அரசு பரிசீலிக்கும்.

499—

கூடுதல் பள்ளிக் கட்டடம்

வினா எண் 107682—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

செங்கல்பட்டு தொகுதி, நடுவக்கரை ஊராட்சி, குன்னவிகில் நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, நடுவக்கரை ஊராட்சி, குன்னவிகில் நடுநிலைப் பள்ளிக்குப் போதுமான கட்டடங்கள் உள்ளன. எனவே, கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித் தரும் தேவை எழவில்லை.

500—

மடிக்கணினி

வினா எண் 107686—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெறும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் மடிக்கணினி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2008 ஆம் ஆண்டு முதல் தமிழ்வழிக் கல்வி பயின்று பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவிலான தரப்பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்பட்டு அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 1000 மாணவ/மாணவியருக்கு ஊக்கப் பரிசாக மடிக்கணினி (Lap Top) வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

பட்டியல்-II

1—

நீதிமன்றக் கட்டடம்

வினா எண் 42469—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி பேரூராட்சியில் போதிய இட வசதியுடன் கூடிய நீதிமன்றக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி பேரூராட்சியில் போதிய இடவசதியுடன் புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்தால் அரசுக்கு அனுப்பப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறும் பட்சத்தில், அப்பேரூராட்சியில் போதிய இடவசதியுடன் புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பை நிதி நிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும்.

2—

தனி நீதிமன்றம்

வினா எண் 43687—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை தனியாக செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, ஓமலூரில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை தனியாக செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பை, சென்னை உயர் நீதிமன்றம் அரசுக்கு பரிந்துரைக்கும் பட்சத்தில், ஓமலூரில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை தனியாக செயல்படுத்துவது பற்றி அரசின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கும்.

3—

குற்றவியல் நீதிமன்றம்

வினா எண் 43730—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு நகரில் உரிமையியல் நீதிமன்றத்துடன் புதிய குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு நகரில் உரிமையியல் நீதிமன்றத்துடன் புதிய குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற செயற்குறிப்பை, சென்னை உயர் நீதிமன்றம் அரசுக்கு பரிந்துரைக்கும் பட்சத்தில், பள்ளிப்பட்டு நகரில் உரிமையியல் நீதிமன்றத்துடன் புதிய குற்றவியல் நீதிமன்றம் அமைக்கக் கோரும் செயற்குறிப்பை அரசின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கும்.

4—

கிளை நீதிமன்றம்

வினா எண் 47372—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன் புதூரில் கிளை நீதிமன்றம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூரில் கிளை நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற செயற்குறிப்பை, சென்னை உயர் நீதிமன்றம் அரசுக்கு பரிந்துரைக்கும் பட்சத்தில், அரசின் நிதிநிலைமைக்கேற்ப வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூரில் கிளை நீதிமன்றம் அமைக்க அரசு பரிசிலிக்கும்.

5—

நீதிமன்ற வளாகம்

வினா எண் 57987—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்காக அரசு தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

6—

சட்டக் கல்லூரி

வினா எண் 62034—திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வலங்கைமான் நகரில் சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

இல்லை.

7—

சட்டக் கல்லூரி

வினா எண் 75407—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் சட்டக்கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

இல்லை.

8—

சட்டக் கல்லூரி

வினா எண் 88665—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) திருப்பூரில் சட்டக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

9—

நீதிமன்ற வளாகம்

வினா எண் 108019—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கான செயற்குறிப்பு தலைமைப் பதிவாளர், சென்னை உயர் நீதிமன்றம் அவர்களிடம் இருந்து பெறப்படும் முன்னுரிமை பட்டியலில் இடம் பெறும் பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் அரசின் நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலனை செய்யும்.

10—

கட்டடம்

வினா எண் 108868—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கான அறிவிப்பு 2008-2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு அமைச்சர் (சட்டம்) அவர்களால் வெளியிடப்பட்டது. அதற்கிணங்க, அரசாணை (நிலை) எண் 830, உள்(நீதிமன்றம்-3) துறை, நாள் 25-09-2009-ல் ரூ 2,88,90,000 செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

11—

கிரானைட் தொழிற்சாலை

வினா எண் 2995—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வால்பாறை தொகுதி, ரொட்டிக்கடை பகுதியில் கிரானைட் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

வால்பாறை பகுதியில் கிரானைட் குவாரிகளே இல்லையாததாலும் தற்சமயம் தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு புதியதாக மற்றொரு கிரானைட் தொழிற்சாலை வால்பாறை தொகுதி/ரொட்டிக்கடை பகுதியில் ஏற்படுத்தும் திட்டம் இல்லையென தெரிவிக்கப்படுகிறது.

1. தமிழ்நாடு அரசு நிறுவனமான டாமின் தற்சமயம் இரண்டு கிரானைட் தொழிற்சாலைகளை இயக்கி வருகிறது. ஒன்று

2011 பிப்ரவரி 10]

சென்னைக்கு அருகே மணலியில் 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மெருகூட்டப்பட்ட கிரானைட் பலகைகள், கிரானைட் கற்கள் மற்றும் கிரானைட் அலங்காரப் பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறது.

2. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம், மாதேப்பள்ளியில் மற்றொரு கிரானைட் தொழிற்சாலையான கிரானைட் டைல்ஸ் பிளான்ட் 1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மெருகூட்டப்பட்ட கிரானைட் ஓடுகள் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறது. இது 100% ஏற்றுமதி செய்யும் நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

3. தற்சமயம், சந்தையில் நுகர்வோரின் தேவையறிந்து கட்டட கட்டுமானத்திற்குத் தேவையான பெரிய அளவுகளுடன் கொண்ட தரம் வாய்ந்த கிரானைட் பலகைகள் தயாரிக்கும் நவீன இயந்திர வசதிகளுடன் 100 சதவீதம் ஏற்றுமதி நோக்குடன் கூடிய புதிய கிரானைட் தொழிற்சாலை ஒன்று சென்னை அருகே எர்ணாவூர் பகுதியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட இரண்டு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற கிரானைட் பொருள்கள் சந்தை வாய்ப்புக்கு போதுமானதாக உள்ளது.

12—

பச்சைக்கல் படிமங்கள் குவாரி

வினா எண் 5622—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாணிக்கபுரத்தில் பச்சைக்கல் படிமங்கள் வெட்டி எடுக்க குவாரி அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாணிக்கபுரத்தில் பச்சைக்கல் படிமங்கள் வெட்டியெடுக்க தற்சமயம் குவாரி அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

13—

பல்தொழில்நுட்பப் பயிலகம்

வினா எண் 28093—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் மகளிர் பல்தொழில்நுட்பப் பயிலகம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் மகளிர் பல்தொழில்நுட்பப் பயிலகம் துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) எழவில்லை.

14—

கணினி பட்டப்படிப்பு

வினா எண் 31470—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரியில் கணினி பட்டப்படிப்பு துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரியில் இளநிலை கணினி அறிவியல் பாடப்பிரிவு தொடங்க ஆணை வெளியிடப்பட்டு தற்போது நடைபெற்று வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

15—

கலைக் கல்லூரி

வினா எண் 33525—திரு. ச. லட்சுமணன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

போடிநாயக்கனூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

16—

கலைக் கல்லூரி

வினா எண் 49431—திருமதி மு. சந்திரா: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசபாளையம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

இராசபாளையம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

17—

பல்தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 54246—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

தருமபுரி மாவட்டம், தருமபுரியில் அரசு பலதொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரியில் அரசு பலதொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

18—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 56779—திரு. வை. காவேரி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

எடப்பாடி தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

19—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 57848—திரு. கு. ஹசன் அலி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரியும், தொழில்நுட்பக் கல்லூரியும் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலம் பொறியியல் கல்லூரி 2008-2009ஆம்

2011 பிப்ரவரி 10]

கல்வியாண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளதால் அரசு பொறியியல் கல்லூரி தொடங்க வேண்டிய அவசியமில்லை. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

20—

கலைக் கல்லூரி

வினா எண் 58083—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றத்தில் அரசு ஆண்கள் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருப்பரங்குன்றம் தொகுதி, திருப்பரங்குன்றத்தில் அரசு ஆண்கள் கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

21—

பொறியியல் கல்லூரி

வினா எண் 58084—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மதுரையில் அரசு பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

22—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 58274—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

23—

அறிவியல் கல்லூரி

வினா எண் 58275—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

24—

மகளிர் தொழிற் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 58276—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் அரசு மகளிர் தொழிற் பயிற்சிக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் அரசு மகளிர் தொழிற் பயிற்சிக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

25—

கலைக் கல்லூரி

வினா எண் 61113—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தாரமங்கலம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

26—

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 61114—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

27—

கலைக் கல்லூரி

வினா எண் 61320—திரு. கே. திருநாவுக்கரசு: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உளுந்தூர்பேட்டையில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உளுந்தூர்பேட்டையில் அரசு கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

28—

இஸ்லாமிய பெண்கள் கல்லூரி

வினா எண் 62534—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோவில் லால்பேட்டையில் இஸ்லாமிய பெண்களுக்கென கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

காட்டுமன்னார்கோவில் தொகுதி, லால்பேட்டையில், இஸ்லாமிய பெண்களுக்கென கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

கல்லூரி அமைத்தல்

வினா எண் 62535—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோவில் தொகுதியில் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

30—

பொறியியல் கல்லூரி

வினா எண் 62923—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, அரகண்டநல்லூரில் அரசு பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) முகையூர் தொகுதி, அரகண்டநல்லூரில் அரசு பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

31—

மகளிர் கலைக் கல்லூரி

வினா எண் 63023—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

முதுகலைப் பாடப் பிரிவுகள்

வினா எண் 66305—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை அரசு மகளிர் கல்லூரியில் எம்.பி.ஏ., எம்.சி.ஏ., ஆகிய முதுகலை பாடப் பிரிவுகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை அரசு மகளிர் கல்லூரியில் எம்.பி.ஏ., எம்.சி.ஏ., பாடப் பிரிவுகள் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

33—

பொறியியல் கல்லூரி

வினா எண் 69870—திரு. ப. டில்லிபாபு: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரூர் தொகுதி, ஊத்தங்கரையில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

அரூர் தொகுதி, ஊத்தங்கரையில் பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

34—

கலைக் கல்லூரி

வினா எண் 70020—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதியில் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

35—

பொறியியல் கல்லூரி

வினா எண் 70021—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

36—

பல்தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 70022—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

37—

கலைக் கல்லூரி

வினா எண் 74372—திரு. கோ. அரி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கத்தில் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கத்தில் கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

38—

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 74756—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கல்வியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரை தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் அனுமதி பெற்ற பிறகே கல்வியியல் கல்லூரிகளை துவங்கிட இயலும். காஞ்சிபுரம் தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

39—

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 74830—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) முகையூர் தொகுதியில் உயர் கல்வி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கல்வியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரை தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் அனுமதி பெற்ற பிறகே கல்வியியல் கல்லூரிகளைத் துவங்கிட இயலும். முகையூர் தொகுதியில் உயர் கல்வி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

40—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 74844—திரு. ஆர்.எம். பழனிச்சாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மொடக்குறிச்சி தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

41—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 74845—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) மொடக்குறிச்சி தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மொடக்குறிச்சி தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

42—

பொறியியல் கல்லூரி

வினா எண் 74883—திரு. ஞா. ஜான் ஜோசப்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலம் பொறியியல் கல்லூரி தொடங்கப்படும்.

(ஆ) 2009-2010 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படத் தொடங்கும்.

43—

பல்தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 74951—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சிப்காட் பகுதியில் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சிப்காட் பகுதியில் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

44—

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

வினா எண் 75408—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதியில் உயர் கல்வி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

கல்வியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரை தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் அனுமதி பெற்ற பிறகே கல்வியியல் கல்லூரிகளைத் துவங்கிட இயலும். மேல்மலையனூர் தொகுதியில் உயர் கல்வி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

தொழிற்பயிற்சிக் கல்லூரி

வினா எண் 75411—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சிக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

46—

அறிவியல் கல்லூரி

வினா எண் 75413—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் உள்ள ஆலம்பூண்டி கிராமத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் உள்ள ஆலம்பூண்டி கிராமத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

47—

பல்தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 75414—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் பல்தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் பல்தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

11-494—53a

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

48—

பொறியியல் கல்லூரி

வினா எண் 83331—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறையில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மயிலாடுதுறையில் பொறியியல் கல்லூரி தொடங்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

49—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 83330—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறையில் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மயிலாடுதுறையில் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

50—

கலைக் கல்லூரி

வினா எண் 84318—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முகையூர் தொகுதி, விழுப்புரம்-திருக்கோவிலூர் முதன்மை சாலையில் உள்ள ஆலம்பாடி கிராமத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி, விழுப்புரம்-திருக்கோவிலூர் முதன்மை சாலையில் உள்ள ஆலம்பாடி கிராமத்தில் அரசு கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

51—

கலைக் கல்லூரி

வினா எண் 90821—திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

52—

ஆவண மையம்

வினா எண் 90864—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் நகரில் மாவட்ட ஆவண மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிதாக காஞ்சிபுரம் மாவட்ட ஆவணக் காப்பகம் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

53—

மகளிர் கலைக் கல்லூரி

வினா எண் 93533—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரப் பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரப் பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

54—

பல்தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 93534—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதி, கடத்தூர் பேரூராட்சிப் பகுதியில் பல்தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மொரப்பூர் தொகுதி, கடத்தூர் பேரூராட்சிப் பகுதியில் பல்தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

55—

பொறியியல் கல்லூரி

வினா எண் 97979—திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி வளாகத்தில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தலைவாசல் தொகுதி, அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி வளாகத்தில் பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

56—

கலைக் கல்லூரி

வினா எண் 101232—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்தில் அரசு கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

57—

கலைக் கல்லூரி

வினா எண் 101712—திரு. போ. சின்னப்பன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளாத்திகுளம் தொகுதியில் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதியில் கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

58—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 101891—திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மொரப்பூர் தொகுதியில் பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதியில் பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

59—

அறிவியல் பூங்கா

வினா எண் 102597—திரு. போ. சின்னப்பன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளத்தில் அறிவியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளத்தில் அறிவியல் பூங்கா அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

60—

பின்னலாடை தொழில் கல்லூரி

வினா எண் 105092—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பூவந்தியில் பின்னலாடை தொழில் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, பூவந்தியில் பின்னலாடை தொழில் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

61—

பேருந்து வசதி

வினா எண் 61116—திரு. ம. இராஜ்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூரிலிருந்து வால்பாறைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர்-வால்பாறைக்கு கீழ்கண்டுள்ளவாறு பகுதி, பகுதியாக பேருந்து வசதி பெற்றுள்ளது.

பெரம்பலூரில் இருந்து திருச்சிக்கு ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும், திருச்சியில் இருந்து பழனிக்கு ஒவ்வொரு 15

2011 பிப்ரவரி 10]

நிமிட இடைவெளியிலும், பழனியிலிருந்து பொள்ளாச்சிக்கு ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும், பொள்ளாச்சியிலிருந்து வால்பாறைக்கு 20 நிமிட இடைவெளியிலும் பகுதி, பகுதியாக நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது.

2. மேலும், பெரம்பலூர்—வால்பாறை வழித்தடத்தில் நேரடி பயணிகள் அடர்வு மிகவும் குறைவாகவே இருக்கும் என்பதால் தனியாக பேருந்து இயக்க வாய்ப்பில்லை.

62—

மகப்பேறு மருத்துவமனை

வினா எண் 283—திரு. இரா. இராம்பிரபு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

"பரமக்குடி தொகுதி, பரமக்குடி நகர், எமனேஸ்வரம் பகுதியில் புதிதாக அரசு மகப்பேறு மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பரமக்குடி தொகுதியில் பரமக்குடி அரசு வட்டத் தலைமை மருத்துவமனையில் அறுவை அரங்குடன் கூடிய மகப்பேறு பிரிவு மிகச் சிறப்பான முறையில் இயங்கி வருவதால், அம்மருத்துவமனையிலிருந்து சுமார் 6 கிலோ மீட்டர் தூரமே உள்ள எமனேஸ்வரம் பகுதியில் மேலும் ஒரு மகப்பேறு மருத்துவமனை புதியதாக அமைக்க நிருவாக ரீதியாக தற்போது அவசியம் எழவில்லை.

63—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 2481—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதியில், காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகையின் அடிப்படையிலும், 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற மத்திய அரசின் இலக்கின்படியும் மேற்படி ஊராட்சி ஒன்றியத்தில் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் அங்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போது சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லை.

64—

கட்டடம்

வினா எண் 5018—திரு. க. இராஜேந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஜெயங்கொண்டம் தொகுதி, மீன் சுருட்டி மற்றும் டி. பழுர் ஆகிய இரண்டு ஊர்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், சித்த மருத்துவத்திற்கு தனியாக கட்டடம் கட்டித்தர, அரசு ஆவன செய்யுமா?"

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

"ஜெயங்கொண்டம் தொகுதி, மீன் சுருட்டி மற்றும் டி.பழுர் ஆகிய இரண்டு ஊர்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், சித்த மருத்துவப் பிரிவிற்கு தனியாகக் கட்டடம் கட்டித்தர நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டவுடன் இப்பிரிவுகளுக்கு கட்டடம் கட்ட தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

2011 பிப்ரவரி 10]

65—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5986—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி, குட்டக்குழி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், முழு நேர மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில் சுகாதார பகுதி மாவட்டம், திருவட்டாறு ஊராட்சி ஒன்றியத்தில், குட்டக்குழி ஆரம்ப சுகாதார நிலையம் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசாணை (நிலை) எண் 142 நாள் 30-4-2007-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கட்டிடப் பணிகள் முடிந்தவுடன் கூடுதல் மருத்துவர்களும், மருத்துவ பணியாளர்களும் நியமனம் செய்யப்பட்டு முழு நேரமும் இவ்வாரம்ப சுகாதார நிலையம் செவ்வனே செயல்படும்.

66—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 12342—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, மக்கள் தொகை அதிகமாக உள்ள நல்லம்பள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்த பட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால் நல்லம்பள்ளி கிராமத்திற்கும், இலளிகம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், நல்லம்பள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

67—

சிறப்புப் பிரிவுகள்

வினா எண் 13811—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறுநீரகம், இருதயம் உள்ளிட்ட சிறப்புப் பிரிவுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதயயியல் சிகிச்சைப் பிரிவு (I.C.C.U) ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால், இருதயயியல் புறநோயாளிப் பிரிவு செயல்பட்டு வருகிறது. மேலும் சிறுநீரக புறநோயாளிப் பிரிவும் செயல்பட்டு வருகிறது.

68—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 14276—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, போடிபட்டி ஊராட்சி, சுண்டக்காம்பாளையத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலை பேட்டை தொகுதி, போடிபட்டி ஊராட்சி, சுண்டக்காம்பாளையத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. எனவே, அதே இடத்தில் பிறிதொரு துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

69—

பாம்பு, தேள் கடிக்கு மருந்து

வினா எண் 14737—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிராம ஊராட்சிகள்மூலம் பாம்புக் கடி மற்றும் தேள் கடிக்கு மருந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருள்கள் சட்டப்படி (Drugs and Cosmetics Act) *பாம்புக்கடி மற்றும் தேள்கடி மருந்துகள், குளிர்சாதன பெட்டியில் 2 முதல் 8 டிகிரி செல்சியஸில் வைக்கப்பட்டு 24 மணி நேரமும் பாதுகாக்கப்பட்டு மருந்துகள் ஆங்கில மருத்துவரின் ஆலோசனைப்படி நோயாளிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். மேலும், மருந்தாளுநர் தலைமையில் மருந்துகள் பாதுகாக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட வேண்டும். எனவே, கிராம ஊராட்சிகள்மூலம் பாம்புக்கடி மற்றும் தேள் கடிக்கு மருந்துகள் வழங்க இயலாது.*

[2011 பிப்ரவரி 10

70—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 14962—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், துலுக்கர்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், துலுக்கர்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் கருத்துரு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

71—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 14966—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூட்டப்பணை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால்

2011 பிப்ரவரி 10]

ராதாபுரம் வட்டம், கூட்டப்பனை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

72—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 23392—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, செம்மன்கூடல் ஊராட்சி, எல்லாயூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், எல்லாயூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

73—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 29969—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சிப்காட் வளாகத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே.. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் சிப்காட் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

74—

தரம் உயர்த்துதல்

வினா எண் 30026—திரு. என். மாலை ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதைபற்பநல்லூர் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியம், சீதைபற்பநல்லூர் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தும் திட்டம் இல்லை.

75—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 30927—திரு. த. தியோடர் ரெஜினால்டு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பத்மநாபபுரம் தொகுதி, கப்பியறை ஊராட்சி, ஓலவிளையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஊராட்சி ஒன்றியம், ஓலவிளை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

76—

செவிலியர் பயிற்சிக் கல்லூரி

வினா எண் **32002—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி துவங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

77—

தரம் உயர்த்துதல்

வினா எண் **42365—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, ராசாக்கமங்கலம் ஒன்றியம், இலந்தயடிதட்டு துணை சுகாதார மையத்தை ஆரம்பச் சுகாதார மையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகர்கோவில் தொகுதி, ராசாக்கமங்கலம் ஒன்றியம், இலந்தயடிதட்டு துணை சுகாதார மையத்தை ஆரம்பச் சுகாதார நிலையமாக தரம் உயர்த்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

78—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 57557—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, பெட்டமுகிலாளம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, பெட்டமுகிலாளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

79—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 64728—திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், பவர்க்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், பவர்க்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

80—

சிறப்புப் பயிற்சி

வினா எண் 2778—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

படித்த இளைஞர்கள் தொழில் தொடங்க சிறப்பு பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

படித்த இளைஞர்கள் தொழில் தொடங்க அரசு, பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் பயிற்சி அளித்து வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

81—

கால்நடை மருந்தகம்

வினா எண் 5453—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, சக்கரப்ப நாயக்கனூர் ஊராட்சி மேலப்பெருமாள்பட்டிக்கு கால்நடை மருந்தகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மேலப்பெருமாள்பட்டி கிராமத்தில் புதியதாக கால்நடை மருந்தகம் ஏற்படுத்த தற்போது வாய்ப்பு ஏதுமில்லை.

82—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 22928—திரு. வை. காவேரி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், நொருக்கம்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், நொருக்கம்பாளைத்தில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

83—

ஜவ்வரிசி தொழிற்சாலை

வினா எண் 23358—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், சிக்கம்பட்டி ஊராட்சியிலுள்ள ஜவ்வரிசி தொழிற்சாலையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், சிக்கம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜவ்வரிசி தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

84—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 23549—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சியில் கால்நடை மருந்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் துவக்க தற்போது வாய்ப்பு ஏதுமில்லை.

85—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 23918—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், கொடுங்கியத்தில் கால்நடை மருத்துவனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், கொடுங்கியத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

86—

கால்நடை மருந்தகம்

வினா எண் 26687—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, நெரும்பூர் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் நெரும்பூர் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த தற்போது வாய்ப்பு ஏதுமில்லை.

87—

கால்நடை மருத்துவனை

வினா எண் 27859—திரு. மா. சந்திரகாசி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், புதுவேட்டக்குடி கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவனையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ). வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், புதுவேட்டக்குடி கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

88—

பீங்கான் தொழிற்சாலை

வினா எண் 28270—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதி, ஆலந்தூர் ஒன்றியம் தெரணி காரைப்பகுதியில் மூலப்பொருட்கள் கிடைப்பதால் பீங்கான் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

வரகூர் தொகுதி, ஆலந்தூர் ஒன்றியம் தெரணி காரைப் பகுதியில் பீங்கான் தயாரிப்பதற்கு பயன்படும் மூலப்பொருளான தீக்களிமண் கிடைத்தாலும், அது பல்வேறு இடங்களில் சிறிய அளவில் கிடைப்பதால் மேற்கண்ட இடங்களில் பீங்கான் தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

89—

வாசனை திரவிய தொழிற்சாலை

வினா எண் 31841—திரு. சை. சையது கௌஸ் பாஷா: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) "மதுரை மலர்கள் மூலம் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மதுரையில் மலர்கள் மூலம் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

90—

கால்நடை மருந்தகம்

வினா எண் 32302—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

91—

கிளை மருத்துவனை

வினா எண் 33944—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) தளி தொகுதி, பொம்மதாத்தனூர் ஊராட்சி பச்சபனட்டியில் கிளை மருத்துவனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தளி தொகுதி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பொம்மதாத்தனூர் பச்சபனட்டி கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனை துவக்க வாய்ப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

92—

தரம் உயர்த்துதல்

வினா எண் 33947—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, கக்கதாசம் கால்நடை கிளை மருந்தகத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம், எனில். எப்போது?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தளி தொகுதி, கக்கதாசம் கால்நடை கிளை மருந்தகத்தினை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2011 பிப்ரவரி 10

93—

கயிறு தொழிற்சாலை

வினா எண் 34445—திரு. ச. லட்சுமணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் தொகுதியில் கயிறு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

போடிநாயக்கனூர் தொகுதியில் கயிறு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

94—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 34562—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழடியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழடியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

2011 பிப்ரவரி 10]

95—

கால்நடை மருத்துவனை

வினா எண் 34563—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலவெள்ளூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு பொங்கலூர் திரு. நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலவெள்ளூரில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த தற்போது செயற்குறிப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

96—

கால்நடை மருத்துவனை

வினா எண் 34967—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், இளையாளூரில் பகுதிநேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், இளையாளூரில் பகுதிநேர கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

97—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 40541—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, அவலூர் ஊராட்சி, அவலூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம். எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) அவலூர் கிராமத்திற்கு அருகில் தம்மனூர் மற்றும் களக்காட்டூர் கால்நடை கிளை நிலையங்களும் வாலாஜாபாத் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதாலும், கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், மேற்படி கிராமத்தில் கால்நடை மருந்தகம் எதுவும் செயல்படாத நிலையில், அங்கு நேரடியாக புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

98—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 41632—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதி, தொரப்பாடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தொரப்பாடி கிராமத்திற்கு அருகில், மேல்மலையனூர் காலநடை மருந்தகம் செயல்பட்டு வருவதாலும், அக்கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அக்கிராமத்திற்கு அருகில் செயல்படும் கால்நடை நிலையத்தின் மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாக கருதப்படுவதாலும், மேற்படி கிராமத்திற்கு கால்நடை மருந்தகம் எதுவும் செயல்படாத நிலையில், விதிமுறைகளுக்கு புறம்பாக அங்கு நேரடியாக புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

99—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 41633—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதி, தடாகம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதி, தடாகம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்க வாய்ப்பில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

100—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 42723—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பாடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், ஓமலூர் கோட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 3 கால்நடை மருந்தகங்களும், ஒரு கால்நடை கிளை நிலையமும் உள்ளன. பாப்பம்பாடி ஊராட்சியில் உள்ள கால்நடைகளுக்கு வெள்ளாளபுரம், புதுப்பாளையம், தாரமங்கலம் ஆகிய கால்நடை மருந்தகங்கள் மூலமும் மாட்டையாம்பட்டி கால்நடை கிளை நிலையம் மூலமும் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதால் பாப்பம்பாடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் வாய்ப்பில்லை.

101—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 58283—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, எழிலூர் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) எழிலூர் கிராமத்திற்கு அருகில் திருத்துறைப்பூண்டி கால்நடை மருத்துவமனையும், கடியாச்சேரி கால்நடை கிளை நிலையமும், ஓதியத்தூர் கால்நடை கிளை நிலையமும் (முத்துபேட் ஊராட்சி ஒன்றியம்) செயல்பட்டு வருவதாலும், கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், மேற்படி கிராமத்தில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

102—

சிறு தொழிற்பேட்டை

வினா எண் 63364—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் வட்டம், கொளத்தூர் பகுதியில் சிறு தொழிற்பேட்டை துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் வட்டம், கொளத்தூர் பகுதியில் சிறு தொழிற்பேட்டை துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

103—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 90901—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள இலுப்பூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள இலுப்பூரில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

104—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 90908—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, டோக்காடு ஊராட்சி, துடுகனஹள்ளியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, டோக்காடு ஊராட்சி, துடுகனஹள்ளியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

2011 பிப்ரவரி 10]

105—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 92039—திரு. கோ. எதிரொலிமணியன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரணமல்லூர் தொகுதி, தவனி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெரணமல்லூர் தொகுதி, தவனி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

106—

கோழித்தீவனம் தயாரிக்கும் ஆலை

வினா எண் 93305—திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதியில் கோழித்தீவனம் தயாரிக்கும் ஆலையை நிறுவிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பல்லடம் தொகுதியில் கோழித்தீவனம் தயாரிக்கும் ஆலையை நிறுவிட கால்நடை பராமரிப்புத் துறையில் தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

107—

சுற்றுலாத் தலம்

வினா எண் 31264—திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீரன் சின்னமலை வாழ்ந்த இடமான ஓடாநிலை பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. தலத்திற்கு வருகைத் தரும் பயணிகளை கருத்திற்கொண்டு தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை மூலம் செய்து வருகிறது.

108—

சுற்றுலாத் துறை பூங்கா

வினா எண் 57354—திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, குளித்தலை கடம்பவனேஸ்வரர் கோயில் அருகில் சுற்றுலாத் துறை மூலம் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* குளித்தலை தொகுதி, குளித்தலை கடம்பவனேஸ்வரர் கோயில் அருகில் சுற்றுலாத் துறை மூலம் பூங்கா அமைத்திட கருத்துரு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

109—

சுற்றுலாத் தலம்

வினா எண் 96968—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கிராலத்தூர் ஊராட்சி, திருக்கொள்ளிக்காடு பொங்கு சனீஸ்வரர் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கிராலத்தூர் ஊராட்சி, திருக்கொள்ளிக்காடு பொங்கு சனீஸ்வரர் கோயில் பகுதியை மேம்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

110—

இலவச விடுகள்

வினா எண் 5268—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள பத்திரிகை நிருபர்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள பத்திரிகை நிருபர்களுக்கு இலவசமாக வீடுகட்டிக் கொடுப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

111—

சுதந்திரப் போராட்ட திரைப்படங்கள்

வினா எண் 17171—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சுதந்திரப் போராட்டங்களை திரைப்படங்கள் மூலம் காட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சுதந்திரப் போராட்டம் குறித்து தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் திரைப்படங்கள் ஏதும் இதுவரை தயாரித்து திரையிடப்படவில்லை. ஆனால் மைய அரசு திரைப்படப்பிரிவின் மூலம் சுதந்திரப் போராட்டங்கள் குறித்து பல படங்களைத் தயாரித்து திரையிட்டது. தமிழ்நாடு திரைப்படப்பிரிவில் சுதந்திரப் போராட்டங்கள் குறித்த ஆவன திரைப்படங்கள் எதுவுமில்லை. எனவே, மேற்படி தமிழ்நாடு திரைப்படப்பிரிவு மூலம திரைப்படங்கள் காட்டுவதற்கு இயலாது.

112—

மாணவர் விடுதி

வினா எண் 30138—திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, வீரபாண்டியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, வீரபாண்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

113—

கிளை அலுவலகம்

வினா எண் 63521—திரு. ஆர். சாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மாவட்டக் கிளை அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மேலூரில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மாவட்டக் கிளை அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

114—

கட்டடம்

வினா எண் 80—திரு. ஆர். சாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

மேலூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

மேலூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காலிமனை கிடைக்கப்பெற்றதும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

115—

தரம் **உயர்த்துதல்**

வினா எண் 167—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டம், கொழுமம் மற்றும் சங்கராமநல்லூர் சிறப்பு ஊராட்சி பகுதிகளில் உள்ள நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த 2006-2007-ல் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2006-2007 ஆம் கல்வி ஆண்டில் 100 அரசு/ஊராட்சி ஒன்றியம்/நகராட்சி மற்றும் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பல்வேறு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த வேண்டுகோள்கள் தொடர்ந்து பெறப்பட்டு வருகின்றன. இவ்வாறு, உடுமலை வட்டம், கொழுமம் மற்றும் சங்கராமநல்லூர் சிறப்பு ஊராட்சி பகுதிகளில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தக் கோரி, வரும் 2007-2008 ஆம் கல்வி ஆண்டில் கருத்துருக்கள் பெறப்பட்டால், உரிய நிபந்தனைக்குட்பட்டு நிதிநிலைக்கேற்ப உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2011 பிப்ரவரி 10]

116—

ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 315—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை அரசு ஆரம்பப் பள்ளிகளுக்கு காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை அரசு ஆரம்பப் பள்ளியில் அனுமதிக்கப்பட்ட 7 பணியிடங்களில் தற்போது ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே காலிப் பணியிடங்கள் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

117—

ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 318—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் சிங்கோனா இடைநிலைப் பள்ளியில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் சிங்கோனா ஆரம்பப் பள்ளியில் அனுமதிக்கப்பட்ட *2* பணியிடங்களில் தற்போது ஆசிரியர்கள்

பணிபுரிந்து வருகின்றனர். எனவே காலிப் பணியிடங்கள் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

118—

பணி நியமனம்

வினா எண் 321—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வாட்டார்பால்ஸ் பள்ளியில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் வாட்டார்பால்ஸ் பள்ளியில் அனுமதிக்கப்பட்ட 2 பணியிடங்களில் தற்போது ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே காலிப் பணியிடங்கள் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

119—

பணி நியமனம்

வினா எண் 322—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஐயர்பாடி பள்ளியில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் ஐயர்பாடி ஆரம்பப் பள்ளியில் அனுமதிக்கப்பட்ட 2 பணியிடங்களில் தற்போது ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே காலிப் பணியிடங்கள் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

120—

பணி நியமனம்

வினா எண் 324—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள காடம்பாறை உயர்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஆசிரியர் தேர்வு வாரியம்/மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் காலிப் பணியிடங்களை நிரப்பப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

121—

பணி நியமனம்

வினா எண் 325—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் கோட்டூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) விரைவில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

122—

பணி நியமனம்

வினா எண் 327—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள கோட்டூர் பெண்கள் செல்லமுத்து உயர்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஆசிரியர் தேர்வு வாரியம்/மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

123—

பணியிட மாறுதல்

வினா எண் 494—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கல்வியாண்டின் இடைப்பட்ட காலத்தில் ஆசிரியர்களை பணியிட மாறுதல் செய்வதினால் தேர்ச்சி விகிதம் குறையுமாதலால் இதனை முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2006-2007ஆம் கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே ஆசிரியர் பணியிட மாறுதல்கள் வழங்கப்பட்டுள்ளதால் தேர்ச்சி விகிதம் குறைய வாய்ப்பில்லை.

124—

புதிய வகுப்பறைகள்

வினா எண் 777—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி மூலம் புதிய வகுப்பறைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருக்கழுக்குன்றம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கியின் திட்டம் 7-ன் மூலம் புதிய வகுப்பறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

125—

தரம் உயர்த்துதல்

வினா எண் 778—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, அஞ்சூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 101, பள்ளிக் கல்வி, நாள் 30-6-2006-ல் செங்கல்பட்டு தொகுதி, அஞ்சூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

126—

தரம் உயர்த்துதல்

வினா எண் 1179—திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மொரப்பூர் தொகுதி, நவலை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்திடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2002-2003 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதியில் உள்ள நவலை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டுவிட்டது.

127—

தரம் உயர்த்துதல்

வினா எண் 1409—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

முகையூர் தொகுதி, ஒட்டம்பட்டு கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, ஒட்டம்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி 2006-2007 ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

128—

கல்வி ஆர்வலர்கள் நியமனம்

வினா எண் 1414—திரு. வீ.எ.டி. கலியவரதன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிராமங்களிலுள்ள பள்ளிகளின் கிராமக் கல்விக் குழு தலைவராக அந்தந்தப் பகுதியிலுள்ள கல்வி ஆர்வலர்களை நியமனம் செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கிராமங்களிலுள்ள பள்ளிகளின் கிராமக் கல்விக் குழு தலைவராக அந்தந்தப் பகுதியிலுள்ள கல்வி ஆர்வலர்களை நியமனம் செய்ய விழையும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

129—

கட்டடம்

வினா எண் 1692—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்ட மைய நூலகத்திற்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) சோமாசிபாடி ஆராய்ச்சிப் பகுதிகளில் பகுதிநேர நூலகம் துவக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) திருவண்ணாமலை மாவட்ட மைய நூலகத்திற்கு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) சோமாசிபாடி ஆராய்ச்சிப் பகுதிகளில் பகுதிநேர நூலகம் திறப்பதற்கான நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் ஏதும் பூர்த்தி செய்யப்படாததால் பகுதி நேர நூலகம் திறக்க இயலவில்லை.

130—

கட்டடம்

வினா எண் 1885—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, கோவைபுதூர், குனியமுத்தூர் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, கோவைபுதூர், குனியமுத்தூரில் செயல்பட்டுவரும் கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு *29-11-1995* முதல் செயல்பட்டு வருகிறது.

131—

தரம் உயர்த்துதல்

வினா எண் 2236—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வடகடும்பாடி ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வடகடும்பாடி ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கருத்துருக்கள் பெறப்படவில்லை. பெறப்பட்டால், நிபந்தனைகளுக்குட்பட்டு நிதி வசதிக்கேற்ப அரசு அதனை பரிசீலிக்கும்.

132—

தரம் உயர்த்துதல்

வினா எண் 2239—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பட்டிவாக்கம் மற்றும் வல்லத்திலுள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பட்டிவாக்கம் மற்றும் வல்லத்திலுள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தக் கோரி காஞ்சிபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துருக்கள் பெறப்படவில்லை.

[2011 பிப்ரவரி 10

133—

தரம் உயர்த்துதல்

வினா எண் 2860—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, மனப்பாக்கம் ஆதிதிராவிடர் பகுதியில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, மனப்பாக்கம் ஆதிதிராவிடர் பகுதியில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை. பெறப்பட்டதும், நிபந்தனைகளுக்குட்பட்டு நிதிவசதிக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

134—

தரம் உயர்த்துதல்

வினா எண் 4652—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி/ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி மதுரை முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துருக்கள் பெறப்படவில்லை.

2011 பிப்ரவரி 10]

135—

தரம் உயர்த்துதல்

வினா எண் 5134—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம் பொட்டியபுரம் ஊராட்சியில் உள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், பொட்டியபுரம் ஊராட்சியில் உள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

136—

தரம் உயர்த்துதல்

வினா எண் 5135—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், தீவட்டிப்பட்டி ஊராட்சியில் உள்ள துவக்கப் பள்ளியை பெண்களுக்கான நடுநிலைப் பள்ளியாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், தீவட்டிப்பட்டி ஊராட்சியில் உள்ள துவக்கப் பள்ளியை பெண்களுக்கான நடுநிலைப் பள்ளியாக மாற்றியமைக்க விழையும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

137—

தரம் உயர்த்துதல்

வினா எண் 5178—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியத்தைச் சார்ந்த தருமகுளம் அரசினர் நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியத்தை சார்ந்த தருமகுளம் அரசினர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி நாகப்பட்டினம் முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துருக்கள் பெறப்படவில்லை.

138—

கட்டடம்

வினா எண் 5179—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், திருவெண்காடு சுவேதாரேண்ஸ்வர் சுவாமி மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* அரசுப் பள்ளிகளுக்கு மட்டுமே நபார்டு வங்கி திட்டத்தின்கீழ் கூடுதல் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், திருவெண்காடு சுவேதாரேண்ஸ்வர் சுவாமி மேல்நிலைப் பள்ளி இந்து அறநிலையத் துறையின்கீழ் அரசு நிதியுதவியுடன் இயங்கிவரும் பள்ளியாகும். எனவே, இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டுவது குறித்து அப்பள்ளி நிர்வாகமே முடிவெடுக்க வேண்டும்.

139—

பள்ளி துவக்குதல்

வினா எண் 5431—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, வேப்பனூத்து ஒன்றியம், பாறைப் பட்டியில் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2005-2006 ஆம் கல்வியாண்டு முதல் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட கல்வி காப்புறுதி மையங்கள் மட்டுமே 1-5 வகுப்புகள் கொண்ட முறையான தொடக்கப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படுவதால், உசிலம்பட்டி தொகுதி, வேப்பனூத்து ஒன்றியம், பாறைப்பட்டியில் தொடக்கப் பள்ளியை நேரடியாகத் தொடங்க வாய்ப்பு இல்லை.

140—

தரம் உயர்த்துதல்

வினா எண் 5432—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, உத்தப்பநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உத்தப்பநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி மதுரை முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துருக்கள் பெறப்படவில்லை.

141—

தரம் உயர்த்துதல்

வினா எண் 5545—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், புதூர் பூங்குளம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், புதூர் பூங்குளம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி வேலூர் முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துருக்கள் பெறப்படவில்லை.

142—

தரம் உயர்த்துதல்

வினா எண் 5643—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, முதலைக்குளம் ஊராட்சி, அலகு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, முதலைக்குளம் ஊராட்சி, அலகு கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி உள்ளது. துவக்கப் பள்ளியை நேரடியாக உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த விதிகளில் இடமில்லை. ஆரம்பப் பள்ளியை முதலில் நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி, பின்னர் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும். தக்க முன்மொழிவுகள் வரப்பெற்றால், விதிகளின்படி பரிசீலிக்கப்படும்.

143—

தரம் உயர்த்துதல்

வினா எண் 6764—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், சமூக ரெங்காபுரம் ஊராட்சி, சமூகரெங்காபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 95, நாள் 24-4-2007 மற்றும் அரசாணை (நிலை) எண் 131, பள்ளிக் கல்வி, நாள் 14-6-2007-ல் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், சமூகரெங்காபுரம் ஊராட்சி, சமூகரெங்காபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

144—

தரம் உயர்த்துதல்

வினா எண் 7326—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, குள்ளஞ்சாவடி கிராமத்திலுள்ள, அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண். 188, பள்ளிக் கல்வி நாள் 28-7-2009-ல் கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, குள்ளஞ்சாவடி கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

145—

தரம் உயர்த்துதல்

வினா எண் 7598—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், சிக்கம்பட்டி ஊராட்சி, குப்பனூர் துவக்கப் பள்ளியை அரசு நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், சிக்கம்பட்டி ஊராட்சி, குப்பனூர் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

146—

கட்டடம்

வினா எண் 7602—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியிலுள்ள இருகூர், பீடம்பள்ளி, சூலூர் ஆகிய ஊர்களில் நபார்டு வங்கியின் மூலம் புதிய மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதியிலுள்ள இருகூர், பீடம் பள்ளி, சூலூர் ஆகிய ஊர்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்கு நபார்டு வங்கி உதவி திட்டம் 4 மற்றும் திட்டம் 5-இன் கீழ் கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

147—

தரம் உயர்த்துதல்

வினா எண் 8727—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கம் தொகுதி, கலசபாக்கம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை எண் 177, பள்ளிக் கல்வி, நாள் 20-7-2007 மற்றும் அரசாணை (நிலை) எண் 179, பள்ளிக் கல்வி, நாள் 23-7-2007-ல் கலசபாக்கம் தொகுதி, கலசபாக்கம் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

148—

தரம் உயர்த்துதல்

வினா எண் 8995—செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திண்டுக்கல் தொகுதி, அகரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 95, நாள் 24-4-2007 மற்றும் அரசாணை (நிலை) எண் 131, பள்ளிக் கல்வி, நாள் 14-6-2007-ல் திண்டுக்கல் தொகுதி, அகரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

149—

துவக்கப் பள்ளி

வினா எண் 11631—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டம் தண்டறை ஊராட்சி, இஸ்லாம்பூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய உருது துவக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2006-2007 ஆம் கல்வியாண்டில், கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டம் தண்டறை ஊராட்சிக்குட்பட்ட இஸ்லாம்பூர் கிராமத்தில் அரசாணை (நிலை) எண் 170, பள்ளிக் கல்வித் துறை நாள் 13-9-2006-ன்படி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி (உருது) தொடங்க ஆணை வெளியிடப்பட்டு பள்ளி செயல்பட்டு வருகிறது.

150—

தரம் உயர்த்துதல்

வினா எண் **11633—**திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம் வரகானப்பள்ளி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2007-2008 ஆம் கல்வியாண்டில், கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி கெலமங்கலம் ஒன்றியம் வரகானப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றம்
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

151—

தரம் உயர்த்துதல்

வினா எண் 11636—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தளி தொகுதி, பிலிமுத்திரை ஊராட்சி, கச்சுவாடி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தளி தொகுதி, பிலிமுத்திரை ஊராட்சி, கச்சுவாடி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி உள்ளது. துவக்கப் பள்ளியை நேரடியாக உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த விதிகளில் இடமில்லை.

152—

தரம் உயர்த்துதல்

வினா எண் 16012—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், அரங்கனூர் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், அரங்கனூரில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி 23-3-1965 முதல் இயங்கி வருகிறது.

2011 பிப்ரவரி 10]

153—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 16656—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் அரசு சார்பில் புதிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஏற்படுத்த அவசியம் எழாது.

154—

தரம் உயர்த்துதல்

வினா எண் 16842—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை, வாட்டர்பால்ஸ் இடைநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, வாட்டர்பால்ஸ் இடைநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

155—

தரம் உயர்த்துதல்

வினா எண் 18626—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம் மல்லிக்குட்டை ஊராட்சித் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் கல்வியாண்டில், சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம் மல்லிக்குட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

156—

தரம் உயர்த்துதல்

வினா எண் 18628—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

157—

தொடக்கப் பள்ளி

வினா எண் 19464—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, அளக்குடி ஊராட்சி, வெள்ளை மணல்திட்டு மின் கிராமத்தில் தொடக்கப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2006-2007 ஆம் கல்வியாண்டில் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி வெள்ளை மணல்திட்டு பகுதியில் உள்ள கல்வி காப்புறுதி மையத்தை 1-5 வகுப்புகள் கொண்ட முறையான தொடக்கப் பள்ளியாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

158—

கட்டடம்

வினா எண் 19471—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை, தளி அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு பகுதி VII திட்டத்தின்கீழ் 18 வகுப்பறைகள், 1 ஆய்வகம், 7 கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதி ரூ.82.66 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறை மூலம் செய்து தரப்பட்டுள்ளது. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம், தளி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு பகுதி VII திட்டத்தின் கீழ் 21 வகுப்பறைகள், 1 ஆய்வகம், 5 கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதி ரூ.88.50 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறை மூலம் செய்து தரப்பட்டுள்ளது.

159—

தரம் உயர்த்துதல்

வினா எண் 19503 திரு. வை. காவேரி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி, தாதாபுரம் ஊராட்சி, மணியாரம்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி, தாதாபுரம் ஊராட்சி, மணியாரம் பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

160—

தரம் உயர்த்துதல்

வினா எண் 19508—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, பூனாட்சி கிராமம், செம்படாபாளையத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2005-2006 ஆம் கல்வியாண்டில் பவானி தொகுதி, பூனாட்சி கிராமம், செம்படாப்பாளையத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

161—

பொது நூலகம்

வினா எண் 20473—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோணூர் ஊராட்சி, பொறையூர் ஆண்டிக்கரை கிராமத்தில் பொது நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோணூர் ஊராட்சி, பொறையூர் ஆண்டிக்கரை கிராமத்தில் ஒரு பகுதிநேர நூலகம் துவக்கப்பட்டு *2-2-2005* முதல் செயல்பட்டு வருகிறது.

[2011 பிப்ரவரி 10

162—

தரம் உயர்த்துதல்

வினா எண் 20647—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, இராமிரெட்டிப்பட்டி ஊராட்சி, கத்திமாரன்வளைவு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, இராமிரெட்டிப்பட்டி ஊராட்சி, கத்திமாரன்வளைவு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோரி கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.

163—

நூலகம் அமைத்தல்

வினா எண் 20765—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, உங்கரான அள்ளி ஊராட்சி, எட்டிமரத்துப்பட்டியில் நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி, உங்கரான அள்ளி ஊராட்சி, எட்டிமரத்துப்பட்டியில் நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

164—

தேர்வு மையம்

வினா எண் 21028—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சின்னக்கண்ணனூர், அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்புத் தேர்வு எழுத தேர்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, சின்னக்கண்ணனூர், அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்புத் தேர்வு எழுத தேர்வு மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

165—

தரம் உயர்த்துதல்

வினா எண் 22141—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி, தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் கல்வியாண்டில், சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், மல்லிக்குட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 10

166—

தரம் உயர்த்துதல்

வினா எண் 22142—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மல்லியகுட்டை ஊராட்சி, தாசனூர் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008ஆம் கல்வியாண்டில், சி. தாரமங்கலம் தொகுதி, மல்லியகுட்டை ஊராட்சி, தாசனூர் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

167—

தரம் உயர்த்துதல்

வினா எண் 22969—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், கீழகுளத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 95, பள்ளிக் கல்வி நாள் 24-4-2007, அரசாணை (நிலை) எண் 131, பள்ளிக் கல்வி, நாள் 14-6-2007-ல் அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம் கீழகுளத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2011 பிப்ரவரி 10]

168—

தரம் உயர்த்துதல்

வினா எண் 23577—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா— .

(அ) மானாமதுரை தொகுதி, இடைக்காட்டூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 95, நாள் 24-4-2007, அரசாணை (நிலை) எண் 131, பள்ளிக் கல்வி, நாள் 14-6-2007-ல் மானாமதுரை தொகுதி, இடைக்காட்டூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

169—

கலைத் திறன்களுக்கு மதிப்பெண்

வினா எண் 23703—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 10 ஆம் வகுப்பு, +2 பள்ளித் தேர்வுகளில் மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டு கலைத் திறன்களுக்கு மதிப்பெண்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 10 ஆம் வகுப்பு, +2 பள்ளித் தேர்வுகளில் மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டு கலைத் திறன்களுக்கு மதிப்பெண்கள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

170—

தரம் உயர்த்துதல்

வினா எண் 23938—திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, கட்டதாமன்பட்டி ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் கல்வியாண்டில், நிலக்கோட்டை தொகுதி, கட்டதாமன்பட்டி ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

171—

தேர்வு மையம்

வினா எண் 27836—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, குருபரப்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 தேர்வு மையம் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, குருபரப்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 தேர்வு மையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

172—

சுற்றுச் சுவர்

வினா எண் 29197—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தாம்பரம் தொகுதி, கோவிலம்பாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தாம்பரம் தொகுதி, கோவிலம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் சுற்றுச் சுவர் கட்டுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் விதிகளுக்குட்பட்டு சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

173—

தரம் உயர்த்துதல்

வினா எண் 29387—திரு. எஸ். இராசசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குடி தொகுதி, குளவாய்ப்பட்டி நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, குளவாய்ப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி 2007-2008 ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

174—

தரம் உயர்த்துதல்

வினா எண் 29446—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, நார்கம்பட்டி ஊராட்சி, தமனம்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, நார்கம்பட்டி ஊராட்சி, தமனம்பட்டி நடுநிலைப்பள்ளி 2007-2008-ஆம் கல்வி ஆண்டில் அரசாணை (நிலை) எண் 130, பள்ளிக் கல்வித் துறை, நாள் 14-6-2007-ன்படி உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

175—

கட்டடம்

வினா எண் 29448—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, கடகத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, கடகத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் திட்டம் 9-ல் விதிகளுக்குட்பட்டு கூடுதல் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2011 பிப்ரவரி 10]

176—

கட்டடம்

வினா எண் 29463—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைக் கட்டடம் கட்ட நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் திட்டம் 9-ல் விதிகளுக்குட்பட்டு புதிய வகுப்பறைக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

177—

தரம் உயர்த்துதல்

வினா எண் 29864—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, குஞ்சான்விளை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2007-2008 ஆம் கல்வியாண்டில் ராதாபுரம் தொகுதி, குஞ்சான்விளை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

[2011 *பிப்ரவரி* 10

178—

தரம் உயர்த்துதல்

வினா எண் 29870—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராதாபுரம் தொகுதி, தெற்கு கருங்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், தெற்கு கருங்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி 2007-2008 ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

179—

தரம் உயர்த்துதல்

வினா எண் 29875—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராதாபுரம் தொகுதி, திருவம்பலபுரம் ஊராட்சி, சங்கனாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2007-2008-ஆம் கல்வியாண்டில், ராராபுரம் தொகுதி, திருவம்பலபுரம் ஊராட்சி, சங்கனாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

2011 *பிப்ரவரி* 10]

180—

நூலகம்

வினா எண் 29923—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தியில் நூலகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தியில் கிளை நூலகம் ஒன்று ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

181—

நூலகம்

வினா எண் 30581—திரு. த. தியோடர் ரெஜினால்டு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பத்மநாபபுரம் தொகுதி, தக்கலையில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் தக்கலையில் பத்மநாபபுரம் நகராட்சியால் நூலகம் செயல்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள 'டவுன் ஹால்' கட்டடத்தில் பொது நூலகம் அமைக்கப்பட்டு 15-6-2007 முதல் முற்பகல் மற்றும் பிற்பகலில் செயல்படும் பகுதிநேர நூலகமாக இயங்கி வருகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

182—

நூலகம்

வினா எண் 31542—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, விட்டிலாபுரம் ஊராட்சியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, விட்டிலாபுரம் ஊராட்சியில் நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

183—

தரம் உயர்த்துதல்

வினா எண் 33475—திரு. வை. காவேரி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வெள்ளையம்பாளையம் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008-ஆம் கல்வியாண்டில், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வெள்ளையம்பாளையம் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

184—

தரம் உயர்த்துதல்

வினா எண் 33909—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வரகானப்பள்ளி அரசு துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008-ஆம் கல்வியாண்டில், கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வரகானப்பள்ளி அரசு துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

185—

தரம் உயர்த்துதல்

வினா எண் 33916—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, சேலையூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 177, பள்ளிக் கல்வி, நாள் 20-7-2007 மற்றும் அரசாணை (நிலை) எண் 179, பள்ளிக் கல்வி, நாள் 23-7-2007-ல் சென்னை-73 சேலையூரில் உள்ள தாம்பரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

186—

அரண்மனையைப் புதுப்பித்தல்

வினா எண் 34381—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை அரண்மனையை புதுப்பித்து வரலாற்றுச் சின்னமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

187—

தொடக்கப்பள்ளி

வினா எண் 34916—திரு. சபா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெல்லிக்குப்பம் தொகுதி, அக்கடவல்லி கிராமத்திலுள்ள சண்முகானந்தா நிதியுதவி பெறும் தொடக்கப் பள்ளியினை அரசு ஏற்று நடத்த முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

மேற்படி பள்ளியை அரசுக்கு ஒப்படைப்பு செய்வது தொடர்பாக கருத்துருக்கள் அரசாணை (நிலை) எண் 2010, கல்வி நாள் 18-10-1983-ன்படி முழுமையான வடிவில் இல்லாததால், கருத்துரு முழுமையான வடிவில் பெறப்பட்டதும் பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

188—

இயற்கைப் பேரிடர்

வினா எண் 40818—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இயற்கைப் பேரிடரான சுனாமி, நிடுநடுக்கம் பற்றிய பாடங்களை பள்ளிகளில் கற்பிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தற்போதுள்ள 8-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பாடத்திட்டத்தில் இயற்கைப் பேரிடரான சுனாமி, நிலநடுக்கம் பற்றிய பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளது.

189—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 43047—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஓமலூரில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க தற்போது அவசியம் எழவில்லை.

190—

தரம் உயர்த்துதல்

வினா எண் 49548—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், கீழப்பெரம்பலூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 127, பள்ளிக் கல்வி நாள் 15-6-2009-ல் பெரம்பலூர் மாவட்டம், கீழப்பெரம்பலூர், அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

191—

சுதந்திர வரலாற்றுப் பாடம்

வினா எண் 51083—திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் கோட்டையில், வேலூர் சிப்பாய் புரட்சி-1806 என்ற ஒலி-ஒளிக் காட்சி அமைத்து இந்திய சுதந்திர வரலாற்றை படமாகக் காட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வேலூர் கோட்டை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இல்லை. இது, மைய அரசு தொல்லியல் துறை, சென்னை வட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால் செயற்குறிப்பு ஏதுமில்லை.

192—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57484—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) மொரப்பூர் தொகுதி, மொரப்பூர் ஒன்றியம், த. அய்யம்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2008-2009-ஆம் கல்வி ஆண்டில் அரசாணை (நிலை) எண் 121, பள்ளிக் கல்வித் துறை, நாள் 6-6-2008-ன்படி தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதி, மொரப்பூர் ஒன்றியம், த. அய்யம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுவிட்டது.

193—

பள்ளிகளுக்குக் கழிப்பிடம்

வினா எண் 57524—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் கழிப்பிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் உள்ள பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் இல்லாத பள்ளிகளுக்கு நபார்டு நிதி உதவியுடன் திட்டம்-9 மற்றும் அதன் தொடர் திட்டங்களின்கீழ் விதிகளுக்குட்பட்டு கழிப்பறை வசதிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 பிப்ரவரி 10

194—

தரம் உயர்த்துதல்

வினா எண் 58055—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 122, பள்ளிக் கல்வி, நாள் 6-6-2008-ல், நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி, பரமத்தி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

195—

தரம் உயர்த்துதல்

வினா எண் 58176—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், முருங்கப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 122, பள்ளிக் கல்வி, நாள் 6-6-2008-ல், சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், முருங்கப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2011 பிப்ரவரி 10]

196—

தரம் உயர்த்துதல்

வினா எண் 58232—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கடகத்தூர் ஊராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 127, பள்ளிக் கல்வி, நாள் 15-6-2009-ல், தருமபுரி மாவட்டம், கடகத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

197—

தரம் உயர்த்துதல்

வினா எண் 58287—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, தலைக்காடு, பாமணி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 127, பள்ளிக் கல்வி, நாள் 15-6-2009-ல், திருத்துறைப்பூண்டி தொகுதி, தலைக்காடு, பாமணி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 10

198—

வகுப்பறைக் கட்டடம்

வினா எண் 58515—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் போதிய வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் உள்ள 13 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள் நபார்டு நிதி உதவியுடன் விதிகளுக்குட்பட்டு பகுதி-9 மற்றும் அதற்கப்பால் மேற்கொள்ளப்படும் பகுதிகளில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

199—

தரம் உயர்த்துதல்

வினா எண் 58696—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, மாம்பட்டு கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 177, பள்ளிக் கல்வி, நாள் 20-7-2007 மற்றும் அரசாணை (நிலை) எண் 179, பள்ளிக் கல்வி, நாள் 23-7-2007-ல், போளூர் தொகுதி, மாம்பட்டு கிராமத்தில்

2011 பிப்ரவரி 10]

உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

200—

தரம் உயர்த்துதல்

வினா எண் 59014—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், சோகண்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2009-2010 ஆம் கல்வி ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், சோகண்டி நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுவிட்டது.

201—

தரம் உயர்த்துதல்

வினா எண் 59027—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி ஊராட்சி, வேப்பம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேப்பம்பட்டி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளிக்கான பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2.00 இலட்சம் இதுவரையில் செலுத்தப்படவில்லை. எனவே, இப்பள்ளியைத் தரம் உயர்த்துவது குறித்து பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

202—

தரம் உயர்த்துதல்

வினா எண் 59028—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கே.வேட்ரப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 122, பள்ளிக் கல்வி, நாள் 6-6-2008-ல், தருமபுரி மாவட்டம், கே. வேட்ரப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

203—

தரம் உயர்த்துதல்

வினா எண் 62298—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 *பிப்ரவரி* 10]

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை இராஜேந்திரா சாலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 127, பள்ளிக் கல்வி, நாள் 15-6-2009-ல், திருப்பூர் மாவட்டம், உடுமலை இராஜேந்திரா சாலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

204—

தரம் உயர்த்துதல்

வினா எண் 62379—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பூம்புகார் தொகுதி, செம்பானர் கோவில் ஊராட்சி ஒன்றியம், கொண்டத்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கொண்டத்தூர் அரசுப் பள்ளியானது ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியாகும். அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்ட பிறகுதான் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலும் என்பதால், மேற்கண்ட நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த இயலாது.

205—

தரம் உயர்த்துதல்

வினா எண் 62936—டாக்டர் க. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி மகளிர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 122, பள்ளிக் கல்வி, நாள் 6-6-2008-ல், நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி, பரமத்தி மகளிர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

206—

தரம் உயர்த்துதல்

வினா எண் 66090—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ராஜேந்திரா சாலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 127, பள்ளிக் கல்வி, நாள் 15-6-2009-ல், திருப்பூர் மாவட்டம், உடுமலை, ராஜேந்திரா சாலை, அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

207—

தரம் உயர்த்துதல்

வினா எண் **92112**—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், பாவக்கல் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாவக்கல் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளிக்கான பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.2.00 இலட்சம் செலுத்தப்படவில்லை. மேலும், இப்பள்ளிக்கு அருகில் 8 கிலோ மீட்டர் தூரத்திற்குள் 2 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. மேற்கண்ட சூழ்நிலையில், இக்கோரிக்கையை இவ்வாண்டு அரசு பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

208—

வகுப்பறைக் கட்டடம்

வினா எண் **109534**—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், மதகனேரி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆய்வகம், கூடுதல் வகுப்பறைக் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், மதகனேரி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 4 வகுப்பறைகள், 1 ஆய்வுக்கூடம், 290 மீட்டர் சுற்றுச்சுவர் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ள நபார்டு வங்கி நிதி உதவித் திட்டம் பகுதி 10-கீழ் அரசாணை (அரசாணை எண் 12, பள்ளிக் கல்வி, நாள் 19-01-2010) வெளியிடப்பட்டு ரூ.36.58 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு மேற்கண்ட பள்ளிக்கு பொதுப் பணித் துறையின்மூலம் பணிகள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

209—

சொந்தக் கட்டடம்

வினா எண் 189—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலையில் வணிக வரித் துறைக்குச் சொந்தமாகக் கட்டடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

தற்போது உடுமலையில் வணிக வரி அலுவலகங்கள் கட்ட தேவையான நிலம் ஒதுக்கீடு செய்ய இயலாது என கோவை, நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர் தெரிவித்துள்ளதால், திருப்பூரில் வணிக வரி கட்டடங்கள் கட்டியது போல், உடுமலையிலும் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தினுள் வணிக வரி கட்டடங்கள் கட்டுவதற்கு உள்ள வாய்ப்புகளைப் பற்றி வருவாய்த் துறையுடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

210—

வரி விலக்கு

வினா எண் 1965—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் கொப்பறைத் தேங்காய் எண்ணெய் உற்பத்தி அதிகமாக உள்ளதால் அவற்றிற்கு வரிவிலக்கு அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2006-07 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் சமையல் எண்ணெய்மீதான வரி 2002 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தவாறே முழுமையாக விலக்களிக்கப்படுமென அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனைச் செயல்படுத்தும் நோக்கில் தேங்காய் எண்ணெய் உள்பட சமையல் எண்ணெய் விற்பனைமீதான வரிக்கு விலக்களித்து அரசாணை நிலை எண் 71, வணிக வரிகள் (ம) பதிவுத் துறை, நாள் 22-07-2006-ல் அறிவிக்கை வெளியிடப்பட்டு, அன்று முதல் செயல்முறைக்கு வந்துள்ளது.

211—

சொந்தக் கட்டடம்

வினா எண் 2775—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு நகரில் இயங்கி வரும் வணிக வரி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

செங்கற்பட்டு நகரில், செங்கற்பட்டு வணிக வரி அலுவலர் அலுவலகம் மற்றும் துணை வணிக வரி அலுவலர் அலுவலகம் (செயலாக்கம்) ஆகிய இரண்டு அலுவலகங்கள் எண் 26, அழகேசன் தெரு, செங்கல்பட்டு-1 என்னும் முகவரியிலுள்ள தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. தற்போது செங்கற்பட்டு நகரில் இயங்கி வருகின்ற வணிக வரி அலுவலகத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டுகின்ற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை.

212—

விற்பனை வரி

வினா எண் 6243—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டு கைத்தறிகளுக்குத் தேவையான சரிகையின்மீது விதிக்கப்படும் 4% விற்பனை வரியை இரத்து செய்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இத்தகைய கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

213—

சேவை வரி

வினா எண் 6512—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

மத்திய அரசு வசூலிக்கும் "சேவை வரி" மூலம் கிடைக்கும் வருவாயில் தமிழ்நாடு அரசுக்கு எவ்வளவு தொகை பங்கு அளிக்கிறது என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டிற்குள் மத்திய அரசு வசூலிக்கும் "சேவை வரி" மூலம் கிடைக்கும் வருவாயில் 30.5 சதவீதம் பங்கு தமிழ்நாடு அரசிற்கு அளிக்கப்படுகின்றது.

214—

வணிக வரி சமாதானத் திட்டம்

வினா எண் 39171—திரு. வீ.பெ. துரைசாமி: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வணிக வரி சமாதானத் திட்டத்தில் நிபந்தனைகளைத் தளர்த்தி முழு வரி நிலுவையும், தண்டத் தொகை, வட்டி உட்பட வசூலிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வணிகர்கள் 31-03-2001 முடிய அரசுக்குச் செலுத்தாமல் நிலுவையிலுள்ள விற்பனை வரி, தண்டத்தொகை மற்றும் வட்டி தொடர்பாக தீர்வு காண தமிழ்நாடு விற்பனை வரி (வரி நிலுவைத் தீர்வு) சட்டம் 2006 (Tamil Nadu Sales Tax Settlement of Arrears Act 2006) *அரசால் இயற்றப்பட்டு, 1-10-2006 அன்று நடைமுறைக்கு வரப்பெற்றது. இச்சட்டத்தின்கீழ் நிபந்தனைகளுக்குட்பட்டு வரி, தண்டத்தொகை மற்றும் வட்டி செலுத்தும் திட்டம் 1-10-2006-ல் தொடங்கி 31-12-2006 உடன் முடிவடைந்துவிட்டது. தற்போது இம்மாதிரியான திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.*

[2011 பிப்ரவரி 10

215—

நிலத்தடி நீர் பாதிப்பு

வினா எண் 4650—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் சிப்காட் கழிவு நீரினால் நிலத்தடி நீர் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண் மிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் சிப்காட் வளாகத்தில் இயங்கி வரும் தோல் மற்றும் சாயத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை தனியாகவோ அல்லது பொதுவாகவோ சுத்திகரிப்பு நிலையம் அமைத்து சுத்திகரிக்க வேண்டும் என்று 11-7-2006 தேதியில் சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த ஆணைப்படி, ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து சாயம் மற்றும் தோல் தொழிற்சாலைகளும் எதிர்மறை சவ்வூடு பரவல் மற்றும் அடர்கசடு மேலாண்மைத் திட்டத்தை 31-12-2006-க்குள் நிறுவி இயக்க வேண்டும். இவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. பெருந்துறை சுத்திகரிப்பு நிலையத்திற்கு தமிழக அரசு மானியமாக ரூ.228.64 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் மானியம் பெறவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

216—

சுற்றுச்சூழல் பாதிப்பு

வினா எண் 4853—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சியில் உள்ள குப்பைக் கிடங்கில் தீ வைக்கப்படுவதால் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையர் அவர்களை குப்பைக்கிடங்கில் குப்பைகளுக்கு தீ வைப்பதைத் தடுக்குமாறு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் உடுமலைப்பேட்டை வட்டம், கணபதிபாளையம் கிராமத்தில் புதிதாக திடக்கழிவுகளை முறைப்படி கையாள 2.83 ஹெக்டேர் பரப்பளவு நிலம் கையகப்படுத்தப்பட்டு, வேலை நடைபெற்று வருகிறது. மேற்கூறிய இடத்தில் வருங்காலத்தில் திடக்கழிவுகளை விஞ்ஞான முறைப்படி கையாள இருப்பதால் நகராட்சி எல்லைக்குள் திடக்கழிவுகள் தீ வைப்பது தடுக்கப்படும்.

217—

குடிநீர் மாசுபடுதல்

வினா எண் 5154—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர் ஊராட்சி எழுதிங்கள்பட்டியில் உள்ள சிப்காட் சாயப் பட்டறையால் குடிநீர் மாசுபடுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர் ஊராட்சி எழுதிங்கள்பட்டி, ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்திற்கு உட்பட்டது. பெருந்துறையில் சிப்காட் வளாகத்தில் இயங்கி வரும் தோல் மற்றும் சாயத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை தனியாகவோ அல்லது பொதுவாகவோ சுத்திகரிப்பு

[2011 பிப்ரவரி 10

நிலையம் அமைத்து சுத்திகரிக்க வேண்டும் என்று 11-7-2006 தேதியில் சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த ஆணைப்படி ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து சாயம் மற்றும் தோல் தொழிற்சாலைகளும் எதிர்மறை சவ்வூடு பரவல் மற்றும் அடர்கசடு மேலாண்மைத் திட்டத்தை 31-12-2006க்குள் நிறுவி இயக்க வேண்டும் இவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. பெருந்துறை சுத்திகரிப்பு நிலையத்திற்கு தமிழக அரசு மானியமாக ரூ.228.64 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் மானியம் பெறவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

218—

நிலத்தடி நீர் பாதிப்பு

வினா எண் 7926—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத கழிவு நீரினால் அப்பகுதியிலுள்ள விவசாய நிலங்கள், மீன்கள் மற்றும் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) தி/ள் ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் அனைத்தும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின்மூலம் சுத்திகரிக்கப்பட்டு ஆலைக்குச் சொந்தமான மற்றும் வாடகை நிலங்களில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் நீரும், மேற்படி நீரைப் பயன்படுத்திய நிலத்தின் நிலத்தடி நீரும் வாரிய தர அளவுக்குள் உள்ளது.

2011 பிப்ரவரி 10]

219—

தோல் பதனிடும் பணி

வினா எண் 8694—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூரில் தோல் பதனிடும் பணி நடப்பதை தடை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் மாசுக் கட்டுப்பாடு வாரிய ஒப்புதல் பெறாமல் தோல் சேகரிக்கும் கிடங்கு எதுவும் நிறுவக் கூடாது என்று சென்னை உயர்நீதிமன்ற பசுமை அமர்வு 19-2-1997 அன்று நீதிப்பேராணை எண் 3808/1991-ல் ஆணையிட்டுள்ளது. உயர் நீதிமன்ற ஆணையினை மீறுபவர்கள் மீது ஓமலூர் தேர்வு நிலை பேரூராட்சி அறிவிப்பு வழங்கி உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மாசு தடுப்புச் சாதனம் இல்லாமலும், மாசுக் கட்டுப்பாடு வாரிய ஒப்புதலுக்கு விண்ணப்பிக்காமலும் இயங்கும் தோல் கிடங்குகள் மீது வாரியத்தால் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

220—

விளையாட்டு மைதானம்

வினா எண் 12322—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம், மங்கலம் ஆகிய பகுதிகளில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

திருவண்ணாமலையில் கலசப்பாக்கம், மங்கலம் ஆகிய பகுதிகளில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

221—

நீச்சல் குளம்

வினா எண் 12477—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தாம்பரம், மறைமலை நகர் ஆகிய இடங்களில் நீச்சல் குளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தாம்பரம், மறைமலை நகர் ஆகிய இடங்களில் நீச்சல் குளம் அமைக்க செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

222—

கால்நடைகள் பாதிப்பு

வினா எண் 16746—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியிலுள்ள ஹைடெக் நிறுவனத்திலிருந்து வெளிவரும் கரும்புகையால் அருகில் உள்ள விவசாய நிலங்கள், கால்நடைகள் பாதிக்கப்படுவதைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியிலுள்ள ஹைடெக் நிறுவனத்திலிருந்து வெளிவரும் கரும்புகையால் அருகில் உள்ள விவசாய நிலங்கள், கால்நடைகள் பாதிக்காமல் பாதுகாக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுகா, கோட்டகவுண்டம் பட்டியிலுள்ள திரு ஹைடெக் மினரல் இண்டஸ்ட்ரிஸ் கோவை பிரைவேட் லிமிடெட் எனும் நிறுவனத்தின் தொழிற்சாலை, இரும்புத்தாது மற்றும் கரி ஆகியவற்றிலிருந்து ஆண்டொன்றிற்கு 60,000 டன் ஸ்பான்ஜ் அயர்ன் உற்பத்தி செய்ய வாரியத்திடமிருந்து 24-1-2005 நாளிட்ட நடப்பாணையில் இசைவு பெற்று இயங்கி வருகிறது. இசைவாணை இத்தொழிற்சாலைக்கு 31-3-2007 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையின் சுழற் உலையிலிருந்து வெளியேறும் வாயுக் கழிவானது, தரை மட்டத்திலிருந்து 40 மீட்டர் உயரமுள்ள புகைப்போக்கியின் வழியாக வெளியேற்றப்படுகிறது. தூசுக்களைக் கட்டுப்படுத்த உறிஞ்சும் அமைப்பு, பைகள் தொகுப்பு மற்றும் புகைப்போக்கி ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கழிவு நீரானது சேகரிப்புத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு, சமச்சீர் தொட்டியின் வழியாக முழுவதும் மறு சுழற்சி செய்யப்படுகிறது. 5-1-2007 அன்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது தொழிற்சாலையில் காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்கள் செயல்பாட்டில் இருந்தன. மேலும், அதிக காற்றோட்ட சமயங்களில் காணப்படும் லேசான தூசிக் கழிவுகள்ளக் குறைக்க தொழிற்சாலைக்குட்பட்ட சாலைப்பகுதிகளில் தொடர்ந்து நீர் தெளிக்கப்படுகிறது.

இத்தொழிற்சாலை அனைத்து காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்களையும், தூசினை குறைக்கும் நீர் விசிறும் அமைப்பையும் முறையாகச் செயல்படுத்திடவும் காற்று மாசினை மேலும் குறைக்கும் மின் உற்பத்தி நிலையத்தினை விரைந்து அமைக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதனைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

[2011 பிப்ரவரி 10

223—

சுத்திகரிப்பு நிலையங்கள்

வினா எண் 19200—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர் சிப்காட் தொழிற்பேட்டை பகுதிகளில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈங்கூர் சிப்காட் தொழிற்பேட்டையில் கழிவுநீர் வெளியேற்றும் அனைத்து தொழிற்சாலைகளும் தனியாகவோ அல்லது பொதுவாகவோ கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உயர் நீதிமன்றம் 11-7-2006 தேதியில் பிறப்பித்த ஆணையின்படி ஈரோடு மாவட்டத்திலுள்ள அனைத்து சாய மற்றும் தோல் தொழிற்சாலைகள் எதிர்மறை சவ்வூடு பரவல் மற்றும் அடர்கசடு மேலாண்மைத் திட்டத்தை 31-12-2006-க்குள் நிறுவி இயக்க வேண்டும். இவ்வழக்கு நிலுவையிலுள்ளது. இப்போது சுத்திகரிப்பு நிலையத்திற்கு தமிழக அரசு மானியமாக ரூ.228.64 இலட்சங்களை வழங்கியுள்ளது. மத்திய அரசின் மானியம் பெறவும் உரிய பரிந்துரை அரசால் அனுப்பப்பட்டுள்ளது.

224—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 20900—திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) திருவட்டாறு தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

225—

உடற்பயிற்சி நிலையம்

வினா எண் 20965—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையில் உடற்பயிற்சி நிலையம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரையில் உடற்பயிற்சி நிலையம் ஒன்றை கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

226—

உடற்பயிற்சி நிலையம்

வினா எண் 20966—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் உடற்பயிற்சி நிலையம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் உடற்பயிற்சி நிலையம் ஒன்றை கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

227—

புளோரைடு கலப்பதைத் தடுத்தல்

வினா எண் 22965—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம், எடப்பாடி, ஜலக்கண்டபுரம் பகுதிகளில் இரசாயன தொழிற்சாலையினால் குடிநீரில் புளோரைடு கலப்பதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம், எடப்பாடி, ஜலக்கண்டபுரம் பகுதிகளில் இரசாயன தொழிற்சாலையினால் குடிநீரில் புளோரைடு கலப்பதில்லை. இதன் தொடர்பாக ஜலகண்டபுரம் அடையூர் சாலையில் உள்ள பொது கிணற்று நீரின் மாதிரியும், தாரமங்கலம் மாரியம்மன் கோயில் கிணற்று நீரின் மாதிரியும், பகுப்பாய்வு செய்யப்பட்டன. பகுப்பாய்வு முடிவுகளில் இருந்து இப்பகுதியில் உள்ள நிலத்தடி நீரில் புளோரைடின் அளவு குடிநீர் தர நிர்ணய அளவான 1 mg/lit-க்கும் குறைவாகவே உள்ளது என்பது அறியப்படுகின்றது.

2011 பிப்ரவரி 10]

228—

விளையாட்டு மையம்

வினா எண் 23746—திரு. சுப. வேலுமணி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியில் விளையாட்டு மையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) பேரூர் தொகுதியில் விளையாட்டு மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

229—

விளையாட்டு மையம்

வினா எண் 23948—திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டையில் விளையாட்டு மையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டையில் விளையாட்டு மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

230—

விளையாட்டு திடல்

வினா எண் 24219—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூரில் விளையாட்டு திடல் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூரில் விளையாட்டு திடல் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

231—

உடற்பயிற்சி மையம்

வினா எண் 26603—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேரூராட்சிப் பகுதியில் பெண்களுக்கான உடற்பயிற்சி மையம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேரூராட்சிப் பகுதியில் பெண்களுக்கான உடற்பயிற்சி மையம் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

232—

நீச்சல் குளம்

வினா எண் 26604—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் நவீன விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியில் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

233—

விளையாட்டுத் திடல் அமைத்தல்

வினா எண் 26682—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்குளத்தூர் ஒன்றியம், வேதநாராயணபுரம் ஊராட்சிக்கு விளையாட்டுத் திடல் அமைக்கவும், விளையாட்டுப் பொருட்கள் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்குளத்தூர் ஒன்றியம், வேதநாராயணபுரம் ஊராட்சிக்கு விளையாட்டுத் திடல் அமைக்கவும், விளையாட்டுப் பொருட்கள் வழங்கவும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

234—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 27846—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூரில் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) வரகூர் தொகுதி, வேப்பூரில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

235—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 29002—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் உள் விளையாட்டு அரங்கம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூரில் உள் விளையாட்டரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

2011 *பிப்ரவரி* 10]

236—

உடற்பயிற்சி மையம்

வினா எண் 29168—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கம் கிராமத்தில் உடற்பயிற்சி மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கம் கிராமத்தில் உடற்பயிற்சி மையம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

237—

கழிவு நீர் கலப்பதைத் தடுத்தல்

வினா எண் 29186—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் தொகுதி, ஈசா ஏரியில் கழிவு நீர் கலப்பதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். காஞ்சிபுரம் நகர கழிவுநீர், ஈசா ஏரியினை சென்றடையாவண்ணம் முழுமையாக சேகரித்து சுத்திகரிப்பு செய்ய காஞ்சிபுரம் நகராட்சி ரூ.12.59 கோடி செலவில் திட்டத்தைச்

செயல்படுத்தி வருகின்றது. அதேபோல் பட்டு மற்றும் பருத்தி நூல்களுக்கு சலவை மற்றும் சாயமேற்றும் குடிசை தொழிலகங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீரைச் சேககரித்து, சுத்திகரிப்பு செய்ய பொதுக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேற்படி திட்டங்கள் செயல்பட துவங்கும்போது, ஈசா ஏரி மாசுபடுவது முழுமையாகத் தடுக்கப்படும்.

238—

சுற்றுச்சூழல் பாதிப்பு

வினா எண் 29198—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் மாவட்டத்தில் செங்கல் சூளை புகையால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டத்தில் இயங்கி வரும் செங்கல் சூளைகளினால் சுற்றுச்சூழல் மாசுபடுகின்றது என்ற புகாரின் அடிப்படையில் மாவட்டத்தில் இயங்கி வரும் 40 சூளைகள் கண்டறியப்பட்டு, அவை சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாமல் இயங்குவதற்குக் கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது:

1. டயர் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றை எரி பொருளாகப் பயன்படுத்துவதைத் தவிர்த்து இயற்கை எரிபொருளைப் பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாமல் இயக்க வேண்டும்.

2. நகரும் புகை போக்கி (moveable chimney) *உபயோகப்படுத்துவதைத் தவிர்த்து நிலையான புகைபோக்கி* (Fixed chimney) *பொருத்தி இயக்க வேண்டும்.*

3. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

2011 பிப்ரவரி 10]

மேலும் இது சம்பந்தமாக நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் தங்கள் பகுதியில் இயங்கி வரும் செங்கல் சூளைகள் மேற்படி வாரியத்தின் அறிவுரைகளைத் தவறாமல் கடைபிடிக்க அறிவுறுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

239—

உடற்பயிற்சிக் கூடம்

வினா எண் 29368—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, கொட்டிவாக்கம் குப்பம், காலனி, களத்துமேடு, கற்பகம்மாள் நகர் பகுதியில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) தாம்பரம் தொகுதி, கொட்டிவாக்கம் குப்பம், காலனி, களத்துமேடு, கற்பகம்மாள் நகர் பகுதியில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

240—

உடற்பயிற்சிக் கூடம்

வினா எண் 29398—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வடகடம்பாடி ஊராட்சியில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வடகடம்பாடி ஊராட்சியில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

241—

கரும்புகையைத் தடுத்தல்

வினா எண் **29695**—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, செல்லப்பிள்ளைக்குட்டை ஊராட்சி, தொன் இரும்பு தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கரும்புகையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, செல்லப்பிள்ளைக்குட்டை ஊராட்சியில் அமைந்துள்ள ஹைடெக் மினரல் இண்டஸ்ட்ரீஸ் கோவை (பி) லிமிடெட் எனும் இரும்புத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கரும்புகையைக் கட்டுப்படுத்த எலக்ட்ரோ ஸ்டாட்டிக் பிரிசிமேட்டர் எனும் மாசுக் கட்டுப்பாடு சாதனம் அமைக்கப்பட்டு இயக்கத்தில் உள்ளது. 26-5-2006 அன்று வாரியம் நடத்திய சுற்றுச்சூழல் காற்று தர ஆய்வில், மிதக்கும் நுண்துகள்கள் சல்பர்-டை-ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடு காரணிகளின் அளவு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய தர நிர்ணயத்திற்கு உட்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவில் வளி மண்டலக் காற்றில் அனைத்துக் காரணிகளும் வாரிய தர நிர்ணயத்திற்கு உட்பட்டு இருந்தது காணப்பட்டது. தொழிற்சாலை, மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை உரிய முறையில் சமப்படுத்தி இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2011 பிப்ரவரி 10]

242—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 29726—திரு. கோ. அரி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி நகராட்சி உடற்பயிற்சிக் கூடம், விளையாட்டரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

திருத்தணி நகராட்சியில் உடற்பயிற்சிக் கூடம், விளையாட்டரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

243—

உடற்பயிற்சி கூடம்

வினா எண் 30153—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, நன்மங்கலம் ஊராட்சி, அவியா நகரில் இளைஞர்களுக்கு உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) தாம்பரம் தொகுதி, நன்மங்கலம் ஊராட்சி, அவியா நகரில் இளைஞர்களுக்கு உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

244—

விளையாட்டு மைதானம்

வினா எண் 30249—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, இராவணாபுரம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, இராவணாபுரம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

245—

உடற்பயிற்சி மையம்

வினா எண் 31032—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கொக்குப்பாளையம் கிராமத்தில் இளைஞர்களுக்கு உடற்பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) பண்ருட்டி தொகுதி, கொக்குப்பாளையம் கிராமத்தில் இளைஞர்களுக்கு உடற்பயிற்சி மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

246—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 31483—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் புதிய விளையாட்டு மைதானமும், விளையாட்டு அரங்கமும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டையில் புதிய விளையாட்டு மைதானமும், விளையாட்டு அரங்கமும் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

247—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 31809—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரில் விளையாட்டு அரங்கம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

மேட்டுப்பாளையம் நகரில் விளையாட்டு அரங்கம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை.

248—

விளையாட்டு மைதானம்.

வினா எண் 32729—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பெரியகாட்டுப்பாளையம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) பண்ருட்டி தொகுதி, பெரியகாட்டுப்பாளையம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

249—

உடற்பயிற்சி மையம்

வினா எண் 33230—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், காட்டுச்சேரி ஊராட்சி, உத்திரங்குடி, நல்லாடையில் உடற்பயிற்சி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், காட்டுச்சேரி ஊராட்சி, உத்திரங்குடி, நல்லாடையில் உடற்பயிற்சி மையம் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

2011 *பிப்ரவரி* 10]

250—

விளையாட்டுத் திடல்

வினா எண் 33617—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரையில் பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

251—

நீச்சல் குளம்

வினா எண் 34605—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் நீச்சல் குளம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டையில் நீச்சல் குளம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

252—

விளையாட்டு மைதானம்

வினா எண் 35635—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பிள்ளையார்குப்பம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) பண்ருட்டி தொகுதி, பிள்ளையார்குப்பம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

253—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 37576—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) வால்பாறையில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

254—

விளையாட்டு மைதானம்

வினா எண் 43076—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மானாத்தாள் ஊராட்சி, கூடக்கல்லானூரில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) தாரமங்கலம் தொகுதி, மானாத்தாள் ஊராட்சி, கூடக்கல்லானூரில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

255—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 43077—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தெத்திகிரிப்பட்டி ஊராட்சி, கச்சராயனூர் பகுதிக்கு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) தாரமங்கலம் தொகுதி, தெத்திகிரிப்பட்டி ஊராட்சி, கச்சராயனூர் பகுதிக்கு விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

256—

பிளாஸ்டிக் பொருட்களைத் தடுத்தல்

வினா எண் 43442—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப் பகுதியில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

ஏற்காடு மலைப் பகுதியில் ஒரு முறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் கேரிபேக், பிளாஸ்டிக் பூசப்பட்ட தட்டுகள், பிளாஸ்டிக் கப்புகள், பிளாஸ்டிக் டம்ளர்கள், பிளாஸ்டிக் மேசை விரிப்புகள், உணவகங்களில் பயன்படுத்தப்படும் உணவுத் தட்டுகளில் ஒரு முறையே உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக் சீட்டுகள் மற்றும் ஏனைய பிளாஸ்டிக் பொருட்கள் ஆகியவற்றை பொது மக்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்க தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என வாரியம், ஆணையாளர், ஏற்காடு ஊராட்சி ஒன்றியம் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. அதன்படி தீர்மானம் நிறைவேற்றி, ஏற்காடு ஏரி, பூங்காக்கள், நீர்வீழ்ச்சிகள், பேருந்து நிலையம், மார்க்கெட் பகுதி, ஏற்காடு பகுதியில் உள்ள கோயில்கள் மற்றும் வ்யூ பாயிண்ட்ஸ் ஆகிய பகுதிகளில் விளம்பரப் பலகைகள் வைப்பதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என ஏற்காடு ஊராட்சி ஒன்றியம் தெரிவித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

257—

அறங்காவலர் குழு

வினா எண் 47058—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூர், பள்ளிவாசல் மற்றும் சகன்வல்லி தர்காவிற்கு அறங்காவலர் குழு நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர், சகன்வல்லி தர்கா வக்ஃபுக்கு அறங்காவலர் குழு நியமிப்பது சம்பந்தமாக முறையாக நாளிதழ்களில் அறிவிப்பு செய்யப்பட்டு, அறங்காவலர் குழு உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பங்களின் பேரில் விரிவான ஆய்வு செய்து அறிக்கை பெற்று, அதன் அடிப்படையில் அறங்காவலர் குழு நியமிக்க தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

258—

பள்ளிவாசல் சீரமைத்தல்

வினா எண் 62727—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்புவனம் புதூர் பள்ளிவாசலைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்புவனம் புதூர் பள்ளிவாசலைச் சீரமைக்க மற்றும் புதுப்பிக்க நிதி கேட்டு விண்ணப்பம் வரவில்லை.

259—

மாற்றுப் பாதை

வினா எண் 118—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை முதல் பொள்ளாச்சி சென்று வர மாற்றுப்பாதை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை முதல் பொள்ளாச்சி வரை 64 கி.மீ. தூரத்திற்கு ஏற்கெனவே நல்ல சாலை உள்ளது. எனவே, மாற்றுப்பாதை ஏற்படுத்த தற்போது திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

260—

படைக்கலம் வழங்குதல்

வினா எண் 355—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வனத் துறையில் பணிபுரிந்து வரும் வனப் பாதுகாவலர்களுக்கு படைக்கலம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) தமிழக வனத் துறையில் விலை உயர்ந்த வனச் செல்வங்களான சந்தன மரம் மற்றும் இதர மர வகைகள் மற்றும் வன விலங்குகள் போன்ற முக்கிய வனச் செல்வங்களை கடத்தல்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கவும், நாளுக்கு நாள் கடத்தல்காரர்கள் பயன்படுத்தி வரும் நவீன ஆயுதங்களை எதிர்கொண்டு வனத்தைப் பாதுகாக்கவும் வனத் துறை சீரிய பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

நவீன ரக ஜி-கிளாக்-17 ரக பிஸ்டல், 0.315 ரைபிள் போன்ற நவீன ரக துப்பாக்கிகள் வழங்கப்பட்டு பாதுகாப்புப் பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, வன அதிகாரிகளுக்கும், வனச் செல்வங்களுக்கும் பாதுகாப்பை ஏற்படுத்தும் ஒரு அங்கமாகத்தான் ஆயுதங்கள் அமைந்துள்ளன. இந்த ஆயுதங்களை எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்ற முறை குறித்து தேவையான பயிற்சிகள் அதிகாரிகளுக்கு தமிழ்நாடு வனவியல் கல்லூரியில் அளிக்கப்பட்டு, பாதுகாப்புப் பணிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) எதிர்காலத்தில் படைக்கலன்களின் இருப்பை மேலும் அதிகரிக்க நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருவதால், வன அலுவலர்களுக்குக் கூடுதலான ஆயுதங்களை வழங்குவதற்கு ஆவன செய்யப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

261—

உதவித் தொகை

வினா எண் 356—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வன விலங்குகளால் உயிரிழப்பவர்களுக்கு மத்திய அரசும், மாநில அரசும் வழங்கும் உதவித் தொகை உடனடியாக கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வன விலங்குகளால் (யானை, புலி மற்றும் சிறுத்தை) உயிரிழப்பவர்களுக்கு மத்திய அரசின் யானைகள் திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்கப்படுகிறது. நடைமுறையிலுள்ள அரசாணையின்படி, வன விலங்குகளால் இறப்பவர்களின் குடும்பத்தாருக்கு ரூ.1,00,000/- மட்டும் வழங்கப்படுகிறது. இதில் உடனடி நிவாரணத் தொகையாக ரூ.25,000/- பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. மீதித்தொகையான ரூ.75,000/- அவர்களிடமிருந்து உரிய, ஆவணங்கள் பெறப்பட்டபின் முன்னுரிமையின் அடிப்படையிலும், நிதிநிலையின் அடிப்படையிலும், வழங்கப்படுகிறது.

262—

கூடுதல் உதவித் தொகை

வினா எண் 360—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறையில் வன விலங்குகளால் இறப்பவர்களுக்குக் கூடுதல் உதவி தொகை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடைமுறையிலுள்ள அரசாணையின்படி, வன விலங்குகளால் இறப்பவர்களின் குடும்பத்தாருக்கு ரூ.1,00,000/- மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. இதனை உயர்த்தும் செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

263—

பயணியர் விடுதி

வினா எண் 601—திரு. ஆர்.டி. கணேசன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) தேனி பைபாஸ் ரோடில் அமைந்துள்ள வால்காட்டில் மேலே வனத் துறைக்குச் சொந்தமான பயணியர் விடுதி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) தேனியில் வனச் ஓய்வு விடுதி கட்டப்பட்டுள்ளதால், வால்காட்டில் வன ஓய்வு விடுதி கட்டும் அவசியம் எழவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

264—

சாலை சீரமைத்தல்

வினா எண் 1107—திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், காவலூரிலிருந்து மந்தாரக்குட்டை செல்லும் சாலை மோசமாக உள்ளதால், அந்த இணைப்புச் சாலையை பாரதப் பிரதமர் கிராமச் சாலை இணைப்புத் திட்டத்தின்கீழ் எடுத்து சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஆம்.

265—

சாலை வசதி

வினா எண் 2511—திரு. ச. லட்சுமணன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதி, தேவாரத்தில் இருந்து சாக்குலத்து மெட்டுரோடு வழியாக கேரளா செல்ல சாலை அமைக்க அரசு வனத் துறைமூலம் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

சாக்குலத்து மெட்டியிலிருந்து போடிமெட்டு வழியாக தேவாரம் செல்வதற்கு ஏற்கெனவே நன்கு பராமரிக்கப்பட்ட சாலை உள்ளது. மேலும் போடிமெட்டு தேசிய நெடுஞ்சாலை, கம்பம் மெட்டு தேசிய நெடுஞ்சாலை மற்றும் குமுளி தேசிய நெடுஞ்சாலை ஆகியவை கேரளா பகுதியை இணைப்பதற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருவதால், மேற்கண்ட சாலை அமைக்கும் உத்தேசம் எதுவும் இல்லை.

266—

மின்வேலி

வினா எண் 4982—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காவேரிப்பட்டினம் தொகுதி, அடக்கம் கிராமத்திற்கு மின் வேலி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி ஊடேதுக்கம் காப்புக் காட்டில் 2008-09 ஆம் ஆண்டில் 15 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

267—

மாற்று வழி

வினா எண் 8001—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறையில் குதிரைப் பாதை வழியாக வால்பாறைக்கு மாற்று வழி ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

268—

காட்டு யானைகளைத் துரத்துதல்

வினா எண் 15138—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் மலைப் பகுதியில் காட்டு யானைகளைத் துரத்த, பழகிய யானைகளை நிரந்தரமாக இருக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) ஆம், அரசு நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) வால்பாறையில் மலைப்பகுதியில் காட்டு யானைகளை துரத்த, பழகிய 12 யானைகள் துறை வசம் நிரந்தரமாக உள்ளன. தேவைப்படும்பொழுது அவை பயன்படுத்தப்படுகின்றன.

269—

நஷ்ட ஈட்டுத் தொகை

வினா எண் 15324—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் வன விலங்குகளால் விளையும் உயிர் சேதத்திற்கு வழங்கும் நஷ்ட ஈட்டுத் தொகையை உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வன விலங்குகளால் விளையும் உயிர் சேதத்திற்கு நிவாரணத் தொகையாக தற்போது ரூ.1,00,000/- வழங்கப்பட்டு வருகிறது.

270—

தேன் உற்பத்தி

வினா எண் 15330—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை டாப்சிலிப் பகுதியில், வனத் துறைமூலம் தேன் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் வனத் துறையின்மூலம் தேன் உற்பத்தி செய்யும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

271—

தண்ணீர் தொட்டி

வினா எண் 15921—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பூசாரிபட்டி கிராமம், தமட்டம் கரடுப் பகுதியிலுள்ள விலங்கினங்களுக்குக் காட்டுப் பகுதியில் தண்ணீர்த் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பூசாரிபட்டி கிராமம், தமட்டம் கரடுப் பகுதியிலுள்ள விலங்கினங்களுக்குக் காட்டுப் பகுதியில் தண்ணீர்த் தொட்டி கட்ட அரசு முன்வரும்.

மேற்காண் பகுதிகளில் இயற்கை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆங்காங்கே தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன.

272—

மின் வேலி

வினா எண் 17349—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தாய்முடி குடியிருப்புக்கு யானைகள் வருவதைத் தடுக்க மின்வேலி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.2.20 கோடிக்கு சூரிய மின்வேலி அமைப்பதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2007-08 ஆம் ஆண்டிலும் சூரிய மின் வேலி அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாலும், வால்பாறை பகுதியில் சூரிய மின்வேலி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

273—

பாலம் அமைத்தல்

வினா எண் 20130—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டம், மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் செல்லும் தளிஞ்சி, மஞ்சசப்பட்டி, கூட்டாறு பகுதியில் ஒரு பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

தளிஞ்சி, மஞ்சசப்பட்டி செல்லும் ஆற்றின் குறுக்கே உள்ள கூட்டாறு எனும் பகுதி அமராவதி காப்புக் காட்டில் வருகிறது. இப்பகுதி இந்திராகாந்தி வன உயிரின உய்விட சரணாலயப் பகுதியாகும். சரணாலயப் பகுதி அல்லது தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்ட வனப் பகுதிகளில் வனமற்ற பிற பணிகள் மேற்கொள்ள தேசிய வன உயிரின வாரியம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். இப்பகுதியில் உள்ள மக்கள் கூட்டாற்றின் குறுக்கே உள்ள பாதையினை நீர்வரத்து இல்லாத காலங்களில் மட்டும் தான் உபயோகிக்கின்றனர். மற்ற சமயங்களில் உடுமலையில் இருந்து மூணார் செல்லும் ஊரக நெடுஞ்சாலையினை உபயோகித்துக் கொள்கின்றனர். மேலும், இப்பகுதியில் பாலம் கட்டுவதனால், அரிய வகை மரங்களை வெட்டி கடத்துதல் மற்றும் வன உயிரினங்களை வேட்டையாடி விட்டு தப்பிச் செல்ல ஏதுவாக அமையும் என்பதனால், இப்பகுதியில் பாலம் அமைக்கவேண்டிய அவசியம் எழவில்லை.

274—

மரங்களை வளர்த்தல்

வினா எண் 21813—திரு. வை. காவேரி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலோரப் பகுதிகளில் வாதநாராயண மரங்களை வளர்க்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டின் வனத் துறையின் ஆராய்ச்சி பிரிவு வாதநாராயண மரத்தை கடற்கரையோர தொடர் தடுப்புத் திட்டத்தில் (ஷெல்டர் பெல்ட் திட்டத்தில்) (Shelter belt plantation) *இதர மர வகைகளுடன் சென்ற ஆண்டிலேயே பரீட்சார்த்தமாக நட்டு ஆராய்ச்சிப் பணிகளைச் செய்துள்ளது. இவ்வாண்டில் மரக்காணம் அருகில் கூனிமேடு என்ற இடத்தில் 1000 மரக்கன்றுகள் விதைமூலம் உற்பத்தி செய்யப்பட்டு, நன்கு வேர் பிடித்தவுடன் நடப்பட உள்ளது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இவற்றின் வளர்ச்சி விகிதம், உயிர் பிடிக்கும் தன்மை போன்றவை கண்டறியப்படும்.*

275—

சூரிய மின் வேலி

வினா **எண் 22910—திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதியில் யானைகளைத் தடுக்க ஆயக்குடி முதல் காவிரிப்பட்டி வரை சூரிய மின்வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழனி தொகுதியில் 2007-08 ஆம் ஆண்டில் ஆயக்குடி முதல் காவிரிப்பட்டி வரை 5 கி.மீ. தூரத்திற்கு ரூ.8 இலட்சம் செலவில் சூரிய மின்வேலி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

276—

காட்டு யானைகள்

வினா எண் 23164—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதியில் காட்டு யானைகளால் விவசாயம் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

2007-08ம் ஆண்டில் ரூ.20.80 லட்சம் செலவில் பழனிக்குட்பட்ட ஆண்டிப்பட்டி, கரடிக்குட்டு மற்றும் பி.வி.வேலி ஆகிய காப்புக்காடுகளில் 13.00 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 2007-08 ஆம் ஆண்டில் பழனி தொகுதிக்குட்பட்ட ஆண்டிப்பட்டி காப்புக்காட்டில் ரூ.3.20 லட்சம் செலவில் 2.00 கி.மீ தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், காட்டுயானைகளால், விவசாயம் பாதிக்கப்படுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

277—

மானியத்துடன் கடன்

வினா எண் 23619—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியார் மரங்கள் வளர்க்க அரசு மானியத்துடன் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 117, சுற்றுச்சூழல் வனத் துறை நாள் 26-10-2007-ன்படி 2007-2008-ம் ஆண்டு முதல்

2011 பிப்ரவரி 10]

செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் "தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பு" திட்டத்தின் கீழ் 85.44 இலட்சம் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து தனியார் விவசாயிகளின் 24,760 ஏக்கர் தரிசு நிலங்களில் நட்டு வளர்க்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வனத் துறையே மரக்கன்றுகளை உருவாக்கி விவசாயிகளின் நிலங்களில் நட்டு கொடுக்கின்றது. நிலத்தை தயார் செய்யும் பணிகள், வயலுக்கு வேலி அமைத்தல் மற்றும் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றிற்காக விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகின்றது.

இத்திட்டம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு விவசாயிகளிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

278—

சோலார் மின் வேலி

வினா எண் 23856—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளித் தொகுதி வனப்பகுதியில் சோலார் மின்வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளித் தொகுதி வனப்பகுதியில் 2005-2006 ஆம் ஆண்டில் 12 கி.மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 2006-2007 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.42.40 இலட்சம் செலவில் தளித் தொகுதி வனப்பகுதியில் 26 கி.மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. 2007-08 ஆம் ஆண்டில் ரூ.33.60 லட்சம் செலவில் 21.00 கி.மீ தூரத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

279—

தடுப்பு அணைகள்

வினா எண் 23912—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை வனச் சரகம், அமராவதி வனச்சரகத்தில் தடுப்பு அணைகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை வனச்சரகம் மற்றும் அமராவதி வனச் சரகங்களில் 2007-2008 ஆம் ஆண்டில் 12-வது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி உடுமலைப்பேட்டை சட்ட மன்ற தொகுதியைச் சார்ந்த அமராவதி வனச்சரகத்தில் தளிஞ்சி வீட்டில் பழனி வடக்கு சரிவு காப்புக்காட்டில் 2 தடுப்பணைகள் முறையே ரூபாய் 1,62,000/- மற்றும் 1,88,000/- செலவில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உடுமலைப்பேட்டை வனச்சரகத்தில் 2007-2008 ஆம் ஆண்டு 2 தடுப்பணைகள் ரூ.5.72 லட்சம் செலவில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அமராவதி சரகம் மற்றும் உடுமலைப்பேட்டை வனச்சரகத்தில் முந்தைய நிதி ஆண்டுகளில் தடுப்பணைகள் மற்றும் சிறிய தடுப்பணைகள் கீழ்கண்டவாறு கட்டப்பட்டுள்ளன.

உடுமலைப்பேட்டை வனச்சரகம்	2005-2006	
பெரிய தடுப்பணைகள்	12 எண்கள்	ரூ.8.69 லட்சம்
சிறிய தடுப்பணைகள்	180 எண்கள்	ரூ.8.72 லட்சம்
	2006-2007-ல்	
பெரிய தடுப்பணைகள்	21 எண்கள்	ரூ.20.90 லட்சம்
அமராவதி வனச்சரகம்	2003-2004	
சிறிய தடுப்பணை	1 எண்	ரூ.0.20 லட்சம்
	2006-2007-ல்	
பெரிய தடுப்பணை	1 எண்	ரூ.1.27 லட்சம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

280—

மயில்களுக்குச் சரணாலயம்

வினா எண் 25007—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொண்டி அருகே நம்புதாளையில் மயில்களுக்கு தனியாக சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் மயில்கள் பரவலாக காணப்படுகின்றன. தொண்டி அருகே அமைந்துள்ள நம்புதாளை பகுதியில் மயில்கள் அதிகம் காணப்பட்டாலும் இப்பகுதியில் பெரும்பகுதி, காப்பு வனமாக இருப்பதால், இங்குள்ள மயில்களுக்கு தற்போதைய நிலையிலேயே தேவையான பாதுகாப்பு உள்ளது. காப்புக்காடு என்ற நிலையிலேயே இங்குள்ள மயில்களைப் பாதுகாக்கவும் அவற்றிற்கான இருப்பிடத்தை மேம்படுத்தவும் வழி வகைகள் உள்ளன. எனவே, நம்புதாளையில் மயில்களுக்கு தனியாக சரணாலயம் அமைப்பது தேவையில்லை என கருதப்படுகிறது.

281—

சாலை அமைத்தல்

வினா எண் 26618—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி, பொட்டிரெட்டிபட்டி, கோம்பை வழியாக கொல்லிமலை செம்மேட்டிற்கு சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: இல்லை.

282—

வன ஆராய்ச்சி மையம்

வினா எண் 32280—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை வனச்சரகத்தில் வன ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து 18 கி.மீ. தூரத்திலுள்ள சிவகங்கை மேலக்காடு காப்புக்காட்டிலுள்ள வன ஆராய்ச்சி மையத்தில் அப்பகுதிக்குத் தேவையான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், மானாமதுரையில் புதிதாக வன ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தும் அவசியம் எழவில்லை.

283—

மரங்கள் வளர்த்தல்

வினா எண் 34206—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலைத் தொகுதி, இருக்கூர் ஊராட்சி, பச்சைக் காட்டில் வனத்துறை மூலம் உயர்ந்த ரக மரங்களை வளர்க்க அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

கபிலர் மலை தொகுதி, இருகூர் ஊராட்சிக்கு சொந்தமான பச்சைக்காட்டில் 1987-88 ஆம் ஆண்டு முந்தைய சமூக நலக்காடுகள் திட்டத்தின்கீழ் 4.5 ஹெக்டேர் பரப்பில், பல்வகை மரங்கள் கொண்ட கரடுத் தோட்டம் (Hillock Plantation) *எழுப்பப்பட்டது. தற்போது அந்த மரங்கள் குறிப்பாக வெல்வேல், பரம்பை, கொடைவேல் போன்றவை நன்கு வளர்ந்து காணப்படுகின்றன. இவ்வகை மரங்கள் சுமார் 5000 இப்போது உள்ளன.*

இந்த கரட்டில் ஆங்காங்கே இருக்கும் காலியிடங்களை நிரப்பி மேலும் பசுமைப்படுத்த புதிய வனக் காடு வளர்ப்பு திட்டத்தின் (NAP) *மூலம் அந்த இடத்திற்கு ஏற்ற உயர்ந்த ரக மரவகைகளை மரங்கள் சுமார் 5000 பரிசீலனை செய்யப்படும்.*

284—

சூரிய மின் வேலி

வினா எண் 34288—திரு. துக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாதுமலை அடிவாரத்தில் வன விலங்குகளை கட்டுப்படுத்த சூரிய மின்வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாதுமலை அடிவாரத்தில் வன விலங்குகளை கட்டுப்படுத்த 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.4.80 லட்சம் செலவில் மூலக்காடு காப்புக்காட்டில் கேட்டவரம்பாளையம் பகுதியில் 3.00 கி.மீ தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

[2011 பிப்ரவரி 10

285—

மூலிகைப் பண்ணை

வினா எண் 34556—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி கிராமத்தில் வனத் துறை சார்பில் மூலிகைப் பண்ணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி கிராமத்தில் வனத் துறை சார்பில் மூலிகைப் பண்ணை அமைக்கும் உத்தேசமில்லை. ஆனால் பூவந்தி கிராமத்தில் இருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ள அரசனூரில் வனவிரிவாக்க மையத்தில் மூலிகை விளக்கப்பண்ணை தமிழ்நாடு காடுவளர்ப்பு திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு, பூவந்தி கிராமம் உட்பட இதனை சுற்றியுள்ள கிராம மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

286—

சூரிய மின்வேலி

வினா எண் 34899—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை சரகத்தில் சூரிய மின்வேலி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை வன சரகத்திற்குட்பட்ட அமராவதி வனச்சரக பகுதியில் 2007-2008ஆம் ஆண்டில் ரூ.11.20 லட்சம் செலவில் 7 கி. மீ. தூரத்திற்கு கீழ்க்கண்ட இடங்களில் சூரிய மின்வேலி அமைக்கும் பணி நடைபெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

1. தளிச்சி குடியிருப்பு விவசாய நிலப்பகுதி	*5.00*	கி.மீ.
2. கரட்டுபதி குடியிருப்பு பகுதி	*2.00*	கி.மீ.
மொத்தம்	*7.00*	கி.மீ.

287—

இரவு உலா

வினா எண் 35435—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்கப்பூரில் உள்ளதைப் போன்று வண்டலூர் மிருகக் காட்சி சாலையில் "இரவு உலா" ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

சிங்கப்பூரில் உள்ளதைப் போன்று வண்டலூர் உயிரியல் பூங்காவில் ரூ. 256 கோடி செலவில் இரவு உலா **(Night Safari)** *பூங்கா ஏற்படுத்த அரசு ஆணை எண் 134 சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வ.5) துறை நாள் 4-12-2007 வெளியிடப்பட்டுள்ளது. விரிவான திட்ட கருத்துருவிற்கு புதுடெல்லியில் உள்ள மத்திய உயிரியல் பூங்கா ஆணையத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.*

288—

காட்டுத் தீயை தடுத்தல்

வினா எண் 36889—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி வனப்பகுதியில் காட்டுத் தீ ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு ஆண்டும் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

289—

மின்வேலி

வினா எண் 39184—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை வரட்டுப்பாறை குடியிருப்புப் பகுதியில் யானைகள் வராமல் தடுக்க மின்வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகரை ஒட்டிய வனப்பகுதிகளில் கீழ்வரும் விவரங்களின்படி யானைகள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த 2006-2007 மற்றும் 2007-2008ஆம் ஆண்டுகளில் சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

(1) 2006-07 ஆம் ஆண்டில் ரூ.12.80 இலட்சம் செலவில் 8 கி. மீட்டர் தூரத்திற்கு மாநில சிறப்பு திட்டங்களின்கீழ் சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

(2) 2007-08 ஆம் ஆண்டில் ரூ. 8.00 லட்சம் செலவில் 5 கி.மீ. தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சூரிய மின்வேலி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

வரட்டுப்பாறை, தனியார் தோட்டத்தில் உள்ள குடியிருப்பு பகுதி என்பதால், அரசு செலவில் சூரிய மின்வேலி அமைப்பது சாத்தியமில்லை. எனினும், தனியார் தோட்ட நிர்வாகத்தினர், யானை வராமல் தடுக்கவும், போதிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

290—

உயிரியல் பூங்கா

வினா எண் 40820—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

சேலம், குருவம்பட்டி உயிரியல் பூங்காவை மேம்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஆம். 2006-07ஆம் ஆண்டில் மாநில திட்டம் II-ல் ரூ. 45.70 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சேலம் குருவம்பட்டி உயிரியல் பூங்கா மேம்படுத்தப்பட்டுள்ளது. ம இப்பூங்காவில் 2007-08 ஆம் ஆண்டிலும் முக்கிய மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

291—

விமானம்மூலம் விதைகள்

வினா எண் 40324—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், உடையாப்பட்டி கந்தகிரி மலையில் செடி, கொடிகள் வளர விமானம்மூலம் விதைகளைத் தூவ அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், உடையாப்பட்டி கந்தகிரி மலையின் மொத்த பரப்பளவு 31.45 எக்டேர் ஆகும். இப்பகுதி காடு மற்றும் பாறைகள் நிறைந்துள்ளது. மைய அரசின் உதவியுடன், 1988-89 ஆம் ஆண்டு முதல் 1993-94 ஆம் ஆண்டு வரை மூங்கில், புங்கன், வெல்வேல், வேம்பு, வாகை போன்ற பல்வகை மர வகைகளின் விதைகளில் நுண்ணுயிர் மேம்படுத்த (Pellatisation) வான்வழி விதைத்தூவும் திட்டம் வனத் துறையால் நடைமுறைப்படுத்தப்பட்டது. பின்பு இத்திட்டத்திற்கான மத்திய அரசின் உதவி நிறுத்தப்பட்டதாலும், வான்வழி விதைத்தூவும் திட்டம்மூலம் தூவப்பட்ட விதைகளில் உயிர் செடிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்ததாலும், இத்திட்டம் அதற்கு பின் நிறைவேற்றப்படவில்லை. தற்பொழுது வனத்துறையால் வான்வழி விதைத்தூவும் திட்டத் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

292—

சரணலாயம்

வினா எண் 43792—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனி வனப்பகுதியை வனவிலங்கு சரணாலயமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

2003 ஆண்டு முதல் கோயம்புத்தூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள திண்டுக்கல் வனக்கோட்டம் மற்றும் கொடைக்கானல் வனக்கோட்டங்களில் உள்ள அனைத்து காப்புக் காடுகள் மற்றும் இந்திராகாந்தி வன உயிரினச் சரணாலய பகுதிகள் "ஆணைமலை யானைகள் காப்பகமாக" அரசாங்கத்தால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இதில் பழனி வனச்சரகத்திலுள்ள காப்புக் காடுகளும் உள்ளடங்கும். எனவே, தற்போதைய நிலையிலேயே இப்பகுதியில் யானைகளுடன் அனைத்து வன உயிரினங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. எனவே, பழனித் தொகுதி, பழனி வனப்பகுதியை வன விலங்கு சரணாலயமாக அறிவிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

293—

மூலிகைப் பண்ணை

வினா எண் 49819—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி அமராவதியில் மூலிகைப்பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி அமராவதியில் மூலிகைப்பண்ணை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

294—

உயிரியல் பூங்கா

வினா எண் 57862—திரு. வை. காவேரி: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் குரும்பப்பட்டி உயிரியல் பூங்காவை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசாணை (டி) எண் 331, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை நாள் 17-11-2008 மூலம் சேலம் குரும்பப்பட்டி வன உயிரியல் பூங்காவினை மேம்படுத்த ரூ.156 லட்சத்திற்கு நிர்வாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. மாநில அரசின் பங்கான ரூ.44.15 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அரசாணை (டி) எண் 60, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 11-2-2009-ன் மூலம் மத்திய அரசின் பங்கான ரூ.55.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

295—

மயில்கள் சரணாலயம்

வினா எண் 62642—திரு. எஸ். இராசசேகரன்: *மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் மயில்கள் சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் மயில்கள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

296—

உயிரியல் பூங்கா

வினா எண் 63171—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரில் உயிரியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

இல்லை. மதுரை மாநகரில் உயிரியல் பூங்கா அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

297—

மூலிகைப் பண்ணை

வினா எண் 69505—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை பகுதியில் மூலிகைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மானாமதுரை பகுதியில் மூலிகைப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

298—

உயிரியல் பூங்கா

வினா எண் 87273—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காருவள்ளி ஊராட்சி, சின்ன திருப்பதியில் வன உயிரியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காருவள்ளி ஊராட்சி, சின்ன திருப்பதியில் வன உயிரியல் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

299—

உயிரியல் பூங்கா

வினா எண் 87274—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, குரும்புப்பட்டியில் வன உயிரியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, குரும்புப்பட்டியில் வன உயிரியல் சிறு (Mini) பூங்கா ஒன்று சேலம் வனக் கோட்டத்தில் சுமார் 10 ஹெக்டேர் பரப்பளவில் இயங்கி வருகிறது. இதனை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

300—

உயிரியல் பூங்கா

வினா எண் 89371—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காடு சுற்றுலா பகுதியில் வன உயிரியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஏற்காடு சுற்றுலா பகுதி"யில் வன உயிரியல் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

301—

மயில்கள் சரணாலயம்

வினா எண் 92100—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் மயில்கள் சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் மயில்கள் சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

302—

முயல்கள் சரணாலயம்

வினா எண் 97889—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அருகேயுள்ள காட்டூரணி காட்டில் முயல்கள் சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அருகேயுள்ள காட்டூரணி காட்டில் முயல்கள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

303—

உயிரியல் பூங்கா

வினா எண் **105044—திரு. அ. தமிழரசு:** *மாண்புமிகு* வனத் துறை *அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, டேனிஷ்பேட்டை ஊராட்சி, விதைப் பண்ணையில் வன உயிரியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, டேனிஷ்பேட்டை ஊராட்சி, விதைப் பண்ணையில் வன உயிரியல் பூங்கா அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

304—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 7—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பூதலூரில், திருக்காட்டுப்பள்ளி—செங்கிப்பட்டி சாலையில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணிகள் மேற்கொள்ளப்படும்.

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

(அ) தஞ்சை மாவட்டம், பூதலூரில், திருக்காட்டுப்பள்ளி-செங்கிப்பட்டி சாலையில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இந்த இரயில்வே மேம்பாலம் அமைக்க திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக "வில்பர் ஸ்மித்" என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டபின் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

305—

புதிய பாலம்

வினா எண் 8—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பூதலூரில், திருக்காட்டுப்பள்ளி-செங்கிப்பட்டி சாலையில் கல்லணைக் கால்வாய் ஆற்றின் குறுக்கே உள்ள பாலம் குறுகலாகவும், பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால் அங்கு புதிய பாலம் கட்டப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், பூதலூரில், திருக்காட்டுப்பள்ளி-செங்கிப்பட்டி சாலையில் கல்லணைக் கால்வாய் ஆற்றின் குறுக்கே உள்ள பாலம் குறுகலாகவும், பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதை கருத்திற்கொண்டு, இரயில்வே கடவு எண் 309-க்கு இரயில்வே கி.மீ. 372/7-8-ல் பூதலூர் அயனாபுரம் இரயில் நிலையங்களுக்கிடையில் அரசாணை நிலை எண் 210, நெடுஞ்சாலைத் (எச்.க்யூ.2) துறை, நாள் 11-10-2006-ல் புதிய சாலை மேம்பாலம் அமைக்க ரூ.16.30 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மேம்பாலம் அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

306—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 16—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தஞ்சை—பூதலூர் சாலை (ODR) *அகலப்படுத்தி மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

(அ) தஞ்சை மாவட்டம், தஞ்சை-பூதலூர் சாலை (ODR) *அகலப்படுத்தி மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.*

(ஆ) இவ்வினா எழவில்லை.

307—

இருவழிச் சாலை

வினா எண் 24—திரு. ஆர். சாமி: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஒன்றியம், தும்பைப்பட்டி முதல் அட்டப்பட்டி, கொடுக்கம்பட்டி வழியாக செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

கி.மீ. 0/0 முதல் 3/4 வரையிலான தும்பைப்பட்டி-ஜெயங்கொண்டான் சாலையை இருவழிச்சாலையாக மாற்றும் வாய்ப்பு இல்லை. கி.மீ. 14/4 முதல் 20/8 வரையிலான

[2011 பிப்ரவரி 10

கோட்டநத்தம்பட்டி-கொடுக்கம்பட்டி சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்த சி.ஆர்.ஐ.டி.பி. 2006-2007 திட்டத்தின் கீழ் ரூ.47.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு தற்போது பணிகள் முடிக்கப்பெற்று சாலையானது நல்ல நிலையில் உள்ளது.

308—

பாலம் அகலப்படுத்துதல்

வினா எண் 125—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் கருமலை குறுகிய பாலத்தை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கருமலை பாலத்தை அகலப்படுத்தும் பணிக்கு ரூ.17.00 இலட்சம் மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி, உடன்படிக்கை செய்யப்பட்டு தற்போது பணி துவங்கும் நிலையில் உள்ளது.

309—

சாலை சீரமைத்தல்

வினா எண் 127—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள டானா முதல் தம்மபதி ரோடு மிகவும் பழுதடைந்துள்ளதை சீர்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள டானா முதல் தம்மபதி சாலையை சீர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இச்சாலையினை சீர்படுத்தும் பணிக்கு ரூ.60.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்காக ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 5.60 கி.மீ. நீளமுள்ள இச்சாலைப் பணியில் 4.60 கி.மீ. பணி முடிவடைந்துள்ளது. மீதமுள்ள 1.00 கி.மீ. பணியினையும் விரைவில் முடிக்கும் வகையில் வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது.

310—

பாலம் அமைத்தல்

வினா எண் 174—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், குத்தாலம், 51. கடலாங்குடி-சேத்திரபாலபுரம் கிராமங்களை இணைக்கும் காவிரி ஆற்றின் குறுக்கே நெடுஞ்சாலைத் துறை நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் திட்டம்மூலம் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணிகள் இந்த ஆண்டே தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், குத்தாலம் 51. கடலாங்குடி-சேத்திரபாலபுரம் கிராமங்களை இணைக்கும் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு நிதியுதவி கோரி நபார்டு வங்கிக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் நிதியுதவி பெற்ற பிறகு பாலப் பணி செயல்படுத்தப்படும்.

[2011 பிப்ரவரி 10

311—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 180—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், குடவாசல், 20 கி.மீ. நீளமுள்ள பூந்தோட்டம்-நாச்சியார்கோவில் (எம்டிஆர் 34) தார்ச்சாலையை நெடுஞ்சாலைத் துறைமூலம் பலப்படுத்தி அகலப்படுத்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே சாலைப் பணிகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

(அ) திருவாரூர் மாவட்டம், குடவாசல். 20 கி.மீ. நீளமுள்ள பூந்தோட்டம்-நாச்சியார்கோவில் (எம்டிஆர் 34) தார்ச் சாலையை ரூ.445.00 இலட்சம் மதிப்பீட்டில் இருவழிச் சாலையாக அகலப்படுத்தும் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இப்பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளது.

312—

மேம்பாலம்

வினா எண் 619—திரு. க. சுந்தர்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், திருமுக்கூடல், பழையசீவரம் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், திருமுக்கூடல், பழையசீவரம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் பணி முடிக்கப்பட்டு 29-2-2008-ல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

313—

மேம்பாலம்

வினா எண் **821—திரு. இல. வேலுசாமி:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, அதியமான்கோட்டை அருகே தே.நெ.7 தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே செல்லும் ரயில் பாதையில் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, அதியமான்கோட்டை அருகே தேசிய நெடுஞ்சாலை-7-ல் ரெயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

314—

தேசிய நெடுஞ்சாலை

வினா எண் **822—திரு. இல. வேலுசாமி:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரியிலிருந்து வாணியம்பாடி வரை செல்லும் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

தருமபுரியிலிருந்து வாணியம்பாடி வரை செல்லும் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

315—

கான்கிரீட் சாலை

வினா எண் 860—திரு. எஸ்.கே. வேதரத்தினம்: *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மழைக் காலங்களில் தொடர்ந்து வெள்ள நீர் தேங்கும் சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

மழைக் காலங்களில் தொடர்ந்து வெள்ளநீர் தேங்கும் சாலைகளை ஒட்டு மொத்தமாக சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றும் திட்டம் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை. ஆனால் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் நிதிநிலைக்கேற்ப சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

316—

மேம்பாலம்

வினா எண் 863—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

தாம்பரத்தையும் வேளச்சேரி சாலையையும் இணைக்கும் இரயில்வே கடவு பகுதியில் புதிய மேம்பாலம் கட்டுவதற்கான மாநில அரசின் பணிகள் துரிதமாக செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

தாம்பரத்தையும் வேளச்சேரி சாலையையும் இணைக்கும் கடவு எண் 30 இரயில்வே கடவு பகுதியில் புதிய மேம்பாலம் கட்டுவதற்கான பணிகள் 28-3-2007-ல் துவக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் முடிவடைய 24 மாத கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

317—

சாலை சீரமைத்தல்

வினா எண் 887—**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் உள்ள ஒத்திவாக்கம்-மணப்பாக்கம் வரை மிக மோசமாக உள்ள சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதியில் உள்ள ஒத்திவாக்கம்-மணப்பாக்கம் வரை உள்ள சாலை செங்கல்பட்டு (நெடுஞ்சாலை) கோட்ட பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையாகும். 2007-08 ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இச்சாலை ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு தற்பொழுது நல்ல நிலையில் உள்ளது.

[2011 பிப்ரவரி 10

318—

தேசிய நெடுஞ்சாலை

வினா எண் 993—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம்-செங்கம் சாலையை இணைத்து தேசிய நெடுஞ்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திண்டிவனம்-செங்கம் சாலை என்பது பாண்டிச்சேரி-கிருஷ்ணகிரி தே.நெ.66-இன் ஒரு பகுதியாகும். திண்டிவனம்-கிருஷ்ணகிரி பகுதியை கடின புருவங்களுடன் கூடிய இரு வழிச்சாலையாக மாற்றிட விரிவான திட்ட அறிக்கை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் திட்டப் பணி தொடங்கப்படும் என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் விழுப்புரம் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

319—

சப்-டிவிஷன்

வினா எண் 1025—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தாலுக்காவிற்கென தனியாக நெடுஞ்சாலைத் துறை உட்கோட்டம் (சப்-டிவிஷன்) பள்ளிப்பட்டில் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தாலுக்காவிற்கென புதிதாக உட்கோட்டம் தொடங்க அரசாணை (நிலை) எண் 222, நெடுஞ்சாலைத் துறை, நாள் 28-8-2007-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்த உட்கோட்டம் 1-9-2007 முதல் செயல்பட்டு வருகிறது.

320—

தரைப் பாலம்

வினா எண் 1971—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட நல்லகுமார கவுண்டன்புதூர், ஆத்துக்கால் புதூர் இடையே அமராவதி ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

(அ) நல்லகுமார கவுண்டன்புதூர்-ஆத்துக்கால் புதூர் இடையே அமராவதி ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்டுதல் தொடர்பாக நபார்டு வங்கியின் உதவி கோரப்பட்டுள்ளது.

(ஆ) நபார்டு வங்கியின் ஒப்புதல் கிடைத்த பின் விரிவான மதிப்பீடு தயாரித்து பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

321—

புறவழிச் சாலை

வினா எண் 2273—திரு. என்.ஆர். ரங்கராஜன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

பட்டுக்கோட்டை நகரில் போக்குவரத்து நெரிசல் விபத்துக்களைத் தவிர்க்க புதிய புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை நகரில் போக்குவரத்து நெரிசல் விபத்துக்களைத் தவிர்க்க புதிய புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. முதற்கட்டமாக நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ளவும், அது முடிந்தபின் சாலை அமைக்கும் பணிகளை மேற்கொள்ளவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

322—

ஆபத்தான வளைவு

வினா எண் 2500—திரு. பா. வேல்துரை: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன் மகாதேவியிலுள்ள திருச்செந்தூர் செங்கோட்டை மாநில நெடுஞ்சாலையில் பத்தமடைக்கு அருகிலுள்ள ஆபத்தான வளைவு பகுதியை நேராக திருத்தி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி நெடுஞ்சாலை கோட்டப் பராமரிப்பிலுள்ள மாநில சாலையாகிய (எண் 40) திருச்செந்தூர்-பாளையங்கோட்டை-அம்பாசமுத்திரம்-தென்காசி-குற்றாலம்-செங்கோட்டை சாலையில் பத்தமடைக்கு அருகில் கி.மீ. 71/4-72/0-ல் உள்ள சாலைப் பகுதியை நேராக திருத்தி அமைப்பதற்கும், மேலும் இதே சாலையில் கி.மீ. 66/2 முதல் 114/0 வரையுள்ள பகுதியில் தேவைப்பட்ட இடங்களில் மொத்தம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

27.36 கி.மீ. நீளத்திற்கு அகலப்படுத்தி மேம்படுத்திடவும் 2005-2006 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.613/ இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு அனைத்துப் பணிகளும் ஏப்ரல் 2007-ல் முடிக்கப்பட்டுள்ளன.

323—

பயணியர் மாளிகை

வினா எண் 2522—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்குட்பட்ட பவானி நகரில் பழுதடைந்து உள்ள பயணியர் மாளிகையை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம் பவானி தொகுதிக்குட்பட்ட பவானி நகரில் பழுதடைந்துள்ள பயணியர் மாளிகையின் ஒரு பகுதியினை சீரமைக்கும் பணி 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.2.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

324—

புதிய பாலம்

வினா எண் 2523—திரு. கே.வீ. ராமநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பவானி-அத்தாணி-சத்தி சாலை கி.மீ. 46/8-ல் குறுகிய பழுதடைந்த பாலம் உள்ளதால் புதிய பாலம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்தில் மாநில நெடுஞ்சாலையான சத்தி-அத்தாணி-பவானி சாலையில் கி.மீ. 46/8-ல் உள்ள குறுகிய மிகவும் பழுதடைந்த பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் திரும்பக் கட்டும் பணியானது ரூ.16.00 இலட்சங்கள் மதிப்பீட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் நடப்பு நிதியாண்டில் செய்து முடிக்கப்படும்.

325—

ஓ.டி.ஆர். சாலை

வினா எண் 2556—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலையிலிருந்து பழநிக்கு குமரலிங்கம் வழியாக கொழுமம் வரை செல்லும் எம்.டி.ஆர். சாலையை அதற்கு கிழக்கே பழநி வரை செல்லும் ஓ.டி.ஆர். வகை சாலை போல் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

உடுமலையிலிருந்து பழநிக்கு குமரலிங்கம் வழியாக கொழுமம் வரை செல்லும் மாவட்ட முக்கிய சாலையில் போக்குவரத்து செறிவு குறைவாக இருப்பதால், இருவழித்தடமாக அகலப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. உடுமலைப்பேட்டை-குமரலிங்கம் சாலையில் கி.மீ. 15/0-18/1 வரையுள்ள பகுதிகளை மேம்பாடு செய்யும் பணி 2006-2007 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் ரூ.70.00 இலட்சம் மதிப்பில் எடுக்கப்பட்டு பணிகள் முழுவதும் 6/2007-ல் முடிக்கப்பட்டுவிட்டன.

2011 பிப்ரவரி 10]

326—

புதிய பாலம்

வினா எண் 2567—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை-கொழுமம் சாலையில் ஊரல்பட்டி கிராமத்தில் புதிய பாலம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை-கொழுமம் சாலையில் ஊரல்பட்டி கிராமத்தில் புதியதாக பாலம் கட்டுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

327—

புதிய டெர்மினல்கள்

வினா எண் 2885—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எண்ணூர் துறைமுகத்தில் பல புதிய டெர்மினல்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

எண்ணூர் துறைமுகத்தில் மெரைன் திரவ முனையம், நிலக்கரி முனையம், இரும்புத்தாது முனையம், கன்டெய்னர் முனையம் என நான்கு முனையங்கள் மொத்தம் ரூ.2.375 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருவதாக எண்ணூர் துறைமுக நிறுவன இயக்குநர் தெரிவித்துள்ளார். இது மைய அரசின் கீழ்வரும் பெரும் துறைமுகமாகும். எனவே புதிய டெர்மினல்கள்/முனையம் அமைப்பது பற்றி மாநில அரசு நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

328—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 3559—திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதி ஒண்டிபுதூர் இரயில்வே மேம்பாலம் மற்றும் பைபாஸ் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(1) கடவு எண் 145 ஒண்டிபுதூர் மேம்பாலப்பணி முடிக்கப்பட்டு 28-4-2007 அன்று போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது.

(2) பைபாஸ் இரயில்வே மேம்பாலம் கடவு எண் 20-க்குப் (வாலங்குளம்) பதிலாக கட்டப்படுகிறது. இப்பணியில் இரயில்வே பகுதியை இணைக்கும் பால மேல்தளம் நான்கு கண்களைத் தவிர அனைத்து பணிகளும் இரயில்வே துறையினரால் முடிக்கப் பெற்றுவிட்டது. நெடுஞ்சாலைத் துறை மூலம் செய்யப்பட வேண்டிய பால மேல் தளப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

329—

பாலம்

வினா எண் 5041—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம்—நெல்வாய் சாலையில் வழுதூர் காட்டூர் அருகே பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு (நெ) கோட்ட பராமரிப்பிலுள்ள, திருக்கழுக்குன்றம்-நெல்வாய் சாலை (கி.மீ.0/0-32/0) என்ற மாவட்ட இதர சாலையில், கி.மீ 25/8-ல் வழுதூர் காட்டூர் அருகே அமைந்துள்ள பழுதடைந்த பாலத்தை சீரமைக்கவும், கி.மீ. 25/0-26/5 வரை இடைவழித்தடமாக அகலப்படுத்தவும் 2006-2007 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்டு, பணிகள் அனைத்தும் 31-3-2008-ல் முடிக்கப்பட்டு, தற்பொழுது போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

330—

சாலை சீரமைத்தல்

வினா எண் 5628—திரு. வை. காவேரி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மன்னாத கவுண்டனூர் முதல் ஸ்டீல் பிளாண்ட் வரை பழுதடைந்துள்ள தார் சாலை சீரமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

எடப்பாடி தொகுதி மன்னாத கவுண்டனூர் முதல் ஸ்டீல் பிளாண்ட் வரையுள்ள தார் சாலையானது சேலம் இரும்பாலையின் பொறுப்பில் வருவதால் அரசு சீர் செய்ய இயலாது.

331—

புறவழிச் சாலை

வினா எண் 5874—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரத்தில் புற வழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் நகரத்தில் புற வழிச் சாலை (பைபாஸ் ரோடு) அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

332—

தேசிய நெடுஞ்சாலை

வினா எண் 5886—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் முதல் சேலம் வரை தேசிய நெடுஞ்சாலையை வரும் நிதியாண்டில் சீர் செய்ய நிதி ஒதுக்கி தரப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தேசிய நெடுஞ்சாலை 68-ல் சேலம் ஆத்தூர் சாலைப் பகுதியில் பராமரிப்பு பணிகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் 2007 ஆம் ஆண்டில் மேற்கொண்டு முடிக்கப்பட்டுவிட்டன. சாலை தற்போது நல்ல நிலையில் உள்ளது.

333—

பாலம்

வினா எண் 5887—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நரசிங்கபுரம் பேரூராட்சிக்குட்பட்ட ஆட்கொல்லி பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஆத்தூருக்கு அருகில் நரசிங்கபுர பாலமானது (ஆட்கொல்லி பாலம்) அவசர கால பழுது பார்த்தலின் கீழ் ரூ.8.30 இலட்சத்தில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணை குழுமத்தால் ஜனவரி 2007-ல் பழுது பார்க்கப்பட்டுள்ளது.

334—

மரக்கன்றுகள்

வினா எண் 5981—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பத்தூர் நகரில் இரு வழிப்பாதை அமைத்து நடுவில் மரக்கன்றுகள் நட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் நகரில் பல வழிப்பாதை அமைக்க ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.57.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் துவங்கப்படும். சாலையின் மத்தியில் மின்கம்பங்கள் நிறுவவும், மரக்கன்றுகள் நடவும் போதிய இடம் இல்லாததால், அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

335—

நெடுஞ்சாலை

வினா எண் 6076—திரு. ஆர். சின்னசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை, மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

(அ) சிங்காநல்லூர் தொகுதி, எஸ்.எஸ்.குளம் ஒன்றியம், கோட்டைப்பாளையம் முதல் மத்தப்பாளையம் வரை நெடுஞ்சாலையை சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, எஸ்.எஸ். குளம் ஒன்றியம், கோட்டைப்பாளையம் முதல் மத்தப்பாளையம் சாலை கி.மீ. 0/0-6/6 முடியவுள்ள பகுதியானது ரூ.4[illegible]0 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேலும் கி.மீ. 6/6—8/8 முடியவுள்ள சாலைப் பகுதியினை, காலமுறை புதுப்பித்தல் மற்றும் சிறப்பு பராமரிப்பு பணியின் கீழ் 2007-08-ல் மேம்பாடு செய்வதற்கு ரூ.19.00 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரி, இப்பணியினை செயலாக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

336—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 6453—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப் பேட்டை தொகுதி, பூலாங்கிணார்-ஆணைமலை முதல் வாளவாடி சாலை வரை சாலையை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பொள்ளாச்சி நெடுஞ்சாலை கோட்டப் பராமரிப்பிலுள்ள பூலாங்கிணார்-தளி சாலையான கி.மீ.0/0-9/4 வரையுள்ள மாவட்ட இதர சாலையில், பூலாங்கிணார்—ஆணைமலை முதல் வாளவாடி

2011 பிப்ரவரி 10]

வரையுள்ள சாலையில், கி.மீ. 0/0-1/4 மற்றும் கி.மீ. 2/0-4/0 வரையுள்ள பகுதிகளை 2006-2007 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாடுத் திட்டத்தின் கீழ் ரூ.22.00 இலட்சம் மதிப்பில் மேம்பாடு செய்வதற்காக 16-11-2006-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, மார்ச் 2008-ல் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. தற்போது இச்சாலை நல்ல நிலையில் உள்ளது.

337—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 6455—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, எரிசனம்பட்டி-குமரலிங்கம் 13 கி.மீ. சாலையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, எரிசனம்பட்டி-குமரலிங்கம் 13 கி.மீ. சாலையை ரூ.93.00 இலட்சம் மதிப்பில், ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மேம்பாடு செய்வதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி, இறுதியாக்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

338—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 6456—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, கொழுமம்-குதிரையாறு 2 கி.மீ. சாலையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கொழுமம்-குதிரையாறு சாலையானது உடுமலைப்பேட்டை குமரலிங்கம் சாலையில் உள்ளது. இது ஒரு மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையில் 3 கி.மீ. நீளத்திற்கு (கி.மீ. 15/0-18/0 வரையுள்ள பகுதிகள்) 2006-2007 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பிப்ரவரி 2008-ல் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

339—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 6460—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலைப்பேட்டை தொகுதி, கொமரலிங்கம்-குறிச்சிக் கோட்டை சாலையில் கொமரலிங்கம் மேற்கு செல்லும் 1 கி.மீ. சாலையை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி கொமரலிங்கம்-குறிச்சிக்கோட்டை சாலை என்பது பொள்ளாச்சி (நெடுஞ்சாலை) கோட்டப் பராமரிப்பில் உள்ள தளி-குமரலிங்கம் சாலையில் கி.மீ. 0/0-16/8 வரையுள்ள அரசு மாவட்ட முக்கியச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/2-1/2, 2/8-4/4, 5/8-7/0, 7/0-9/6, 15/2-15/4 மற்றும் 15/8-16/2 முடியவுள்ள (7 கி.மீ.) பகுதிகளில் பணிகள் 2006-2007 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.93.00 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு, டிசம்பர் 2007-ல் முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ள இப்பணியில், கொமரலிங்கம் மேற்கு செல்லும் 1 கி.மீ. சாலையும் அடங்கும். மீதமுள்ள கி.மீ. [illegible] வரையுள்ள பகுதியானது 2008-2009 ஆம் ஆண்டின் சிறப்பு பழுது பார்க்கும் திட்டத்தின்கீழ் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

2011 *பிப்ரவரி* 10]

340—

புதிய பாலம்

வினா எண் 6461—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலைப்பேட்டை தொகுதி, எரிசனம்பட்டி சாலை 27/4-ல் புதிதாக பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, எரிசனம்பட்டி சாலை கி.மீ. 27/4-ல் தற்போது தரைமட்டதள பாலம் உள்ளது. இப்பாலம் போக்குவரத்துக்கு ஏற்ற நிலையில் இருப்பதால் புதிதாக பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

341—

உயர்மட்ட பாலம்

வினா எண் 6466—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை-கொமரலிங்கம் சாலையில் உரல்பட்டி அருகில் உயர்மட்ட பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை கொமரலிங்கம்-சாலையில் உரல்பட்டி அருகில் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணியினை தற்போது மேற்கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

[2011 பிப்ரவரி 10

342—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 6467—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, தமிழ்நாடு-கேரள மாநிலத்தை இணைக்கும் உடுமலை-சின்னார் சாலை 18/6 முதல் 28/6 வரை உள்ள சாலையை செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, தமிழ்நாடு-கேரளா மாநிலத்தை இணைக்கும் உடுமலை-சின்னார் சாலையில், கி.மீ. 18/6 முதல் 28/6 வரை உள்ள சாலைப் பகுதிகளை இரு தொகுப்புகளாக பிரித்து ஒரு பகுதி 2005-06-லும் மற்ற பகுதி 2006-07-லும் செப்பனிட்டு புதுப்பிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

343—

கடல்வழிப் போக்குவரத்து

வினா எண் 6488—திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலைப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க சென்னை-பாண்டிச்சேரி-கடலூர்-நாகப்பட்டினம் இராமேஸ்வரம்-தூத்துக்குடி-திருச்செந்தூர்-குளச்சல் ஆகியவற்றை இணைத்திடும் கடல்வழிப் போக்குவரத்தை துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சென்னை-பாண்டிச்சேரி-கடலூர்-நாகப்பட்டினம்-இராமேஸ்வரம்-தூத்துக்குடி-திருச்செந்தூர்-குளச்சல் மார்க்கத்தில் கடல்வழிப் போக்குவரத்தை துவக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 *பிப்ரவரி* 10]

344—

சாலைப் பராமரிப்பு

வினா எண் 6503—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை-தாராபுரம் சாலையை அகலப்படுத்தி, பராமரிப்பு பணி மேற்கொள்ள அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை-தாராபுரம் சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.225 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி இறுதியாக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

345—

சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 6504—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை-பொள்ளாச்சி பிரதான சாலையிலிருந்து கணபதிபாளையம் வரை செல்லும் 4 கி.மீ. சாலையை செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை பொள்ளாச்சி பிரதான சாலையிலிருந்து கணபதிபாளையம் வரை செல்லும் சாலை ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு

மேம்பாட்டுத் திட்டத்தின் *(2006-2007)* கீழ் ரூ.*72.00* இலட்சத்திற்கு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் ஜனவரி 2009-ல் முடிக்கப்பட்டு, தற்போது போக்குவரத்து தடையின்றி நடைபெற்று வருகிறது.

346—

பாலம் கட்டும் பணி

வினா எண் 6510—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, கொழுமம் குதிரையாற்றுப் பாலம் கட்டும் பணியை விரைவில் முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, கொழுமம் குதிரையாற்றுப் பாலம் கட்டும் பணி முடிக்கப்பட்டு, 12-1-2007 அன்று போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

347—

புறவழிச் சாலை

வினா எண் 7262—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் புறவழிச் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் புறவழிச் சாலை அமைப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

348—

தார்ச் சாலை

வினா எண்—8272 திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயத்திற்குட்பட்ட சென்னிமலை பகுதி வெங்கமேடு முதல் கோட்டமேடு மற்றும் பாண்டியன் நகர் தேசிய நெடுஞ்சாலையில் தார்ச் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட சென்னிமலை பகுதியில், வெங்கமேடு முதல் கோட்டமேடு மற்றும் பாண்டியன் நகர் தேசிய நெடுஞ்சாலையில் தார்ச் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.47.22 இலட்சம் செலவில் 2007-08 இல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு தார்ச் சாலையாக மேம்பாடு செய்யும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.

349—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண்—8324 திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை-கொழுமம் வழி பழனி சாலையில் உடுமலையிலிருந்து கொழுமம் வரையுள்ள சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோயில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை-கொழுமம் வழி பழனி சாலையில், உடுமலையிலிருந்து கொழுமம் வரையுள்ள சாலையானது, மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையில் போக்குவரத்துச் செறிவு குறைவாக உள்ளதால், இதனை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

350—

சாலையைச் செப்பனிடுதல்

வின எண்—9602 திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், முத்தையன்பட்டி சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மதுரை (நெ.) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையான தும்மக்குண்டு நல்லுத்தேவன்பட்டி சாலை கி.மீ. 0/0-11/357 வரையுள்ள சாலையில் முத்தையன்பட்டி எனும் சாலைப்பகுதியானது கி.மீ. 0/6—3/8 வரையுள்ள 3.20 கி.மீ. தூரமுள்ள பகுதியாகும். இச்சாலைப் பகுதியானது ரூ.30.00 இலட்சம் செலவில் செப்பனிடப்பட்டு 9-8-2005-ல் அனைத்துப் பணிகளும் முடிவடைந்தன. பின்னர், இச்சாலையில் ஏற்பட்ட சிறு பழுதுகளும் செப்டம்பர் 2006-ல் சரிசெய்யப்பட்டு சாலையானது தற்போது நல்ல நிலையில் உள்ளது.

351—

புறவழிச் சாலை

வினா எண்—9617 திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) காஞ்சிபுரம் நகரில் பொன்னேரிக் கரை முதல் செங்கல்பட்டு சாலை வரை புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரிக்கரை முதல் செங்கல்பட்டு சாலை என்பது தே.நெ. 4-ல் கி.மீ. 76.10-ல் பிரிந்து கீழம்பி, புத்தேரி, கீழ்க்கதிர்ப்பூர், குண்டுகுளம், செவிலிமேடு வழியாகச் சென்று காஞ்சிபுரம் வந்தவாசி சாலையில் கி.மீ. 4/2-ல் இணையும் வகையில் 8.50 கி.மீ. (0/0-8/5) நீளத்திற்கு அமைக்கப்படவுள்ள புறவழிச் சாலை உருவாக்கிட நில எடுப்புப் பணிகளுக்கு ரூ.2.87 கோடி மதிப்பில் அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மேலும், மத்திய சாலை நிதி திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ள புறவழிச் சாலையை இருவழித்தடமாக அமைக்கவும் மற்றும் இதனிடையில் அமைக்கவுள்ள பாலத்திற்கும் சேர்த்து ரூ.34.18 கோடிக்கு மைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. நில எடுப்புப் பணிகள் முடிந்ததும் புறவழிச் சாலைப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

352—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண்—9623 திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம், தாயனூர் முதல் தோலம்பாளையம் வரையிலான சாலை அகலப்படுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

இச்சாலையின் சரியான பெயர் காரமடை-தோலம்பாளையம் (கி.மீ. 0/0-16/6) சாலையாகும். இச்சாலை, கோயம்புத்தூர்

(நெடுஞ்சாலை) கோட்டத்தின் பராமரிப்பிலுள்ள ஒரு மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையில் அகலப்படுத்தக் கோரும் பகுதியான தாயனூர் முதல் தோலாம்பாளையம் (கி.மீ. 11/6-16/400) வரை உள்ள பகுதியை இருவழித்தடமாக அகலப்படுத்தும் பணி ரூ.112.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு, அக்டோபர் 2007-ல் முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளது. எனவே, கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

353—

சாலை மேம்படுத்துதல்

வினா எண்—11128 திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைப்பாளையம்-சந்திரசேகரபுரம் சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

அனைப்பாளையம்-சந்திரசேகரபுரம் சாலையில் போதுமான போக்குவரத்துச் செறிவு இல்லாததால் சாலையை அகலப்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

354—

சாலை மேம்படுத்துதல்

வினா எண்—11137 திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கட்டநாச்சம்பட்டி-தேங்கல்பாளையம் சாலையை (தேங்கல்பாளையம் ஊர்பகுதி) அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கட்டநாச்சம்பட்டி-தேங்கல்பாளையம் சாலையில் போதுமான போக்குவரத்துச் செறிவு இல்லாததால் இச்சாலையை அகலப்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

355—

பாலம்

வினா எண்—11212 திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், கொடுமாம்பள்ளி ஊராட்சி, புதுப்பாளையம் அருகே பாம்பாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் கொடுமாம்பள்ளி ஊராட்சி, புதுப்பாளையம் அருகே பாம்பாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

356—

நான்கு வழிப்பாதை

வினா எண்—11251 திரு. செ.ம. வேலுசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தொகுதி வழியாகச் செல்லும் திருச்சி சாலை (தேசிய நெடுஞ்சாலை எண் 67) தேசிய

[2011 பிப்ரவரி 10

நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் 4 வழிப் பாதையாக மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தொகுதி வழியாகச் செல்லும் திருச்சி சாலையை (தேநெ. 67) நான்கு வழிப் பாதையாக மாற்றும் திட்டம் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் 21-8-2006-ல் துவங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

357—

பாலம்

வினா எண்—11960 திரு. ஆர். சிவானந்தம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, கல்பூண்டி-லாடப்பாடி, குன்னத்தூர்-காமக்கூர் மற்றும் ஒண்ணுபுரம்-அத்திமலைப்பட்டு ஆகிய கிராமங்களுக்கு இடையே ஓடும் கமண்டலநாக நதியில் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஆரணி தொகுதியிலுள்ள கல்பூண்டி-லாடப்பாடி சாலையானது ஆரணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். இதில் குன்னத்தூர்-காமக்கூர் சாலையிலும் மற்றும் ஒண்ணுபுரம்-அத்திமலைப்பட்டு சாலையிலும் உயர்மட்டப் பாலங்கள் கட்ட ஆர்.ஐ.டி.எப். XII திட்டத்தில் நபார்டு வங்கிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் ஒப்புதல் கிடைத்தால் இப்பணி மேற்கொள்ளப்படும்.

2011 பிப்ரவரி 10]

358—

தனிக் கோட்டம்

வினா எண்—12332 திரு இல. வேலுசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி கோட்டம் பிரிக்கப்பட்டு தருமபுரியை தனிக் கோட்டமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி நெடுஞ்சாலைக் கோட்டம் பிரிக்கப்பட்டு தருமபுரியில் நெடுஞ்சாலைத் துறையின் தனி கோட்டம் துவக்க, 30-4-2007-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு 1-5-2007 முதல் தருமபுரி நிரந்தரக் கோட்டம் செயல்பட்டு வருகிறது. இக்கோட்டம், நான்கு உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகங்களையும், ஐந்து உதவிப் பொறியாளர் அலுவலகங்களையும் உள்ளடக்கியதாகவும் உள்ளது.

359—

புறவழிச் சாலை

வினா எண்—12352 திரு. கோ. அரி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி வழியாக காஞ்சிபுரம், திருப்பதி, வேலூர், பாண்டிச்சேரி, செங்கல்பட்டு செல்லும் பேருந்துகள் திருத்தணி நகருக்குள் வராமல் செல்ல புறவழிச் சாலை ஒன்றை அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்தணி வழியாக காஞ்சிபுரம் திருப்பதி, வேலூர், பாண்டிச்சேரி, செங்கல்பட்டு செல்லும் பேருந்துகள் திருத்தணி நகருக்குள் வராமல் செல்ல புறவழிச் சாலை ஒன்றை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

360—

தார்ச் சாலை

வினா எண் 13217—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதியிலுள்ள பங்காம்பாளையம் என்ற ஊருக்கு அரசுப் பேருந்து செல்வதற்கு வசதியாக தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) காங்கேயம் தொகுதியிலுள்ள பங்கம்பாளையம் என்ற ஊருக்கு ரூ.24.09 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைப்பதற்காக நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) பணிகள் நடைபெற்று வருகின்றன.

361—

இருவழிப் பாதை

வினா எண் 13777—திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதியில் அணைப்பட்டி பேரணையிலிருந்து கரட்டுப்பட்டி வரை ஒரு வழிப் பாதையாக உள்ளதை இருவழிப் பாதையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதியில் அணைப்பட்டி பேரணையிலிருந்து கரட்டுப்பட்டி வரை உள்ள சாலையானது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள 29.6 கி.மீ. நீளமுடைய மாவட்ட முக்கிய சாலையான நாச்சிகுளம்-செம்பட்டி சாலையின் கி.மீ. 0/0 முதல் 10/0 வரையுள்ள 10 கி.மீ. நீளப் பகுதியாகும். இச்சாலைப் பகுதியை இருவழித்தடமாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

362—

புறவழிச் சாலை

வினா எண் 14735—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு நகருக்கு புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு நகருக்கு புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

363—

பயணியர் விடுதி

வினா எண் 14782—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேத்துப்பட்டு நகரில் பயணியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சேத்துப்பட்டு நகரில் பயணியர் விடுதி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

364—

இருவழிப் பாதை

வினா எண் 18709—திரு. ப. டில்லிபாபு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர், அம்பேத்கர் நகர் காலனி அருகில் வரட்டாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஒருவழிப் பாதை பாலத்தை இருவழிப் பாதை பாலமாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) அரூர் அம்பேத்கர் நகர் காலனி அருகில் வரட்டாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஒருவழிப் பாதை பாலத்தை இருவழிப் பாதை பாலமாக மாற்றியமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

365—

சாலை மேம்படுத்துதல்

வினா எண் 18799—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி-ஏழுமலைச் சாலையை இருபுறமும் அகலப்படுத்தி மேம்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சிலம்பட்டி-ஏழுமலைச் சாலையின் மொத்த நீளமான 1280 கி.மீ. (0/0-12/8) இல் ஒருபகுதியான கி.மீ. 0/0-5/0 வரையுள்ள பகுதிகளை மட்டும் இருவழிச் சாலையாக அகலப்படுத்திட ரூ.180.00 இலட்சங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகளை வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப அகலப்படுத்திட ஆவன செய்யப்படும்.

366—

சாலை சீரமைத்தல்

வினா எண் 18822—திரு. கை. காவேரி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் முதல் ஆத்தூர் வரையுள்ள சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலை 68-ல், சேலம் முதல் ஆத்தூர் வரையுள்ள சாலைப் பகுதியில் பராமரிப்புப் பணிகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் 2007-08-ல் நிறைவேற்றியது. இச்சாலை தற்போது நல்ல நிலையில் உள்ளதாக அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

367—

இலவசச் சீருடை

வினா எண் 18825—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலைப் பணியாளர்களுக்கு இரு ஜோடி இலவசச் சீருடை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சாலைப் பணியாளர்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

368—

பயணியர் விடுதி

வினா எண் 20705—திரு. வெ. காவேரி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகுடஞ்சாவடியில் பயணியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடியில் பயணியர் விடுதி கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

369—

பாலத்தைச் சீர் செய்தல்

வினா எண் **20852—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புஞ்செய் பாலத்தொழுது ஊராட்சி, ஆலமரம்—கொடுமணல் சாலையில் ஓலப்பாளையம் அருகிலுள்ள பாலத்தைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புஞ்செய் பாலத்தொழுது ஊராட்சி, ஆலமரம்-கொடுமணல் சாலையில் ஓலப்பாளையம் அருகிலுள்ள பாலம் திரும்பக் கட்டும் பணி சி.ஆர்.ஐ.டி.பி. திட்டம் 2006-07-ல் ரூ.3.00 இலட்சம் மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணியும் முடிவுற்றுள்ளது.

370—

புறவழிச் சாலை

வினா எண் **25092—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டையில் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டையில் போக்குவரத்துச் செறிவு குறைவாக உள்ளதால் புறவழிச் சாலை அமைக்கும் அவசியமில்லை.

[2011 பிப்ரவரி 10

371—

வேகத்தடை அமைத்தல்

வினா எண் 25833—திரு. வீ.எ.டி. கலியவரதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளி எதிரில் நெடுஞ்சாலைத் துறை சாலையில் வேகத்தடை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளி எதிரில் நெடுஞ்சாலைத் துறை சாலையில் வேகத் தடை (Modified Speed Breaker) மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

372—

மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 25882—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சேந்தங்குடி தேசிய நெடுஞ்சாலையிலுள்ள இருப்புப் பாதைக் கடவில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ சீர்காழி தொகுதி, சேந்தங்குடி தேசிய நெடுஞ்சாலையிலுள்ள இருப்புப் பாதைக் கடவில் மேம்பாலம் அமைக்க ஆலோசகர்மூலம்

2011 பிப்ரவரி 10]

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவ்வறிக்கையினை மைய அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெறப்பட்டவுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

373—

சுரங்கப் பாதை

வினா எண்—25925 திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் பேருந்து நிலையம் அருகில் சுரங்கப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள சட்ராஸ்-செங்கல்பட்டு-காஞ்சிபுரம்-அரக்கோணம்-திருத்தணி சாலையில் காஞ்சிபுரம் பேருந்து நிலையம் அருகில் சுரங்கப் பாதை அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு முடிந்த பின் நிதிநிலைக்கேற்ப இப்பணி மேற்கொள்வது பற்றி தக்க பரிசீலனை செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

374—

புதிய மேம்பாலம்

வினா எண் 25969—திரு ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் அருகில் பரளை ஆற்றில் புதிய மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் அருகில் பரளை ஆற்றில் புதிய மேம்பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

375—

புதிய மேம்பாலம்

வினா எண் 25970—திரு ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், நெல்மடூர் ஓடையின் மேல் புதிய மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், நெல்மடூர் ஓடையின் மேல் புதிய மேம்பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

376—

தேசிய நெடுஞ்சாலை

வினா எண் 26291—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

பொள்ளாச்சி—பாலக்காடு மாவட்டச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பொள்ளாச்சி-பாலக்காடு சாலையில் போக்குவரத்துச் செறிவு 9710 மட்டுமே உள்ளதாலும், மாவட்ட முக்கிய சாலையாக இருந்ததை தற்போதுதான் மாநில நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தி இருப்பதாலும் உடன் தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

377—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 28311—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, பொதட்டூர்பேட்டை—கோணசமுத்திரம் வழி அத்திமாஞ்சேரிப்பேட்டை சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பொதட்டூர்பேட்டை-கோணசமுத்திரம் வழி அத்திமாஞ்சேரிப் பேட்டை சாலையினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

378—

சுரங்கப் பாதை

வினா எண் 26558—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேருந்து நிலையம் பகுதியில் சுரங்கப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, ஓமலூர் பேருந்து நிலையம் பகுதியில் சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

379—

ஆறு வழிப் பாதை

வினா எண் 28371- திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்-பெங்களூர் நான்கு வழிப்பாதையை ஆறு வழிப்பாதையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சேலம்-பெங்களூரு தே.நெ. 7-ல் சேலம் முதல் கிருஷ்ணகிரி வரை நான்கு வழிப்பாதையாக மாற்றும் பணி நடைபெற்று வருகிறது. இப்பகுதியை ஆறு வழிப்பாதையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் மைய அரசிடம் பரிசீலனையில் இல்லை. தே.நெ.7-ல் கிருஷ்ணகிரி-பெங்களூரு சாலையில் தமிழ்நாடு எல்லை வரையிலும் ஆறு வழிப்பாதையாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பரிசீலித்து வருகிறது. அதன் அடிப்படையில், அந்த ஆணையம் தக்க மேல் நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

380—

சாலை சீரமைத்தல்

வினா எண் 29028—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர்-மணிமங்கலம் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில்; எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர்-மணிமங்கலம் சாலை, செங்கல்பட்டு (நெ) கோட்ட பராமரிப்பிலுள்ள மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலையைச் சீரமைக்கும் பணிகள் ரூ.360 இலட்சத்திற்கு சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு 30-6-2008 அன்று பணிகள் முடிக்கபபட்டுள்ளன.

381—

வட்டச் சாலை

வினா எண் 29033—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரைச் சுற்றி வட்டச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் மாநகரைச் சுற்றி வட்டச் சாலை அமைக்கும் திட்டமானது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(அ) பொது, தனியார் பங்களிப்பு மூலம் (Public Private Patnership) கோயம்புத்தூர் மாநகருக்கு சுற்றுச்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறு பற்றிய ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள, தனியார் ஆலோசகருடன் 12-9-2007 அன்று ஒப்பந்தம் செய்யப்பட்டு, ஆரம்பகட்டப் பணிகள் நடைப்பெற்று வருகின்றன. இந்த ஆய்வின் முடிவில் சாத்தியக் கூறுக்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

382—

மேம்பாலம்

வினா எண் 31980—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தேசிய நெடுஞ்சாலையில் இருப்புப் பாதை கடவில் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தஞ்சாவூர்-மானாமதுரை தே.நெ.266-ஐ இருவழிச் சாலையாக விரிவுப்படுத்துதல், புறவழிச்சாலைகள் அமைத்தல், மேம்பாலங்கள் கட்டுதல் போன்ற பணிகளுக்காக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் மானாமதுரையில் இருப்புப் பாதை கடவில் மேம்பாலம் கட்டுவது பற்றி அவ்வாணையம் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

383—

இரயில்வே மேம்பாலம்

வினா எண்—32000 திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஸ்பேட்டையில் புதிய இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஸ்பேட்டையில் புதிய இரயில்வே மேம்பாலம் அமைக்க விதி முறைகளின்படி குறைந்தது நாளொன்றுக்கு 1,00,000 வாகன அலகுகள் (TVU) அக்கடவில் இருக்க வேண்டும். ஆனால், தீவட்டிப்பட்டி-பொம்மிடி சாலையில் கி.மீ. 6/4-க்கு அருகில் அமைந்துள்ள இருப்புப் பாதை கடவு எண் 108-ல், வாகன அலகுகள் 18,600 மட்டுமே உள்ளது. எனவே, அக்கடவில் புதிய இரயில்வே மேம்பாலம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

384—

புறவழிச் சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 33089—டாக்டர் க. நெடுஞ்செழியன் : *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பழுதடைந்துள்ள பரமத்தி-வேலூர் புறவழிச்சாலையை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கீழ்வரும் தேசிய நெடுஞ்சாலை 7-ல், பரமத்தி-வேலூர் புறவழிச் சாலையில் 19.5 கி.மீ. நீளத்திற்கு செப்பனிடும் பணி தொடங்கப்பட்டு தார்ச்சாலை பணி நடைபெற்று வருகிறது. 31-5-2008-க்குள் இப் பணி முடிவடையும் என அதன் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

385—

பாலம் அமைத்தல்

வினா எண் 33262—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, தேசிய நெடுஞ்சாலை-7 நான்கு வழிப்பாதை புளியம்பட்டி பேருந்து நிறுத்தத்தில் வாய்க்கால் தண்ணீர் செல்ல பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தேசிய நெடுஞ்சாலை 7—ல், புளியம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில், பாலம் கட்டுவது தொடர்பான விரிவான திட்ட அறிக்கை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கைக்கு மைய அரசின் ஒப்புதல் கிடைத்தபின் பாலப்பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த ஆணையத்தின் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

386—

இரு வழிச்சாலை

வினா எண் 33802—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, காத்திருப்பு—ஆக்கூர் தேசிய நெடுஞ்சாலை 45ஏ சாலையை இரு வழிச்சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) பூம்புகார் தொகுதி, காத்திருப்பு தே.நெ.45ஏ-ல் கிமீ 137/0-151/0 வரையுள்ள தூரத்தினை அகலப்படுத்தி மேம்பாடு செய்வதற்காக நில எடுப்பு செய்வதற்கான மதிப்பீடு ரூ.179.29 இலட்சத்திற்கு மைய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. நில எடுப்புக்கான நில அளவை (சர்வே) நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

(ஆ) நில எடுப்புப் பணி முடிவடைந்த பின்னர் சாலையை அகலப்படுத்த மைய அரசின் ஒப்புதல் கிடைத்த பின் தக்க முன் மொழிவு அனுப்பப்படும்.

387—

பயணியர் மாளிகை

வினா எண் 36504—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பயணியர் மாளிகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையிலிருந்து 24 கி.மீ. தொலைவிலுள்ள அட்டகட்டியில் நெடுஞ்சாலைத் துறையின் பயணியர் மாளிகை அமைந்துள்ளதால், வால்பாறையில் தனியாக பயணியர் மாளிகை அமைக்க வேண்டியதில்லை எனக் கருதப்படுகிறது.

388—

இரு வழிப்பாதை

வினா எண் 37307—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, காத்திருப்பு முதல் ஆக்கூர் வரை தேசிய நெடுஞ்சாலை 45-ஏ-ஐ இருவழிப்பாதையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, காத்திருப்பு முதல் ஆக்கூர் வரையிலான தே.நெ. 45ஏ-ஐ கி.மீ. 137/0 முதல் கி.மீ. 151/0 வரை இருவழிச் சாலையாக மாற்றுவதற்கு தேவையான நில எடுப்பிற்கான சர்வே நடைபெற்று வருகிறது. இச்சாலை விரிவாக்கப் பணியை 2008-2009 ஆம் ஆண்டுத் திட்ட பட்டியலில் சேர்த்து மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மதிப்பீட்டிற்கு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் நில எடுப்புப் பணிகள் முடித்து, ஒப்பந்தப்புள்ளிகள் கோரியபின் சாலை அகலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

389—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 37974—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்—ஓமலூர் 4 வழிப்பாதையில் கரும்பாலை இரயில்வே மேம்பாலப் பணியை முடிக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சேலம்-ஓமலூர் தே.நெ.7-ல் நடைபெற்று வரும் கரும்பாலை இரயில்வே மேம்பாலப் பணியை நவம்பர் 2008-க்குள் முடிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சேலம் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

390—

மேம்பாலம்

வினா எண் 37990—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் முதல் சேலம் என்.எச்.7 நான்கு வழிப்பாதை, புளியம்பட்டி ஊராட்சி, முத்துநாயக்கன்பட்டி பிரிவு ரவுண்டானா பகுதியில் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தே.நெ. 7-ஐ கிருஷ்ணகிரி முதல் நாமக்கல் வரை (கி.மீ. 94/0-248/625 வரை) நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தும் பணியும், அச்சாலையில் ஓமலூர் தொகுதியில் கி.மீ. 188/850-ல் உள்ள முத்துநாயக்கன்பட்டி ரவுண்டானா பகுதியில் மேம்பாலம் கட்டும் பணியும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய்யத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2011 பிப்ரவரி 10

391—

நான்கு வழிப்பாதை

வினா எண் 38405—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்—ஓமலூர் தேசிய நெடுஞ்சாலை 7-ல் நான்கு வழிப்பாதை பணியை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சேலம்-ஓமலூர் தேசிய நெடுஞ்சாலை 7-ல் நான்கு வழிப் பாதையாக்கும் பணியை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலம் ஜூன் 2008-ற்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக பணியை துரிதமாக முடிக்க மாநில அரசு வலியுறுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

392—

பாலத்தை புதுப்பித்தல்

வினா எண் 38646—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, பழைய தருமபுரி பாலத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, பழைய தே.நெ.7-இல் கி.மீ. 134/200 இல் உள்ள தருமபுரி பாலம் ஏற்கனவே பழுது பார்க்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்காக 6-2-2009 அன்று திறந்து விடப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

393—

மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 39263—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்-ஓமலூர் நான்கு வழிப்பாதை இருபுறமும் மின்விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சேலம்-ஓமலூர் நான்கு வழிப்பாதையில், பார்ன் அன்கோ முதல் குரங்கு சாவடி வரை, சேலம் மாநகராட்சியினரால் ரூ.15.90 இலட்சம் செலவில் 144 விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. எஞ்சிய பகுதி மாநகராட்சிப் பகுதிக்கு வெளியே உள்ளதால் தெரு மின் விளக்குகள் அமைக்கப்படவில்லை.

394—

புதிய பாலம்

வினா எண் 39343—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, கிருஷ்ணராஜபுரம் தெரு-மானாமதுரை காவல் நிலையம் இடையே புதிய பாலம் கட்டும் பணியை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, கிருஷ்ணராஜபுரம் தெரு-மானாமதுரை காவல் நிலையம் இடையே புதிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

395—

பாலம் அமைத்தல்

வினா எண் 39970—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பசுவாபுரம்-குருபர அள்ளி சாலையில் கல்லாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, பசுவாபுரம்-குருபர அள்ளி சாலையில் கல்லாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

396—

தேசிய நெடுஞ்சாலை

வினா எண் 43665—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்-கள்ளக்குறிச்சி தேசிய நெடுஞ்சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சேலம்-கள்ளக்குறிச்சி தேசிய நெடுஞ்சாலையை (N.H.68) சீரமைக்கும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் ரூ. 2.54 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப் பணிகளை 31-5-2008-க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

397—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 46754—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மதுரை-இராமேஸ்வரம் பிரதான சாலையை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்ட சாலையின் பழுதடைந்த பகுதிகளை மேம்பாடு செய்ய மத்திய கப்பல் மற்றும் தரைவழி அமைச்சகத்தின் ஒப்புதல் பெற்று, மேம்பாடு செய்யப்பட்டு, சாலை தற்போது நல்ல நிலையில் உள்ளது.

398—

பாலம்

வினா எண் 46776—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, மூலச்சல்-தாந்தவிளையில் வள்ளியாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஆம், பத்மநாபபுரம் தொகுதி, மூலச்சல்-தாந்தவிளையில் வள்ளியாற்றின் குறுக்கே பாலம் கட்டக் கோரும் இடமானது, நாகர்கோவில் (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட

இதர சாலையான பத்மநாபபுரம்-மேக்காமண்டபம் சாலை கி.மீ.0/0-4/7-ன் கி.மீ. 1/4-ல் உள்ள பாலத்தை குறிப்பதாகும். இப்பாலத்தை புதிதாக கட்டுவதற்கு நபார்டு திட்டத்தில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 30-6-2008-ல் பாலம் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது நல்ல நிலையில் உள்ளது.

399—

விபத்துக்களைத் தடுத்தல்

வினா எண் 55943—திரு. க. சுந்தர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பாலங்களின்மீது நடக்கும் விபத்துக்களினால் ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கையின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் பாலங்களின் மீது நடக்கும் விபத்துக்களினால் ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்க அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

(1) புதிய பாலங்கள் இனிமேல் கட்டும்போது நடைமேடைகள் (Platform) அமைக்கப்படும் என்று 2007-2008 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தலைமைப் பொறியாளர், வடிமைப்பு மற்றும் புலனாய்வு அவர்கள் தயாரித்தளித்த நடைமேடை மற்றும் பாதுகாப்பு தடுப்புடன் கூடிய மாதிரி பால வரைபடத்திற்கு நெடுஞ்சாலைத் துறை பொறியாளர் குழுமம் ஒப்புதல் அளித்து, அதனை இனிவருங்காலங்களில் கடைபிடிக்க வேண்டும் என்று அனைத்து கோட்டப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களால் 25-4-2007-ல் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

2011 பிப்ரவரி 10]

(2) மழை காலங்களில் வெள்ள நீரின் அளவை குறிக்கும் வகையில் தாழ்வான பாலங்கள் மற்றும் தாம்போகிகளின் இருபுறமும் பாலத்தின் எல்லை மற்றும் தண்ணீரின் ஆழம் போன்றவற்றை அறிய வெள்ள அளவு கோல் (Flood Gauge) அமைக்கவும் அறிவுரை வழங்கப்பட்டு அவை அமைக்கப்பட்டு வருகின்றன.

400—

சாலை சீரமைத்தல்

வினா எண் 57617—திரு. கோ. அரி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை-திருப்பதி சாலை, திருவாலங்காடு கூட்டுச்சாலையிலிருந்து அரக்கோணம் செல்லும் சாலையை சீரமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது, திருவள்ளூர் (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள 16.2 கி.மீ நீளமுள்ள திருவள்ளூர்-அரக்கோணம் சாலை எனும் மாவட்ட முக்கிய சாலையாகும். இதில் கி.மீ. 0/0-7/0 மற்றும் 15/0-16/2 வரை உள்ள சாலைப் பகுதியில் 2008-09 ஆம் ஆண்டில் சீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பகுதியில் சுமார் ரூ. 298 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணியானது நடப்பாண்டில் முடிக்கப்படும்.

401—

நெடுஞ்சாலையைப் புதுப்பித்தல்

வினா எண் 76760—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) மதுரை-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன். நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையை புதுப்பிக்கும் பணி 2008-2009-ம் ஆண்டு திட்டத்தில் அனுமதிக்கப்பட்டு, தற்போது நடைபெற்று வருகின்றது. மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.4300.00 இலட்சத்தில் 65 கி.மீ. நீளத்திற்கான சாலைகள் புதுப்பிக்கப்பட உள்ளன.

402—

தொழில் நுட்பப் பூங்கா

வினா எண் 82780—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் நகரில் தகவல் தொழில் நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை. ஆனால், காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் கிராமத்தில், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

403—

தொழில் நுட்பப் பூங்கா

வினா எண் 91950—திருமதி. பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் நகரில் தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் நகரில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை. ஆனால், காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

404—

மென்பொருள் பூங்கா

வினா எண் 97044—திரு. எஸ். இராசசேகரன்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதியில் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதியில் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

405—

மென்பொருள் பூங்கா

வினா எண் 97045—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் பூங்கா அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

406—

தொழில் நுட்பப் பூங்கா

வினா எண் 108414—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் அறிவிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப பூங்கா பணிகளை விரைந்து துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் 164.26 ஏக்கரில்

2011 பிப்ரவரி 10]

அமைந்துள்ளது. இந்தப் பூங்காவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டல தகுதி மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தகவல் தொழில் நுட்பவியல் பூங்காவில் பொது உட்கட்டமைப்பு பணிகள் ரூபாய் பத்து கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

407—

தொழில் நுட்பவியல் பூங்கா

வினா எண் 117248—திரு. எஸ். ஜான் ஜேக்கப்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதியில் தகவல் தொழில் நுட்பவியல் பூங்கா அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

408—

கேபிள் டி.வி. கட்டணம்

வினா எண் 121740—திருமதி பெ. கமலாம்மாள்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடுகளுக்கு வழங்கப்படும் கேபிள் டி.வி. இணைப்புகளின் கட்டணத்தை அரசே நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்தியத் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைச் சட்டம் (24/1997) 1997 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 28-ஆம் நாள் பாராளுமன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தில உள்ள பகுதி iii-ல், பிரிவு 2-ல் தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்தின் பணிகள் குறித்து விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன்படி கேபிள் டி.வி. கட்டணம் நிர்ணயம் செய்வது தொடர்பாக மைய அரசுக்கு பரிந்துரை செய்யும் பணியும் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே கேபிள் டி.வி. கட்டணத்தை நிர்ணயம் செய்யும் பணி மாநில அரசின் வரம்பிற்குள் இல்லை.

409—

ஆணையத்திற்கு அதிகாரம்

வினா எண் 684—திருமதி பி. பத்மாவதி: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாநில மகளிர் ஆணையத்திற்கு அதிகாரம் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்கு சட்ட பூர்வ அதிகாரம் வழங்கும் வகையில் உரிய சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

410—

தலைவர் நியமனம்

வினா எண் 685—திருமதி பி. பத்மாவதி: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

மாநில மகளிர் ஆணையத்திற்கு தலைவர் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

அரசு ஆணை (2டி) எண் 10, சமூகநலம் (ம) சத்துணவு திட்டத் துறை, நாள் 18-1-2007-ன்படி முனைவர் (திருமதி) கு.ம. இராமாத்தாள், (கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் பதிவாளர் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் முன்னாள் உறுப்பினர்) என்பவரை தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவியாக நியமித்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

411—

சத்துணவு மையம்

வினா எண் 16002—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அரங்கனூர் ஊராட்சி, பொம்மியம்பட்டியில் சத்துணவு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், அரங்கனூர் ஊராட்சி, பொம்மியம்பட்டியில் பள்ளிக்கூடம் ஏதும் இல்லை. எனவே சத்துணவுக்கூடம் அமைப்பதற்கான அவசியம் இல்லை.

412—

சத்துணவு மையம்

வினா எண் 20622—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், அழகுசமுத்திரம் ஊராட்சி, கோட்டைமேடு சின்னுசாமி வளவில் சத்துணவு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அழகு சமுத்திரம் ஊராட்சி, கோட்டைமேடு சின்னுசாமி வளவில் பள்ளி தற்போது ஏதும் இல்லை. வருங்காலங்களில் அப்பகுதியில் புதிய பள்ளி துவங்கப்பட்டால் சத்துணவு மையம் அமைக்கப்படும்.

413—

மறுவாழ்வு மையம்

வினா எண் 23672—மா. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையில் ஆதரவற்ற விதவைகள் மறுவாழ்வு மையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரையில் ஆதரவற்ற விதவைகள் மறுவாழ்வு மையம் துவக்குவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

2011 பிப்ரவரி 10]

414—

சத்துணவு

வினா எண் 24258—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சந்தப்படுகை ஊராட்சி, ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு சத்துணவு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் வட்டாரம், சந்தப்படுகை ஊராட்சி ஒன்றியம் நடுநிலைப்பள்ளி சத்துணவு மையத்தில் 176 மாணவ மாணவியர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

415—

சத்துணவுக் கூடம்

வினா எண் 27424—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணாகிராம ஒன்றியம், பாப்புகுளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 01-12-2007 முதல் பாப்புகுளம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் புதிய சத்துணவு மையம் துவங்கப்பட்டுள்ளது.

416—

மூத்த குடிமக்கள்

வினா எண் 28994—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூத்த குடிமக்களைப் பாதுகாப்பதற்கென சட்டம் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

மூத்த குடிமக்களைப் பாதுகாப்பதற்கென, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு நலன் சட்டம் 2007, மத்திய அரசால் 31-12-2007 அன்று இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் தமிழகத்தில் 29-9-2008 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. மேற்காணும் சட்டத்தின் பிரிவு 32-ன் உட்பிரிவு-1-ல் அறிவித்துள்ளபடி மாநில அரசால் அச்சட்டத்திற்குரிய விதிகள் (Rules) சட்டமன்ற ஒப்புதலுடன் விரைவில் வெளியிடப்பட உள்ளது.

417—

சத்துணவு மையம்

வினா எண் 33514—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், கஞ்சனூர் ஊராட்சி, கொரளூர் கிராமத்தில் சத்துணவு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், காணை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கஞ்சனூர் ஊராட்சியில் உள்ள கொரளூர்

2011 பிப்ரவரி 10]

கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவு மையம் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 71 மாணவ/ மாணவியர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

418—

பிச்சைக்காரர்களைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 71954—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சுற்றுலா வழிபாட்டுத் தலங்களில் சுற்றித் திரியும் பிச்சைக்காரர்களை கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வீதியில், கோயில்களில், சுற்றுலாத்தலங்களில் மற்றும் பொது இடங்களில் சுற்றித் திரியும் பிச்சைக்காரர்களை, தமிழ்நாடு பிச்சைக்காரர் தடுப்புச் சட்டம் 1945-ன்கீழ் காவல் துறையினர் மூலம் கைது செய்து அவர்களை நீதிபதி அவர்கள் முன்பு ஆஜர்படுத்தி, நீதிபதி அவர்களின் ஆணைப்படி ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கு தண்டனைக் கைதிகளாக மேல்பாக்கம் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், சென்னை-77-ல் தங்க வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

419—

சாதிச் சான்று

வினா எண் 160—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலை வட்டம், பெருமாள்புதூர் மற்றும் பார்த்தசாரதிபுரம் போன்ற பகுதிகளில் காட்டுநாயக்கன் சமூகத்தினருக்கு சாதிச் சான்று வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், பெருமாள்புதூர் மற்றும் பார்த்தசாரதிபுரம், போன்ற பகுதிகளில் காட்டுநாயக்கன் பழங்குடியினர் சமூகத்தினருக்கு சாதிச் சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

420—

தங்கும் விடுதி

வினா எண் 361—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகர், டாக்டர் அம்பேத்கர் மாணவர் தங்கும் விடுதியை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 268 விடுதிகளுக்கு கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பில் கோயம்புத்தூர் மாநகர், டாக்டர் அம்பேத்கர் மாணவர் விடுதியும் இடம் பெற்றுள்ளது. பரிசிலனைக்குப் பின்னர் இவ்விடுதிக்கும் கூடுதல் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

421—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 992—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 *பிப்ரவரி* 10]

(அ) திருவண்ணாமலை தொகுதி, காட்டுமலையனூர், கீக்களூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் அருந்ததியினர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை வட்டம், கீக்களூர் கிராமத்தில் குடியிருக்கும் தகுதியான 30 அருந்ததியர் இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக தகுதியான இடம் தேர்வு செய்து நில எடுப்பு சட்டத்தின் மூலம் நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

422—

கடன் உதவி

வினா எண் 1221—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆதி திராவிடர்களுக்கு சிறுதொழில் செய்ய நிபந்தனையற்ற கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர்கள் சிறுதொழில் செய்ய மானியமும், வங்கிக் கடனும் வழங்கப்பட்டு வருகிறது. இக்கடனுதவியை நிபந்தனையற்றதாக வழங்கும் பொருட்டு வங்கிகள் தங்களின் கொள்கை விதிப்படி கடன் வழங்கலாம் என மத்திய ரிசர்வ் வங்கி 2000 ஆம் ஆண்டில் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. ரூ.5 இலட்சம் வரையிலான சுய உதவிக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

குழுக்களுக்கான கடனுதவிக்கு நிபந்தனையற்ற கடனுதவி வழங்கலாம் என மாநில வங்கிக் குழுமம் (SLBC) வாயிலாகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நிபந்தனையற்ற கடனுதவி ஆதி திராவிடர்களுக்கு விரைவாக வழங்கப்படவேண்டுமென்று கருதி இந்த அரசும் வங்கிகளை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

423—

தரம் உயர்த்துதல்

வினா எண் 1363—திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் தொகுதி, பெருமுகையிலுள்ள ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

வேலூர் தொகுதி, பெருமுகையிலுள்ள ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

424—

நிலப் பட்டா

வினா எண் 2699—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேரூர் தொகுதி, பாலத்துறை ஊராட்சியில் வசிக்கும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு நிலப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், பாலத்துறை கிராமம், கச.எண்.77/4பி, 2பி-ல் 3.05 ஏக்கர் நிலங்கள் நேரடி பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்து 120 ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

425—

விளையாட்டுத் துறை

வினா எண் **3175—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகள் விளையாட்டுத் துறையில் முன்னேற அரசு உதவி புரிய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம், ஆதி திராவிடர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மாணவ, மாணவியர் விளையாட்டுத் துறையில் முன்னேற அரசு உதவி புரிந்து வருகின்றது.

426—

தாட்கோ மூலம் கடன்

வினா எண் **3404—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) தமிழகத்திலுள்ள ஆதி திராவிட மாணவர்கள் உயர்படிப்புக்காக (B.E., M.B.B.S., LAW) வங்கிகளில் கடன் கொடுப்பதைப் போன்று தாட்கோ மூலம் கடன் கொடுக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தமிழகத்தில் உள்ள ஆதி திராவிட மாணவ/ மாணவியர் உயர்படிப்பிற்காக (பிஇ, எம்பிபிஎஸ், சட்டம்) போன்ற படிப்பு படிக்கின்றவர்களுக்கு தாட்கோ மூலம் கடனுதவி வழங்கும் திட்டம் எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

427—

ஆதி திராவிடர்களுக்கு வீடு

வினா எண் 3406—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தாட்கோ மூலம் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தமிழகத்தில் தாட்கோ மூலம் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

428—

வன்கொடுமை தடுப்பு

வினா எண் **4119—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், ஆதி திராவிடர் நலத் துறை வன்கொடுமை தடுப்புக் குழு மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடி ஆலோசிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

கோவை மாவட்டத்தில் வன்கொடுமை தடுப்புச் சட்டப்படி மாவட்ட அளவிலான "விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம்" 27-3-2007 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது. இனி வருங்காலங்களில் 3 மாதத்திற்கொருமுறை மேற்படி குழுவின் கூட்டத்தைக் கூட்ட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

429—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் **4858—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், விளாமரத்துப்பட்டியிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், விளாமரத்துப்பட்டி கிராமத்தில் வீட்டுமனை இன்றி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

சுமார் 30 ஆதி திராவிடர் குடும்பங்கள் உள்ளன. இவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட நிலம் கையகப்படுத்தி தகுதியின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

430—

விடுகளைச் சீரமைத்தல்

வினா எண் 4890—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தலையுடையவர் கோவில் பத்து ஊராட்சியில் குரங்குப்புத்தூர் ஆதி திராவிடர் காலனி தெருவில் உள்ள பழுதடைந்த வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தலையுடையவர் கோவில் பத்து ஊராட்சியில் குரங்குப்புத்தூர் ஆதி திராவிடர் காலனி தெருவில் உள்ள பழுதடைந்த வீடுகளைச் சீரமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

431—

ஆடு வளர்க்க கடன்

வினா எண் 5552—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, வசந்தபுரம் கிராம மக்களுக்கு தாட்கோ மூலம் ஆடு வளர்க்க கடன் வழங்க அரசு முன்வருமா?

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, வசந்தபுரம் கிராம மக்கள் பழங்குடியின மக்களாக இருப்பின் ஆடு வளர்க்க நிதி உதவி கோரி தங்களது விண்ணப்பங்களை வேலூர் மாவட்ட தாட்கோ மேலாளரிடம் சமர்ப்பித்தால், பரிசீலனை செய்து தகுதியுள்ளவர்களுக்கு ஆடு வளர்க்க 100% மானியமாக நிதியுதவி விடுவித்திட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

432—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 6833—திரு. வை. காவேரி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எருமைப்பட்டி அருந்ததியர் மக்களுக்கு நிலம் கையப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி, எருமைப்பட்டி கிராமத்தில் யாரும் வீட்டுமனை கோரி விண்ணப்பிக்கவில்லை. எனவே, இவ்வூரில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் அவசியம் ஏற்படவில்லை.

433—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 6834—திரு. வை. காவேரி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2011 பிப்ரவரி 10

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கவுண்டனேரியில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் கிராமம், கவுண்டநேரி என்ற இடத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா கோரியவர்களில் தகுதியானர்கள் இல்லாததால் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் அவசியம் ஏற்படவில்லை.

434—

தங்கும் விடுதி

வினா எண் 6877—திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதி, பொய்யாப்பட்டி ஆதி திராவிடர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மாணவ, மாணவியர் தங்கும் விடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

மருங்காபுரி தொகுதி, பொய்யாப்பட்டி ஆதி திராவிடர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு புதிய விடுதிகள் துவங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

435—

வீட்டுமனைத் திட்டம்

வினா எண் 8716—திருமதி ஜி. லதா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) தாழ்த்தப்பட்ட வீடு இல்லாத மக்களுக்கு வழங்கப்படும் மூன்று சென்ட் வீட்டுமனைத் திட்டம், ஐந்து சென்ட் நிலமாக வழங்கிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

436—

உண்டு உறைவிடப் பள்ளி

வினா எண் 15149—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, சின்கோனாவில் உண்டு உறைவிடப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை சின்கோனா செட்டில்மெண்ட் பகுதியில் உண்டு உறைவிடப் பள்ளி தனியாகத் தொடங்க வேண்டிய அளவிற்கான மாணவர்கள் இல்லை என்பதனால் உண்டு உறைவிடப் பள்ளி தனியே அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

437—

மருத்துவ வசதி

வினா எண் 15434—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள மலைவாழ் மக்கள் குடியிருப்பு பகுதிக்கு நிரந்தரமாக மருத்துவ வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியிலுள்ள சத்துக்குழி, கீழ்பூனாச்சி, பன்னிக்குழி, உருமன்பாறை, பரமன் கடவு, சங்கரன்குடி, நெடுங்குன்றம், பாலக்கிணறு ஆகிய மலைவாழ் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்கு நிரந்தரமாக மருத்துவ வசதி செய்யப்பட்டு வருகிறது.

438—

சமுதாயக் கூடம்

வினா எண் 18599—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் ஒன்றியம், பழைய கோட்டை ஊராட்சி, கிழக்கு சேமலைவலசு ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் ஒன்றியம், பழைய கோட்டை ஊராட்சி, கிழக்கு சேமலைவலசு ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

439—

குடிநீர் வசதி

வினா எண் 19382—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கோட்டை கருங்குளம் ஆதி திராவிடர் காலனிக்கு குடிநீர் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கோட்டை கருங்குளம் ஆதி திராவிடர் காலனியில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, அந்த இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகளில் நீர்மூழ்கி மோட்டார் பொருத்தப்பட்டு, இக்காலனியில் பொருத்தப்பட்டுள்ள பிளாஸ்டிக் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பப்பட்டு, இக்காலனி மக்களுக்காக விநியோகிக்கப்படுகிறது.

440—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 19453—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி, மருவத்தூர் கிராம ஆதி திராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

441—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 19499—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கூடலூர் அருந்ததியர் வளவு மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கூடலூர் என்ற இடத்தில் உள்ள அருந்ததியர் வளவு பகுதியில் 40 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது வேறு நபர்கள் எவரும் வீட்டுமனைப் பட்டா கோரி விண்ணப்பிக்கவில்லை. எனவே, இவ்வூரில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் அவசியம் ஏற்படவில்லை.

442—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 19500—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி அருந்ததியர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், கன்னந்தேரி கிராமம் சர்வே எண் 24/1எ, பி-இல் 2 ஏக்கர் நிலம் 1997 ஆம் ஆண்டு கையகப்படுத்தப்பட்டு பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது. தற்போது இப்பகுதியில் வசிக்கும் மக்கள் எவரும் வீட்டுமனைப் பட்டா கோரவில்லை.

443—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 19501—திரு. வை. காவேரி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத், துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி நகரம், வீரப்பம்பாளையத்திலுள்ள அருந்ததியர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வீரப்பம்பாளையம் கிராமத்தில் வசிக்கும் அருந்ததியர் இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டதை எதிர்த்து நில உரிமையாளர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலவில்லை. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை விரைந்து பெற்று வீட்டுமனைப் பட்டா பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

444—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 20750—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

உசிலம்பட்டி தொகுதி, வடுகப்பட்டி ஊராட்சி, கொங்கபட்டி ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி வட்டம், உசிலம்பட்டி கிராமம், உட்கடை வடுகப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கொங்கபட்டியில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் ஏதுமில்லை.

445—

திருமண மண்டபம்

வினா எண் 20835—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கமலாபுரம் ஊராட்சி ஆதி திராவிடர் காலனி பகுதியில் திருமண மண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கமலாபுரம் ஊராட்சி ஆதி திராவிடர் காலனி பகுதியில் திருமண மண்டபம் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

446—

மனைப் பட்டா

வினா எண் 20836—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கமலாபுரம் ஊராட்சி, புதுக்காலனிப் பகுதியில் மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கமலாபுரம் ஊராட்சி, ஆதி திராவிடர் புதுக்காலனிப் பகுதியில் மனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. பயனாளிகளைத் தெரிவு செய்ய, கோட்டாட்சியர், ஓமலூர் வட்டாட்சியர், ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி மன்ற பிரதிநிதிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் மூலம் தேர்வு செய்யப்படுபவர்களுக்கு விரைவில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

447—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் **20872—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, வடபாளை பழங்குடியினருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதி, வடபாளை கிராமத்தில் 50 பழங்குடியினர் குடும்பங்கள் உள்ளன. இவர்கள் இருளர் நத்தத்தில் வசிக்கின்றனர். இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க முன்மொழிவு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. 2007-2008 ஆம் ஆண்டில் பழங்குடியினர் பயனாளிகளுக்கு தகுதி அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

448—

சமுதாயக் கூடம்

வினா எண் 20995—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, தெற்குசந்தனூர் கிராமத்திற்கு தாட்கோமூலம் சமுதாயக் கூடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, தெற்குசந்தனூர் கிராமத்திற்கு தாட்கோ மூலம் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

449—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 22923—திரு. வை. காவேரி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி வட்டம், கச்சுப்பள்ளி கிராம ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கிராமத்தில் 40 ஆதி திராவிடர் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. தற்போது வீட்டுமனை கோரி மனுக்கள் ஏதும் வரப்பெறவில்லை.

450—

திருமண மண்டபம்.

வினா எண் 23591—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சுல்லங்குடி ஊராட்சி, ஆலடிநத்தம், கீழமேல்குடி ஊராட்சி தெக்கூர் ஆகிய கிராமங்களில் தாட்கோ மூலமாக திருமண மண்டபங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, சுல்லங்குடி ஊராட்சி ஆலடிநத்தம், கீழமேல்குடி ஊராட்சி தெக்கூர் ஆகிய கிராமங்களில் தாட்கோ மூலம் திருமண மண்டபங்கள் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

451—

சமுதாயக் கூடம்

வினா எண் 23631—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் தூதை ஆதி திராவிடர்களின் குடியிருப்பில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் தூதை ஆதி திராவிடர்களின் குடியிருப்பில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

452—

மாணவியர் விடுதி

வினா எண் 23908—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலை அரசு கல்லூரியில் ஆதி திராவிடர் மாணவியர் விடுதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலை அரசு கல்லூரியில் ஆதி திராவிடர் மாணவியர் விடுதி அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

453—

தரம் உயர்த்துதல்

வினா எண் 24212—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், நெரும்பூர் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி. ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம் நெரும்பூர் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

454—

உண்டு உறைவிடப் பள்ளி

வினா எண் **24311—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்தில் இருளர் மக்களின் குழந்தைகள் படிக்க உண்டு உறைவிடப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்தில் காஞ்சிபுரம் மாவட்டம் உண்டு உறைவிடப்பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

455—

சமுதாயக் கூடம்

வினா எண் 25671—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, வங்கனூர் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

பள்ளிப்பட்டு தொகுதி, வங்கனூர் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

456—

பட்டா

வினா எண் 26681—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, முள்ளிக்கொளத்தூர் ஊராட்சி, இருளர் பகுதிக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, முள்ளிக்கொளத்தூர் ஊராட்சி புல எண் 114-ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் 18 இருளர் குடும்பங்களுக்கு தலா 2 1/2 சென்ட் வீதம் வீட்டுமனைப் பட்டா 21-5-2007 அன்று வழங்கப்பட்டுள்ளது.

457—

உயர்நிலைப் பள்ளி

வினா எண் 27843—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) ஆலங்குடி தொகுதி, முள்ளிங்குறிச்சி ஆதி திராவிடர் மகளிர் உயர்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, முள்ளிங்குறிச்சி ஆதி திராவிடர் மகளிர் உயர்நிலைப் பள்ளி துவங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

458—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 27854—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், பரவாய் ஊராட்சி சின்ன பரவாய் ஆதி திராவிடர்களுக்கு இலவச குடியிருப்பு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், பரவாய் ஊராட்சி, சின்ன பரவாய் கிராம ஆதி திராவிடர்களுக்கு இலவச குடியிருப்பு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

459—

கட்டடம்

வினா எண் 27855—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதி, வேப்பூரில் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் மாணவர் விடுதி கட்ட ரூ.31.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு தாட்கோவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, விரைவில் கட்டடம் கட்டும் பணி துவங்கும் என தெரிவித்துக்கொள்கின்றேன்.

460—

சமுதாயக் கூடம்

வினா எண் 28092—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் ஒன்றியம், நெடுவாசல் கிழக்கு ஊராட்சி, அம்பேத்கார் நகரில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் ஒன்றியம், நெடுவாசல் கிழக்கு ஊராட்சி, அம்பேத்கார் நகரில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

461—

பட்டா

வினா எண் 28939—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கல்லாபுரம் ஊராட்சி, பூச்சிமேடு பகுதியிலுள்ள பழங்குடியினர், ஆதி திராவிடர்களுக்கு நிலம் கையகப்படுத்த பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, கல்லாபுரம் ஊராட்சி, பூச்சிமேடு பகுதியில் வீட்டுமனை இல்லாத சுமார் 50 பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் குடும்பங்கள் உள்ளனர். இவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட தகுதியான நிலம் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

462—

மனைப் பட்டா

வினா எண் 28943—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், சாலையூர் கிராமம் (சின்னப்பட்டி) ஆதி திராவிடர்களுக்கு மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம் சாலையூர் (சின்னப்பட்டி) கிராமத்தில் சுமார் 55 ஆதி திராவிடர் குடும்பங்கள் வீட்டுமனை இல்லாதவர்கள் உள்ளனர். இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதியான நிலத்தை தனியார் பேச்சு வார்த்தை மூலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சட்டமன்ற பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

463—

சமுதாயக் கூடம்

வினா எண் 28975—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, பூவரசன்குடி ஊராட்சியில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஆலங்குடி தொகுதி, பூவரசன்குடி ஊராட்சியில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

464—

மாணவியர் விடுதி

வினா எண் 28976—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பங்குடியில் ஆதி திராவிடர் மாணவியர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஆலங்குடி தொகுதி, கறம்பங்குடியில் ஆதி திராவிடர் மாணவியர்களுக்கு புதிய விடுதி துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

465—

உண்டு உறைவிடப் பள்ளி

வினா எண் 31056—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, கொடகரை மலை கிராமத்தில் பழங்குடியினருக்கு உண்டு உறைவிடப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, மஞ்சுகொண்டப்பள்ளி, தொட்டமஞ்சு ஆகிய இடங்களை ஒருங்கிணைத்து, பெட்டமுகிலாளம் பகுதியில் ஒரு உண்டு உறைவிடப் பள்ளி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதால், கொடகரைமலையில் உண்டு உறைவிடப் பள்ளி தொடங்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

466—

மாணவர் விடுதி

வினா எண் 31057—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் ஆதி திராவிட மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2008-2009-ஆம் ஆண்டில், தேன்கனிக்கோட்டையில் புதிய ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி துவங்க ஆவன செய்யப்படும்.

467—

தரம் உயர்த்துதல்

வினா எண் 31485—திரு. என். ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டையில் ஆதி திராவிடர் நலத் துறையின் கீழ் இயங்கும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டையில் ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

468—

ஆதி திராவிடர் நலப் பள்ளி

வினா எண் 31535—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, ஒழலூர் ஊராட்சியில், ஆதி திராவிடர் நலப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, ஓழலூர் ஊராட்சியில் ஆதி திராவிடர் நலத் துவக்கப் பள்ளி இத்துறையின்கீழ் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

469—

உண்டு உறைவிடப் பள்ளி

வினா எண் 31797—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், நல்லூர்கந்தம்பாளையத்தில் ஆதி திராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு உண்டு, உறைவிடப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஒன்றியம், நல்லூர் கந்தம்பாளையத்தில் புதியதாக ஆதி திராவிட மாணவ, மாணவியர்களுக்கு உண்டு உறைவிடப் பள்ளி ஏற்படுத்த வழிவகை இல்லை.

470—

தரம் உயர்த்துதல்

வினா எண் 32793—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம் ஜடையனூர் அரசினர் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், ஜடையனூர் அரசினர் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தச் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீனையில் இல்லை.

471—

தேர்வு மையம்

வினா எண் 33920—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொண்டல் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் தேர்வு மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொண்டல் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் 80 மாணவர்கள் மட்டுமே இவ்வாண்டில் தேர்வு எழுதுவதால், நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி குறைந்தபட்சம் இருக்கவேண்டிய 150 மாணவர்களின் எண்ணிக்கை இல்லாததால் இப்பள்ளியில் தேர்வு மையம் ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்க வேண்டிய அவசியம் தற்பொழுது ஏதுமில்லை.

2011 பிப்ரவரி 10]

472—

மாணவியர் விடுதி

வினா எண் 33952—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பொ. மல்லாபுரம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, பொ. மல்லாபுரத்தில் ஆதி திராவிடர் நல மாணவியர் புதிய விடுதி துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை.

473—

தரம் உயர்த்துதல்

வினா எண் 33954—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பேரேரி புதூர், கல்லாத்துப்பட்டி, எலந்தகுட்டப்பட்டி அரசு உண்டு, உறைவிட துவக்கப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

மொரப்பூர் சட்டமன்ற தொகுதி, பேரேரி புதூர், கல்லாத்துப்பட்டி, எலந்தக்குட்டப்பட்டி அரசு உண்டு உறைவிடப் பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக 2008-2009-ம் ஆண்டில் நிலை உயர்த்த அனைவருக்கும் கல்வி (எஸ்.எஸ்.ஏ) மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு தகுந்த கருத்துருக்கள் பழங்குடியினர் நல ஆணையர் அவர்களால் அனுப்பப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 10

474—

சமுதாயக் கூடம்

வினா எண் 33969—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டம், கொமரலிங்கம் பேரூராட்சியில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை வட்டம், கொமரலிங்கம் பேரூராட்சியில் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

475—

சமுதாயக் கூடம்

வினா எண் 33970—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், தேவலூர்புதூர் ஊராட்சி, ஆண்டியூரில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், தேவலூர்புதூர் ஊராட்சி, ஆண்டியூரில் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன் மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

476—

தரம் உயர்த்துதல்

வினா எண் 35106—திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குன்னூர் தொகுதி, கரிக்கையூர் பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி கரிக்கையூர் பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக 8-6-2007 அன்று நிலை உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

477—

தங்கும் உணவு விடுதி

வினா எண் 38324—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, வேம்பத்தூரில் ஆதி திராவிட மாணவ, மாணவியர்களுக்கு தங்கும் உணவு விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, வேம்பத்தூரில் ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கு புதிய விடுதி துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் ஏதும் இல்லை.

478—

உண்டு உறைவிடப் பள்ளி

வினா எண் 38722—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கேஎன். புதூரில் உண்டு, உறைவிடப்பள்ளி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி, கே.என். புதூரில், பழங்குடியினர் மக்களின் எண்ணிக்கை அதிகமாக இல்லாமையாலும், அங்கு தற்போது 24 மாணவர்கள் அருகாமையில் உள்ள ஊராட்சி/அரசுப் பள்ளிகளில் கல்வி பயில்வதாலும், அப்பகுதியில் புதிதாக பழங்குடியினர் உண்டு உறைவிட துவக்கப்பள்ளி ஏற்படுத்த வேண்டிய சாத்தியக்கூறுகள் எழவில்லை.

479—

தொழிற்பேட்டை

வினா எண் 38927—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) மானாமதுரை தொகுதியில் படித்த ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தாட்கோமூலம் தாட்கோ பனியன் தொழிற்பேட்டை துவக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் தாட்கோ மூலம் பனியன் தொழிற்பேட்டை அமைப்பது குறித்து திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

480—

மாணவர் விடுதி

வினா எண் 38936—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல் கிராமத்தில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல் கிராமத்தில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை.

481—

தரம் உயர்த்துதல்

வினா எண் 39978—திரு. வ. முல்லை வேந்தன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, போதக்காடு உண்டு, உறைவிட தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்திடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில், மொரப்பூர் தொகுதியில், போதக்காடு கிராமத்தில், கல்வித் துறைமூலம் ஆரம்பப் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளி உண்டு உறைவிட தொடக்கப் பள்ளி அல்ல. இந்த ஊருக்கு அருகாமையில் ஆதி திராவிடர் நல ஆரம்பப் பள்ளி மாரியம்பட்டி என்னும் கிராமத்தில் இயங்கி வருகிறது. இந்த ஆதி திராவிடர் நல ஆரம்பப் பள்ளியை உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

482—

தொழிற்பேட்டை

வினா எண் 49263—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசியில் தாட்கோ மூலம் பனியன் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாட்கோமூலம் அவினாசி தொகுதியில் பனியன் தொழிற்பேட்டை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

483—

சமுதாய நலக் கூடம்

வினா எண் 49416—திரு. கு.ப. வேலுமணி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, எட்டிமடை பேரூராட்சி 4-வது வார்டு ஆதி திராவிடர் பகுதியில் சமுதாய நலக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, எட்டிமடை பேரூராட்சி 4வது வார்டு ஆதி திராவிடர் பகுதியில் சமுதாய நலக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

484—

சமுதாயக் கூடம்

வினா எண் 49435—திருமதி மு. சந்திரா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசபாளையம் தொகுதி, ஆதி திராவிடர் மக்கள் வாழும் கொடுக்காம்பட்டி, கணபதி சுந்தர நாச்சியார்புரம் கிராமங்களுக்கு சமுதாயக் கூடம் புதிதாக கட்டி கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

இராசபாளையம் தொகுதி, ஆதி திராவிடர் மக்கள் வாழும் கொடுக்காம்பட்டி, கணபதி சுந்தர நாச்சியார்புரம் கிராமங்களுக்கு சமுதாயக் கூடம் புதிதாக கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

485—

சமுதாயக் கூடம்

வினா எண் 49609—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், ஏகளூர் மற்றும் கோவில்பாளையம் ஆதி திராவிடர் தெருவில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், ஏகளூர் மற்றும் கோவில்பாளையம் ஆதி திராவிடர் தெருவில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

486—

இலவச திருமண மண்டபம்

வினா எண் 51167—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் மற்றும் கடவூர் ஒன்றியங்களில் உள்ள ஆதி திராவிடர் காலனிகளில் இலவச திருமண மண்டபங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் மற்றும் கடவூர் ஒன்றியங்களில் உள்ள ஆதி திராவிடர் காலனிகளில் இலவச திருமண மண்டபங்கள் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

487—

உண்டு உறைவிடப் பள்ளி

வினா எண் 56876—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் ஆதி திராவிட மாணவ/மாணவிகளுக்கு உண்டு உறைவிடப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிட மாணவ/மாணவிகளுக்கு உண்டி உறைவிடப் பள்ளி அமைக்கப்படுவதில்லை. பழங்குடியின மாணவ/மாணவிகளுக்கு மட்டுமே உண்டு உறைவிடப் பள்ளி அமைக்கப் படுகிறது.

488—

சமுதாயக் நலக் கூடம்

வினா எண் 61375—திரு. த. தியோடர் ரெஜினால்டு: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பத்மநாபபுரம் தொகுதி, குமாரபுரம் பேரூராட்சியில் புதிய ஆதி திராவிடர் காலனியில் சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

பத்மநாபபுரம் தொகுதி, குமாரபுரம் பேரூராட்சியில் புதிய ஆதி திராவிடர் காலனியில் சமுதாய நலக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

489—

மீன்பிடித் துறைமுகம்

வினா எண் 336—திரு. குத்தாலம் க. அன்பழகன்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணியை அரசு விரைந்து செயல்படுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மீன்பிடித் துறை முகம் அமைத்திடும் பொருட்டு மாதிரி ஆய்வுப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

490—

மீன் எண்ணெய்த் தொழிற்சாலை

வினா எண் 353—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறையிலுள்ள சோலையார் அணைக்கு அருகிலும், ஆழியார் நகரிலும் மீன் எண்ணெய் தொழிற்சாலைகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், 2006ஆம் ஆண்டு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறையிலுள்ள சோலையார் அணைக்கு அருகிலும், ஆழியார் நகரிலும் மீன் எண்ணெய் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

491—

குளிர்பதன அறை

வினா எண் **682—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரம் பகுதியில் மீனவர்களுக்காக மீன் இறங்குதளம் மற்றும் குளிர்பதன அறை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், 2006ம் ஆண்டு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மாமல்லபுரம் பகுதியில் மீனவர்களுக்காக மீன் இறங்குதளம் மற்றும் குளிர்பதன அறை அமைப்பது தொடர்பான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

492—

மீனவர் கூட்டுறவுச் சங்கம்

வினா எண் **799—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் மீனவ மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

மீனவ மகளிர் சுய உதவி குழுக்கள்மூலம் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை நடத்திட இயலாது.

493—

நியாய விலை மண்ணெண்ணெய்

வினா எண் **1169—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

தமிழகத்தில் கட்டுமரத்தில் இயந்திரம் பொருத்தி மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்களுக்கு மாதந்தோறும் 400 லிட்டர் மண்ணெண்ணெய் நியாய விலையில் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

அரசாணை (3டி) எண் 38, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 26-10-2005ல் காஞ்சிபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த கட்டுமர மீனவர்களுக்கு லிட்டர் ரூ.27.60 என்ற விலையில் மாதம் ஒன்றுக்கு 100 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் மூன்று இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

ஆனால், இவ்வாறு வழங்கப்பட்ட மண்ணெண்ணெயின் விலை நிர்ணயம் குறித்தும் இலாபத் தொகையை அரசு கணக்கில் செலுத்துவது குறித்தும் மத்திய அரசிடம் தெளிவுரை கோரப்பட்டுள்ளதால் மண்ணெண்ணெய் வழங்குவது தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தெளிவுரை பெறப்பட்டதும் மீண்டும் மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

494—

உயர்ந்த ரக மீன்கள்

வினா எண் 1200—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆழியார் அணையில் உயர்ந்த ரக மீன்கள் அழிந்து வருவதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

வால்பாறை தொகுதி, ஆழியார் அணையில் உயர்ந்த ரக மீன்கள் அழிய வாய்ப்பில்லை. இந்த அணையில் மீன்பிடிக்கும் மீனவர்களின் எண்ணிக்கை, அவர்களது மீன்பிடிக்கும் வலைகள்

2011 பிப்ரவரி 10]

போன்றவை மீன்வளத் துறை அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மேலும் மீன் குஞ்சுகள் அதிக அளவில் இருப்பு செய்வதால் உயர்ந்த ரக பெருங்கெண்டை மீன்கள் நன்கு வளர்ந்து மீன் உற்பத்தி பெருக்க வழி செய்யப்படுகிறது.

495—

மீன் விற்பனை நிலையம்

வினா எண் 1201—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, சோலையார் அணைக்கு அருகில் மீன் விற்பனை நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) ஆம் (ஆ) சோலையார் அணையில் பிடிக்கப்படும் மீன்களை அணைக்கு அருகில் உள்ள பொதுப் பணித் துறைக்கு சொந்தமான இடத்தில் தற்காலிகமாக வைத்து மீன்வளத் துறைமூலம் விற்பனை செய்யப்படுகிறது. நிரந்தரமாக மீன் விற்பனை நிலையம் அமைத்து, உள்நாட்டு மற்றும் கடல் மீன்கள் போன்றவற்றை விற்பனை செய்திட சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்படும்.

496—

மீன்கள் கண்காட்சி

வினா எண் 1202—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் நகர் மீன்கள் கண்காட்சியை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் நகர் மீன் கண்காட்சியினை தற்சமயம் விரிவுபடுத்தக்கூடிய திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

497—

மீன்வளக் கண்காட்சி

வினா எண் 1203—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, சோலையார் மற்றும் பரம்பிக்குளம் அணை அருகில் மீன்வளக் கண்காட்சி ஒன்றை நிரந்தரமாக ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோலையார் அணைப்பகுதி மிகவும் குளிர் பிரதேசமாக உள்ளதால் அங்கு அருங்காட்சியகம் அமைத்திட சாத்தியக் கூறுகள் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

498—

கட்லா வகை மீன்கள்

வினா எண் 1205—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் மற்றும் பரம்பிக்குளம் அணைகளில் ஜிலேபி, விரால் மற்றும் கெண்டை மற்றும் கட்லா வகை மீன்களை அதிக அளவு உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆழியார் மற்றும் பரம்பிக்குளம் நீர்த்தேக்கத்தில் திலேப்பியா மீன்களின் இனவிருத்தி இயற்கையாகவே பெருகி வருகிறது. மேலும், விரால் இனம் இந்த அணையிலும், பரம்பிக்குளத்திலும் இயற்கையாக உற்பத்தியாகிறது. மேலும் கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதா கெண்டை ஆகிய மீன் குஞ்சுகளும் ஆழியார் நகரில் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டு வரப்படுகிறது.

499—

மீன்பிடித் துறைமுகம்

வினா எண் 1468—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் மீன்பிடித் துறைமுகம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது தொடர்பான திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

500—

படகு நிறுத்தும் தளம்

வினா எண் 1481—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கிராமத்தில் படகு நிறுத்தும் தளம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கிராமத்தில் படகு நிறுத்தும் தளம் அமைப்பது தொடர்பான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

பட்டியல்–12

1—

நீர்த்தேக்கத் திட்டத்தை விரிவுபடுத்துதல்

வினா எண் 196—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொதியம்பள்ளம் நீர்த்தேக்கத் திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

பொதியம்பள்ளம் நீர்த்தேக்கத் திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

2—

அணை கட்டுதல்

வினா எண் 199—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, அ. பள்ளிப்பட்டு அருகே அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, அ. பள்ளிப்பட்டு அருகே அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

கால்வாய் தூர் வாருதல்

வினா எண் 2004—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேடகட்டமடுவு தரப்பு தாம்பல் கிராமம், தென்பெண்ணை ஆற்று கால்வாய் தூர் அடைந்துள்ளதை சீர்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேடகட்டமடுவு தரப்பு தாம்பல் கிராமம், தென்பெண்ணை ஆற்று கால்வாய் 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.2 இலட்சம் மதிப்பில் சீரமைக்கப்பட்டுள்ளது.

4—

கால்வாய் வெட்டுதல்

வினா எண் 1959—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலில் கலக்கும் தண்ணீரை வறண்ட இராதாபுரம் பகுதிக்குக் கொண்டுவர தோவாளை கால்வாய்க்கு இணையாக வெள்ளப் பெருக்கு கால்வாய் வெட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலில் கலக்கும் தண்ணீரை வறண்ட இராதாபுரம் பகுதிக்குக் கொண்டுவர தோவாளை கால்வாய்க்கு இணையாக வெள்ளப் பெருக்கு கால்வாய் வெட்டுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

வாய்க்கால் அமைத்தல்

வினா எண் 3749—திரு அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், தொப்பையாறு நீர்த்தேக்க கால்வாயில் இருந்து துணை கால்வாய் அமைத்து சேலம்-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை 7 நெடுஞ்சாலை கிழக்கு

[2011 பிப்ரவரி 10

புறமாக வணங்கொண்டா மலை அருகில் குன்டுக்கல் ஏரி வரை புதிய வாய்க்கால் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

அரசின் பரிசிலனையில் இல்லை.

6—

காவல் நிலையம் கட்டுதல்

வினா எண் 5034—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வேம்பத்தூர், கொந்தகை ஆகிய இடங்களில் காவல் நிலையம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் 5 உட்கோட்டங்கள் உள்ளன. மானாமதுரை உட்கோட்டத்தில் மானாமதுரை, திருப்பாச்சேத்தி, பாலையனூர், சிப்காட், திருப்புவனம், பூவந்தி என 6 காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. மானாமதுரையில் ஒரு மகளிர் காவல் நிலையமும் இயங்கி வருகின்றது. தற்சமயம் நிலப்பரப்பு, மக்கள் தொகை எண்ணிக்கை, குற்ற நிகழ்வுகளின் எண்ணிக்கை சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் மற்றும் அப்பகுதிகளில் ஏற்படும் பதட்ட சூழ்நிலைக்கேற்ப மேற்படி காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2. மூன்றாவது காவல் ஆணையம் மற்றும் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைப்படி அடுத்த 5 ஆண்டுகளுக்கு புதிய காவல் நிலையம் அமைக்க மிக மிக அவசியம் எனக் கருதப்படும் இடங்களைத் தவிர பிற இடங்களில் திறக்க வேண்டியதில்லை எனவும் தேவையானால், தற்போதுள்ள காவல் நிலையங்களின் தரத்தை உயர்த்தலாம் என்றும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நிலைமையினைப் பரிசிலனை செய்யலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளது.

2011 பிப்ரவரி 10]

அதற்கான உரிய அரசாணையும் அரசாணை (நிலை) எண் 733 உள் (காவல் 14) துறை, நாள் 27-06-2008 வழங்கப்பட்டுவிட்டது.

3. மேற்படி சூழ்நிலையில் வேம்பத்தூர், கொந்தகை ஆகிய இடங்களில் காவல் நிலையம் அமைப்பது குறித்து கருத்துரு ஏதும் பரிசிலனையில் இல்லை.

7—

காவலர் குடியிருப்புக் கட்டுதல்

வினா எண். 5863—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டை, குரிசிலாப்பட்டு காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடமும், காவலர் குடியிருப்பும் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வேலூர் மாவட்டத்தில் உள்ள ஜோலார்பேட்டை காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

2. திருப்பத்தூர் தொகுதியிலுள்ள குரிசிலாப்பட்டு காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான பழைய கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

3. ஜோலார்பேட்டை காவல் நிலையத்தைச் சேர்ந்த பணியாளர்களுக்கு 40 குடியிருப்புகள் (1 ஆய்வாளர், 3 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 36 தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்கள்) கட்ட அரசாணை (நிலை) எண் 1475, உள் (காவல் 10) துறை, நாள் 19-10-2007-ல் ஆணை வெளியிடப்பட்டு, அதன் கட்டுமானப் பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, தொடர் நடவடிக்கையில் உள்ளது.

4. குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தைச் சேர்ந்த

[2011 பிப்ரவரி 10

பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கான நிலம் தற்போது கைவசம் இல்லை. நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தகுதியான நிலம் வருவாய்த் துறையினரால் வழங்கப்பட்டவுடன், ஆண்டுதோறும் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் வருங்காலத்தில் கட்டித்தர பரிசீலனை செய்யப்படும்.

8—

வாய்க்காலைத் தூர் வாருதல்

வினா எண் 8266—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, வெள்ளக்கோவில் கிளை வாய்க்காலைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

காங்கேயம் தொகுதி, வெள்ளக்கோவில் கிளை வாய்க்கால் ஜூன் திங்கள் 2006-ல் பராமரிப்பு நிதி மூலம் தூர் வாரப்பட்டது.

9—

தூர் வாருதல்

வினா எண் 8367—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈச்சம்பாடி அணைக்கட்டின் இடதுபுறக் கால்வாயைத் தூர்வாரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஈச்சம்பாடி அணைக்கட்டின் இடதுபுறக் கால்வாயைத் தூர்வாரும் பணியானது கடந்த 2005-2006 ஆம் ஆண்டில் ரூ. 3.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, தற்போது பாசனத்திற்காக தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. எனவே, தற்போது அவசியம் இல்லை.

2011 பிப்ரவரி 10]

10—

தூர் வாருதல்

வினா எண் 9260—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியாறு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தூர்வாரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வாணியாறு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தூர்வாரும் செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

11—

அணை கட்டுதல்

வினா எண் 13492—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேப்பாடி ஆற்றின் குறுக்கே ஆணை மருவில் அணை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வேப்பாடி ஆற்றின் குறுக்கே ஆணை மருவில் அணை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

12—

கால்வாய் மூலம் பாசன வசதி

வினா எண் 13493—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

மொரப்பூர் தொகுதியில் ஈச்சம்பாடி அணையிலிருந்து கால்வாய் மூலம் பாசன ஏரிகளுக்குத் தண்ணீர் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஈச்சம்பாடி அணையிலிருந்து கால்வாய் மூலம் பாசன ஏரிகளுக்குத் தண்ணீர் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

13—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 13755—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, ஏழுதேசம் ஊராட்சி, பருத்திக் கடலில் தாமிரபரணி ஆற்றில் தடுப்பணை (செக்டாம்) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, ஏழுதேசம் ஊராட்சி, பருத்திக் கடலில் தாமிரபரணியாற்றில் தடுப்பணை (செக்டேம்) அமைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை.

14—

அணைக்கட்டு கட்டுதல்

வினா எண் 14651—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) பவானி தொகுதிக்குட்பட்ட பூவாச்சி கிராமம், கத்திரியான் காடு அருகில் சித்தார் ஓடையில் செக்டேம் (அணைக்கட்டு) கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பூவாச்சி கிராமத்தில் க.ச.எண் 63, மற்றும் 128-ல் சித்தார் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் திட்டத்திற்கு நேரடி பாசன முறைக்கு வாய்ப்பில்லாததால் மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு மறுக்கப்பட்ட நிலையில் இத்திட்டம் கைவிடப்பட்டது.

15—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 14652—திரு. கே.வி. ராமநாதன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பவானி தொகுதி, சலங்கபாளையம் கிராமம், தர்மாபுரியில் பவானி கவுந்தப்பாடி சாலையிலிருந்து எஸ்.எம்.ஐ.பி. கசிவு நீர் வாய்க்காலை ஒட்டி, ஈரோடு—சத்தி ரோடு வரை அமைந்துள்ள சாலையை புதிய தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி, சலங்கபாளையம் கிராமம், தர்மாபுரியில் பவானி கவுந்தப்பாடி சாலையிலிருந்து எஸ்.எம்.ஐ.பி. கசிவு நீர் வாய்க்காலை ஒட்டியுள்ள சாலையானது வாய்க்காலில் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுப் பணிகளுக்காக துறையின் வாகனங்கள் மட்டுமே செல்லத்தக்க வகையில் அமைக்கப்பட்ட பாதையாகும். இப்பாதையினை தார்ச் சாலையாக மாற்றி பொதுப் பயன்பாட்டிற்கு பயன்படும் வகையில் வழங்க இயலாது.

16—

கால்வாய் அமைத்தல்

வினா எண் 18703—திரு ப. டில்லி பாபு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டி பட்டி வட்டம், தென்கரைகோட்டை அருகில் வரட்டன் ஆற்றிலிருந்து கொளகம்பட்டி ஏரி வரை புதியதாக கால்வாய் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டி பட்டி வட்டம், தென்கரைகோட்டை அருகில் வரட்டன் ஆற்றிலிருந்து கொளகம்பட்டி ஏரி வரை புதியதாக கால்வாய் அமைக்கும் திட்டம் பொருளாதார ரீதியாக சாத்தியமில்லை.

17—

புதிய ஏரி அமைத்தல்

வினா எண் 18754—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஊராட்சி ஒன்றியம், கோன்காடு அருகில் புதிய ஏரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தருமபுரி ஊராட்சி ஒன்றியம், கோன்காடு அருகில் புதிய ஏரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

18—

சிமெண்ட் தொழிற்சாலை துவக்குதல்

வினா எண் 22626—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் சிமெண்ட் ஆலை அமைப்பது குறித்த திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

19—

காவலர் குடியிருப்பு கட்டுதல்

வினா எண் 23381—திரு. மா. ராஜசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் தொகுதி, தொட்டியம் காவல் நிலையக் காவலர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொட்டியம் காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கான புதிய கட்டடம் வருங்கால நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசிலனை செய்யப்படும்.

20—

சிமெண்ட் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 28268—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதி, குன்னம் வட்டம், ஓலைப்பாடி ஊராட்சியில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

வரகூர் தொகுதியில் சிமெண்ட் ஆலை அமைப்பது குறித்த திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

21—

அணை கட்டுதல்

வினா எண் 28290—திரு. அ. தமிழரசி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடி தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

போடி தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே அணை கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

22—

அணை கட்டுதல்

வினா எண் 29556—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நாகாலம்மன் கோம்பை மாரியம்மன் கோவில் பள்ளத்தின் குறுக்கே அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நாகாலம்மன் கோம்பை மாரியம்மன் கோவில் பள்ளத்தின் குறுக்கே வனத் துறையால் ஏற்கெனவே ஒரு தடுப்பணை கட்டப்பட்டுள்ளதால், மற்றொரு அணை கட்ட சாத்தியமில்லை.

2011 பிப்ரவரி 10]

23—

தமிழ் பட்டதாரிகளுக்கு இட ஒதுக்கீடு

வினா எண் 31843—திரு. சை. சையது கௌஷ்பாஷா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலை வாய்ப்பில் தமிழ்ப் பட்டதாரிகளுக்கு அரசுப் பணியில் இட ஒதுக்கீடு அல்லது முன்னுரிமை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழ்நாட்டில் அரசுப் பணியிடங்களில் தேர்வாணையத்தின் அகப்பாட்டு எல்லைக்குள் வருகின்ற ஒழிவிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நிரப்பப்படுகின்றன. சில பிரிவுகளுக்கான நேரடி நியமனங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாயிலாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. பிற பட்டதாரிகளைப் போல தமிழ்ப் பட்டதாரிகளும் வாய்ப்புகளைப் பெறுகின்றனர். இட ஒதுக்கீடு (அல்லது) முன்னுரிமை வழங்கும் கருத்துரு எதுவும் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையில் இல்லை.

24—

இசைப் பள்ளி துவங்குதல்

வினா எண் 35816—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் இசைப் பள்ளி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில் இசைப் பள்ளி துவங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

25—

மதிகெட்டான் கால்வாய் திட்டம்

வினா எண் 42439—திரு. ப. டில்லிபாபு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம் சில ஊராட்சிகள் பாசன வசதி பெற மதிகெட்டான் கால்வாய், திட்டத்தை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், சில ஊராட்சிகள் பாசன வசதி பெற, மதிகெட்டான் கால்வாய் திட்டத்தை அமல்படுத்த சாத்தியக்கூறு இல்லை.

26—

தூர் வாருதல்

வினா எண் 45047—திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, சண்முகா நதியில் பக்தர்கள் பயன்படுத்தும் பகுதிகளில் தூர்வாரி சுத்தம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

அறுபடை வீடுகள் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சண்முகா நதியில் பக்தர்களுக்கான படித்துறைகள், குளியல் மறைவுகள் மற்றும் நடைபாதை ஆகியவற்றினை பொதுப் பணித் துறையின் தொழில்நுட்ப ஆலோசனையோடு தடையில்லா சான்று வழங்கி, 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

27—

நீர்த்தேக்கத்தைப் புதுப்பித்தல்

வினா எண் 48704—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, பாளையம்புதூர் ஊராட்சி, மாரியம்மன் நகர் நீர்த்தேக்கத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தருமபுரி தொகுதி, பாளையம்புதூர் ஊராட்சி, மாரியம்மன் நகர் நீர்த்தேக்கத்தைப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

28—

இசைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர்

வினா எண் 56248—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர், அரசு இசைப் பள்ளியிலுள்ள பழங்கால சிலைகளைப் பாதுகாக்க, சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சேலம், பேர்லேண்டஸ் கூட்டுறவு வீடுகட்டும் சங்கக் கட்டடத்தில் சேலம் அரசு அருங்காட்சியகம் இயங்கி வருகிறது. அரசு அருங்காட்சியகத்தில் உள்ள பழங்கால சிலைகளைப் பாதுகாக்க வேண்டி சுற்றுச்சுவர் கட்டுவது குறித்து அச்சங்கம் பரிசிலித்து வருகிறது. அதற்கான விலை மதிப்பீடு பட்டியல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 10

29—

இசைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 59089—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் இசைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் தற்பொழுது தமிழிசைக் கல்லூரி துவக்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள இசைக் கல்லூரிகளுக்குக் கட்டமைப்பு வசதிகளும், நிர்வாகச் செம்மைக்கான நெறிமுறைகளும் வகுப்பதில் அரசு முனைந்துள்ளதால், அவற்றின் பணிகளைத் திடப்படுத்திய பின்னரே புது இசைக் கல்லூரிகள் குறித்து பரிசீலிக்க இயலும்.

30—

அணை கட்டுதல்

வினா எண் 59257—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பள்ளத்தின் குறுக்கே அணைகட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மொரப்பூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பள்ளத்தின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

31—

காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்டுதல்

வினா எண் 63268—திரு. மா. தண்டபாணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் காவல் துணை கண்காணிப்பாளருக்கு இல்லத்துடன் கூடிய புதிய அலுவலகக் கட்டடம் ரூ. 20.52 இலட்சம் செலவில் கட்டுவதற்கு, அரசாணை (நிலை) எண். 512, உள் (காவல் 10) துறை, நாள் 26-05-2010-ல் ஆணை வெளியிடப்பட்டு, அதன் கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

32—

விருதுகள் வழங்குதல்

வினா எண் 66460—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாமல்லபுரம் நாட்டிய விழாவில், கலை பண்பாட்டில் சிறந்து விளங்குபவர்களுக்கு மாமல்லன் பெயரில் விருதுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கலைப் பண்பாட்டில் தமிழகத்தில் தலைசிறந்த கலைஞர்களைத் தெரிவு செய்து "மாமல்லன் விருதுகள்" வழங்குதல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

33—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 69068—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரம் நகரில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் பகுதியை சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் திருக்கழுக்குன்றம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் செயல்பட்டு வருகிறது. அங்குள்ள ஊர்தியைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

34—

சிமெண்ட் ஆலை அமைத்தல்

வினா எண் 70460—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் சிமெண்ட் ஆலை அமைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் சிமெண்ட் ஆலை அமைப்பது குறித்த திட்டம் அரசிடம் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

35—

காவல் நிலையம்

வினா எண். 70715—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோயிலுக்கு வரும் மக்கள் நெரிசலைத் தடுக்க போக்குவரத்து காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழகத்தில் மாநகரங்கள், மாவட்ட தலைநகரங்கள், உட்கோட்ட தலைநகரங்கள் மற்றும் நகராட்சிகளில் வாகனப் போக்குவரத்து அதிகமாகவும், நெரிசல்கள் அதிகமாகவும் உள்ள பகுதிகளில் போக்குவரத்து காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. மேற்கூறிய சூழ்நிலையில் மேல்மலையனூரில் போக்குவரத்து காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

36—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 71236—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூரில் தீயணைப்பு நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் பகுதியை சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் 3 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு

[2011 பிப்ரவரி 10

வருகின்றன. எனவே அங்குள்ள ஊர்தியைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப்பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

37—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 73799—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தொப்பூர் பகுதியில் தீயணைப்பு நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தொப்பூர் பகுதியினைச் சுற்றி 25 கி.மீ. தொலைவில் தருமபுரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் செயல்பட்டு வருகிறது. அங்குள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப்பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நியமனம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

38—

படகு கட்டும் தொழிற்சாலை

வினா எண் 75480—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கிழக்கரையில் படகு கட்டும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், கிழக்கரையில் படகு கட்டும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

39—

தீயணைப்பு நிலையம்

வினா எண் **81256—திரு. வி.எ.டி. கலியவரதன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் நகரில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி, முகையூரைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் மூன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்குள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

40—

மாற்றுத் திறனாளிகள் பள்ளி

வினா எண் **84231—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

மானாமதுரை தொகுதி மானாமதுரையில் மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசுப் பள்ளி தற்போது துவக்கும் உத்தேசம் இல்லை.

41—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 93245—திரு. கோ. அரி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், மணவூரில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, மணவூர் பகுதியைச் சுற்றி 25 கி.மீ. தொலைவிற்குள் இரண்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்குள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

42—

எல்லை பகுதியில் சிறப்புக் காவல்படை

வினா எண். 105803—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

கிருஷ்ணகிரி மாவட்டம் மாநில எல்லை பகுதியில் சிறப்புக் காவல் படை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

தமிழகத்தில் தற்சமயம் சுமார் 1,000 களப்பணியாளர்களைக் கொண்ட 15 சிறப்புக் காவல் படை அணிகள் மற்றும் 1 படை பயிற்சி மையம் சிறப்பாக இயங்கி வருகிறது. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில் த.சி.கா. 7-ஆம் அணி ஒன்று சுமார் 1,094 களப்பணியாளர்களைக் (வெவ்வேறு நிலைகளில்) கொண்டு இயங்கி வருகிறது. எனவே தற்சமயம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மேலும் ஒரு சிறப்புக் காவல் படை நிறுவ அவசியம் இல்லை.

43—

இசைக் கல்லூரி

வினா எண் 102080—திரு. தி.க. ராஜா : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் இயல், இசை, நாடகக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

வேலூரில் இயல், இசை நாடகக் கல்லூரி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

44—

புறக் காவல் நிலையம்

வினா எண் 103443—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, சிவஞானபுரத்தில் புறக்காவல் நிலையம் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

விளாத்திகுளம் தொகுதி, சிவஞானபுரத்தில் புறக்காவல் நிலையம் துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

புறக் காவல் நிலையம்

வினா எண் 105457—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, தென்கரைக்கோட்டையில் புறக்காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, தென்கரைக்கோட்டையில் புறக்காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

46—

காவல் நிலையத்திற்குக் கட்டடம்

வினா எண் 105799—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தளி மற்றும் கெலமங்கலம் காவல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தளி காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் 2007-2008ஆம் ஆண்டுக்கான நவீன மயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு அரசு ஆணை பல்வகை எண் 1310, உள் (நவீனம்) துறை, நாள் 10-09-2007-ல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணி, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

கெலமங்கலம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் 2008-2009 ஆம் ஆண்டுக்கான நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, அரசு ஆணை பல்வகை எண் 1447, உள் (நவீனம்) துறை, நாள் 28-10-2008-ல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணி, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

47—

காவல் நிலையத்திற்குக் கட்டடம்

வினா எண் 105802—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேன்கனிக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையம் தற்போது வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. சொந்தக் கட்டடம் இல்லாத 273 காவல் நிலையங்களுக்கு படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டித்தரப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, இக்காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

48—

காவல் நிலையத்திற்குக் கட்டடம்

வினா எண் 106543—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகர காவல் நிலையத்திற்கு நவீன வசதிகளுடன் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் நகர காவல் நிலையம் தற்போது அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருவதாலும், இக்கட்டடம் நல்ல நிலையில் உள்ளதாக சேலம் நகர காவல் ஆணையர் தெரிவித்துள்ளதாலும் இக்காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

49—

தமிழிசைக் கல்லூரி தொடங்குதல்

வினா எண் 107544—திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் தமிழிசைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதியில் தமிழிசைக் கல்லூரி துவக்குவது குறித்த செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. ஏற்கெனவே உள்ள இசைக் கல்லூரிகளின் பணியை திடப்படுத்த முயற்சிகள் முழு அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை முடிந்த பின்பே புது கருத்துருக்களைப் பரிசீலிக்க இயலும். சென்னையில் இசைக் கல்லூரி இயங்கி வருகிறது. காஞ்சிபுரத்தில் இசைப் பள்ளி செயல்பட்டு வருகிறது என்பது தெரிவிக்கப்படுகிறது.

50—

சிறப்புப் பள்ளி அமைத்தல்

வினா எண் 107565—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் உடல் ஊனமுற்றவர்களுக்கு சிறப்புப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

ஓமலூர் தொகுதியில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புப் பள்ளி துவக்கும் உத்தேசம் தற்போது இல்லை. எனினும், அத்தொகுதியில் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள் ஏதேனும் சிறப்புப் பள்ளி துவக்க முன்வந்தால், அரசு விதிகளின்படி அங்கீகாரம் வழங்கப்படுவதோடு உரிய உதவிகள் செய்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

51—

மகளிர் காவல் நிலையத்திற்குக் கட்டடம்

வினா எண் 108229—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 639, உள் (நவீனம்) துறை, நாள் 04-08-2009-ல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணி, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

52—

அருங்காட்சியகம் அமைத்தல்

வினா எண் 111875—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் டைனோசர் பற்றி அருங்காட்சியகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

சென்னையில் டைனோசர் பற்றி அருங்காட்சியகம் அமைக்க தற்சமயம் அரசிடம் கருத்துரு ஏதும் இல்லை.

53—

தகவல் மையம்

வினா எண் 113705—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் மாற்றுத் திறனுடையோருக்கான மறுவாழ்வு தகவல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

மாற்றுத் திறனாளிகளுக்கான தொலைபேசி தகவல் மையம் மும்பையிலுள்ள செவித்திறன் குறையுடையோருக்கான தேசிய நிறுவனத்தின் மூலம், சென்னை, கே.கே. நகரிலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில வள மற்றும் பயிற்சி மையத்தில் நிறுவப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகள் குறித்த தகவல் பெற தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்.24744737/24745233.

தமிழ்நாட்டில் எங்கிருந்தும் இந்த எண்களை தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறலாம் என்பதால் ஓமலூரில் தனியே மாற்றுத் திறனுடையோருக்கான மறுவாழ்வு தகவல் மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

54—

காவலர்களுக்கு சிறப்புப் பயிற்சி

வினா எண் 119984—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) காவலர்களுக்கு சிறப்புப் பயிற்சியாக தியானம், யோகாசனம் அளிக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக காவல் துறையில் பணியாற்றிவரும் காவலர்களுக்கு வண்டலூரில் அமைந்துள்ள தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகம் மற்றும் தமிழகத்தில் உள்ள 13 காவல் பணியிடை பயிற்சி மையங்களிலும் ஏற்கெனவே சிறப்புப் பயிற்சி (தியானம், யோகாசனம்) அளிக்கப்பட்டு வருகிறது.

55—

மறுவாழ்வு இல்லம் புதுப்பித்தல்

வினா எண் 120140—திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசலில் உள்ள அரசு மறுவாழ்வு இல்லத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தலைவாசலில் உள்ள அரசு மறுவாழ்வு இல்லத்தைப் புதுப்பிக்கும் பொருட்டு இல்ல கட்டடம் மற்றும் மின் பழுதுகள் சரி செய்வதற்கு, பொதுப் பணித் துறை மூலம் ரூ.38,55,550/- அளவில் திட்ட மதிப்பீடு பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

56—

நாடகக் குழுக்களுக்கு மானியம்

வினா எண் 120271—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) அழிந்து வரும் நாடகக் கலையை மேம்படுத்த நாடகக் குழுக்களுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் சிறந்த நாடகக் குழுக்களுக்கு நாடகம் மேடையேற்றம் செய்ய நல்கை வழங்கப்பட்டு வருவதுடன் நாடகக் குழுக்களுக்கு 50 விழுக்காடு பேருந்து கட்டண சலுகை, நலிந்த நாடகக் கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 நிதியுதவி, சிறந்த நாடகக் குழுக்களுக்கு சுழல் கேடயம், சிறப்பு கேடயம், கலைமாமணி விருது பெற்ற நலிந்த நாடகக் கலைஞர்களுக்கு பொற்கிழி ரூ.15,000/- மறைந்த கலைஞர்களின் குடும்பத்திற்கு ரூ.6,000/- குடும்பப் பராமரிப்பு நிதி ஆகியவற்றின் மூலம் அழிந்து வரும் நாடகக் கலையை மேம்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

57—

காகிதத் தொழிற்சாலை தொடங்குதல்

வினா எண் 130—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் சேத்துமடை பகுதியில் காகிதத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில், சேத்துமடை பகுதியில் காகிதத் தொழிற்சாலை ஒன்று அமைப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

2011 பிப்ரவரி 10]

58—

அடிப்படை வசதி

வினா எண் 293—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள தேயிலை தோட்ட தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

வால்பாறையில் உள்ள தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு அந்தந்த தேயிலை தோட்ட நிறுவனங்களால் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

59—

கழிப்பிட வசதி

வினா எண் 1552—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி ஊராட்சி, நான்கு முனை சுங்கம் சந்தைபேட்டையில் போதிய கழிப்பிட வசதி உடன் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி ஊராட்சி, நான்கு முனை சுங்கம் சந்தைப்பேட்டையில் போதிய இடமின்மை காரணமாக கழிப்பிட வசதி செய்து தர இயலவில்லை.

[2011 பிப்ரவரி 10

60—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 1587—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, செல்லப்பிள்ளை குட்டை ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனி, கீழ்காலனி, செட்டியார் சூளை பகுதி, ஓட்டேரி பகுதி, அங்காளம்மன் நகர் பகுதி அருந்ததியர் காலனி ஆகிய தெருக்களில் கழிவுநீர் கால்வாய்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, செல்லப் பிள்ளைகுட்டை ஊராட்சி, செட்டியார் சூளை பகுதியில் தற்போது கழிவுநீர்க் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.

ஓட்டேரி மற்றும் அருந்ததியர் காலனி பகுதிகளில் ஏற்கெனவே சாக்கடை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள ஆதிதிராவிடர் காலனி, கீழ்காலனி, அங்காளம்மன் நகர் ஆகிய பகுதிகளில் சாக்கடை வசதிகள் அமைக்க ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பொதுநிதியில் போதிய நிதிவசதி இல்லாததால், இப்பணியினை எடுத்துக் கொள்ள இயலாது.

61—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 1594—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், கோட்மேட்டுப்பட்டி ஊராட்சி 3வது வார்டு, சின்ன அடைக்கனூர்

2011 பிப்ரவரி 10]

புது மாரியம்மன் கோவில் முதல் பூலேரி வழியாக புதிய பைபாஸ் சாலை, தாத்தியம்பட்டி ஊராட்சி, பச்சியண்ணன் காடு-தாசன் காட்டுவளவு வரை, சிக்கனம்பட்டி ஊராட்சி, பைபாஸ் சாலை-வெள்ளையர் ஜல்லி கிரஷர் பகுதி வரையுள்ள சாலைகளை தார்ச் சாலைகளாக அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

62—

தொகுப்பு வீடுகள் வழங்குதல்

வினா எண் 1755—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், பிலிசின்னம்பாளையம், கரியஞ்செட்டிப்பாளையம், அங்கலக்குறிச்சி, கம்பலாப்பட்டி, ஜல்லிப்பட்டி, அர்த்தநாரிபாளையம், தென்சங்கம்பாளையம், சோமந்துரை ஆகிய ஊராட்சிகளுக்கு இந்த ஆண்டில் கூடுதலாக தொகுப்பு வீடுகள் வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில், பிலிசின்னம்பாளையம், கரியஞ்செட்டிப்பாளையம், அங்கலக்குறிச்சி, கம்பலாப்பட்டி, ஜல்லிப்பட்டி, அர்த்தநாரிபாளையம், தென்சங்கம்பாளையம், சோமந்துரை ஆகிய ஊராட்சிகளில், *2006-2007*-ம் ஆண்டில் *62* வீடுகளும், *2007-2008*-ம் ஆண்டில் *153* வீடுகளும், *2008-2009*-ம் ஆண்டில் *89* வீடுகளும், *2009-2010*-ம் ஆண்டில் *165* வீடுகளும் கட்டித்தரப்பட்டுள்ளன.

[2011 பிப்ரவரி 10

63—

கச்சா வீடுகள் வழங்குதல்

வினா எண் 1776—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், காளியாபுரம், வேட்டைக்காரன்புதூர், கோட்டூர், பிலிசின்னம்பாளையம், கரியஞ்செட்டிப்பாளையம், ஆகிய ஊராட்சிகளுக்கு இந்த ஆண்டில் கூடுதலாக கச்சா வீடுகள் வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில், ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், காளியாபுரம், பிலிசின்னம்பாளையம், கரியஞ்செட்டிபாளையம், ஆகிய ஊராட்சிகளில், 2006-2007-ம் ஆண்டில் 6 கச்சா வீடுகளும், 2007-2008-ம் ஆண்டில் 7 கச்சா வீடுகளும், 2008-2009-ம் ஆண்டில் 70 கச்சா வீடுகளும், 2009-2010-ம் ஆண்டில் 26 கச்சா வீடுகளும் கட்டித்தரப்பட்டுள்ளன. வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் ஆகியவை பேரூராட்சிப் பகுதியானதால் அரசுத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித் தர இயலாது.

64—

கச்சா விடுகள் வழங்குதல்

வினா எண் 1769—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் அங்கலக்குறிச்சி, கம்பலாபட்டி, ஜல்லிபட்டி, அர்த்தநாரிபாளையம், தென்சங்கம்பாளையம், சோமந்துரை, தென்சித்தூர் ஆகிய ஊராட்சிகளுக்கு இந்த ஆண்டில் கூடுதலாக கச்சா வீடுகள் வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில், அங்கலக்குறிச்சி, கம்பலாபட்டி, ஜல்லிபட்டி, அர்த்தநாரிபாளையம், தென்சங்கம்பாளையம், சோமந்துரை, தென்சித்தூர் ஆகிய ஊராட்சிகளில், 2006-2007-ம் ஆண்டில் 12 கச்சா வீடுகளும், 2007-2008-ம் ஆண்டில் 24 கச்சா வீடுகளும், 2009-2010-ம் ஆண்டில் 27 கச்சா வீடுகளும் கட்டித்தரப்பட்டுள்ளன.

65—

பாலம் கட்டுதல்

வினா எண் 2283—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் கருப்பு கிளார் சாலையும் பொன்னுக்குமுண்டான் ஆற்றில் பாலமும் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் கருப்பு கிளார் சாலையும், பொன்னுக்குமுண்டான் ஆற்றில் 2009-2010-ம் ஆண்டு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு திட்டத்திலிருந்து ரூ.23.30 இலட்சம் மதிப்பில் பாலம் கட்டும் பணி அனுமதிக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

66—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2648—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், மேலமையூர் ஊராட்சியில் உள்ள அண்ணாநகர் 2-வது தெரு பகுதியில் புதிய குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

செங்கல்பட்டு பகுதியில் காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், மேலமையூர் அருகில் உள்ள அண்ணாநகர் 2-வது தெரு பகுதியில் உள்ள நீரின் ஆதாரத்தையும், அதன் தரத்தையும் சோதனை செய்து அதன் அடிப்படையில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத் தொகையை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

67—

குடிநீர் சுத்திகரித்தல்

வினா எண் 2679—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை டவுன், ரொட்டிக்கடை, சோலையார் அணை பகுதிகளில் குடிநீர் கலப்படமாக இருப்பதால் குடிநீரை சுத்திகரித்து வழங்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை டவுன், ரொட்டிக்கடை மற்றும் சோலையார் பகுதிகளுக்கு, திறந்தவெளி கிணற்றில் இருந்து மின்மோட்டார் மூலம் தினந்தோறும் குடிநீர் குளோரினேசன் செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

2011 பிப்ரவரி 10]

68—

எத்தனால் தயாரித்தல்

வினா எண் 2913—திரு. வீ.பெ. துரைசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் சர்க்கரை ஆலையில் எத்தனால் (Ethanol) தயாரிக்கும் திட்டம் எப்போது தொடங்கப்பட உள்ளது.

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எத்தனாலின் விற்பனை விலை எரிசாராயத்தின் விற்பனை விலையை விட குறைவாக உள்ளதால் மோகனூர் சர்க்கரை ஆலையில் வணிக ரீதியாக எத்தனால் உற்பத்தி துவக்கப்படவில்லை.

69—

குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 3438—திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதியில், பில்லூர் குடிநீர்த் திட்டம் விரைந்து நிறைவேற்ற அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சிங்காநல்லூர் தொகுதிக்கு பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்டு, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் 965 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் விரிவான திட்ட மதிப்பீடு ரூ.224.92 கோடிக்கு தயாரிக்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 162/நநி(ம)குவ (குவ1) துறை, நாள்: 11—8—2010 இல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்ட மதிப்பீடு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு

[2011 பிப்ரவரி 10

மற்றும் நிதி சேவை நிறுவனத்தின்மூலம் தனியார் கலந்தாலோசகரால் ஆய்வு செய்யப்பட்டு திட்ட மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டதும், திட்ட செயலாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

70—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 5106—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி கோனகரடு மாரியம்மன் கோயில் பறவை காடு மேல்நிலை நீர்தேக்க தொட்டி வரை, நைநாயந்த ஏரி முதல்பூசாரி தெரு, செம்மோடு மாரியம்மன் கோயில்வரை, ஆத்துக்காடு ஆதிதிராவிடர் வீடு-சொரக்கம்பட்டி வழி காரைச்சாவடி தார்சாலை வரை, வேலாக்கவுண்டன் தெரு-மோட்டூர் களர்பட்டி ஆரம்பப் பள்ளி வரை, கப்பி சாலையாக இருப்பதைத் தார் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நிதிநிலைக்கேற்றவாறு வரும் ஆண்டுகளில் ஆராயப்படும்.

71—

சுற்றுச்சுவர்

வினா எண் 5123—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், ஆருர்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு மின்சார வசதி, பழுதடைந்த சமையல்கூடம், பள்ளியைச் சுற்றி சுற்றுச்சுவர் போன்ற அடிப்படை வசதிகளை அரசு அமைத்துக் கொடுக்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆவன செய்யப்படும்.

72—

குடிநீர்

வினா எண் 5765—திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோயில் ஒன்றியம், கொழை ஊராட்சியில் உள்ள கடுமையான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

ஆம்.

73—

தடுப்பணை

வினா எண் 6054—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், வட்டக்காடு பகுதியில் இரண்டு ஏரிகளில் தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

74—

சாலை செப்பனிடுதல்

வினா எண் 6458—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலைப்பேட்டை தொகுதி, சின்னகுமாரபாளையம் செல்லும் சாலையில் பழுதடைந்துள்ள 5 கி.மீ. சாலையை செப்பனிட்டுத தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, சின்னகுமாரபாளையம் செல்லும் சாலையில் கி.மீ. 0/0 முதல் கி.மீ. 1/6 வரை உள்ள சாலை உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த சாலையாகும். இச்சாலை தார்ச் சாலையாக அமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மேலும், மீதமுள்ள கி.மீ. 1/6 முதல் கி.மீ. 5/4 வரை உள்ள சாலை நெடுஞ்சாலைத் துறையின் பொள்ளாச்சி கோட்டத்திற்குட்பட்ட இதர மாவட்ட சாலையாகும். இச்சாலையும் CRIDP திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

75—

நவீன இயந்திரம் வழங்குதல்

வினா எண் 6494—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நவீன இயந்திரம் பொருத்த அரசு முன்வருமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நவீன இயந்திரம் பொருத்தும் செயல்திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

76—

பாதாளச் சாக்கடை

வினா எண் 8776—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சியில் ரோஜா நகர், இந்திரா நகர், அண்ணா நகர் ஆகிய பகுதிகளில் பாதாளச் சாக்கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி, ரோஜா நகர், இந்திரா நகர், அண்ணா நகர் ஆகிய பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த அப்பகுதியில் போதிய இட வசதியில்லை. எனவே, பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

எத்தனால் தயாரித்தல்

வினா எண் 9291—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அனைத்து கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யும் கரும்பிலிருந்து எத்தனால் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எண்ணெய் நிறுவனங்கள், எத்தனாலுக்கான விற்பனை விலையை எரிசாராயத்தின் விலையை விட குறைவாகவே நிர்ணயம் செய்துள்ளதால் எத்தனால் உற்பத்தி இலாபகரமாக இல்லை. எனவே, அனைத்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யும் கரும்பிலிருந்து எத்தனால் தயாரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

78—

குடிநீர்

வினா எண் 9238—திரு. ஒ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அத்திக்கடவு இரண்டாம் குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் 965 ஊரகக் குடியிருப்புகளுக்கான பில்லூர் இரண்டாம் கூட்டுக் குடிநீர் திட்டம் (அத்திக்கடவு இரண்டாம் குடிநீர் திட்டம்) ரூ.224.92 கோடிக்கு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 162, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1) துறை, நாள் 11-8-2010-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டமதிப்பீடு, தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதிச் சேவை நிறுவனத்தின்மூலம் தனியார் கலந்தாலோசகரால் சீர்தூக்கப்பட்டு, திட்ட மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட உள்ளது. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டதும் திட்ட செயலாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2011 பிப்ரவரி 10]

79—

சாலை சீரமைத்தல்

வினா எண் 10141—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கரைச் சுத்துபுதூர் ஊராட்சி, தோப்புவிளை-இரம்மதபுரம் சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம் தோப்புவிளை-இரம்மதபுரம் சாலையை தார்ச் சாலையாக அமைக்க நபார்டு திட்டத்தின்மூலம் 2008-09 நிதியாண்டில் ரூ.55,75,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முழுமையாக முடிவு பெற்று, பயன்பாட்டிற்கு வரப்பெற்றுள்ளது.

80—

தூர் வாருதல்

வினா எண் 10955—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குமாரபுரம் ஊராட்சி, நாலந்துலா குளத்தைத் தூர்வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், குமாரபுரம் ஊராட்சி, நாலந்துலா குளம் தூர்வாரும் பணியானது 2009-2010ஆம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணி முடிவு பெற்றுவிட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

81—

தார்ச்-சாலை சீர்செய்தல்

வினா எண் 14736—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, மங்கலம் ஊராட்சி, கடாத் தாங்கல் ஏரிக்கரையிலுள்ள தார்ச்சாலை சீர் செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தார்ச்சாலை பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

82—

சாலை செப்பனிடுதல்

வினா எண் 14961—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உறுமண் குளம் இரம்மதபுரம்—திசையன்விளை சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிலுள்ளது.

83—

தரைப் பாலம் அமைத்தல்

வினா எண் 15678—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, சிக்கம்பட்டி ஊராட்சி, வேடப்பட்டி பிரதான சாலை முதல் கல்லையார் கோவில் வரை, தாரமங்கலம் பிரதான சாலை—சின்னகாடம்பட்டி வரை ஓரடுக்கு கப்பி சாலை மற்றும் சிறு பாலம் அமைத்து தார்ச் சாலை அமைக்கவும், தாரமங்கலம் பிரதான சாலை—நாடார் தெரு வரை இரண்டடுக்கு கப்பி சாலை அமைத்து இரண்டு தரைப் பாலம் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

84—

கதிர் அடிக்கும் களம்

வினா எண் 17879—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் மானத்தாள் ஊராட்சியில் விவசாயிகளுக்கு கதிர் அடிக்கும் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மானத்தாள் ஊராட்சியில் பல்வேறு திட்டங்களின் கீழ் ஓலைப்பட்டி, கங்காணிப்பட்டி, காத்தான்காடு, கிழக்கூர் மற்றும் பண்டிதகாரனூர் ஆகிய ஐந்து இடங்களில் கதிர் அடிக்கும் களம் அமைக்கப்பட்டு விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 2009-2010 ஆம் ஆண்டில் ஊரக கட்டமைப்புத் திட்டம் (கிராம ஊராட்சி ஒதுக்கீடு) நிதியில் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் தர்ண்டானூர் குப்பக்காட்டுவளவு இடத்தில் கதிர் அடிக்கும் களம் அமைக்கும் பணி 30-9-2009-ல் முடிவுற்று விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

85—

கதிர் அடிக்கும் களம்

வினா எண் 17899—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், கணக்குப்பட்டி பகுதியில் கதிரடிக்கும் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

86—

குடிநீர்

வினா எண் 18840—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொளத்தூர் நங்கவள்ளி ஆகிய ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் மொத்தம் 245 குடியிருப்புகள் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 167 குடியிருப்புகளுக்கும், தனி மின் விசைத் திட்டத்தின்மூலம் 47 குடியிருப்புகளுக்கும், பாலமலை ஊராட்சியில் திறந்தவெளி கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 31 குடியிருப்புகளுக்கும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நங்கவள்ளி ஒன்றியத்தில் மொத்தமுள்ள 304 குடியிருப்புகளில் காவிரி ஆற்றினை நீராதாரமாக கொண்டு 228 குடியிருப்புகளுக்கும்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

தனி மின்விசைத்திட்டத்தின்மூலம் 76 குடியிருப்புகளுக்கும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனினும், நடப்பு நிதியாண்டில் இவ்விரு ஒன்றியங்களிலும் முழு அளவு பயன்பெறாத மக்கள் குடியிருப்பு பகுதிகளான 13 குடியிருப்புகளுக்கு குடிநீர் திட்டம் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

87—

பாதாளச் சாக்கடை

வினா எண் 20505—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தை முழுமையாக நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) வினா எழவில்லை

88—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 20706—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சி, ஒலிஞ்சிகாட்டூர்-தங்காயூர் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சாலைப்பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

89—

பேரூராட்சியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 21122—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியை நகராட்சியாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/2004, நாள் 14-6-2004-ன்படி 2001-ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 30,000 மக்கட்தொகைக்குமேல் உள்ள பேரூராட்சிகளை மூன்றாம்நிலை நகராட்சிகளாக வகை மாற்றம் செய்ய இயலும். திருப்புவனம் பேரூராட்சியின் 2001-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கட் தொகை 21,589 ஆகும். எனவே, திருப்புவனம் பேரூராட்சியை மூன்றாம் நிலை நகராட்சியாக வகை மாற்றம் செய்ய வழிவகையில்லை.

90—

காகிதத் தொழிற்சாலை

வினா எண் 22628—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் காகிதத் தொழிற்சாலை ஒன்று துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மானாமதுரையில் காகிதத் தொழிற்சாலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

91—

மாநகராட்சி எல்லையை நீட்டித்தல்

வினா எண் 22088—திரு. வி.எஸ். பாபு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை மாநகராட்சியில் எல்லை வரம்பை அதிகரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சியுடன் 9 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள் மற்றும் 25 ஊராட்சிகளை இணைத்து மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்படலாமென முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வுத்தேச எல்லை விரிவாக்கம் குறித்து அரசாணை (நிலை) எண் 256, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26-12-2009-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

92—

கசிவுநீர் குட்டை

வினா எண் 23054—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பத்தூர் தொகுதி, பள்ளவள்ளி ஊராட்சி, கசிவுநீர் குட்டையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பள்ளவள்ளி ஊராட்சியில் உள்ள மந்தவெளி கசிவுநீர் குட்டை சீரமைப்பு பணி பொது மக்கள் அவசியத்தை கருத்தில் கொண்டு 2007-2008-ஆம் நிதியாண்டின் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நிதியில் ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு, தூர்வாரப்பட்டு, குட்டையை ஆழப்படுத்தியும், குளமாக அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது. தற்போது பொது மக்கள் பயன்பாட்டில் நல்ல நிலையில் உள்ளது.

93—

பாலம் கட்டுதல்

வினா எண் 24027—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியம், கே.மோரூர் பகுதியில் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

நிதிநிலைக்குத் தக்கவாறு வரும் ஆண்டுகளில் சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

94—

ஆலையை மீண்டும் இயக்குதல்

வினா எண் 25015—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

பழனி தொகுதி விவசாயிகளின் கரும்புகள் தாமதமின்றி வெட்ட அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இரண்டாவது ஆலை சீரமைத்து மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் தற்போது இயங்கி வரும் இரண்டாவது ஆலையின் அரவைத்திறன் (Installed Capacity) 1,250 டன்கள் ஆகும். இருப்பினும், 1,300 முதல் 1,450 டன்கள் வரை தினசரி கரும்பு அரவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரவைத்திறனை மேலும் சீராக்க "டிஸ்இன்டக்ரேட்டர்" அமைக்கும் பணி முடிவடைந்து 2008-ஆம் ஆண்டு அரவைப் பருவத்திலிருந்து பயன்பாட்டில் உள்ளது.

95—

எத்தனால் தயாரித்தல்

வினா எண் 25056—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் சர்க்கரை ஆலையில் கரும்புச் சக்கையிலிருந்து எத்தனால் தயாரிக்கும் திட்டம் எப்போது தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் சர்க்கரை ஆலையில் எத்தனால் தயாரிக்கும் திட்டத்திற்கு தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் புனரமைப்பு திட்டத்தின்கீழ் அரசு அனுமதி அளித்துள்ளது. அதன்மீது தொழில் மற்றும் நிதி புனரமைப்பு வாரியத்திடம் ஒப்புதல் பெற பிரேரணை ஒன்று அமல்படுத்தும் முகவர்களான இந்தியன் ஓவர்சீஸ் வங்கிமூலம் சமர்ப்பிக்கப்பட உள்ளது. மேற்படி புனரமைப்பு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் வங்கிகளிடம் கடனுதவி பெற்று நிர்வகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

96—

தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 25102—திரு. சை. சையது கௌஸ் பாஷா: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் சிப்காட் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2008, 2009 ஆம் ஆண்டில் தொழில் மானியக் கோரிக்கையின்போது சட்ட சபையில் தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளபடி, மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டத்தில் சிப்காட் நிறுவனம்மூலம் தொழில் பூங்கா உருவாக்குவதற்காக, நிலம் கையகப்படுத்துவதற்கு அரசு ஆணை (நிலை) எண் 58, தொழில் (சிப்காட்-நிஎ) துறை, நாள் 12-6-2009 இல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

97—

தரைப்பாலம் கட்டுதல்

வினா எண் 25251—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டுத் தொகுதி, சொரக்காய்பேட்டைக்கும், நெடியத்திற்கும் இடையிலுள்ள ஆற்றில் தரைப்பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

ஆம்.

2011 பிப்ரவரி 10]

98—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 26186—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், வேப்பிலை, கணவாய்புதூர் ஊராட்சிகளுக்கு காவிரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், வேப்பிலை மற்றும் கணவாய்புதூர் ஊராட்சிகளிலுள்ள 54 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் தேவையான காவிரி குடிநீர், தர்மபுரி மாவட்டம், காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் நீரேற்றும் குழாயில் இருந்து பெற திட்டமிடப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவடைந்தவுடன் வேப்பிலை மற்றும் கணவாய்புதூர் ஊராட்சிகளிலுள்ள 54 குடியிருப்புகளுக்கும் காவிரி குடிநீர் வழங்கப்படும்.

99—

ஊராட்சிகளை இணைத்தல்

வினா எண் 27895—திரு. டி. செங்குட்டுவன் : மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, கட்டிகானப்பள்ளி, வெங்கடாபுரம், அகசிப்பள்ளி, தேவசமுத்திரம் ஆகிய ஊராட்சிகளை கிருஷ்ணகிரி நகராட்சியில் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கட்டிகானப்பள்ளி ஊராட்சியை கிருஷ்ணகிரி நகராட்சியுடன் இணைப்பது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரப்பட்டதில், வெங்கடாபுரம், அகசிப்பள்ளி, தேவசமுத்திரம் ஆகிய ஊராட்சிகளை நகராட்சியுடன் இணைப்பது குறித்து கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

100—

பேரூராட்சியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 27896—திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, ஊத்தங்கரை காவேரிப்பட்டினம், தேன்கனிக்கோட்டை ஆகிய முதல் நிலை பேரூராட்சிகளை நகராட்சியாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊத்தங்கரை, காவேரிப்பட்டினம், தேன்கனிக்கோட்டை ஆகிய முதல் நிலை பேரூராட்சிகளை நகராட்சிகளாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

101—

குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 32313—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி உள்ளகரம்-புழுதிவாக்கம் 3 ஆம் நிலை நகராட்சியில் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) உள்ளகரம்-புழுதிவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சியில் விரிவான குடிநீர் வழங்கும் திட்டத்தினை ரூ.24.24 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஏழு ஒப்பந்தப்புள்ளிகள் 12-11-2009 அன்று பெறப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான ஒப்பந்தப்புள்ளி சுமார் ஒரு மாத காலத்தில் நிர்ணயம் செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்படவுள்ளது. இப்பணி சுமார் 24 மாதங்களில் முடிக்கப்படும்.

102—

பாலம் கட்டுதல்

வினா எண் 32405—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், விக்கிரமங்கலம் ஊராட்சி நடுவூரிலுள்ள தரைப்பாலத்தை உயர் பாலமாக கட்டிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தற்சமயம் அவசியமில்லை.

103—

இயந்திரங்கள் வாங்குதல்

வினா எண் 32693—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

திருப்பத்தூர் தொகுதி, கேதாண்டப்பட்டியிலுள்ள திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு நவீன இயந்திரங்கள் வாங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை இலாபகரமாக இயங்காததால், இவ்வாலையில் நவீன இயந்திரங்களை வாங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

104—

அணை கட்டுதல்

வினா எண் 32810—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கிளாங்காடு ஊராட்சியில் காட்டாற்றின் குறுக்கே அணைக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அணை கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

105—

உயர் மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 35827—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, தீவட்டிப்பட்டி பேருந்து நிலையத்தில் "ஹைமாஸ்" உயர்மட்ட மின்விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

தமிழ்நாடு சட்டப்பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள, தீவட்டிப்பட்டி பேருந்து நிலையத்தில், மாவட்ட ஊராட்சியின் மாநில நிதிக் குழுவின் மானியத்தின்மூலம் "ஹைமாஸ்" உயர்மட்ட மின்விளக்கு 2009—2010ஆம் ஆண்டில் ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

106—

ஆலையை மீண்டும் இயக்குதல்

வினா எண் 36232—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, பேரளம் சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதியில் பேரளம் என்ற ஊருக்கு அருகிலுள்ள கொல்லுமாங்குடி என்ற கிராமத்தில் 1997—98 முதல் 2000—2001 வரை திரு ஆரூரான் சர்க்கரை ஆலை என்ற தனியார் ஆலை இயங்கி வந்தது. அதன் அரவைத் திறன் நாளொன்றுக்கு 2,500 டன்களாகும். இவ்வரவை திறனுக்கு ஆண்டொன்றுக்கு அவ்வாலைக்கு 4.30 இலட்சம் மெ.டன்கள் கரும்பு தேவைப்பட்டது. அரவைக்குத் தேவையான 4.30 இலட்சம் மெட்ரிக்டன் கரும்பு முழுமையாக கிடைக்கப் பெறாததால் அங்கு அவ்வாலையை மீண்டும் இயக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

[2011 பிப்ரவரி 10

107—

எத்தனால் உற்பத்தி துவக்குதல்

வினா எண் 37288—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மின்சாரம், எத்தனால் உற்பத்தி உபதொழில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருவாளர்கள் வால்சந்த் நகர் இண்டஸ்ட்ரீஸ், பூனே நிறுவனத்துடன் 183 மெகாவாட் திறனில் ரூ.849.36 கோடி செலவில் இணைமின் நிலையங்கள் அமைக்கவும் ரூ.276.27 கோடி செலவில் இயந்திரங்களை நவீனமயமாக்கவும் தமிழ்நாடு மின்சார வாரியம் 20-02-2010-ல் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இந்நிறுவனம் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி திட்டப் பணிகளை துவக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

எத்தனாலின் விற்பனை விலை, எரிசாராயத்தின் விற்பனை விலையை விட குறைவாக உள்ளதால் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் வணிக ரீதியாக எத்தனால் உற்பத்தி துவக்கப்படவில்லை.

108—

ஆலைகளை நவீனப்படுத்துதல்

வினா எண் 39461—திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை நவீனப்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

109—

மின்சாரம் தயாரித்தல்

வினா எண் 39745—திரு. குத்தாலம் க. அன்பழகன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் நலிவடைந்த தலைஞாயிறு என்பிகேஆர்ஆர் சர்க்கரை ஆலை வளர்ச்சிக்காக கரும்பு சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் நலிவடைந்த தலைஞாயிறு என்பிகேஆர்ஆர் சர்க்கரை ஆலை வளர்ச்சிக்காக கரும்பு சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஆகும் தொகை அதிகமாக இருப்பதாலும், போதுமான இலாபத்தில் ஆலை இயங்காததாலும், இக்கருத்துரு கைவிடப்பட்டுள்ளது.

110—

கணினி தொழிற்சாலை துவக்குதல்

வினா எண் 40162—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கணினி உற்பத்தி தொழிற்சாலை துவக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கணினி உற்பத்தி தொழிற்சாலை துவங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் அங்கு தகுந்த தொழில் முனைவர்கள், பெரிய தொழில் திட்டங்கள் நிறுவுவதற்கு புதிய திட்ட செயல் குறிப்புகளுடன் செயல்படுத்த முன் வந்தால் அவர்களுடன் இணைந்து திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து செயல்படுத்த தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் முயற்சிகள் மேற்கொள்ளும்.

111—

வாகனத் தொழிற்பேட்டை ஏற்படுத்துதல்

வினா எண் 41192—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வாகனத் தொழிற்பேட்டை ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் வாகனத் தொழிற்பேட்டை அமைப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

112—

எத்தனால் உற்பத்தி செய்தல்

வினா எண் 41202—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, அமராவதி சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எத்தனாலின் விற்பனை விலை எரிசாராயத்தின் விற்பனை விலையை விட குறைவாக உள்ளதால் உடுமலைப்பேட்டை அமராவதி சர்க்கரை ஆலையில் வணிக ரீதியாக எத்தனால் உற்பத்தி துவங்க சாத்தியக் கூறுகள் இல்லை.

113—

பாலம் கட்டுதல்

வினா எண் 42594—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கணவாய்புதூர் ஊராட்சி, வேங்கைநகர் கோடிப்பள்ளம் ஆற்றில் புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

இல்லை.

114—

ஊராட்சியை தரம் உயர்த்துதல்

வினா எண் 43578—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி பழனி ஒன்றியம் பாப்பம்பட்டி ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பழனி ஒன்றியம், பாப்பம்பட்டி ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்துவது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது ஏதுமில்லை.

115—

சுத்திகரிப்புப் பணிகள்

வினா எண் 46881—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, கொல்லங்கோடு மற்றும் மெதுக்கும்மல்-களியக்காவிளை கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு சுத்திகரிப்பு நிலையப் பணிகளை துவங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் பயனிலுள்ள களியக்காவிளை பேரூராட்சி, மெதுக்கும்மல் ஊராட்சி மற்றும் 22 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் கொல்லங்கோடு பேரூராட்சி, ஏழுதேசம் பேரூராட்சி, மற்றும் 27 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றிற்கு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு ரூ.1,670 இலட்சங்களுக்கு அரசின் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்ட செயலாக்கத்திற்கான, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அவை பரிசீலனையில் உள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டபின், இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

2011 பிப்ரவரி 10]

116—

புகையை தடுத்தல்

வினா எண் 48878—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, கோட்டூர் ஸ்ரீ அம்பிகா சர்க்கரை ஆலையிலிருந்து வெளிவரும் புகையால் சுகாதாரக் கேடு ஏற்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் கோட்டூர் ஸ்ரீ அம்பிகா சர்க்கரை ஆலையிலிருந்து வெளிவரும் புகையின் மூலம் சுகாதாரக் கேடு எழாமல் இருக்க ESP (Electro Static Precipitator) என்ற அதிநவீன தொழில்நுட்பக் கருவி பொருத்தப்பட்டு அதன் மூலம் கரித்தூள்கள் முழுமையாகக் கிரகிக்கப்பட்டுச் சுற்றுப்புறம் மாசுபடாமல் இருக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

117—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 49425—திருமதி மு. சந்திரா: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசபாளையம் தொகுதி, கூனங்குளம், தேசிகாபுரம், ஆவரந்தை, தெற்கு வெங்காநல்லூர், சிதம்பராபுரம், பட்டியூர், நக்கனேரி, அயன்கொல்லங்கொண்டான் கிராமங்களுக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிகாபுரம் குடியிருப்பு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், வாசுதேவநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டின்கீழ் கிடைக்கப்பெறும் தண்ணீரைக்கொண்டு பயன்பெற உள்ளது. இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளது. வாசுதேவநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 12/2010-க்குள் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது. அப்போது தேசிகாபுரம் குடியிருப்பிற்கும் தாமிரபரணி ஆற்றுநீர் கிடைக்கப் பெறும். மீதமுள்ள 7 குடியிருப்புகளான கூனங்குளம், ஆவரந்தை, தெற்கு வெங்காநல்லூர், சிதம்பரபுரம், புட்டியூர், நக்கனேரி மற்றும் அயன்கொல்லங்கொண்டான் ஆகியவை விருதுநகர் மாவட்டத்திலுள்ள 7 பேரூராட்சிகள் மற்றும் 11 ஒன்றியங்களை சார்ந்த 1,787 கிராமங்களுக்கான தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, அதன் வடிவமைப்பு பணிகள் முடிவுற்றுள்ளன. முக்கூடலை தலைமைப் பணியிடமாகக் கொண்டு ரூ.164.80 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு அரசு ஒப்புதலும், நிதி ஆதாரமும் இறுதி செய்யப்பட்டவுடன், திட்டப் பணிகள் துவங்கப்படும். இத்திட்டம் பயனுக்கு வரும்பொழுது மேற்கூறிய 7 குடியிருப்புகளுக்கும் தாமிரபரணி குடிநீர் வழங்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

118—

பேருந்து நிலையம்

வினா எண் 56716—திருமதி ஜி. லதா: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு விடுதலை போராட்ட வீரர் பகத்சிங் நூற்றாண்டு நினைவு பேருந்து நிலையம் என பெயர் வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாநகராட்சியின் புதிய பேருந்து நிலையத்திற்கு பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் என பெயர் சூட்ட நகராட்சியால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

119—

பேருந்து நிலையம்

வினா எண் 57859—திரு. வை. காவேரி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாநகர், சீலநாயக்கன்பட்டியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

120—

குடிநீர்த் திட்டம்

வினா எண் 58295—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளித்தலை தொகுதி, கே. பேட்டை, வதியம், குமாரமங்கலம் ஊராட்சிப் பகுதிகளுக்கு காவிரி குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளித்தலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கே.பேட்டை ஊராட்சிக்குட்பட்ட 8 குடியிருப்புகள், வதியம் ஊராட்சிக்குட்பட்ட 7 குடியிருப்புகள் மற்றும் குமாரமங்கலம ஊராட்சிக்குட்பட்ட 4 குடியிருப்புகளுக்கான மூன்று காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளும் நிறைவேற்றப்பட்டு ஜனவரி 2010-ல் மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

121—

திருமண மண்டபம்

வினா எண் 58685—திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், கிருஷ்ணராயபுரத்தில் இலவச திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மண்டலம், கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிதாக இலவச திருமண மண்டபம் அமைக்க பேரூராட்சிக்கு சொந்தமான இடம் ஏதுமில்லை. மேலும் இடம் விலைக்கு வாங்கி அதில் திருமண மண்டபம் அமைக்க போதுமான நிதி வசதியும் இப்பேரூராட்சியில் இல்லை.

122—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 62137—திரு. ஆர். சாமி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

மேலூர் தொகுதியில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

மேலூர் தொகுதியானது, மேலூர் நகராட்சி, ஏ, வெள்ளாளப்பட்டி பேரூராட்சி, மேலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 226 குடியிருப்புகள், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 226 குடியிருப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இவை அனைத்தும் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, மதுரை மாவட்டத்தில் மேலூர் அப்பனியாபுரம், திருமங்கலம், நகராட்சிகள், ஏ. வெள்ளாளப்பட்டி, பரவை, திருநகர், விளாங்குடி, பாலமேடு, அலங்காநல்லூர் பேரூராட்சிகள், 1430 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 806.00 கோடியாகும். 22-3-2010 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில் அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் மூலம் அரசின் நிருவாக ஒப்புதல் பெற, வாரியம் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மேலும் அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் பரிந்துரையுடன் அரசின் நிருவாக ஒப்புதல் பெற்று, திட்டம் செயலாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

123—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சமுதாயக் கூடம்

வினா எண் 62927—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கடலூர் மாவட்டம், முகையூர் தொகுதியில் அமைந்துள்ள மணலூர்பேட்டை பேரூராட்சியில் *2008-2009-ம்* ஆண்டில் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் (APAMT) ரூ.*15.00* இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் கட்டப்பட்டு வருகிறது. விரைவில் இப்பணிகள் முடிக்கப்படும்.

124—

சர்க்கரை ஆலை துவக்குதல்

வினா எண் 64232—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மேட்டூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

125—

தூர் வாருதல்

வினா எண் 65855—திருமதி ஜி. லதா: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகர், ஓட்டேரி நீர்த்தேக்கம் பகுதியை தூர்வாரி நீர்த்தேக்கத்தை வலுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாநகராட்சிக்கு சொந்தமான 104 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஓட்டேரியில் கடந்த நான்கு வருடங்களாக தொடர்ந்து ஏரியில் நீர் இருந்து கொண்டே இருக்கிறது. நீர் முழுமையாக வற்றினால் தூர்வார இயலும். மேலும் மழை காலங்களில் கால்வாய்களில் வரும் மழைநீர் தங்கு தடையின்றி வந்து சேரவும், ஏரியின் மையப்பகுதியில் நீர் தேங்கும் வகையில் சீரமைக்கப்பட்டுள்ளது. 12 ஆழ்துளை கிணறு மூலமாக நீரேற்றம் செய்து வேலூர் மாநகர மக்களுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

126—

தொழிற்சாலை துவக்குதல்

வினா எண் 68951—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் கரும்பு சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலையை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் கரும்பு சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[2011 பிப்ரவரி 10

127—

நவீன இயந்திரம் வழங்குதல்

வினா எண் 69372—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நவீன இயந்திரங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை இலாபகரமாக இயங்காததால், இவ்வாலையில் நவீன இயந்திரங்களை அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

128—

காகித ஆலை துவக்குதல்

வினா எண் 70463—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் காகித தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் காகித தொழிற்சாலை அமைப்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

129—

எத்தனால் உற்பத்தி

வினா எண் 73479—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியிலுள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்தியைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியிலுள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்தி செய்யும் இயந்திரம் நிறுவப்பட்டு, சென்ற வருடம் ஆகஸ்டு மாதம் சோதனை ஓட்டம் நடைபெற்றது. தற்பொழுது எத்தனாலுக்கு ஒரு லிட்டரின் விலை ரூ.27/- என்றும் எரிசாராயத்திற்கு ஒரு லிட்டருக்கு ரூ.27/-லிருந்து ரூ.30/- வரையும், பெட்ரோலிய நிறுவனம் விலையை நிர்ணயம் செய்துள் ாது. எனவே எத்தனாலுக்கு எரிசாராயத்தின் விலையைவிட கூடுதல் விலை நிர்ணயிக்கும்போது வணிக ரீதியான உற்பத்தி தொடங்கப்படும்.

130—

குடிநீர் வசதி

வினா எண் 73966—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, கங்காவரம் ஊராட்சியில் குடிநீர் உப்பு நீராக மாறிவிட்டதால் மாற்று குடிநீர் வசதி செய்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

கலசப்பாக்கம் தொகுதி, கங்காவரம் ஊராட்சியில் மொத்தமுள்ள 4 குடியிருப்புகளில் (கங்காவரம், நவபாளையம், கங்காவரம் பழைய மற்றும் புது காலனி மற்றும் செல்வபுரம்) கங்காவரம், குடியிருப்பின் குடிநீர்த் திட்ட நீராதாரத்தில் உவர்ப்புத் தன்மை காணப்படுவதால் நடப்பு நிதியாண்டில் (2010-11) கங்காவரம், குடியிருப்பின் குடிநீர் திட்டத்திற்கு மாற்று நீராதாரம் செயலாக்கப்படவுள்ளது. மற்ற மூன்று குடியிருப்புகளின் குடிநீர் குடிப்பதற்கு உகந்ததாகவே உள்ளது.

[2011 பிப்ரவரி 10

131—

கடற்கரையைத் தூய்மைப்படுத்துதல்

வினா எண் 76742—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் கடலில் தானமாக விடப்படும் பொருட்களை அகற்றி கடற்கரையை தூய்மைப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் கடற்கரையில் பக்தர்களால் விடப்படும் பொருட்கள் நகராட்சிப் பணியாளர்களால் தினந்தோறும் அப்புறப்படுத்தப்படுகிறது.

132—

கட்டடத்தை சீர்செய்தல்

வினா எண் 76832—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, காங்கேயம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பழுதடைந்துள்ள வகுப்பறைக் கட்டடத்தை சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

133—

சர்க்கரை ஆலை அமைத்தல்

வினா எண் 86530—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

ஓமலூர் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

134—

சர்க்கரை ஆலை அமைத்தல்

வினா எண் 93395—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி பகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) எடப்பாடி பகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு பதில் எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

135—

பெயர் மாற்றம்

வினா எண் 97879—திரு. கே.எஸ்.கே. இராஜேந்திரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை பேலஸ் ரோடு என்பதை மன்னர் திருமலை அரண்மனை வீதி என்று தமிழில் பெயர் மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30-06-1998-ன்படி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்குட்பட்ட சாலைகளுக்கு புதிதாக பெயர் மாற்றம் செய்வது போன்ற பிரேரணைகள் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதால் மதுரை பேலஸ் ரோடு என்பதை மன்னர் திருமலை அரண்மனை வீதி என்று தமிழில் பெயர் மாற்றம் செய்யும் வினா எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

136—

உணவுப் பூங்கா

வினா எண் 103828—திரு. வை. காவேரி: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் மாவட்டங்களில் மிகப்பெரிய அளவில் உணவுப் பதப்படுத்தும் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென் மாவட்டங்களில் மிகப்பெரிய அளவில் உணவுப் பதப்படுத்தும் தொழிற்பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

137—

எத்தனால் தொழிற்சாலை

வினா எண் 105235—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூரில் வேளாண் சார்ந்த எத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) போளூரில் வேளாண் சார்ந்த எத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது தொடர்பாக அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

138—

கார் தொழிற்சாலை

வினா எண் 108087—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுரையில் கார் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

மதுரையில் கார் தொழிற்சாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

139—

பாதாள சாக்கடை

வினா எண் 108444—திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை, மாந்தோப்பு காலனி பகுதி மற்றும் ஜிப்ஸி காலனி பகுதியில் பாதாள சாக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜிப்ஸி காலனியில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி ரூ.9.18 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் பாரதி அவன்யுவில் உள்ள கழிவு நீரேற்று நிலையம் கட்டி முடித்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. வழக்கு முடிவு பெற்றவுடன் மாந்தோப்பு காலனி பகுதிக்கு பாதாள சாக்கடை அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

140—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 109537—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

தாம்பரம் தொகுதி, அனகாபுத்தூர் நகராட்சி பகுதிகளில் போதிய குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

தாம்பரம் தொகுதி, அனகாபுத்தூர் நகராட்சிக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 12 இலட்சம் லிட்டர் குடிநீர் தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தேவைக்கேற்ப 3 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

141—

குடிநீர் வசதி

வினா எண் 109551—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், குமாரலிங்கம் ராஜீவ் நகரிலுள்ள பழங்குடி இனமக்களுக்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குமாரலிங்கம் பேரூராட்சியில் ராஜீவ் நகர் குடியிருப்பிற்கு சாமராயப்பட்டியில் ஏற்கெனவே உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகக் குழாய் பதித்து 4 பொதுக்குழாய் அமைத்து குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் கனியூர் மற்றும் சங்கரமநல்லூர் பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 9/2010-ல் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

பயனுக்கு கொண்டு வரப்படும்பொழுது குமாரலிங்கம் பேரூராட்சியில் உள்ள ராஜீவ் நகருக்கும் கூடுதலாக குடிநீர் வழங்கப்படும்.

142—

சர்க்கரை ஆலை துவக்குதல்

வினா எண் 108832—திரு. கே.எஸ். விஜயகுமார்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், புதுவாயல் கிராமத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், புதுவாயல் கிராமத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

143—

குடிநீர்

வினா எண் 109833—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டப் பகுதிகளிலுள்ள கிராமங்களை ஒருங்கிணைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் பாலாற்று குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டப் பகுதிகளிலுள்ள கிராமங்களிலுள்ள அனைத்து குடியிருப்புகளிலும் தனித்தனி குடிநீர்த் திட்டங்கள் உள்ளதாலும் பாலாற்றில் நீர் கொடுதிறன் குறைவாக உள்ளதாலும், மணல் அதிகமாக எடுக்கப்பட்டதாலும் மேற்கூறிய குடியிருப்புகளுக்கு பாலாற்றிலிருந்து நீராதாரம் அமைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்க இயலாது.

144—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 109873—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், நத்தப்பேட்டை ஊராட்சிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் ஒன்றியத்தில் நத்தப்பேட்டை ஊராட்சியில் மொத்தமுள்ள 31 குடியிருப்புகளில் 17 குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு தற்போது ஊராட்சியின் பராமரிப்பிலுள்ளது. 10 குடியிருப்புகளுக்கு தனத்தனியாக நீராதாரங்கள் ஏற்படுத்தப்பட்டு தனி மின்விசைத் திட்டங்கள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 4 குடியிருப்புகளுக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நடப்பு நிதியாண்டில் தனித்தனி நீராதாரங்கள்மூலம் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்க எடுத்துக்கொள்ளப்பட்டு திட்டப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. எனவே, நத்தப்பேட்டை ஊராட்சிக்கு மேலும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும் தற்போது செயல்பாட்டில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு வறட்சி காலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையினை போக்க கூடுதல் நீராதாரம் செயலாக்க உள்ளாட்சி அமைப்பின்மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்க நத்தப்பேட்டை ஊராட்சி மன்றத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

145—

தொழிற்பூங்கா

வினா எண் 109917—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதியில் தொழிற்பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதியில் தொழிற்பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பிரிசிலனையில் இல்லை.

146—

பேருந்து நிலையம்

வினா எண் 117377—திரு. எம். என். கந்தசாமி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) கோயம்புத்தூர், சிறுவாணி சாலை பேரூர் பேரூராட்சி பகுதியில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர், சிறுவாணி சாலை பேரூர் பேரூராட்சியை கோவை மாநகராட்சியுடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, பேரூர் பேரூராட்சி பகுதியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

147—

குடிநீர்

வினா எண் 118551—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை, எல்லை குமாரபாளையத்திற்கு காவிரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், எல்லை கிராமம் ஊராட்சி, எல்லை குமாரபாளையம் குடியிருப்பிற்கு முத்தூர்—காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் காவிரி ஆற்று நீரும் மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீரும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் சிராக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

148—

பேரூராட்சியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 118561—திரு. டி. மூர்த்தி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்போரூர் பேரூராட்சியுடன் இள்ளலூர், தண்டலம், ஆலத்தூர் ஆகிய கிராமங்களை ஒருங்கிணைத்து நகராட்சியாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் பேரூராட்சியின் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,299 ஆகும். அரசாணை (நிலை) எண் 270, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11-06-2004-ன்படி பேரூராட்சியை 3 ஆம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்திட தேவையான குறைந்தபட்ச மக்கள் தொகை 30,000 ஆகும். மேலும் மேற்காண் பேரூராட்சியுடன் இள்ளலூர், தண்டலம், ஆலத்தூர் ஆகிய ஊராட்சிகளை இணைத்திட மேற்குறிப்பிட்ட உள்ளாட்சி மன்றங்களால் தீர்மானம் இயற்றப்பட்டு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஏதும் வரப்பெறவில்லை. எனவே, திருப்போரூர் பேரூராட்சியை 3 ஆம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்திட இயலாது.

149—

குடிநீர்

வினா எண் 120115—திரு. கே.பி. இராமசுவாமி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

இராசிபுரம் நகராட்சிக்கு கண்டர்குல மாணிக்கத்திலிருந்து தனிக்குழாய்கள் அமைத்து காவிரி நீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

இராசிபுரம் நகராட்சிக்கு இராசிபுரம்—எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட காவேரி ஆற்று குடிநீர் தற்பொழுது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 86 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வழங்கும் பணிக்கு விரிவான திட்டமதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தம் முடிவுசெய்த பின் பணிகள் துவங்கப்படும்.

150—

பேரூராட்சியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 120145—திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தலைவாசல் தொகுதி, தம்மம்பட்டி பேரூராட்சியை மூன்றாம்நிலை நகராட்சியாக தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 270, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11-06-2004-ன்படி பேரூராட்சியை 3 ஆம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்திட தேவையான குறைந்தபட்ச மக்கள் தொகை 30,000 என இருத்தல் வேண்டும். மேலும் தம்மம்பட்டி பேரூராட்சியின் மக்கள் தொகை 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 20,751 ஆகும். எனவே, தலைவாசல் தொகுதி, தம்மம்பட்டி பேரூராட்சியை 3 ஆம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்திட இயலாது.

[2011 பிப்ரவரி 10

151—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 121581—திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூலக்கரைப்பட்டி பேரூராட்சி பகுதியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், மூலக்கரைப்பட்டி பேரூராட்சி பகுதியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு போதிய சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

152—

மின் நிலையம்

வினா எண் 101888—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூரில் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். பெருகிவரும் மின் பளுவை கருத்தில் கொண்டு மொரப்பூர் பகுதியில் ஒரு 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

153—

மின் உற்பத்தி

வினா எண் 101912—திரு. போ. சின்னப்பன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளாத்திகுளம் தொகுதி, ஆரங்குடியில் வேலிகருவை மரங்களிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

154—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 104217—திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிணத்துக்கடவு தொகுதி, ராமபட்டினம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

கிணத்துக்கடவு தொகுதி, ராமபட்டினம் பகுதியில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்க தேவையான

[2011 பிப்ரவரி 10

நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகின்றது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைப்பதற்கு பணிகள் மேற்கொள்ளப்படும்.

155—

துணை மின் நிலையம்

வினா எண் 104395—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், சிந்தாமணிப்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், சிந்தாமணிப்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் தற்போது இல்லை.

156—

துணை மின் நிலையம்

வினா எண் 105662—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தொப்பூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி தொகுதி, தொப்பூர் பகுதியில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்க தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகின்றது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

157—

மின்சாரம் வழங்குதல்

வினா எண் 107592—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வெண்ணந்தூர் பகுதியில் உள்ள விசைத்தறி தொழிலாளர்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். வெண்ணந்தூர் பகுதியில் உள்ள விசைத்தறி தொழிலாளர்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

158—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 107803—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

செங்கல்பட்டு தொகுதி, நடுவக்கரை ஊராட்சியில் கூடுதலான திறனுள்ள மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். நடுவக்கரை ஊராட்சியில் கூடுதலான திறனுள்ள மின்மாற்றி (100KVA) அமைக்கப்பட்டுள்ளது.

159—

மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 108476—திரு. ப. மகேந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், வாலாந்தூர் கிராமத்தில் 110/11 கிலோ வாட் திறனுள்ள துணை மின் நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம்.

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், வாலாந்தூர் கிராமத்தில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் 11—வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

160—

மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 109529—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

காவேரிப்பட்டினம் தொகுதி, பிக்கன அள்ளி ஊராட்சி, வெள்ளி சந்தை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

காவேரிப்பட்டினம் தொகுதி, பிக்கன அள்ளி ஊராட்சி, வெள்ளி சந்தை கிராமத்தில் புதியதாக மேலும் ஒரு துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

161—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 109625—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், அஸ்தம்பட்டி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், அஸ்தம்பட்டியில் துணை மின் நிலையம் அமைத்து இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

162—

சூரிய சக்தி பற்றிய விழிப்புணர்வு

வினா எண் 11642—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரியசக்தியை அதிகளவில் பயன்படுத்த மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையில் புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான கருத்தரங்கங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன. அதில் சூரியஒளி சக்தி சாதனங்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் பொறியியல் வல்லுநர்கள் பங்கேற்று சூரியஒளி மற்றும் பிற சக்தியின் பயன்பாடு குறித்து விளக்கங்கள் அளித்து வருகின்றனர். மேலும், பொறியியல் கல்லூரிகளிலும் இதுபோன்ற கருத்தரங்கங்கள் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் பல்வேறு துறையைச் சார்ந்தவர்களும், கல்லூரி மாணவர்களும், சூரியசக்தியின் பயன்பாட்டை அறிந்து கொள்கின்றனர்.

163—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 113204—திரு. சுப. மதியரசன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இளையான்குடி தொகுதி, முனைவென்றியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இளையான்குடி தொகுதி, முனைவென்றியில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

2011 பிப்ரவரி 10]

164—

மின்சாரம் தயாரித்தல்

வினா எண் 117380—திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவாணி நீர்த்தேக்கத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சிறுவாணி அணையிலிருந்து கோயம்புத்தூர் மற்றும் அதன் துணைப் பகுதிகளின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான குடிநீர்த் திட்டம் தமிழக மற்றும் கேரள மாநில அரசுகளிடையே 19-8-1973-ம் நாள் போடப்பட்ட ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்த நீரைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதற்காக 3 மெகாவாட் மின் திறன் கொண்ட சிறுவாணி புனல் மின்திட்டம் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் உத்தேசிக்கப்பட்டது.

இரு மாநிலங்களுக்கிடையே உள்ள ஒப்பந்தத்தில் இந்த குடிநீர்த் திட்டம் இடம் பெற்றுள்ளதால், சிறுவாணி புனல் மின்திட்டத்தை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள கேரள அரசின் ஒப்புதல் பெறப்படவேண்டும். கேரள அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

165—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 122308—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

உசிலம்பட்டி தொகுதி, வாலாந்தூர் ஊராட்சி, வாலாந்தூரில் 110/11 கிலோ வாட் திறன் கொண்ட புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். உசிலம்பட்டி தொகுதி, வாலாந்தூர் ஊராட்சி, வாலாந்தூரில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் 11-வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான நிலம் கண்டு அறியப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், துணை மின் நிலையம் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்படும்.

166—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 122309—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, தொட்டப்பநாயக்கனூர் ஊராட்சி, இடையப்பட்டியில் 110/11 கிலோ வாட் திறன் கொண்ட புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

ஆம். உசிலம்பட்டி தொகுதி, தொட்டப்பநாயக்கனூர் ஊராட்சி, இடையப்பட்டியில் ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் 11-வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான நிலம் கண்டு அறியப்பட்டுள்ளது. நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்தப்பட்டபின் துணை மின் நிலையம் அமைப்பதற்கு பணிகள் மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

167—

கணினி மயமாக்குதல்

வினா எண் 16955—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி ஊராட்சி, தொடக்க கூட்டுறவு வங்கியை கணினி மயமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பாகல்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி உட்பட 13 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை கணினி மயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

168—

கூட்டுறவு பண்டகசாலையைத் துவக்குதல்

வினா எண் 54183—திருமதி ஜி. லதா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இந்தியாவிலேயே முதல் தரமாக செயல்பட்டு வந்த வேலூர் கற்பகம் கூட்டுறவு பண்டகசாலையை மீண்டும் துவக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கற்பகம் கூட்டுறவு சிறப்பங்காடி 1-1-1968-ல் துவக்கப்பட்டது. இதன் செயல்பாடுகள் எக்காரணத்திற்காகவும் இடையில் நிறுத்தப்படவில்லை. தற்போது வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு

[2011 பிப்ரவரி 10

சொந்தமான கட்டடத்தில் (இராஜகோபால் நிலையம்) 1-12-1998 முதல் தொடர்ந்து இயங்கி வருகிறது.

169—

கூட்டுறவு கடன் சங்கம் துவக்குதல்

வினா எண் 57540—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், நெல்மடூரில் புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெல்மடூர் கிராமத்தைச் சேர்ந்த 119 நபர்கள் பார்த்திபனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். அதில் 32 நபர்கள் மட்டும் கடன் பெறும் உறுப்பினர்களாக உள்ளனர். ரூ.5.10 இலட்சம் அளவிற்கு மட்டுமே கடன் உள்ளது. இவ்வாறு மிகக் குறைந்த அளவே உறுப்பினர்களாக உள்ளதாலும், இக்கிராமத்தில் மிக்க குறைந்த அளவாக 402 ஏக்கர் மட்டுமே விளை நிலங்கள் உள்ளதாலும் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் துவங்கப்படின் அவ்வங்கி தற்சார்புள்ள சங்கமாகச் செயல்பட வாய்ப்பில்லை. மேலும், அரசு நிர்ணயம் செய்துள்ள நியதிகளை நிறைவு செய்யாத நிலையில் நெல்மடூர் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

170—

கூட்டுறவு வங்கி துவக்குதல்

வினா எண் 81609—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) தருமபுரி தொகுதி, கொண்டகரஅள்ளி ஊராட்சி, வத்தல்மலையில் கூட்டுறவு வங்கி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, கொண்டகரஅள்ளி ஊராட்சி, வத்தல்மலைக்கு புதியதாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

171—

கூட்டுறவு வங்கி துவக்குதல்

வினா எண் 104312—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கலசப்பாக்கம் தொகுதி, ஏலத்தூரில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கலசப்பாக்கம் தொகுதியில் வில்வராயநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் விவகார எல்லையில் உள்ள ஏலத்தூர் கிராமத்தில் 285 ஏக்கர் நிலம் மட்டும் உள்ளதாலும், ரூ.21.25 இலட்சம் அளவிற்கு மட்டுமே கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாலும், அரசு ஆணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், ஏலத்தூரில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் துவக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

172—

வேளாண்மை கூட்டுறவு வங்கி

வினா எண் 115850—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, மருதூர் ஊராட்சி, மருதூர் மற்றும் கே. புங்கம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை மீண்டும் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

173—

கூட்டுறவு வங்கி துவக்குதல்

வினா எண் 122680—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம் சூரப்பள்ளியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2008-ன்படி

புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைத்திட

(அ) குறைந்தபட்சம் 4950 ஏக்கர் பயிரிடக் கூடிய நிலப்பரப்பு இருத்தல் வேண்டும்.

(ஆ) மொத்த உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 60 விழுக்காடு கடன் பெறும் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(இ) குறைந்த பட்சம் ஓராண்டிற்கு ரூ.2.00 கோடி அளவிற்கு அனைத்துவகைக் கடன்கள் வழங்கப்பட வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

தோரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில விவகார எல்லையில் சூரப்பள்ளி வருவாய் கிராமம் அமைந்துள்ளது. எனவே, வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைத்திட தேவையான 4950 ஏக்கர் சாகுபடி நிலப்பரப்பு இல்லாத நிலையிலும் தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வரும், தோரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் வாழ்திறன் பாதிக்கப்படும் என்பதாலும், புதிய வங்கி அமைக்க அனைத்து நிபந்தனைகளும் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் சூரப்பள்ளி வருவாய் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைத்திட சாத்தியக் கூறுகள் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

174—

உழவர் சந்தை அமைத்தல்

வினா எண் 48239—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினத்தில் உழவர் சந்தை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினத்தில் புதிய உழவர் சந்தை அமைக்கப்பட்டு 24-2-2009 முதல் செயல்பட்டு வருகிறது.

175—

வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 57444—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறையில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறையில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

176—

பயிற்சிப் பள்ளி அமைத்தல்

வினா எண் 58700—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஸ்பேட்டை விவசாய விதைப் பண்ணையில் உதவி விவசாய அதிகாரி பயிற்சிப்பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஸ்பேட்டை விவசாய விதைப் பண்ணையில் வேளாண்மை உதவி அலுவலர்களுக்கான பயிற்சி பள்ளி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

177—

விதைப் பண்ணை அமைத்தல்

வினா எண் 74636—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் விதைப் பண்ணை மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரையில் விதைப் பண்ணை மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

178—

விற்பனைக் கூடத்தை செயல்படுத்துதல்

வினா எண் 81625—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கோட்டை மாரியம்மன் பகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஓமலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 24-11-2006-ல் அமைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, 1/2 கி.மீ. தொலைவிலுள்ள கோட்டைமாரியம்மன் கோவில் பகுதியில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் வாய்ப்பு இல்லை.

179—

பயிற்சி மையம் ஏற்படுத்துதல்

வினா எண் 89322—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, மாமல்லபுரத்தில் உணவு பதப்படுத்துதல் பயிற்சி மையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டுத் தொகுதி, மாமல்லபுரத்தில் அரசு உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

180—

தரம் உயர்த்துதல்

வினா எண் 90760—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அரசு விதைப் பண்ணையை தரம் உயர்த்தி வேளாண்மை கல்வி நிறுவனம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அரசு விதைப் பண்ணையை தரம் உயர்த்தி வேளாண்மை கல்வி நிறுவனம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

181—

உழவர் சந்தை

வினா எண் 95965—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, முத்துநாய்க்கன்பட்டி ஊராட்சியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியில் உழவர் சந்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

182—

விதைப் பண்ணை மையம்

வினா எண் 102030—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் நவீன விதைப் பண்ணை மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்கனவே 4 அரசு விதைப் பண்ணைகள் இயங்கி வருவதால் மேல்மலையனூர் தொகுதியில், அரசு விதைப் பண்ணை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

183—

உழவர் சந்தை

வினா எண் 102032—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்மலையனூர் தொகுதி, அவலூர்பேட்டை மற்றும் ஆலம்பூண்டி கிராமங்களில் உழவர் சந்தை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேல்மலையனூர் தொகுதி, அவலூர்பேட்டை மற்றும் ஆலம்பூண்டி கிராமங்களில் உழவர் சந்தை துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

184—

வேளாண் விற்பனைக் கூடம்

வினா எண் 102068—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மேல்மலையனூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

185—

பதப்படுத்தும் தொழிற்சாலை

வினா எண் **104268—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் தக்காளி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் தக்காளி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

186—

பூக்கள் குளிர்பதனக் கிடங்கு

வினா எண் **104504—திரு. பெ. மோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில் பூக்களுக்கு குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில் பூக்களுக்கு குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

187—

பூக்கள் குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 104875—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் மல்லிகைப் பூ குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் மல்லிகைப் பூ குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

188—

விதைப் பண்ணை

வினா எண் 106103—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பகுதியில் அரசு விதைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பகுதியில் அரசு விதைப் பண்ணை அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

189—

மண் பரிசோதனை நிலையம்

வினா எண் 106104—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் காஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு நடமாடும் மண் பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆய்வுக் கூடம் செங்கல்பட்டு தொகுதியை உள்ளடக்கி காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகிறது. எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடமாடும் மண் பரிசோதனை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

190—

வேளாண் கல்லூரி

வினா எண் 106107—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

191—

வேளாண்மைப் பயிற்சிப் பள்ளி

வினா எண் 106211—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

192—

உழவர் சந்தை

வினா எண் 106666—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) திருப்பூர் மாவட்டம், புதிய காங்கேயம் நகராட்சி பகுதி மற்றும் சென்னிமலையில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) (1) தற்போது புதிய காங்கேயம் நகராட்சி பகுதியில் உழவர் சந்தை அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் முன் நுழைவு அனுமதி கோரப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியாளரின் முன்நுழைவு அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், மேற்படி இடத்தில் உழவர் சந்தை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(2) சென்னிமலை வட்டாரம் பெருந்துறை வட்டம், ஈரோடு மாவட்டத்தில் உள்ளது. இப்பகுதியிலிருந்து பெருந்துறை உழவர் சந்தை 13 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இதுதவிர, மேலும் 5 உழவர் சந்தைகள் ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ளன. இங்குள்ள சாகுபடி பரப்பில் விளையும் காய்கறிகள் உழவர் சந்தைக்கு ஆண்டு முழுவதற்கும் போதுமானதல்ல என்பதால், சென்னிமலையில் உழவர் சந்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

193—

மண் பரிசோதனை நிலையம்

வினா எண் **106679—திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதியில் மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

சேந்தமங்கலம் தொகுதியில் தனியாக மண் பரிசோதனை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

194—

மண் பரிசோதனை நிலையம்

வினா எண் 107469—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, திருக்கடையூரில் மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, திருக்கடையூரில் தனியாக மண் பரிசோதனை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

195—

தொழில்நுட்பப் பிரிவு

வினா எண் 107494—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டில் வேளாண் தொழில்நுட்பப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டில் வேளாண் தொழில்நுட்பப் பிரிவு துவங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

196—

மண் பரிசோதனை நிலையம்

வினா எண் 108365—திரு. பெ. மோகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதியில் மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஏற்கெனவே செயல்பட்டு வரும் மண் பரிசோதனை நிலையமும், நடமாடும் மண் பரிசோதனை நிலையமும் ஒட்டப்பிடாரம் தொகுதியையும் உள்ளடக்கி செயல்பட்டு வருவதால், ஒட்டப்பிடாரம் தொகுதியில் தனியாக மண் பரிசோதனை நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

197—

வேளாண் விற்பனை

வினா எண் 108366—திரு. பெ. மோகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், புதியம்பத்தூர் பசுவந்தனை மற்றும் ஒட்டப்பிடாரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், புதியம்பத்தூர் பசுவந்தனை மற்றும் ஒட்டப்பிடாரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

198—

உழவர் சந்தை

வினா எண் 108989—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில், சட்ராஸ் சாலையில் பேரூராட்சிக்குச் சொந்தமான மீன் அங்காடியில் புதிய உழவர் சந்தை அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியரின் முன் நுழைவு அனுமதி கோரப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் முன் நுழைவு அனுமதி பெறப்பட்டவுடன், மேற்படி இடத்தில் உழவர் சந்தை தொடங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

199—

மண் வள அட்டை

வினா எண் 115503—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் மண் மற்றும் பாசன நீர் ஆய்வு செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு மண் வள அட்டை விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் மண் மற்றும் பாசன நீர் ஆய்வு செய்யும் நிலையம் செயல்பட்டு வருவதுடன், மண் வள அட்டைகளும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

200—

வேளாண் கல்லூரி

வினா எண் 115364—திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறையில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

201—

கட்டடம்

வினா எண் 28550—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசிபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

2008-2009 ஆண்டு வரவு செலவு திட்டக் கூட்டத் தொடரின் போது, ஏனைய அறிவிப்புகளுடன் இராசிபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டப்படும் என்ற அறிவிப்பினையும் மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணி மற்றும் சட்டம்) அவர்கள் வெளியிட்டார்கள். அதற்கிணங்க இராசிபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.465.26 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை நிலை எண் 732 உள்(நீ.ம-3) துறை, நாள்: 16-8-2010—ல் ஆணை வெளியிடப்பட்டு, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

202—

நீதிமன்ற வளாகம்

வினா எண் 60747—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரில் தனி நீதிமன்ற வளாகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

ஓமலூரில் தனி நீதிமன்ற வளாகம் துவக்குவதற்கான செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்தில் இருந்து பெறப்படும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

முன்னுரிமை பட்டியலில் இடம்பெறும் பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் அரசின் நிதிநிலைமைக்கேற்ப, அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

203—

வழிகாட்டி புத்தகங்கள்

வினா எண் 121122—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசின் அனைத்துத் துறைகளின் சட்ட திட்டங்களை தெரிந்து கொள்கின்ற வகையில், வழிகாட்டி புத்தகங்களை வெளியிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 263, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ட்டி) துறை, நாள்: 04-11-1997-ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, அரசு நடைமுறைகள் மற்றும் அரசு நலத் திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றிய விவரங்கள் மக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் அனைத்துத் துறைகளும் "மக்கள் சாசனம்" என்ற ஒரு கையேட்டை வெளியிட்டுள்ளன. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 4(1) (b)-ன்கீழ் ஒவ்வொரு துறையும் தனது அனைத்து நடைமுறைகளையும் பொது மக்கள் அறியும் வண்ணம் உரிய தகவல்களை (Proactive Disclosure) வெளியிட்டுள்ளன. மேற்காணும் ஆவணங்களை தமிழக அரசின் www.tn.gov.in என்ற வலைதளத்தில் அனைத்துத் துறைகளின் விபரங்களும் கிடைக்கப்பெறும். அவ்வாறு எந்தத் துறையாவது வெளியிடப்படவில்லையெனில், சம்பந்தப்பட்ட துறையை அணுகி தேவையான விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

204—

தேசிய சட்டக் கல்லூரி

வினா எண் 121636—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னையில் தேசிய சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சென்னையில் தேசிய சட்டக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

205—

சட்டக் கல்லூரி

வினா எண் 122265—திரு. எம்.ஆர். சுந்தரம்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆத்தூர் தொகுதியில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

இல்லை.

206—

சட்டக் கல்லூரி

வினா எண் 122406—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) திருவாரூர் மாவட்டம், திருவாரூரில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

207—

அண்ணா பல்கலைக்கழகம்

வினா எண் 49442—திரு. என். மாலைராஜா: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அண்ணா பல்கலைக்கழகம் திருநெல்வேலி தொகுதியில் அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருநெல்வேலியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அண்ணா பல்கலைக்கழகம் திருநெல்வேலி தொகுதியில் அமைக்கப்படும்.

208—

கிளைப் பல்கலைக்கழகம்

வினா எண் 69819—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் அண்ணா பல்கலைக்கழகத்தின் கிளையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மதுரையில் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் புதியதாகக் துவங்கப்பட்டுள்ளது.

209—

அரசு கலைக் கல்லூரி

வினா எண் 101890—திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மொரப்பூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

210—

அரசு கலைக் கல்லூரி

வினா எண் 102253—திரு. அ. சௌந்திரபாண்டியன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குன்னூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குன்னூர் தொகுதியில் அரசு கல்லக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

211—

அரசு மகளிர் கல்லூரி

வினா எண் 102755—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, சோலையார்பேட்டை பகுதியில் அரசு மகளிர் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, சோலையார்பேட்டை பகுதியில் அரசு மகளிர் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசிலனையில் இல்லை.

212—

அரசு மகளிர் கல்லூரி

வினா எண் 102962—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூரில் அரசு மகளிர் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூரில் அரசு மகளிர் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

213—

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 103716—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தரகம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

214—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 104968—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் பெண்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் பெண்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

215—

மகளிர் கல்லூரி

வினா எண் 108422—திரு. பெ. மோகன்: *மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) ஒட்டப்பிடாரத்தில் மகளிர் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரத்தில் மகளிர் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

216—

தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்

வினா எண் 108427—திரு. கே.எஸ்.கே. இராஜேந்திரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை மதுரையில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மதுரையில் துவக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

217—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 108613—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மேட்டூர் தொகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

218—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 111979—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாபுரம், திசையன்விளை ஆகிய இடங்களில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

இராதாபுரம், திசையன்விளை என்ற இடத்தில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

219—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 120760—திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அச்சரப்பாக்கம் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

அச்சரப்பாக்கம் தொகுதியில், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

220—

அரசு தொழில்நுட்பக் கல்லூரி.

வினா எண் 121614—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கையில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை தொகுதியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

221—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 127818—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2011 பிப்ரவரி 10

222—

நகரப் பேருந்து

வினா எண் 26078—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூரிலிருந்து தாசசமுத்திரம் அக்ரஹாரம் வழியாக மூக்கனூருக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல புதிய நகரப் பேருந்து ஒன்று மூலம் சேலத்திலிருந்து ஓமலூர், தாசசமுத்திரம், அக்ரஹாரம் வழியாக மூக்கனூருக்கு தினசரி 4 நடைகள் 2-6-2007 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

223—

புதிய தடப் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 26432—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு—கல்பாக்கம்—மேல்மருவத்தூர், கல்பாக்கம்—திருநெல்வேலி, கல்பாக்கம்—கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிய தடங்களில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* செங்கல்பட்டிலிருந்து கல்பாக்கம் மற்றும் மேல்மருவத்தூர் ஆகிய தடங்களில் பேருந்து இயக்குவது குறித்து

2011 பிப்ரவரி 10]

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டலம் மூலமாகதான் பேருந்து இயக்க இயலும். மேலும் கல்பாக்கத்திலிருந்து திருநெல்வேலி செல்லும் பயணிகள் நகர மற்றும் புறநகர் பேருந்து வசதியைப் பயன்படுத்தி செங்கல்பட்டு வந்து, அதன் வழியாக திருநெல்வேலிக்கு இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்துகளை பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சி மண்டலம் மூலமாக கல்பாக்கத்திலிருந்து—திருச்சிக்கு தினசரி 2 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி திருச்சி வரை சென்றுப் அங்கிருந்து திருநெல்வேலி செல்ல ஏதுவாக உள்ளது. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக தடம் என் 471-ல் கல்பாக்கத்திலிருந்து கோயம்புத்தூருக்கு தினசரி இரண்டு அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வசதியை கல்பாக்கம்—கோயம்புத்தூர் பயணிகள் பயன்படுத்தி கொள்ளலாம்.

224—

பேருந்து இயக்குதல்

வினா எண் 31385—திரு. செ. புஷ்பராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூரிலிருந்து காஞ்சிபுரத்திற்கு சிறுவந்தாடு, வளவனூர், விழுப்புரம் வழியாகவும், கடலூரிலிருந்து சென்னைக்கு பாகூர், பாக்கம், மதுகடிப்பட்டு வழியாகவும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் கிளை 1–லிருந்து புறநகர்ப் பேருந்து தடம் எண் 159, கடலூருக்கும்—விழுப்புரத்திற்கும் இடையே மேல்பட்டாம்பாக்கம், சொர்ணாவூர், மடுகரை, சிறுவந்தாடு, வளவனூர் வழியாக 4 நடைகளில் பேருந்து வசதிகள் உள்ளன.

இந்நடைகள் மூலம் விழுப்புரம் சென்றடைந்தால், விழுப்புரத்திலிருந்து காஞ்சிபுரத்திற்குச் செல்ல போதுமான அளவில் பேருந்து வசதிகள் உள்ளன. மேலும் புறநகர்ப் பேருந்து தடம் எண் 337, கடலூருக்கும்-விழுப்புரத்திற்கும் இடையே கன்னிக்கோயில், பாகூர், பாக்கம், மிட்டாமண்டகப்பட்டு, மதுகடிப்பட்டு, வளவனூர் வழியாக நாளொன்றுக்கு 8 நடைகளில் பேருந்து வசதிகள் உள்ளன. இந்நடைகள் மூலம் விழுப்புரம் அல்லது கடலூர் சென்றடைந்தால், அங்கிருந்து சென்னை செல்ல ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில் பேருந்து இயக்க அவசியமில்லை.

225—

பேருந்து வசதி

வினா எண் 57315—திரு. எஸ். லட்சுமணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூரிலிருந்து கேரள மாநிலம் எர்ணாகுளத்திற்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

போடிநாயக்கனூர்-எர்ணாகுளம் தடம் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், மேற்படி தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறும் தமிழ்நாடு—கேரளா ஆகிய இரு மாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின் போது பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

226—

பேருந்து இயக்குதல்

வினா எண் 57316—திரு. எஸ். லட்சுமணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

போடிநாயக்கனூரிலிருந்து நாகர்கோவில் வழியாக கன்னியாகுமரிக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட் மூலமாக போடிநாயக்கனூரிலிருந்து கன்னியாகுமரிக்கு நாகர்கோவில் வழியாக தினசரி இரண்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வசதியை போடிநாயக்கனூரிலிருந்து கன்னியாகுமரி செல்லும் பயணிகள் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது.

227—

புதிய பேருந்து

வினா எண் 59538—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி திப்பிரெட்டிஅள்ளி ஊராட்சி, ராமதாஸ் நகர், பெருமாள் நகர் வழியாக கொளந்தைக் கவுண்டன் கொட்டாய் கிராமத்திற்கு பாப்பிரெட்டிப்பட்டி (பொம்மிடி வழியாக) பத்திரெட்டிஅள்ளி முருகர் கோயில் வரை புதிய பேருந்து வழித்தடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாப்பிரெட்டிப்பட்டி—பத்திரெட்டிஅள்ளி முருகன் கோயில் (வழி) பொம்மிடி, திப்பிரெட்டிஅள்ளி, சொரக்காப்பட்டி, ராமதாஸ் நகர், கொளந்தைகவுண்டன் கொட்டாய், பெருமாள் நகர் தடத்தின் நீளம் 22.0 கி.மீ. ஆகும். பாப்பிரெட்டிப்பட்டி முதல் பொம்மிடி வரை 16 கி.மீ. தூரத்திற்கும் பொம்மிடி முதல் திப்பிரெட்டிஅள்ளி வரை 2.0 கி.மீ. தூரத்திற்கும் பகுதிவாரியாகப் பேருந்து வசதி செய்யப் பெற்றுள்ளது.

[2011 பிப்ரவரி 10

திப்பிரெட்டிஅள்ளி முதல் சொரக்காப்பட்டி வரை சாலை 2 கி.மீ. தூரத்திற்கு தார்சாலை மிகவும் குறுகலாகவும், பெரிய பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாகவும் இல்லாத காரணத்தினால் இத்தடத்தில் பேருந்து வசதியினை தற்சமயம் செய்திட இயலாத நிலையுள்ளது.

228—

பேருந்து வசதி

வினா எண் 61128—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலிருந்து தருமபுரிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டையிலிருந்து தருமபுரி 269 கி.மீ. தூரத்தில் உள்ளது. புதுக்கோட்டையிலிருந்து திருச்சிக்கு போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் 369 நடைகள் ஒவ்வொரு நான்கு நிமிட இடைவெளியிலும் இயக்கப்படுகிறது. திருச்சியிலிருந்து சேலத்திற்கு போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் 152 நடைகள் ஒவ்வொரு பத்து நிமிட இடைவெளியிலும் இயக்கப்படுகிறது. சேலத்திலிருந்து தருமபுரிக்கு ஒவ்வொரு ஐந்து நிமிட இடைவெளியிலும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. திருச்சியிலிருந்து தருமபுரி வழியாக ஓசூர் மற்றும் பெங்களூருக்கு கழகப் பேருந்துகள் 24 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்து வசதியே இவ்வழித்தடத்திற்கு போதுமானதாக உள்ளது. நேர பயணிகளின் அடர்வு விகிதம் அதிகரிக்கும் பட்சத்தில் தேவையின் அடிப்படையில் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

229—

புதிய பேருந்து இயக்குதல்

வினா எண் 76516—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) காங்கேயத்திலிருந்து கோயம்புத்தூருக்கு விரைவுப் பேருந்து (P.P.) மற்றும் குறிப்பிட்ட நிறுத்தங்களில் நின்று செல்லும் (எல்.எஸ்.எஸ்.) புதிய பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்—கோயம்புத்தூர் வழி காங்கேயம் 7 பேருந்துகள் 28 தனி நடைகள் பி.பி. பேருந்தா இயக்கப்பட்டு வருகின்றன. தவிர, கொடுமுடி—கோயம்புத்தூர் மற்றும் திருச்சி—கோயம்புத்தூர் வழித்தட பேருந்துகள் காலை 8, 9.55, மதியம் 3.45, மாலை 5.10, 5.55, 6.10 மற்றும் இரவு 8.30 மணிகளுக்கு காங்கேயத்தில் புறப்பட்டு கோயம்புத்தூர் செல்லும் வகையில் 7 தனிநடைகள் இயக்கப்படுகின்றன.

230—

பேருந்து வசதி

வினா எண் 101828—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திக்குளத்திலிருந்து திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை:—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளாத்திக்குளத்திலிருந்து—திருப்பதிக்கு நேரடிப் பேருந்து எதுவும் இயக்கப்படவில்லை. விளாத்திகுளத்திலிருந்து திருப்பதி செல்லும் பயணிகள் புறநகர் பேருந்து வசதியை பயன்படுத்தி அருப்புக்கோட்டை சென்று அதன் வழியாக இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்து தடம் எண் 981ன் (திருச்செந்தூர்—திருப்பதி வழி—அருப்புக்கோட்டை) பேருந்து வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம். விளாத்திக்குளம்—திருப்பதி தடத்தில் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும் பட்சத்தில் மேற்படி தடத்தில் நேரடி பேருந்து இயக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

231—

பேருந்து இயக்குதல்

வினா எண் 101829—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளத்திலிருந்து பெங்களூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* விளாத்திக்குளத்திலிருந்து பெங்களூர் செல்லும் பயணிகள் புறநகர் பேருந்து வசதியை பயன்படுத்தி அருப்புக்கோட்டை சென்று அதன் வழியாக பெங்களூருக்கு இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்துகளை (தடம் எண் 871 திருச்செந்தூர்—பெங்களூர் வழி—அருப்புக்கோட்டை மற்றும் தடம் எண் 872 தூத்துக்குடி—பெங்களூர் வழி—அருப்புக்கோட்டை) பயன்படுத்திக் கொள்ளலாம்.

விளாத்திக்குளம்—பெங்களூர் தடத்தில் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும் பட்சத்தில் மேற்படி தடத்தில் நேரடி பேருந்து இயக்குவது குறித்து பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

232—

பேருந்து இயக்குதல்

வினா எண் 101830—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக விளாத்திக்குளத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு நேரடியாக பேருந்து எதுவும் இயக்கப்படவில்லை. விளாத்திக்குளத்திலிருந்து—திருவனந்தபுரம் செல்லும் பயணிகள் புறநகர் பேருந்து வசதியை பயன்படுத்தி கோவில்பட்டி வந்து அதன் வழியாக திருவனந்தபுரத்திற்கு இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். கோவில்பட்டியிலிருந்து—திருவனந்தபுரத்திற்கு அரசு விரைவுப் பேருந்துமூலம் நாள் ஒன்றுக்கு/பேருந்து ஒன்றுக்கு சராசரியாக ஒரு பயணி வீதம் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். விளாத்திக்குளத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு செல்லும் நேரடி பயணிகளின் அடர்வு அதிகரிக்கும் பட்சத்தில் மேற்படி தடத்தில் நேரடி பேருந்து இயக்குவது குறித்து பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

233—

பேருந்து வசதி

வினா எண் 101831—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளத்திலிருந்து பாண்டிச்சேரிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக விளாத்திக்குளத்திலிருந்து—பாண்டிச்சேரிக்கு நேரடியாக பேருந்து இயக்கப்படவில்லை. விளாத்திக்குளத்திலிருந்து பாண்டிச்சேரிக்கு செல்லும் பயணிகள் புறநகர் பேருந்து வசதியை பயன்படுத்தி அருப்புக்கோட்டை சென்று அதன் வழியாக இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்து தடம் எண் 847 ஈ—ல்

TRUTH ALONE TRIUMPHS

திருச்செந்தூரிலிருந்து—அருப்புக்கோட்டை வழியாக பாண்டிச்சேரிக்கு இயக்கப்படும் பேருந்துகளை பயன்படுத்திக் கொள்ளலாம். விளாத்திக்குளம்—பாண்டிச்சேரி தடத்தில் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும் பட்சத்தில் மேற்படி தடத்தில் நேரடி பேருந்து இயக்குவது குறித்து பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

234—

சொகுசு பேருந்து

வினா எண் 101832—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளத்திலிருந்து சென்னைக்கு அதிநவீன சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் மூலமாக தடம் எண் 171-ல் விளாத்திக்குளத்திலிருந்து—சென்னைக்கு தினசரி இரண்டு அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் இரண்டு நடைகள் வீதம் 18-07-2009 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

235—

உணவு விடுதி

வினா எண் 104777—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதி, வேம்பாரிலிருந்து தூத்துக்குடி செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில் போக்குவரத்துக் கழக உணவு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேம்பார்—தூத்துக்குடி கிழக்குக் கடற்கரைச் சாலையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி மண்டலத்திற்கு சொந்தமான இடம் எதுவும் இல்லை என்பதால் போக்குவரத்துக் கழக உணவு விடுதி கட்டும் திட்டம் தற்போது இல்லை.

236—

பேருந்து வசதி

வினா எண் 106094—திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, மறைமலைநகர் முதல் கோயம்பேடு வரை மாநகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநகர போக்குவரத்துக் கழக இயக்க எல்லை 40 கி.மீ.-லிருந்து 50 கி.மீ. ஆக விரிவுபடுத்தப்பட்டது. அதன்படி மாநகர போக்குவரத்துக் கழகம் விரிவுப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு பேருந்துகளை இயக்கி வருகிறது. அவ்வகையில் திநகர், அஸ்தினாபுரம், பிராட்வே, தாம்பரம், உயர்நீதிமன்றம் போன்ற சென்னையின் பல்வேறு பகுதிகளிலிருந்து மறைமலைநகருக்கு பேருந்துகளை இயக்கி வருகிறது. மேலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் & காஞ்சிபுரம் மண்டலத்தைச் சார்ந்த நூற்றுக்கணக்கான பேருந்துகளை மறைமலைநகர் வழியாகவே கோயம்பேட்டிற்கு இயக்குகிறது.

மறைமலைநகர் பகுதி மக்கள் மாநகர போக்குவரத்துக் கழக பேருந்துகள்மூலம் தாம்பரம் வந்தடைந்தால், அவ்வழியாக மிகமிக

அதிக எண்ணிக்கையில் பேருந்துகள்மூலம் கோயம்பேடு சென்றடையலாம். எனவே, மறைமலைநகர் பகுதி மக்கள் கோயம்பேடு செல்வதற்கு தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானதாக உள்ளது.

237—

உணவு விடுதி

வினா எண் 106216—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை—இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் உணவு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரையிலிருந்து இராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அடுத்தடுத்து பெரிய நகரங்கள் இருப்பதாலும், பேருந்துகள் எல்லா நகரங்களிலும் நின்று செல்வதாலும், அப்பகுதியில் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் உணவு விடுதி கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

238—

போக்குவரத்து அலுவலகம்

வினா எண் 106512—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் போதிய வாகன எண்ணிக்கை இல்லை. வாகன எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

239—

சிறப்பு பேருந்து

வினா எண் **107413**—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், வேதகிரீஸ்வரர் கோயில் பௌர்ணமி கிரிவலத்திற்கு அனைத்துப் பகுதிகளிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றத்தில் வேதகிரீஸ்வரர் கோயில் பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே உள்ளது. திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையம் வழியாக கோயம்பேடு, தாம்பரம், திருத்தணி, காஞ்சிபுரம், வேலூர், ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் இருந்து நேரடியாக தினசரி 240 நடைகள் புறநகர் பேருந்துகள்மூலம் பேருந்து வசதி உள்ளது. செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் வழியாக தினசரி 80 நடைகள் நகரப் பேருந்துகள்மூலம் பேருந்து வசதி உள்ளது. மேற்கண்ட ஊர்களிலிருந்து சிறிய இடைவெளி நேரத்தில் பேருந்து வசதி உள்ளதால், திருக்கழுக்குன்றம் கிரிவலத்திற்கு வருபவர்கள் இயக்கப்படும் பேருந்துகளின்மூலம் உடனடியாக பயணம் செய்கின்றனர். எனவே, கிரிவலம் வரும் பயணிகளுக்கு தற்போதுள்ள பேருந்து வசதிகள் நிறைவுள்ளதாய் அமைந்துள்ளது.

[2011 பிப்ரவரி 10

240—

பேருந்து வசதி

வினா எண் 107532—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திண்டிவனம் முதல் வல்லிபுரம், மதுராந்தகம், திருக்கழுக்குன்றம், மானாமதி, திருப்போரூர் வழியாக சென்னைக்கு புதிய வழித்தடத்தில் அரசு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வினாவில் உள்ள கோரிக்கை தடத்தின் நீளம் 140 கி.மீ. ஆகும். இது ஒரு சுற்றுத்தடம் என்பதுடன் தடத்தின் பெரும்பாலான பகுதி பிரதான மாவட்டச் சாலையில் உள்ளது. கோரிய தடத்தில் திண்டிவனத்திலிருந்து சென்னைக்கு நேரடியாக செல்லும் பயணிகள் விரும்ப மாட்டார்கள் என்பதுடன் பயணக் கட்டணமும் பயண நேரமும் அதிகரிக்கும். மேலும், இத்தடத்தில் அனைத்து ஊர்களும் குறுகிய தூரத்தின் மூலம் நேரடியாக சென்னைக்கு பேருந்து வசதி பெற்றுள்ளது.

241—

பேருந்து வசதி

வினா எண் 107538—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தாம்பரத்திலிருந்து கூடுவாஞ்சேரி சிங்கப்பெருமாள் கோவில் வழியாக அனுமந்தபுரத்திற்கு புதிய வழித்தடத்தில் மாநகரப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் இயக்க எல்லை 50 கி.மீ. வரை என விரிவுபடுத்தி அரசு உத்தரவிட்டபிறகு,

2011 பிப்ரவரி 10]

முதன்மைச் சாலைகளில் அமைந்துள்ள திருப்போரூர், செங்கற்பட்டு, மாமல்லபுரம், பழவேற்காடு, திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி போன்ற இடங்களுக்கு மாநகர பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

முதன்மைச் சாலையிலிருந்து உட்புறம் அமைந்துள்ள அனுமந்தபுரத்திற்கு மாநகர் போக்குவரத்து கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது மாநகர் பேருந்து இயக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

எனினும் அனுமந்தபுரத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (காஞ்சிபுரம் மண்டலம்) மூலம் ஏற்கெனவே பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

242—

மாநகரப் பேருந்து

வினா எண் **107539—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரத்திலிருந்து மறைமலைநகர் செங்கல்பட்டு வழியாக திருக்கழுக்குன்றம் வரை புதிய வழித்தடத்தில் மாநகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் இயக்க எல்லை *50* கி.மீ. ஆக விரிவுப்படுத்தப்பட்டது. விரிவுபடுத்தப்பட்ட அவ்வெல்லையிலிருந்து செங்கல்பட்டு *7* கி.மீ. தூரத்தில் உள்ளது. திருக்கழுக்குன்றம் செங்கல்பட்டிலிருந்து *15* கி.மீ. தூரத்தில் இருப்பதால் தாம்பரத்திலிருந்து மறைமலைநகர், செங்கல்பட்டு வழியாக திருக்கழுக்குன்றம் வரை புதிய தடத்தில் மாநகர பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளது.

[2011 பிப்ரவரி 10

243—

சொகுசு பேருந்து

வினா எண் 108353—திரு. இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து திருத்தணிக்கு குளிர்சாதன சொகுசு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம், காஞ்சிபுரம் மண்டலத்தில் புதியதாக குளிர்சாதனப் பேருந்துகள் எதுவும் கொள்முதல் செய்யப்படவில்லை. புதியதாக குளிர்சாதனப் பேருந்துகள் கொள்முதல் செய்யும்போது சென்னை–திருத்தணி தடத்தில் பேருந்துகள் இயக்குவது குறித்து கருத்தில் கொள்ளப்படும்.

244—

போக்குவரத்து

வினா எண் 108962—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை நெடுஞ்சாலையில் உணவிற்காக சுகாதாரமற்ற உணவகத்தில் நிறுத்தப்படுவதை தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தை பொருத்தமட்டில் இக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சுகாதாரமான உணவகங்களில் மட்டும் பேருந்தை நிறுத்தி பயணிகளின் உணவு மற்றும் சிற்றுண்டிக்காக நிறுத்தப்பட்டு வருகின்றது. ஏதேனும் பேருந்து ஒட்டுநர், நடத்துநர் அங்கீகரிக்கப்படாத உணவகங்களில் பேருந்தை

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

நிறுத்தினால் சம்பந்தப்பட்ட பேருந்து ஓட்டுநர் மீது பரிசோதகர் மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும் நடைமுறையில் உள்ளது.

245—

போக்குவரத்து

வினா எண் 110312—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, ஒட்டியம்பாக்கத்திலிருந்து கோயம்பேடுக்கும் மற்றும் ஒட்டியம்பாக்கத்திலிருந்து சோழிங்கநல்லூர் வழியாக பிராட்வேக்கும் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது ஒட்டியம்பாக்கம் பகுதி மக்களின் வசதிக்காக கீழ்க்குறிப்பிட்ட வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன:

தடம் எண்	புறப்படுமிடம்	சேருமிடம்	பேருந்து	பயண நடை
E51	உயர்நீதிமன்றம்	ஒட்டியம்பாக்கம்	1	12
M51C	தியாகராய நகர்	ஒட்டியம்பாக்கம்	1	12
M51B	சைதாப்பேட்டை	காரணை (வழி) ஒட்டியம்பாக்கம்	4	48
M51D	சைதாப்பேட்டை	கேளம்பாக்கம் (வழி) ஒட்டியம்பாக்கம்	1	8
M51K	தாம்பரம்	காரணை/நாவலூர் (வழி) ஒட்டியம்பாக்கம்	2	32

ஒட்டியம்பாக்கத்திலிருந்து இயக்கப்படும் மேற்படி பேருந்துகளைப் பயன்படுத்தி வேளச்சேரி வந்தடைந்தால் கோயம்பேட்டிற்கும்,

[2011 பிப்ரவரி 10

மேடவாக்கம் வந்தடைந்தால் சோழிங்கநல்லூர் மற்றும் உயர் நீதிமன்றத்திற்கு செல்ல போதுமான பேருந்து வசதிகள் உள்ளன.

246—

போக்குவரத்து

வினா எண் 111754—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து காளையார் கோயிலுக்கு நேரடியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது மானாமதுரையிலிருந்து காளையார்கோயிலுக்கு நேரிடையாக நாள் ஒன்றுக்கு 6 நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இதில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு விகிதம் மிகவும் குறைவாக உள்ளது. மேலும், மானாமதுரையிலிருந்து சிவகங்கைக்கு நாள் ஒன்றுக்கு 188 நடைகளும், சிவகங்கையிலிருந்து காளையார் கோவிலுக்கு நாள் ஒன்றுக்கு 225 நடைகளும் என பகுதி பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, இதுவே போதுமானதாகும்.

247—

போக்குவரத்து

வினா எண் 115124—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து சிவகங்கை, திருப்பத்தூர், புதுக்கோட்டை வழியாக திருச்சிராப்பள்ளிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து சிவகங்கை, திருப்பத்தூர், புதுக்கோட்டை வழியாக திருச்சிராப்பள்ளிக்கு நேரடியாக நாள் ஒன்றுக்கு 20 நடைகள் அரசுப் பேருந்து இயக்கப்படுகிறது. மேலும், மானாமதுரை சிவகங்கைக்கும், சிவகங்கை-திருப்பத்தூருக்கும், திருப்பத்தூர்–புதுக்கோட்டைக்கும் பகுதி பகுதியாக அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்படுகிறது.

248—

போக்குவரத்து

வினா எண் 115354—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர், நரிக்குடி அருப்புக்கோட்டை, விருதுநகர் வழியாக கோவில்பட்டிக்கு விரைவுப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர் வழியாக நரிக்குடிக்கு 30 நடைகளும், நரிக்குடியிலிருந்து அருப்புக்கோட்டைக்கு 36 நடைகளும், அருப்புக்கோட்டையிலிருந்து விருதுநகருக்கு 250 நடைகளும், விருதுநகரிலிருந்து கோவில்பட்டிக்கு 460 நடைகளும் என பகுதி பகுதியாக பேருந்துகள் போதுமான அளவில் இயக்கப்படுகிறது. இதில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு விகிதம் குறைவாக இருப்பதாலும் மேற்படி வழித்தடங்கள் கிராமப்புற வழித்தடங்களாக இருப்பதால் விரைவுப் பேருந்துகள் இயக்குவதைவிட மேற்குறிப்பிட்ட நடைகளே போதுமானதாக கருதப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

249—

போக்குவரத்து

வினா எண் 115357—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து சிவகங்கை, திருப்பத்தூர் வழியாக புதுக்கோட்டைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வழியாக புதுக்கோட்டைக்கு நேரடியாக நாள் ஒன்றுக்கு 20 நடைகள் அரசு பேருந்து இயக்கப்படுகிறது. மானாமதுரையிலிருந்து சிவகங்கைக்கு நாள் ஒன்றிற்கு 188 நடைகளும், சிவகங்கையிலிருந்து திருப்பத்தூருக்கு 194 நடைகளும், திருப்பத்தூரிலிருந்து புதுக்கோட்டைக்கு 302 நடைகளும் என பகுதி பகுதியாக அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் பயணம் செய்யும் நேரடிப் பயணிகளின் அடர்வு மிகவும் குறைவாக இருப்பதால் இதுவே போதுமானதாகும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

250—

போக்குவரத்து

வினா எண் 115362—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை அரசு போக்குவரத்துக் கழக பணிமனையில் காசாளர் அறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சிப்காட் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனவே, காசாளருக்கென தனி அறை கட்டும் அவசியம் எதுவும் இல்லை.

251—

போக்குவரத்து

வினா எண் 115363—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பகுதியில் இயக்கப்படும் பழுதான நகர பேருந்துகளை புதிய நகரப் பேருந்துகளாக மாற்றி இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பகுதியில் இயக்கப்படும் பழைய நகரப்பேருந்துகள் படிப்படியாக கழிவு செய்யப்பட்டு, அந்தப் பேருந்துகளுக்கு பதிலாக வேறு பேருந்துகள் படிப்படியாக மாற்றம் செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

252—

போக்குவரத்து

வினா எண் 115423—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து நாகர்கோவிலுக்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* இராமேஸ்வரத்திலிருந்து கன்னியாகுமரிக்கு மானாமதுரை, மதுரை, நாகர்கோவில் வழியாக தற்போது இயக்கப்படும் பேருந்துகளின் வசதியை பயன்படுத்தி கொள்ள ஏதுவாக உள்ளது. மானாமதுரையிலிருந்து நாகர்கோவில் செல்லும் நேரடி பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்போது மானாமதுரை–நாகர்கோவில் தடத்தில் சொகுசு பேருந்து இயக்குவது குறித்து பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

253—

போக்குவரத்து

வினா எண் 116984—திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, திருமயத்திலிருந்து–சென்னைக்கு சொகுசுப் பேருந்து (Itra Deluxe Bus) இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருமயத்திலிருந்து சென்னைக்கு ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. திருமயத்திலிருந்து சென்னைக்கு செல்லும் நேரடி பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்போது திருமயம்–சென்னை தடத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், மூலமாக சொகுசு பேருந்து இயக்குவது குறித்து பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

254—

போக்குவரத்து

வினா எண் 119920—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) வரகூர் தொகுதி, குன்னத்தில் இருந்து திருச்சிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* அரியலூர்–பெரம்பலூர் வழித்தடத்தில் பிரதான சாலையில் குன்னம் கிராமம் அமைந்துள்ளது. அரியலூரில் இருந்து குன்னம் வழியாக பெரம்பலூருக்கும், பெரம்பலூரிலிருந்து குன்னம் வழியாக அரியலூருக்கும் ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் ஒரு பேருந்து வீதம் பேருந்துகள் இயக்கப்படுகிறது. பெரம்பலூரில் இருந்து திருச்சிக்கும், அரியலூரில் இருந்து திருச்சிக்கும் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்பட்டு குன்னம் கிராமம் பகுதி பகுதியாக நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது.

255—

போக்குவரத்து

வினா எண் 119940—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசிபுரத்தில் இருந்து சேலத்திற்கு கூடுதலாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இராசிபுரம்–சேலம் வழித்தடத்தில் நகரப் பேருந்துகள் தினசரி 226 நடைகளும், புறநகர் பேருந்துகள் 10 நடைகளும் தற்போது இயக்கப்பட்டு வருகிறது. இது தவிர தனியார் நகர, புறநகர் பேருந்துகள் 152 நடைகள் இவ்வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே பொதுமக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் உள்ளது.

[2011 பிப்ரவரி 10

256—

போக்குவரத்து

வினா எண் 121236—திரு. கோ. அரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை கோயம்பேட்டிலிருந்து திருத்தணி வரை குளிர்சாதன பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம், காஞ்சிபுரம் மண்டலத்தால் புதியதாக குளிர்சாதனப் பேருந்துகள் எதுவும் கொள்முதல் செய்யப்படவில்லை. புதியதாக குளிர்சாதனப் பேருந்துகள் கொள்முதல் செய்யும்போது சென்னை—திருத்தணி தடத்தில் பேருந்துகள் இயக்கப்படும்.

257—

போக்குவரத்து

வினா எண் 121299—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டணம் தொகுதி, காவேரிப்பட்டணத்திலிருந்து பாண்டிச்சேரிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டணம்—பாண்டிச்சேரி (வழி) கிருஷ்ணகிரி வழித்தடத்தின் நீளம் 223.0 கி.மீ.யாகும். இவ்வழித்தடத்தில் காவேரிப்பட்டணத்திலிருந்து கிருஷ்ணகிரிக்கு ஒவ்வொரு 5 நிமிட இடைவெளி நேரத்தில் பேருந்து வசதியுள்ளது.

2011 பிப்ரவரி 10]

கிருஷ்ணகிரியிலிருந்து பாண்டிச்சேரிக்கு (புதுச்சேரிக்கு) அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் போதிய பேருந்து வசதி பெற்றுள்ளது. இவ்வழித்தடம் புறமாநில வழித்தடம் என்பதால் இத்தடத்தில் பேருந்து இயக்குவது சம்பந்தமாக தமிழ்நாடு, பாண்டிச்சேரி (புதுச்சேரி) புறமாநில வழித்தட ஒப்பந்த உடன்படிக்கையில்தான் முடிவு செய்திட இயலும் என்பதால், கோரியுள்ள வழித்தடத்தில் பேருந்து இயக்கிட இயலாத நிலையுள்ளது.

258—

போக்குவரத்து

வினா எண் 121341—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் கோட்டம், கும்பகோணம் ஆடுதுறை, திருமங்கலக்குடி வழியாக திருப்பனந்தாள் வரை கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம்—திருப்பனந்தாள் (வழி) திருப்புவனம், திருவிடைமருதூர், ஆடுதுறை, திருமங்கலக்குடி தடத்தின் நீளம் 24 கி.மீ. ஆகும். தற்போது கோரிக்கை தடத்தில் கும்பகோணம் நகர் பேருந்து தடம் எண் A27 மூலம் 12 நடைகளும், B27 மூலம் 12 நடைகளும், A10A மூலம் 12 நடைகளும் மற்றும் A64 மூலம் 10 நடைகளும் என தினசரி 46 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கை தடத்தில் தற்போது இயக்கப்பட்டு வரும் நான்கு நகர் பேருந்துகளின் சராசரி மக்கள் பயன்பாடு 46% உள்ளது. பயணிகளின் அடர்வு அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதல் பேருந்து இயக்கப்படும்.

[2011 பிப்ரவரி 10

259—

போக்குவரத்து

வினா எண் 121437—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியிலிருந்து திருப்பூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கறம்பக்குடியிலிருந்து திருப்பூர் 266.0 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது. கறம்பக்குடியிலிருந்து புதுக்கோட்டைக்கு அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் 108 நடைகள் ஒவ்வொரு இருபது நிமிட இடைவெளியிலும் இயக்கப்படுகிறது. புதுக்கோட்டையிலிருந்து திருச்சிக்கு போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் 369 நடைகள் ஒவ்வொரு நான்கு நிமிட இடைவெளியிலும் இயக்கப்படுகிறது. திருச்சியிலிருந்து திருப்பூருக்கு கழகப் பேருந்துகள் மூலம் 246 நடைகள் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும் இயக்கப்படுகிறது. மேலும் புதுக்கோட்டை வழியாக திருப்பூருக்கு 22 நடைகள் கழக பேருந்துகள் மூலம் நேரடியாக இயக்கப்படுகிறது. இப்பேருந்து வசதியே தற்போது இவ்வழித்தடத்திற்கு போதுமானதாக உள்ளது.

260—

போக்குவரத்து

வினா எண் 121715—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதி, ஆத்தூர், நேரக் காப்பாளர் அலுவலகத்திற்கு கணினி வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

போக்குவரத்து கழக நேரக் காப்பாளர் அலுவலகங்களில் கணினி பயன்பாடு என்பது தொலைதூர பயண முன்பதிவிற்காக உள்ளதாகும். தற்போது, ஆத்தூர் பேருந்து நிலையத்திலிருந்து இரண்டு பேருந்துகளுக்கு மட்டும் ஆத்தூர்—சென்னை வழித்தடத்திற்கு கையேடு கொண்டு முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது. இந்த இரு வண்டிகளுக்கும் ஞாயிற்றுக்கிழமை தவிர, மற்ற நாட்களில் அனைத்து இருக்கைகளுக்கும் முன்பதிவு ஆவதில்லை. வரும் காலங்களில், ஆத்தூர் நேரக் காப்பாளர் அலுவலகத்தில் முன்பதிவு தேவை அதிகரிக்கும்பொழுது, கணினி வசதி செய்யப்படும்.

261—

போக்குவரத்து

வினா எண் 122705—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலக்காடு—கோத்தகிரிக்கு நேரடி பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோத்தகிரி—பாலக்காடு வழித்தடம் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு அண்டை மாநிலங்களுக்கிடையேயான வழித்தடமாகும். அண்டை மாநிலங்களுக்கு இடையேயான வழித்தடங்களில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அண்டை மாநில அரசுகளுக்கு இடையே ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதன்படி வழித்தடப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கோத்தகிரி—பாலக்காடு வழித்தடம் இவ்விரண்டு மாநில ஒப்பந்தங்களில் இடம் பெறாத வழித்தடமாகும். இவ்விரு மாநில ஒப்பந்தங்களில் இடம் பெறாத இவ்வழித்தடத்தில் கோத்தகிரியிலிருந்து பாலக்காடு செல்ல பகுதிவாரியாக பேருந்து வசதிகள் உள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

262—

போக்குவரத்து

வினா எண் 122721—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பொ. மல்லாபுரத்திலிருந்து திருப்பூருக்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பொ.மல்லாபுரம்—திருப்பூர் (வழி) பாப்பிரெட்டிப்பட்டி, சாமியாபுரம் கூட்ரோடு, சேலம் வழித்தடத்தின் நீளம் 185.0 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் பொ. மல்லாபுரம்—சாமியாபுரம் கூட்ரோடு, சாமியாபுரம் கூட்ரோடு—திருப்பூருக்கு பகுதிவாரியாக பேருந்து வசதி பெற்றுள்ளன. எனவே, கோரியுள்ள வழித்தடத்தில் தனியாக பேருந்து வசதி செய்திட இயலாத நிலையுள்ளது.

263—

போக்குவரத்து

வினா எண் 122966—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியிலிருந்து சென்னைக்கு குளிர்சாதன பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தினசரி 8 சொகுசுப் பேருந்துகள் தருமபுரி—சென்னை தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பயணிகளின் பயன்பாடு சுமார் 82 விழுக்காடுகள் ஆகும். மேலும், இதைத் தவிர இதர போக்குவரத்துக் கழகம்மூலம் 23 சாதாரண புறநகர்

2011 பிப்ரவரி 10]

பேருந்துகளும் தருமபுரி—சென்னை தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. தருமபுரியிலிருந்து சென்னைக்கு தற்போது இயக்கப்பட்டுவரும் பேருந்துகள் போதுமானதாகும்.

264—

போக்குவரத்து

வினா எண் 123089—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதி, பொம்மிடியிலிருந்து ஏற்காட்டிற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொம்மிடி—ஏற்காடு (வழி) குப்பனூர் வழித்தடத்தின் நீளம் 70.0 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் பொம்மிடியிலிருந்து குப்பனூர், குப்பனூரிலிருந்து ஏற்காடு வரை பகுதி வாரியாக பேருந்து வசதியுள்ளது. மற்றொரு வழித்தடமான பொம்மிடியிலிருந்து சேலம், சேலத்திலிருந்து ஏற்காட்டிற்கும் பகுதி வாரியாக பேருந்து வசதியுள்ளது.

265—

போக்குவரத்து

வினா எண் 123291—டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்பாக்கம்—மருவத்தூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கல்பாக்கம்—மருவத்தூர் (வழி) திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு தடத்தின் நீளம் 69.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் கல்பாக்கத்திலிருந்து செங்கல்பட்டு வரையிலான 34.0 கி.மீ. தூரத்திற்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட் பேருந்துகளால் தினசரி 148 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 40 நடைகளும் இயக்கப்படுகின்றன. செங்கல்பட்டிலிருந்து மருவத்தூர் வரையிலான 35.0 கி.மீ. சென்னை—திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால் மிகவும் குறுகிய நேர இடைவெளியில் எந்நேரமும் பேருந்து வசதி உள்ளது. கல்பாக்கத்திலிருந்து செங்கல்பட்டு மேல்மருவத்தூர் வழியாக திருவண்ணாமலைக்கு ஒரு பேருந்து மூலம் 4 நடைகள் கடந்த 2010 மே மாதத்திலிருந்து இயக்கப்படுகிறது. கல்பாக்கம் பொது மக்கள், செங்கல்பட்டு வந்து மேல்மருவத்தூருக்கு பயணம் செய்யலாம்.

266—

சுற்றுச்சுவர்

வினா எண் 598—திரு. கோ. அரி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பேரம்பாக்கம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பராமரிப்புப் பணி செலவீனங்களுக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து பேரம்பாக்கம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.7,50,000/- (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவில் சுற்றுச்சுவர் 2008-2009 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளது.

2011 பிப்ரவரி 10]

267—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 13729—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதியில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் சுகாதாரப் பகுதி மாவட்டத்திற்குட்பட்ட அரியலூர் தொகுதியில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. மத்திய அரசின் வழிகாட்டுதல்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் அரியலூர் தொகுதியில், அவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கு ஏற்ப 5 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், அரியலூர் தொகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

268—

நடமாடும் மருத்துவமனை

வினா எண் 17688—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாவட்ட தலைநகரங்கள், முக்கிய நகரங்களில் நடமாடும் மருத்துவமனைகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொலைதூரத்தில் வசிக்கும் மக்கள் எளிதில் சென்றடைய முடியாத கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் மற்றும் மலைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு தக்க மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் தமிழ்நாட்டில் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களை மையமாக கொண்டு நடமாடும் மருத்துவக் குழு அமைக்க அரசு திட்டமிட்டது. அதன் அடிப்படையில் 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

269—

உயிர்காப்பு சிகிச்சைப் பிரிவு

வினா எண் 22647—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு மருத்துவமனையில் உயிர்காப்பு சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் திருப்புவனம் (சமுதாய நல மையம்) ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உயிர்காப்பு சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படுவதில்லை.

2011 பிப்ரவரி 10]

இதற்கான சிறப்பு மருத்துவரும் நியமனம் செய்யப்படுவதில்லை. அரசு மருத்துவமனைகளில் மட்டுமே இந்த வசதி உள்ளது. எனவே, திருப்புவனம் சமுதாய நல மையத்தில் உயிர்காப்பு சிகிச்சைப் பிரிவு தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

270—

கட்டட வசதி

வினா எண் 28257—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதி, குன்னத்தில் அரசு மருத்துவமனையைக் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தொகுதி, குன்னம் ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு மத்திய தகவல் மற்றும் தொலைதொடர்புத் துறை அமைச்சர் அவர்களால் 15-02-2009 அன்று திறந்து வைக்கப்பட்டு, 16-02-2009 அன்று முதல் குன்னம் ஆரம்ப சுகாதார நிலையம் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது.

271—

மேம்படுத்துதல்

வினா எண் 38003—திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இணையாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையானது அவசர சிகிச்சைப் பிரிவு, குழந்தைகள் பிரிவு, மகப்பேறு பிரிவு, கண் மருத்துவப் பிரிவு, அறுவை அரங்குடன் கூடிய குடும்ப நல பிரிவு, காசநோய் பிரிவு, பல் மருத்துவப் பிரிவு, தொழுநோய் பிரிவு உள்ளிட்ட பல சிறப்புப் பிரிவுகளுடன், 377 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இணையாக அனைத்து வசதிகளுடன் இயங்கி வருகிறது.

272—

மருத்துவ காப்பீட்டு வசதி

வினா எண் 44827—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழை மூத்த குடிமக்கள் அனைவருக்கும் இலவசமாக மருத்துவ காப்பீட்டு வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஆண்டு வருமானம் ரூ.72,000/– மற்றும் அதற்குக் குறைவாக உள்ள ஏழை மூத்த குடிமக்கள் உட்பட அனைவரும் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான முதல்வர் கலைஞரின் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சிகிச்சை பெறலாம்.

273—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 46807—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

கன்னியாகுமரி மாவட்டம், சுருளகோடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் புதிதாக 110 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்க அரசு ஆணை (நிலை) எண் 28, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்: 27-01-2009-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதில் கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சுருளகோடு ஆரம்ப சுகாதார நிலையமும் அடங்கும். அரசாணைப்படி சுருளகோடு ஆரம்ப சுகாதார நிலையம் 28-02-2009 அன்று முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

274—

தரம் உயர்த்துதல்

வினா எண் **48685**—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, வேம்பார் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 24 மணி நேரமும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சுகாதார மாவட்டம், விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வேம்பார் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 24 மணி நேர சேவை அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீட்டில் ஆதாரத்தின் அடிப்படையில் தற்போது தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

275—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 52631—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கீழ்காங்கேயங்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும். ஆனால், கீழ்காங்கேயங்குப்பம் கிராமத்திற்கும் பேர்பெரியான்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1/2 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழ்காங்கேயங்குப்பம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

276—

சிறுநீரக சிகிச்சைப் பிரிவு

வினா எண் 61176—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அரசு மருத்துவமனையில் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்புவனத்தில் சமுதாய நல மையம் மட்டுமே உள்ளது. சிறுநீரக சிகிச்சைப் பிரிவு அரசு மருத்துவமனைகளில் மட்டுமே உள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் இல்லை. எனவே, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், திருப்புவனம் சமுதாய நல மையத்தில் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

277—

அரசு மருத்துவமனை

வினா எண் 61221—திரு. சி. கோவிந்தசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் பகுதியில் 24 மணி நேரமும் செயல்படும் அரசு மருத்துவமனையைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் பகுதியில், திருப்பூர் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை 433 படுக்கை வசதிகளுடன், அனைத்து மருத்துவ வசதிகளுடன் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றது. மேலும் அப்பகுதியில் திருப்பூரைச் சுற்றி பல்லடம், அவிநாசி ஆகிய இடங்களில் அரசு வட்ட மருத்துவமனைகள் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன. எனவே, அப்பகுதியில் 24 மணி நேரமும் இயங்கக்கூடிய வகையில் மேலும் புதியதாக அரசு மருத்துவமனை அமைப்பதற்கு நிருவாகரீதியாக அவசியம் தற்போது இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

278—

இருதய சிகிச்சைப் பிரிவு மையம்

வினா எண் 62714—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு மருத்துவமனையில் இருதய சிகிச்சைப் பிரிவு மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்புவனத்தில் சமுதாய நல மையம் மட்டுமே உள்ளது. இருதய சிகிச்சைப் பிரிவு அரசு மருத்துவமனையில் மட்டுமே உள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் இப்பிரிவு இல்லை. ஆகவே, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள திருப்புவனம் சமுதாய நல மையத்தில் இருதய சிகிச்சைப் பிரிவு தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

279—

தரம் உயர்த்துதல்

வினா எண் 62783—திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 30 படுக்கைகள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்கம் அமைத்து 24 மணி நேரமும் இயங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தில் திருப்போரூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

வருகிறது. தற்போது நிதி ஒதுக்கீடு இல்லாததால், திருப்போரூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. திருப்போரூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேரம் பிரசவ கவனிப்பு வழங்கப்பட்டு 3 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு சுழற்சி முறையில் பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது.

280—

தரம் உயர்த்துதல்

வினா எண் 62822—திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனைமரத்துப்பட்டி தொகுதி, வாழப்பாடி அரசு மருத்துவமனையை தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், பனைமரத்துப்பட்டி தொகுதி, வாழப்பாடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, மேலும் தரம் உயர்த்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

281—

தரம் உயர்த்துதல்

வினா எண் 64281—திரு. கோ. அரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டத்தில் ஏற்கெனவே திருவள்ளூர் அரசு மருத்துவமனை மாவட்டத் தலைமை மருத்துவமனையாக செயல்பட்டு வருவதால் திருத்தணி, அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம்உயர்த்தும் அவசியம் நிருவாக ரீதியாக எழவில்லை.

282—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 64591—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, மேற்கு ராஜபாளையம் ஊராட்சி, ஊத்தங்கரை பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான அளவு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளதால் இவ்வூராட்சி ஒன்றியம் சார்ந்த ஊத்தங்கரை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

283—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 64626—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) இராமநாதபுரம் மாவட்டம், அபிராமம் நகரில்' ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், அபிராமம் கிராமத்திற்கும், நத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1½ கிலோமீட்டர் மட்டுமே உள்ளதாலும் அபிராமம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

284—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 64745 திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, தேவதானம்பேட்டை கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், தேவதானம்பேட்டை கிராம மக்கள் தொகை 4,759 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இக்கிராமம் செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,44,069 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே 1. சத்தியமங்கலம், 2. கெங்கவரம், 3. அனந்தபுரம், 4. ஒட்டம்பட்டு மற்றும் 5. நல்லான்பிள்ளை பெற்றாள் ஆகியன செயல்படுகின்றன. மத்திய அரசின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் செஞ்சி ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 5 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும், இரண்டு சுகாதார மையங்களுக்கும் குறைந்த பட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், தேவதானம்பேட்டை கிராமத்திற்கும், கெங்கவரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் தேவதானப்பேட்டை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

285—

தரம் உயர்த்துதல்

வினா எண் 64846—திரு. ராம. சுப்புராம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருமயம் தொகுதி, திருமயம் ஒன்றியம், ராங்கியம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் ராங்கியம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்போது ராங்கியம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

286—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 65251—திருமதி ரா. லீமா றோஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

திருவட்டாறு தொகுதி, பாரதப்பள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்சம் இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், பாரதப்பள்ளி கிராமத்திற்கும் திருவட்டாறு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஊராட்சி ஒன்றியம், பாரதப்பள்ளி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

287—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 65252—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, லெட்சுமிநரசிம்மபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதாரநிலையம் அமைக்கப்படுகிறது. ஆனால், புதுக்கோட்டை மாவட்டத்தில் திருவரங்குளம் ஒன்றியத்திலுள்ள லெட்சுமிநரசிம்மபுரம் கிராமத்தின் மக்கள் தொகை 1,532 ஆகும். மேலும், இக்கிராமத்திற்கு 6 கிலோ மீட்டர் தொலைவில் வடகாடு ஆரம்ப சுகாதார நிலையமும், 18 கிலோ மீட்டர் தொலைவில் ஆலங்குடி அரசு மருத்துவமனையும் செயல்படுகின்றன. எனவே, லெட்சுமிநரசிம்மபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

288—

தரம் உயர்த்துதல்

வினா எண் 66460—திரு. ஆர்.எம். பழனிசாமி : *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கொளநல்லி ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனையாகவும், 30 படுக்கை வசதிகள் கொண்டதாகவும் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், தாராபுரம் சுகாதார மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தில் சிவகிரி ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், அரசின் கொள்கைப்படி இந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கொளநல்லி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. கொளநல்லி, ஆரம்ப சுகாதார நிலையத்தில் மூன்று செவிலியர்கள் நியமிக்கப்பட்டு சுழற்சி முறையில் 24 மணி நேரமும் பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது.

289—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 69308—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேல்மலையனூர் தொகுதி, கலத்தம்பட்டு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், கலத்தம்பட்டு கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் உள்ளது. மேலும், இக்கிராமத்திற்கும் வளத்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் எட்டு கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் கலத்தம்பட்டு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

290—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 69309—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, தேவதானம்பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,44,069 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மேலும், இரண்டு ஆரம்ப சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், தேவதானம்பேட்டை கிராமத்திற்கும், கெங்கவரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் தேவதானம்பேட்டை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

[2011 பிப்ரவரி 10

291—

தரம் உயர்த்துதல்

வினா எண் 69438—திரு. ஞா. ஜாண் ஜோசப்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, தூத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகளுடன் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசு ஆணை நிலை எண் 378, சுகாதாரம், நாள் 12–11–2008-ல் தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்த ஆணை வெளியிடப்பட்டு, கட்டடம் கட்ட பொதுப் பணித் துறைமூலம் பணிகள் நடைபெற உள்ளன. தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லாததால், கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, தூத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

292—

குழந்தைகள் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு

வினா எண் 30828—திருமதி ரா. லீமா ரோஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம், அருமனை அரசு மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம் மருத்துவமனை 16 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக

ஆரம்பிக்கப்பட்டு, தற்போது ஏழை, எளிய மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு படிப்படியாக மேம்படுத்தப்பட்டு, மொத்தம் 60 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகிறது.

நாள் ஒன்றிற்கு சராசரியாக 368 நோயாளிகளும் 27 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 40 குழந்தைகள் வெளிநோயாளிகளாகவும், 5 குழந்தைகள் உள்நோயாளிகளாகவும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். படுக்கை வசதியை விட உள்நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளன. தவிர, விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கு 2008-2009-ல் 5 நோயாளிகள் மட்டுமே சிகிச்சை பெற்றுள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டம், அருமனை அரசு மருத்துவமனை 21 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 309 வெளிநோயாளிகளும், 17 உள்நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். 72 குழந்தைகள் வெளிநோயாளிகளாகவும், 2 குழந்தைகள் உள்நோயாளிகளாகவும் சராசரியாக சிகிச்சைப் பெற்று வருகின்றனர். 2008-2009-ல் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்காக நோயாளிகள் அனுமதிக்கப்படவில்லை. படுக்கை வசதியை விட, உள்நோயாளிகளாக அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. எனவே, குலசேகரம் மற்றும் அருமனை அரசு மருத்துவமனைகளில் புதிதாக குழந்தைகள் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த தற்போது அவசியம் இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

293—

தரம் உயர்த்துதல்

வினா எண் 81584—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், கொந்தகை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் செயல்படும் மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், கொந்தகை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 3 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டு 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை 31-07-2008-ல் அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் 15-9-2008 முதல் 24 மணி நேர பிரசவ சேவை மையமாக செயல்படுகிறது.

294—

விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு

வினா எண் 82798—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதி, ஆக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் இயங்கும் ஆக்கூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லாததால் இவ்வாரம்ப சுகாதார நிலையத்தில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

295—

தரம் உயர்த்துதல்

வினா எண் 82813—அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) கலச பாக்கம் மற்றும் கடலாடி ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கடலாடி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த அனுமதி வழங்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே, கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால் கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கலசப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அரசின் கொள்கைப்படி தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

296—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 84765—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, கலியாந்தூர் நயினார்பேட்டை ஊராட்சி, கலியாந்தூரில் துணை சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய துணை சுகாதார நிலையங்களுக்கான நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்ட நிலையில், புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

297—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 87995—திரு. விடியல் எஸ். சேகர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை சிறுகளச்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்ட நிலையில், காங்கேயம் தொகுதி, சென்னிமலை சிறுகளச்சியில் புதிய துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

298—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 88247—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், வெள்ளாள விடுதி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் கறம்பக்குடி

2011 பிப்ரவரி 10]

ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 6 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும், இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், வெள்ளாள விடுதி கிராமத்திற்கும் மழையூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், வெள்ளாள விடுதி ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

299—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 89325—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு வட்டம், திருக்கச்சூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய துணை சுகாதார நிலையங்களுக்கான நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்ட நிலையில், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருக்கச்சூர் கிராமத்தில் புதிய துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

300—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 90873—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, ரெட்டிப்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, ரெட்டிப்பாளையம் கிராமத்தின் மக்கள் தொகை 680 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இக்கிராமம் பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப ஏற்கெனவே நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதிகளில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. ஆனால், ரெட்டிப்பாளையம் கிராமத்தின் மக்கள் தொகை 680 ஆகும். மேலும், இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ரெட்டிப்பாளையம் கிராமத்திற்கும், வீரபெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளது. எனவே, ரெட்டிப்பாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

301—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 91987—திரு. எஸ். இராசசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், களபம் மற்றும் கொத்தக்கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், களபம் கிராமத்திலும், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கொத்தக்கோட்டை கிராமத்திலும் அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

302—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 92129—திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, 3—வது வார்டு பகுதியில் ஆரம்ப சுகாதார மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசின் கொள்கைப்படி இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி 3-வது வார்டு கிராமத்திற்கும், போத்தனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 3 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் குறிச்சி நகராட்சி 3-வது வார்டு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

303—

விரிவுபடுத்துதல்

வினா எண் 93185—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கருமந்துரை ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயங்கக் கூடிய மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், கருமந்துரை ஆரம்ப சுகாதார நிலையம் 2007-2008ம் நிதியாண்டில் இருந்து 24 மணி நேர மருத்துவமனையாக விரிவுப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

304—

கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 96966—திரு. பா. வேல்துரை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி ஒன்றியம், மூலச்சி மலையான்குளம் தெற்கு வீரவநல்லூர் ஊராட்சி பகுதிகளில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொட்டல் கிராமத்தின் மக்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

தொகை 2,976, மூலச்சி கிராமத்தின் மக்கள் தொகை 1,044, மலையான்குளம் கிராமத்தின் மக்கள் தொகை 403 மற்றும் தெற்கு வீரவநல்லூர் கிராமத்தின் மக்கள் தொகை 3,102 ஆகும். இக்கிராமங்கள் அழகப்பபுரம் துணை சுகாதார நிலையத்தினையும் வீரவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது. இக்கிராமங்கள் சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தவை. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,23,848 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே (1) பத்தமடை (2) கரிசல்பட்டி (3) வீரவநல்லூர் மற்றும் (4) கல்லிடைக்குறிச்சி ஆகியன செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 4 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும், இரண்டு ஆரம்ப சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், பொட்டல், மூலச்சி, மலையான்குளம் மற்றும் தெற்கு வீரவநல்லூர் ஆகிய கிராமங்களுக்கும், அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கும் இடைப்பட்ட தூரம் 6 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், பொட்டல், மூலச்சி, மலையான்குளம் மற்றும் தெற்கு வீரவநல்லூர் ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

305—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 100703—திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஜெயங்கொண்டபட்டினத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், குமராட்சி ஊராட்சி ஒன்றியம், ஜெயங்கொண்டபட்டினம் கிராம மக்கள் தொகை 1,515 (2001 கணக்கெடுப்பு) ஆகும். குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,14,547 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மேலும், இரண்டு ஆரம்ப சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், ஜெயங்கொண்டபட்டினம் கிராமத்திற்கும், சிதம்பரம் அரசு காமராஜ் மருத்துவமனைக்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், ஜெயங்கொண்டபட்டினம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

306—

தரம் உயர்த்துதல்

வினா எண் 101141—திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதி, வாழவந்திநாடு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்தில் வாழவந்திநாடு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே அரசாணை (நிலை) எண் 320, சுகாதாரம், நாள் 29-09-2003-ன்படி பிரதம மந்திரி கிராம யோஜனா திட்டத்தின்கீழ் தரம் உயர்த்தப்பட்டு அறுவை அரங்குடன் கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக

2011 பிப்ரவரி 10]

அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, சேந்தமங்கலம தொகுதி, வாழவந்திநாடு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேலும் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

307—

தரம் உயர்த்துதல்

வினா எண் 101742—திரு. த. தியோடர் ரெஜினால்டு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பத்மனாபபுரம் தொகுதி, திருவிதாங்கோடு பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசின் கொள்கைப்படி ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் அரசு ஆணை (நிலை) எண் 142, சுகாதாரம், நாள் 30-04-2007-ல் தக்கலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கோதநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகின்றது. எனவே, இவ்வூராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திருவிதாங்கோடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

308—

தரம் உயர்த்துதல்

வினா எண் 101750—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, நெய்க்காரப்பட்டி பேரூராட்சி, கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசின் கொள்கைப்படி, ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் திண்டுக்கல் மாவட்டம், பழனி சுகாதார மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாப்பம்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் தரம் உயர்த்த அனுமதி வழங்கப்பட்டு 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நெய்க்காரப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், நெய்க்காரப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் குடியிருப்பு கட்ட ரூ.6.60 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப் பணித் துறை மூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

309—

தரம் உயர்த்துதல்

வினா எண் 101841—திரு. போ. சின்னப்பன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளாத்திகுளம் தொகுதி, பேரிலோவன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லாததால்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, பேரிலோவன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

310—

தரம் உயர்த்துதல்

வினா எண் 101842—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, வேப்பலோடை ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் தரம் உயர்த்த ஆணை வெளியிடப்பட்டு பொதுப் பணித் துறை மூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பட்டியலில் வேப்பலோடை ஆரம்ப சுகாதார நிலையம் இடம்பெறவில்லை. மேலும், தற்போது நிதி ஒதுக்கீடு இல்லாததால் வேப்பலோடை ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

311—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 104341—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஒன்றியம், இடுவாய் ஊராட்சியில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நிதி கோரிய மாநில அரசின் கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, திருப்பூர் தொகுதியிலுள்ள இடுவாய் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

312—

தரம் உயர்த்துதல்

வினா எண் 104895—திருமதி பி. பத்மாவதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், அரசவனங்கோடு மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், பெரும்பண்ணையூர் (அரசவனங்காடு) பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசாணை எண் 142, மக்கள் நல்வாழ்வுத் துறை நாள் 30–04–2007–ல் தரம் உயர்த்த ஆணைகள் வெளியிடப்பட்டு, தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட கட்டடம் கட்ட பொதுப் பணித் துறைமூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

313—

மகப்பேறு மையம்

வினா எண் 105614—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, கீழ்குப்பம் ஊராட்சியில் மகப்பேறு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

புதியதாக 900 துணை சுகாதார நிலையங்களுக்கான நிதி கோரிய கருத்துரு மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, கலசப்பாக்கம் தொகுதியைச் சார்ந்த கீழ்குப்பம் ஊராட்சியில் மகப்பேறு மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

314—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 105616—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மானத்தாள் ஊராட்சி, கங்கானிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கங்கானிப்பட்டி கிராமத்தின் மக்கள் தொகை

1058 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இக்கிராமம் ஓலைப்பட்டி துணை சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. இக்கிராமம் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினையும் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,02,628 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும், இரண்டு ஆரம்ப சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், கங்காணிப்பட்டி கிராமத்திற்கும், தொளசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் கங்காணிப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

315—

தைராய்டு சிகிச்சைப் பிரிவு

வினா எண் 106096—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தைராய்டு சிகிச்சை பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மருந்தியல் துறை புறநோயாளிப் பிரிவில் நோயாளிகளுக்கு தைராய்டு இருப்பதைக் கண்டறிந்து, பிரிவில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் தைராய்டு அறுவை சிகிச்சையினை அறுவை அரங்கு அல்லது காது மூக்கு தொண்டை பிரிவில் செய்யப்பட்டு மருந்துகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. எனவே செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தைராய்டு சிகிச்சைக்கென தனிப் பிரிவு தொடங்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

316—

தரம் உயர்த்துதல்

வினா எண் 106906—திருமதி ஜி. லதா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பரதராமி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பரதராமி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தற்போதுள்ள வசதிகளே போதுமானதாக உள்ளதால் பரதராமி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

317—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 106668—திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், கன்னிகைப்பேர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,11,986 (2001 கணக்கெடுப்பு) ஆகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

இவ்வூராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே (1) பெரியபாளையம் (2) லட்சிவாக்கம் (3) வெங்கல் ஆகியன செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும், இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்த பட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், கன்னிகைப்பேர் கிராமத்திற்கும், பெரியபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 8 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் கன்னிகைப்பேர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

318—

பரிசோதனை மையம்

வினா எண் 107434—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்களுக்கு எச்.ஐ.வி., வி.டி.ஆர்.எல். பரிசோதனைகளை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு மருந்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வரும் கர்ப்பிணிப் பெண்களின் விருப்பத்தின் பேரில் எச்.ஐ.வி. மற்றும் வி.டி.ஆர்.எல். பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. நம்பிக்கை மையங்களில் (ஐசிடிசி) கர்ப்பிணிப் பெண்களிடம் இரத்தம் எடுத்து எச்.ஐ.வி. பரிசோதனை ஐ.சி.டி.சி/பி.பி.டி.சி மையத்திலும், வி.டி.ஆர்.எல். பரிசோதனை பால்வினை நோய் பிரிவிலும் செய்யப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

319—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 108295—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பெரும்பேடு ஊராட்சியில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

900 துணை சுகாதார நிலையங்களுக்கான நிதி ஒதுக்கீடு கோரிய கருத்துரு மத்திய அரசால் தற்சமயம் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, செங்கல்பட்டு தொகுதியைச் சார்ந்த பெரும்பேடு ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

320—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 108303—திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் வட்டம், பாலவிடுதியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதியதாக 900 துணை சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க நிதியுதவி கோரிய கருத்துரு மத்திய அரசால் தற்சமயம்

[2011 பிப்ரவரி 10

நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடலூர் வட்டம் சார்ந்த பாலவிடுதியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

321—

தரம் உயர்த்துதல்

வினா எண் 110297—திரு.அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், கருப்பூர் ஆரம்ப சுகாதார மருத்துவமனையை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் கருப்பூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய ஊரக நலத்திட்ட நிதி உதவியின் கீழ் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பட்டியலில் கருப்பூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் இடம் பெறவில்லை. போதிய இடவசதி மற்றும் நிதி ஆதாரம் தேவைப்படுவதால், சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கருப்பூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

322—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 110797—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, சின்ன திருப்பதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசின் கொள்கைப்படி, இரண்டு ஆரம்ப சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்த பட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், சின்ன திருப்பதி கிராமத்திற்கும், ஒண்டிவீரனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் சின்ன திருப்பதி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

323—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 112786—திரு. சுப. மதியரசன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இளையான்குடி தொகுதி, இளையான்குடி ஒன்றியம், நகரகுடி, அளவிடங்கான் ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், நகரகுடி கிராம மக்கள் தொகை 685, அளவிடங்கான் கிராம மக்கள் தொகை 974 மற்றும் இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,01,461 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 4 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால்

[2011 பிப்ரவரி 10

இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நகரகுடி மற்றும் அளவிடங்கான் ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

324—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 115314—திரு. கே.ஆர்.கே. நரசிம்மன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பர்கூர் தொகுதி, மத்தூர் ஒன்றியம், பெரமனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் ஊராட்சி ஒன்றியம், பெரமனூர் கிராமம், வாலிப்பட்டி துணை சுகாதார நிலையத்தினையும் கன்னன்டஹள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது. இக்கிராமத்தின் மக்கள் தொகை 1,115 (2001 கணக்கெடுப்பின்படி) ஆகும். மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில், மத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், பெரமனூர் கிராமத்திற்கு 6 கிலோ மீட்டர் தொலைவிலேயே மத்தூர் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதால் மத்தூர் ஊராட்சி ஒன்றியம், பெரமனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

325—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 115412—திருமதி ஆர். பிரேமா: *மாண்புமிகு மக்கள்*

2011 பிப்ரவரி 10]

நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசி ஒன்றியம், பழங்கரை ஊராட்சி பெரியாயிபாளையம் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியத்தில் பெரியாயிபாளையம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அவினாசி ஊராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே (1) நம்பியாம்பாளையம், (2) சேயூர் மற்றும் (3) துலுக்காமுத்தூர் ஆகியன செயல்பட்டு வருகின்றன. இவ்வூராட்சி ஒன்றியத்திற்கு மேற்குறிப்பிட்ட மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக இருப்பதால், இவ்வூராட்சி ஒன்றியத்தில் உள்ள பெரியாயிபாளையம் துணை சுகாதார நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

326—

தரம் உயர்த்துதல்

வினா எண் 115845—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றியம் வெள்ளியணை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளியணை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வெள்ளியணை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்த முடிவு செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

327—

தரம் உயர்த்துதல்

வினா எண் 115846—திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கள்ளப்பள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பஞ்சப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய ஊரக நலத் திட்ட உதவியின்கீழ் தரம் உயர்த்த அனுமதி வழங்கப்பட்டு, 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட கட்டடம் கட்டப்பட்டு 10-04-2009 முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, அரசின் கொள்கைப்படி ஒரே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கள்ளப்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

328—

தரம் உயர்த்துதல்

வினா எண் 115847—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், காணியாளம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கதவூர் (கடவூர்) ஊராட்சி ஒன்றியத்தில் மைலம்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருகிறது. எனவே, அரசின் கொள்கைப்படி, அதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காணியாளம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்டதாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

329—

தரம் உயர்த்துதல்

வினா எண் 115852—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிளியூர் மற்றும் சிறுமுகை ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, சீளியூர் மற்றும் சிறுமுகை ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

330—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 115861—திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மூவலூர் பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய துணை சுகாதார நிலையங்களுக்கான நிதியுதவி தற்சமயம் மத்திய அரசிடமிருந்து கிடைக்கப் பெறவில்லை. எனவே, தற்சமயம் மயிலாடுதுறை தொகுதியிலுள்ள மூவலூர் பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

331—

பாம்புக் கடிக்கு சிகிச்சை

வினா எண் 116916—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாண்புமிகு முதல்வர் "கலைஞர் காப்பீட்டு" திட்டத்தின்

2011 பிப்ரவரி 10]

மூலம் பாம்புக் கடிக்கு சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான முதலமைச்சர் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பாம்பு கடிக்கும் சிகிச்சை அளிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. பாம்புக் கடிக்கான சிகிச்சை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அளிக்கப்பட்டு வருகிறது.

332—

சிகிச்சை அளித்தல்

வினா எண் 117247—திரு. எஸ். ஜான் ஜேக்கப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் தனியார் மருத்துவமனைகளிலும் விஷக் காய்ச்சலுக்கு சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அனைத்து தகுதியுள்ள பயனாளிகளுக்கும் தனியார் மருத்துவமனைகளிலும் விஷக் காய்ச்சலுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக Pyogenic Meningits, T.B Meningitis, Fungal Meningitis, Viral Meningoencephalities போன்ற நோய்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

333—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 118527—திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, மானாம்பதியில் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், மானாம்பதி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இத்துணை சுகாதார நிலையம் செம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதே போதுமானதாக உள்ளதால் திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், மானாம்பதி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

334—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 118541—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, கல்பட்டு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றியம், கல்பட்டு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இத்துணை சுகாதார நிலையம் காளசமுத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்தினை சார்ந்தது. மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், போளூர் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும், இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், கல்பட்டு கிராமத்திற்கு 2 கிலோ மீட்டர் தொலைவில் கத்தாழம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையமும் 12 கிலோ மீட்டர் தொலைவில் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால் போளூர் ஊராட்சி ஒன்றியம் கல்பட்டு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

335—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 119924—திரு. மா. சந்திரகாசி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வரக்கூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், பெரியவெண்மணி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி

[2011 பிப்ரவரி 10

ஒன்றியம், பெரியவெண்மணி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இத்துணை சுகாதார நிலையம் குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும், இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், பெரியவெண்மணி கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் தொலைவில் மேலமாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால் வேப்பூர் ஊராட்சி ஒன்றியம் பெரியவெண்மணி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

336—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 11941—திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தலைவாசல் தொகுதியில் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளான பச்சமலை—மாயம்பாடி, மணிவிழுந்தான்—முட்டல், பூமரத்துப்பட்டி ஆகிய பகுதிகளில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதியில் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளான பச்சமலைப்பகுதி சார்ந்த மாயம்பாடி, மணிவிழுந்தான் பகுதி சார்ந்த முட்டல் மற்றும் பூமரத்துப்பட்டி ஆகிய பகுதிகளின் மக்கள் தொகை 500—க்கும் குறைவாக உள்ளது. எனவே, மத்திய அரசின் விதிமுறைப்படி இந்த கிராமங்களில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

337—

தரம் உயர்த்துதல்

வினா எண் 121289—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, ராயக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கேலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ராயக்கோட்டை கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. கேலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கேலமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ராயக்கோட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

338—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 122222—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், முதலைக்குளம் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், முதலைக்குளம் கிராமத்தின் மக்கள் தொகை 1,367 (2001 கணக்கெடுப்பின்படி) ஆகும். இக்கிராமம் நடுமுதலைக்குளம் துணை சுகாதார நிலையத்தினையும், விக்கிரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது. செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், (1) செல்லம்பட்டி, (2) தும்மக்குண்டு, (3) விக்கிரமங்கலம் மற்றும் (4) கே. நாட்டாபட்டி ஆகிய 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும், மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கு ஏற்ப தற்போது செயல்பட்டு வரும் 4 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதாலும், உசிலம்பட்டி தொகுதி முதலைக்குளம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

339—

தரம் உயர்த்துதல்

வினா எண் 122562—திரு. ஜி.கே. மணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி, சந்தைதானம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்தின் சந்தைதானம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார

2011 பிப்ரவரி 10]

நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்போது சந்தைதானம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாகக் தரம் உயர்த்த தற்போது சாத்தியக்கூறுகல் இல்லை.

340—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 122566—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், செட்டியூர் பூமனூருக்கு மத்தியில் மூலக்கடை பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், மூலக்கடை கிராமத்தின் மக்கள் தொகை 317 (2001 கணக்கெடுப்பின்படி) இக்கிராமம் செட்டியூர் துணை சுகாதார நிலையத்தினையும் கொளத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தினையும் சார்ந்தது. மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதே போதுமானதாக உள்ளது. மேலும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டருக்கு மேல் இடைவெளி இருத்தல் வேண்டும். ஆனால், மூலக்கடை கிராமத்திற்கும், கொளத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 7 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், மூலக்கடை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2011 பிப்ரவரி 10

341—

தரம் உயர்த்துதல்

வினா எண் 122718—திரு. பெ. கண்ணன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தியில் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அமரகுந்தி துணை சுகாதார நிலையம் சேடப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மத்திய அரசின் வழிகாட்டுதல்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் அமரகுந்தி துணை சுகாதார நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

342—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 122724—திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரூர் தொகுதி, வேப்பம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், அரூர் ஊராட்சி ஒன்றியம், வேப்பம்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இத்துணை சுகாதார நிலையம் தீர்த்தமலை ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. வேப்பம்பட்டி கிராமத்திற்கும், தீர்த்தமலை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடையே 5 கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளது. மேலும், இக்கிராமத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் அரூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், அரூர் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கு ஏற்ப தறபோது செயல்பட்டு வரும் 4 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், அரூர் தொகுதி, வேப்பம்பட்டியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

343—

மரத் தொழிற்சாலை

வினா எண் 1391—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறையில் மரத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 29-10-2002 நாளிட்ட 20295/02 சிவில் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி அமைக்கப்பட்ட மத்திய அதிகாரமளிக்கப்பட்ட குழு (Central Empowered Committee)-*யின் முன் அனுமதியின்றி மரம் சார்ந்த தொழில்களை*

அமைக்க இயலாது. எனவே, வால்பாறையில் மரத் தொழிற்சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

344—

மரச் சாமான்கள்

வினா எண் 2182—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் விலை உயர்ந்த மரங்களில் இருந்து மரச்சாமான்கள் மற்றும் அழகு சாதனங்கள் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

வால்பாறையில் பெரும்பாலும் தேயிலை மற்றும் காபி தோட்டங்களே உள்ளன. சந்தனம், தேக்கு போன்ற விலை உயர்ந்த மரங்கள் அங்கு போதிய அளவு இல்லை. 29—10—2002 நாளிட்ட 20295/02 (சிவில்) வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி அமைக்கப்பட்ட மத்திய அதிகாரமளிக்கப்பட்ட குழு (Central Empowered Committee) வின் முன் அனுமதியின்றி மரம் சார்ந்த தொழில்களை அமைக்க இயலாது. எனவே, வால்பாறையில் விலை உயர்ந்த மரங்களில் இருந்து மரச் சாமான்கள் மற்றும் அழகு சாதனங்கள் தயாரிக்கும் தொழில் துவங்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

345—

ஆயத்தமுடி (டோப்பா) தொழிற்சாலை

வினா எண் 25819—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனியில் தலைமுடி அதிகம் கிடைப்பதால் அங்கு ஆயத்த முடி (டோப்பா) தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் ஆயத்த முடி (டோப்பா) தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

346—

சுத்திகரிப்பு நிலையம்

வினா எண் 28565—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஜவ்வரிசி தொழிற்சாலைகளில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மானியம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் ஜவ்வரிசித் தொழிற்சாலைகளில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008—இல் அறிவிக்கப்பட்டுள்ளபடி சுத்தமான மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் தொழில்நுட்பம் பயன்படுத்த அமைக்கப்படும் இயந்திரத் தளவாடங்களின் மதிப்பில் 25% வரை (அதிகபட்சம் ரூ. 3 இலட்சம்) மானியம் வழங்கப்படுகிறது.

347—

பட்டுக்கூடு விற்பனை மையம்

வினா எண் 56058—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் பட்டுக்கூடு விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட பகுதிகள் மலைப்பாங்கான பகுதிகள் ஆகும். மேலும் இப்பகுதியில் தேயிலை/காப்பி எஸ்டேட்டுகள் அதிகம் உள்ளன. இப்பகுதியில் மல்பரி அதிகளவு சாகுபடி செய்து பட்டுப்புழு வளர்ப்பு செய்ய ஏற்ற சூழ்நிலை இல்லை. மேலும் பட்டுக்கூடுகளை கொள்முதல் செய்ய பட்டு நூற்பாளர்கள் இப்பகுதியில் இல்லை. எனவே, வால்பாறை தொகுதியில் பட்டுக்கூடு விற்பனை மையம் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

348—

சூரியகாந்தி எண்ணெய் தயாரித்தல்

வினா எண் 63530—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் சூரியகாந்தி எண்ணெய் மற்றும் சலவை சோப்பு தயாரிக்கும் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் பகுதியில் சூரியகாந்தி அதிக அளவில் பயிரிடப்படாததால் இப்பகுதியில் சூரியகாந்தி எண்ணெய் தயாரிப்புக்குத் தேவையான மூலப்பொருள் கிடைப்பதில்லை. எனவே, அரசு சார்பில் இம்மாவட்டத்தில் சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2011 பிப்ரவரி 10]

2. மேலும் சலவை சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கு இயந்திர முதலீடு வகையில் ரூ.1.50 இலட்சம் மற்றும் மாதாந்திர நடைமுறை மூலதனம் வகையில் ரூ.50,000/– மட்டுமே தேவைப்படுகிறது. பெரிய தொழில் நிறுவனங்கள் சலவை சோப்பினை தயாரித்து வருவதால் குறுந்தொழில்கள் உற்பத்தி பொருளுக்கு சந்தை வாய்ப்பு எளிதில் கிடைப்பதில்லை. எனவே, அரசு சார்பில் சலவை சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

349—

வாசனை திரவியம்

வினா எண் 64002—திருமதி ஜி. லதா: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு பகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு பகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

350—

கதர் கிராம விற்பனையைப் பெருக்குதல்

வினா எண் 72444—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கதர், கிராம மையமான பூம்புகார் கிளைக் கடைகளை புதுடில்லி, சென்னை, கன்னியாகுமரி, ஊட்டி, கொடைக்கானல், பழனி, மதுரை, ஏற்காடு, தஞ்சாவூர் போன்ற ஊர்களில் அமைத்து விற்பனையைப் பெருக்க அரசு முன்வருமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் பூம்புகார் விற்பனை நிலையங்கள் ஏற்கெனவே புதுடில்லி, சென்னை, கன்னியாகுமரி, ஊட்டி, கொடைக்கானல், மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஊர்களில் இயங்கி வருகின்றன. பழனியில் வருடாவருடம் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும், அருள்மிகு தண்டபாணி திருக்கோவிலில் விற்பனை நிலையம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்காட்டில் வருடாவருடம் நடைபெறும் கண்காட்சிகளும் போதுமான வரவேற்பு இல்லாததனால், விற்பனை நிலையத்தை இலாபகரமாக நடத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

351—

பட்டுநூல் கூட்டுறவு விற்பனை நிலையம்

வினா எண் 75877—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் பட்டுநூல் கூட்டுறவு விற்பனை நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

352—

பட்டு உற்பத்தி மையம்

வினா எண் 103971—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

ஓமலூர் தொகுதி, செம்மாண்டப்பட்டியில் பட்டு உற்பத்தி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, செம்மாண்டப்பட்டியில் பட்டு உற்பத்தி மையம் எதுவும் துவக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

353—

வாசனை திரவிய தொழிற்சாலை

வினா எண் 105714—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பூசாரிப்பட்டியில் வாசனை திரவிய தொழிற்சாலை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசே தொழிற்சாலை துவக்கி நடத்துவது என்பது அறிவிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற் கொள்கையில் இல்லை. மேலும், ஓமலூர் தொகுதி, பூசாரிப்பட்டி பகுதியில் வாசனை திரவிய தொழிற்சாலை அமைக்க தேவையான அளவு பூக்கள் கிடைக்காத காரணத்தால், அங்கு வாசனை திரவிய தொழிற்சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

354—

வாசனை திரவியம்

வினா எண் 105919—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) சேலம் மாவட்டத்தில் பூக்களில் இருந்து வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டத்தில் பூக்களிலிருந்து வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க போதுமான அளவு பூக்கள் கிடைக்காததால், அத்தொழிற்சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

355—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 106187—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசியில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) அவினாசி தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் துவக்கும் திட்டம் தற்சமயம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

356—

தரம் உயர்த்துதல்

வினா எண் 106576—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் கால்நடை மருந்தகத்தை, மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்த வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

357—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 107556—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, வெள்ளக்கல்பட்டி பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, வெள்ளக்கல்பட்டி பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.

[2011 பிப்ரவரி 10

358—

தொழிலாளர்களை ஊக்குவித்தல்

வினா எண் 107579—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர், முத்துநாயக்கன்பட்டியிலுள்ள கைவினைத் தொழில் மற்றும் தொழிலாளர்களை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஓமலூர், முத்துநாயக்கன்பட்டியில் கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இங்கு தயாரிக்கும் கைவினைப் பொருட்களுக்காக கைத்திறத் தொழில் குழுமங்கள் (Craft Clusters) அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த கைத்திறத் தொழில் குழுமங்கள்மூலம் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்கள் (முக்கியமாக பித்தளை தகட்டிலான கரகம்) தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் பூம்புகார் விற்பனை நிலையங்கள் மூலமாகவும் இக்கழகம் நடத்தும் கண்காட்சிகள் மூலமாகவும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

359—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 107898—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கோளிவாக்கம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கோளிவாக்கம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

360—

கற்பூரம் மற்றும் மெழுகுவர்த்தி தொழிற்சாலை

வினா எண் 108002—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணா கிராமம் மற்றும் கடலூர் ஒன்றியப் பகுதிகளில் கற்பூரம், மெழுகுவர்த்தி தயாரிக்கும் சிறிய தொழிற்சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணா கிராமம் மற்றும் கடலூர் ஒன்றியப் பகுதிகளில் கற்பூரம், மெழுகுவர்த்தி தயாரிக்கும் சிறிய தொழிற்சாலைகள் அமைக்க தனியார் தொழில் முனைவோர் முன்வந்தால், மாவட்டத் தொழில் மையம் தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கி தொழில் துவங்க ஆவன செய்யும்.

361—

புதிய தொழிற்பேட்டை

வினா எண் 108005—திரு. சபா. இராஜேந்திரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணா கிராம ஒன்றியப்

பகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணா கிராம ஒன்றியப் பகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் ஏதும் இல்லை.

362—

கால்நடை துணை மருந்தகம்

வினா எண் 108443—திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை, ஈக்காட்டுத்தாங்கல் பகுதியில் கால்நடை துணை மருந்தகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சைதாப்பேட்டை, ஈக்காட்டுத்தாங்கல் பகுதியில் கால்நடை துணை மருந்தகம் அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

363—

பட்டு கொள்முதல் மையம்

வினா எண் 108625—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) மேட்டூர் தொகுதி, ஜலகண்டபுரம், வனவாசி, நங்கவள்ளி பகுதியில் பட்டு கொள்முதல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, ஜலகண்டபுரம், வனவாசி மற்றும் நங்கவள்ளி பகுதிகளிலிருந்து சேலம் சுமார் 35 கிலோ மீட்டர் தொலைவிலும், பெண்ணாகரம் சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவிலும், தருமபுரி சுமார் 60 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. இந்த மூன்று இடங்களிலும் அதிக அளவில் பட்டு நூற்பாளர்கள் பங்கேற்பதன் பயனாக விவசாயிகளின் பட்டுக்கூடுகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. அங்காடிகளும் நன்கு செயல்பட்டு வருகின்றன. மேலும் இப்பகுதிகளில் சுமார் 249.00 ஏக்கரில் 164 பட்டு விவசாயிகள் பட்டுத் தொழில் செய்து வருகின்றனர். இந்தப் பகுதி விவசாயிகளும் மேற்கூறிய அங்காடிகளில் தங்களது பட்டுக்கூடுகளை இலாபகரமாக நல்ல விலைக்கு விற்று பயனடைந்து வருகின்றனர்.

சேலம், பெண்ணாகரம், தருமபுரி ஆகிய மூன்று அரசு பட்டுக்கூடு அங்காடிகளுக்கும் எளிதில் சென்று வரக்கூடிய அளவிற்கு அரசு பேருந்துகள் வசதி உள்ளதால் மேலும் பட்டுக்கூடு கொள்முதல் மையம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

சேலம், அம்மாபேட்டை, ராசிபுரம் பகுதிகளில் அதிக அளவில் நெசவாளர்கள் உள்ளதாலும், அனைவரும் பயன்பெறும் வகையில் அனைத்துப் பகுதிகளுக்கும் பொதுவாக எளிதில் சென்று வரக்கூடிய சேலத்தில் காஞ்சிபுரத்திற்கு அடுத்ததாக இரண்டாவது புதிய பட்டு பரிமாற்றகம் (பட்டுக் கொள்முதல் மையம்) விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, மேட்டூர் தொகுதி, ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, வனவாசி பகுதிகளில் பட்டுக் கொள்முதல் மையம் அமைக்கக்கூடிய தேவை எழவில்லை.

11-494—82a

[2011 *பிப்ரவரி* 10

364—

கால்நடை பாதுகாப்பு

வினா எண் 108631—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்திலிருந்து இறைச்சிக்காக கேரள மாநிலத்திற்கு பசு மாடுகளையும், எருமை மாடுகளையும் ஏற்றிச் செல்வதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்திலிருந்து இறைச்சிக்காக விவசாயிகளுக்குப் பயன்படாத, வயதான, கழிவு செய்யப்பட்ட கால்நடைகள் மட்டுமே கேரள மாநிலத்திற்கு லாரிகள்மூலம் கொண்டு செல்லப்படுகின்றன. காவல் நிலைய சோதனைச் சாவடி வழியாக உரிய சோதனைக்குப் பிறகே இவை அனுப்பப்பட்டு வருகின்றன. தற்போது கடந்த ஆண்டுகளைவிட குறைவான எண்ணிக்கையிலேயே கால்நடைகள் அனுப்பப்படுகின்றன.

(ஆ) கேள்வி எழாது.

365—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 108633—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மேட்டூர் தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்கும் திட்டம் தற்சமயம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

366—

புதிய கால்நடை மருத்துவமனை

வினா எண் 108634—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, காவேரிபுரம் ஊராட்சி, சத்யா நகரில் புதிய கால்நடை மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மேட்டூர் தொகுதி, காவேரிபுரம் ஊராட்சி, சத்யா நகரில் புதிய கால்நடை மருத்துவமனை துவக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

367—

நடமாடும் கால்நடை மருத்துவமனை

வினா எண் 108636—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மேட்டூர் தொகுதி, நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

368—

புதிய கட்டடம்

வினா எண் 108637—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர், நவப்பட்டி, கோனூர், ஜலகண்டபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு புதியதாக கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கொளத்தூர் கால்நடை மருந்தகம் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. மேட்டூர் தொகுதியினைச் சார்ந்த காவேரிகிராஸ் (நவப்பட்டி) கால்நடை கிளை நிலையம், நவப்பட்டி கிராமத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட தேவையான நிலம் சம்பந்தப்பட்ட ஊராட்சி. மற்றும் ஊராட்சி ஒன்றியத்தினால் இன்னும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஊராட்சியின்மூலம் தேவையான நிலம் ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் நிரந்தர கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

கோனூரிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் சின்னகோனூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் நிரந்தர கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

ஜலகண்டபுரம் கால்நடை மருந்தகக் கட்டடம் 1999-2000-ல் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

(ஆ) நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், நவப்பட்டி கால்நடை கிளை நிலையத்திற்கு நிரந்தர கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

369—

புதிய கட்டடம்

வினா எண் 108638—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மேட்டூர் கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட பொதுப் பணித் துறையினரால் அளிக்கப்பட்ட நிலம் வருவாய்த் துறையினரால் நிலம் மாறுதல் செய்யப்பட்ட பிறகு, 2010-2011 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி திட்டத்தின்மூலம் நிதி ஒதுக்கீடு பெற்ற பிறகு, மேட்டூர் மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

(ஆ) உரிய நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட பின்பு, கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2011 பிப்ரவரி 10

370—

மாம்பழக்கூழ் தொழிற்சாலை

வினா எண் 108941—திருமதி ஜி. லதா: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் பகுதியில் மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருப்பத்தூர் பகுதியில் மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

371—

செண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 108942—திருமதி ஜி. லதா: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்கட்டு பகுதியில் பூக்களிலிருந்து செண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) அணைக்கட்டு பகுதியில் பூக்களிலிருந்து செண்ட் தயாரிக்க தேவையான அளவு பூக்கள் கிடைக்கப்பெறாததால், அத்தொழிற்சாலை அங்கு அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

2011 பிப்ரவரி 10]

372—

புதிய கட்டடம்

வினா எண் 109559—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டத்திலுள்ள கால்நடை மருத்துவ நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருக்கழுக்குன்றம் வட்டத்தில் மூன்று இடங்களில் கால்நடை மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில், திருக்கழுக்குன்றம் மற்றும் விட்டலாபுரம் கால்நடை மருந்தகங்கள் துறைக்கு சொந்தமான கட்டடத்திலும், பொன்விளைந்தகளத்தூர் கால்நடை மருந்தகம் பஞ்சாயத்து கட்டடத்திலும் இயங்கி வருகின்றன. தரம் உயர்த்தப்பட்ட இரண்டு கால்நடை கிளை நிலையங்களும், ஐந்து கால்நடை கிளை நிலையங்களும் பஞ்சாயத்து கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

(ஆ) கேள்வி எழாது.

373—

சேகோ தொழிற்சாலை

வினா எண் 110250—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கருமந்துறையில் சேகோ பேக்டரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கருமந்துறையில் சேகோ பேக்டரி அமைத்திட சாத்தியக்கூறுகள் குறைவாகவே உள்ளன. ஏனெனில், மரவள்ளிக் கிழங்கு வெட்டப்பட்ட உடனேயே சேகோ தயாரிக்க பயன்படுத்தப்பட வேண்டும். நீண்ட நாட்கள் கிடங்கில் கிழங்கை சேமித்து வைக்க இயலாது. அவ்வாறு சேமிக்கும்பொழுது கிழங்கின் தன்மை கெட்டுவிடும். இதுபோன்ற வசதிகள், கருமந்துறை பகுதிகளில் இல்லை. மலைப்பகுதியில் சேகோ தொழிற்சாலை ஆரம்பித்தால் மரவள்ளிக் கிழங்கு அறுவடை இல்லாத காலங்களில் சமவெளிப் பகுதியில் இருந்து கிழங்குகளை மலைப்பகுதி தொழிலகங்களுக்கு எடுத்துச் சென்று சேகோ தயாரிப்பது இலாபகரமானதாக இல்லாது இருப்பதால் தொழில் முனைவோர்கள் எவரும் இப்பகுதியில் சேகோ தொழிற்சாலை தொடங்க ஆர்வம் காட்டவில்லை. எனவே, சேலம் மாவட்டம், கருமந்துறையில் அரசு சேகோ பேக்டரி அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

374—

கயிறு தயாரிக்கும் தொழில்

வினா எண் 111885—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் தேங்காய் உரி மட்டையிலிருந்து கயிறு தயாரிக்கும் தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் தேங்காய் மட்டை உற்பத்தி குறைவாக உள்ளதாலும், கயிறு

2011 பிப்ரவரி 10]

தொழில் அனுபவம் உள்ள நபர்கள் அதிகம் இல்லாததாலும், அரசு சார்பில் திருப்புவனம் பகுதியில் தேங்காய் உரி மட்டையிலிருந்து கயிறு தயாரிக்கும் தொழில் தொடங்க திட்டம் தற்போது இல்லை.

375—

மரக்கூழ் தயாரிக்கும் தொழில்

வினா எண் 111886—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் மரக்கூழ் தயாரிக்கும் தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் மரக்கூழ் தயாரிக்க தேவையான மூலப்பொருள் கிடைக்காத காரணத்தினால், அங்கு அத்தொழிற்சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

376—

மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழில்

வினா எண் 111888—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் மாம்பழக்கூழ் தயாரிக்கும் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் மாம்பழக்கூழ் தயாரிக்க போதுமான அளவு மாம்பழங்கள் கிடைக்காததால், அங்கு அத்தொழில் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழாது.

377—

கால்நடை கிளை மருந்தகம்

வினா எண் 113744—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் ஊதியீரில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காங்கேயம் ஊதியீரில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

378—

தரம் உயர்த்துதல்

வினா எண் 115281—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) தருமபுரி தொகுதி, நூல அள்ளி ஊராட்சி, நூல அள்ளியிலுள்ள கிளை கால்நடை மருத்துவமனையை மருந்தகமாக தரம் உயர்த்தஅரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி தொகுதி, நூல அள்ளி ஊராட்சி, நூல அள்ளியிலுள்ள கால்நடை கிளை நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, கால்நடை மருந்தகங்களைப் போல இளநிலை கால்நடை உதவி மருத்துவர் நியமனம் செய்யப்பட்டு, உரிய சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) கேள்வி எழாது.

379—

சுற்றுச் சூழல்

வினா எண் 115534—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, சேயூர் மற்றும் அன்னூர் கால்நடை மருத்துவமனைகளுக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ''நமக்கு நாமே'' திட்டத்தின்கீழ் சேயூர் கால்நடை மருந்தகத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அன்னூர் கால்நடை மருத்துவமனை அன்னூர் ஊராட்சி ஒன்றிய வளாகத்திலேயே அமைந்துள்ளது. ஊராட்சி ஒன்றியம் முழுவதும் சுற்றுச் சுவர் அமைந்துள்ளதால் தனியே சுற்றுச் சுவர் அமைக்க அவசியம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

380—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 115593—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், மறவமங்கலம் கிராமத்தில் கால்நடை மருத்துவனை செயல்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், மறவமங்கலம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் நன்முறையில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

381—

கால்நடை மையம்

வினா எண் 117004—திரு. எஸ். ராஜ்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை, ஆனதாண்டவபுரம் பகுதியில் கால்நடை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மயிலாடுதுறை, ஆனதாண்டவபுரம் பகுதியில் கால்நடை மையம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

2011 பிப்ரவரி 10]

382—

புதிய கட்டடம்

வினா எண் 117026—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு வட்டம், திருக்காட்டுப்பள்ளி கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவையாறு வட்டம், திருக்காட்டுப்பள்ளி கால்நடை மருத்துவமனைக்கு தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) திட்டத்தின்மூலம் நிரந்தரக் கட்டடம் கட்டும் கருத்துருவில் மேற்காணும் இடம் தற்போது இடம் பெற்றுள்ளது.

383—

தரம் உயர்த்துதல்

வினா எண் 117032—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு வட்டம், படந்தாலுமூடு கால்நடை முதலுதவி சிகிச்சை மையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) விளவங்கோடு வட்டம், படந்தாலுமூடுவில் உள்ள கால்நடை முதலுதவி சிகிச்சை மையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2011 பிப்ரவரி 10

384—

கால்நடை மருத்துவ கிளை நிலையம்

வினா எண் 117786—திரு. எம்.என். கந்தசாமி: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தொண்டாமுத்தூர் தொகுதி, தென்கரை பேரூராட்சி, சென்னனூரில் கால்நடை மருத்துவக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தொண்டாமுத்தூர் தொகுதி, தென்கரை பேரூராட்சி, சென்னனூரில் கால்நடை மருத்துவக் கிளை நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

385—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 120763—திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அச்சரப்பாக்கம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஒன்றியம், கடமலைபுதூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அச்சரப்பாக்கம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஒன்றியம், கடமலைபுதூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பு இல்லை.

386—

கால்நடை துணை நிலையம்

வினா எண் 120786—திரு. க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், வெங்கரைபிலிக்கல்பாளையத்தில் கால்நடை துணை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், வெங்கரைபிலிக்கல்பாளையத்தில் கால்நடை துணை நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

387—

புதிய கட்டடம்

வினா எண் 120787—திரு. க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், திருமல் கால்நடை துணை நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

நாமக்கல் மண்டலம், திருச்செங்கோடு சரகத்தில் கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்தில் திருமல் என்ற இடத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று வாடகையில்லா கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த கால்நடை மருந்தகத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு திருமல் கிராம மக்களால் திருமல் கிராமத்தில் நத்தம் புறம்போக்கு சர்வே 172.2—ல் 1900 சதுர மீட்டரும் சர்வே 172.3—ல் 86 சதுர மீட்டர் நிலமும் ஒதுக்கித் தரப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் திட்ட பணிகளில் தொகை இருப்பின், அதனை திருமல் கால்நடை மருந்தகம் கட்ட ஒதுக்கீடு செய்து தர கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கபிலர்மலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து தர கேட்கப்பட்டுள்ளது.

388—

சொந்தக் கட்டடம்

வினா எண் 120790—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், திட்டச்சேரி துணை கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) நன்னிலம் தொகுதியினைச் சார்ந்த திட்டச்சேரி கால்நடை கிளை நிலையத்திற்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு பாராளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் கட்டடம் கட்டப்படும்.

2011 பிப்ரவரி 10]

389—

கட்டடம்

வினா எண் 121364—திரு. வி.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, முகையூர் ஒன்றியம், வீரபாண்டி கால்நடை மருத்துவமனைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) 26-1-2007 அன்று பஞ்சாயத்து கிராமசபா கூட்டத்தில் முகையூர் தொகுதி, வீரபாண்டி கால்நடை கிளை நிலையத்திற்கு கட்டடம் கட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் பஞ்சாயத்து யூனியன், முகையூர் ஆணையரிடம் கலந்து ஆலோசிக்கப்பட்டு கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார்:

(ஆ) நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் வீரபாண்டி தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையத்திற்கு நிரந்தர கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

390—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 121520—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, கஸ்தம்பாடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) போளூர் தொகுதி, கஸ்தம்பாடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

391—

கால்நடை வளர்க்கும் திட்டம்

வினா எண் 121537—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் முன்மாதிரி கால்நடை வளர்க்கும் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கால்நடை பராமரிப்புத்துறையின்கீழ் சிவகங்கை மாவட்டத்தில், செட்டிநாடு மாவட்ட கால்நடை பண்ணையில் பலவகை கால்நடை இனங்கள் பராமரிக்கப்பட்டு வருவதாலும், ஏற்கெனவே பல்வேறு கால்நடை இனங்களுக்கு முன்மாதிரி கால்நடை பண்ணையாக திகழ்வதாலும், மேலும், மானாமதுரை தொகுதி, சிவகங்கை மாவட்டத்திற்கு உட்பட்டதாலும், தனியாக மானாமதுரை தொகுதியில் முன்மாதிரி கால்நடை வளர்க்கும் திட்டம் செயல்படுத்த அவசியம் எழவில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

392—

பயிற்சி மையம்

வினா எண் 122263—திரு. எம்.ஆர்: சுந்தரம்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆத்தூர் தொகுதியில், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஆத்தூர் தொகுதியில், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

393—

கால்நடை மருந்தகம்

வினா எண் 122303—திரு. கே. மகேந்திரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம் பகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி பஞ்சாயத்து யூனியன், விக்கிரமங்கலத்தில் ஒரு கால்நடை கிளை நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால், அப்பகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

[2011 பிப்ரவரி 10

394—

புதிய கால்நடை மருத்துவமனை

வினா எண் 122518—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், வட்டக்காடு, நாகலூரில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், வட்டக்காடு, நாகலூரில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

395—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 122788—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பயர்நத்தத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மொரப்பூர் தொகுதி, பயர்நத்தத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

2011 பிப்ரவரி 10]

396—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 122841—திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், முள்ளுக்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிப்பேட்டை ஒன்றியம், முள்ளுக்குறிச்சியில் கால்நடை மருந்தகம் ஏற்கெனவே, செயல்பட்டு வருவதால், முள்ளுக்குறிச்சியில் புதிதாக கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.

397—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 122978—திரு. ச. லட்சுமணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் தொகுதி, மலைப் பகுதிக்கு நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

2010-2011 ஆம் ஆண்டில், புதிதாக நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்க செயற்குறிப்பு இல்லை. ஆகவே தற்போதைய நிலையில், போடிநாயக்கனூர் தொகுதி, மலைப் பகுதிக்கு நடமாடும் கால்நடை மருத்துவமனை துவக்க வாய்ப்பில்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

398—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 123141—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கோணசமுத்திரம் ஊராட்சி, சடையம்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) எடப்பாடி தொகுதி, கோணசமுத்திரம் ஊராட்சி, சடையம்பாளையத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

399—

கால்நடைப் பண்ணை

வினா எண் 123142—திரு. வை. காவேரி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் மாவட்ட கால்நடைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* எடப்பாடியில் மாவட்ட கால்நடைப் பண்ணை அமைக்க தற்போது அரசுக்கு திட்டம் ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

400—

புதிய தாலூகா

வினா எண் 751—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதியில் காளையார்கோயில் தாலூகாவாக மாற்றம் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 1132 பொது (சட்ட அலுவலர்கள்) துறை, நாள் 11-11-2009-ன்படி, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்படுவதை முன்னிட்டு மாவட்டம், வட்டம், கிராமம், காவல் நிலையம், நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் போன்ற நிருவாக அலகுகளைப் புதிதாக தோற்றுவிப்பதற்கு 1-1-2010 முதல் 31-3-2011 வரை தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் சிவகங்கை தொகுதியில் காளையார் கோயிலைத் தாலூகாவாக மாற்றம் செய்ய தற்போது இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

401—

புதிய தாலூகா

வினா எண் 2683—திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தனித்தாலூகாவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 1132, பொது (சட்ட அலுவலர்கள்) துறை, நாள் 11-11-2009-ன்படி, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்படுவதை முன்னிட்டு மாவட்டம், வட்டம், கிராமம், காவல் நிலையம், நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் போன்ற நிருவாக அலகுகளைப் புதிதாக தோற்றுவிப்பதற்கு 1-1-2010 முதல் 31-3-2011 வரை தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், இக்கோரிக்கையை தற்போது ஏற்க இயலாது.

402—

கட்டடம்

வினா எண் 29010—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் உள்ளதால் புதிய கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

403—

புதிய நிருவாக அலகுகள்

வினா எண் 45377—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

தமிழக அளவில் 6 தொகுதிகளுக்கு ஒரு மாவட்டம் என பிரித்து செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 1132 பொது (சட்ட அலுவலர்கள்) துறை, நாள் 11–11–2009-ன்படி, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்படுவதை முன்னிட்டு மாவட்டம், வட்டம், கிராமம், காவல் நிலையம், நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் போன்ற நிருவாக அலகுகளைப் புதிதாக தோற்றுவிப்பதற்கு 1–1–2010 முதல் 31–3–2011 வரை தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், தமிழக அளவில் 6 தொகுதிகளுக்கு ஒரு மாவட்டம் என பிரித்து செயல்படுத்திட தற்போது இயலாது.

404—

கட்டடம்

வினா எண் 73481—டாக்டர் க. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பரமத்தி வேலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

பரமத்தி வேலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய துணைக் கட்டடம் கட்டுவது தொடர்பான செயற்குறிப்பு கிடைக்கப்பெற்றவுடன் அதனை அரசு பரிசீலிக்கும்.

405—

மாவட்ட நிருவாகம்

வினா எண் 78789—திரு. கே.எஸ்.கே. இராஜேந்திரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

மதுரை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் கூடுதல் கட்டடமும், அடிப்படை வசதிகளும் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

அடிப்படை வசதிகளைப் பொறுத்த அளவில், தற்போது உள்ள கட்டடம் போதுமானதாக உள்ளதால் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

406—

மாவட்ட பெயர் மாற்றுதல்

வினா எண் **87825**—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகருக்கு பழைய பெயரான "சைலம்" என்று பெயர் சூட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

சேலம் மாநகருக்கு பழைய பெயரான "சைலம்" என்று பெயர் சூட்ட எவ்வித நடவடிக்கையும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

407—

வீட்டு வசதி வாரியம்

வினா எண் 102255—திரு. ஆ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் மற்றும் கோத்தகிரியில் புதியதாக வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ)

குன்னூர்—

குன்னூர் தாலுகா கேத்தி கிராமத்தில் புல எண் 977/1ல் சுமார் 5.00 ஏக்கர் நிலம் வருவாய்த் துறை அதிகாரியால் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி நிலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சார்-பதிவாளர் வழிகாட்டி மதிப்பின்படி நிலம் மாற்றம் செய்ய உரிய படிவத்தில் பூர்த்தி செய்து மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி மாவட்டம் அவர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. நில மாற்றம் செய்தபின் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

கோத்தகிரி—

கோத்தகிரியில் வீட்டு வசதி வாரியத்திற்கு நிலம் ஏதும் தற்பொழுது கைவசம் இல்லை. இனி நிலம் கிடைக்கப்பெறின் பொது மக்களிடம் வரவேற்பிற்கு தகுந்தாற்போல் திட்டம் நிறைவேற்றப்படும்.

408—

கட்டடம்

வினா எண் 109791—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் 2007ஆம் ஆண்டு பொதுப் பணித் துறையினரால் ரூ. 4.00 இலட்சம் செலவில் சீரமைப்பு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளதால்,

[2011 பிப்ரவரி 10

கட்டடத்தினைப் புதுப்பிக்கவோ, புதிதாகக் கட்டவோ அவசியம் தற்போது எழவில்லை.

409—

காவிரி

வினா எண் 11146—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதி, மேலையூர் சட்ரஸ் பகுதியில் காவிரி ஆற்றினைத் தூர்வாரி செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உலக வங்கி நிதியுதவியின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள தேசிய புயல் இடர் தணிக்கும் திட்டத்தின் (National Cyclone Risk Mitigation Project) கீழ் உப்புநீர் தடுப்புக் கரைகள் (Saline Embankments) மற்றும் கடற்கரை கால்வாய்கள் (Coastal Canals) ஆகியவற்றை மேம்படுத்துதல், சீரமைத்தல் மற்றும் பலப்படுத்துதல் போன்ற பணிகளை முதன்மை அடிப்படையில் மேற்கொள்ளும் பொருட்டு ரூ. 188.87 கோடி மதிப்பீட்டில் முன்மொழிவுகள் பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பினரால் தயாரிக்கப்பட்டு, வருவாய் நிருவாக ஆணையர் மூலமாக புதுடில்லியில் உள்ள தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

410—

காலிப் பணியிடம்

வினா எண் 114385—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

செங்கல்பட்டு தொகுதியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதியில் செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் மட்டுமே உள்ளது. இவ்வலுவலகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மொத்தப் பணியிடங்கள் 24. இதில் 17 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. காலியாக உள்ள 7 பணியிடங்களை நிரப்புவதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

411—

சுற்றுலாத்தலம் அமைத்தல்

வினா எண் 48516—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பாலேகுளி ஊராட்சி, பாலேகுளி பெரியமலை கோயிலை சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள, காவேரிபட்டினம் தொகுதி, பாலேகுளி ஊராட்சி, பாலேகுளி பெரியமலை கோயில் பகுதியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல் குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

412—

சார்பதிவாளர் அலுவலகம்

வினா எண் 54084—திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மணல்மேட்டில் மூடப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே மூடப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்கள், பதியப்படும் ஆவணங்கள், ஈட்டப்படும் வருவாய் ஆகியவற்றைப் பொறுத்து படிப்படியாக ஆண்டுக்கு ஐந்து சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படுகின்றன. மணல்மேடு சார்பதிவாளர் அலுவலக ஆட்சி எல்லைக்குள் சராசரியாக 1000 ஆவணங்கள் பதிவாகும் நிலையிலும் ஆண்டு சராசரி வருவாய் ரூ.59.10 இலட்சமாக உள்ள நிலையில், மூடப்பட்ட மணல்மேடு அலுவலகத்தை மீளத் திறக்க சாத்திய கூறுகள் உள்ளன. மணல்மேடு சார்பதிவாளர் அலுவலகம் திறப்பது பற்றி தக்க தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

413—

சுற்றுலாத் தலம் அமைத்தல்

வினா எண் 57495—திரு. வை. காவேரி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் காவேரி ஆற்றின் அருகே சுற்றுலாத் தலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஓர் இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை ஏற்படுத்தி தருகிறது. எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியில் காவேரி ஆற்றின் அருகே சுற்றுலாத்தலம் அமைத்தல் / சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வது குறித்த கருத்துரு ஏதும் தற்போது இத்துறையின் பரிசிலனையில் இல்லை.

414—

சுற்றுலாத் தலம்

வினா எண் **82812**—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையிலுள்ள ஜமுனா மரத்தூர் மற்றும் கலசப்பாக்கம் தொகுதி, பர்வத மலை பகுதிகளை சுற்றுலாத் தலங்களாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் சுற்றுலாத் துறையால் செய்துதரப்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலை அடிப்படை வசதிகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக 2010-2011 நிதியாண்டில்

ரூ. 1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஜவ்வாது மலை சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள மைய அரசிடம் ரூ. 5.60 கோடி நிதி உதவி கோரி முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

415—

கம்பிவட ஊர்தி

வினா எண் 101745—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனிக்கும் கொடைக்கானலுக்கும் இடையில் கம்பிவட ஊர்தி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

பழனிக்கும் கொடைக்கானலுக்கும் இடையில் கம்பிவட ஊர்தி அமைக்கும் திட்டம் குறித்த கருத்துரு அரசால் ஆராயப்பட்டது. இப்பகுதியில், இத்திட்டத்தினை நிறைவேற்றுவது கடினம் என்பதாலும், காப்புக்காடுகள் உள்ளதாலும், மேற்காணும் கருத்துரு அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

416—

படகு சவாரி

வினா எண் 102232—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, வேம்பாரிலிருந்து வங்கக் கடலிலுள்ள நல்ல தண்ணீர் தீவிற்கு சுற்றுலாத் துறையின்மூலம் படகு விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதி, வேம்பாரிலிருந்து வங்கக் கடலிலுள்ள நல்ல தண்ணீர் தீவிற்கு சுற்றுலாத் துறையின் மூலம் படகு விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

417—

சார்-பதிவாளர் அலுவலகம்

வினா எண் 105873—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம்புதூரில் சார்-பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம்புதூரில் அரசுக்கு வருவாய் குறைவாக உள்ள நிலையில் புதிய சார்-பதிவகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

418—

சுற்றுலாத் தலம்

வினா எண் 106669—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை தர்காவை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக சுற்றுலாத் துறையின் மூலம்தமிழ்நாட்டில் உள்ள எந்த ஒரு குறிப்பிட்ட இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. இருப்பினும், தமிழ்நாட்டிலுள்ள அதிகம் அறியப்படாத சுற்றுலா இடங்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்கு தேவையான அடிப்படை வசதிகள் மட்டும் சுற்றுலாத் துறை செய்து வருகிறது. திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை தர்கா பகுதியில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல் குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

419—

சுற்றுலா நகரம்

வினா எண் 107398—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு கோட்டை, படகுக்குழாம், ரேடியாமலை ஆகிய பகுதிகளை நவீனப்படுத்தி சுற்றுலா நகரமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தமிழக சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. தமிழ்நாட்டில் உள்ள அதிகம் அறியப்படாத சுற்றுலா இடங்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்கு தேவையான அடிப்படை வசதிகள் மட்டும் செய்து வருகிறது. செங்கல்பட்டு கோட்டை, படகுக்குழாம், ரேடியாமலை ஆகிய பகுதிகளை நவீனப்படுத்தி சுற்றுலா நகரமாக்குதல் குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

420—

சுற்றுலா மையம்

வினா எண் 107525—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, பொன்பதர்கூடம் கிராம சதுர்புஜ கோதண்டராமர் கோயிலை சுற்றுலா மையமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தமிழக சுற்றுலாத் துறையின்மூலம் தமிழ்நாட்டில் உள்ள அதிகம் அறியப்படாத சுற்றுலா இடங்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்கு தேவையான அடிப்படை வசதிகள் மட்டும் செய்து வருகிறது.

செங்கல்பட்டு தொகுதி, பொன்பதர்கூடம் கிராம சதுர்புஜ கோதண்டராமர் கோயில் பகுதியை மேம்பாடு செய்யும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

421—

விற்பனை முகவர்கள்

வினா எண் 107933—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆதரவற்ற விதவைகள் மற்றும் படித்து வேலையில்லாமல் இருக்கும் உடல் ஊனமுற்றோருக்கு முத்திரைத்தாள் விற்பனை முகவர்கள் நியமனத்தில் முன்னுரிமை அளிக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) முத்திரைத்தாள் விற்பனை முகவர்கள் நியமனத்தில் உடல் ஊனமுற்றவர்களுக்கும், விதவைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டு நடைமுறையிலும் இருந்து வருகிறது.

(ஆ) எழவில்லை.

422—

பத்திரப் பதிவு

வினா எண் 108182—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பத்திரப் பதிவுகளில் நடைபெறும் முறைகேடுகளை தடுக்க சிறப்பு பிரிவினை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வொரு பதிவு மாவட்டத்திலும் உள்ள நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் தம் கீழ் உள்ள சார்பதிவகங்களில் முறைகேடுகள் நடக்காவண்ணம் ஆய்வு செய்கின்றனர். மேலும், மாவட்டப் பதிவாளருக்கு மேல் உள்ள உதவிப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் ஒரு அலுவலரும், துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் மண்டல அலுவலரும் கண்காணிப்பு செய்கின்றனர். இந்த அமைப்புகள் தவிர பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் உதவி பதிவுத் துறைத் தலைவர் தலைமையிலான சிறப்பு விழிப்புக் குழு ஒன்றும் செயல்படுகின்றது.

(ஆ) எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

423—

முத்திரைத் தாள்கள்

வினா எண் 108185—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் முத்திரைத்தாள்கள் தடையின்றி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும், வரம்பிற்குட்பட்டு முத்திரைத்தாள்கள் போதுமான அளவு இருப்பு வைத்து பொது மக்களுக்கு தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முத்திரைத் தீர்வையை மாற்று வழியில் பணமாகவோ, வங்கி வரைவு ஓலையாகவோ செலுத்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) எழவில்லை.

424—

பூங்கா மேம்பாடு

வினா எண் 108342—திருமதி ஜி. லதா: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கோட்டையில் உள்ள பூங்காவில் குழந்தைகளுக்கான சிறிய தொடர் வண்டி இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் *(ஆ)* வேலூர் கோட்டையில் உள்ள பூங்காவில் குழந்தைகளுக்கான சிறிய தொடர் வண்டி இயக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

425—

பூங்கா அமைத்தல்

வினா எண் 108343—திருமதி ஜி. லதா: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் கோட்டையை சுற்றி பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் *(ஆ)* 2007-2008 ஆம் ஆண்டில் மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் வேலூரில் உள்ள கோட்டையின் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.89.32 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகளில், வேலூர் கோட்டையின் தெற்குப் பகுதியில் உள்ள பூங்கா மேம்பாட்டிற்காக ரூ. 50.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலூர் கோட்டையைச் சுற்றி பூங்கா அமைத்தல் குறித்த கருத்துரு ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

426—

கட்டடம்

வினா எண் 108834—திரு. கே.எஸ். விஜயகுமார்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :

2005—06 பதிவுத் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண் 33, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 24—02—2006—ன்படி ரூ.15 இலட்சம் செலவில் வடசென்னை பதிவு மாவட்ட ஆரணி சார்பதிவகத்திற்குப் புதிய அரசு கட்டடம் ஏற்கெனவே கட்டப்பட்டு, 5-5-2008 தேதி முதல் அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது.

427—

சுற்றுலா மேம்பாடு

வினா எண் 108968—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரத்தில் புலிக்குகைப் பகுதியை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :

மாமல்லபுரத்திலுள்ள புலிக்குகைப் பகுதி தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. 2004-2005ஆம் ஆண்டில் மைய அரசு நிதி உதவித் திட்டத்தின்மூலம், மாமல்லபுரத்தில் ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சி (2-ம் கட்டத்) திட்டத்தின்கீழ் புலிக்குகைப் பகுதியில் நிலச் சீரமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.37.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

428—

சுற்றுலாத் தலம் அமைத்தல்

வினா எண் 110820—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்திலுள்ள சித்தர் கோயிலை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தமிழக சுற்றுலாத் துறையின்மூலம் தமிழ்நாட்டில் உள்ள எந்த ஒரு குறிப்பிட்ட இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதோ/உருவாக்குவதோ இல்லை. அவ்விடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் மட்டும் செய்து வருகிறது.

சேலம் மாவட்டத்தில் உள்ள சித்தர் கோயில் பகுதியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

429—

சுற்றுலாத் தலம் மேம்பாடு

வினா எண் 111855—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் பகுதியில் உள்ள 21 தீவுகளையும் ஒருங்கிணைத்து சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :

சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

இராமேஸ்வரம் பகுதியிலுள்ள 21 தீவுகளையும் ஒருங்கிணைத்து அவ்விடங்களில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

430—

தங்கும் விடுதி

வினா எண் 115863—திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை நகரில் சுற்றுலாத் துறைமூலம் தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :

சுற்றுலாத் துறைமூலம் தங்கும் விடுதிகளை கட்டும் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது. தனியார் விடுதிகள் கட்ட முன் வந்தால் அதனை சுற்றுலாத் துறை ஊக்குவிக்கும்.

431—

முத்திரைத்தாள் முகவர்கள்

வினா எண் 117249—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) கேரள மாநிலத்தில் உள்ளவாறு முத்திரைத் தாள் முகவர்களுக்கு கமிஷன் தொகையை அதிகரித்து வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் முத்திரைத்தாள் முகவர்களுக்கு கமிஷன் தொகையை அதிகரித்து வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

432—

சுற்றுலா மேம்பாடு

வினா எண் 118537—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை கோயில், சாத்தனூர் அணை, படவேடு கோயில், அமிர்தி வனவிலங்கு பூங்கா, செண்பகத்தோப்பு அணை, ஜமுனாமத்தூர் மலை, வேலூர் நாராயணி பீடம் ஆகியவற்றை சுற்றுலாத் தலமாக அறிவித்து மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஒரு பகுதிக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அவ்விடத்தில், தேவையான அடிப்படை வசதிகளை, நிதி ஆதாரத்தைப் பொறுத்து சுற்றுலாத் துறை செய்து தருகிறது. மேலும் அதிகம் பிரபலமாகாத சுற்றுலா

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

பகுதிகளையும் கண்டறிந்து, அவ்விடங்களிலும் தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறையின்மூலம் செய்து தரப்படுகிறது. திருவண்ணாமலை கோயில், சாத்தனூர் அணை, படவேடு கோயில், அமிர்தி வனவிலங்குப் பூங்கா, செண்பகத்தோப்பு அணை, ஜமுனாமத்தூர் மலை, வேலூர் நாராயணி பீடம் ஆகியவற்றை சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

433—

சுற்றுலா மேம்பாடு

வினா எண் 118546—திருமதி ரா. லீமா ரோஸ்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதியிலுள்ள மிகவும் நீளமான தொட்டிப்பாலம் சுற்றுலாப் பகுதியை மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவட்டாறு தொகுதியிலுள்ள மிகவும் நீளமான தொட்டிப்பாலம் சுற்றுலாப் பகுதியை மேம்படுத்திடுதல் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

434—

சுற்றுலா மேம்பாடு

வினா எண் 118976—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், நாட்டரசன் கோட்டை பேரூராட்சியை சுற்றுலா நகரமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாகவோ அல்லது சுற்றுலா நகரமாகவோ அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டை பேரூராட்சியை சுற்றுலா நகரமாக தரம் உயர்த்துதல் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

435—

சுற்றுலா வாரம்

வினா **எண் 119945—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலாத் துறையின்மூலம் ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் சுற்றுலா வாரம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறையின்மூலம் ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் சுற்றுலா வாரம் நடத்துதல் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2011 பிப்ரவரி 10]

436—

படகு இல்லம்

வினா எண் 119948—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் சுற்றுலாத் துறைமூலம் படகு இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரத்தில் சுற்றுலாத் துறைமூலம் படகு இல்லம் அமைத்தல் குறித்த கருத்துரு/திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

437—

சுற்றுலாத் திட்டங்கள்

வினா எண் 122095—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் குழு சுற்றுலாத் திட்டங்களை (பேக்கேஜ்) செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

மதுரையில் குழு சுற்றுலாத் திட்டங்களை மீண்டும் செயல்படுத்தும் நோக்கம் எதுவும் இல்லை.

438—

சுற்றுலா மேம்பாடு

வினா எண் 122096—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், குட்லாம்பட்டி தடாக நாச்சியம்மன் அருவியை மேம்படுத்தி சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், குட்லாம்பட்டி தடாக நாச்சியம்மன் அருவி பகுதியை மேம்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

439—

சுற்றுலாத் தலம்

வினா எண் 122105—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை லகூன் (அலையாத்தி காடு)களை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதி, முத்துப்பேட்டை லகூன் (அலையாத்தி காடு)களை சுற்றுலாத் தலமாக்குதல் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

440—

சுற்றுலாத் தலம்

வினா எண் 122106—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கீராலத்தூர் பொங்குசனீஸ்வரர் கோயிலை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதி, சுற்றுலாத் தலமாக்குதல் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

441—

சுற்றுலாத் தலம்

வினா எண் 127352—டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் ஏரியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசு எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அவ்விடத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அடிப்படை வசதிகள் மட்டும் செய்து தருகிறது.

மதுராந்தகம் ஏரியை சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

442—

மணி மண்டபம்

வினா எண் 36019—திரு. அ. ராஜன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகர்கோவிலில் நேசமணி அவர்களுக்கு மணி மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மார்ஷல் நேசமணி அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

443—

மணி மண்டபம்

வினா எண் 74390—திரு. த. தியோடர் ரெஜினால்டு: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், மார்ஷல் நேசமணி அவர்களுக்கு நினைவு மணி மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மார்ஷல் நேசமணி அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

444—

மணி மண்டபம்

வினா எண் 111625—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனுக்கு சிலை அமைத்து, மணி மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனுக்கு சிலை அமைத்து, மணி மண்டபம் அமைக்க அரசு பரிசீலனை செய்யும் என தெரிவிக்கப்படுகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

445—

மணி மண்டபம்

வினா எண் 117433—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பவானி பாசன திட்டத்தினை நடைமுறைப்படுத்திய ஈரோடு மாவட்ட தியாகி எம்.ஏ. ஈஸ்வரன் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டவும், ஈரோட்டில் சிலை அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே அரசு சார்பில் ஏராளமான நினைவகங்கள் நிறுவப்பட்டு அவற்றைப் பராமரிப்பதில் சிரமங்கள் நிலவி வரும் நிலையில், கீழ்பவானி பாசன திட்டத்தினை நடைமுறைப்படுத்திய ஈரோடு மாவட்ட தியாகி எம்.ஏ. ஈஸ்வரன் அவர்களுக்கு ஈரோட்டில் நினைவு மண்டபம் மற்றும் சிலை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

446—

நினைவு மண்டபம்

வினா எண் 117436— திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் மறைந்த தியாகி கொடிகாத்த குமரன் நினைவு மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் கொடி காத்த குமரன் அவர்களுக்கு நினைவகம் அமைக்கப்பட்டு இத்துறையால் பராமரிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் தியாகி கொடிகாத்த குமரன் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

447—

சிலைகள் அமைத்தல்

வினா எண் 117452—திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெறுவதை முன்னிட்டு கோயம்புத்தூரைச் சார்ந்த மறைந்த தேசத் தலைவர்கள் திருமிகு ஆர்.கே. சண்முகம் செட்டியார், திருமிகு அவிநாசிலிங்கம் செட்டியார், திருப்பூர் குமரன் (தியாகி குமரன்) மற்றும் திரு. சி. சுப்பிரமணியம் ஆகியோர் சிலைகளைக் கோயம்புத்தூரில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே அரசு சார்பில் ஏராளமான நினைவகங்கள் மற்றும் சிலைகள் நிறுவப்பட்டு அவற்றை பராமரிப்பதில் சிரமங்கள் நிலவி வரும் நிலையில் கோயம்புத்தூரைச் சார்ந்த மறைந்த தேசத் தலைவர்கள் திருமிகு ஆர்.கே. சண்முகம் செட்டியார், திருமிகு அவிநாசிலிங்கம் செட்டியார், திருப்பூர் குமரன் (தியாகி குமரன்) மற்றும் திரு. சி. சுப்பிரமணியம் ஆகியோர் சிலைகள் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

448—

நினைவு சின்னம்

வினா எண் 117465—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியின் தொன்மை வாய்ந்த மூலக் கொத்தளம் கோட்டையை புதுப்பித்து, நினைவுச் சின்னமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்

(அ) மற்றும் *(ஆ)* இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுரம் அரண்மனைக்கு முன்பு ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களுக்கு சிலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இத்துறையின் சார்பில் அவருடைய பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இது தவிர ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் நினைவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 30–03–2010 அன்று தபால் தலை வெளியிடப்பட்டுள்ள நிலையில், இராமநாதபுரம் மன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியின் தொன்மை வாய்ந்த மூலக் கொத்தளம் கோட்டையை புதுப்பித்து, நினைவுச் சின்னமாக மாற்றும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

449—

நியாய விலைக் கடை

வினா எண் 61283—திரு. கி. ஆறுமுகம் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், காங்கேயன் குப்பத்தில் புதியதாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மேலேரிப்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் காங்கேயன் குப்பத்தில 55 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் காங்கேயன் குப்பத்தில் மீண்டும் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

450—

மண்டல அலுவலகம்

வினா எண் 61313—திரு. து. அமரமூர்த்தி மற்றும் திரு. அருள் அன்பரசு: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரியலூர் மாவட்டத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மண்டல அலுவலகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அரியலூர் மண்டல அலுவலகம் கடந்த 01–01–2010 முதல் பெரம்பலூர் மண்டல அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதியில் தனியாக இயங்கி வருகிறது.

451—

நியாய விலைக் கடை

வினா எண் 104343—திரு. சி. கோவிந்தசாமி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ, திருப்பூர் வட்டம், கருவம்பாளையம் 2-வது நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், கருவம்பாளையம் 2-வது நியாய விலைக் கடையிலிருந்து 915 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஏபிடி ரோடு பகுதியில் புதிய நியாய விலைக் கடை ஆரம்பிக்கப்பட்டு 16—2—2010 முதல் செயல்பட்டு வருகிறது.

452—

நியாய விலைக் கடை

வினா எண் 104346—திரு. சி. கோவிந்தசாமி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் வட்டம், ராயபுரம் 2-வது நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், ராயபுரம் 2-வது நியாய விலைக் கடையிலிருந்து 731 குடும்ப அட்டைகளைப் பிரித்து ராயபுரம்-4 என்ற புதிய நியாய விலைக் கடை அமைக்கப்பட்டு 2-12-2009 முதல் செயல்பட்டு வருகிறது.

453—

நியாய விலைக் கடை

வினா எண் 104350—திரு. சி. கோவிந்தசாமி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் வட்டம், கே. செட்டிபாளையம் நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

திருப்பூர் வட்டம், கே. செட்டிபாளையம் நியாய விலைக் கடையிலிருந்து 1,161 குடும்ப அட்டைகளைப் பிரித்து வெங்கடேஸ்வரா நகர் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்கப்பட்டு 30-9-09 முதல் செயல்பட்டு வருகிறது.

454—

நியாய விலைக் கடை

வினா எண் 104355—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வட்டம், வேலம்பாளையம் நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

திருப்பூர் வட்டம், வேலம்பாளையம் நியாய விலைக் கடையிலிருந்து 960 குடும்ப அட்டைகளைப் பிரித்து, வேலம்பாளையம் (கிழக்கு) என்ற புதிய நியாய விலைக் கடை அமைக்கப்பட்டு 2-12-2009 முதல் செயல்பட்டு வருகிறது.

455—

பணி நிரந்தரம்

வினா எண் 122655—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் அரசு ரேசன் குடோனில் பணிபுரியும் தினக்கூலி சுமைதூக்கும் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

தினக்கூலி சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு, கிடங்குகளில் சரக்குகளை ஏற்றி, இறக்கும் பணி என்பது கிடங்குகளுக்கு சரக்குகள் வரத்தைப் பொறுத்தும், அரசு அவ்வவ்போது அறிவிக்கும் நலத்திட்ட செயல்பாடுகளைப் பொறுத்தும் இருக்கும். மேலும், சரக்குகள் கையாளுதல் பணி அனைத்து கிடங்குகளிலும் தொடர்ந்து இருக்கும் என உறுதியாக கூற இயலாது. எனவே, தினக்கூலி சுமைதூக்கும் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

456—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 123161—திரு. கோ. எதிரொலி மணியன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரணமல்லூர் தொகுதி, வடமாதிமங்கலம், நியாய விலைக் கடையை பிரித்து கருங்காலிகுப்பம் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரணமல்லூர் தொகுதி, வடமாதிமங்கலம்-1 நியாய விலைக் கடை ஏற்கெனவே பிரிக்கப்பட்டு, கருங்காலி குப்பத்தில் ஒரு பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டு 27-4-2005 முதல் செயல்பட்டு வருகிறது.

தற்போது, கருங்காலி பகுதி நேர நியாய விலைக் கடையில் 263 குடும்ப அட்டைகளும், இதன் தாய்க் கடையான வடமாதிமங்கலம்-1 நியாய விலைக் கடையில் 720 குடும்ப அட்டைகளும் உள்ளன. மேற்படி இரண்டு நியாய விலைக் கடைகளும் வடமாதிமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்

2011 பிப்ரவரி 10]

கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. கருங்காலி குப்பம் பகுதி நேர நியாய விலைக் கடை ஜே.வி.வி.டி. கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது.

457—

விட்டுவசதி வாரியம்

வினா எண் 15396—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இட வசதி கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், செல்வபுரத்திலுள்ள வீட்டுவசதி வாரிய வீடுகள் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர், செல்வபுரத்திலுள்ள வீட்டுவசதி வாரிய வீடுகள் பழுதடைந்துள்ளன. எனவே, மாவட்ட தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் ஆய்வறிக்கைக்கு இணங்க அவற்றை இடித்துவிட்டு ரூ. 32.60 கோடி செலவில் புதிய வீடுகள் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் வழங்கியது. ஆனால், கணக்கெடுப்புப் பணிகள் தொடங்கப்பட்ட போது, குடியிருப்புதாரர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் அப்பணியைத் தொடர இயலவில்லை. மீண்டும் கோவை மாவட்ட ஆட்சியரின் தலைமையில் தொழில் நுட்ப வல்லுநர்கள் குழு இரண்டாம் முறையாக கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் குடியிருப்புதாரர்கள் தங்களது குடியிருப்புகளின் பழுது பார்ப்புப் பணிகளை தாங்களாகவே மேற்கொள்வதாகவும், அக்குடியிருப்புகளில் ஏதேனும் அசம்பாவித சம்பவம் நடந்தால் அதற்கு தாங்களே பொறுப்பேற்பதாகவும், குடியிருப்பினை இடித்துவிட்டு மீண்டும் கட்ட ஒப்பளிக்கப்பட்ட அரசாணையை இரத்து செய்யுமாறும்

கேட்டுக் கொண்டனர். எனவே, கோவை செல்வபுரம் தெற்கு, பேரூர், வடக்கு பேரூர், ஆட்டுதொட்டி ஆகிய திட்டப் பகுதிகளில் உள்ள 1,550 அடுக்குமாடிக் குடியிருப்புகளை மீண்டும் அமைக்கும் திட்டப் பணிகளைக் கைவிட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் அரசுக்கு கருத்துருவினை அனுப்பியது. அதனை பரிசீலனை செய்து மேற்குறிப்பிட்ட குடியிருப்புகளை இடித்துவிட்டு மீண்டும் கட்டும் பணியைக் கைவிடுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

458—

அடுக்குமாடிக் கட்டடம்

வினா எண் 117007—திரு. எஸ். ராஜ்குமார்: மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதி கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை நகரத்திலுள்ள குடிசைப் பகுதி மக்களுக்கு அடுக்குமாடிக் கட்டடங்களை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை நகரத்திலுள்ள குடிசைப் பகுதி மக்களுக்கு அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டும் திட்டம் எதுவும் இல்லை. மயிலாடுதுறை நகரில் அரசு நிலங்கள் வாரியத்திற்கு கிடைக்கப் பெறும் பட்சத்தில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய கொள்கைகளின்படி அப்பகுதி மக்களுக்கு தேவையிருப்பின், அப்பகுதி குடிசைவாழ் மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தருவது குறித்து பரிசீலிக்கப்படும்.

459—

கூட்டுறவு நூற்பாலை

வினா எண் 49443—திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலியில் மூடிக்கிடக்கின்ற கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் திறந்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

திருநெல்வேலியில் மூடிக்கிடக்கின்ற கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் புனரமைத்து இயக்கும் முயற்சியாக தற்போது தேசிய பஞ்சாலைக் கழகத்துடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

460—

மாணவர் விடுதிகள்

வினா எண் **69380—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பிற்பட்ட மாணவர்கள் தங்கும் விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் இயங்கி வரும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி ஆகியவற்றில் ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட 50 மாணவ/மாணவியர் எண்ணிக்கையுடன் கூடுதலாக தலா 10 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

[2011 பிப்ரவரி 10

461—

புதிய மாணவர் விடுதி

வினா எண் 69393—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, காணை ஊராட்சி ஒன்றியம், பனைமலைப்பேட்டையில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி புதியதாக ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பனைமலைப்பேட்டையினைச் சுற்றி ஏற்கெனவே 2 மாணவர் மற்றும் 2 மாணவியர் விடுதிகள் 8 கி.மீ.-க்குள் அமைந்துள்ளதால் முகையூர் தொகுதி, காணை ஊராட்சி ஒன்றியம், பனைமலைப்பேட்டையில் புதிதாகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவதற்கான சாத்தியக்கூறு இல்லை.

462—

புதிய நூற்பாலை

வினா எண் 71438—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் நூற்பாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் நூற்பாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

463—

ஆயத்த ஆடை பயிற்சி

வினா எண் 77362—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் *(ஆ)* இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களை உள்ளடக்கிய பரமக்குடி பகுதி எமனேஸ்வரத்தில் மத்திய அரசின் ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், இராமநாதபுரம் மாவட்ட நிர்வாக நிதி உதவியுடன் ஆயத்த ஆடை வடிவமைப்பு மற்றும் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி மையம் மூலம் மானாமதுரை பகுதியில் உள்ளவர்களும் பயன் பெறலாம். எனவே, மானாமதுரையில் புதிதாக ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையம் ஏற்படுத்தத் தேவை இல்லை.

464—

மாணவியர் விடுதி

வினா எண் 82307—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி ஏதும் தற்சமயம் இல்லை. எனவே, கட்டடம் கட்டும் வினா எழவில்லை. மேலும், அங்கு புதிதாக விடுதி துவங்கும் செயற்குறிப்பும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

465—

விற்பனை மையம்

வினா எண் 83111—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதியில் கைத்தறி துணி விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) கலசப்பாக்கம் தொகுதியில் கைத்தறித் துணி விற்பனை மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

466—

மாணவியர் விடுதி

வினா எண் 88710—திரு. வை. காவேரி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி மற்றும் எடப்பாடி பகுதிகளில் மாணவியர் விடுதிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி மற்றும் எடப்பாடி ஆகிய பகுதிகளில் மாணவியர் விடுதிகள் துவங்கும் மற்றும் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் ஆய்வில் இல்லை. எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வரும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதிக்கு வரும் ஆண்டுகளில் நிதி நிலைக்கேற்ப அரசுக் கட்டடம் கட்ட ஆய்வு செய்யப்படும்.

467—

தொழிற் பூங்கா

வினா எண் 95371—திரு. வை. காவேரி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் அதிநவீன விசைத்தறி தொழிற் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியில் அதிநவீன விசைத்தறி தொழிற் பூங்கா அமைப்பது குறித்தான செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

468—

மாணவியர் விடுதி

வினா எண் 100659—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வேப்பூர் ஒன்றியம், வேப்பூர் மற்றும் கீழப்புலியூர் அரசு மேல்நிலைப் பள்ளி பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் பெண்கள் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வேப்பூர் ஒன்றியம், வேப்பூர் மற்றும் கீழப்புலியூர் அரசு மேல்நிலைப் பள்ளி பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் மாணவியர் விடுதிகள் துவங்குவது தொடர்பாக கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

469—

நூற்பாலை

வினா எண் 104228—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

கலசப்பாக்கத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

470—

நெசவுப் பூங்கா

வினா எண் 105621—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, வில்வாரணியில் கைத்தறி நெசவுப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

கலசப்பாக்கம் தொகுதி, வில்வாரணியில் கைத்தறி நெசவுப் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

471—

சிற்றுண்டி வழங்குதல்

வினா எண் 106908—திருமதி ஜி. லதா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர், மாணவியர் விடுதிகளில் காலை மற்றும் இரவு வேளைகளில் சிற்றுண்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியருக்கு சத்தான மற்றும் சமச்சீரான உணவு வழங்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

காலை வேளைகளில் மட்டும் சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. மதியம் மற்றும் இரவு வேளைகளில் அரிசி, காய்கறி உணவு வகைகள் அட்டவணைப்படி வழங்கப்படுகின்றன. எனவே, இரவு வேளைகளில் சிற்றுண்டி வழங்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் ஆய்வில் இல்லை.

472—

கல்வி உதவித் தொகை

வினா எண் 106914—திருமதி ஜி. லதா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு, வழங்கும் கல்வி உதவித் தொகையை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு, வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை உயர்த்தி வழங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

473—

மாணவியர் விடுதி

வினா எண் 107472—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியின் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கையை உயர்த்த ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவ மற்றும் மாணவியர் விடுதிகள் மட்டுமே இயங்கி வருகின்றன. இவ்வாண்டு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு நிரந்தரமாக 4,000 கூடுதல் இடங்கள் வழங்க ஆணையிடப்பட்டதில், தரங்கம்பாடி மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக்கு மட்டும் கூடுதலாக 15 இடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

474—

துணி நூல் பூங்கா

வினா எண் 107807—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் துணி நூல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கைத்தறிப் பட்டுப் பூங்கா என்ற வகையில் துணி நூல் பூங்கா ஒன்று அமைக்கப்படும். இப்பூங்கா அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய அரசின் திட்ட அங்கீகாரக் குழுக் கூட்டத்தில் ரூ.83.83 கோடி செலவில் பட்டுப் பூங்காத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் காஞ்சிபுரத்தில் பட்டுப் பூங்கா அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

475—

கைத்தறி மேம்பாடு

வினா எண் 107821—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் கைத்தறி பூங்கா ஏற்றுமதி வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எல்லையில் 9 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 1,256 கைத்தறிகளும், கூட்டுறவு அமைப்பு சாராத தனியார் நபர்களிடம் 250 கைத்தறிகளும் உள்ளன. கைத்தறி பூங்கா ஏற்றுமதி வளாகம் அமைக்க தொழில் முனைவர்களிடமிருந்து (Entrepreneur) கோரிக்கைகள் பெறப்பட்டால் மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும்.

476—

பயிற்சி மையம்

வினா எண் 110187—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஆயத்த ஆடை மற்றும் வடிவமைப்பு பயிற்சி மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் தற்போது சென்னையில் கிண்டி மற்றும் முகப்பேர், திருப்பூர், தருமபுரி, பெரம்பலூர் மற்றும் பரமக்குடி ஆகிய ஆறு

2011 பிப்ரவரி 10]

இடங்களில் ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையங்கள் இயங்கி வருகின்றன. தமிழகத்தில் மேலும் மூன்று ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையங்கள் அமைக்கப்படும் என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களால் 2009–10–ஆம் ஆண்டின் வரவு–செலவு கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, மேலும் மூன்று ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு மையங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மூன்று பயிற்சி மையங்களும் விரைவில் அமைக்கப்படும்.

477—

நூற்பாலை

வினா எண் 116731—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் கூட்டுறவு நூறபாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

478—

ஜவுளி பூங்கா

வினா எண் 111848—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கையில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்கீழ் சிவகங்கையில் ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில் முனைவோர்கள் முன்வரும்பட்சத்தில், அரசு மானியத்துடன் அப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

479—

கைத்தறி குழுமம்

வினா எண் 118636—திரு. ஆர். எம். பழனிசாமி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரியில் கைத்தறி குழுமம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு சரகத்தில் 201 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சரகத்தில் 8 கைத்தறி வளர்ச்சிக் குழுமங்கள் மற்றும் 26 கைத்தறிக் குழு அணுகு முறை திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி பகுதியில் கைத்தறிக் குழுமம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், வரும் நிதியாண்டில் மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி பகுதியில் கைத்தறிக் குழுமம் அமைக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

480—

தொழிலாளர் நீதிமன்றம்

வினா எண் 70507—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதி எல்லைக்குட்பட்ட தொழிற் தாவாக்கள் மற்றும் கேட்பு மனுக்கள் தற்போது கடலூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. 1947-ஆம் வருட தொழிற்தகராறுகள் சட்டப் பிரிவு 2ஏ மற்றும் 2(கே)-ன்கீழ் மேல்மலையனூர் தொகுதியில் மிகவும் குறைந்த அளவில் தாவாக்கள் பெறப்பட்டு, சட்டப் பிரிவு 12 (4)-ன்கீழ் சமரச முறிவு ஏற்பட்டு கடலூர், தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்கு விடப்பட்டு வருகிறது. மேலும், மிகக் குறைந்த அளவில் கேட்பு மனுக்கள் சட்டப் பிரிவு 33 சி (2)-ன்கீழ் மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. இந்நிலையில் மேல்மலையனூர் தொகுதிக்கென தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பது குறித்து அவசியம் எழவில்லை.

481—

தொழிலாளர் நீதிமன்றம்

வினா எண் 77478—திரு. இல. வேலுசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரியில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்ட ஆட்சி எல்லைக்குட்பட்ட தொழிற் தாவாக்கள் மற்றும் கேட்பு மனுக்கள் தற்போது சேலம், தொழிலாளர் நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. சேலம், தொழிலாளர் நீதிமன்ற ஆட்சி எல்லையின்கீழ் சேலம், ஈரோடு, நாமக்கல், தர்மபுரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மிகப் பரந்ததாக உள்ளதன் காரணமாகவும், தருமபுரிக்கு அருகிலுள்ள ஓசூரில் அதிக அளவில் தொழிற்சாலைகள் உள்ளதன் காரணமாகவும், ஓசூரில் தொழிலாளர் நீதிமன்றம் ஒன்றினை புதிதாக அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் இருந்து வருவதால், தருமபுரி தொகுதியில் தனியாக தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பது குறித்த அவசியம் எழவில்லை.

482—

அரசு ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை

வினா எண் 101575—திருமதி ரா. லீமா ரோஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் மற்றும் திருவட்டாறில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை (E.S.I.) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை/தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் துவங்க முடிவு செய்வது புதுதில்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகமாகும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தாரின் வரையறைப்படி 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை துவங்க குறைந்த பட்சம் 50,000 காப்பீட்டு நபர்கள் அப்பகுதியில் வசிக்க வேண்டும். தற்போது நாகர்கோவில் மற்றும் திருவட்டாறில் போதுமான காப்பீட்டாளர்கள் அப்பகுதியில் வசிக்கவில்லை. ஆதலால்

2011 பிப்ரவரி 10]

அப்பகுதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழக மருத்துவமனை (தொ.அ.ஈ.) துவங்குவது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

483—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 103453—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விளாத்திகுளத்தில் புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அரசுக்கு உத்தேசம் இல்லை.

484—

தொழிலாளர் நீதிமன்றம்

வினா எண் 105798—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூரில் மாவட்ட தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒசூரில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க குறைந்த அளவே வழக்குகள் உள்ளதால் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

[2011 பிப்ரவரி 10

485—

வேலைவாய்ப்பு

வினா எண் 108096—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு தொழிற்பயிற்சி மையங்களில் படிக்கும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) அரசு தொழிற்பயிற்சி மையங்களில் படித்து முடித்த மாணவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தொழிற் பழகுநர் பயிற்சிக்குச் செல்ல (Apprentice) பரிந்துரை செய்யப்படுகிறது.

இப்பயிற்சி முடித்தவர்கள் (Apprentice) வேலைவாய்ப்பிற்கென வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வருகின்றனர். தொழில்நுட்ப கல்வித் தகுதி மற்றும் பயிற்சியின் அடிப்படையில் காலியிடங்கள் பெறப்படும்போது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு மற்றும் இதர தகுதிகளின்படி அவர்களது பெயர்கள் பரிந்துரை செய்யப்படுகிறது. மாநில அரசுப் பணிகள் அல்லாது மைய அரசில் உள்ள தொழில்நுட்ப நிறுவனங்களிலும், படைப் பணிகள் மற்றும் இரயில்வே துறையிலும், தனியார் துறையிலும் இவர்கள் தகுதிகளின்படி வாய்ப்புகள் பெறலாம். சிறப்பாக அனுபவம் பெற்றவர்கள் வெளிநாட்டில் உள்ள வேலைகளுக்குச் செல்வதற்கு அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மூலம் அரசு உதவிகளைச் செய்கிறது.

2011 பிப்ரவரி 10]

486—

தொழிலாளர் குறைதீர்க்கும் மையம்

வினா எண் 108112—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் தொழிற்சாலைகளில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க தொழிலாளர் குறை தீர்க்கும் மையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மேட்டூர் தொகுதியில் தொழிற்சாலைகளில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகம் ஒன்று கீழ்க்கண்ட முகவரியில் இயங்கி வருகிறது.

எண். 37/2, கூட்ஸ் ஷெட் ரோடு,
ஆர்.டி.ஓ. ஆபீஸ் அருகில்,
மேட்டூர் அணை-2.

தொழிலாளர்கள் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையன்று தொழிற்சாலைகள் ஆய்வாளரை மேற்காணும் அலுவலகத்தில் நேரில் சந்தித்து தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம். எனவே, தனியாக தொழிலாளர் குறை தீர்க்கும் மையம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) எழாது.

487—

புதிய ஆய்வக உபகரணங்கள்

வினா எண் 108122—திரு. ஜி.கே. மணி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு புதிய ஆய்வக உபகரணங்கள் வாங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணையில் ஓர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் 272 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது. புதுடெல்லி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, தலைமை இயக்குநரகத்தின் நெறிமுறைகளின்படி இத்தொழிற்பயிற்சி நிலையத்திற்குத் தேவையான ஆய்வக உபகரணங்கள் பெற்று வழங்கப்பட்டுள்ளன. மேலும், தற்பொழுது மேட்டூர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் மத்திய அரசின் பொது மற்றும் தனியார் கூட்டமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.2.5 கோடி செலவில் கடன் உதவியுடன் நிலை உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேட்டூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்குத் தேவையான ஆய்வக உபகரணங்களும் பெற்று வழங்கப்படும்.

488—

கட்டடம்

வினா எண் 111849—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கையில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சிவகங்கையில் ஓர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் 224 இருக்கைகளுடன் ஆகஸ்ட் 2007 முதல் செயல்பட்டு வருகின்றது. இத்தொழிற்பயிற்சி நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 156, தொழிலாளர் மற்றும்

TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

வேலைவாய்ப்புத் துறை, நாள்: 16-7-2007-ல் ரூ.155.92 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்திற்கான சொந்தக் கட்டடம் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

489—

புதிய அலுவலகம்

வினா எண் 114350—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரில் தொழிலாளர் நல உதவி ஆணையர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு நகரில் தற்போதைய நிலையில் தொழிலாளர் நல உதவி ஆணையர் அலுவலகம் அமைப்பது குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

490—

தொழிலாளர் நீதிமன்றம்

வினா எண் 114352—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களை ஆட்சி எல்லைகளாக உள்ளடக்கி தொழிலாளர் முதன்மை நீதிமன்றம், தொழிலாளர் கூடுதல் நீதிமன்றம் 1, 2

மற்றும் 3, சென்னை ஆகிய நான்கு தொழிலாளர் நீதிமன்றங்கள் தற்போது மூன்று மாவட்டங்களுக்கும் பொதுவாக சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் இயங்கி வருகின்றன. 1947-ஆம் தொழிற்தகராறுகள் சட்டப் பிரிவு 2ஏ மற்றும் 2(கே)-ன்கீழ் செங்கல்பட்டு தொகுதியில் மிகவும் குறைந்த அளவில் தாவாக்கள் பெறப்பட்டு, சட்டப் பிரிவு 12(4)-ன்கீழ் சமரச முறிவு ஏற்பட்டு, மேற்கண்ட தொழிலாளர் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு விடப்பட்டு வருகிறது. இந்நிலையில் செங்கல்பட்டு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் பிரத்தியேகமாக தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பது குறித்த அவசியம் எழவில்லை.

491—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 115825—திருமதி. ஆர். பிரேமா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவினாசி தொகுதியில் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

அவினாசி தொகுதியில் மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் துவங்க தற்போது அரசுக்கு உத்தேசம் இல்லை.

492—

பணியாளர் நியமனம்

வினா எண் 117255—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்ட எல்லையில் அமைந்திருக்கும் ஐ.எஸ்.ஆர்.ஓ. மத்திய அரசு நிறுவனத்தில் அடிப்படை பணியாளர் பிரிவில் மீண்டும் தமிழகப் பணியாளர்களே நியமனம் பெற மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மத்திய அரசு நிறுவனங்களில் ஏற்படும் பணிக் காலியிடங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலத்திற்கு காலியிட அறிவிப்பு அறிவிக்கப்படுமாயின், உயிர்ப்பதிவேட்டிலுள்ள பதிவு மூப்பு உள்ள பதிவுதாரர்கள் பரிந்துரைக்கப்படுவர். ஐ.எஸ்.ஆர்.ஓ. நிறுவனத்தில் உள்ள அடிப்படை பணியாளர் பணிக் காலியிடத்திற்கு கன்னியாகுமரி—திருநெல்வேலி மாவட்ட எல்லையில் உள்ள நாகர்கோவில் மற்றும் திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு பணிக் காலியிட அறிவிப்பு அறிவிக்கப்பட வேண்டும். ஐ.எஸ்.ஆர்.ஓ. மத்திய அரசு நிறுவனத்தில் ஏற்படும் அடிப்படை பணியாளர் பிரிவில் மீண்டும் தமிழகப் பணியாளர்களே நியமனம் பெற வேண்டும் என்பதற்கு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த வழிவகை இல்லை.

493—

வியாபாரிகள்

வினா எண் 119201—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்திரையிடாத, மறுமுத்திரையிடாத தராசுகள் மற்றும் எடைக்கற்கள் இல்லாமல் விற்கும் வியாபாரிகள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு தரப்படுத்தப்பட்ட எடையளவு (அமல்) சட்ட விதிகளின் விதி 15 (7)-ன்படி ஒவ்வொரு ஆய்வாளரும் அவரவரது எல்லையிலுள்ள அனைத்து எடையளவு உபயோகிக்கும்

[2011 பிப்ரவரி 10

நிறுவனங்களை ஆண்டுக்கொரு முறை ஆய்வு செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி இம்மாநிலத்தில் உள்ள அனைத்து தொழிலாளர் உதவி ஆய்வர்களும் (எடையளவு ஆய்வாளர்கள்) அவரவரது எல்லையிலுள்ள நிறுவனங்களை ஓராண்டில் ஒரு முறைக்குக் குறையாமல் ஆய்வுகள் செய்து அவற்றிலுள்ள எடையளவுகளை சோதனையிடுகின்றனர். இந்த ஆய்வின்போது இச்சட்ட விதிகளின்படி சரிபார்த்து முத்திரையிடப்படாத எடையளவுகள் இருக்கும்பட்சத்தில் அவற்றை பறிமுதல் செய்து மீளமுத்திரையிட நடவடிக்கை எடுக்கிறார்கள். தொழிலாளர் உதவி ஆய்வர்கள் தவிர தொழிலாளர் துணை ஆய்வர்கள் (உதவி எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரிகள்), தொழிலாளர் ஆய்வர்களும் (துணை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரிகள்) சோதனை ஆய்வுகள் மற்றும் கூட்டாய்வுகள் மேற்கொண்டு முத்திரையிடாத எடைகள் மற்றும் அளவைகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கின்றனர். இதைத் தவிர பொது மக்களிடமிருந்து புகார் பெறப்படின் உடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

494—

கோயில் புதுப்பித்தல்

வினா எண் 51166—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, குருணிகுளத்துப்பட்டி சிவன் கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், குருணி குளத்துப்பட்டி கிராமத்தில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் சிவன் கோயில் ஏதும் இல்லை.

2011 பிப்ரவரி 10]

495—

நிலம் ஆக்கிரமிப்பு

வினா எண் 52639—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சேமக்கோட்டை திருமூல ஈஸ்வரன் திருக்கோயில் நிலத்தில் உள்ள தனியார் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், சேமக்கோட்டை திருமூல ஈஸ்வரன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் தனியார் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லாததால் அவற்றை அகற்ற வேண்டிய நிலை எழவில்லை.

496—

சத்துணவு மையம்

வினா எண் 58303—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், ப.உடையாம்பட்டி மாரிஸ்ட் மேல்நிலைப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்குக் கூடுதலாக சத்துணவு வழங்கவும், மேல்நிலைப் பள்ளிக்கு தனியே சத்துணவு மையம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கடவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பி. உடையாம்பட்டியில் உள்ள மாரிஸ் நிறுவனத்திற்கு துவக்கப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி என இரு பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. துவக்கப் பள்ளியில் 153 மாணவர்களுக்கும், மேல்நிலைப் பள்ளியில் 100 மாணவர்களுக்கும் அரசு நிர்ணயித்துள்ள அளவில் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. துவக்கப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளுக்கும் இடைவெளி சுமார் 50 மீட்டர் தூரம் உள்ளது. தற்பொழுது இரண்டு பள்ளிக்கும் சேர்த்து ஒரே இடத்தில் (மேல்நிலைப் பள்ளியில்) சமையல் செய்து துவக்கப் பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு தள்ளுவண்டியில் எடுத்துச் சென்று வழங்கப்பட்டு வருகிறது.

9-ஆம் வகுப்பு மற்றும் 10-ஆம் வகுப்பு மாணவர்கள் சத்துணவுத் திட்டத்தில் மதிய உணவு உண்ணுவதில்லை. இம்மாணவர்களுக்கு இந்த நிதியாண்டில் சத்துணவுத் திட்டத்தில் கூடுதல் பயனாளிகளாகச் சேர்க்க கருத்துரு சமர்பிக்குமாறு பள்ளி தாளாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளிக்கு தனியாக சத்துணவு மையம் அமைக்க பள்ளி நிர்வாகம் கருத்துரு அனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

497—

கோயில் குளம்

வினா எண் 62588—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

(அ) பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரம் அய்யனார் கோயில் குளத்தை தூர்வாரி படிகட்டுகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி, வட்டம், பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரம், அருள்மிகு அய்யனார் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிர்வாகம் கிராம மக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான குளம் ஏதுமில்லை. இத்திருக்கோயிலுக்கு அருகில் புல எண் 331/2-ல் உள்ள குளம் அய்யனார் குளம் என அழைக்கப்படுகிறது. இக்குளம் பஞ்சாயத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. குளம், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமானதாக இல்லாத நிலையில், குளம் சீரமைப்பு குறித்து இந்து சமய அறநிலையத் துறை மூலம் நடவடிக்கை எடுத்திட வழிவகை இல்லை.

498—

புதிய திருத்தேர்

வினா எண் 92103—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அருள்மிகு நாறும் பூ நாதர் திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்,. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அருள்மிகு நாறும் பூ நாதர் திருக்கோயில் தேர்த் திருப்பணிக்கு திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லாத காரணத்தால் தற்போது புதிய தேர் செய்ய வழிவகையில்லை.

499—

கிரிவலம்

வினா எண் 100647—திரு. ம. சந்திரகாசி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், பாடாலூர் பூமாலை ஆஞ்சநேயர் கோயிலுக்கு கிரிவலப்பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், பாடாலூர், அருள்மிகு பூமாலை சஞ்சீவராயர் மற்றும் வீற்றிருந்த பெருமாள் திருக்கோயில்கள் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் குன்றின்மீது அமைந்துள்ள கோயிலாகும். இத்திருக்கோயிலில் கடந்த எட்டு ஆண்டுகளாக பௌர்ணமி நாட்களில் கிரிவலம் நடைபெற்று

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

வருகிறது. கிரிவலப்பாதையின் தூரம் சுமார் ஒன்றரை கிலோ மீட்டராகும். இதில் 3/4 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் மெட்டல் பாதையும், எஞ்சிய ¾ கிலோமீட்டர் தூரத்திற்கு உபயதாரர்கள் மூலம் மண்பாதை அமைக்கப்பட்டு தற்சமயம் பயன்பாட்டில் உள்ளது. கிரிவலப்பாதையை தார்ச்சாலையாக மாற்ற திருக்கோயிலுக்கு போதிய நிதி வசதியில்லை.

500—

திருக்கோயில் புதுப்பித்தல்

வினா எண் 104983—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி ஊராட்சியிலுள்ள பரம விநாயகர் திருக்கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், அமரகுந்தி கிராமம் அருள்மிகு பரம விநாயகர் திருக்கோயிலின் திருப்பணியைச் செய்வதற்கு மேற்படி திருக்கோயிலில் நிதிவசதி இல்லை. இத்திருக்கோயில் கிராமப் பகுதியில் அமைந்துள்ளதால் பொது மக்களிடமிருந்து நன்கொடை பெறவும் இயலாது. மேலும் இத்துறையின் நிர்வாகத்தின்கீழ் உள்ள திருக்கோயில்களுக்கு பொது மக்கள் பங்களிப்புடன் அரசு நிதியுதவி வழங்கப்பட்டு, திருப்பணி நடைபெற்று வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

பட்டியல்—13

தொடக்கப் பள்ளி

1—

வினா எண் 105456—திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரூர் ஒன்றியம், கொளகம்பட்டி ஊராட்சி, பாப்பாரப்பட்டியில் (காமராசர் நகர்) தொடக்கப் பள்ளி துவக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரூர் ஒன்றியம், கொளகம்பட்டி ஊராட்சி, பாப்பாரப்பட்டியில் (காமராசர் நகர்) தொடக்கப் பள்ளி துவக்க தறபோதைக்கு வாய்ப்பு இல்லை.

2—

தரம் உயர்த்துதல்

வினா எண் 107693—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, வெங்கம்பாக்கம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, வெங்கம்பாக்கம் அரசு உயர் நிலைப் பள்ளிக்கான பொது மக்கள் பங்குத்தொகை ரூ.2 இலட்சம் இதுவரையில் செலுத்தப்படவில்லையென்பதுடன், பள்ளிக்கான இடவசதியும் போதுமானதாக இல்லை. மேலும் அருகில் 8 கிலோ மீட்டர் தூரத்திற்குள் இரு மேல்நிலைப் பள்ளிகள் உள்ள நிலையில் தற்போதைக்கு இக்கோரிக்கையை அரசு பரிசீலிக்க இயலாத நிலையில் உள்ளது.

2011 பிப்ரவரி 10]

3—

கூடுதல் வகுப்பறைகள்

வினா எண் 107856—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, சர்க்கரைசெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் சர்க்கரைசெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தரும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

4—

பொது நூலகம்

வினா எண் 107905—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, பாகசாலை, தர்மகுளம் ஆகிய கிராமங்களில் பொது நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, தர்மகுளத்தில் கிளை நூலகம் 15-11-1966 முதல் செயல்பட்டுவருகின்றது. நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, பாகசாலையில் பகுதிநேர நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

5—

துணை அலுவலகம்

வினா எண் 108453—திரு. வை. காவேரி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் அரசுத் தேர்வுகள் இயக்கக துணை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சென்னை அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் 7 மண்டல அலுவலகங்களில் ஒன்றான மதுரை மண்டல துணை இயக்குநர் அலுவலகம், 20–11–1980 முதல் எண் 4, ஹக்கீம் அஜ்மல்கான் சாலை, சின்ன சொக்கி குளம், மதுரை 625002 என்ற முகவரியில் ஏற்கெனவே இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

6—

கூடுதல் கட்டடம்

வினா எண் 108691—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, காவேரிபுரம் ஊராட்சியிலுள்ள செட்டிப்பட்டி நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மேட்டூர் தொகுதி, காவேரிபுரம் ஊராட்சியில் உள்ள செட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குப் போதுமான வகுப்பறைகள் உள்ள நிலையில் கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தரும் அவசியம் எழவில்லை.

7—

பயிற்சி நிறுவனம்

வினா எண் 103696—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மேட்டூர் தொகுதியில், புதிதாக அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவக்க தற்போது அவசியம் எழவில்லை.

8—

கூடுதல் வகுப்பறைகள்

வினா எண் 113639—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை, ஈங்கூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்டத்தின் மூலம் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) அனைவருக்கும் கல்வித் திட்டமானது தொடக்கக் கல்வியைச் சார்ந்தது என்பதால் இத்திட்டத்தின்கீழ் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள் கட்ட வழிவகை இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9—

கூடுதல் வகுப்பறைகள்

வினா எண் 113641—திரு. விடியல். எஸ். சேகர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், பசுவப்பட்டி உயர்நிலைப் பள்ளிக்கு அனைவருக்கும் கல்வி இயக்கம்மூலம் கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்படுவதில்லை. மேலும் பசுவப்பட்டி உயர்நிலைப் பள்ளியில் உள்ள 6 முதல் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 4 வகுப்பறைகள் உள்ள நிலையில் இப்பள்ளிக்குக் கட்டடங்கள் போதுமானதாக உள்ளது.

10—

தரம் உயர்த்துதல்

வினா எண் 113713—திரு. விடியல். எஸ். சேகர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், ஈகுட்டப்பாளையம் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) ஈரோடு மாவட்டம், ஈகுட்டப்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11—

தரம் உயர்த்துதல்

வினா எண் 114417—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, நத்தம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நத்தம் கரியசேரி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அருகிலேயே 7 கிலோ மீட்டர் தூரத்தில், திருக்கழுக்குன்றம் அரசு மேல்நிலைப் பள்ளியும், 8 கிலோ மீட்டர் தூரத்தில் சதுரங்கப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளியும் உள்ளன. மேலும், இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு செலுத்தப்பட வேண்டிய பொதுமக்கள் பங்குத்தொகை ரூ.2 இலட்சம் செலுத்தப்படவில்லை. எனவே, இக்கோரிக்கையை அரசு பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

[2011 பிப்ரவரி 10

12—

தேர்வு மையம்

வினா எண் 115289—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 10 ஆம் வகுப்பிற்கு தேர்வு மையம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. அப்பள்ளி மார்ச் 2010 முதல் 12 ஆம் வகுப்பு தேர்விற்கு புதிய தேர்வு மையமாக அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

13—

தேர்வு மையம்

வினா எண் 115293—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, ஜருகு (மானித அள்ளி) அரசு மேல்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, ஜருகு (மானித அள்ளி) அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மார்ச்/ஏப்ரல் 2010-க்கு எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்விற்கு புதிய தேர்வு மையம் அமைக்க விண்ணப்பம் ஏதும் பெறப்படாததால் அப்பள்ளிக்குப் புதியதாக தேர்வு மையம் அமைக்கப்படவில்லை. மேலும் முதலில் பத்தாம் வகுப்பு தேர்வு மையம் அமைக்கப்பட்டு அதன் செயல்பாட்டினை பரிசீலித்த பின்னரே அடுத்து வரும் ஆண்டுகளில் 12 ஆம் வகுப்பு தேர்வு மையம் அமைப்பது குறித்து முடிவெடுக்கப்படும்.

14—

கழிப்பிட வசதி

வினா எண் 115295—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, நாயகனஅள்ளி ஊராட்சி, வெங்கடானூர் நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்கவும், கழிப்பிட வசதி செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, நாயகனஅள்ளி ஊராட்சி, வெங்கடானூர் நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை. இப்பள்ளிக்குப் போதுமான கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

15—

தரம் உயர்த்துதல்

வினா எண் 115374—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான நிபந்தனைகளை நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியை தரம் உயர்த்த தற்போதைக்கு வாய்ப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

16—

சுற்றுச் சுவர் அமைத்தல்

வினா எண் 115398—திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, திருமயம் ஒன்றியம், எலம்பலக்குடி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, எலம்பலக்குடி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 650 மீட்டர் சுற்றுச் சுவர் ஏற்படுத்துதல் குறித்து நபார்டு வங்கியிடமிருந்து நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது. நபார்டு வங்கியிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டதும் மேற்கண்ட பள்ளிக்குச் சுற்றுச் சுவர் பொதுப் பணித் துறைமூலம் விதிகளுக்குட்பட்டு சுற்றுச் சுவர் ஏற்படுத்தித் தரப்படும்.

17—

சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் **115528**—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தும்பலபட்டி நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தும்பலபட்டி நடுநிலைப் பள்ளிக்கு 42 மீட்டர்கள் சுற்றுச்சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் இப்பள்ளிக்குச் சுற்றுச்சுவர் இந்த கல்வியாண்டில் கட்டி முடிக்கப்படும்.

[2011 பிப்ரவரி 10

18—

சுகாதார வளாகம்

வினா எண் 115529—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பெரியகோட்டை காமராஜ்நகர் நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் மற்றும் சுகாதார வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பெரியகோட்டை காமராஜ்நகர் நடுநிலைப் பள்ளிக்கு 370 மீட்டர்கள் சுற்றுச்சுவர் கட்ட அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் கல்வியாண்டில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் இவ்வாண்டில் கட்டி முடிக்கப்படும். சுகாதார வளாகம் கட்டுவதற்கு அனைவருக்கும் கல்வித் திட்ட விதிமுறைகளில் வழிவகை இல்லை.

19—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 115560—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் அனைத்து அரசு பள்ளிகளிலும் சுத்தமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க நபார்டு திட்டம், எஸ்.எஸ்.ஏ. திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர்/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி திட்டம், பெற்றோர் ஆசிரியர் கழக நிதி, அறிவியல் தொழில்நுட்பத் துறை மற்றும் இந்திய அரசின் திட்டத்தின்மூலமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

20—

சுற்றுச் சுவர் அமைத்தல்

வினா எண் 115887—திரு. ராம. சுப்புராம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, பொன்னமராவதி ஒன்றியம், சடையம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, பொன்னமராவதி ஒன்றியம், சடையம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் ஏற்படுத்திட நபார்டு வங்கியிடமிருந்து நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது. நிதி உதவி பெறப்பட்டவுடன் மேற்கண்ட பள்ளிக்கு 1,200 மீட்டர் சுற்றுச் சுவர் பொதுப் பணித் துறைமூலம் விதிகளுக்குட்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

21—

சுற்றுச் சுவர் அமைத்தல்

வினா எண் 117369—திரு. எம்.என். கந்தசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாளியூர் பேரூராட்சி, கலிங்கநாயக்கன்பாளையம் நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாளியூர் பேரூராட்சி, கலிங்கநாயக்கன் பாளையம் நடுநிலைப் பள்ளிக்கு 270 மீட்டர்கள் சுற்றுச்சுவர் கட்ட அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக்கல்வியாண்டில் இப்பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்படும்.

22—

தேர்வு மையம்

வினா எண் 118538—திரு. டெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

போளூர் தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், கீழ் அரசம்பட்டில் ப்ளஸ் 2 தேர்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

போளூர் தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், கீழ் அரசம்பட்டில் அரசு மேல்நிலைப் பள்ளியில் ப்ளஸ் 2 தேர்வு மையம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

அமைக்கக்கோரி வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பரிந்துரை ஏதும் பெறப்படாததால் அப்பள்ளியில் +2 தேர்வு மையம் அமைக்க இயலவில்லை.

23—

தரம் உயர்த்துதல்

வினா எண் 118602—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி, படியம்பட்டிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

போளூர் தொகுதி, படியம்பட்டிலுள்ள நடுநிலைப் பள்ளியில் போதிய மாணவர்கள் எண்ணிக்கை இல்லாததால் இக்கோரிக்கையினைத் தற்போது பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

24—

தரம் உயர்த்துதல்

வினா எண் 120537—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், சோழவரத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

போளூர் தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், சோழவரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட பரிசீலிக்கப்படும்.

[2011 பிப்ரவரி 10

25—

நூல்கள் வாங்குதல்

வினா எண் 121421—திரு. து. ரவிக்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நூலகத் துறைக்கு நூல்கள் வாங்குவதற்கான அறிவிப்பு செய்து, நூல்கள் வாங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2008 ஆம் ஆண்டு பதிப்பு நூல்களுக்கு மே 2010 இறுதிக்குள் ஆணை வழங்கப்பட்டுவிடும். மேற்படி ஆணை வழங்கியபின் 2009 ஆம் ஆண்டு பதிப்பு நூல்கள் வாங்க நாளிதழ்களில் அறிவிப்பு செய்தி வெளியிடப்படும்.

26—

துவக்கப் பள்ளி

வினா எண் 121476—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் புதிய துவக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

போளூர் தொகுதி, கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் புதிய தொடக்கப் பள்ளி தொடங்க அரசு ஆணை (நிலை) எண் 198, பள்ளிக் கல்வித் துறை, நாள் 21-7-2010 இல் ஆணைகள் வெளியிடப்பட்டு பள்ளி இயங்கி வருகிறது.

2011 பிப்ரவரி 10]

27—

புத்தகக் கண்காட்சி

வினா எண் 122250—திரு. து. ரவிக்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னையில் நிரந்தர புத்தகக் கண்காட்சி நடத்த பதிப்பாளர்களுக்கு இடம் வழங்கப்படும் என்ற அறிவிப்பினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2007-2008 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையின் அடிப்படையில் சென்னையில் மாபெரும் புத்தகப் பூங்கா அமைக்கத் திட்டமிடப்பட்டு, அதற்கான இடம் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கான இடம் இன்னும் தேர்வாகவில்லை. பொது நூலக இயக்ககம் மாவட்ட ஆட்சியருடன் இடம் தெரிவு செய்ய முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இடத்தினை தேர்வு செய்த பின்பு புத்தகப் பூங்கா அமைக்க பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

28—

தொடக்கப் பள்ளி

வினா எண் 122975—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மானாந்திருவாசல் தேவி அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியை (தனியார் பள்ளி) அரசே ஏற்று நடத்த முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 2010, கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 19-10-1983 தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும்பட்சத்தில் மானாந்திருவாசல் தேவி உதவி பெறும் தொடக்கப் பள்ளியை அரசு ஏற்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

29—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 123008—திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் புதியதாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க தற்போது அவசியம் எழவில்லை.

30—

சீரமைத்தல்

வினா எண் 123085—திரு. வை. காவேரி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சிக்கோட்டையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சிக்கோட்டை, சென்னை வட்டம், இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறைமூலம் குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆண்டுப் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வரப்படுகிறது. இக்கோட்டையில் காலந்தோறும் பராமரித்தல் பணியின்கீழ் பாதுகாப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

31—

மின்னணு முறை

வினா எண் 45135—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மதிப்புக் கூட்டு வரி செலுத்துதல் மற்றும் தொழில் விவர அறிக்கைகளை மின்னணு முறையில் தாக்கல் செய்யும் முறையை அறிமுகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மதிப்புக் கூட்டு வரி தொழில் விவர அறிக்கைகளை மின்னணு முறையில் தாக்கல் செய்யும் முறை அக்டோபர் 2007 முதல் அமலில் உள்ளது. வணிகர்கள் இம்முறையினைப் பயன்படுத்தி மாதாந்திர விவர அறிக்கைகளை மின்னணு முறையில் தாக்கல் செய்கின்றனர். மின்னணுமூலம் மதிப்புக் கூட்டு வரி செலுத்தும் முறை அக்டோபர் 2009 இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வணிகர்கள் மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரியினை மின்னணு முறையில் செலுத்தி வருகின்றனர்.

[2011 பிப்ரவரி 10

32—

வரி விலக்கு

வினா எண் 68914—திரு. ஜி.கே. மணி : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இன்சுலின் மருந்துக்கு வரி விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இன்சுலின் மருந்துக்கு வரி விலக்கு அளிக்கும் உத்தேசம் தற்பொழுது இல்லை.

33—

வரி விலக்கு

வினா எண் 105809—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொப்பரை தேங்காய்க்கு முழு வரி விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொப்பரை, ஏனைய எண்ணெய்வித்துக்களைப் போல் தேங்காய் எண்ணெய் தயாரிக்க பயன்படுத்துவதால் அதற்கு வரி விலக்கு அளிக்க வேண்டிய அவசியம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

34—

வரி இரத்து செய்தல்

வினா எண் 121143—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவுப் பொருட்கள்மீது விதிக்கப்பட்டுள்ள வரியை இரத்து செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டப் பிரிவு 15இன்கீழ் 4 ஆம் அட்டவணை B பிரிவில் மொத்தம் 20 வகையான உணவுப் பொருட்களுக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

35—

விளையாட்டு மையம்

வினா எண் 23948—திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டையில் விளையாட்டு மையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:

(அ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டையில் விளையாட்டு மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

36—

கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

வினா எண் 29950—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பாலாற்றில் தோல் தொழிற்சாலை கழிவுநீர் கலப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். வேலூர் மாவட்டம், பாலாற்றில் கழிவு நீர் கலப்பதைத் தடுக்கும்வண்ணம் அனைத்து தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் எதிர்மறை சவ்வூடு பரவல் மற்றும் அடர்கசடு மேலாண்மை சுத்திகரிப்பு அமைப்பை நிறுவி, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலை உபயோகத்திற்கே சுழற்சி முறையில் பயன்படுத்தும் திட்டத்தை அமல்படுத்த உரிய நடவடிக்கைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

37—

கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

வினா எண் 30151—திரு. எஸ்.ஆர். ராஜா: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம் ஏரியில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

சிட்லபாக்கம் ஏரியில் தொழிற்சாலை கழிவுநீர் மற்றும் சிட்லபாக்கம் பேரூராட்சியின் கழிவுநீர் ஏதும் கலப்பதில்லை. தாம்பரம் நகராட்சிக்கு உட்பட்ட தாம்பரம் கிழக்குப் பகுதியின் அன்றாடக் கழிவுநீர் கண்ணகி தெரு வழியாகச் சென்று சிட்லபாக்கம் ஏரியினைச் சென்றடைகிறது. தாம்பரம் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த திட்ட முன்வடிவு தற்போது சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியத்தால் தயார் செய்யப்பட்டு வருவதாக தாம்பரம் நகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது. அவ்வாறு தாம்பரம் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்முறைக்கு வரும்பட்சத்தில் சிட்லபாக்கம் ஏரிக்கு செல்லும் அன்றாடக் கழிவுநீர் முழுவதும் தடுக்கப்பட்டுவிடும்.

38—

கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

வினா எண் 33618—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியின் கழிவுநீர் வைகை நதியில் கலந்து மாசுபடுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியின் கழிவுநீர் வைகை நதியில் கலப்பதில்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2011 பிப்ரவரி 10

39—

கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

வினா எண் 35163—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் முதல் வாலாஜா வரை பாலாற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். வேலூர் மாவட்டம், ஆம்பூர் முதல் வாலாஜா வரை பாலாற்றில் கழிவுநீர்த் தடுக்கும்வண்ணம் அனைத்து தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் எதிர்மறை சவ்வூடு பரவல் மற்றும் அடர்கசடு மேலாண்மை சுத்திகரிப்பு அமைப்பை நிறுவி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலை உபயோகத்திற்கே பயன்படுத்தும் திட்டத்தை அமல்படுத்த உரிய நடவடிக்கைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

40—

விளையாட்டுத் திடல்

வினா எண் 55268—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், இருங்காக் கோட்டையில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கிருங்காக் கோட்டையில் விளையாட்டுத் திடல் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

41—

கழிவுநீர் கடலில் கலக்கும் திட்டம்

வினா எண் 65857—திருமதி ஜி. லதா: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் கழிவுநீரை குழாய் அமைத்து சென்னையில் உள்ள கடலில் கலக்கும் திட்டம் உருவாக்கி செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம் தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீரை சுத்திகரித்து கடலில் கலக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

42—

நீர் மாசுபடுவதைத் தடுத்தல்

வினா எண் 107787—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், நடுவக்கரை ஊராட்சி, நடுவக்கரை கிராமத்திலுள்ள வேதியியல் தொழிற்சாலையால் நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நடுவக்கரை கிராமத்தில் கீழ்க்கண்ட இரண்டு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன:-

1. யான்திரா பின்டேக் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

2. புரோ ஆல்ஜன் பயோடெக் லிமிடெட்

மேற்கண்ட இரண்டு தொழிற்சாலைகளும் நாளொன்றுக்கு முறையே 700 லிட்டர் மற்றும் 560 லிட்டர் தொழிற்சாலைக் கழிவு நீரினை வெளியேற்றி வருகிறது. அவ்வாறு வெளியேற்றப்படும் கழிவுநீர், சூரியஒளி ஆவியாக்கும் தளத்தின்மூலம் ஆவியாக்கப்படுகிறது. தொழிற்சாலை கழிவுநீர் தொழிற்சாலை வளாகத்திலோ, வெளியிலோ வெளியேற்றப்படுவதில்லை. மேற்கண்ட தொழிற்சாலைகளானது, தொழிற்சாலை கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலையை அடைந்துள்ளன. எனவே மேற்கண்ட தொழிற்சாலைகளின் இயக்கத்தால் நிலத்தடி நீர் மாசுபட சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

43—

புகை பரிசோதனை மையம்

வினா எண் 107788—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டில் வாகன புகை பரிசோதனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

செங்கல்பட்டில் அங்கீகரிக்கப்பட்ட வாகன புகை பரிசோதனை மையம் தனியார் மூலமாக ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

வாகனங்களுக்கான வாகன புகை பரிசோதனை அவ்வப்போது அம்மையத்தின் மூலமாக பரிசோதனை செய்யப்படுகிறது. எனவே செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டில் வாகன புகை பரிசோதனை மையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

44—

கழிவுகளைத் தடுத்தல்

வினா எண் 116987—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, காவிரி கட்டளை தடுப்பணையில் கலக்கும் திருப்பூர், கரூர் சாயப்பட்டறை கழிவுகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், தி/ள்.நொய்யல் ஆறு ஆயக்காட்டுதாரர்கள் பாதுகாப்புச் சங்கம் தொடர்ந்த நீதிப்பேராணை எண் 29791/2003 என்ற வழக்கில் 22—12—2006 அன்று வழங்கிய தீர்ப்பின்படியும், மாண்புமிகு உச்ச நீதிமன்றம், தி/ள். திருப்பூர் சாயப்பட்டறைகள் உரிமையாளர்கள் சங்கம் தொடர்ந்த சிறப்பு அனுமதி மேல்முறையீடு (சிவில்) எண் 6963/2007—ன்கீழ் 06—10—2009 அன்று வழங்கிய தீர்ப்பின்படியும், கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலை (Zero Liquid Discharge System) அடைவதற்கான சுத்திகரிப்பு அமைப்பினை தனியாகவோ, கூட்டாகவோ நிறுவியுள்ளவைகள் மட்டுமே இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இதன்படி, 14 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உறுப்பினர்களாக உள்ள 432 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றை செயல்படுத்தாத 6 பொதுகழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உறுப்பினர்களாக உள்ள 63 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள்

மற்றும் தனியாக இவ்வமைப்பினை நிறுவாத 120 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் மூடப்பட்டுள்ளன. மேற்படி தொழிற்சாலைகளில் கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்யநிலை அடைவதற்கான சுத்திகரிப்பு அமைப்பினை நிறுவி இயக்குவதால் கழிவுநீரினால் ஏற்படும் மாசு முற்றிலுமாக தவிர்க்கப்பட்டுள்ளது.

இது தவிர, கரூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம், தி/ள். கரூர் மாவட்ட நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்கம் தொடர்ந்த நீதிப்பேராணை என் 24650/03-ன்கீழ் 16-11-2009 அன்று வழங்கிய உத்தரவின்படி, கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலை அடைவதற்கான சுத்திகரிப்பு அமைப்பினை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கான நடவடிக்கையினை 3 சாயத் தொழிற்சாலைகள் மேற்கொண்டுள்ளன. ஏனைய தொழிற்சாலைகள் மேற்படி அமைப்பினை நிறுவ நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வலியுறுத்தி வருகிறது. எனவே, இனிவரும் காலங்களில் திருப்பூர் சாயப்பட்டறை கழிவு நீர் நொய்யல் ஆறு மூலம் காவிரி கட்டளை தடுப்பணையில் கலப்பது முற்றிலுமாக தவிர்க்கப்படும்.

45—

ஆய்வுக் கூடம்

வினா எண் 106181—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகரில் திசு வளர்ச்சி ஆய்வுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகருக்கு அருகில் உள்ள கொளப்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள மாநில வன ஆராய்ச்சி நிலையத்தில் தாவர திசு வளர்ச்சி ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, செங்கல்பட்டு நகரில் தனியே ஒரு திசு வளர்ச்சி ஆய்வுக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

2011 பிப்ரவரி 10]

46—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 107206—திருமதி ஜி. லதா: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, முதலியார் ஏரியிலிருந்து காட்பாடி தொகுதி டி.ஆர். குப்பம் வரை வனத் துறை பகுதியில் தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை, வனத் துறையின் செயல்பாட்டிற்குத் தேவைப்படாது என்பதாலும், வனத் துறையில் இதுபோன்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு அதிகம் கிடைப்பதில்லை என்பதாலும், இச்சாலையினை வனத் துறை அமைக்கும் உத்தேசம் இல்லை. பொதுமக்கள் நலன் கருதி உள்ளாட்சித் துறையோ, நெடுஞ்சாலைத் துறையோ இச்சாலை அமைக்க முன்வரும் பட்சத்தில், வனப்பாதுகாப்புச் சட்டம், 1980-ன் படி உரிய கருத்துரு சமர்ப்பித்தால், அக்கருத்துரு பரிசீலனை செய்யப்பட்டு, மத்திய அரசின் அனுமதி பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

47—

மேய்ச்சலை தடை செய்தல்

வினா எண் 107771—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகக் காடுகளிலுள்ள அரிய மூலிகைகளைப் பாதுகாக்க, அதிகப்படியான மேய்ச்சலை தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் அரிய மூலிகைகளை மற்றும் இதர தோட்டங்களைப் பாதுகாக்க, அதிகப்படியான மேய்ச்சல் ஏற்படாமல் தடுக்க ஏற்கெனவே உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் வனப்பகுதிகளில், தேசியப் பூங்கா, புலிகள் காப்பகம், சரணாலயம், காடுவளர்ப்பு மற்றும் மறு உற்பத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குள்ளான வனப்பகுதிகள் மற்றும் தீ விபத்துக்குள்ளாகும் வனப்பகுதிகள் நீங்கலாக பிற வனப்பகுதிகளில், வெள்ளாடுகளைத் தவிர்த்து பிற கால்நடைகளுக்கு, உரிய வரைமுறைகளுடன் இலவசமாக மேய்ச்சல் அனுமதியளிக்கப்படுகிறது.

48—

கட்டடம்

வினா எண் 107776—திரு. கி. ஆறுமுகம் : மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு கோட்ட வன அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு கோட்ட வன அலுவலகம் தற்போது காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த அலுவலகம் செயல்படுவதற்கான கட்டடம் 2005-2006 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதியில் இருந்து காஞ்சிபுரத்தில் கட்டி முடிக்கப்பட்டு அங்கே அந்த அலுவலகம் இயங்கி வருகிறது.

2011 பிப்ரவரி 10]

49—

பூங்காவை விரிவுப்படுத்தல்

வினா எண் 107779—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வண்டலூர் உயிரியல் பூங்காவை விரிவுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஆம். அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

50—

தேசிய காடு வளர்ப்புத் திட்டம்

வினா எண் 107833—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, மயில்காடு பகுதியில் தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, மயில்காடு பகுதியில் தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

51—

உயிரியல் பூங்கா

வினா எண் 110161—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உயிரியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஆம்.

52—

மூலிகை ஆராய்ச்சி மையம்

வினா எண் 110838—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, டேனிஷ்பேட்டை வனச்சரகத்தில் மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, டேனிஷ்பேட்டை வனச்சரகத்தில் மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

53—

மயில்கள் சரணாலயம்

வினா எண் 115531—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டத்தில் மயில்கள் சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டத்தில் மயில்களுக்கு என தனியாக சரணாலயம் அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

54—

மான்கள் சரணாலயம்

வினா எண் 119220—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை அருகில் சங்கரபதி வனப் பகுதியில் மான்கள் சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை அருகில் சங்கரபதி வனப் பகுதியில் மான்கள் சரணாலயம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசிலனையில் இல்லை.

55—

நிலங்களைப் பாதுகாத்தல்

வினா எண் 119827—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி, ஜமுனாமரத்தூர், படவேடு, செண்பகத் தோப்பு, அத்திமூர், சந்தவாசல், அமிர்தி ஆகிய பகுதிகளில் யானைகளிடமிருந்து பொதுமக்கள் மற்றும் விவசாய நிலங்களை பாதுகாக்க மின்வேலி, குழி, தடுப்புச் சுவர், குட்டைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

வேலூர் வன மண்டலம், திருவண்ணாமலை வனக்கோட்டத்திற்குட்பட்ட ஜமுனாமரத்தூர், படவேடு செண்பகத்தோப்பு, அத்திமூர், சந்தவாசல், அமிர்தி ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் நடமாட்டம் உள்ளது. மேற்படி

பகுதிகளிலிருந்து காட்டு யானைகள் உணவு மற்றும் தண்ணீர் தேடி வனப்பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களுக்கு அவ்வப்போது வருகின்றன.

இவ்வாறு கிராமங்களுக்குள் வரும் யானைகளை வனப் பணியாளர்கள் தீப்பந்தம் கொளுத்தியும், பட்டாசு வெடித்தும், முரசு கொட்டியும் கிராமப் பகுதிகளிலுள்ளப் பயிர்களுக்கும், கிராம மக்களின் உடமைகளுக்கும் சேதாரம் ஏற்படா வண்ணம் மீண்டும் காட்டிற்குள் ஓட்டிச்சென்று விட்டு வருகின்றனர். காட்டு யானைகள் நடமாட்டம் ஏற்படும் பகுதியிலுள்ள கிராமங்களில் டாம் டாம் மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி அப்பகுதிகளில் பொதுமக்கள் செல்ல வேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. காட்டு யானைகள் கிராமங்களுக்குள் வந்து சேதங்கள் ஏற்படுத்தும் சமயங்களில் அப்பகுதியினை வன அலுவலர்கள் தணிக்கை செய்தும் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து அறிக்கைகள் பெற்றும் நஷ்டஈடு தொகை அப்போதைக்கப்போது சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. வனப்பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களில் வனப் பணியாளர்கள் இரவு பகலாக கண்காணித்து காட்டு யானைகள் கிராமங்களுக்குள் வருவதை முன் எச்சரிக்கை செய்து அசம்பாவிதம் நிகழாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள ஜவ்வாது மலைப் பகுதியில் 8 யானைகள் கொண்ட கூட்டம் ஒன்று ஜமுனாமரத்தூர், படவேடு, செண்பகத்தோப்பு, அத்திமூர், சந்தவாசல், அமிர்தி போன்ற பகுதிகளில் ஆங்காங்கே நடமாடிக் கொண்டுள்ளன. மேற்படி யானைகள் கிராமப் பகுதி மற்றும் விளைநிலங்களில் நுழையாமல் தடுக்கும் வண்ணம் இதுவரை 12 கி.மீ. நீளத்திற்கு ரூ.19.2 லட்சம் செலவில் சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. இதில் 4 கி.மீ. நீளம் படவேடு, செண்பகத் தோப்பு ஒட்டிய பகுதியாகும். யானைகள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் மற்றும் தேசிய காடு வளர்ப்புத் திட்டம் மூலம் 2009-2010 ஆம் ஆண்டுகளில் மட்டும் சுமார் 19 கசிவு

2011 பிப்ரவரி 10]

நீர்க் குட்டைகள் மற்றும் தடுப்பணைகள் சுமார் ரூ. 25 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. இவைகள் மூலம் யானைகள் கூட்டத்திற்கு நீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

யானைகள் காட்டை விட்டு வெளியே வராமல் இருக்க மேற்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு யானைகளிடமிருந்து பொதுமக்களுக்கும் மற்றும் அவர்களது விவசாய நிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாவண்ணம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

56—

சாலை அமைத்தல்

வினா எண் 120116—திரு. கே.பி. இராமசுவாமி: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராசிபுரம் தொகுதி, மேலூர், கீழூர், கெடமலை ஆகிய பகுதிகளுக்கு வனத் துறையின்மூலம் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

இல்லை.

57—

புதிய சாலைகள் அமைத்தல்

வினா எண் 120139—திரு. கு. சின்ன துரை : *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தலைவாசல் தொகுதி, கூடமலை, நினங்கரை வழியாக பச்சமலை, மாயம்பாடிக்கு வனத் துறை மூலமாக புதிய சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

58—

முள்வேலி அமைத்தல்

வினா எண் 121371—திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காவேரிப்பட்டிணம் தொகுதி, வனப் பகுதிகளில் முள்வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டிணம் தொகுதி, வனப் பகுதிகளில் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

59—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 123189—திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், புங்கம்பட்டு நாடு ஊராட்சி, சேர்க்கானூர் முதல் சிங்கபாளையம் வரையிலான 4 கி.மீ. மலைப் பாதையில் தார்ச்சாலை அமைக்க மத்திய அரசின் அனுமதி பெற்றுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், புங்கம்பட்டு நாடு ஊராட்சி, சேர்க்கானூர் முதல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

சிங்கம்பாளையம் வரையிலான 4 கி.மீ. மலைப் பாதையானது ஆண்டியப்பனூர், காப்புக்காட்டில் அமைக்கப்பட வேண்டி ஆய்வு பணிகள் நெடுஞ்சாலைத் துறையினரால் 2006-ல் முடிக்கப்பட்டுள்ளது. தார்ச் சாலை அமைக்கப்பட வேண்டுமெனில் அதிக வன நிலம் தேவைப்படுகிறது. எனவே, இது குறித்து வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன் கீழ் மத்திய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

தற்போது மேற்படி சாலை அமைக்கும் பணியை பாரத் நிர்மான் திட்டம் III-ல் மேற்கொள்ள வேலூர் உதவி செயற்பொறியாளர், நெடுஞ்சாலைத் துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தூரம் காப்பு காட்டிற்குள் 7.70 கி.மீ ஆகும், அகலம் 10.00 மீட்டர்கள் ஆகும். சாலை அமைக்க தேவைப்படும் மொத்த வன நிலத்தின் பரப்பு 7.70 எக்டேர் ஆகும். இது குறித்து பயனீட்டாளர் துறையான நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன் கீழ் உரிய கருத்துரு எதுவும் கிடைக்கப் பெறவில்லை. கருத்துரு கிடைக்கப் பெற்றவுடன் மத்திய அரசின் அனுமதி பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

60—

சாலையை அகலப்படுத்தல்

வினா எண் 446—திரு. இரா. இராம்பிரபு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்திலுள்ள இதம்பாடல் கிராமத்திலிருந்து உத்திரகோசமங்கை வரை உள்ள 8 கி.மீ. சாலையை அகலப்படுத்தி பலப்படுத்தும் பணியினை உடனடியாக மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்திலுள்ள இதம்பாடல் கிராமத்திலிருந்து உத்திரகோசமங்கை வரை செல்லும் சாலையானது 17.2 கி.மீ நீளமுடையது. இச்சாலையில்

கி.மீ. 8/0-17/2 வரையுள்ள ஒரு வழித்தடச் சாலையினை ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2009—10-ன் கீழ் இரு வழித்தடமாக அகலப்படுத்திடும் பணிக்கு ரூ.307.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

61—

சாலை சீரமைப்பு

வினா எண் 1336—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, நெல்லித்துறை மன்னம் சாலை பழுதடைந்துள்ளதை செப்பனிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, நெல்லித்துறை மன்னம் சாலை பழுதடைந்ததை சீர்செய்ய 2006-2007 ஆம் ஆண்டு சிறப்புப் பழுது பார்த்தல் (Special Repairs) நிதியின்கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பில் புதுப்பிக்கும் பணி மார்ச் 2007-ல் முடிக்கப்பட்டு தற்போது போக்குவரத்து தடையின்றி நடைபெற்று வருகிறது.

62—

நெடுஞ்சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 1974—திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் உடுக்குறியிட்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

ஊத்தங்கரை-சேலம் நெடுஞ்சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஊத்தங்கரை-சேலம் நெடுஞ்சாலை, அரசின் பல்வேறு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செப்பனிடப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

63—

தார்ச்-சாலை அமைத்தல்

வினா எண் 2309—திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, குனியமுத்தூர் நகராட்சி, இடையர்பாளையம் பிரதான சாலையைத் தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். இடையர்பாளையம் பிரதான சாலை கோவை (நெ) உட்கோட்டத்திற்குட்பட்ட மாவட்ட இதர சாலையாகும். இது சேலம்-கொச்சின் சாலை கி.மீ. 164/0-இல் தொடங்கி சுந்தராபுரம் செல்லும் சாலை (வழி) மாச்சம்பாளையம் சாலை கி.மீ. 0/0-2/4 வரை மொத்தம் 2.40 கி.மீ நீளம் கொண்டது. இச்சாலையின் மொத்த பணியும் மேற்கொள்ளப்பட்டு, பணி முடிக்கப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்றவாறு தற்போது நல்ல முறையில் உள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

64—

அகலப்பாதை அமைத்தல்

வினா எண் 10183—திரு. ஆர்: சிவானந்தம்: மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு-ஆரணியை இணைக்கும் ஒரு வழிப்பாதையை மாற்றி அகலப் பாதையாக அமைக்கும் பணியினை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஆற்காடு முதல் திருவாரூர் வரை உள்ள 378 கி.மீ நீளமுள்ள சாலைகள் முழுவதையும் இரு வழிப்பாதையாக அகலப்படுத்தும் பணி ரூ.611.70 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-01 தொகுப்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டு, நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. சட்டமன்ற வினாவில் குறிப்பிட்ட ஆற்காடு-ஆரணி சாலையானது மூன்றாம் பிரிவில் உள்ளடங்கியுள்ளது. ஆற்காடு முதல் ஆரணி வரை உள்ள 24.62 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் தற்போது முடிக்கப்பட்டு விட்டன.

65—

சாலையை அகலப்படுத்தல்

வினா எண் 14728—திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, கீழ் புத்தூர், மதுரா கோவனந்தல் கிராமத்திலிருந்து தேசூர்-கீழ்புத்தூர் சாலையில் இணையும் சாலையை அகலப்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை (நெ) கோட்டத்தின் பராமரிப்பிலுள்ள ஆற்காடு-திண்டிவனம் சாலையிலிருந்து கீழ்புத்தூர் (வழி) ஜப்தகாரணை சாலையானது கி.மீ.0/0-5/2 வரையுள்ள மாவட்ட இதர சாலையாகும். இச்சாலை ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ. 23.34 இலட்சம் செலவில் மேம்பாடு செய்யும் பணி முடிக்கப்பட்டு சாலை நல்ல நிலையில் உள்ளது. இச்சாலையின் போக்குவரத்து செறிவு குறைவாக உள்ளதால் தற்போது இச்சாலையினை அகலப்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

66—

சாலை மேம்பாடு

வினா எண் **14953—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி, ஏர்வாடி, வள்ளியூர்—விஜயாபதி சாலையில் கி.மீ.36/0—46/0 வரை மேம்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி, ஏர்வாடி, வள்ளியூர்—விஜயாபதி சாலையில் கி.மீ.38/0—41/660 வரை ஒரு வழித்தடத்திலிருந்து இரு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு, தற்போது போக்குவரத்துக்கு ஏற்றவகையில் பராமரிக்கப்படுகிறது.

[2011 பிப்ரவரி 10

67—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 23659—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, நரிக்குடி சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) கேள்வி எழவில்லை.

68—

பாலம் கட்டுதல்

வினா எண் 33767—திரு. தி. இராமசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி–ப.புதுப்பட்டி, தூள்டாபுரம் சாலையில் பார்வதி ஓடையில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி, ப.புதுப்பட்டி, தூள்டாபுரம் சாலையில் பார்வதி ஓடையில் பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

69—

புறவழிச் சாலை

வினா எண் 34453—திரு. வை. காவேரி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) எடப்பாடியில் புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

70—

இரு வழிப்பாதை அமைத்தல்

வினா எண் 53433—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை—பஞ்சப்பள்ளி ஒரு வழிப்பாதையை இரு வழிப்பாதையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி (நெ) கோட்டப் பராமரிப்பிலுள்ள மாவட்ட இதர சாலையான தேன்கனிக்கோட்டை – பஞ்சப்பள்ளி

[2011 பிப்ரவரி 10

சாலையானது கி.மீ. 0/0— 19/6 வரையில் உள்ளது. இச்சாலையில் கி.மீ. 0/0—0/4 வரையிலுள்ள பகுதிகள் இடை வழித்தடமாகவும் கி.மீ. 0/4—19/6 வரை ஒரு வழித்தடமாகவும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள போக்குவரத்திற்கு இச்சாலை போதுமானதாக உள்ளதால் எதிர்வரும் காலங்களில் போக்குவரத்து செறிவு அதிகமாகும்பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக நிதி நிலைமைக்கேற்ப அகலப்படுத்திட பரிசீலிக்கப்படும்.

71—

இரு வழிச்சாலை அமைத்தல்

வினா எண் 57599—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு—கண்ணமங்கலம் சாலையை இரு வழிச்சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு—கண்ணமங்கலம் சாலையை இரு வழிச்சாலையாக மாற்றக் கோரும் பகுதியானது (கி.மீ. 0/0—25/4) வேலூர் (நெ) கோட்டப் பராமரிப்பிலுள்ள ஒரு மாநில நெடுஞ்சாலையாகும். 25.4 கி.மீ. நீளம் கொண்ட இச்சாலையின் போக்குவரத்துச் செறிவு 7342 ஆகும். இச்சாலையில் கி.மீ. 0/0—13/0 மற்றும் கி.மீ. 18/8—25/4 வரையுள்ள பகுதிகள் ஏற்கெனவே இரு வழித்தடமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் கி.மீ. 13/0—18/8 வரையுள்ள ஒரு வழித்தடச் சாலைப் பகுதிகள் ரூ.117.00 இலட்சம் மதிப்பீட்டில் இடை வழித்தடமாக அகலப்படுத்தும் பணியானது 18—2—2009ல் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இடை வழித்தடமாகவுள்ள பகுதி வரும் நிதியாண்டுகளில் படிப்படியாக நிதிநிலைமைக்கேற்ப இரு வழித்தடமாக மாற்றம் செய்ய பரிசீலிக்கப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

72—

பாலத்தைச் சீரமைத்தல்

வினா எண் 58009—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூரிலிருந்து ஆனைமலை செல்லும் பாதையில் பழுதடைந்துள்ள பாலத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மேற்படி பாலச் சீரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

73—

பெயர்ப் பலகைகளைப் புதுப்பித்தல்

வினா எண் 76772—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை – இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையிலுள்ள பெயர்ப் பலகைகளைப் புதுப்பித்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

2008–2009ஆம் ஆண்டுத் திட்ட மதிப்பீடுகளில் செயல்படுத்தப்படும் வேலைகளுக்குத் தேவைப்படும் புதிய பெயர்ப் பலகைகளுக்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு வேலைகள் முடிக்கப்படும் போது புதிய பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டு வருகின்றன.

[2011 பிப்ரவரி 10

74—

மணல் அரிப்பைச் சீரமைத்தல்

வினா எண் 77583—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை – இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையின் இருபுறங்களிலும் உள்ள மணல் அரிப்பை சீரமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மதுரை—இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையின் இருபுறங்களிலும் உள்ள மணல் அரிப்பானது, தேசிய நெடுஞ்சாலை 49—ல் கி.மீ. 0/0—110/0 மதுரை—இராமநாதபுரம் சாலை பராமரிப்புப் பணிகள்மூலம் மேற்கொள்ளப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது.

75—

வட்டச் சாலைத் திட்டம்

வினா எண் 114313—திரு. எம். என். கந்தசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரம் மற்றும் புறநகரம் ஆகியவற்றை இணைக்கும் வட்டச் சாலை திட்டத்தைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாநகரில் 26 கி.மீ. நீளமுள்ள மேற்கு வெளி வட்டச் சாலையை ரூ.284 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிச்சாலையாக அமைக்கப்படும் என்று 2010—2011ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்

2011 பிப்ரவரி 10]

அறிவித்ததைத் தொடர்ந்து, இத்திட்டத்திற்கான நில எடுப்பு பிரேரணை தயாரிக்கப்பட்டு வருகிறது. நில எடுப்பு பணி முடிவுற்றவுடன் சாலை அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

76—

மென்பொருள் பூங்கா

வினா எண் 97044—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதியில் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதியில் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

77—

சத்துணவுக் கூடம்

வினா எண் 16000—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கருகல்வாடி கிராமம், வேட்டைக்காரன்புதூரில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கருகல்வாடி கிராமம், வேட்டைக்காரன்புதூரில் பள்ளிக்கூடம் ஏதும் இல்லை. இதனால் சத்துணவுக் கூடம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

78—

சத்துணவுக் கூடம்

வினா எண் 23689—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, சோகத்தூர் ஊராட்சி, ஆட்டுக்காரன்பட்டியில் புதிதாக சத்துணவுக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

தருமபுரி ஊராட்சி ஒன்றியம், ஆட்டுக்காரன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சத்துணவு சமையற் கூரை மிகவும் பழுதடைந்து இருந்ததால், 2008–2009ம் ஆண்டு சிறுசேமிப்பு ஊக்க நிதியிலிருந்து ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்து சீரமைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டு, தற்போது ஆட்டுக்காரன்பட்டி சத்துணவு மையம் நல்ல நிலையில் உள்ளது. மேற்படி சத்துணவு மையம் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது.

79—

மதிய உணவு வழங்குதல்

வினா எண் 28980—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, திருநாளூர் உயர்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, திருநாளூர் உயர்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 1-1-2007 முதல் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS — வாய்மையே வெல்லும்

2011 பிப்ரவரி 10]

80—

எரிவாயு அடுப்பு

வினா எண் **28992—திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுக் கூடங்களில் எரிவாயு அடுப்பு பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கி பள்ளி சத்துணவு மையங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 2,755 மையங்கள் ரூ.5.51 கோடி செலவில் நவீனப்படுத்த ஆணையிடப்பட்டது. நடப்பு நிதியாண்டில் (2010–2011) சத்துணவு மையங்களை நவீனப்படுத்த ரூ.1.96 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

81—

சத்துணவுக் கூடம்

வினா எண் **29396—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், எச்சூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், எச்சூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் ஏற்கெனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. புகைப் போக்கி பழுதுநீக்கம் செய்ய 2010–2011ஆம் ஆண்டில் சிறு பழுதுகள் பார்க்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 10

82—

சத்துணவுக் கூடம்

வினா எண் **30209—திரு. கோ. அரி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் எம்.ஜி.ஆர். நகரிலுள்ள துவக்கப் பள்ளிக்கு புதிய சத்துணவுக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புதிதாக தொடங்கப்பட்ட பள்ளி சத்துணவு மையத்திற்கு 2009–2010ஆம் ஆண்டு ஊரகக் கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1,00,000/- நிதி ஒதுக்கீட்டில் சத்துணவு மைய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

83—

ஊட்டச்சத்து மையம்

வினா எண் **57897—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், வடவம்பாடி ஊராட்சிக்குட்பட்ட பூலாம்பட்டிக்கும், கரட்டுப்பட்டிக்கும் ஊட்டச் சத்து மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம் வடவம்பாடி ஊராட்சிக்குட்பட்ட பூலாம்பட்டியிலும் மற்றும் கரட்டுப்பட்டியிலும் தனித்தனியே, *17–10–2007* முதல் வாடகையில்லாத இலவசக் கட்டடத்தில் ஊட்டச்சத்து மையம் செயல்பட்டு வருகின்றது. எனவே, புதிய மையம் துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

84—

உணவுக் கட்டணத்தை உயர்த்துதல்

வினா எண் 62167—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு *சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசு சேவை இல்லங்களில் பயிலும் மகளிருக்கு வழங்கப்படும் உணவு கட்டணத்தை ரூ.500/- ஆக உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 123, நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 16-9-2009-ல் அரசு குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் அரசு சேவை இல்லங்களின் உள்ளுறைவோர்களுக்கான உணவூட்டுச் செலவினத்தை ஒரு மாதத்திற்கு முறையே குழந்தைகளுக்கு ரூ.225-லிருந்து ரூ.450 ஆகவும், பெரியவர்களுக்கு ரூ. 300-லிருந்து ரூ.550 ஆக உயர்த்தியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அரசு சேவை இல்ல மகளிருக்கு உணவூட்டுச் செலவினமாக ரூ. 300-லிருந்து ரூ.550 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

85—

சத்துணவு மையம்

வினா எண் 75347—திருமதி. பெ. கமலாம்பாள்: மாண்புமிகு *சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், விஷார் கிராம அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சத்துணவு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், விஷார் கிராம அரசு உயர்நிலைப் பள்ளிக்கு

[2011 பிப்ரவரி 10

*2004-2005*ஆம் ஆண்டு SGRY-ST-II திட்ட நிதியில் சத்துணவு மையம் கட்டடப்பட்டு நல்ல நிலையில் தற்போது இயங்கி வருகிறது.

86—

அங்கன்வாடி மையம்

வினா எண் 75919—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சி, பெரிய கவுண்டனூரில் அங்கன்வாடி மையம் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி ஊராட்சி, பெரிய கவுண்டனூரில் 1992 ஆம் ஆண்டு முதல் அங்கன்வாடி மையம் செயல்பட்டு வரும் நிலையில், புதிய மையம் துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

சேவை இல்லம்

வினா எண் 84232—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் ஆதரவற்ற வயதான மகளிர்க்கு சேவை இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியான மானாமதுரையில் ஆதரவற்ற வயதான மகளிருக்கென்று சேவை இல்லம் இல்லை. சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் அரசு சேவை இல்லம்

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

செயல்பட்டு வருகிறது. இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்ட 130 நபர்களில் 34 நபர்களே தங்கி பயனடைந்து வருகிறார்கள். எனவே மானாமதுரையில் தனியாக சேவை இல்லம் தேவையின் அடிப்படையில் தனியர் எவரேனும் தொடங்க முன்வரும் பட்சத்தில் அரசு விதிமுறைகளின்படி பரிசீலனை செய்யப்படும்.

88—

புகலிடங்களைத் துவக்குதல்

வினா எண் 106174—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுகுன்றம் நகரில் சாலையோ சிறார்களுக்கான புகலிடங்களைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) திருக்கழுக்குன்றம் உட்பட காஞ்சிபுரம் மாவட்டத்தில் தென்படும் சாலையோர சிறார்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் காவல்துறைமூலம் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் செயல்பட்டு வரும் குழந்தைகள் நலக் குழு முன்பு ஆஜர் படுத்தப்பட்டால், அத்தகைய சிறார்களுக்கு உரிய புகலிடம் அளிக்கப்பட்டு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கப்படும். எனவே, காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் சிறார்களுக்கென புகலிடம் துவங்கும் தேவை அரசுக்கு எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

89—

ஆதரவற்றோர் இல்லம் அமைத்தல்

வினா எண் 10756—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் ஆதரவற்றோர் இல்லம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் ஏற்கெனவே ஆதரவற்ற மகளிருக்கு அரசு சேவை இல்லம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

90—

அங்கன்வாடி நவீனப்படுத்துதல்

வினா எண் 107659—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

குழந்தைகள் மையங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் குழந்தைகள் மையங்களுக்கு எரிவாயு இணைப்பு, மின்வசதி மற்றும் குக்கர்கள் வழங்கி நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 7,940 குழந்தைகள் மையங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

91—

அங்கன்வாடி மையம்

வினா எண் 108470—திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி, வடகாடுப் பட்டியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள வடகாடுப்பட்டியில் 2007 முதல் அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. தற்போது இம்மையம் அரசுக்கு சொந்தமான சமுதாயகூடத்தில் வாடகை இல்லாமல் செயல்பட்டு வருகின்றது.

2011 பிப்ரவரி 10]

எனவே, வடகாடுப்பட்டியில் அங்கன்வாடி மையம் அமைப்பது குறித்து வினா எழவில்லை.

92—

சத்துணவு மையம்

வினா எண் 109519—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, ரங்காபுரம், செங்காநத்தம் சாலையிலுள்ள தூய இதய மேல்நிலைப்பள்ளியில் சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

சத்துணவுத் திட்டம் அரசுப் பள்ளிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது.

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, ரங்காபுரம் செங்காநத்தம் ரோட்டில் அமைந்துள்ள தூய இதய மேல்நிலைப் பள்ளி அரசு நிதி உதவி பெறாத பள்ளியாகும். எனவே, இப்பள்ளியில் சத்துணவு மையம் அமைக்க வழிவகை இல்லை.

93—

கட்டடம்

வினா எண் 110176—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, சிக்கனம்பட்டி ஊராட்சி பகுதியில் அங்கன்வாடி பள்ளிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, சிக்கனம்பட்டி ஊராட்சியில் செயல்படும் மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு தற்சமயம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

[2011 பிப்ரவரி 10

94—

அங்கன்வாடி மையம்

வினா எண் 120758—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, பட்டக்காரன்பாளையம் ஊராட்சி, நாடார் பெருமாம்பாளையத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொகுதி, பட்டக்காரன்பாளையம் ஊராட்சி, நாடார் பெருமாம்பாளையத்தின் மக்கள் தொகை 164 ஆகும். மேற்படி பகுதியில் மத்திய அரசு, குழந்தைகள் மையம் அமைக்க நிர்ணயித்துள்ள மக்கள் தொகைக்கும் குறைவான மக்கள் தொகை இருப்பதாலும், குழந்தைகள் குறு மையம் அமைக்கத் தேவையான குறைந்தபட்ச மக்கள் தொகையான 150 பேர் மேற்படி கிராமத்தில் உள்ளபோதிலும், குறுமையம் அமைக்க தேவையான குறைந்தபட்சப் பயனாளிகளாக 15 குழந்தைகள்கூட இக்கிராமத்தில் இல்லாததால், இப்பகுதியில் குழந்தைகள் குறு மையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளும் இல்லை.

95—

இலவச பால் வழங்குதல்

வினா எண் 123126—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அங்கன்வாடி குழந்தைகளுக்கு தினந்தோறும் இலவசமாக பால் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

அங்கன்வாடி குழந்தைகளுக்கு தினந்தோறும் இலவசமாக பால் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

96—

சாதிச் சான்றிதழ் வழங்குதல்

வினா எண் 2005—திரு. ப. டில்லிபாபு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழங்குடியின மாணவ–மாணவியர்களுக்கும் மற்றும் அவ்வின மக்களுக்கும் சாதிச் சான்றிதழ் தருமபுரி, வேலூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் விண்ணப்பித்து வருடக் கணக்கில் வழங்காமல் உள்ளதால் சாதிச் சான்றிதழ் உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி, வேலூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த பழங்குடியின மாணவ–மாணவியராலும் மற்றும் அவ்வின மக்களாலும் பழங்குடி சாதிச் சான்றிதழ்கள் கேட்டு விண்ணப்பிக்கும் கோரிக்கைகளின்மீது வருவாய்த் துறை அலுவலர்களால் விசாரணை மேற்கொள்ளப்படும் போது மனுதாரர் பழங்குடியினத்தைச் சார்ந்தவர்தான் என்பது உறுதி செய்யப்பட்டால் மனுதாரருக்குப் பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்கப்படும். மேலும், பழங்குடி இனத்தவர்களுக்கு ஒரு வாரக் காலத்திற்குள் சாதிச் சான்று வழங்கப்பட வேண்டும் எனவும், ஐயம் ஏற்படும் இனங்களில் தீவிர விசாரணை மேற்கொண்டு 15 நாட்களுக்குள் உரிய சான்றினை மனுதாரருக்கு வழங்க வேண்டும் என்றும் விண்ணப்பதாரர்களின் கோரிக்கையின் மீது குறித்த காலத்திற்குள் நடவடிக்கை எடுக்காமல் காலந்தாழ்த்தினால் சம்பந்தப்பட்ட அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அனைத்து வருவாய்க் கோட்டாட்சியர்களுக்கும் தெரிவிக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

97—

ஆய்வுக் குழு அமைத்தல்

வினா எண் 3166—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகள் தங்கி படிக்கும் விடுதிகளை மாதம் ஒரு முறை ஆய்வு செய்ய சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் குழு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகள் தங்கி படிக்கும் விடுதிகளை மாதம் ஒரு முறை ஆய்வு செய்ய அந்தந்த மாவட்டத் துணை ஆட்சியர் தலைமையில் விடுதி மேலாண்மைக் குழு (Hostel Management Committee) அமைக்க அரசாணை (நிலை) எண் 12, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 25-1-2008-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இக்குழு, செயல்பட்டு வரும் நிலையில் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் குழு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

98—

பட்டா வழங்குதல்

வினா எண் 4432—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நன்னிலம் ஒன்றியம், மணவாளம் பேட்டை கிராமத்தில் வசிக்கும் ஆதி திராவிட குடும்பங்களுக்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 பிப்ரவரி 10]

விடை.—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் ஒன்றியம், மணவாளம்பேட்டை கிராமத்தில் 21 ஆதிதிராவிடர் குடும்பங்கள் தனியாருக்கு சொந்தமான இடத்தில் நீண்டகாலமாக வீடுகள் கட்டி வசித்து வருகின்றனர். இவர்கள் வசிக்கும் இடம் புல எண் 84/20, 21, 22, 23 முதலிய எண்ணில் ரயத்து மனை 0.01.0 ஹெக்டேர் முதல் 0.03.0 ஹெக்டேர் வரையிலான பரப்பு அ. மெகருன்னிசா மற்றும் 12 நபர்கள் பெயரில் பட்டா எண் 222-ல் உள்ளது. எனவே, தனியாருக்கு சொந்தமான இடத்தில் குடியிருந்து வருவதால், இவர்களுக்கு ஆதி திராவிடர் நலத் துறையின் மூலம் பட்டா வழங்க இயலாது. திருவாரூர், வருவாய் நீதிமன்றம் மூலம் பட்டா பெற்றுக் கொள்ள மேற்படி இடத்தில் குடியிருக்கும் ஆதி திராவிட மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

99—

தரம் உயர்த்துதல்

வினா எண் 48542—திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, முடிகண்டநல்லூர் ஆதி திராவிடர் நலத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, முடிகண்டநல்லூர் ஆதி திராவிடர் நலத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

100—

சமுதாயக் கூடம்

வினா எண் 49435—திருமதி மு. சந்திரா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

இராசப்பாளையம் தொகுதி, ஆதி திராவிடர் மக்கள் வாழும் கொடுக்காம்பட்டி, கணபதி சுந்தர நாச்சியார்புரம் கிராமங்களுக்கு சமுதாயக் கூடம் புதிதாகக் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

ராஜபாளையம் தொகுதி, ஆதி திராவிடர் மக்கள் வாழும் கொடுக்காம்பட்டி, கணபதி சுந்தர நாச்சியார்புரம் கிராமங்களுக்கு சமுதாயக் கூடம் புதிதாகக் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

101—

தரம் உயர்த்துதல்

வினா எண் 49561—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, பெருமாபட்டு ஊராட்சி, ஜடையனூர் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, பெருமாபட்டு ஊராட்சி, ஜடையனூர் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போதும் அரசிடம் இல்லை.

102—

உண்டி உறைவிடப் பள்ளி

வினா எண் 49820—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, தளிஞ்சி, தளிஞ்சி வயல், மஞ்சம்பட்டி, மூங்கில் பள்ளம் ஆகிய செட்டில்மென்ட் பகுதிகளில் உண்டி உறைவிடப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, தளிஞ்சி, தளிஞ்சி வயல், மஞ்சம்பட்டி, மூங்கில் பள்ளம் ஆகிய செட்டில்மென்ட் பகுதியில் உண்டி உறைவிடப் பள்ளி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

103—

தங்கும் விடுதி

வினா எண் **49995**—திரு. **கோவை தங்கம்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறையில் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வால்பாறையில் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

104—

வணிக வளாகம்

வினா எண் 55097—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மற்றும் வேட்டைக்காரன்புதூரில் தாட்கோ மூலம் வணிக வளாகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மற்றும் வேட்டைக்காரன்புதூரில் தாட்கோமூலம் வணிக வளாகம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

105—

மேல்நிலைப் பள்ளி

வினா எண் 56877—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் புதிதாக அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

106—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 57843—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, பனிக்கங்குப்பம் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், பனிக்கங்குப்பம் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் ஆதி திராவிட நத்தம் என மாற்றப்பட்டதை எதிர்த்து நில உரிமையாளர்கள் பண்ருட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் நில உரிமையாளருக்கு நிலப்பட்டா மாற்றம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இத்தீர்ப்பினை ரத்து செய்யக்கோரி மேல்முறையீடு செய்வதற்கு பண்ருட்டி அரசு வழக்கறிஞர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அம்மேல்முறையீட்டு வழக்கின் பேரில் நீதிமன்ற உத்தரவு கிடைக்கப் பெற்றவுடன் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

107—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 57844—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, லஷ்மிநாராயணபுரம் மற்றும் பாரதி நகர் காலனிகளில் வசிப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை –

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டம், லட்சுமிநாராயணபுரம், பாரதி நகர் கிராமங்களில் தகுதியான அரசு நிலம் எதுவும் இல்லை. மேலும், தனியார் நிலங்களை அரசு பேச்சுவார்த்தைமூலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

108—

பட்டா வழங்குதல்

வினா எண் 57855—டாக்டர் க. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கபிலர் மலைத் தொகுதி, பிலிக்கல்பாளையம் ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பிற்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை –

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், பிலிக்கல் பாளையம் கிராமம் புல எண். 261/பிஇல் 4.00 ஏக்கர் நிலத்தில் 61 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கியதுபோக எதிர்காலத் தேவைக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தற்போது 0.67 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் இலவச வீட்டுமனைப் பட்டா கோரி 34 நபர்கள் மனு செய்துள்ளனர். இவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

109—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 58086—திரு. ஆர். சின்னசாமி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிங்காநல்லூர் தொகுதி, விளாங்குறிச்சி ஊராட்சி, அம்பேத்கர் நகர் பகுதியில் வசிக்கும் ஆதி திராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வட்டம், விளாங்குறிச்சி கிராமத்தில் க.ச.344 நெ. காலையில் 3.50 ஏக்கர் நிலஎடுப்பு செய்யப்பட்டு வீடற்ற ஆதி திராவிட மக்களுக்கு தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

110—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 58102—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்க ணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், பரமேஸ்வர மங்களம் கிராமத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கவும், சாலை வசதி செய்து தரவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், பரமேஸ்வர மங்களம் கிராமத்தில் வசிப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரும் இடம் மயான புறம்போக்காகும். இது இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஆட்சேபனைகரமானதால் பட்டா வழங்க இயலாது.

111—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 58103—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், அமராபுரத்தில் உள்ள இருளர் பழங்குடியினர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், ஆயர்பாடி மதுரா அமராபுரம் கிராமத்தை சார்ந்த இருளர் இன மக்கள் வீட்டுமனைப்பட்டா வழங்கக் கோரும் இடம் புல எண் 38/13ஏ-ல் அமைந்துள்ளது. இப்புலத்தில் அரக்கோணம் வட்டாட்சியரால் 10 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு, அவர்களுக்கு தாட்கோ மூலம் தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

112—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 58105—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், வாணியம்பேட்டை கிராமத்தில் வசிக்கும் இருளர் பழங்குடியினர் மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், வாணியம்பேட்டை கிராமத்தில் வசிக்கும் இருளர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கக் கோரும் புல எண் 304 குளம் புறம்போக்கு ஆகும். எனவே, இது இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஆட்சேபணைகரமானதால் பட்டா வழங்க இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

113—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 58106—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், பள்ளூர் கிராமத்தில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், பள்ளூர் கிரமத்திலுள்ள ஆதி திராவிட இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கக் கோரும் புல எண் *153/3* ஆற்று புறம்போக்கு ஆகும். இது இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க ஆட்சேபணைகரமானதால் இலவசவீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

114—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 58107—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், புதூர் கிராமத்தில் வசிக்கும் இருளர் பழங்குடியின மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், புதூர் கிராமத்தில் வசிக்கும் இருளர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க கோரும் புல எண் *25—ல் 2.72*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

ஏக்கர் நிலம் கசம் புறம்போக்கு ஆகும். எனவே, இது இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஆட்சேபணைகரமானதால், பட்டா வழங்க இயலாது.

115—

ஆதி திராவிடர் நல விடுதி

வினா எண் 59025—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கே. வேட்ரப்பட்டியில் புதியதாக பெண்கள் ஆதி திராவிடர் நல விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கே. வேட்ரப்பட்டியில் புதியதாக பெண்கள் ஆதி திராவிடர் நல விடுதி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

116—

தங்கும் விடுதி வசதி

வினா எண் 61380—திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமகிரிப்பேட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் ஆதி திராவிட மாணவிகளுக்கு தங்கும் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

நாமகிரிப்பேட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் ஆதி திராவிட மாணவிகளுக்கு தங்கும் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

117—

குடிநீர் வசதி

வினா எண் 71693—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, கண்டாச்சிபுரம் ஆதி திராவிடர் நல விடுதிக்கு குடிநீர் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, கண்டாச்சிபுரம் மாணவர் விடுதிக்கு குடிநீர் வசதி தற்போது செய்யப்பட்டுள்ளது.

118—

உண்டி உறைவிடப்பள்ளி

வினா எண் 75022—திரு. ப. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் உண்டி உறைவிடப்பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் உண்டி உறைவிடப்பள்ளி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

119—

மாணவர் விடுதி

வினா எண் 107244—திருமதி ஜி. லதா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறை மூலம் கல்லூரி மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறைமூலம் கல்லூரி மாணவர் விடுதி கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

120—

தரம் உயர்த்துதல்

வினா எண் 107246—திருமதி ஜி. லதா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில், ஆர். வெங்கட்டாபுரம் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி ஆர். வெங்கட்டாபுரம் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக

2011 பிப்ரவரி 10]

உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

121—

கூடுதல் வசதி

வினா எண் 107253—திருமதி ஜி. லதா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கல்லூரிகளில் ஷிப்ட் முறை அமல்படுத்தப்பட்டுள்ளதால், கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை அதிகரிப்பதற்கு ஏற்ப மாவட்டங்களில் ஆதி திராவிடர் நல விடுதிகளைக் கூடுதலாகக் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கைக்கு ஏற்ப, விண்ணப்பங்கள் பெறப்படுவதன் அடிப்படையில் அவ்வப்போது புதிய விடுதிகள் துவக்கப்பட்டு வருகிறது.

122—

தரம் உயர்த்துதல்

வினா எண் 117027—திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் வட்டம், புதுக்குடி கிராமம், அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் வட்டம், புதுக்குடி கிராமம், அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

123—

தரம் உயர்த்துதல்

வினா எண் 123214—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், மேல்ஒட்டிவாக்கம் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், மேல்ஒட்டிவாக்கம் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

124—

தொகுப்பு விடுகள்

வினா எண் 1483—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, பெருந்தோட்ட ஊராட்சி, சாவடிகுப்பம் மற்றும் மடத்துக்குப்பம் மீனவர் பகுதிகளுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, பெருந்தோட்ட ஊராட்சி, சாவடிகுப்பம் மற்றும் மடத்துக்குப்பம் மீனவர் பகுதிகளுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் தனியான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

125—

மிதவை உடைகள் வழங்குதல்

வினா எண் 1486—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கடலோரப் பகுதி மீனவ மக்களுக்கு மிதவை உடைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, கடலோரப் பகுதியில் உள்ள 8 மீனவ கிராம மக்களுக்கு ஏற்கெனவே 435 உயிர் காக்கும் சட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

126—

மீன்பண்ணை அமைத்தல்

வினா எண் 3117—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சோலையார் அணைப்பகுதியில் மீன் பண்ணை ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அருகே சோலையார் அணையில் அங்குள்ள தட்பவெப்ப நிலையைக் கருத்தில்கொண்டு

[2011 பிப்ரவரி 10

பொம்மீன் (Mahseer) மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணை மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் நிதியுதவியுடன் மீன்வளத் துறையால் கட்டப்பட்டு வருகிறது.

(ஆ) மீன் பண்ணை கட்டுமானப் பணி முடிந்தவுடன் 2006-07 நடப்பு ஆண்டில் பொம்மீன் மீன் குஞ்சு உற்பத்தி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

127—

மீன் எண்ணெய் தொழிற்சாலை

வினா எண் 3121—திரு. கோவை தங்கம் : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம் அணைக்கு அருகில் மீன் எண்ணெய் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம் அணைக்கு அருகில் மீன் எண்ணெய் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

128—

மீன் எண்ணெய் தொழிற்சாலை

வினா எண் 4217—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் மீன் எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

வால்பாறையில் மீன் எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

129—

மீன்வளக் கண்காட்சியை விரிவுபடுத்துதல்

வினா எண் 4600—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வால்பாறை சோலையார் மற்றும் பரம்பிக்குளம் அணைக்கு அருகில் மீன்வளக் கண்காட்சியை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

வால்பாறை சோலையார் மற்றும் பரம்பிக்குளம் அணைக்கு அருகில் மீன்வளக் கண்காட்சியை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

130—

கிடங்கியைப் பழுது பார்த்தல்

வினா எண் 6759—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இடிந்தகரை கிராமத்தில் மீன் பதப்படுத்தும் கிட்டங்கியைப் பழுது பார்த்து செயல்பட வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) இடிந்தகரை கிராமத்தில் மீன் பதப்படுத்தும் கிட்டங்கியினைப் பழுது பார்த்து செயல்பட வைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

131—

விற்பனை கொள்முதல் மையம்

வினா எண் 12294—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகரில் அரசு மீன் விற்பனை மற்றும் கொள்முதல் மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி நகரைச் சுற்றி நாகாவதி, தொப்பையாறு, தும்பலஹள்ளி, வாணியாறு, சின்னாறு ஆகிய சிறிய நீர்த் தேக்கங்கள் மட்டுமே உள்ளன. இந்நீர் தேக்கங்களில் பிடிக்கப்படும் மீன்கள் துறைமூலம் உள்ளூரிலே விற்பனை செய்வதற்கு போதுமானதாக உள்ளது. தருமபுரி நகரில் அண்டை மாநிலமான ஆந்திராவிலிருந்து வரும் மீன்களை சிறு வியாபாரிகள் வாங்கி விற்பனை செய்கிறார்கள். மேலும், ஆண்டு முழுவதும் மீன்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்யும் அளவிற்கு இங்கு சீராக மீன்கள் கிடைப்பதில்லை. இந்நிலையில் தருமபுரி நகரில் அரசு மீன் விற்பனை மற்றும் கொள்முதல் மையம் அமைக்க வாய்ப்பு இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

132—

தனி வாரியம் அமைத்தல்

வினா எண் 17491—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) மீனவர்களுக்கு தனி வாரியம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 2007-08 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரில் இதற்கான சட்டமுன்வடிவு பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டு, மேதகு ஆளுநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, தமிழ்நாடு மீனவர் நல வாரியம் அமைத்து அரசு ஆணை (நிலை) எண் 103, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 29-6-2007-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

133—

கூட்டுறவு சங்கத்தினை விரிவுபடுத்துதல்

வினா எண் 18507—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, மேட்டூர் மீன் கூட்டுறவு சங்கத்தினை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மேட்டூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனை சங்கத்தினை விரிவுபடுத்த மீன்வளத் துறையால் ஏற்கெனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

134—

வீடுகள் கட்டும் திட்டம்

வினா எண் 18640—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி இரயுமன்துறை முதல் நீரோடி வரையுள்ள கடற்கரைப் பகுதிகளை 200 மீட்டருக்கு அப்பால் வீடுகள் கட்டும் திட்டத்தில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, இரயுமன்துறை முதல் நீரோடி வரையுள்ள கடற்கரைப் பகுதிகளை 200 மீட்டருக்கு அப்பால் வீடுகள் கட்டும் திட்டத்தில் சேர்க்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

135—

ஹெலிகாப்டர் வசதி

வினா எண் 23015—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் காணாமல் போகும் மீனவர்களைத் தேட ஹெலிகாப்டர் வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் காணாமல் போகும் மீனவர்களைத் தேட ஹெலிகாப்டர் வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தனியே அரசிடம் இல்லை.

136—

இலவச உயிர்காக்கும் கருவிகள்

வினா எண் 23536—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம், இராமேஸ்வரம் பகுதிகளில் ஆழ்கடலுக்கு விசைப்படகுகள்மூலம் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு உயிர்காக்கும் கருவிகள் இலவசமாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆழ்கடலுக்கு விசைப்படகுகள் மூலமாக மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு உயிர்காக்கும் கருவிகள் இலவசமாக வழங்கும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை.

137—

மீன் விற்பனை நிலையம்

வினா எண் 23547—திரு. வை. காவேரி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் மீன் விற்பனை நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

[2011 *பிப்ரவரி* 10

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் மீன் விற்பனை நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

138—

சுனாமி பாதுகாப்பு வீடுகள்

வினா எண் 24273—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, தற்காஸ் கிராமத்தில் சுனாமி பாதுகாப்பு நிரந்தர வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

139—

மீன் வளர்க்கும் திட்டம்

வினா எண் 24304—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதியில் அம்மணம்பாக்கம், பெரும்பேடு ஏரிகளில் மீன் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதியில் அம்மணம்பாக்கம், பெரும்பேடு ஏரிகளில், மீன் வளர்க்க மீனவர் கூட்டுறவு சங்கம் மூலமோ அல்லது மீன் வளர்ப்போர் தனியார் எவரேனும் முன்வந்தால் அவர்களுக்கு மீன்துறை மூலமாக மீன் வளர்த்து பயன்பெற தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

140—

விடுகட்டும் திட்டம்

வினா எண் 29365—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, கொட்டிவாக்கத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வீடு கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்றத் தொகுதி, கொட்டிவாக்கத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனியாக இலவச வீடுகள் கட்டித்தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

141—

விற்பனை நிலையங்கள்

வினா எண் 34566—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் மீன் வளர்ச்சிக் கழகம்மூலம் விற்பனை நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் மீன்வளர்ச்சிக் கழகம்மூலம் மீன் விற்பனை நிலையம் அமைக்க சாத்தியகூறுகள் இல்லை.

[2011 பிப்ரவரி 10

142—

இறால் குஞ்சுகள் வளர்த்தல்

வினா எண் 34567—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் பகுதியில் இறால் குஞ்சுகள் வளர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* இராமநாதபுரம் பகுதியில் இறால் குஞ்சு பொரிப்பகம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

143—

மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை

வினா எண் 35775—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பாரூர் ஊராட்சி, பாரூர் கிராமத்தில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காவேரிப்பட்டினம் தொகுதி, பாரூர் ஊராட்சி, பாரூர் கிராமத்தில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைப்பது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

144—

மீன் பதனிடும் தொழிற்சாலை

வினா எண் 37623—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, மாமல்லபுரம் அருகே மீன் பதனிடும் தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, மாமல்லபுரம் அருகில் மீன்பதனிடும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

145—

மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை

வினா எண் 37625—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதியில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதியில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

146—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 37626—கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதியில் மீன்வள ஆராய்ச்சி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டில் மீன்வள ஆராய்ச்சி மையம் துவக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

147—

மீன்பிடித் துறைமுகம்

வினா எண் 41140—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேதுசமுத்திர கால்வாய் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் பகுதியில் ஒருங்கிணைந்த பல்நோக்கு துறைமுகம் (Multi-Purpose Harbour) அமைக்கப்படும்.

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு ஆணை பெறப்பட்டு சேது சமுத்திர கப்பல் கழகத்தின் ஆலோசனையுடன் பல்நோக்கு துறைமுகம் அமைக்கப்படும்.

148—

மீனவர்களுக்கு உதவித் தொகை

வினா எண் 57427—திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

வருடந்தோறும் ஏப்ரல் 15 முதல் மே 30 வரை 45 நாட்களுக்கு மீன்பிடிக்க தடை செய்யப்பட்டுள்ளதால், தற்போது மீன்பிடி தொழில் செய்ய முடியாத மீனவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

வருடந்தோறும் ஏப்ரல் 15 முதல் மே 30 வரை 45 நாட்களுக்கு மீன்பிடி தடை செய்யப்பட்ட காலங்களில் கடல் மீனவர் குடும்பங்களுக்கு, குடும்பத்திற்கு தலா ரூ.500/- வீதம் நிவாரணத் தொகையாக தற்போது அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

149—

மீன் விற்பனை மையம்

வினா எண் 58114—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் மீன் விற்பனை மையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி திருப்புவனத்தில் மீன்விற்பனை மையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

150—

உயர்தர மீன்களை வளர்த்தல்

வினா எண் 68738—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் பொதுப் பணித் துறை ஏரிகளில் உயர்தர மீன்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து பொதுப்பணித் துறை ஏரிகளில் பெருங்கெண்டை மீன்கள் இடப்பட்டு வளர்ப்பு செய்யப்பட்டு வருகிறது.

151—

மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை

வினா எண் 97883—திருமதி. பெ. கமலாம்பாள் : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் சர்வதீர்த்த குளம், ரங்கசாமி குளம் ஆகியவற்றில் மீன்குஞ்சுகள் உற்பத்திப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காஞ்சிபுரம் சர்வதீர்த்த குளம் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான குளமாகும். ரங்கசாமி குளம் அரசுடைமையாக்கப்பட்ட குளமாகும். இவ்விரண்டு குளங்களும் காஞ்சிபுரம் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ளது. எனவே, இக்குளங்களில் போதுமான இடவசதி மற்றும் தண்ணீர் வசதி இல்லாமையால் மீன்குஞ்சுகள் உற்பத்திப் பண்ணை அமைத்திடுவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லை.

2011 பிப்ரவரி 10]

152—

மீன் ஆராய்ச்சிப் பண்ணை அமைத்தல்

வினா எண் 100619—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் சரபங்க நதியில் மீன் ஆராய்ச்சிப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, ஓமலூர் சரபங்க நதியில் மீன் ஆராய்ச்சிப் பண்ணை அமைப்பது குறித்த பிரேரணை ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

153—

மீன் பதனிடும் தொழிற்கூடம்

வினா எண் 104557—திரு. பெ. மோகன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, வெள்ளப்பட்டி கிராமத்தில் மீன் பதனிடும் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியத்திற்குட்பட்ட வெள்ளப்பட்டி மீனவர் கிராமத்தில், மீன் பதனிடும் தொழிற்கூடம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

154—

மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

வினா எண் 106184—திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, கோவளத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தொகுதி, கோவளத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

155—

மீன் பதனிடும் தொழிற்கூடம்

வினா எண் 106338—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் நாட்டு மீன்கள் பதனிடும் தொழிற்கூடம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் நாட்டு மீன்கள் பதப்படுத்தும் அளவிற்கு உற்பத்தியாகவில்லை என்பதால் நாட்டு மீன்களைப் பதனிடும் தொழிற்கூடம் ஒன்று அங்கு தற்போதைய நிலையில் துவக்கிட வாய்ப்பில்லை.

2011 பிப்ரவரி 10]

156—

மீன் இறங்குதளம் அமைத்தல்

வினா எண் 107910—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடியில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடியில் மீன் இறங்குதளம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

157—

மீன் குளிரூட்டும் கிடங்கு

வினா எண் 107911—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதி, பூம்புகாரில் மீன் குளிரூட்டும் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகாரில் மீன் குளிரூட்டும் கிடங்கு கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

158—

தொழில் நுட்பக்கூடம் அமைத்தல்

வினா எண் 107912—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதி, நெய்தவாசல் புதுக்குப்பத்தில் மீன் பதப்படுத்தும் தொழில்நுட்பக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, நெய்தவாசல் புதுக்குப்பத்தில் மீன் பதப்படுத்தும் தொழில்நுட்பக்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

159—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 108564—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக கடலோரங்களிலுள்ள மீனவர்களுக்கு இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாக்க, பாதுகாப்பான இடத்தில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழக கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களுக்கு தமிழக அரசு, மீனவர் இலவச வீடு கட்டும் திட்டம் மற்றும் மாதிரி மீனவர் கிராமம் ஆகிய திட்டங்களின்கீழ், இலவச வீடுகள் ஆண்டுதோறும் மீனவளத் துறைமூலம் கட்டி வழங்கப்பட்டு வருகின்றன.

2011 பிப்ரவரி 10]

160—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 121541—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பார்த்திபனூர் மதகு அணை பகுதியில் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, பார்த்திபனூர் மதகு அணை பகுதியில் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

161—

மீன் ஆராய்ச்சி மையம்

வினா எண் 122277—திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதியில் மீன் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

ஆத்தூர் தொகுதியில் மீன் ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2011 பிப்ரவரி 10

162—

பண்டங்கள் செய்யும் தொழிற்சாலை

வினா எண் 84—திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, வெள்ளலூர் பகுதியில் உற்பத்தியாகும் பாலில் பால்கோவா போன்ற பண்டங்கள் செய்யும் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

மேலூர் தொகுதி, வெள்ளலூர் பகுதியில் உற்பத்தியாகும் பாலில் பால்கோவா போன்ற பண்டங்கள் செய்யும் தொழில் தொடங்கும் உத்தேசம் ஏதும் அரசிற்கு இல்லை.

163—

பணி நிரந்தரம் செய்தல்

வினா எண் 486—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி, கிருஷ்ணகிரி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய மையத்தில் கடந்த 13 ஆண்டுகளாக பணிபுரியும் தற்காலிக தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 10 ஆண்டுகளுக்குமேல் தினக்கூலிப் பணியாளர்களாக பணிபுரியும் தற்காலிக தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 *பிப்ரவரி* 10]

164—

பால் பதனிடும் தொழிற்சாலை

வினா எண் 518—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி நகரில் பால் இணையம் (கூட்டுறவு பால் பதனிடும் தொழிற்சாலை) அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

தருமபுரிக்கு மிக அருகில் உள்ள கிருஷ்ணகிரியில் செயல்படும் தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைந்துள்ளதால் தருமபுரி நகரில் தனியாக ஒரு பால் பதனிடும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

165—

கழிவுநீர் சுகாதாரக்கேட்டைத் தடுத்தல்

வினா எண் 1362—திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, சத்துவாச்சாரி நகரில் உள்ள கூட்டுறவு பால் பண்ணையின் கழிவுநீர் சுகாதாரக்கேட்டை விளைவிப்பதால் அப்பண்ணையை நகரின் வெளிப்புறத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

வேலூர் நகருக்கு அருகாமையில் புதிய இடம் கிடைக்காததாலும், விரைவில் திருவண்ணாமலையில் புதிய பால்பண்ணை நிறுவப்பட இருப்பதாலும், தற்பொழுது வேலூர் பால்பண்ணையை நகரின் வெளிப்புறத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

166—

பால்சேகரிப்பு நிலையம்

வினா எண் 3130—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை மலைப்பகுதியில் பால் சேகரிப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போதிய பால் உற்பத்தி இல்லாத காரணத்தால் தற்சமயம் வால்பாறை மலைப்பகுதியில் பால் சேகரிப்பு நிலையம் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

167—

பால் பதனிடும் நிலையம்

வினா எண் 3135—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறையில் பால் பதனிடும் நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் பெரும்பாலான மக்கள் தேயிலைத் தொழிலை பிரதானமாக கொண்டிருப்பதால் கால்நடைகளின் எண்ணிக்கை மிகக் குறைவு. ஆகவே, பால் உற்பத்தியும் மிக குறைவாக உள்ளது. ஆகையால், வால்பாறை பகுதியில் பால் பதனிடும் தொழிற்சாலை ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

168—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 3407—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் SIPCOT வளாகத்திற்குள் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிதாக பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்குப் பதிலாக வாய்ப்புள்ள இடங்களில் பால் குளிர்விப்பான் (Bulk Milk Cooler) அமைத்து பால் சேகரம் செய்வது என கொள்கை அளவில் முடிவு எடுத்து நடைமுறைப்படுத்தி வருவதால் மானாமதுரை சிப்காட் வளாகத்திற்குள் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க இயலாது.

169—

பால் கொள்முதல் விலையை உயர்த்துதல்

வினா எண் 4840—திரு. சி சண்முகவேலு: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியில் பால் கொள்முதல் விலையை உயர்த்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியில் பால் கொள்முதல் விலையை உயர்த்தும் வாய்ப்பு இல்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2011 பிப்ரவரி 10

170—

பால் விலையை உயர்த்துதல்

வினா எண் 5369—திரு. ஆர்டி. கணேசன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் பால் விலையினை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

தற்போது பால் விலையினை உயர்த்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

171—

பால் உற்பத்தி நிலையம்

வினா எண் 8075—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, வீரணம்பாளையத்தில் கூட்டுறவு பால் உற்பத்தி நிலையம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, வீரணம்பாளையத்தில் தற் பொழுது கறவை மாடுகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், பால் உற்பத்தியும் குறைவாகவே உள்ளது. எனவே, வீரணம்பாளையத்தில் புதிதாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைத்திட வாய்ப்பில்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

172—

கூடுதல் கட்டட வசதி

வினா எண் 8818—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரிலுள்ள இசட்-495 கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தில் கூடுதல் கட்டடம் மற்றும் குளிரூட்டும் சாதனம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பூம்புகாரில் உள்ள இசட்-495 கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் சொந்த கட்டடத்தில் இயங்கி வருவதால் கூடுதலாக கட்டடம் கட்ட வாய்ப்பில்லை. ஆனால், மொத்த பால் குளிர்விப்பான் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

173—

பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 12319—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தில் புதிய பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

174—

பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 14369—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வால்பாறையில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

வால்பாறையில் பால் உற்பத்தி மிகக் குறைவாக உள்ளதால் பால்பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, இது குறித்த செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

175—

மின்னாக்கி வாங்குதல்

வினா எண் 15529—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பச்சாபாளையம் ஆவின் பால் நிறுவனத்திற்கு 320 கே.வி.எ. மின்னாக்கி வாங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பச்சாபாளையம் ஆவின் பால் நிறுவனத்திற்கு 320 கே.வி.எ. மின்னாக்கி வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதற்காக முன்பணம் ரூ.20.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2011 பிப்ரவரி 10]

176—

பால்பண்ணை அமைத்தல்

வினா எண் 15532—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பால் பண்ணை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் பால்பண்ணை ஏற்படுத்த இயலாது.

177—

கூட்டுறவு பால்பண்ணை அமைத்தல்

வினா எண் 18506—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் கூட்டுறவு பால் பண்ணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூரிலிருந்து 35 கி.மீ. தூரத்தில் உள்ள சேலத்தில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் பால் பண்ணை செயல்பட்டு வருவதால் மேட்டூரில் தனியாக பால் பண்ணை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2011 பிப்ரவரி 10

178—

பால் பதனிடும் தொழிற்சாலை

வினா எண் 20469—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சியில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சியில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

179—

பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 21056—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

180—

பால் உற்பத்தியாளர் சங்கம்

வினா எண் 23682—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நாயான அள்ளி ஊராட்சி, லாலாகொட்டாய் பகுதியில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நாயான அள்ளி ஊராட்சியினைச் சார்ந்த லாலாகொட்டாய் பகுதியில் பால் உற்பத்தி குறைவாக உள்ளதால், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் தொடங்க வாய்ப்பில்லை.

181—

கொள்முதல் விலையை உயர்த்துதல்

வினா எண் 23768—திரு. என். நன்மாறன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பால் உற்பத்தியாளர்களுக்கு தற்போது வழங்கும் கொள்முதல் விலையை உயர்த்தித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

கடந்த 7—3—2007 முதல் கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு லிட்டர் ஒன்றிற்க்கு ரூ.1.50 வீதம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

182—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 24307—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், சதுரங்கப்பட்டினம் ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் மற்றும் சதுரங்கப்பட்டினம் ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை.

183—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 26649—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

ஓமலூர் பகுதியில் உற்பத்தியாகும் பால், சேலம் பால் பண்ணைக்காக கொள்முதல் செய்யப்படுகிறது. சேலம் பால் பண்ணை அருகிலிருப்பதால், ஓமலூர் பகுதியில் தனியாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை.

184—

பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை

வினா எண் 26658—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் பால்பண்ணை, பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியில் பால்பண்ணை மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பில்லை.

185—

பால் விற்பனை மையம்

வினா எண் 27379—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சியில் ஆவின் பால் விற்பனை மையம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் ஆவின் பால் விற்பனை மையம் தொடங்குவதற்கு சாத்தியமில்லை.

186—

தானியங்கி பால் நிலையம்

வினா எண் 29364—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, கிழக்குக் கடற்கரை சாலையில் தானியங்கி பால் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, கிழக்குக் கடற்கரை சாலையில் தானியங்கி பால் நிலையம் அமைக்க செயல் திட்டம் ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

187—

பால் பவுடர் தொழிற்சாலை

வினா எண் 54244—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டத்தில் தற்போது 9 தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்கள் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம், நாளொன்றுக்கு சராசரியாக 34,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, தினந்தோறும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சென்னையில் உள்ள கூட்டுறவு இணையத்திற்கு நேரிடையாக அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், 4 புதிய தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்கு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, அவை விரைவில் துவக்கப்பட உள்ளன.

2. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஏற்கெனவே 10 மெட்ரிக் டன் கொள்ளளவு திறனுடைய பால் பவுடர் தொழிற்சாலை இயங்கி வருகிறது. தற்போதைய சூழ்நிலையில், தருமபுரியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

188—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 56132—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, வேலம்பட்டியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, வேலம்பட்டியில் பால் உற்பத்தி குறைவாக உள்ளதால், தற்போது பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

189—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 56164—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான புல் பண்ணையிடத்தில் பால் குளிரூட்டும் நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பகுதியில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிலிருந்து போதிய அளவு பால் கொள்முதல் செய்யப்படாததால், மானாமதுரை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான புல் பண்ணையிடத்தில் பால் குளிரூட்டும் நிலையம் துவக்குவதற்கு வாய்ப்பில்லை.

190—

பாலாடைக் கட்டி தொழிற்சாலை

வினா எண் 56888—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) மானாமதுரை தொகுதியில் பாலாடைக் கட்டி தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதியில் பாலாடைக் கட்டி தயாரிக்கும் தொழிற்சாலை துவக்குவதற்கு வாய்ப்பில்லை.

191—

கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 74907—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றியம், பெருமாள்பாளையத்தில் புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றியம், பெருமாள்பாளையத்தில், ஈ.டி. 1981 பெருமாள்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் 20—2—2008 அன்று பதிவு செய்யப்பட்டு, 25-2-2008 முதல் செயல்பட்டு வருகிறது.

192—

பால் பவுடர் தொழிற்சாலை

வினா எண் 75698—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) மதுரையில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்தில் 1975-ம் ஆண்டிலிருந்து பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை இயங்கி வருகிறது. இதன்மூலம் நாளொன்றுக்கு 10 (பத்து) மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கப்படுகிறது.

193—

பால் குளிரூட்டும் மையம்

வினா எண் 75836—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் வனவாசி, பொட்டனேரி, தாளவாடி, தார்காடு, சித்திரைப்பட்டி புதூர், மூலக்காடு ஆகிய 6 இடங்களில் மொத்த பால் குளிர்விப்பான் (Bulk Milk Coolers) நிறுவப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருவதால், மேட்டூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

194—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 84202—திரு. வை. காவேரி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

எடப்பாடி மற்றும் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நாளொன்றுக்கு 1,400 லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், கொங்கணாபுரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

195—

கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 84296—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கொண்டகர அள்ளி ஊராட்சி, வத்தல்மலையில் பால் கூட்டுறவுச் சங்கம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, கொண்டகர அள்ளி ஊராட்சியில் உள்ள சிற்றூர்களில் பால் உற்பத்தி 40 லிட்டருக்கு குறைவாக உள்ளது. தொத்தம்பட்டி கிராமத்தின் அடிவாரத்திலிருந்து வத்தல்மலை சுமார் 9 கி.மீ. தூரத்தில் உள்ளதாலும், மலைப்பாதை செங்குத்தாக உள்ளதாலும், முறையான பாதை மற்றும் போக்குவரத்து வசதி இல்லாததாலும், தற்போதுள்ள சூழ்நிலையில் வத்தல்மலையில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் துவக்க வாய்ப்பில்லை.

196—

பால் குளிரூட்டும் மையம்

வினா எண் 87268—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2011 பிப்ரவரி 10]

ஓமலூர் தொகுதி, காமலாபுரத்தில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, காமலாபுரத்தில் பால் கொள்முதல் குறைவாக உள்ளதால், தற்போது பால் குளிரூட்டும் மையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

197—

பால் பண்ணை

வினா எண் 88606—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பிரமனூர் ஊராட்சி, வயல்சேரியில் பால்பண்ணை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, பிரமனூர் ஊராட்சி, வயல்சேரியை அடுத்து அமைந்துள்ள எட்டு கிராமங்களில் நாளொன்றுக்கு 901 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. வயல்சேரியிலிருந்து 37 கி.மீ. தொலைவில் 10,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட சிவகங்கை பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் 22 கி.மீ. தூரத்தில் உள்ள கூட்டுறவுப்பட்டியில் நாளொன்றுக்கு 5,000 லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட குளிர்விப்பான் ஆகியவை செயல்பட்டு வருவதால், தற்போது வயல்சேரியில் பால்பண்ணை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[2011 பிப்ரவரி 10

198—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 88692—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திற்கு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள டி.ஆர்.டி. 97 கீரமங்கலம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் பகுதி-2 திட்டம் 2007-2008-ன்கீழ் ரூ.15.05 இலட்சங்கள் மதிப்பீட்டில் ஒரு தொகுப்பு பால் குளிர்விப்பான் அமைக்கப்பட்டுள்ளது.

199—

பால் பவுடர் தொழிற்சாலை

வினா எண் 89383—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் நகரில் பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றத்தில் போதிய பால் உற்பத்தி இல்லாத காரணத்தால், பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

200—

கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 102563—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளத்தில் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளத்தில் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க இதுநாள் வரையில் கோரிக்கை மனுக்கள் எதுவும் பெறப்படாததால், சங்கம் அமைக்க வாய்ப்பில்லை.

201—

பால் பதப்படுத்தும் நிலையம்

வினா எண் 102924—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நாளொன்றுக்கு சுமார் 2,000 லிட்டர் பால் மட்டுமே

TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

கொள்முதல் செய்யப்படுவதால், மானாமதுரையில், பால் பதப் படுத்தும் நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

202—

கண்காணிப்புக் குழு

வினா எண் 108652—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள தனியார் பால் கொள்முதல், விற்பனை நிலையங்களில் உள்ள பாலின் தரம், கலப்படம் போன்றவற்றை அறிய கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பால் வளத் துறை ஆணையர் அவர்கள், மாநில அளவில், பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை 92-ன் (MMPO'92) கீழ் பதிவு செய்யும் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், பிரிவு 15-ன்படி, மாவட்ட ஆட்சியர், துணை பால் ஆணையர் (கூட்டுறவு) துணைப் பதிவாளர் (பால்வளம்) ஆகியோர் பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை 92 (MMPO'92)ன்கீழ் பால் பண்ணைகளை ஆய்வு செய்ய அதிகாரப்படுத்தப்பட்டுள்ளனர். பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை 92 (MMPO'92)ஐ மீறிச் செயல்படும் பால் பண்ணைகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க மாநில பதிவு அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

203—

பாலாடைக்கட்டி தொழிற்சாலை

வினா எண் 111890—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் பாலாடைக்கட்டி தயாரிக்கும் தொழில் தொடங்க வாய்ப்பில்லை.

204—

பால் பவுடர் தொழிற்சாலை

வினா எண் 111891—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் பால்பவுடர் தயாரிக்கும் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழில் தொடங்க வாய்ப்பில்லை.

205—

கட்டடம்

வினா எண் 113741—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) காங்கேயம், வீரணம்பாளையம், பட்டக்காரன்புதூர் பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* காங்கேயம், வீரணம்பாளையம், பட்டக்காரன்புதூர் பால் கூட்டுறவுச் சங்கத்தின் நிதியிலிருந்து, அடிமனை வாங்கும் வாய்ப்பு இல்லை என்பதால், இச்சங்கத்திற்கு அலுவலகம் கட்ட தற்போது வாய்ப்பு இல்லை.

206—

கட்டடம்

வினா எண் 113742—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு E.D. *1706* ராமலிங்கபுரம் பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஈரோடு ED *1706* ராமலிங்கபுரம் பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்த அடிமனை உள்ளது. போதிய நிதி ஆதாரம் இல்லாததால், கட்டடம் கட்ட தற்போது இயலாது.

207—

கட்டடம்

வினா எண் 113743—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை E.D. 493 புதுவலசு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை E.D. 493 புதுவலசு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் போதிய நிதி ஆதாரம் இல்லாதபடியால், கட்டடம் கட்ட இயலாத நிலை உள்ளது.

208—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 117008—திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, தாயனூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, தாயனூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் பொருட்டு, மைய அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இதுகுறித்து அரசாணை வெளியிட்டபின், அதனடிப்படையில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

209—

பால் குளிரூட்டும் மையம்

வினா எண் 118615—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

ஓமலூர் தொகுதி, சக்கரசெட்டிப்பட்டி ஊராட்சி, நாலுக்கால் பாலம் கிராமத்தை மையப்படுத்தி பால் குளிரூட்டும் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதி, சக்கரசெட்டிப்பட்டி ஊராட்சி, நாலுக்கால் பாலம் கிராமத்தை மையப்படுத்தி பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

210—

கட்டடம்

வினா எண் 120754—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, நசியலூர் பேரூராட்சி, தயிர்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொகுதி, நசியலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் தயிர்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு போதுமான நிதி ஆதாரம் இல்லாததால், சட்டமன்ற (அ) நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், கட்டடம் கட்டித் தரப்படும்.

211—

பால் பண்ணை

வினா எண் 120843—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) காஞ்சிபுரத்தில் பால் பண்ணை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்தில் போதிய பால் உற்பத்தி இல்லாததால், பால்பண்ணை துவக்க வாய்ப்பில்லை.

212—

விற்பனை நிலையம்

வினா எண் 120845—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரத்தில் பால் உணவுப் பொருட்கள் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் நகரில், மாவட்ட ஆட்சியர் வளாகம், வட்டாட்சியர் அலுவலக வளாகம், அரசு மருத்துவமனை வளாகம், சங்கரமடம் அருகில் மற்றும் அண்ணா கலை அரங்கம் அருகில், ஆகிய இடங்களில் உணவுப் பொருட்கள் விற்பனை நிலையம் செயல்பட்டு வருகிறது.

213—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 121521—திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

(அ) போளூர் தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், நஞ்சுகொண்டாபுரம் ஊராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், போளூர் தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், நஞ்சுகொண்டாபுரம் ஊராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

214—

பால் பதனிடும் தொழிற்சாலை

வினா எண் 123043—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் பால் பதனிடும் தொழிற்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் போதிய பால் உற்பத்தி இல்லாத காரணத்தால், மானாமதுரையில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பில்லை.

215—

பால் சேகரிப்பு மையம்

வினா எண் 123045—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) மானாமதுரையில் பால் சேகரிப்பு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் போதிய பால் உற்பத்தி இல்லாத காரணத்தால், மானாமதுரையில் பால் சேகரிக்கும் மையம் அமைக்க வாய்ப்பில்லை.

216—

பால் குளிருட்டும் நிலையம்

வினா எண் 123137—திரு. வை. காவேரி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் கூட்டுறவு பால் குளிருட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் பால் குளிருட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

217—

பால் பவுடர் தொழிற்சாலை

வினா எண் 123138—திரு. வை. காவேரி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

218—

பரிசோதனை நிலையம்

வினா எண் 123154—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் பால் மற்றும் உபபொருட்கள் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் பால் மற்றும் உபபொருட்கள் பரிசோதனை நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

219—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 124408—திரு. வை. காவேரி: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் கூட்டுறவு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் தற்போது பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

220—

கதர் துணிகளுக்குத் தள்ளுபடி

வினா எண் 1215—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆண்டு முழுவதும் கதர் துணிகளுக்கு 40 சதவிகிதம் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) ஆண்டு முழுவதும் கதர் துணிகளுக்கு 40 சதவிகிதம் தள்ளுபடி வழங்கிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

221—

சிறு தொழிற்கூடம்

வினா எண் 1216—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறையில் ஒரு கதர் விற்பனை அங்காடியும், கதர் பொருட்கள் தயாரிக்கும் சிறு தொழிற்கூடமும் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) வால்பாறையில் தற்போது இயங்கி வரும் கிராம சில்பாவில் (கிராமப்புறங்களில் குடிசைத் தொழில்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் தேன், சோப்பு, முறம், பனை ஓலை, பனங்கற்கண்டு, களிமண் மற்றும் பேப்பர் பொம்மைகள், செராமிக் பொம்மை, கைமுறை காகிதங்கள், அப்பளம், சந்தனப் பவுடர், கைக்குத்தல் அரிசி முதலிய பொருட்கள் விற்கும் இடம்) கதர் மற்றும் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வால்பாறையின் மக்கட்தொகைக்கு இந்த கிராம சில்பா கதர் மற்றும் கிராமப் பொருட்கள் விற்பனைக்குப் போதுமானதாக உள்ளது. மேலும் தீபாவளி சிறப்பு விற்பனைக் காலங்களில், கதர் விற்பனையாகும் சாத்தியக்கூறுகள் உள்ள இடங்களில், தற்காலிக கதர் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. எனவே, வால்பாறையில் மேலும் ஒரு கதர் அங்காடியும், கதர் மற்றும் கிராமப் பொருட்கள் தொழிற்கூடமும் ஏற்படுத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

222—

தேன் தொழிற்சாலை

வினா எண் 3338—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, உபாசிக்கு அருகில் தேன் எடுக்கும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

வால்பாறை தொகுதி, உபாசிக்கு அருகில் தேன் எடுக்கும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2011 பிப்ரவரி 10]

223—

கலப்படம்

வினா எண் 4143—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கதர் கடைகளில் விற்பனை செய்யும் பொருட்களை கலப்படம் இல்லாமல் தயாரிக்க அரசு வலியுறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் உள்ள கதர் கடைகளில் விற்பனை செய்யப்படும் கதர் மற்றும் கிராமப் பொருட்கள் வாரிய சொந்த அலகுகளில் எவ்வித கலப்படம் இல்லாமல் நல்ல முறையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

224—

பட்டு உற்பத்தி

வினா எண் 4613—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் நிறுவனங்களின் தனி வாரியம் மூலம் பட்டு உற்பத்தி தொழிலை வால்பாறை தொகுதியின் கிராமங்களில் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் பட்டு உற்பத்தித் தொழில், கும்பகோணம் மற்றும் சேலம் பகுதிகளில் நடைபெற்று வருகிறது. மேலும், கோயமுத்தூர் மாவட்டம், வடவள்ளியில் பட்டு உற்பத்தி தொழில் நடைபெற்று வருகிறது.

[2011 பிப்ரவரி 10

எனவே, தற்போது கோயமுத்தூர் மாவட்டத்தில் வால்பாறை தொகுதியின் கிராமங்களில் தனி வாரியம் அமைத்து பட்டு உற்பத்தி தொழில் ஏற்படுத்த வாய்ப்பில்லை.

மேலும் வால்பாறை, தொகுதியின் தட்பவெப்ப நிலை, பட்டு துணி நெசவுக்கு உகந்ததாக இல்லாததால், அத்தொகுதியில் பட்டு நெசவுத் தொழில் ஏற்படுத்த வாய்ப்பு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

225—

தொழில் செய்யும் வளாகம்

வினா எண் 5020—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையில் மண்பாண்டத் தொழில் செய்யும் வளாகம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரையில் மண்பாண்டத் தொழில் செய்யும் வளாகம் கட்டிக்கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

226—

சிறு தொழிற்சாலை

வினா எண் 14317—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை புல் மலைப் பகுதியில் தேன் தயாரிக்க சிறு தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை புல் மலைப் பகுதியில் தேன் தயாரிக்க சிறு தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

227—

ஊறுகாய் தொழிற்சாலை

வினா எண் 14319—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் விளையும் காய்கறிகளைப் பதப்படுத்தி ஊறுகாய் தயாரிக்கும் கதர் கிராமத் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் விளையும் காய்கறிகளைப் பதப்படுத்தி ஊறுகாய் தயாரிக்கும் கதர் கிராமத் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

228—

விற்பனை நிலையம்

வினா எண் 14340—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) வால்பாறையில் கதர்த் துணிகள், கதர் பட்டுத் துணிகள், கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யும் பெரிய விற்பனை நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) வால்பாறையில் கதர்த் துணிகள், கதர் பட்டுத் துணிகள், கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யும் பெரிய விற்பனை நிலையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

229—

கயிறு தொழிற்சாலை

வினா என் 15509—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த தற்பொழுது வாரியத்தில் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

230—

மெழுகுவர்த்தி தொழிற்சாலை

வினா எண் 15511—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் மெழுகுவர்த்தி தயாரிக்கும் சிறு தொழிற்சாலை ஏற்படுத்த கடன் உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் மெழுகுவர்த்தி தயாரிக்கும் சிறு தொழிற்சாலை ஏற்படுத்த கடன் உதவி வழங்க தற்பொழுது வாரியத்தில் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

231—

தென்னையைச் சார்ந்த தொழிற்சாலை

வினா எண் 15512—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதியில் தென்னையைச் சார்ந்த தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதியில் தென்னையைச் சார்ந்த தொழில் ஏற்படுத்த தற்பொழுது வாரியத்தில் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2011 பிப்ரவரி 10

232—

தேன் உற்பத்தி

வினா எண் 15515—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, டாப்சிலிப் பகுதியில் தேன் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி, டாப்சிலிப் பகுதியில் தேன் உற்பத்தி செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

233—

பனைவெல்லம் ஆலை

வினா எண் 23539—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் பனைவெல்லம் தயாரிக்கும் ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரையில் பனைவெல்லம் தயாரிக்கும் ஆலை அமைக்கத் தேவையான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழவில்லை.

2011 பிப்ரவரி 10]

234—

கருத்தரங்கு மையம்

வினா எண் 33599—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் நவீன தொழில் நுட்ப மண்பாண்டக் கண்காட்சிக் கருத்தரங்கு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் நவீன தொழில் நுட்ப மண்பாண்டக் கண்காட்சிக் கருத்தரங்கு மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

235—

நவீன சூளை

வினா எண் 43464—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்பாண்டங்கள் உற்பத்தி செய்ய நவீன புகைப்போக்கியுடன் கூடிய சூளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியில் மண்பாண்டம் செய்ய நவீன புகைப்போக்கியுடன் கூடிய சூளை அமைத்துத் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

இணைப்பு—II

(2 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

பட்டியல்—14@

1—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 6735—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குமாரபுரம் ஊராட்சி, ராஜீவ் காந்தி நகர், குமாரபுரம் ஆதி திராவிடர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஒன்றியம், குமாரபுரம் ஊராட்சியில் உள்ள ராஜீவ் காந்தி நகரிலும், குமாரபுரம் ஆதி திராவிடர் குடியிருப்பிலும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2—

பாலம்

வினா எண் 42597—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2011 பிப்ரவரி 10]

சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், பெரிய சீரகாபாடி ஊராட்சி, கஞ்சமலை செல்லும் தார்ச்சாலையில், தோட்டகாடு பகுதி ஓடையின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், பெரிய சீரகாபாடி ஊராட்சி, கஞ்சமலை செல்லும் தார்ச்சாலையில், தோட்டகாடு பகுதி ஓடையின் குறுக்கே 2007-2008 ஆம் ஆண்டில் மாவட்ட ஊராட்சிக்கான மாநில நிதிக் குழு மானியம் வழங்கும் திட்டத்தின்மூலம் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

3—

தூர் வாரல்

வினா எண் 43697—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, தாராபுரம் ஏரி முதல் ஓமலூர் சரபங்கா ஆறு வரை வாய்க்காலைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் சட்டமன்றத் தொகுதி, தாராபுரம் ஊராட்சி ஒன்றியம், தாராபுரம் ஏரியின் வடமனேரி முதல் சூரியன் ஏரிவரை வாய்க்கால் தூர்வாரும் பணி ரூ.5.00 இலட்சம், பூசாரிப்பட்டி அணை தோப்பிலிருந்து வடமனேரி நீர்வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணி ரூ.15.00 இலட்சம், ஆக மொத்தம் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி 2009-ல் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

4—

தொழிற் கூடம்

வினா எண் 59315—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, கல்குப்பம் ஊராட்சி, அருந்ததியர்பாளையத்தில் தொழில் முனைவோர் கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, கல்குப்பம் அருந்ததியர்பாளையத்தில் தொழில் முனைவோர் கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

5—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 66067—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, கவுண்டிச்சிபாளையம், கள்ளியங்காட்டு வலசு ஆதி திராவிடர் காலனி தொகுப்பு வீடுகளைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், கவுண்டிச்சிபாளையம் ஊராட்சி, கள்ளியங்காட்டுவலசு ஆதி திராவிடர் காலனியில் 2009-2010ஆம் ஆண்டின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 10 தொகுப்பு வீடுகள் பராமரிப்புப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

6—

காய்கறி அங்காடி

வினா எண் 109844—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் புதியதாக காய்கறி அங்காடி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

காஞ்சிபுரம் மண்டலம், திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைக்க, திருக்கழுக்குன்றம் பேரூராட்சி மன்றத் தீர்மான எண் 164/2009, நாள் 29-09-2009-ன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதனடிப்படையில், சட்ராஸ் சாலை அங்காடி சர்வே எண் 643/6 (பழைய சர்வே எண் 48/7எ) இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், காஞ்சிபுரம் வேளாண்மை விற்பனைக் குழு செயலாளரால் மேற்படி உழவர் சந்தைக்காக ஒதுக்கப்பட்ட இடம் சர்வே செய்து நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டு உழவர் சந்தை அமைக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

7—

புதுப்பித்தல்

வினா எண் 118575—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சிகளுக்குட்பட்ட பேருந்து நிலைய வளாகத்திற்குள் உள்ள பழுதடைந்த கட்டடங்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சிக்குப் சொந்தமான பேருந்து நிலைய வளாகத்திற்குள் தற்போது பழுதடைந்த கட்டடங்கள் ஏதுமில்லை. மேலும், தற்போதுள்ள கடைகளின் சுவர்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சம்பந்தப்பட்ட ஏலதாரர்களே தங்களது சொந்த செலவில் சரிசெய்து கொள்கிறார்கள்.

8—

தொழிற்சாலை

வினா எண் 119317—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் அரசு சார்பில் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை அமைப்பது குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

9—

தொழில் தொடங்குதல்

வினா எண் 119320—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் பேப்பர் தயாரிக்கும் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

2011 *பிப்ரவரி* 10]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் புதிய காகித ஆலை துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

10—

சிமெண்ட் ஆலை

வினா எண் 119331—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் தனியார்கள் சிமெண்ட் ஆலைகள் தொடங்க மானியத்துடன் கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-ஆம் ஆண்டைய புதிய தொழிற் கொள்கையில், புதிதாகத் தொடங்கப்படும் தொழில்களுக்கும், விரிவாக்கத் திட்டங்களுக்கும் ஊக்கம் அளிப்பதற்கு அமைப்பு முறையிலான தொகுப்பு சலுகைகள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், 30-09-2008 நாளிட்ட தொழில் துறை அரசு ஆணை (நிலை) எண் 180-ல் மானாமதுரை தொகுதி அமைந்துள்ள சிவகங்கை மாவட்டம் உள்ளிட்ட 9 தென் மாவட்டங்களில் தொடங்கப்படும் தொழிற் பிரிவுகளுக்கு சிறப்பு ஊக்கச் சலுகைகள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மானாமதுரையில் யாரேனும் தொழில் முனைவோர் சிமெண்ட் ஆலை தொடங்க தக்க செயற்குறிப்புடன் முன்வந்தால், அச்செயற்குறிப்பு மேலே கூறப்பட்ட புதிய தொழிற்கொள்கை மற்றும் 30-09-2008 நாளிட்ட அரசு ஆணையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

11—

சிமெண்ட் ஆலை

வினா எண் 119332—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் அரசு சார்பில் சிமெண்ட் ஆலை தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதியில் சிமெண்ட் ஆலை அமைப்பது குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

12—

தொழிற்சாலை

வினா எண் 119539—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் சிமெண்ட், இரும்பு, பட்டாசு தொழிற்சாலை துவக்க அரசுமுன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதியில் சிமெண்ட், இரும்பு, பட்டாசு தொழிற்சாலை துவங்கும் திட்டமேதும் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

13—

பேருந்து நிழற்குடை

வினா எண் 121085—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், செவிலிமேடு பேரூராட்சிப் பகுதியில், பேருந்து நிழற்குடை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செவிலிமேடு பேரூராட்சி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தின்படி "காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ்" செவிலிமேடு பேரூராட்சி அலுவலகம் அருகில் மற்றும் தண்டு காலனி (அம்பேத்கார் நகர்) அருகில் வந்தவாசி சாலையில் இரு பயணிகள் பேருந்து நிழற்குடைகள் அமைக்க, ஒரு நிழற்குடைக்கு ரூ.1.20 இலட்சம் வீதம் ரூ.2.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, செவிலிமேடு பேரூராட்சி செயல் அலுவலரின் 8-3-2010 நாளிட்ட ஒப்பந்தபுள்ளி அறிக்கையின்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, 31-3-2010 நாளிட்ட கடிதத்தின்படி பணி உத்தரவு வழங்கப்பட்டு, நிழற்குடைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணி முடிவடையும் நிலையில் உள்ளன. மேலும், காஞ்சிபுரம்-வந்தவாசி சாலையில் (1) எல்லப்பா நகர் (2) வேதாசலம் நகர் (3) பல்லவன் நகர் (4) ஜெம் நகர் ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே பேருந்து நிழற்குடைகள் பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

14—

ஏற்றுமதி மையம்

வினா எண் 121924—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

(அ) மானாமதுரை தொகுதியில் பழங்கள் ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் பழங்கள் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் வசம் இல்லை.

(ஆ) தகுந்த தொழில் முனைவர்கள், மானாமதுரை தொகுதியில் தொழிற்சாலை நிறுவுவதற்கான தேவையான நிதி முதலீடு மற்றும் புதிய திட்ட செயல் குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால், அவர்களுடன் டிட்கோவும் இணைந்து திட்ட சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, திட்டத்தை செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

15—

தொழிற்சாலை

வினா எண் 121926—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை. தகுந்த தொழில் முனைவர்கள், மானாமதுரை தொகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுவதற்குத் தேவையான நிதி முதலீடு மற்றும் புதிய திட்ட செயல் குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால், அவர்களுடன் டிட்கோவும் இணைந்து, திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, திட்டத்தை செயல்படுத்த அரசு முயற்சிகள் மேற்கொள்ளும்.

TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

16—

தொழிற்சாலை

வினா எண் 121928—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மானாமதுரையில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் வசம் இல்லை.

(ஆ) தகுந்த தொழில் முனைவர்கள், மானாமதுரை தொகுதியில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுவதற்குத் தேவையான நிதி முதலீடு மற்றும் புதிய திட்ட செயல் குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால், அவர்களுடன் டிட்கோவும் இணைந்து திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டத்தை செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

17—

பயிற்சி

வினா எண் 123359—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் பகுதியில் சிறுபான்மை சமுதாய ஏழை மாணவர்களுக்கு இலவச கணினி பயிற்சி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் பகுதியில் சிறுபான்மை ஏழை மக்களுக்கு இலவசப் பயிற்சி வழங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

18—

மின்மாற்றி

வினா எண் 117121—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் கூடுதலாக புதிய மின்மாற்றிகள் அமைத்து, தடையில்லா சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் போதுமான அளவு மின்பளுவுள்ள மின்மாற்றிகள் உள்ளதால், கூடுதலாக புதிய மின்மாற்றி அமைக்கத் தேவையில்லை.

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் 9 மணி நேர மும்முனை மின்சாரமும், 12 மணி நேர இருமுனை மின்சாரமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சுழற்சி முறையில் தினமும் மூன்று மணி நேரம் பகலில் மட்டுமே மின் நிறுத்தம் செய்யப்படுகிறது. மின் நிறுத்தம் செய்யப்படும் நேரம் சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்பட்டால், முன் கூட்டியே தினசரி செய்தி தாள்களில் அறிவிக்கப்படுகிறது. இது தவிர, மற்ற நேரங்களில் சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது.

2011 பிப்ரவரி 10]

19—

துணை மின் நிலையம்

வினா எண் 122342—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், தாமல் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

20—

நியாயவிலைக் கடை

வினா எண் 13400—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மூங்கில்ஊரணி, அம்பேத்கர் நகரில் ஒரு நியாயவிலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை கூட்டுறவுப் பண்டகசாலை நடத்தி வரும் மானாமதுரை நியாயவிலைக் கடை எண் 5-லிருந்து அகதிகள் முகாம், மூங்கில்ஊரணி, அம்பேத்கர் நகர் மற்றும் தாகியார் நகர் ஆகிய பகுதிகளிலுள்ள 650 குடும்ப அட்டைகளைப், பிரித்து, மூங்கில் ஊரணியில் ஒரு புதிய நியாயவிலைக் கடை 9-1-2010 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

[2011 பிப்ரவரி 10

21—

சம்பளம்

வினா எண் 22459—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் கூட்டுறவுப் பண்டகசாலைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 23 மாத சம்பளம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருப்பூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைப் பணியாளர்களுக்கு 2006-2009 ஆம் ஆண்டுக்கான நிலுவை ஊதியம் முழுவதும் வழங்கப்பட்டு விட்டது.

22—

நியாயவிலைக் கடை

வினா எண் 39037—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மாங்குளம் ஊராட்சி, மூங்கில்ஊரணி இலங்கை அகதிகள் முகாமில் ஒரு நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை கூட்டுறவுப் பண்டகசாலை நடத்தி வரும் மானாமதுரை நியாயவிலைக் கடை எண் 5-லிருந்து அகதிகள் முகாம், மூங்கில்ஊரணி, அம்பேத்கர் நகர் மற்றும் தாகியார் நகர் ஆகிய பகுதிகளிலுள்ள 650 குடும்ப அட்டைகளைப் பிரித்து, மூங்கில் ஊரணியில் ஒரு புதிய நியாயவிலைக் கடை 9-1-2010 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

23—

நியாயவிலைக் கடை

வினா எண் 49018—திரு. போ. சின்னப்பன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விளாத்திகுளம் தொகுதி, வெம்பூர் ஊராட்சி, அழகாபுரி கிராம பகுதிநேர நியாயவிலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், வெம்பூர் கிராமம், அழகாபுரி பகுதி நேர நியாயவிலை அங்காடிக்கு அழகாபுரி கிராம பொதுமக்களே கடை கட்டிக் கொடுத்து, தற்பொழுது மேற்படி கட்டடத்தில் கடை செயல்பட்டு வருகிறது.

24—

உரக் கிடங்கு

வினா எண் 87963—திரு. விடியல் எஸ். சேகர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் தொகுதி, கே.ஜி. வலசு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உரக்கிடங்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், கே.ஜி. வலசு (கத்தப்பட்ட கவுண்டன் வலசு) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் சரக்கீட்டுக் கடன் வழங்குவதற்குத் தேவையான 250

மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிட்டங்கியினை ரூ.8.10 இலட்சம் செலவில் அமைத்திட ஈரோடு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தின்கீழ் கிட்டங்கி கட்ட ரூ.6.00 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகை ரூ.2.10 இலட்சம் சங்கப் பொது நிதியிலிருந்து செலவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிட்டங்கியின் கட்டுமானப் பணி 28-10-2010 அன்று துவக்கப்பட்டுள்ளது. 31-3-2011-க்குள் கட்டுமானப் பணிகளை முடித்து கிட்டங்கியினை செயல்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

25—

பணியிடங்கள்

வினா எண் 121745—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நியாயவிலைக் கடைகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மண்டலத்தில் 829 முழு நேரக் கடைகளும், 477 பகுதி நேரக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. விற்பனையாளர் காலிப் பணியிடங்களுக்கு ஏற்கெனவே நவம்பர் 2009-ல் விற்பனையாளர்களுக்கு நேர்காணல் தேர்வு நடத்தி, 105 விற்பனையாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டது. விற்பனையாளர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டிருந்தும் பணியில் சேராத பணியாளர்களால் ஏற்பட்ட 81 காலியிடங்களை நிரப்ப தற்போது மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம்மூலம் பட்டியல் பெற்று 21-6-2010 முதல் 24-6-2010 வரை விற்பனையாளர்கள் தேர்வு செய்ய நேர்காணல் நடைபெற்று, 57 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு பணியில் சேர்ந்துள்ளனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

26—

சொட்டு நீர்ப் பாசனம்

வினா எண் 4448—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வால்பாறை தொகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஆம். தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை மூலமாக நுண்ணீர் பாசனத்தின்கீழ், பெத்தநாயக்கனூர், இரமணமுதலிபுதூர், கோட்டூர், அங்கலக்குறிச்சி ஆகிய கிராம விவசாயிகளுக்கு 8.00.0 எக்டர் பரப்பளவில் நுண்ணீர் பாசன அமைப்பு மானியத்துடன் நிறுவப்பட்டுள்ளது. நடுவண் அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நுண்ணீர் பாசனத் திட்டம் ஒரு தொடர் திட்டம் என்பதனால், விவசாயிகள் விண்ணப்பம் கொடுத்தவுடன் பரிசீலனை செய்து, பணி உத்தரவு வழங்கப்பட்டு வருகிறது. வால்பாறை பகுதியில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திற்கு உட்பட்ட ஆயக்கட்டுப் பகுதிகளில் நீர்வள, நிலவளத் திட்டத்தில் வேளாண் பொறியியல் துறை நுண்ணீர் பாசன அமைப்புகள் நிறுவி, மானியம் அளித்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

27—

கொள்முதல் நிலையம்

வினா எண் 89531—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் பகுதியில் சாகுபடி செய்யப்படும் கடலை, துவரை, மொச்சை, தட்டைப்பயறு பாசிப்பயறு, மிளகாய் வத்தல் போன்றவற்றை அரசே கொள்முதல் செய்ய ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றிய பகுதியில் சாகுபடி செய்யப்படும் கடலை, துவரை, மொச்சை, தட்டைப்பயறு, பாசிப்பயறு, மிளகாய் வத்தல் போன்றவற்றை அரசே கொள்முதல் செய்ய தற்சமயம் திட்டம் ஏதுமில்லை.

28—

காப்புரிமை

வினா எண் 47181—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூலிகைச் செடிகளுக்கு காப்புரிமை பெற மத்திய அரசை, தமிழக அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மூலிகைச் செடிகளுக்கு காப்புரிமை பெறுதல் குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

புதுப்பித்தல்

வினா எண் 67203—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள வேளாண் அலுவலக கட்டடங்களை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் ஆனைமலை ஒன்றியத்தில் பிரதான வேளாண்மை விரிவாக்க மையம் ஏற்கனவே புதுப்பிக்கப்பட்ட அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது. மீனாட்சிபுரத்தில் உள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையம் தனியார் கட்டடத்திலும், கோட்டூரில் உள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையம் அரசு கட்டடத்திலும் இயங்கி வருகிறது. தற்போது கோட்டூர் அரசு கட்டடத்தை பழுது நிவர்த்தி செய்ய காலமுறை பராமரிப்பில் 2010-11-ல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

30—

பழுது நீக்கல்

வினா எண் 83716—திரு. வை. காவேரி: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, வெள்ளரி வெள்ளியிலுள்ள வேளாண்மை அலுவலரின் குடியிருப்புக் கட்டடத்தை பழுது நீக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, வெள்ளரி வெள்ளியிலுள்ள அரசு வேளாண்மை அலுவலக குடியிருப்புகள் நடப்பு நிதியாண்டில் பெறப்பட உள்ள திருந்திய நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் பழுது நீக்கம் செய்யப்படும்.

[2011 பிப்ரவரி 10

31—

பழுது நீக்கல்

வினா எண் 91288—திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம், சூலூர், சோமனூர் பகுதிகளில் உள்ள வேளாண்மைத் துறை கட்டடங்களை பழுது நீக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதியில் உள்ள வேளாண்மைத் துறை அலுவலக கட்டடங்களை பழுது பார்க்கும் பொருட்டு நடப்பு நிதியாண்டில் ரூ.7.25 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப் பணித் துறையின்மூலம் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

32—

உயிர்ப்பித்தல்

வினா எண் 92077—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாரம்பரிய நெல் ரகங்களான மடுமுழுங்கி, மாப்பிள்ளை சம்பா, சீரக சம்பா, கொத்தமல்லி சம்பா உட்பட பல நெல்ரகங்களை மீண்டும் உயிர்ப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

பாரம்பரிய நெல் ரகங்களான மடுமுழுங்கி, மாப்பிள்ளை சம்பா, சீரக சம்பா மற்றும் கொத்தமல்லி சம்பா ஆகிய ரகங்கள் தேசிய மற்றும் மாநில நீண்ட கால சேமிப்பு விதை வங்கிகள் மூலம் சேமிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும்பொழுது விதைகள் பெருக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த நெல் ரகங்கள் குறைவான மகசூல் கொடுப்பதால் விவசாயிகள் விரும்பி பயிரிடுவதில்லை. இருப்பினும் பாரம்பரிய நெல் இரகங்கள் தற்கால ரகங்களுடன் கருஒட்டு செய்யப்பட்டு அதிக மகசூல் மற்றும் சிறப்பு குணங்களுடன் கூடிய புதிய நெல் ரகங்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வேளாண் பெருமக்களுக்காக உருவாக்கி வெளியிட்டு வருகிறது.

33—

முறைகேடுகளைத் தடுத்தல்

வினா எண் 94888—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி உதவி வேளாண்மை அலுவலர் குடியிருப்பு வாடகைக்கு விடுவதில் முறைகேடுகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி வேளாண்மை உதவி அலுவலரின் குடியிருப்பு வாடகைக்கு விடுவதில் முறைகேடு எதுவும் நடைபெறவில்லை. கடந்த மூன்று வருடங்களாக வேளாண்மை உதவி அலுவலர் பணியிடம் நியமனம் செய்யப்படாததால் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. தற்போது புதியதாக நியமனம் செய்யப்பட்ட வேளாண்மை உதவி அலுவலருக்கு குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2011 பிப்ரவரி 10

34—

மானியம்

வினா எண் 102018—திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, ஆதி திராவிட சிறு, குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள், உழவுக் கருவிகள், பயிர் தெளிப்பான் வழங்க அரசு ஆவன செய்யுமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைத் துறையின் மூலம், பயிர் சாகுபடி செய்யும் சிறு, குறு மற்றும் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு விதைகள், உழவுக் கருவிகள் மற்றும் பயிர்தெளிப்பான்கள் கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

I. தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் (நெல்லிற்கு)

1. சான்று விதைகள் ரூ. 12/-கிலோ ஒன்றுக்கு

2 உழவுக் கருவிகள்

1. ரோட்டவேட்டர்	ரூ. 30,000 /-எண்ணிக்கை ஒன்றுக்கு
2. பவர் டில்லர்	ரூ. 45,000/- எண்ணிக்கை ஒன்றுக்கு
3. கைத் தெளிப்பான்	50% மானியத்தில் அதிகபட்சமாக ரூ. 800/- வரை வழங்கப்படுகிறது.

II. ஐசோபாம் (பயறு வகைகள்) திட்டம்

1. சான்று விதைகள்	ரூ. 12/-கிலோ ஒன்றுக்கு
2. பயிர்தெளிப்பான்	
கைத் தெளிப்பான்	50% மானியத்தில் அதிகபட்சமாக ரூ. 800 வரை மானியம் வழங்கப்படுகிறது.
விசைத் தெளிப்பான்	50% மானியத்தில் அதிகபட்சமாக ரூ. 2000 வரை மானியம் வழங்கப்படுகிறது.

சிறு, குறு மற்றும் ஆதி திராவிட விவசாயிகள் தேசிய வேளான்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பொதுப்பிரிவில் 80 சதவீதமும், சிறப்புப்பிரிவில் (ஆதி திராவிட விவசாயிகள்) 20 சதவீதமும் விதை உற்பத்திக்கு கிலோவிற்கு ரூ.15/-ம் விதை விநியோகத்திற்கு ரூ.8/-ம் என்ற அளவில் பயன்பெறுவார்கள்.

2011 பிப்ரவரி 10]

அவினாசி தொகுதியை உள்ளடக்கிய கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிட சிறு மற்றும் குறு விவசாயிகள் மேற்கூறிய திட்டங்களின் கீழ் இடுபொருட்களுக்கான மானிய பலன்களை பெற தகுதியுடையவர்கள்.

35—

மானியம்

வினா எண் 102073—திரு. பா. செந்தமிழ்ச் செல்வன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாய இடுபொருள் மற்றும் விதைப் பொருட்களை முழு மானியத்துடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் சான்று பெற்ற விதைகளை விநியோகம் செய்யும்பொழுது நெல்லிற்கு கிலோவிற்கு ரூ. 5/- மானியம் வழங்கப்படுகிறது. தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் அத்திட்டத்தின்கீழ் பயறு வகைகளான உளுந்து, துவரை, பச்சைப்பயறு மற்றும் தட்டைப்பயறு ஆகியவற்றின் சான்றுபெற்ற விதை விநியோகத்தின்போது கிலோவிற்கு ரூ. 12/- மானியம் வழங்கப்படுகிறது. மத்திய அரசின் திட்டமான ஐசோபாம் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் எண்ணெய் வித்துக்களான நிலக்கடலை, எள், ஆமணக்கு மற்றும் சூரியகாந்தி ஆகியவற்றின் விதை விநியோகத்திற்கும், பயறு வகைகளான உளுந்து, துவரை பச்சைப்பயறு மற்றும் தட்டைப்பயறு ஆகியவற்றின் விதை விநியோகத்திற்கும் மக்காச்சோள விநியோகத்திற்கும் கிலோவிற்கு ரூ.12/- மானியமாக வழங்கப்படுகிறது.

[2011 பிப்ரவரி 10

4. மேலும், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகிய இடுபொருட்களுக்கு கீழ்க்கண்டவாறு மானியம் வழங்கப்படுகிறது.

வரிசை எண்	விபரம்	திட்டத்தின் பெயர்	மானிய விவரம்
1	நுண்ணூட்டச் சத்துக்கள் விநியோகம் மற்றும் தாவர பூச்சி கொல்லி விநியோகம்.	தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்-(அரிசி)	50% மானியம் அல்லது ரூ. 500/- எக்டோர் இதில் எது குறைவோ அது
2	(i) உயிர் உரம்	தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (பயறு வகைகள்)	50% மானியம் எக்டருக்கு ரூ. 100/-க்கு மிகாமல்
	(ii) உயிர் பூச்சி கொல்லி	தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (பயறு வகைகள்)	50% மானியம் எக்டருக்கு ரூ. 250-க்கு மிகாமல்
	(iii) என்.பி.வி. வைரஸ் (NPV)	தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (பயறு வகைகள்)	50% மானியம் எக்டருக்கு ரூ. 250/-க்கு மிகாமல்
	(iv) நுண்ணூட்டச் சத்து	தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (பயறு வகைகள்)	50% மானியம் எக்டருக்கு ரூ. 500/-க்கு மிகாமல்
3	(i) உயிர் உரம்	ஐசோபாம் (எண்ணெய் வித்துக்கள்)	50% மானியம் எக்டருக்கு ரூ.100/-க்கு மிகாமல்
	(ii) உயிர் பூச்சி கொல்லி (NPV)	ஐசோபாம் (எண்ணெய் வித்துக்கள்)	50% மானியம் எக்டருக்கு ரூ.250/-க்கு மிகாமல்
	(iii) ஜிப்சம்	ஐசோபாம் (எண்ணெய் வித்துக்கள்)	50% மானியம் எக்டருக்கு ரூ.750/-க்கு மிகாமல்

2011 பிப்ரவரி 10]

	(iv) நுண்ணூட்டச் சத்து (Combined Nutrient Spices)	ஐசோபாம் (எண்ணெய் வித்துக்கள்)	50% மானியம் எக்டருக்கு ரூ.200/-க்கு மிகாமல்
4	(i) ஜிப்சம்	ஐசோபாம் (பயறுவகைகள்)	50% மானியம் எக்டருக்கு ரூ.750/-க்கு மிகாமல்
	(ii) டிஏபி ஊட்டச் சத்து தெளித்தல்	ஐசோபாம் (பயறுவகைகள்)	50% மானியம் எக்டருக்கு ரூ.750/-க்கு மிகாமல்

விவசாய இடுபொருட்கள் மற்றும் விதைப் பொருட்களை முழு மானியத்துடன் வழங்கும் திட்டம் எதுவும் தற்பொழுது அரசின் பரிசிலனையில் இல்லை.

36—

கடனுதவி

வினா எண் 111564—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொழுஞ்சி செடிகளை வளர்க்கவும், அவைகளைக் கொண்டு இயற்கை உரம் தயாரிக்கவும் அரசு கடனுதவி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) கொழுஞ்சி செடிகளை வளர்க்கவும், அவைகளைக் கொண்டு இயற்கை உரம் தயாரிக்கவும் அரசு கடனுதவி வழங்கும் திட்டமேதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனினும், கொழுஞ்சி, சனப்பை, தக்கைப்பூண்டு போன்ற பசுந்தாளுரப் பயிர்களை அதிக அளவில் வளர்த்து நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுத்தும் முறையை தமிழக அரசு ஊக்குவித்து வருகின்றது. இதன் ஒரு அம்சமாக

பசுந்தாளுர விதைகளை 250 மெ.டன் கொள்முதல் செய்து 25% மானிய விலையில் அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யும் திட்டம் ரூ. 50.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) கேள்வி எழவில்லை?

37—

சொந்தக் கட்டடம்

வினா எண் 116966—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை வேளாண்மைத் துறை அலுவலகத்திற்கு சொந்த கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தில் பிரதான வேளாண்மை விரிவாக்க மையம் மேற்படி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலுள்ள அரசு கட்டடத்தில் இயங்கி வருகின்றது. சொந்த கட்டடம் கட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் போதிய இடவசதி இல்லாத நிலையில், சென்னிமலை ஊராட்சியிடம் நிலம் ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டுள்ளது. நிலம் ஒதுக்கீடு கிடைத்தவுடன் சொந்த கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

38—

நோய் தடுத்தல்

வினா எண் 117623—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் நெல் பயிர்களில் ஏற்பட்டுள்ள நெற்பழநோயை தடுக்க அரசு முன் வருமா?

2011 *பிப்ரவரி* 10]

ஆ ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டத்தில் 2009—2010 ஆம் ஆண்டில் சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் பயிரில் குறிப்பாக கர்நாடகா பொன்னி (பி.பி.டி 5204) இரகத்தில் டிசம்பர் 2009 மாதத்தில் (நெல்பழம்) எனப்படும் கரிப்பூட்டை நோய் தாக்குதல் காணப்பட்டது. தகுந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கையாக பெவிஸ்டின் 2 கிராம் பூஞ்சான் மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது. தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (அரிசி) மூலம் விவசாயிகளுக்கு இப்பூஞ்சான் மருந்து 50% மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு நோய் கட்டுப்படுத்தப்பட்டது. நடப்பு ஆண்டில் (2010—2011) இந்த நோய் வராமல் இருக்க முன் நடவடிக்கையாக விதை நேர்த்தி மருந்துகள் 50% மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. நோய் தாக்கிய வயல்களிலிருந்து அறுவடை செய்த விதைகளை உபயோகிக்க வேண்டாம் என அனைத்து விவசாயிகளுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

39—

கடனுதவி

வினா எண் 117653—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியத்துடன் குறுகிய கால கடன் வழங்கி ஊக்குவித்து ஆலோசனைகள் வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் உளுந்துசாகுபடி விவசாயிகளுக்கு, சான்று பெற்ற உளுந்து விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் நடப்பு ஆண்டில் மானிய விலையில் வழங்கப்படுகிறது. பயறு வகை சாகுபடிக்கு கடன் வசதி தேவைப்படும் விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயிர் கடன் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

40—

சிறப்புப் பயிற்சி

வினா எண் 123115—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில வேளாண்மை மேலாண்மை நிலையத்தில் விவசாயிகளுக்கும் சிறப்புப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மாநில வேளாண்மை மேலாண்மை நிலையத்தில் வேளாண்மை மற்றும் சார்பு துறைகளிலுள்ள அலுவலர்களுக்கும் மற்றும் அரசு சாரா நிறுவனங்களை சார்ந்தோருக்கும் நிர்வாகம், மேலாண்மை மற்றும் கணினி சம்பந்தப்பட்ட பயிற்சிகள் ஆண்டு தோறும் அளிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்குத் தேவையான பயிற்சிகள் மாவட்ட அளவில் செயல்பட்டு வரும் 22 உழவர் பயிற்சி நிலையங்கள் மற்றும் வேளாண் பல்கலைக்கழக வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் மூலமாக பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களின் மூலம் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

2011 பிப்ரவரி 10]

(ஆ) வினா எழவில்லை.

41—

பேருந்து வசதி

வினா எண் 17926—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், தொப்பூரிலிருந்து பொம்மிடிக்கு கூடுதல் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொப்பூர்-பொம்மிடி வழித்தடத்தின் நீளம் 28 கி.மீயாகும். இத்தடத்தில், ஏற்கெனவே, இக்கழக நகர் தடம் எண் என்.எம்.01-ன் மூலம் பொம்மிடியிலிருந்து தொப்பூர் வரை நாளொன்றுக்கு 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், இக்கழக புறநகர் தடம் எண் 145ஏ-யின் மூலம் பொம்மிடி-மேட்டூர் (வழி) தொப்பூர் தடத்தில் நாளொன்றுக்கு 6 நடைகள் கடந்த 17-7-2006 முதல் இயக்கப்படுகிறது. இத்தடத்தில் பயணிகளின் அடர்வு சுமார் 52 விழுக்காடு உள்ளது. இருப்பினும் பொம்மிடி-தொப்பூர் தடத்தில் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும் சமயத்தில், இத்தடத்தில் கூடுதல் பேருந்து வசதி செய்திடுவது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

42—

பணிமனை

வினா எண் 104890—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்-1-வது தொகுதியில் பேருந்துகளுக்கு கூண்டு கட்டும் பணிமனை துவங்க அரசு ஆவன செய்யுமா?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக சேலம் மண்டலத்திற்கு தேவையான பேருந்துகள் கூண்டு கட்டுவதற்கு கூண்டு கட்டும் பணிமனை நாமக்கல் பணிமனையில் உள்ளது. இப்பணிமனையில் கூண்டு கட்டும் பணி குறிப்பிட்ட காலங்களுக்கு மட்டுமே தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் சராசரியாக, மாதத்திற்கு தேவையான 20 பேருந்துகளுக்கு கூண்டுகள் கட்ட போதுமான வசதிகள் தற்போது உள்ளது. எனவே, சேலம்—1 தொகுதியில் பேருந்துகளுக்கு கூண்டு கட்டும் பணிமனை கூடுதலாக துவங்க அவசியம் இல்லை. மேலும் கூண்டு கட்டும் பணிமனை அமைக்க இக்கழகத்தில் போதிய இட வசதியும் இல்லை.

43—

கூட்டம்

வினா எண் 119961—திரு. ச. லட்சுமணன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு-கேரளா இடையே புதிய பேருந்துகள் இயக்குவதற்கு இரண்டு மாநிலங்களுக்கு இடையே Inter State High Level Meeting *கூட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு-கேரளா மாநிலங்களுக்கிடையே பேருந்துகளை இயக்க 2008 ஆம் ஆண்டு 5-வது துணை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது. புதிய வழித்தடங்கள் இயக்குவதற்கு தேவை ஏற்படும் போது இரு மாநிலங்களுக்கிடையே மறு ஒப்பந்தம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2011 பிப்ரவரி 10]

44—

சோதனைச் சாவடி

வினா எண் 122174—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை-மதுரை இடையே ஒரு சோதனைச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்து துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை-மதுரை இடையே ஒரு சோதனைச் சாவடி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

பேருந்து வசதி

வினா எண் 122932—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர்-இளம்பிள்ளை, தாரமங்கலம்-ஆட்டையாம்பட்டி மற்றும் சேலம்—ஜலகண்டாபுரம் ஆகிய பகுதிகளுக்கு கூடுதலாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்து துறை அமைச்சர்:

தடம் எண்.ஓ6-14 நடைகள் ஓமலூர்-இளம்பிள்ளை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்தில் பயணிகளின் அடர்வு 55% மட்டுமே உள்ளது. தாரமங்கலம்-ஆட்டையாம்பட்டி வழித்தடத்தில் அரசு புறநகர் பேருந்து ஒன்று தினசரி 6 நடைகளும் தனியார் பேருந்து மூன்று தினசரி 18 நடைகளும் தற்போது இயக்கப்பட்டு வருகிறது. சேலம்-ஜலகண்டாபுரம் வழித்தடத்தில் அரசு புறநகர்

பேருந்து ஒன்று தினசரி 8 நடைகளும் நகரப் பேருந்துகள் 2 தினசரி 20 நடைகளும், தனியார் பேருந்துகள் 3, 24 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு குறைவாகவே உள்ளது என்பதால் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

46—

அடிப்படை வசதி

வினா எண் 60806—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஐந்துமுனை பகுதியிலுள்ள பெண்கள் மகப்பேறு சிகிச்சை மையத்திற்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி அரசு மருத்துவமனை 128 படுக்கைகள் வசதியுடன் செயல்படுகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக உள்நோயாளிகள் 100 முதல் 125 பேரும், வெளிநோயாளிகள் 400 முதல் 1000 பேரும், சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் 48 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறு பிரிவு வளாகம், மருத்துவக் கழிவு சேமிப்பு அறை போன்ற கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது. மேலும் இம்மருத்துவமனை போதிய தண்ணீர் வசதி மற்றும் அடிப்படை வசதியுடன் செயல்படுகிறது.

47—

மருத்துவ வசதி

வினா எண் 83244—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலை அரசு மருத்துவமனைக்கு சி.டி.சி. ஸ்கேன் வசதி ஏற்படுத்தவும், ரேடியாலஜி மருத்துவர், இ.என்.டி. மருத்துவர் மற்றும் மருத்துவ அலுவலர்களை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை 166 படுக்கைகள் வசதியுடன் இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரி உள்நோயாளிகள் 180 பேரும், சராசரி வெளிநோயாளிகள் 1875 பேரும் தினந்தோறும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனை 24 மணிநேர அவசர கால பிரிவு, 24 மணி நேர குருதி வங்கி அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு பால்வினை நோய் பிரிவு, காசநோய் பிரிவு, தொற்றுநோய் பிரிவு, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு, குடும்ப நலம் மற்றும் பேறுகால பின் கவனிப்பு பிரிவு, கண் சிகிச்சைப் பிரிவு, பல் சிகிச்சைப் பிரிவு, சித்த மருத்துவப் பிரிவு, முடநீக்கியியல் பிரிவு, எலும்புமுறிவு சிகிச்சைப் பிரிவு, நுண்கதிர் பிரிவு, ஆய்வுக்கூடம் ஆகிய பிரிவுகளுடன் செயல்படுகிறது.

2. மேலும் இம்மருத்துவமனைக்கு தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் கீழ் 30 படுக்கைகள் கொண்ட ஒருங்கிணைந்த மகப்பேறு கட்டடம், மருத்துவக் கழிவு சேமிப்பு அறை, இரத்த சேமிப்பு மையம் ஆகிய பணிகளுடன் ரூ.32.25 இலட்சம் செலவில் மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. சி.டி.ஸ்கேன் வசதி ஒவ்வொரு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

3. இம்மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள உதவி மருத்துவர் பணியிட எண்ணிக்கை 15. இந்த 15 உதவி மருத்துவர் பணியிடங்களும், தற்சமயம் இரண்டு குழந்தைகள் நலம், ஒரு மயக்கவியல், ஒரு எலும்புமுறிவு சிகிச்சை, மூன்று மகப்பேறு, இரண்டு அறுவை சிகிச்சை, ஒரு கண், மூன்று எம்.டி. (பொது), இரண்டு எம்.பி.பி.எஸ்., பயின்ற மருத்துவர்களை கொண்டு நிரப்பப்பட்டுள்ளது. இவை தவிர இம்மருத்துவமனையில் செயல்படும் சிமாங்க் மையத்திற்கென மூன்று உதவி மருத்துவர்கள் பணியிடங்கள் அரசால் ஒப்பளிக்கப்பட்டு அப்பணியிடங்கள் ஒரு மகப்பேறு, ஒரு

[2011 பிப்ரவரி 10

குழந்தை நலம் மற்றும் ஒரு மயக்கவியல் மருத்துவரைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு சுகாதார சேவை திட்டத்தின் கீழ் அம்மருத்துவமனைக்கு இரண்டு உதவி மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு அப்பணியிடங்கள் ஒரு எம்.பி.பி.எஸ்., மற்றும் ஒரு மனநல மருத்துவரைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளது.

4. கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு 20 உதவி மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, அவை அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளதால், இம்மருத்துவமனைக்கு ரேடியாலஜி, இஎன்டி மருத்துவர் நியமிக்க உதவி மருத்துவர் காலிப்பணியிடம் ஏதுமில்லை.

48—

மருத்துவ வசதி

வினா எண் 101987—திரு. எம். அன்பழகன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, பழனி அரசு மருத்துவமனை சி.டி.ஸ்கேன் அடிக்கடி பழுதாகி விடுவதால் புதிய சி.டி.ஸ்கேன் உபகரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழனி அரசு மருத்துவமனையில் 2-4-2009 முதல் சி.டி.ஸ்கேன் இயங்கி வருகிறது. சி.டி.ஸ்கேன் இயங்கிய நாளிலிருந்து நவம்பர் 2000 வரை 1220 படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இக்கருவி இதுவரை இரண்டு முறை மட்டுமே பழுதடைந்துள்ளது. அவை உடனே சரி செய்யப்பட்டு நோயாளிகளின் உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், 20-6-2009 அன்று சி.டி.ஸ்கேன் கருவியிலுள்ள எக்ஸ்ரே டியூப் பழுதடைந்து விட்ட நிலையில் அதற்கு புதியதொரு எக்ஸ்ரே டியூப் 4-7-2009 அன்று பொருத்தப்பட்டு இன்றுவரை நல்லமுறையில் இயங்கி வருவதால்

2011 பிப்ரவரி 10]

பழனி அரசு மருத்துவமனைக்கு புதிய சிடிஸ்கேன் வழங்க வேண்டிய அவசியம் இல்லை.

49—

மருத்துவ வசதி

வினா எண் 101990—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் அரசு மருத்துவமனையை பராமரிக்கவும், பிண அறையிலுள்ள குளிர்சாதனம் மற்றும் ஸ்கேன் கருவி இவைகளை பழுது நீக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையின் பிணவறையில் உள்ள குளிர்சாதனம் ரூ.81,000/- செலவில் பழுது நீக்கம் செய்யப்பட்டு அவை தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மேலும் இம்மருத்துவமனையிலுள்ள இரண்டு அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் (USG)-களும் நல்ல முறையில் செயல்பட்டு வருவதால் கர்ப்பிணி பெண்கள் மற்றும் இதர பணியாளர்கள் இதன்மூலம் பயனடைந்து செல்கின்றனர்.

50—

தொழில் வசதி

வினா எண் 2942—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகள் யாவை?

(ஆ) அதில் திருக்கழுக்குன்றம் வட்டம் இடம் பெற்றுள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அறிவிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான புதிய தொழில் கொள்கையின்படி தமிழ்நாட்டில் மொத்தம் 251 வட்டாரங்கள் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய வட்டாரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள 251 பின் தங்கிய வட்டாரங்களில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கழுக்குன்றம் பகுதியும் ஒன்றாகும்.

51—

கட்டடம்

வினா எண் 81346—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி, அரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி வருவாய் கோட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை. ஏற்கெனவே உள்ள கட்டடம் போதுமானதாகவும் நல்ல நிலையிலும் உள்ளது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

52—

நிலம்

வினா எண் 106571—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2011 பிப்ரவரி 10]

ஈரோடு கொங்கு அறிவாலயம் மன வளர்ச்சி குன்றியோர் குழந்தைகள் பள்ளிக்கு, அரசு புறம்போக்கு நிலத்தை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

ஈரோடு கொங்கு அறிவாலயம் மன வளர்ச்சி குன்றியோர் குழந்தைகள் பள்ளிக்கு நிலம் வழங்குவதற்கு, திண்டல் கிராமத்தில், அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை என்பதால் அரசு புறம்போக்கு நிலம் வழங்குவதற்கு வழிவகை ஏதுமில்லை.

53—

கட்டடம்

வினா எண் 116656—திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக அரசின் பரிசீலனையில் உள்ளது.

54—

நியாய விலைக் கடை

வினா எண் 12056—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, சித்தேரி ஊராட்சிக்குட்பட்ட மாம்பாறை, நல்மாங்கடை, குண்டல்மடுவு, அரசநத்தம் ஆகிய கிராமங்களில் முழு நேர நியாயவிலைக் கடையோ அல்லது பகுதி நேர நியாயவிலைக் கடையோ அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பாப்பி ரெட்டிப்பட்டி வட்டம், சித்தேரி பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம் நடத்தும், சித்தேரி நியாயவிலைக் கடையைப் பிரித்து மாம்பாறை, குண்டலமடுவு மற்றும் நலமாங்கடை கிராமங்களை சேர்த்து 167 குடும்ப அட்டைகளுடன், மாம்பாறை கிராமத்தில் புதிய பகுதி நேரக் கடை 4-3-2008 முதல் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் அரசநத்தம் கிராமம் கலசம்பாடியிலிருந்து 2.0 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ளதாலும் இக்கிராமத்திற்கு போதிய சாலை வசதி இல்லாததாலும் இக்கிராமத்தில் மிகவும் குறைந்த குடும்ப அட்டைகளே உள்ளதாலும், இக்கிராம மக்கள் கலசப்பாடி பகுதி நேர நியாயவிலை கடையிலிருந்து பொருட்களைப் பெற்றுச் செல்ல இசைவு தெரிவித்துள்ளதாலும் அரசநத்தம் கிராமத்தில் புதியதாக பகுதிநேரக் கடை துவக்கிட சாத்தியக் கூறுகள் இல்லை.

55—

நியாய விலைக் கடை

வினா எண் 43013—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டையில் இயங்கும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளைப் பிரித்திட அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டை கூட்டுறவு பண்டகசாலை நடத்தும், பொதட்டூர் கூட்டுறவு பண்டகசாலை கடை எண் I-ல் 1,575 குடும்ப அட்டைகளுடனும், பொதட்டூர் கூட்டுறவு பண்டகசாலை கடை எண் II-ல் 1350 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி இரண்டு முழு நேர நியாயவிலைக் கடைகளிலிருந்து மொத்தம் 865 குடும்ப அட்டைகளைப் பிரித்து பொதட்டூர்பேட்டை பகுதியில் பொதட்டூர் பேட்டை கூட்டுறவு பண்டகசாலை கடை எண் 3 என்ற பெயரில், குடியானவர் தெருவில், 865 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை 21-8-2009 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

56—

நியாய விலைக் கடை

வினா எண் 47622—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், லக்கம்பட்டி ஊராட்சி, தின்னதண்டி நியாயவிலைக் கடையினைப் பிரித்து பெருமாள் கோவில் நத்தம் கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடையும், பெரியதண்டா நியாயவிலைக் கடையைப் பிரித்து நீதிபுரத்திற்கு ஒரு நியாயவிலைக் கடையும், தின்னப்பட்டி ஊராட்சி, பூதப்பட்டி நியாயவிலைக் கடையைப் பிரித்து புதுவேலமங்கலத்திற்கு புதிய கடையும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியம், லக்கம்பட்டி ஊராட்சி தின்னதண்டி நியாயவிலைக் கடையினைப் பிரித்து பெருமாள் கோவில் நத்தம் கிராமத்தில் புதிய பகுதி நேரக்கடை 23-3-2008 முதலும், பெரியதண்டா நியாயவிலைக் கடையிலிருந்து 246 குடும்ப அட்டைகளைப் பிரித்து நீதிபுரத்தில் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை துவங்கப்பட்டு 23-3-2008 முதலும், தின்னப்பட்டி, பூதப்பாடி நியாயவிலைக் கடையானது தற்போது புதுவேலமங்கலத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள அரசுக் கட்டடத்தில் 13-6-2008 முதல் முழு நேர நியாயவிலைக் கடையாகவும் செயல்பட்டு வருகின்றன.

57—

நியாய விலைக் கடை

வினா எண் 47634—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதி, பி.என்.பட்டி பேரூராட்சி, கருமலைக் கூடல் புதுக்காலனி நியாயவிலைக் கடையைப் பிரித்து அஜய்நகர் பகுதியில் புதிய நியாய நிலைக் கடை அமைக்கவும், ராமன்நகர், (கெம்ப்ளாஸ்ட்) நியாயவிலைக் கடையைப் பிரித்து திப்பம்பட்டியில் புதிய கடை அமைக்கவும் மற்றும் வீரக்கல் புதூர் பேரூராட்சி, புதுச்சாம்பள்ளி நியாயவிலைக் கடையைப் பிரிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி கருமலைகூடல் நியாயவிலைக் கடையிலிருந்து 450 குடும்ப அட்டைகளைப் பிரித்து அஜய் நகர் பகுதியில் புதிய பகுதிநேரக்

கடை 11-2-2009 முதல் செயல்பட்டு வருகிறது. இராமன் நகர் (கெம்ப்ளாஸ்ட்) பொன்னி-1 மற்றும் பொன்னி-2 கடைகளில் திப்பம்பட்டி என்ற பகுதிக்கு புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை அமைப்பது தொடர்பாக 72 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால், அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால் திப்பம்பட்டி பகுதியில் புதியதாக அங்காடி அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. மேலும், புதுச்சாம்பள்ளி நியாயவிலைக் கடை மேட்டூர் பியர்ட் செல் கூட்டுறவு பண்டக சாலையால் நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி நியாயவிலைக் கடையிலிருந்து 900 குடும்ப அட்டைகளைப் பிரித்து குருவக்காடு பகுதியில் முழுநேர நியாயவிலைக் கடை 9-2-2010 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

58—

நியாய விலைக் கடை

வினா எண் 48020—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொகுதி, காளியாபுரம் ஊராட்சி, துண்டுக்கடவு, உருளிக்கல் நீர்வீழ்ச்சி அருகே வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, கள்ளி பொருக்கி அம்மன் காலனி ஆகிய பகுதிகளில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி வட்டம், வால்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வி. காளியாபுரம் பஞ்சாயத்தில் உள்ள துண்டுக்கடவு பகுதியில் சுமார் 400 குடும்பங்கள் உள்ளன. இங்கு வி. காளியாபுரம் நியாயவிலைக் கடையில் இருந்து வாரம் இரண்டு நாட்கள் பொருட்கள் வழங்கப்பட்டு பகுதி நேரக் கடையாக KPM *காலனி என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது. மேலும் வால்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கள்ளி பொருக்கி அம்மன் காலனி என்ற பகுதியில் சுமார் 50 குடும்பங்கள் மட்டுமே உள்ளன. எனவே, மேற்படி பகுதியில் பகுதிநேரக்கடை அமைக்க போதிய*

TRUTH ALONE TRIUMPHS

சாத்தியக்கூறுகள் இல்லை. உருளிக்கல் பகுதியில் 686 குடும்ப அட்டைகள் உள்ளன. இப்பகுதியில் ரோஜா மகளிர் சுய உதவிக்குழு ஒரு நியாயவிலைக் கடை நடத்தி வருவதால், மீண்டும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. நீர்வீழ்ச்சி (கிழக்கு) பகுதியில் 657 குடும்ப அட்டைகளும், நீர்வீழ்ச்சி (மேற்கு) பகுதியில் 238 குடும்ப அட்டைகளும் உள்ளன. இக்குடும்ப அட்டைதாரர்களுக்கு "தென்றல்" மகளிர் சுய உதவிக்குழுவின் நியாயவிலைக் கடையின் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்து வருவதினால் இப்பகுதியில் மீண்டும் ஒரு புதிய நியாயவிலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

59—

கட்டட வசதி

வினா எண் 55729—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சூரக்குளம், வெள்ளிக்குறிச்சி, முத்தனேந்தல் மற்றும் வாகுடி பகுதிகளிலுள்ள நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சூரக்குளம் நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 7-4-2010 முதல், வெள்ளிக்குறிச்சி நியாயவிலைக் கடைக்கு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 26-2-2010 முதல் செயல்பட்டு வருகின்றன. முத்தனேந்தல் நியாயவிலைக் கடை 299 குடும்ப அட்டைகளுடன் முழு நேரக் கடையாக செயல்படுகிறது. இந்நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்கு போதுமான (கிராம பொது இடம்) இட வசதி இல்லாததால் நியாயவிலைக் கடை கட்டடம் கட்ட இயலவில்லை. மேலும் வாகுடி நியாயவிலைக் கடை 201 குடும்ப அட்டைகளுடன் முழு நேரக் கடையாக செயல்படுகிறது. இந்நியாயவிலைக் கடை தற்பொழுது கிராமத்திற்கு சொந்தமான கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

2011 பிப்ரவரி 10]

60—

நியாயவிலைக் கடை

வினா எண் 60447—திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, கும்பகோணம் வட்டம், கீரனூர் ஊராட்சி, கீரனூர் கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் வட்டம், திருவிடைமருதூர் வட்டாரத்தில், கீரனூர் ஊராட்சி, பெரப்படி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் கீரனூர் அங்காடி ஆரியச்சேரியில் இருப்பிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ்வங்காடியில் மொத்தம் 496 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. அதில் கீரனூர் கிராமத்தைச் சேர்ந்த 94 குடும்ப அட்டைகள் அடங்கும். அரசின் நிபந்தனைகளின்படி புதியதாக தோற்றுவிக்கப்படும் பகுதி நேரக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், புதிய நியாயவிலைக் கடை மாற்றியமைக்கும்போது பிரிவினைக்குப் பின்னர் தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் இந்நேர்வில் பூர்த்தியாகவில்லை. எனவே, கீரனூர் கிராமத்தில் புதிய பகுதிநேர அங்காடி அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

61—

நியாயவிலைக் கடை

வினா எண் 62096—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) ஆற்காடு தொகுதி, விளாப்பாக்கம் பேரூராட்சி, *1*-வது வார்டு நாராயணபுரம் கிராமத்திற்கு நியாயவிலைக் கடை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஆற்காடு தொகுதி, விளாப்பாக்கம் பேரூராட்சி *1*-வது வார்டு நாராயணபுரம் கிராமம், நாராயணபுரம் பகுதி நேர நியாயவிலைக் கடை தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகையின்றி இலவசமாக செயல்பட்டு வருகிறது. இக்கடைக்கு அரசுக் கட்டடம் கட்ட ஊர் பொதுமக்களால் இடம் ஏதும் ஒதுக்கீடு செய்து தரப்படவில்லை. எனவே மேற்படி நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

62—

நிரந்தரக் கட்டடம்

வினா எண் 64640—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், உத்திரங்குடியில் நெல் கொள்முதல் நிலையத்தை நிரந்தரக் கட்டடத்தில் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், உத்திரங்குடியில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்ட தேவைப்படும் நிலம் சுமார் *33 1/3* சென்ட் *(100* குழி*)* இலவசமாக, இனாம் சாசனமாக வாணிபக் கழகத்திற்கு இதுவரை இட ஒதுக்கீடு ஏதும் பெறப்படவில்லை. இட ஒதுக்கீடு கிடைக்கும்பட்சத்தில் அவ்விடத்தில் அரசு நிதி ஆதாரம் பெற்று கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

63—

நியாயவிலைக் கடை

வினா எண் 81605—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, முக்கல்நாயகன்பட்டி ஊராட்சி, கடத்தூரரான் கொட்டாய் கிராமத்தில் பகுதி நேர நியாயவிலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், முக்கல்நாயகன்பட்டி ஊராட்சி, முக்கல்நாயகன்அள்ளி முழுநேர நியாயவிலைக் கடையில் மொத்தம் 445 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் கடத்தூரரான் கொட்டாய் கிராமத்தில் உள்ள 40 குடும்ப அட்டைகளும் அடங்கும். முக்கல்நாயக்கன் அள்ளி நியாயவிலைக் கடைக்கும், கடத்தூரரான் கொட்டாய் கிராமத்திற்கும் இடையே உள்ள தூரம் 5.5 கி.மீ. ஆகும். ஏற்கெனவே இராஜாதோப்பு கிராமத்தில் 358 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேரக்கடையும், ஆளிவாயன் கொட்டாய் கிராமத்தில் 135 குடும்ப அட்டைகளுடன் இரண்டாவது பகுதிநேரக் கடையும் செயல்பட்டு வரும் நிலையில் மூன்றாவது பகுதிநேரக் கடையாக கடத்தூரரான் கொட்டாய் கிராமத்தில் குறைந்த எண்ணிக்கை உள்ள 40 குடும்ப அட்டைகளைக் கொண்டு புதிய பகுதி நேரக்கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

64—

நியாயவிலைக் கடை

வினா எண் 86378—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2011 பிப்ரவரி 10

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பானாபுரம் ஊராட்சிக்குட்பட்ட முத்தாம்பட்டியில் பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பானாபுரம் ஊராட்சிக்குட்பட்ட முத்தாம்பட்டி பகுதி நேர நியாயவிலைக் கடை திறக்க அனுமதி வழங்கப்பட்டு 3-7-2009 முதல் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை செயல்பட்டு வருகிறது.

65—

கொள்முதல் நிலையம்

வினா எண் 36898—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், சுரைக்காயூர் கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், சுரைக்காயூர் கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் கட்டுவதற்கு ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் கட்டுமானத்திற்கு உகந்ததாக இல்லை. வேறு பொருத்தமான இடம் இன்னும் கிடைக்கப் பெறவில்லை. நிலம் கிடைக்கப் பெறும்பட்சத்தில் அவ்விடத்தில் அரசு நிதி ஒதுக்கீடு பெற்று நிரந்தரக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

66—

கொள்முதல் நிலையம்

வினா எண் 91997—திரு. எஸ். இராசசேகரன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி, எல்.எல்.புரம் (திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம்) ஊராட்சியில் புதிதாக நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, எல்.எல். புரம் (திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம்) ஊராட்சியில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்ட தேவைப்படும் நிலம் சுமார் 33 1/3 செண்ட் (100 குழி) இலவசமாக, இனாம் சாசனமாக வாணிபக் கழகத்திற்கு இதுவரை இட ஒதுக்கீடு ஏதும் பெறப்படவில்லை. இட ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்தில் அவ்விடத்தில் அரசு நிதி ஆதாரம் பெற்று நேரடிக் கொள்முதல் நிலையம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

67—

கட்டட வசதி

வினா எண் 97035—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதியில், கீழையூர் மற்றும் திருவெண்காடு பகுதிகளிலுள்ள நெல் கொள்முதல் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதியில், கீழையூரில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்ட தேவைப்படும் நிலம்

சுமார் 33 1/3 சென்ட் (100 குழி) இலவசமாக, இனாம் சாசனமாக வாணிபக் கழகத்திற்கு இன்னும் கிடைக்கப் பெறவில்லை. நிலம் கிடைக்கப் பெறும்பட்சத்தில் அவ்விடத்தில் அரசு நிதி ஒதுக்கீடு பெற்று நிரந்தரக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

68—

கொள்முதல் நிலையம்

வினா எண் 98384—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மேலநெட்டூரில் நிரந்தர நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதி, மேலநெட்டூரில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்ட தேவைப்படும் நிலம் சுமார் 33 1/3 சென்ட் (100 குழி) இலவசமாக, இனாம் சாசனமாக வாணிபக் கழகத்திற்கு இன்னும் கிடைக்கப் பெறவில்லை. நிலம் கிடைக்கப் பெறும்பட்சத்தில் அவ்விடத்தில் அரசு நிதி ஒதுக்கீடு பெற்று நிரந்தரக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

69—

அங்காடி

வினா எண் 102783—திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, வாலாஜா நகர் ஊராட்சி, ராஜீவ் நகர் மற்றும் ஆரனூர் கிராமத்தில் புதிய பகுதிநேர அங்காடி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், வாலாஜா நகர் ஊராட்சி, ராஜீவ் நகர் கிராமத்தில் 315 குடும்ப அட்டைகளுடன் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை 9-4-2010 முதலும், பெரிய திருக்கோணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் ரெட்டிப்பாளையம் நியாயவிலைக் கடையிலிருந்து 83 குடும்ப அட்டைகளைப் பிரித்து ஆரனூர் கிராமத்தில் புதிய 2-வது பகுதிநேர நியாயவிலைக் கடை 22-1-2010 முதலும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

70—

நியாயவிலைக் கடை

வினா எண் 104318—திரு. ஆர். சாமி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேலூர் தொகுதி, மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 21 எம். மலம்பட்டியில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

மேலூர் தொகுதி, மேலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 21 எம் மலம்பட்டியில் 346 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்குடும்ப அட்டைகள் அனைத்தும் இப்பகுதியிலிருந்து 0.75 கி.மீ. தூரத்தில் செயல்பட்டு வரும் டெப்போ எண்-4 என்ற நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. எம். மலம்பட்டி பகுதிக்கும் டெப்போ எண்-4 நியாயவிலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2011 பிப்ரவரி 10

1.5 கிமீக்கும் குறைவாக உள்ள நிலையில், அரசு நிபந்தனைகளின்படி, எம். மலம்பட்டியில் புதிய பகுதி நேர / முழு நேர நியாயவிலைக் கடை அமைப்பதற்கு வழிவகை இல்லை.

71—

நியாயவிலைக் கடை

வினா எண் 105611—திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, மலைக்குடப்பட்டி நியாயவிலைக் கடையை பிரித்து கோத்திராபட்டியில் பகுதி நேர நியாயவிலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* குளத்தூர் தொகுதி, மலைக்குடப்பட்டி நியாயவிலைக் கடையை பிரித்து கோத்திராபட்டியில் பகுதி நேர நியாயவிலைக் கடை *6-1-2010* முதல் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

72—

நியாயவிலைக் கடை

வினா எண் 107519—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி, போரூர், கண்டகாப்பட்டி பகுதியில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி வட்டாரத்தில் உள்ள சக்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் எப்.ப்பி 154 பொம்மியம்பட்டி நியாயவிலைக் கடையில் 581 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. கண்டகாப்பட்டியைச் சேர்ந்த 264 குடும்ப அட்டைதாரர்கள் இக்கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். அரசு நெறிமுறைகளின்படி ஒரு பகுதி நேர அங்காடி துவங்கிய பின்பு தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால் கண்டகாப்பட்டியைச் சேர்ந்த 264 குடும்ப அட்டைகளைப் பிரித்த பின்பு தாய்க்கடையில் 317 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சி இருக்கும். எனவே, கண்டகாப்பட்டியில் ஒரு பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

73—

நியாயவிலைக் கடை

வினா எண் 108555—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கமலாபுரம் கிழக்கு காடு பகுதியிலுள்ள நாரனம்பாளையம் நியாயவிலைக் கடையைப் பிரித்து கிழக்குகாடு பகுதியிலேயே பகுதிநேர நியாயவிலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

பகுதி நேரக்கடை அமைக்கக் கோரும் கிழக்குகாடு பகுதியில் மொத்தம் 160 குடும்ப அட்டைகள் உள்ளன. இவற்றில் 70 குடும்ப அட்டைகள் கமலாபுரம் நியாயவிலைக் கடையுடனும், மீதமுள்ள 90 குடும்ப அட்டைகள் மயிலப்பாளையம் நியாய விலைக் கடையுடனும் இணைக்கப்பட்டுள்ளன. மயிலப்பாளையம் நியாயவிலைக் கடையில் 500-க்கும் குறைவான அட்டைகள் உள்ள

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நிலையில் கிழக்குகாடு பகுதியின் 90 குடும்ப அட்டைகளை மேலும் பிரித்து புதிய பகுதி நேர கடை அமைக்க அரசு விதிகளின்படி இயலாததாலும், கிழக்குகாடு குடும்ப அட்டைதாரர்கள் எவரும் இலவசக் கட்டடம் வழங்க முன் வராததாலும், கிழக்குகாடு பகுதியிலேயே பகுதி நேர நியாயவிலைக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

74—

நியாயவிலைக் கடை

வினா எண் 110145—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சி, பேட்துரைசாமிபுரத்தில் நியாயவிலைக் கிளைக் கடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்கற்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் திருவைகுண்டம்-2 நியாய விலைக் கடையிலிருந்து சில குடும்ப அட்டைகளைப் பிரித்து பேட்துரை சாமிபுரம் பகுதியில் புதிய பகுதி நேரக் கடை 8-5-2010 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

75—

நியாயவிலைக் கடை

வினா எண் 113760—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை குப்பச்சிபாளையம் ஊராட்சி, குப்பச்சிபாளையம், இடக்காடு மற்றும் கழிச்சாங்காடு

பகுதிகளில் பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய பகுதிநேரக் கடை அமைக்கக்கோரும் குப்பச்சிபாளையம், இடக்காடு மற்றும் கழிச்சாங்காடு பகுதிகளில் முறையே 75, 88 மற்றும் 42 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இப்பகுதிகளின் குடும்ப அட்டைகள் அனைத்தும் இப்பகுதிகளிலிருந்து முறையே 2.0, 1.5 மற்றும் 2.5 கி.மீ. தூரத்தில் செயல்படும் புதுவலசு நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. புதுவலசு முழுநேர நியாயவிலைக் கடையுடன் மொத்தம் 441 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. குப்பச்சிபாளையம் மற்றும் கழிச்சாங்காடு பகுதிகள் நியாய விலைக் கடையிலிருந்து 1.5 கி.மீ.க்கு மேல் இருப்பினும், பகுதி நேரக் கடை அமைக்கக் கோரும் குப்பச்சிபாளையம், இடக்காடு மற்றும் கழிச்சாங்காடு பகுதிகளில் 150-க்கும் குறைவான குடும்ப அட்டைகள் உள்ளதாலும், புதுவலசு முழுநேர கடையில் ஏற்கெனவே 500-க்கும் குறைவான குடும்ப அட்டைகள் உள்ளதாலும் அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால் மேற்படி பகுதிகளில் பகுதி நேரக் கடை அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

76—

நியாயவிலைக் கடை

வினா எண் 113765—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், காங்கேயம், புது வெள்ளியம்பாளையம் மற்றும் நத்தக்கடையூர் நியாயவிலைக் கடையை இரண்டாகப் பிரித்து புதிய பகுதி நேரக் நியாயவிலைக் கடைகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், காங்கேயம் தொகுதி, நத்தக்கடையூர் நியாயவிலைக் கடையில் 1134 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், இக்கடையுடன் இணைக்கப்பட்ட பகுதிகள், நியாயவிலைக் கடையிலிருந்து 1.0 கி.மீ. தூரத்திற்குள் உள்ளதாலும், அரசு நிபந்தனைகளின் படி புதிய பகுதிநேரக் கடை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

77—

அங்காடி

வினா எண் 115181—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், பூதலூர், பூதலூர் 3-வது அங்காடியைப் பிரித்து நாச்சியார்பட்டி கிராமத்தில் பகுதி நேர அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

புதிய பகுதி நேரக்கடை அமைக்கக் கோரும் நாச்சியார்பட்டி கிராமத்தில் 210 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்குடும்ப அட்டைகள் இப்பகுதியிலிருந்து 1/2 கி.மீ தூரத்தில் செயல்பட்டுவரும் பூதலூர்-3வது நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. பூதலூர்-3வது நியாயவிலைக் கடையில் மொத்தம் 664 குடும்ப அட்டைகள் உள்ளன. பூதலூர்-3வது நியாய விலைக் கடைக்கும் நாச்சியார்பட்டி கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீக்கும் குறைவாக (1/2 கி.மீ.) உள்ளதால் அரசு நிபந்தனை பூர்த்தியாகாததால் நாச்சியார்பட்டியில் பகுதிநேர கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

2011 பிப்ரவரி 10]

78—

அங்காடி

வினா எண் 115189—திரு. துரை சந்திரசேகரன்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், பனையூர் கிராம நியாயவிலைக் கடையைப் பிரித்து வைத்தியநாதன்பேட்டை கிராமத்தில் புதிய பகுதி நேர அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், வைத்தியநாதன்பேட்டை கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை 25-08-2010 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

79—

அங்காடி

வினா எண் 117680—திரு. எம். பன்னீர்செல்வம்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, விளந்திட சமுத்திரம் முழு நேர அங்காடியைப் பிரித்து ஒரு பகுதி நேர அங்காடி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்.

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, அகனி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் விளந்திடசமுத்திரம் நியாயவிலைக் கடையிலிருந்து சில குடும்ப அட்டைகளைப் பிரித்து விளந்திடசமுத்திரம் மெயின் ரோட்டில் புதிய பகுதி நேரக்கடை சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் 16-10-2010-ல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

80—

நிபந்தனை தளர்த்தல்

வினா எண் 121433—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிய பகுதி நேரக் கடைகள் துவக்கும்போது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

புதிய பகுதி நேரக் கடைகள் அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை மட்டும் உள்ளதாலும், 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்று நிபந்தனை ஏதுமில்லாததால் தளர்வு செய்ய வேண்டிய அவசியமில்லை.

81—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 121435—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, அழியா நிலையில் உள்ள திறந்த வெளி உணவுக் கிடங்கிற்கு பதிலாக சேமிப்புக் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, அழியாநிலையில் 5,500 மெட்டன் கொள்ளளவு கொண்ட சொந்த சேமிப்புக் கிடங்கு செயல்பட்டு வருகின்றது. எனவே, திறந்தவெளி உணவு கிடங்கிற்கு பதிலாக புதியதாக சேமிப்புக் கிடங்கு கட்ட வேண்டிய தேவை தற்போது இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2011 பிப்ரவரி 10]

82—

நியாய விலைக் கடை

வினா எண் 128261—திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காஞ்சிபுரம் தொகுதி, பல்லவர்மேடு மற்றும் சித்தேரிமேடு நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து புதிய கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் வட்டம், பல்லவர்மேடு பகுதியில் மொத்தம் 799 குடும்ப அட்டைகள் உள்ளன. இவற்றில் 542 குடும்ப அட்டைகள் 0.5 கி.மீ. தூரத்தில் செயல்பட்டு வரும் நரசிம்மநாயர் தெரு நியாய விலைக் கடையுடனும் மீதமுள்ள 257 குடும்ப அட்டைகள், பல்லவர்மேடு பகுதியிலேயே மேற்கு தெருவில், புதுப்பாளையத் தெரு நியாய விலைக் கடையுடனும் இணைக்கப்பட்டுள்ளன. இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் பல்லவர்மேடு பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீக்கும் குறைவாக உள்ளதால் அரசின் நிபந்தனையின்படி பல்லவர்மேடு பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், காஞ்சிபுரம் தொகுதி கீழம்பி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் சித்தேரிமேடு நியாய விலைக் கடையில் மொத்தம் 485 குடும்ப அடைகளிலிருந்து 58 குடும்ப அட்டைகளைப் பிரித்து சமத்துவபுரம் பகுதியில் புதிய பகுதி நேரக் கடை 29-9-2010 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

[2011 பிப்ரவரி 10

83—

பணி நியமனம்

வினா எண் 107550—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, கள்ளப்பட்டி, கோவிலாங்குளம், வகுரணி மற்றும் பூச்சிப்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு இளநிலை உதவியாளர் பணி நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, கள்ளப்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிக்கு இளநிலை உதவியாளர் பணியிடம் அரசால் ஒப்பளிக்கப்படவில்லை. கோவிலாங்குளம், வகுரணி மற்றும் பூச்சிப்பட்டி ஆகிய 3 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் இளநிலை உதவியாளர்கள் நியமிக்கப்பட்டு தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

84—

உறுப்பினர் சேர்த்தல்

வினா எண் 117254—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்கள் நல வாரியங்களில் சேர தொழிலாளர் சங்கங்களுக்கு புதிய உறுப்பினர் சேர்க்கும் உரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா?

2011 பிப்ரவரி 10]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டக் கூறு 9(1)(b)ன்படி, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிற்சங்கத்தின் தலைவர்/செயலாளர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பொறுப்பாளர்கள் அமைப்புச்சாரா தொழிலாளர்களை தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர நல வாரியங்களில் பதிவு செய்வதற்கு ஏதுவாக பதிவு விண்ணப்பத்தில் பணிச் சான்று வழங்க ஏற்கெனவே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டக் கூறு 5-ன்படி, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் ஒரு உடலுழைப்புத் தொழிலாளி அட்டவணை IIல் உள்ள படிவம் A-ல் (பதிவு விண்ணப்பம்) கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையளிப்பவர், பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர், கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்கள் மற்றும் பதிவு பெற்ற தொழிற்சங்கம் ஆகியவர்களில் ஒருவரால் வழங்கப்பட்ட வேலைச் சான்றுடன் (Certificate of Employment) விண்ணப்பித்து தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் தனது பெயரை பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

85—

குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு

வினா எண் 121126—திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பத்திரிகைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு குறித்து விளம்பரம் மற்றும் செய்திகள் வெளியிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமான ஜூன் 12-ம் தேதியன்று, குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்தான செய்தி மூன்று பிரபல தமிழ் நாளேடுகளில் வெளியிடப்பட்டு வருகிறது.

குழந்தைத் தொழிலாளர்கள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக தகவல் பிரதிகள், கையேடுகள் மற்றும் சுவரொட்டிகள் போன்ற விளம்பரங்கள் அரசால் செய்யப்பட்டு வருகின்றன.

86—

தொழிற் பயிற்சி நிலையம்

வினா எண் 121957—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா. மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டத்தில் இரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும் 13 தனியார் தொழிற் பயிற்சி மையங்களும் இயங்கி வரும் நிலையில், மானாமதுரை தொகுதி மானாமதுரையில் பெண்கள் தொழிற் பயிற்சி நிலையம் துவங்க அரசிற்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

87—

முன்னுரிமை

வினா எண் 123870— திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வேலைவாய்ப்புகளில் தமிழ் வழி பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமை அளிக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில், ஜூன் திங்கள் 23-ம் நாள் முதல் 27-ம் நாள் வரை நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நிறைவு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தினை நிறைவேற்றினார்கள்.

"தமிழில் படித்தவர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை அளித்திட, உரிய சட்டம் இயற்றப்படும்".

மேற்காணும் அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ் மொழி மூலமாகப் படித்தவர்களுக்கு நேரடி நியமனத்தின்மூலம் நிரப்பப்பட வேண்டிய பணிகளுக்கான நியமனங்களில், இருபது விழுக்காடு முன்னுரிமை வழங்கி மேதகு ஆளுநர் அவர்களால் 5-9-2010 அன்று அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அவசரச் சட்டத்தின் பிரிவு 8-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தேவையான விதிகளும் அரசு ஆணை எண்145, ப.ம.நி.சீ. (எஸ்) துறை, நாள் 30-9-2010-ல் வெளியிடப்பட்டது. மேலும் 12-11-2010 அன்று நடைபெற்ற சட்டப்பேரவை கூட்டத்தில் இச்சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டு தொடர் நடவடிக்கைகள், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

88—

சுய உதவிக் குழு

வினா எண் 124127—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 10

(அ) தொழிலாளர் சங்கங்களும் சுய உதவிக் குழுக்களை துவக்க அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தொழிற் சங்க சட்டத்தில் தொழிலாளர் சங்கங்கள் சுய உதவிக் குழுக்களை அமைப்பதற்கு வழிவகை ஏதுமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

89—

மருத்துவமனை

வினா எண் 124612—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி பேளகாண்டபள்ளியில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி பேளகாண்டபள்ளியில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை துவங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. கிருஷ்ணகிரி மாவட்டம் தளி தொகுதி, பேளகாண்டபள்ளியில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் அவைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பற்றிய தகவல்களை, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழக கிளை அலுவலகம் அல்லது துணை மண்டல அலுவலகத்தை

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

சார்ந்த பணியாளர்கள் ஆய்வு செய்து அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை / மருந்தகம் துவங்க சென்னை, தொ.அ.ஈ. கழக மண்டல இயக்குநரின் பரிந்துரையுடன் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரிடம் (தொ. அ.ஈ.தி) கருத்துரு பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

90—

நீதி மன்றம்

வினா எண் 124633— திருமதி ரா. லீமா ரோஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிலாளர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா. மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1947ஆம் வருட தொழிற்தகராறுகள் சட்டப் பிரிவு 2ஏ மற்றும் 2 (கே)ன்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகவும் குறைந்த அளவில் தாவாக்கள் பெறப்பட்டு, சட்டப் பிரிவு 12 (4)ன்கீழ் சமரச முறிவு ஏற்பட்டு, மேற்கண்ட தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விடப்பட்டு வருகிறது. இந்நிலையில் கன்னியாகுமரியில் தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பது குறித்த அவசியம் எழவில்லை.

91—

பணியிடம்

வினா எண் 127711—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு கூடுதல் பணியாளர் நியமிக்கவும், காலியாகவுள்ள பணியிடத்தை நிரப்பவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 10

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு கூடுதல் பணியாளர் நியமிக்கவும், காலியாகவுள்ள பணியிடத்தை நிரப்பவும் எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் பின்வருமாறு:

பதவியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை	நிரப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை	காலியாகவுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்	1	1	—
இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்	3	3	—
உதவியாளர்	3	1	2
இளநிலை உதவியாளர்	3	3	—
தட்டச்சர்	2	1	1
அலுவலக உதவியாளர்	2	1	1
காவலர்	1	1	—
மொத்தம்	15	11	4

(ஆ) தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் காலியாக உள்ள மேற்குறிப்பிட்டுள்ள நான்கு பணியிடங்களையும் விரைவில் நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2011 பிப்ரவரி 10]

92—

குத்தகை

வினா எண் 110664— திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி, அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயில் நிலங்கள் பொது ஏலத்தில் குத்தகைக்கு விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பாகல்பட்டி, அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் அமைந்துள்ள கிராமங்களின் நில உடைமை மேம்பாட்டுத் திட்ட பதிவேடுகள் 'அ' பதிவேடுகள், நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்போது தயாரிக்கப்பட்ட ஒப்பீட்டு பட்டியல்கள் ஆகியவற்றை சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பின்னரே, இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான அனைத்து நிலங்களையும் முழுமையாக கண்டறிந்து, அவற்றின் குத்தகை உரிமையினை பொது ஏலம் மூலம் முறைப்படுத்த இயலும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் பெரும்பான்மையாக விவசாயத்திற்காகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயிலுக்கு செயல் அலுவலர் 4-2-2008-ல் பொறுப்பேற்ற பின்னர், குத்தகைதாரர்களிடமிருந்து நாளது வரை ரூ. 43,100/- மட்டும் வழக்குகளுக்கு பாதகமின்றி குத்தகையாக பெறப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் முன்னாள் பரம்பரை அறங்காவலரால் 143.60 ஏக்கர் பரப்பளவிலான நிலங்களுக்கான குத்தகை உரிமையினை பொது ஏலத்தின்மூலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், இந்நிலங்களுக்கான குத்தகை உரிமையினை பொது ஏலத்தின் மூலம் விட திருக்கோயில் செயல் அலுவலர் அனுமதி கேட்டுள்ளார். திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் அமைந்துள்ள கிராமங்களின் அடிப்படை கிராமக் கணக்குகளை

[2011 பிப்ரவரி 10

வருவாய்த் துறையிலிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் திருக்கோயிலுக்குச் சொந்தமானவை என உறுதிபடுத்தப்பட்டுள்ள நிலங்களைப் பகுத்து அவைகளை மட்டும் பொது ஏலத்தின்மூலம் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

93—

திருப்பணி

வினா எண் 115097—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயில் உற்சவமூர்த்திகளுக்கு, வாகன பாதுகாப்பு செய்து, திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பாகல்புட்டி, அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயிலில் உபயதாரர்கள் மூலமாக ரூ. 1.25 இலட்சம் செலவில் திருக்கோயில் நுழைவாயில் மண்டபத்திற்கான மேற்கூரையும், ரூ. 95,000/- செலவில் மகா மண்டபத்தின் கூரையும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் திருக்கோயிலின் திருமதிலும், தரைதளமும் புதுப்பிக்கப்பட்டு 27-11-2009 அன்று குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. எனவே மேற்படி திருக்கோயிலில் தற்போது நடைபெற வேண்டிய திருப்பணிகள் ஏதுமில்லை.

94—

கழிவு நீர் சுத்திகரிப்பு

வினா எண் 56942—திருமதி ஜி. லதா: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 பிப்ரவரி 10]

(அ) வேலூர் மாவட்டம், தோல் தொழிற்சாலை கழிவு நீரை சுத்திகரித்து கடலில் கலக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், தோல் தொழிற்சாலை கழிவுநீரை சுத்திகரித்து கடலில் கலக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

95—

விளையாட்டு மையம்

வினா எண் **58592—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நடுகாட்டுப்பாளையத்தில் சிறுவர்கள் விளையாட்டு மையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுசூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பண்ருட்டி தொகுதி, நடுகாட்டுப்பாளையத்தில் சிறுவர்கள் விளையாட்டு மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

[2011 பிப்ரவரி 10

96—

விளையாட்டு அரங்கம்

வினா எண் 89379—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் நகரில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுசூழல் துறை அமைச்சர்:

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் நகரில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

97—

விளையாட்டு பயிற்சி மையம்

வினா எண் 93207—திருமதி ரா. லீமா ரோஸ்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் மத்திய அரசு அனுமதித்த விளையாட்டு பயிற்சி துணை மையம் அமைக்கும் பணியினை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுசூழல் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாறு தொகுதியில் உள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தினை

2011 பிப்ரவரி 10]

இந்திய விளையாட்டு மையம் அமைக்கும் பொருட்டு தர இயலாது என இந்து சமய அறநிலையத் துறையால் தெரிவிக்கப்பட்டபடியால் மாற்று இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

98—

அரங்கத்தை சீரமைத்தல்

வினா எண் 104138—திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் உள்ள மகாத்மா காந்தி விளையாட்டு அரங்கத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) சேலத்தில் உள்ள மகாத்மா காந்தி விளையாட்டு அரங்கத்தை சீரமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

99—

தியான வகுப்பு

வினா எண் 107640—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து கிராமங்களிலும் வாரம் ஒருமுறை தியான வகுப்புகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

அனைத்து கிராமங்களிலும் வாரம் ஒருமுறை தியான வகுப்புகள் துவக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 10

100—

குத்துச் சண்டை பயிற்சி

வினா எண் 108448—திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதியில் குத்துச்சண்டை பயிற்றுவிக்க விளையாட்டு அரங்கம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) சைதாப்பேட்டை தொகுதியில் குத்துச்சண்டை பயிற்றுவிக்க விளையாட்டு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

101—

சமையலறை

வினா எண் 5457—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, பொற்குணம் கிராமத்தில் சத்துணவுக் கூடத்திற்கு புதிய சமையலறை கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம் பொற்குணம் ஊராட்சியில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி சத்துணவு மையத்திற்கு கடந்த 2004-2005 ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ. 70 ஆயிரம் மதிப்பீட்டில் சத்துணவு மைய கூடம் கட்டப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

102—

சீருடை

வினா எண் 23673—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அங்கன்வாடி, சத்துணவு பணியாளர்களுக்கு சீருடை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் 2 சேலைகள் தலா ரூ. 200/— மதிப்பில் வழங்கப்படுகின்றன.

103—

அடிப்படை வசதி

வினா எண் 16491—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு ஆண்டுதோறும் தனித் தொகுதிகளிலுள்ள ஓர் ஊராட்சியை சிறப்புத் திட்டத்தின்கீழ் தத்து எடுத்து அடிப்படை வசதிகளை செய்ய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

தீண்டாமையை கடைபிடிக்காத மற்றும் நல்லிணக்கத்துடன் வாழும் ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஊராட்சிக்கு, ஆண்டுதோறும் 2009-2010 வரை ரூ. 1.00 இலட்சம் பரிசு வழங்கி, தேர்ந்தெடுத்த ஊராட்சிக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டு 2010-2011

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

முதல் ரூ. 1.00 இலட்சம் என்பது 2.00 இலட்சமாக உயர்த்தப்பட்டு பரிசு தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஆதி திராவிடர் காலனிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக ஆண்டுதோறும் ரூ. 150.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால் நடப்பு 2010-2011-ம் ஆண்டில் 157.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு ஆதி திராவிடர் காலனிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, ஆதி திராவிடர் நல துணைத் திட்டத்தின் மூலம் ரூ. 5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதில் 10% தொகையில் அதாவது ரூ. 50.00 இலட்சம், பள்ளிகள், விடுதிகள் மற்றும் ஆதி திராவிடர் காலனிகள் ஆகியவற்றிற்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் பணிகளுக்காக செலவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தற்போது பிரதம மந்திரி ஆதர்சன் கிராம யோஜன திட்டத்தின்கீழ் கிராம மொத்த மக்கள் தொகையில் 50 சதவீதத்திற்கு மேல் பட்டியலின மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கு ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து அக்கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிக்கான பணிகள் செய்ய, தற்போது முதற்கட்டமாக திருவாரூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 225 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

104—

அடிப்படை வசதி

வினா எண் 73673—திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, வெள்ளூர் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனியில் சுடுகாடு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, வெள்ளூர் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனிக்கு, சுடுகாடு அனைத்து வசதிகளுடன் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 10]

105—

அங்காடி

வினா எண் 125394—டாக்டர் (திருமதி) கே. காயத்திரி தேவி: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, செய்யூரில் மீன் அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

நீர்வள நிலவள திட்டம் (IAMWARM) வாயிலாக ஓங்கூர் உபவடி நிலப் பகுதியில் ரூபாய் எட்டு லட்சம் செலவில் இரண்டு மீன் விற்பனை நிலையம் அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும் மதுராந்தகம் தொகுதி, செய்யூர் இவ்வடி நில கோட்டப் பகுதியில் அமைந்துள்ளதால் மீன் அங்காடி அமைக்க அரசு நிதி ஒதுக்கீடு பெற்றவுடன் தகுதி வாய்ந்த பயனாளி குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு இந்த ஆண்டுக்குள் மீன் விற்பனை நிலையம் செயல்படுத்தப்படும்.

106—

மீன் விதை வங்கி

வினா எண் 131726—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிராமப்புறங்களில் புதிய மீன் விதை வங்கிகளை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மீன்விதை வங்கிகள் அமைத்தல் மானிய அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. நீர்வள நிலவள திட்டத்தில் 63 உபவடி நிலக்கோட்டங்களில் அமைந்துள்ள நீர்நிலைகளின்

அருகாமையில் மட்டுமே மீன் விதை வங்கிகள் அமைக்கப்பட்டு நீர் உபயோகிப்போர் சங்கத்தினரால் நிர்வகிக்கப்படுகிறது. மேலும், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 70 மீன் விதை வங்கிகளும், 10 மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. நீர்வள நிலவள திட்டத்தில் முதற் கட்டம் மற்றும் இரண்டாம் கட்ட உபவடி நிலக்கோட்டங்களில் 12 மீன் விதை வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன.

107—

கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 117473—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் துவக்க அரசு ஆவன செய்யுமா;

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரையில், Q-557 மானாமதுரை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்கு 164 உறுப்பினர்கள் பால் வழங்கி வருகிறார்கள். இச்சங்கத்தின்மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 810 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு 420 லிட்டர் பால் சிவகங்கை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்படுகிறது. எஞ்சிய 390 லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்யப்படுகிறது. மானாமதுரை நகரப் பகுதியாக உள்ளதால், கறவை மாடுகள் வளர்த்து கூட்டுறவுச் சங்கத்திற்கு பால் வழங்க ஆதி திராவிட பொது மக்கள் ஆர்வம் காட்டாததால், புதியதாக ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க தற்பொழுது வாய்ப்புகள் இல்லை.

2011 பிப்ரவரி 10]

108—

கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 117474—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தியிலுள்ள ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை புதுப்பித்து, செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தியிலுள்ள, எம்.எஸ். 128 திருப்பாச்சேத்தி ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் புதுப்பிக்கப்பட்டு 18-10-2010 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி சங்கத்தில் நாளொன்றுக்கு 30 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

109—

பயிற்சி

வினா எண் 107815—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கதர் ஆடைகள் விற்பனையை ஊக்குவிக்க, மக்களை கவரும் வண்ணம் ஆடைகளை வடிவமைக்கும் பயிற்சி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ், கதர் ஆடைகள் விற்பனையை ஊக்குவிக்க, மக்களை கவரும் வண்ணம் ஆடைகளை வடிவமைக்கும் பயிற்சி, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து வழங்கப்படும்.

11-494—100